கலைஞரின்
கடிதங்கள்



29

25.09.1998 - முதல்
25.09.2000 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 29

25.09.1998 - 25.09.2000

தி.மு.க. அறக்கட்டளை
பொதுக்குழுவினர்
அண்ணா நூல்
நிலையம்
சென்னை-18
அறிவாலயம்

தலைவர் **கலைஞர்**

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549 / 97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL


விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

A2236

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூல் நிலையம்
சென்னை-18
அறிவாலயம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க.ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய – பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை – சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் – பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் "கோகிலாம்பாள் கடிதங்கள்", இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய "அன்னைக்கு', "தம்பிக்கு", "நண்பர்க்கு', "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் "தம்பிக்கு" கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய "உடன்பிறப்புக்கு" கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

“எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்” என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, “அன்பு நண்பா !” என விளித்து, “ஜாக்குலின்கள்” என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் “முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ‘

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

“காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி”
“மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
“கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். –

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

“நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!”
“எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?”
“கண்ணுக்கு விருந்தானாய் – மனப் புண்ணுக்கு மருந்தானாய்!”
“அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
“இடர் எது வரினும், ஏற்பேன்“
“பறித்து வராத பாரிஜாதம்“

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
2431. விழாக் கொள்கை; அண்ணா விதைத்த கொள்கை!	25-09-1998	23
2432. கண்ணீராய் வழிந்து கவின்மலர்க் கொத்தான விழா!	30-09-1998	30
2433. செய்யும் தொழில் சிறப்பாக அமைந்திட...!	04-10-1998	36
2434. நிறைவேற முடியாத ஆசை; நெருக்கடி நெருப்பில் டெல்லி!	12-10-1998	40
2435. என் வேண்டுகோள் - ஏற்று நடப்பாய்!	01-11-1998	48
2436. குன்றின் மேலிட்ட விளக்காக, ஒரு குலவிளக்கு!	04-11-1998	52
2437. அய்யத்துக்கிடமின்றி அடையாளம் காட்டப்பட்டவர்!	19-12-1998	56
2438. அண்ணல் நபிகளார் அன்புவழி நடப்போம்!	20-12-1998	61
2439. ஜோக்(கிந்தர்) சிங்கின் புத்தாண்டு ஜோக்!	01-01-1999	64
2440. அண்ணா நினைவு நாள் அஞ்சலியும் அணி வகுப்பும்!	01-02-1999	69
2441. வெற்றிக்கொடி நாட்டுவோம் வாரீர்!	07-07-1999	73
2442. “இருநூறு ஆண்டுக்கு முன்பும் - பின்பும்!”	09-07-1999	78

2443. இருமுனை வெற்றி - இனிதே பெறுவோம்!	10-07-1999	85
2444. ஒருமைப்பாடும் தேசியமும் ஒளிந்தது எங்கே?	12-07-1999	89
2445. தொண்டு தொடர்வோம்; வென்று காட்டுவோம்!	15-07-1999	94
2446. நஞ்சு தூவி மதநல்லிணக்கம் மாய்ப்பதா?	17-07-1999	98
2447. உரிமையும் உண்டு; உரிய வழியும் உண்டு!	19-07-1999	107
2448. மனம் திறந்து எழுதினேன் இந்த மடல்!	22-07-1999	112
2449. சாகாத சரித்திரம் - சாகடிக்க முடியாத சரித்திரம்!	23-07-1999	116
2450. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கத்தான் செய்யும்!	24-07-1999	120
2451. எங்கே பகுத்தறிவு என்னும் பேரருவி பாய்ந்திடுமோ...	29-07-1999	124
2452. வெறுப்பின் அடையாளமா? விரக்தியின் வெளிப்பாடா?	30-07-1999	129
2453. இருவிழி மழைதனைக் காணாதீர்; இதயம் மகிழ்வதைக் காண்பீரே!	31-07-1999	135
2454. மாஃபியாவும், ஊழலும் மறைந்த மாயம் என்னவோ?	01-08-1999	140
2455. "இஞ்சி" என்றும் "முந்திரி" என்றும் இரு உவமைகள்!	02-08-1999	146
2456. திரு. சிதம்பரத்திடம் கேள்வியும் - அவர் பதிலும்! (1)	04-08-1999	151
2457. திரு. சிதம்பரத்திடம் கேள்வியும் - அவர் பதிலும்! (2)	05-08-1999	156
2458. திரு. சிதம்பரத்திடம் கேள்வியும் - அவர் பதிலும்! (3)	06-08-1999	162

2459. திரு. சிதம்பரத்திடம் கேள்வியும் - அவர் பதிலும் (4)	07-08-1999	168
2460. முத்தனும், முனியனும் பேசுவதையே இவரும் பேசினால்!	09-08-1999	174
2461. முன்னாள் தேர்தல் ஆணையரும், இந்நாள் ஜோதிடரும்!	10-08-1999	178
2462. இக்கணமே எழுந்திடுக; அன்புக் கண்மணிகாள்!	13-08-1999	183
2463. எத்தகைய ஒத்துழைப்பு எனக்குத் தேவை!	14-08-1999	188
2464. அண்ணாவும், காயிதேமில்லத்தும் அன்று சொன்னது!	19-08-1999	191
2465. நாம் அளிக்க வேண்டிய பொருத்தமான பதில்!	24-08-1999	197
2466. மதுரை மாநகரிலிருந்து ஒரு மடல்!	01-09-1999	200
2467. காண்டீபன் கண்ணுக்குத் தெரிந்தது என்ன?	02-09-1999	201
2468. முயல் தூங்கினால் முந்திக்கொள்ளும் ஆமை!	03-09-1999	203
2469. அண்ணா சொன்னதை மெய்ப்பித்துக் காட்டுக!	04-09-1999	204
2470. முதற் பணி! முத்தான பணி! சத்தான பணி!	05-09-1999	205
2471. உழைப்பு! உழைப்பு! உரிய நேரத்து உழைப்பு!	06-09-1999	206
2472. மகத்தான மனிதருக்கு இந்த நிலைமையா?	07-09-1999	207
2473. தெளிவான உண்மை; தெரிகிறதா?	08-09-1999	208
2474. சோர்வை ஒதுக்கு! சுடர்முகம் தூக்கு!	09-09-1999	209

2475. அதுபோலத்தான் இதுவும் இருக்கிறது!	10-09-1999	210
2476. முயலுக்கு மூன்றே கால்தான் என்கிறார்கள்!	11-09-1999	212
2477. இந்த தர்மம் இப்படியே தலைத்தோங்குக!	12-09-1999	214
2478. ஆழ்ந்த சிந்தனை அவசியம் தேவை!	13-09-1999	216
2479. அதுதான் முடிவு எனில் அதைவிட மகிழ்ச்சி ஏது?	14-09-1999	217
2480. வாழ்க அண்ணா! வளர்க, அவர் கற்பித்த பண்பாடு!	15-09-1999	219
2481. ஜனநாயகத்தை வளர்க்க, வலிமைப்படுத்த வழி காண்போம்!	16-09-1999	221
2482. பெரியார் பிறந்த நாளில் நாம் ஏற்கும் சபதம்!	17-09-1999	223
2483. கழகத்தின் எதிரிகள்; கடுகை மலையாக்குவர்!	18-09-1999	225
2484. வன்முறைத் தத்துவம் வாலாட்ட அனுமதிப்பதா?	19-09-1999	227
2485. அந்தப் புத்தகங்களின் அர்த்தமுள்ள புன்னகை!	20-09-1999	229
2486. அன்றைய கதையை விட இன்றைய கதை மேல்!	21-09-1999	231
2487. உயர்ந்த உள்ளங்களின் ஒத்துழைப்புக்கு, நன்றி!	22-09-1999	233
2488. சமூக விரோதிகளை அடக்காமல் சட்டம் கைகட்டி நிற்குமா?	23-09-1999	235
2489. அறுந்த காதுகளில் பூ சுற்றியது யார்?	24-09-1999	237
2490. கனவில் வந்ததும், பேசியதுமே ஒரு கடிதம்!	25-09-1999	240

2491. மயிலைப் பார்த்து, ஏதோ ஒன்று பழித்த கதை!	26-09-1999	244
2492. கட்சி அரசியலுக்கு அப்பால் அணுக வேண்டிய காவிரிப் பிரச்சினை!	28-09-1999	248
2493. ஆணையம் அமைந்தது சட்ட ரீதியாகத்தான்!	01-10-1999	262
2494. வருந்த வேண்டும் என்பதற்காக அல்ல; திருந்த வேண்டும் என்பதற்காக!	09-10-1999	269
2495. அரசியல் குறுக்கிடுவதுதான் ஆச்சரியமான விஷயம்!	23-10-1999	273
2496. இரு நாட்களும் இனிய திருநாட்கள்தான்!	06-12-1999	280
2497. அய்யன் வள்ளுவனுக்கு அழியாத நினைவுச்சின்னம்!	20-12-1999	284
2498. வாட்டாக்குடி சுந்தரங்கள் வளர்க்கும் தமிழ்!	25-12-1999	289
2499. அனைவரும் சமம்; அய்யன் வள்ளுவனே தெய்வம்!	05-01-2000	294
2500. பாரதிபுரத்திலா இந்தப் பாதகச் செயல்?	05-02-2000	305
2501. மூன்று தொகுதிகள் முக்கனி பறிப்போம்!	09-02-2000	309
2502. உழைப்பை நம்புவோம்! ஒற்றுமை காப்போம்!	11-02-2000	313
2503. வென்று காட்டுக! உடன்பிறப்பே, வென்று காட்டுக!	17-02-2000	317
2504. விளையக்கூடாதது எது? விளையவேண்டியது எது?	28-02-2000	323
2505. நீ கற்பனை செய்தால்; நான் பொறுப்பல்ல!	05-03-2000	327

2506. நலிந்தோர்க்கு நல்விருந்து படைப்பீர்!	23-05-2000	331
2507. ''அசுவத்தாமா! அதகா குஞ்சரகா''!	11-06-2000	333
2508. மருந்தென உணர்ந்து மடல் தீட்டுகிறேன் - (1)	10-09-2000	337
2509. மருந்தென உணர்ந்து மடல் தீட்டுகிறேன் - (2)	11-09-2000	342
2510. அரங்கம் - கோட்டம் - அலைகடலோரம்!	12-09-2000	349
2511. என் சிந்தையும் விழிகளும் உன்னை நோக்கி!	13-09-2000	356
2512. பழைய கதை கேட்டு, புதிய நினைவுகளுடன் வா!	14-09-2000	361
2513. வரலாறு யாரைச் சபிக்கும்? யாரை வாழ்த்தும்?	15-09-2000	366
2514. வைரத்துக்கு முன் வைக்கப்பட்ட கூழாங்கல்!	17-09-2000	369
2515. பெரிய மனிதர்களின் பொய்யும், புளுகும்!	20-09-2000	373
2516. தீபகற்ப நதிகளை இணைக்கும் திட்டம்!	21-09-2000	378
2517. காலம் பதில் சொல்லக் காத்திருக்கிறது!	22-09-2000	382
2518. இந்த சமுதாயத்தைப் பிடித்த பீடைகள்!	23-09-2000	386
2519. வெள்ளைத் துணியில் விழுந்த ஒரு துளி கறுப்பு மை!	24-09-2000	391
2520. தந்தை பெரியார் எந்தன் கனவில் வந்தார்!	25-09-2000	396

2431. விழாக் கொள்கை; அண்ணா விதைத்த கொள்கை!

உடன்பிறப்பே,

மத்திய அரசு நாளுக்கு நாள் மாநில அரசுகளின் உரிமைகள் மீது கைவைப்பதிலேயே குறியாய் உள்ளது. மாநில அரசுகளின் எஜமான அரசுதான் மைய அரசு எனும் ஆதிக்க உணர்வுடனேயே மத்திய அரசு நடந்து வருவதை இப்பொதுக்குழு சுட்டிக் காட்ட விரும்புகிறது.

அரசியல் சட்டத்தின் 356-வது பிரிவைப் பயன்படுத்தி, மாநில ஆட்சிகளைக் கலைக்கும் மிரட்டலை நடத்துவது ஒரு நல்ல கூட்டாட்சி அமைப்புக்கு உரிய செயல் ஆகாது.

இதுபோன்ற மத்திய அரசின் அத்துமீறல்கள் இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு தேடிவிடும் என்று இப்பொதுக் குழு அஞ்சுகிறது.

பொதுக்குழுவில் இப்படியொரு தீர்மானம் 27.12.1992 ஆம் ஆண்டு தீப்பொறி பறக்க நிறைவேற்றப்பட்டது.

எந்தக் கட்சிப் பொதுக்குழுவில் என்று கேட்காமலே தி.மு.கழகப் பொதுக் குழுவில்தான் இத்தகைய தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்குமென்றுதானே நினைக்கத் தோன்றுகிறது.

நமது கழகப் பொதுக்குழுவில் இத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றுவது வியப்புக்குரிய ஒன்றல்ல!

ஆனால் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது அ.தி.மு.க.வின் பொதுக்குழுவில் - ஜெயலலிதா முன்னிலையில் - 1992 ஆம் ஆண்டு டிசம்பர் 25, 26 ஆகிய தேதிகளில் நிறைவேற்றப்பட்ட 25 தீர்மானங்களில் இதுவும் ஒன்று!

“பாபர் மசூதியை இடித்ததையொட்டி நாடெங்கும் ஏற்பட்ட மதவெறியைக் கட்டுப்படுத்த, உ.பி. அரசை

மத்திய காங்கிரஸ் அரசு கலைத்தது சரியென்றாலும், சந்தடி சாக்கில் சொந்தக் கட்சிக்காரர்களின் வற்புறுத்தலினால் மத்தியபிரதேசம், ராஜஸ்தான், இமாசலப் பிரதேசம் ஆகிய மூன்று மாநில அரசுகளையும் கலைத்ததை அ.தி.மு.க. எதிர்க்கிறது. எனவே இச் செயலை இப்பொதுக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது."

என்றும் அதே 1992 டிசம்பர் 25, 26 அ.தி.மு.க. பொதுக்குழுவில் ஜெயலலிதா முன்னின்று தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார்.

1992க்குப் பிறகு, ஆறு ஆண்டுகள் உருண்டோடி யிருக்கின்றன. இப்போது நாம் 1998ல் இருக்கிறோம். 1992 என்பது ஜெயலலிதா ஆண்ட காலம் - அதாவது 1991 முதல் 1996 மே மாதம் வரையில், இந்த மாநிலத்தில் ஊழலின் உச்சகட்ட மகாராணியாக - ஏன்? என்று கேட்பவர்கள் சொந்தக் கட்சி எம்.பி.யானாலும், எம்.எல்.ஏ. ஆனாலும் எலும்பு நொறுங்க வதைக்கப்படும் கொடுமை கொடிகட்டிப் பறந்த அந்த நாட்களில் ஆட்டம் போட்டுக் கொண்டிருந்த அகங்கார தேவதையாக - தமிழகத்தில் கண்ணில் கண்ட தோட்டம் துறவுகள் - நிலபுலன்கள் - பளபளப்புப் பங்களாக்கள், மந்தகாச மாளிகைகள் என்று மாமல்லபுரம் வரையில் சுருட்டிப் போட்டுக்கொண்ட அலங்காரப் பாவையாக - சுருக்கமாகச் சொன்னால், இந்தியாவின் இமல்டாவாக எடுபிடிகள் கொடிபிடிக்க, எத்தர் கூட்டம் பல்லக்கு சுமக்க தமிழ் இனத்தை வளைத்துவிட்ட மலைப்பாம்பாக ஆட்சியொன்று நடத்தினார்களே! அந்த ஐந்தாண்டு கால அக்கிரம பரிபாலனத்திற்குப் பிறகு, 1996ல் கழக ஆட்சி மலர்ந்து மக்களிடையே நறுமணம் பரப்பிக் கொண்டிருக்கும் இந்த 1998ல்தான் ஜெயலலிதா, 1992ல் பொதுக்குழுவைக் கூட்டி மத்திய அரசு 356 ஆவது பிரிவைப் பயன்படுத்துவோம் என மிரட்டுவது கூட்டாட்சி முறைக்கு ஒவ்வாது என்றும், இதுபோன்ற அத்துமீறல்கள் இந்திய ஒருமைப்பாட்டுக்கே ஊறு தேடும் என்றும் கடுமையாகத் தீர்மானம் நிறைவேற்றியதை, ஒரு கனவுபோல மறந்துவிட்டு - கழக அரசைக் கலைப்பதற்கு மத்திய பா.ஜ.க. அரசை நோக்கி மிரட்டல் கணைகளைப் பொழியத் தொடங்கியிருக்கிறார்.

பீகார் மாநிலத்தில் ரப்ரிதேவியின் அரசைக் கலைப்பதென்று மத்திய அமைச்சரவை தீர்மானித்து, அதனைக் குடியரசுத் தலைவர் அவர்களிடம் அறிவித்துள்ளது. குடியரசுத் தலைவர் அவர்கள்

அதுபற்றிய முடிவை இன்னமும் அறிவிக்கவில்லை. கூட்டாட்சித் தத்துவத்தின் மீதும், மாநில உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற இலட்சியத்தின் மீதும் குறிப்பாக, இந்திய ஜனநாயக மாண்பின்மீதும் பற்றுக்கொண்டு அவற்றைப் பலி கொடுத்தலாகாது எனப் பல இயக்கங்களின் தலைவர்கள், அறிக்கைகள் வாயிலாகவும், குடியரசுத் தலைவரை நேரில் சந்தித்தும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பீகார் மாநில அரசைக் கலைப்பதற்கு பா.ஜ.க. அரசு கூறியுள்ள காரணங்களைவிட அதிகமான காரணங்கள், தமிழக அரசைக் கலைப்பதற்கு இருக்கின்றன என்று ஜெயலலிதா ஏடுகளிலும், தொலைக்காட்சிகளிலும் முழங்குகிறார்.

பீகார் அரசைக் கலைப்பதற்கு காட்டப்பட்டுள்ள காரணங்கள் என்று டெல்லி ஏடுகள் வெளியிட்டுள்ள செய்தி என்ன? இதோ! அந்தக் காரணங்களின் தொகுப்பு :-

1. அரசியல் அமைப்பு இயந்திரம் சீர்குலைவு.
2. நிதியாதாரங்களைக் கையாளுவதில் குளறுபடி.
3. சட்டம் ஒழுங்கு சீர்குலைவு.
4. அரசியல் அதிகார துஷ்பிரயோகம்.
5. தொடர்ச்சியான அரசியல் கொலைகள்.
6. ஊழல் வழக்கு சாட்சிகள் சந்தேகமான முறையில் சாவு.
7. சட்டம் ஒழுங்கு நிலை பற்றி உயர்நீதிமன்றம் கண்டனம்.
8. முறைகேடான ஆட்சி என்று தணிக்கை அதிகாரியின் அறிக்கை.
9. அரசுக்கு எதிரான 1200 அவமதிப்பு மனுக்கள்.
10. ஐ.எஸ்.ஐ. தீவிரவாதிகள் அதிக அளவில் ஊடுருவல்.
11. ஒன்பது மாவட்டங்களில் அரசாங்கத்திற்குப் போட்டி அரசாங்கங்கள்.

இந்தக் காரணங்கள் உண்மையானவை என்றால், நடுநிலையாளர்களுக்கு கவலை தரக் கூடியவைதான்! நிவர்த்திக்கப்பட வேண்டியவைதான்! ஆனால் இந்தக்

காரணங்களைவிட, எண்ணிக்கையில் மிக அதிகமானவைகளைக் கொண்ட வேறு சில மாநிலங்களும் இந்தியாவில் இருக்கத்தான் செய்கின்றன என்பதை மறந்துவிட முடியுமா? மறுத்துவிடத்தான் முடியுமா?

இந்தியாவின் தலைநகர் டெல்லிப்பட்டினத்தில் நடைபெறுவது பா.ஜ.க. ஆட்சிதான் - இந்தியாவில் நடைபெறுவதே பா.ஜ.க.வின் மத்திய ஆட்சிதான் - அந்த ஆட்சியின் உள்துறை அமைச்சர் திரு. அத்வானி அவர்களே நாடாளுமன்றத்தில், டெல்லியில் ஒருசில மாதங்களில் எத்தனை கொலைகள் - எத்தனை கற்பழிப்புகள் - எத்தனை கொள்ளைகள் - எத்தனை கடத்தல்கள் என்ற பட்டியலைத் தந்தபோது, நாம் ஏதோ ஒரு காட்டுமிராண்டிப் பிரதேசத்தில் வாழ்வது போன்ற பதைப்பல்லவா ஏற்பட்டது?

உத்தரபிரதேச மாநிலத்தில் - அதுவும் பாரதிய ஜனதா ஆட்சி நடைபெறும் இடத்தில் - லக்னோ நாடாளுமன்றத் தொகுதியில் மட்டும் கடந்த ஜனவரித் திங்கள் முதல் ஏப்ரல் மாதம் முடிய நான்கு மாதங்களில் 120 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். 110 இடங்களில் பயங்கரக் கொள்ளைகள் நடைபெற்றுள்ளன. 65 பேர் கடத்தப்பட்டனர். 11 பெண்கள் கற்பழிக்கப்பட்டனர்.

மத்திய பிரதேசத்தில் மட்டும் 1997இல் 3117 கற்பழிப்பு வழக்குகளும், டெல்லி தலைநகரில் மட்டும் 666 பெண்கள் கற்பழிக்கப்பட்டதாகவும் அத்வானி அவர்கள் நாடாளுமன்றத்திலே அளித்த பதிலில் கூறப்பட்டுள்ளது. மேலும் அவர், கடந்த 1997 ஆம் ஆண்டு இந்தியாவில் 14000க்கு மேற்பட்ட பெண்கள் கற்பழிக்கப்பட்டதாகவும், 27,513 பெண்கள் மானபங்கப் படுத்தப்பட்டதாகவும் தெரிவித்திருக்கிறார்.

அதுமட்டுமல்ல! 1997-ல் டெல்லியிலும், உ.பி.யிலும் 27 தடவைகள் குண்டுவெடித்து 11 பேர் மாண்டு 241 பேர் படுகாயமுற்றனர் என்றும், பாகிஸ்தான் உட்பட அண்டை நாடுகளில் ஆயுதப் பயிற்சி பெற்றவர்கள் இந்த குண்டுவெடிப்பு சம்பந்தமாக கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் உள்துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் 9.6.98 அன்று கூறியுள்ளார்.

உத்தரபிரதேசத்திலும், டெல்லியிலும் தலை விரித்தாடும் கொலைவெறிப் பட்டியலைப் படித்து விட்டு, ஆகவே அங்குள்ள

ஆட்சி கலைக்கப்படுகிறது என்று அறிவித்தார்களா? இல்லையே? அப்படி அறிவிக்குமாறு நாமும் கூறவில்லையே!

ஆத்திகரும், ஆன்மீகவாதியுமான நீதிபதி கிருஷ்ணா கமிஷன் கொடுத்த அறிக்கை, மராட்டியத்தில் நடைபெற்ற மதவெறிக் கலவரம் குறித்தும் - அக்கலவரத்துக்கும், பல உயிர்கள் பலியானதற்கும் காரணகர்த்தாக்கள் யார் என்பது குறித்தும் மிகத் தெளிவாகக் கொடுத்த அறிக்கையை அந்த மாநில அரசு மதித்த விதம் என்ன? அது குறித்து மத்திய அரசு எடுத்த நடவடிக்கைதான் என்ன? அந்த அரசைக் கலைத்துவிட்டார்களா? நாமும் அதனைக் கலைக்கச் சொல்லவில்லையே!

அசாம் எனினும், உ.பி. எனினும், டெல்லி எனினும், காஷ்மீர் எனினும் - அங்கு நடைபெறும் வன்முறைச் சம்பவங்களைக் காரணங்களாகக் காட்டி, அரசைக் கலைப்பதாக மத்திய அரசு முடிவெடுத்து விடமுடியுமா?

நாயைக் கொல்ல அதற்கு பைத்தியம் பிடித்துவிட்டது என்று காரணம் சொல்வதுபோல - மாநில அரசுகளைக் கலைக்க மத்தியில் அமைகிற அரசுகள், காரணம் சொல்வதை நாம் என்றைக்குமே ஏற்றுக் கொண்டதில்லை. மாநில அரசு தவறு செய்தால் மத்திய அரசு கலைத்திடும் எனில், மத்திய அரசு தவறு செய்யும் போது தட்டிக்கேட்பது யார்?

ஐந்தாண்டு காலம் மக்கள் காத்திருந்து, அமைதியாகவும் ஜனநாயக முறையிலும் மத்திய அரசை மாற்றி அமைத்திடலாம் என்பது பதிலானால், அதே பதில் மாநில அரசுகளுக்கும் பொருந்தாதா என்பதுதான் கழகமும், கழகத்தைப் போலவே மாநில உரிமைகளைக் காத்திட எண்ணும் இயக்கங்களும் நீண்ட காலமாக எழுப்பிவரும் கேள்வியாகும்.

பீகார் அரசைக் கலைப்பதற்குக் காட்டப்படும் காரணங்களைவிட, தமிழக அரசைக் கலைப்பதற்குரிய காரணங்கள் அதிகமிருக்கின்றன என்கிறார் ஜெயலலிதா!

அவர் சொல்வதுபோல அப்படி எந்தவொரு காரணமும் இல்லை என்பது அவருக்கே தெரியும் - கழக அரசைக் கலைத்திட ஜெயலலிதாவுக்கு ஒரே ஒரு காரணம்தான் இருக்கிறது - கலைத்துவிட்டால், தன் மீதுள்ள பல கோடி ரூபாய் ஊழல் கொள்ளைகளுக்கான வழக்குகள் இளைத்துவிடும்!

இளைத்து, ஈளைகட்டி, இருமல் மிகுந்து, இறுதியாக உயிர்விட்டுவிடும்!

இந்த ஒரு காரணத்துக்காகத்தான் ஜெயலலிதா, பீகாரை மட்டும் கலைத்தால் போதாது - தமிழக அரசையும் கலைத்திடுக என்று கதறுகிறார்! பதறுகிறார்!

ஆனால் நாமோ, எந்தவொரு கட்சியின் தலைமையில் உள்ள மாநில அரசையும் சட்டமன்றத்தில் அங்குள்ள பெரும்பான்மையைப் புறக்கணித்து, மத்திய அரசு தனது அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி அதற்கெனச் சில காரணங்களைக் கற்பனை செய்து காட்டி - கலைக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறோம்.

இது இன்று எடுக்கும் நிலையல்ல! இதோ - 1983 மார்ச் 29ஆம் நாள் தமிழக சட்டப்பேரவையில் தென்மாநில முதல்வர்கள் மாநாடு பெங்களூரில் நடைபெற்றதையும் - அதில் அருமை நண்பர் முதல்வர் எம்.ஜி.ஆர்., ஆந்திர முதல்வர் என்.டி. ராமராவ், கர்நாடக முதல்வர் ஹெக்டே, புதுவை முதல்வர் டி. ராமச்சந்திரன் (தி.மு.க.) ஆகியோர் கலந்து கொண்டு மாநில உரிமைகளுக்காக குரல் கொடுத்ததையும் பாராட்டி மார்க்சிஸ்ட் நண்பர் உமாநாத் கொண்டுவந்த தீர்மானத்தின் மீது நான் உரையாற்றியதில் ஒரு பகுதி இது :-

356 பிரிவு என்பது என்ன? அதுதான் ஒவ்வொரு மாநில சர்க்காருடைய தலையிலும் தொங்கிக் கொண்டிருக்கும் கொடுவாள். எந்த நேரத்திலும் குடியரசுத் தலைவர் சில காரணங்களைச் சுட்டிக்காட்டி ஒரு மாநில ஆட்சியை கலைக்க முடியும் என்பதே அந்த வாள் ஆகும். அந்தக் கொடுவாளுக்குத் தப்பிய கட்சி ஏதாவது இங்கு இருக்கிறதா?

நான் கூறுகிறேன் - கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி இந்த 356 பிரிவின்படி கலைக்கப்பட்டது ஒரு முறையல்ல! இரண்டு முறை! திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும் அந்தக் கொடுவாளுக்குத் தப்பவில்லை. கலைக்கப்பட்டது.

ஜனதா கட்சி, மத்தியில் ஆட்சி வந்ததும் காங்கிரஸ் ஆட்சிகள் ஒன்பது மாநிலங்களில் கலைக்கப்பட்டன.

பிறகு இந்திரா காங்கிரஸ் கட்சி, மத்தியில் ஆட்சிக்கு வந்த போது, ஜனதா கட்சி ஆண்ட மாநில அரசுகள் கலைக்கப்பட்டன. அ.தி.மு.க. ஆட்சியும் அப்போது கலைக்கப்பட்டது.

இன்னும் மற்ற கட்சிகள் சில, வளர்ச்சி அடையாத காரணத்தால் கலைக்கப்படவில்லையே தவிர, நாம் எல்லோரும் கலைக்கப்பட்ட கட்சிகளைச் சேர்ந்தவர்கள்தான் - கலைக்கப்பட்ட ஆட்சிகளைச் சேர்ந்தவர்கள்தான்!

எனவே இப்படிப்பட்ட பொதுவான நிலையில் பார்த்தாலும்கூட, இந்த 356வது பிரிவு எந்தவொரு கட்சியும் ஏற்கக்கூடாத பிரிவுதான்!

356 என்பது அரசியல் சட்டத்தில் ஒரு கொடுவாள் என்று 1983இல் சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கூறிய அதே சொற்றொடரைத் தான், 1998ல் 15 ஆண்டுகளுக்குப் பிறகும் நெல்லைப் பொன்விழா மாநாட்டில் 356வது பிரிவுக்கு எதிராக நிறைவேற்றிய தீர்மானத்திலும் பயன்படுத்தியிருக்கிறோம்.

1974 ஆம் ஆண்டு தமிழகச் சட்டப் பேரவையில் மாநில சுயாட்சித் தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றிய போது நான் முதலமைச்சர்! அப்போதும் 356 கூடாது என்பதே நமது கொள்கை!

1983 ஆம் ஆண்டு எதிர்க்கட்சித் தலைவராக நின்று பேரவையில் உரையாற்றிய போதும் அதே கொள்கைதான்!

1998, இப்போது பீகார் மாநில அரசைக் கலைத்திட முயலுவது ஜனநாயகத்திற்குக் களங்கம் என அறிவிக்கும்போதும் முதலமைச்சர்!

எனவே ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிடினும் எந்த நிலையிலும் கொள்கையில் ஒரே நிலைதான்!

1974 - 1998! மாநில சுயாட்சித் தீர்மானம் சட்டப்பேரவையில் நிறைவேறியதற்கான வெள்ளி விழா - ஆண்டு தொடக்கம் ! கழகத்திற்கும் பொன்விழா ஆண்டு தொடக்கம்!

எத்தனை விழாக்களாயினும், எந்த விழாக்களாயினும் - விழாக் கொள்கைகள் அண்ணா நம் இதயத்தில் விதைத்த கொள்கைகள்! ஆம்! என்றும் விழாத கொள்கைகள்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(25-09-1998)

2432. கண்ணீராய் வழிந்து கவின்மலர்க் கொத்தான விழா!

உடன்பிறப்பே,

இடையறாத பயணத்திற்கிடையே இளைப்பாறக் கிடைத்த நிழல்போல, இலக்கிய மேடைகளை, கவியரங்கங்களைக் கருதிக் களைப்பைப் போக்கிக் கொள்பவன் நான் என்பதை ஏற்கனவே இரண்டொரு சமயங்களில் சொல்லியிருக்கிறேன்.

இளைப்பாறுவதற்காக மட்டுமல்ல! என் இரத்த நாளங்களில் புதிய எழுச்சியையும், இதயத்திற்குத் தெம்பையும் அள்ளி வழங்கிய ஒரு நிகழ்ச்சியில், ஐந்து மணி நேரத்திற்கு மேலாக அமர்ந்திருக்கக்கூடிய அரிய வாய்ப்பு, செப்டம்பர் 27-ஆம் நாள் மாலையில் எனக்குக் கிடைத்தது. தமிழ்த்திரையுலகத்தினர் தந்த வாய்ப்புத்தான் அது.

52 ஆண்டுகளுக்கு மேலாகக் கலைத்துறையில் நான் ஆற்றி வரும் பணிக்காகப் பொன்விழாவையும் - 75-வது வயதில் அடியெடுத்து வைத்துவிட்டேன் என்பதற்காகப் பவளவிழாவையும், நடத்தியே தீருவோம் என்று அவர்கள் இரண்டு மாதங்களுக்கு மேலாக என்னைப் பிழிந்தெடுத்தனர் என்றே கூறலாம்.

அந்தப் பாசப்பிணைப்பிலேயிருந்து விடுபட முடியாமல் இறுதியாக, அவர்களின் அன்புக் கட்டளைக்குப் பணிந்து விட்டேன்.

ஏ.வி.எம். அவர்களின் அருமைப்புதல்வரும் - என்றுமே நிலையான அன்பை என்பால் கொண்டிருப்பவரும், எடுத்த காரியத்தைச் செம்மையாகச் செய்து முடிப்பவருமான சரவணன் அவர்களைத் தலைவராகக் கொண்டு குழுவை அமைத்தனர். அவர் தலைமையில் அமைந்த குழுவில், விழாவின் சிறப்புக்காக அல்லும் பகலும் பாடுபட்டோர் பலர் உண்டு எனினும், அடிக்கடி என்னைச் சந்தித்து விழா நிகழ்ச்சி எப்படியெல்லாம் இருக்கப்போகிறது என்கிற விபரங்களையும்; எந்த இடத்தில்

எந்த விதத்தில் நடத்தப்போகிறோம் என்பதையும், எத்தகைய நினைவுப் பரிசுகளை வழங்கிட இருக்கிறோம் என்பதையும், தம்பி சரவணனுடன் சேர்ந்து விளக்கிக் கொண்டிருந்தவர்கள் தமிழ்த்திரைப்படத் தயாரிப்பாளர்களின் சங்கத்தலைவரும், அந்தத் தொழிலில் ஈடுபட்டோர்க்கு நான் துணை நிற்க வேண்டுமென்று வலியுறுத்திக் கொண்டிருப்பவரும், என்னிடம் என்றும் தணியாத பற்றுக் கொண்டிருப்பவருமான தூய நண்பர் கே.ஆர்.ஜி. அவர்கள் - சென்னை, செங்கை மாவட்ட திரைப்பட விநியோகஸ்தர்களின் சங்கத் தலைவரும், திரைப்படத் துறையில் தனக்குக் கிடைக்கும் வெற்றிகளையெல்லாம் என் வெற்றியென்று உளமார நினைப்பவருமான நண்பர் சிந்தாமணி முருகேசன் அவர்கள் - தமிழ்நாடு திரைப்பட விநியோகஸ்தர்களின் சங்க கவுன்சில் தலைவர் திரு. சுரேஷ் - தமிழ்நாடு திரையரங்கு உரிமையாளர்களின் சங்கத் தலைவர் திரு. அண்ணாமலை - சென்னை நகர திரையரங்கு உரிமையாளர் சங்கத் தலைவர் திரு. இராமநாதன் - தமிழ்நாடு திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத் தலைவர்கள் திரு. நயீம், திரு. ஆர்.கே. செல்வமணி மற்றும் இந்த அமைப்புகளின் நிர்வாகிகள் மட்டுமல்லாது தம்பி பாரதிராஜா, கவிஞர் தம்பி வைரமுத்து, தம்பி முத்துராமன், தம்பி நெப்போலியன், தம்பி அழகப்பன், தம்பி ராமு ஆகியோர் ஆவார்கள்.

அவர்களின் விடா முயற்சிக்கும், நல்ல எண்ணத்திற்கும் கிடைத்த பயனாக விழா அமைந்தது. அமைத்த விழாவோ, கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகையில் கிடைத்த குளிர் தருவாக - தரு நிழலாக - நிழல் கனிந்த சுகமாக - எனக்கு இருந்தது.

ஐம்பது ஆண்டு காலத்திற்கு முன்பாக பொன்விழா கொண்டாட வேண்டிய அளவுக்கு முகிழ்த்து, இன்றைக்கும் அந்த இனிமை மாறாமல் செழித்துக் கொழித்துள்ள அந்த நட்பு இருக்கிறதே! அதுதான் நடிகர் திலகத்திற்கும் எனக்குமுள்ள நட்பு - அந்த நட்பின் உண்மையான உச்சகட்ட உணர்வை, நேரு விளையாட்டரங்கில் இருந்தோர் மட்டுமல்ல! இலட்சோப லட்சம் மக்கள் சன் டிவி நேரடி ஒளிபரப்பு வாயிலாக சிந்தை அணு ஒவ்வொன்றும் சிலிர்த்திட பார்த்துப் பரவச முற்றிருக்கின்றனர்.

உடன்பிறப்பே, நான் மாலை ஐந்து மணி அளவில் அரங்கத்திற்குள் நுழைந்தபோது, தம்பி கங்கை அமரன்

மேற்பார்வையில் இசை நிகழ்ச்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது. மெல்லிசை மன்னர்கள் விசுவநாதன் இராமமூர்த்தி உடனிருந்தனர்.

தந்தானே ! தந்தானே ! தன்னையே தமிழுக்குத் தந்தானே ! என்ற ஏற்றமிகு எடுப்புடன் இசைஞானி தம்பி இளையராஜாவே எழுதி, அவரே பண் அமைத்துப் பாடிய அந்தப் பாட்டில்தான் எத்தனை இன்பம்! எத்தனை இன்பம்! எத்தனை வித்தகம்!

இசைப்புயல் தம்பி ரகுமான், தம்பி சிற்பி, தம்பி ராஜ்குமார் ஆகியோரின் சங்கீதசாகரத்தில் அந்த அரங்கம் மூழ்கித் திளைத்து ஆனந்தம் கொண்டது.

சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி போல இருந்தது, சந்திரசேகரன் செல்வன் தம்பி விஜய், சீர்காழியின் செல்வன் தம்பி சிவசிதம்பரம், திருச்சி லோகநாதனின் திருமகன் தம்பி மகாராஜன், மலேசிய வாசுதேவன், மனோ, கோவை செளந்தரராஜன், எல்.ஆர். ஈசுவரி, சுஜாதா, சிந்து ஆகியோர் இசைத்த பாடல்கள்!

ஒரு நீண்ட நெடிய பாடல் எழுதியிருந்தார் கவிஞர் தம்பி வைரமுத்து - அதனை அனைவரும் பாடியபொழுது, ஆற்றின் பெருக்கோ! அருவியின் ஓசையோ! எனும்படி தமிழ்த்தாய் பேருருக்கொண்டு வானுக்கும் பூமிக்குமாக வளையாது நின்றாள்.

“ஆரூர் வீதியில் முழ்கி எழுந்தார்
பள்ளி வயதிலே கொடிதாங்கி
இத்தனை வயதிலும் முன்னேறுகின்றார்
இன்னும் இன்னும் இடிதாங்கி”

பரிவு மிகக் கொண்டு அந்தப் பாவலன் எழுதியுள்ள பாட்டை மேடையரங்கில் அனைவரும் பாடியபொழுது, இடிகளைத் தாங்கத்தான் அண்ணன் தந்த எதையும் தாங்கும் இதயம் இருக்கிறதே! என்று எண்ணிக் கொண்டேன்.

தாமு என்று ஒரு தம்பி - பலகுரல் நிகழ்ச்சி நடத்தினார். அரங்கில் இருந்தோர் அனைவரும் அதிசயித்துப்போனோம்.

அதன்பிறகு நடனநிகழ்ச்சிகள்! திரைப்படங்கள் பலவற்றுக்கு நடனநிகழ்ச்சி அமைத்துத் தந்து புகழ்பெற்ற கலா அவர்களின் தலைமையில், குழுக்களின் நடனம்!

தம்பி சிவகுமாரின் புதல்வன் சூர்யா, நடிகர் விஜயகுமாரின் மகன் அருண்குமார், திரைப்படத் தாரகைகள் கனகா, தேவயானி,

பிரிதா விஜயகுமார், ரசிகா, விசித்ரா, செண்பகா ஆகியோர் அற்புதமாக நடனமாடினர்.

பிலிம் நியூஸ் ஆனந்தன், தேவி மணி, மறைந்த நண்பர் ராகவன் தம்பி ஆகியோர் எழிலார்ந்த முறையில் எண்ணங்களின் கருவூலமாகத் தயாரித்துள்ள பவளவிழா மலர்,

கர்நாடகத்தின் முதலமைச்சரும், என் அருமை நண்பருமான மாண்புமிகு படேல் அவர்களால் வெளியிடப்பட்டது.

ஐம்பது ஆண்டு கால கலையுலக வாழ்க்கையை அந்த மலர் வரிசைப்படுத்திக் காட்டியுள்ளது மிக நேர்த்தி! மலரைப் பெற்றுக்கொண்டு, புதுவை முதல்வர் தம்பி ஜானகிராமன் சிறப்புரையாற்றினார்.

பட்டேல் அவர்களுடன், கர்நாடக அமைச்சரும், திரைப்பட நடிகராக இருந்தவருமான திரு. அனந்தநாக் அவர்களும் வந்திருந்து வாழ்த்தினார்.

தமிழக விவசாயிகளுக்கு நான் பாதுகாப்பாக இருக்கிறேன். நீங்கள் கர்நாடக விவசாயிகளுக்கு பாதுகாப்பாக இருங்கள் என்று கர்நாடக முதலமைச்சர் என்னைப் பார்த்து அந்த மேடையில் சொன்னபோது - அரங்கத்தில் மட்டுமல்ல, நேரடி ஒளிபரப்பில் ஆழ்ந்திருந்த தமிழக மக்களும், கர்நாடக மக்களும் எழுப்பிய கரவொலி என் செவிக்கும், சிந்தைக்கும் விருந்தல்லவோ!

இயக்குநர் சிகரம் பாலசந்தர் வரவேற்புரையாற்றினார் - இல்லை! இல்லை! வாழை, மா, பலா எனும் முக்கனி வழங்கினார்.

சூப்பர் ஸ்டார் தம்பி ரஜினிகாந்த் - பேச்சில் எப்போதுமே ஆழம் அதிகமல்லவா! சுவையான பேச்சு! சூடு இருந்தால்தானே சுவையும் கூடும்! எனவே சூடு, சுவை இரண்டுக்கும் குறைவில்லை! அளவோடு இருந்தது! ஆயுளும் நீளவேண்டுமாம் எனக்கு, அதுவரை இந்த ஆட்சியும் நீடிக்கவேண்டுமாம் - தம்பி ரஜியினின் இந்த ஆசை அவர் நம்மீது வைத்துள்ள நம்பிக்கையின் வெளிப்பாடெனக் கொள்வோம்!

இசைஞானி இளையராஜா போல நமக்குக் கலைஞானி தம்பி கமல் என்பது என் கருத்து. அந்தக் கலைஞானி பேசியது அச்சுக் கோத்துப் படிப்பது போல இருந்தது! அறிவுபூர்வமாகவும் இருந்தது! அன்பு மழையாகவும் இருந்தது.

என் இனிய தமிழ்மக்களே எனக் கம்பீரமாக அழைத்து தம்பி பாரதிராஜா, கற்கண்டைடப் பொடி செய்து கனிச்சாறுடன் கலந்து தந்தார் சிறப்புரையாக!

உரிமையுடன் கூடிய உறவும், எங்கிருந்தாலும் என்னைப்பற்றிய நினைவும் கொண்டு திகழ்கின்ற ஏற்றமிகு புரட்சிக்கலைஞர் விஜயகாந்த், கண்ணுபடப்போகுதய்யா - சின்னக் கவுண்டரே என்ற பாட்டின் ஞாபகத்தில், அண்ணனுக்கு சுற்றிப் போடுங்கள் என்று அண்ணியரைக் கேட்டுக் கொண்டார்.

சுப்ரீம் ஸ்டார் தம்பி சரத்குமார், நடனத்துக்கேற்ற ஒரு பாடலையும் தயாரிக்கச் செய்து அதைக் கேட்டு மகிழ்ந்தது மட்டுமின்றி, வீறு பாய்ச்சும் விரிவுரையுமாற்றி வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சும் வெறிச்செயல் புரிவோர்க்கு எச்சரிக்கை விடுத்தார். சங்கின் முழக்கம் சரத்தின் பேச்சென்பேன்.

இளையவேள் தம்பி ராதாரவி, இளையதிலகம் தம்பி பிரபு, தம்பி பார்த்திபன், தம்பி விஜயகுமார், தம்பி சிவகுமார், தம்பி சந்திரசேகர், தம்பி அர்ஜுன், தம்பி ஆனந்தராஜ், தம்பி ராஜேஷ், தம்பி பாண்டியராஜன், தம்பி தியாகு ஆகிய திரையுலகத் திலகங்களும் - மற்றும் எம்.என். ராஜம், சரோஜா தங்கவேலு, ஊர்வசி, மீனா ஆகியோரும்,

இயக்குநர் மணிரத்தினம், இயக்குநரும், இணையற்ற நகைச்சுவை நடிகருமான தம்பி மணிவண்ணன், இயக்குநர் பாலுமகேந்திரா ஆகியோரும் சிறப்புரையாற்றினர்.

இடையே தம்பி வைரமுத்துவின் கவிதையுரையும் உண்டு. நேரமில்லை என்பதால் வந்திருந்த கலைஞர்கள் பலருக்கு உரையாற்ற வாய்ப்பில்லை!

இளைப்பாறப்போன இடத்தில் இத்தனை அன்பான விருந்து - பண்பான படையல் - இத்தனைக்கும் முத்தாய்ப்பாகத்தான் என் ஆருயிர் நண்பர் சிவாஜியின் தலைமையுரை - ஆம்! குரல் தழுதழுத்த உரை - என்னையும் தழுதழுக்க வைத்த உரை - உணர்ச்சிப் பிரவாக உரை! உள்ளம் இரண்டில் உறங்கிக்கொண்டிருந்த உண்மையான நட்பின் வேகம், எழுந்து பொங்கிக் கண்ணீராய் - வழிந்து - கவின்மலர்க் கொத்தாக விரிந்து நிற்கக் காரணமான உரை!

உடன்பிறப்பே,

எனக்கு ஊக்கமூட்டும் குறிக்கோளுடன் கலையுலகம் எடுத்த இந்த விழா, திரையுலக வரலாற்றில் ஒரு திருவிழா என்பதற்குப் பெரும் சான்றாக, என்னிடம் நமது பேராசிரியர் சொன்னார் - கலையுலகின் எந்த விழாவும் இதுபோல தன்னைக் கொள்ளை கொண்டது இல்லை. இது கருத்து நிறைந்த விழா! எனவே, விழா எடுத்தோர் மகிழ்ந்திட, ஒரு கடிதம் எழுதுங்கள்! என்பதாக!

கலையுலகின் பக்கம் அதிகமாக நெருங்காத - நெருங்கவும் விரும்பாத - பேராசிரியர் மனத்திற்கே நிறைவு தந்த விழா என்கிறபோது, அந்த நிறைவை அவருக்கும் எனக்கும் தந்தவர்களான விழாக் குழுவினர்க்கும் - விழாவில் கலந்துகொண்ட கலையுலகத்துப் பெருமக்களுக்கு என் இதய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

விழாவில் இன்னொரு மாட்சியும் உண்டு - சிந்துகவி என்ற ஒரு சின்னஞ்சிறு அரும்பு, செந்தமிழில் சிறப்புரையொன்றையாற்றி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தியதுதான் அந்த மாட்சி! எழுதிக் கொண்டே போகலாம்! எண்ணற்ற பிரச்சினைகள் என்னை அழைத்துக் கொண்டே இருக்கின்றன - இப்போதே இரவு மணி இரண்டு! தழுவிடத் துடிக்கிறது உறக்கம்! எனவே கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(30-09-1998)

2433. செய்யும் தொழில் சிறப்பாக அமைந்திட...!

உடன்பிறப்பே,

இன்றைய கடிதத்தை பத்திரிகையாளர்களுக்கும், பத்திரிகை நிருபர்களுக்கும் பயன்பட வேண்டும் என்பதற்காக எழுதுகிறேன்.

சில பத்திரிகைகள் உண்மையிலேயே நடுநிலை ஏடுகளாக விளங்குகின்றன. சில பத்திரிகைகள் தமக்கென ஒரு கொள்கையுடன் அல்லது ஒரு கட்சியின் முழுமையான சார்பு நிலையுடன் அல்லது எல்லாச் செய்திகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் வண்ணம் திகழ்ந்து, அதே நேரம் தமது கருத்தையும் வலியுறுத்தும் வகையில் வெளிவந்து கொண்டிருக்கின்றன. என்னைப் பொறுத்தவரையில், அந்த ஏடுகளின் மீது எத்தகைய விமர்சனங்களையும் செய்வதற்காக இக்கடிதத்தை நான் எழுதிடவில்லை.

எந்தவொரு கருத்துடைய ஏடாக இருப்பினும், அதில் வரும் செய்திகளோ - உரைகளோ - கருத்துக்களோ செம்மையாக இருக்க வேண்டுமென்ற கவலையுடன்தான் இதனை எழுதுகிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், ஏடுகளில் காணப்படும் அச்சுப்பிழைகள், கருத்துப் பிழைகளுக்கே இடம் கொடுக்குமளவுக்கு இன்றைக்குப் பெருகி வருவதைக் காணும்பொழுதுதான் பத்திரிகைத்துறை நண்பர்களுக்காக இக்கடிதம் எழுத நேரிட்டது.

ஓர் இயக்கத்தின் தலைவன் என்ற முறையிலும், ஒரு மாநில முதலமைச்சர் என்ற முறையிலும் அடிக்கடி நிருபர்களைச் சந்திக்கும் வாய்ப்பைப் பெறுபவனாக நானிருக்கிறேன். பேட்டி கொடுக்கும் செய்திகளில் கூட்டல், கழித்தல் இருப்பதை நான் பத்திரிகையாளர்கள் மீது குறையாகச் சொல்ல மாட்டேன். சில

நேரத்தில் பேட்டியில் சொல்லப்பட்ட விஷயங்களை வெளியிடும் போது திரித்தல் இருப்பதும் உண்டு. அதனை நான் அரசியல் என்று கருதி பெரிதுபடுத்துவதில்லை. வருத்தப்படுவேன். அவ்வளவுதான்!

ஆனால் நான் இப்போது சொல்ல வருவது, அவைகளைப்பற்றியெல்லாம் இல்லை. பத்திரிகைத் தொழிலில் ஏராளமான இளைஞர்கள் இன்றைக்கு ஈடுபட்டிருப்பதையும், அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் செய்தி சேகரிக்கத் துள்ளிக் குதித்துத் துடித்தோடி வருவதையும் கண்டு மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

ஆனால் அவர்களின் பணி மேலும் சிறந்து விளங்குவதற்கும், அவர்கள் தொழில்புரியும் பத்திரிகை நிறுவனங்களின் ஏடுகள் எந்தவிதக் குறைகளுக்கும் உள்ளாகாமல் செம்மையாக நடைபெறுவதற்கும் அந்த இளைஞர்களான நிருபர்களுக்கு, இளம் துணை ஆசிரியர்களுக்கு, பிழை திருத்துவோருக்குப் போதிய பயிற்சி வழங்கிட வேண்டும். அல்லது அவ்வாறு நல்ல பயிற்சி பெற்றவர்களையே அந்தப் பணிக்கு அமர்த்துகிற நிலையை உருவாக்கிட வேண்டும்.

ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு, நான் ஈரோடு நகரில் பெரியாரின் குடியரசு வார இதழில் துணை ஆசிரியராக இருந்தேன். துணை ஆசிரியர்கள் எழுதுகிற பணி மட்டுமின்றி, பிழை திருத்துகிற பணியிலும் ஈடுபடுவோம். இயக்கத் துடிப்பும் இணைந்து இருந்த காரணத்தால், அச்சான பத்திரிகைகளை வகையாக மடித்து, அஞ்சல் தலைகள் ஒட்டி, முகவரி எழுதி அனுப்புகிற பணியிலேகூட அயராது ஈடுபடுவோம்.

அந்த அளவு இல்லாவிடினும், குறைந்தபட்சம் செய்திகளைச் சேகரிக்கும் போதாகட்டும் - அல்லது சேகரித்தச் செய்திகளை எழுதிக் கொடுக்கும் போதாகட்டும் - அல்லது எழுதிக் கொடுத்த செய்திகள் அச்சுக் கோக்கப்பட்ட போதாகட்டும் - அவற்றில் அக்கறையுடன் கவனம் செலுத்தி, எந்தவொரு சிறு தவறும் வந்துவிடாமல் பார்த்துக் கொள்ளும் பொறுப்பைக்கூடச் சிலர் தட்டிக் கழித்துவிடுவது வேதனையாக இருக்கிறது.

குடியரசு அலுவலகத்தில் தந்தை பெரியார் அவர்கள், தான் எழுதிய தலையங்கமாயினும் - கட்டுரையாயினும் அவற்றை

பூதக்கண்ணாடியொன்றைக் கையிலே வைத்துக் கொண்டு புரூப் பார்த்து திருத்தும் செயலை நான் நேரிலே கண்டவன். அதேபோல மூதறிஞர் ராஜாஜி அவர்களை நான் சந்திக்கச் சென்ற பல நேரங்களில், அவர், தானெழுதிய சுயராஜ்யா ஏட்டுக்கான கட்டுரைகளை, கையில் பூதக்கண்ணாடியை வைத்துக் கொண்டு, மிகக் கூர்மையாக புரூப் பார்த்த காட்சியினையும் கண்டிருக்கிறேன்.

குடியரசில் துணை ஆசிரியராக இருந்து, புரூப் திருத்தும் பணியையும் அக்கறையுடன் கவனித்த அந்தப் பயிற்சிதான் எனக்கு இன்றளவும் பயன்படுகிறது என்பதை எண்ணி இப்போதும் நான் பெருமிதம் கொள்கிறேன்.

இந்தப் பீடிகையெல்லாம் எதற்காக என்றால், இந்த ஒரு வார காலத்தில் சில ஏடுகளில் நான் கண்ட மிகப் பெரும் பிழைகளை சுட்டிக் காட்டுவதற்காகத்தான்! அந்த ஏடுகளில் சில எதிர்தரப்பு ஏடுகளாயிருந்தாலும், அவைகளும் இத்தகைய பிழைகளை திருத்திக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான்! கடந்த 30.9.98 அன்று, திருச்சிக் கூட்டத்தில் நான் ஆற்றிய உரை, முரசொலியில் ஒரு முழுப்பக்கம் முற்றிலும் பிழைகள் மலிந்ததாகவே அச்சிடப்பட்டிருந்தது. மறுநாள் பிழைகள் திருத்தப்பட்ட உரையை மீண்டும் முரசொலியில் வெளியிட்டு, அதற்கான குறிப்பும் எழுதப்பட வேண்டியதாயிற்று.

அண்ணாவின் பெருந்தன்மை எல்லையே இல்லாதது என்று நான் பேசியது பெருந்தன்மையே இல்லையே என்று அச்சாகியிருந்தது!

நான் முதன் முதலில் தேர்தலில் வென்ற இடம் திருச்சி மாவட்டம் என்று பேசியது, சென்ற இடம் திருச்சி மாவட்டம் என்று அச்சாகியிருக்கிறது!

இப்படிப் பல! எனவேதான் அந்தப் பேச்சைப் பிழை திருத்தி மீண்டும் வெளியிட்டனர் முரசொலியில்!

அதே திருச்சி கூட்டத்தில் சேது சமுத்திரத் திட்டம் என்று நான் ஐந்தாறு தடவை குறிப்பிட்டேன். ஆனால் திருச்சியிலிருந்து வெளிவரும் ஒரு ஏட்டில் (பெயர் குறிப்பிட விரும்பவில்லை) சேது சமுத்திரத் திட்டம் என்பதை சேது பாவா திட்டம் என்றே இரண்டு மூன்று இடங்களில் அச்சிட்டிருந்தார்கள்.

அந்தத் திருச்சி கூட்டத்துப் பேச்சை சென்னையில் மாலை ஏடு ஒன்று வெளியிட்ட போது, நெல்லை மாநாட்டுத் தீர்மானங்கள் என்பதை டெல்லி மாநாட்டுத் தீர்மானங்கள் என்று வெளியிட்டிருந்தது.

தியாகிகள் மணிமண்டபத்தை சென்னையில் நான் திறந்து வைத்து ஆற்றிய உரை பற்றி செய்தி வெளியிட்ட சென்னை மாலை ஏடு, தியாகிகள் பெயர்களை வரிசைப்படுத்திப் பட்டியல் இட்டிருந்தது. அந்தப் பட்டியலில் தில்லையாடி வள்ளியம்மாள் என்பதை திண்டிவனம் வள்ளியம்மாள் என்று குறிப்பிட்டிருப்பதைப் பார்த்து சிரிக்காமலும் இருக்க முடியவில்லை. இந்த நிலை சீர் செய்யப்பட வேண்டுமேயெனக் கவலைப்படாமலும் இருக்க முடியவில்லை.

இத்தகைய பிழைகள் ஏற்படுவது குறித்து, ஏற்கனவே பலதடவை அந்தப் பத்திரிகை ஆசிரியர்கள், நிறுவனர்கள் ஆகியோரின் கவனத்திற்கேகூட நானே தொலைபேசி வாயிலாகக் கொண்டு சென்றுள்ளேன்.

எவரையும், எந்த ஏட்டையும் குறை சொல்வதற்காக அல்ல! செய்யும் தொழில் சிறப்பாக இருந்திடல் வேண்டுமென அத்துறையில் இருப்போர் எக்கருத்துடையவராயிருப்பினும், அவர்கள் அனைவர்க்கும் உணர்த்தி, நிறை காண வேண்டும் என்பதற்காகவே இதனை எழுத நேரிட்டது.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(04-10-1998)

2434. நிறைவேற முடியாத ஆசை; நெருக்கடி நெருப்பில் டெல்லி!

உடன்பிறப்பே,

இந்தியத் தலைநகரம் டெல்லிக்குச் சென்று திரும்பிய ஜெயலலிதா, டெல்லியிலும், சென்னையிலும் நடைபெற்ற நிருபர்கள் கூட்டத்தில் பக்குவமாக பதில்களைச் சொன்னார் என்றும், பதற்றம் அடையாமல் பல கேள்விகளுக்கு விடையளித்தார் என்றும், அவருடைய பதில்கள் மின்னல் வெட்டு போலவும், பட்டு கத்தரித்தது போலவும் இங்கிதமாக இருந்தன என்றும், இந்தியில் பதில் அளித்த நேர்த்தியே நேர்த்தி என்றும் ஒவ்வொரு விதமான வர்ணனையுடன் ஏடுகள் சில செய்திகள் வெளியிட்டிருக்கின்றன.

அந்தப் பேட்டியில் கேட்கப்பட்ட ஒன்றிரண்டு கேள்விகளையும், ஒன்றிரண்டு பதில்களையும் பார்த்தாலே, ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதைப் போல, ஜெயலலிதாவின் குழப்ப நிலை எல்லோருக்கும் தெளிவாகப் புரியும்.

நிருபரின் கேள்வி :- காங்கிரசோடு உங்கள் கட்சி கூட்டணி சேருமா?

ஜெயலலிதா பதில் :- அரசியலில் எதுவும் நடக்கலாம். எப்பொழுதும், எந்த வாய்ப்புக்கும் தயாராக இருப்பது தான் ஒரு அரசியல் தலைவரின் புத்திசாலித்தனமான நடவடிக்கையாக இருக்க முடியும்.

நிருபரின் கேள்வி :- வாஜ்பாய் அரசுக்கு உங்கள் ஆதரவு எவ்வளவு காலம் நீடிக்கும்?

ஜெயலலிதா பதில் :- வாஜ்பாய் அரசுக்கு எந்த ஆபத்தும் இல்லை. ஏழைகளுக்கு ஏதாவது நன்மை கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் நாங்கள் ஆதரவு கொடுத்தோம். அதே நல்ல எண்ணத்தில் தொடர்ந்து ஆதரவு கொடுப்போம்.

நிருபரின் கேள்வி :- சோனியா காந்தி இத்தாலிப் பெண் என்றும், வெளிநாட்டவர்கள் பிரதமர் பதவிக்கு வருவதைக் கடுமையாக எதிர்ப்பேன் என்றும் முன்பு சொன்னீர்களே?

ஜெயலலிதா பதில் :- சோனியா காந்தியைப் பற்றி யாரும் கேள்வி கேட்க வேண்டாம். அதற்கு நான் பதில் சொல்ல மாட்டேன்.

நிருபரின் கேள்வி :- பீகார் அரசைக் கலைப்பதற்கான மந்திரிசபையின் சிபாரிசை மீண்டும் ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டும் என்ற யோசனையை உங்கள் கட்சி ஆதரிக்குமா?

ஜெயலலிதா பதில் :- இந்த சிபாரிசை மீண்டும் ஜனாதிபதிக்கு அனுப்பினால் அதில் தமிழக அரசு கலைப்பையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

நிருபரின் கேள்வி :- அத்வானிக்கு ஞாபக மறதி நோய் என்று கூறி இருந்தீர்களே?

ஜெயலலிதா பதில் :- கடந்த கால கருத்து வேறுபாடுகளுக்கு தீர்வு காணும் அளவுக்கு அனுபவம் உள்ளவர்கள்தான் நாங்கள். அவருடன் நடத்திய பேச்சுவார்த்தை பயன் உள்ளதாகவும், சுமுகமாகவும் இருந்தது.

நிருபரின் கேள்வி :- பிரமோத்மகாஜனின் சவாலுக்கு நீங்கள் பதில் அளிக்காதது ஏன்?

ஜெயலலிதா பதில் :- இதற்கு நான் பதில் சொல்ல விரும்பவில்லை.

உடன்பிறப்பே! அம்மையார் அளித்த பதில்கள் எவ்வளவு அழுத்தந்திருத்தமாகவும், திட்டவட்டமாகவும், தெளிவாகவும் இருக்கின்றன பார்த்தாயா? பா.ஜ.க.வுக்கும் ஆதரவாம்! காங்கிரசோடு சேருகிற வாய்ப்புக்கும் தயாராக இருப்பாராம்! அதாவது விலாங்கு மீன்போல!

சோனியா காந்தியை இந்தியப் பிரதமராக வர விடமாட்டேன் என்று சூளுரைத்து தோள் தட்டுவாராம்! அதைப்பற்றிக் கேட்டால் சோனியாவைப் பற்றி எந்தக் கேள்வியையும் கேட்காதீர் என்று பின்னங்கால் பிடரியில் இடிபட ஓடுவாராம்! இவற்றில் எல்லாம் குழப்பம் இருந்தாலும், தி.மு.க. அரசைக் கலைக்க வேண்டுமென்கிற கோரிக்கை மாத்திரம் அப்படியே இருக்கிறதாம்! பீகார் அரசோடு சேர்த்து தமிழக அரசையும் கலைக்க வேண்டும்

என்பதில் மாத்திரம் விடாப்பிடியாக, மத்திய அரசுக்கு நெருக்கடி கொடுத்துக் கொண்டே இருப்பாராம்!

ஜெயலலிதாவின் இந்தக் கூத்துக்களைப் பார்க்கும் போது அண்மையில் - பயனியர் - என்ற ஆங்கில நாளிதழில் சூரியப்பிரகாஷ் என்பவர் எழுதியுள்ள ஒரு கட்டுரையின் சில பகுதிகள்தான் என் நினைவுக்கு வருகின்றன. அதனைச் சுருக்கித் தொகுத்து அளிக்கிறேன். அவர் பின்வருமாறு எழுதுகிறார்....

கார்ட்டுனிஸ்ட் அபு, ஒருமுறை ஒரு கேலிச் சித்திரம் வரைந்திருந்தார். குடியரசுத் தலைவர் திரு. பக்ருதீன் - அலி-அகமது குளியல் தொட்டியில் இருப்பது போலவும், உதவியாளர் மூலம் உள்ளே நீட்டப்படுகின்ற கோப்புகளில் உடனடியாக கையெழுத்திடுவதற்கு வசதியாக, கதவு சற்றே திறந்திருப்பது போலவும் அந்தக் கேலிச் சித்திரம் அமைந்திருந்தது. இது நடந்தது இருபது ஆண்டுகளுக்கு முன். அது டெல்லியை ஆண்டு கொண்டிருந்தவர்கள், ஒவ்வொரு முதலமைச்சர் தலைக்கு மேலும் 356 சட்டப்பிரிவு என்னும் கத்தி ஊசலாடிக் கொண்டிருக்கச் செய்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்து கொண்டிருந்த காலம். அமைச்சரவையின் விருப்பத்திற்கு மறுப்பேதும் இன்றி, சிந்திக்காமலேயே குடியரசுத் தலைவர் சம்மதம் தெரிவிப்பார் என்று டெல்லியை ஆண்டவர்கள் எதிர்பார்த்த காலம் அது.

ஆனால், காலம் மாறிவிட்டது. மத்திய, மாநில உறவுகள் குறித்து திரு. பொம்மை மீதான தீர்ப்புக்குப் பிந்தைய காலக்கட்டத்தில், மேதகு கே.ஆர். நாராயணன் அவர்கள், குடியரசுத் தலைவர் மாளிகையில் குடியிருக்கும் காலம் இது. அரசியல் நெறி தவறாமையை மத்திய அமைச்சரவையில் இடம் பெற்றிருப்பவர்களிடத்து மட்டுமல்லாமல், குடியரசுத் தலைவரிடத்தும், மற்ற அரசியல் சட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பில் உள்ளவர்களிடத்தும் கட்டாயமாக எதிர்பார்க்கும் சகாப்தம் இது. இந்த மாறுதலை மனதில் கொள்ளாதவர்கள் காலப்போக்கில் வருத்தப்பட வேண்டி வரும். பீகார் மாநிலத்தை மத்திய அரசின் ஆளுகைக்குக் கீழ் கொண்டுவர எடுக்கப்பட்ட நிறைவேறாத முயற்சி, நமக்குப் புகட்டுகின்ற நீதி இதுதான்.

சர்க்காரியா கமிஷன் விதித்துள்ள கோட்பாடுகள் குறித்தும், 356ஆம் அரசியல் சட்டப் பிரிவைப் பயன்படுத்துவது பற்றி, பொம்மை விவகாரத்தில் உச்சநீதிமன்றம் அடையாளம்

காட்டியுள்ள அளவுகோல்கள் குறித்தும், மத்திய ஆட்சியாளர்கள் கொண்டிருக்கும் வெறுப்பு விவரிக்க இயலாததாகும்.

உத்திரப் பிரதேசத்தில் கல்யாண்சிங் அரசைப் பதவியிறக்கம் செய்ய வேண்டும் என்ற குஜ்ரால் அமைச்சரவையின் ஆலோசனையைக் குடியரசுத் தலைவர் திருப்பி அனுப்பியது ஓராண்டுக் காலத்திற்கு முன்னாலே தான்! அதற்குப்பிறகு, ஆளுநர் ரொமேஷ் பண்டாரியின் குறும்புச் செயலை முறியடிக்க, நாடாளுமன்றத்தின் இரு சபைகளின் கூட்டு முடிவு என்னும் சோதனைக்கு உச்சநீதிமன்றம், முன் எப்போதும் இல்லாத வகையில் ஆணையிட்டது.

பொம்மை விவகாரத்தில் உச்சநீதிமன்றத்தின் பெரும்பான்மையான கருத்தின் முக்கியத்துவத்தை மத்திய அரசு முழுமையாக உணர்ந்து கொண்டிருந்தால், பீகார் விவகாரத்தில் இந்தப் படுதோல்வி ஏற்பட்டிருக்காது. ஒன்பது நீதிபதிகள் அடங்கிய குழு இந்த நிலையை விசாரணை செய்தது. நீதிபதிகள் சாவன்த் மற்றும் குல்திப்சிங் ஆகியோர் அடங்கிய குழு தங்களது முடிவுகள் பற்றிய பத்து அம்ச சுருக்கம் ஒன்றை வெளியிட்டது. நீதிபதிகள், எஸ்.சி. அகர்வால் மற்றும் பீ.பி. ஜீவன் ரெட்டி ஆகியோர் 1, 2 மற்றும் 4 முதல் 7 வரை உள்ள முடிவுகளை முழுக்க ஏற்பதாகவும், 8-வது முடிவை (சமயச்சார்பின்மை பற்றியது) பொதுவாக ஏற்பதாகவும் கூறியிருந்தனர். நீதிபதி இரத்தினவேல்பாண்டியன் தமது கருத்தைத் தனியாகத் தெரிவிக்கும்போது நீதிபதி சாவன்த்தின் 1, 2 மற்றும் 4 முதல் 8 வரை உள்ள முடிவுகளை ஏற்பதாக அறிவித்திருந்தார். இவ்வாறு நீதிபதி சாவன்த் அவர்களின் இந்த 7 முடிவுகள் திரு. பொம்மை வழக்கில் பெரும்பான்மைக் கருத்தை உருவாக்குகின்றது. இந்த முடிவுகளைப் பின்வருமாறு சுருங்கக் கூறலாம் :

* அரசியல் சட்டம் 356(1)ன் கீழ் குடியரசுத் தலைவர் வெளியிடும் சாற்றாணையின் (Proclamation) ஏற்புடைமை மறு ஆய்வு செய்யத்தக்கது (Judicially reviewable) அவ்வாறு வழங்கப்படும் ஆணை ஏதாவது ஆதாரத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டதா, அந்த ஆதாரம் பொருத்தமானதுதானா அல்லது அதிகார துஷ்பிரயோகமாக வெளியிடப்பட்டதா என்பவை நீதிமன்றத்தின் புனராய்வுக்கு உட்பட்டவை. அந்த ஆணையை எதிர்த்து, முதல்நோக்கு வழக்கு ஒன்று (A Prma facie case) பதிவு செய்யப்படுமானால், அப்படிப்பட்ட ஆதாரம் உண்மையிலேயே

உள்ளது என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு மத்திய அரசையே சார்ந்தது.

* எதன் அடிப்படையில் குடியரசுத் தலைவர், இது போதுமானது என்ற முடிவுக்கு வந்தாரோ, அந்த ஆதாரத்தைப் பரிசோதிப்பதற்கு (Scrutiny) அரசியல் சட்டப் பிரிவு 74(2) தடையாகாது.

* அரசியல் சட்டப் பிரிவு 356(1) துணைப் பிரிவுகள் (A), (B), (C) ஆகியவற்றின் கீழ் தமது அதிகாரங்களைப் பயன்படுத்தி, குடியரசுத் தலைவர், மாற்றமுடியாத நடவடிக்கைகளை மேற்கொள்ள, நாடாளுமன்றத்தின் இசைவை பெற்றாலல்லாமல் அனுமதிக்கப்பட மாட்டாது. குறைந்தபட்சம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இசைவு அளிக்காத வரை, மாநில சட்டமன்றத்தை ஆளுநரின் அதிகாரங்களைப் பயன்படுத்தி, குடியரசுத் தலைவர் கலைப்பது சரியெனக் கருதப்பட மாட்டாதது இந்தக் காரணத்தைக் குறித்துத்தான்.

* குடியரசுத் தலைவர் பிறப்பித்த ஆணை செல்லத்தகாதது என்றால், நாடாளுமன்றத்தின் இரு சபைகளும் ஏற்றுக் கொண்டன என்றாலும், அத்தகைய ஆணை பிறப்பிக்கப்படுவதற்கு முன்பிருந்த நடைமுறை நிலைமையை திரும்பக் கொணர்வதும் (restore the status quo ante), அதன் மூலமாக சட்டமன்றம் மற்றும் அமைச்சரவையை திரும்பக் கொண்டு வருவதும் நீதிமன்றத்தின் முடிவிற்கு விடப்படும்.

* பொருத்தமான சிலவற்றில் குடியரசுத் தலைவருடைய ஆணையின் செல்லுபடியாகும் தன்மையை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு முடிவாகத் தீர்வடையாத போது, வழங்கப்பட உள்ள தீர்ப்பு பலனில்லாமல் போய் விடுவதைத் தடுத்து விடுவதற்காக, சட்டமன்றத்திற்குப் புதிய தேர்தல்கள் நடத்துவதற்கு இடைக்காலத் தடை விதிக்க நீதிமன்றம் அதிகாரம் பெற்றிருக்கும்.

* நடைமுறை நிலைமைக்கு முன்னால் இருந்த நிலைமையை ஏற்படுத்தும்போது, தகுந்த நிவாரணத்தை உருவாக்குவதும் (mould the relief) நீதிமன்றத்துக்கே விடப்படும்.

* அரசியல் சட்டத்தின் அடிப்படை அமைப்பின் ஒரு பகுதிதான் சமயச்சார்பின்மை (Secularism). நமது அரசியல் சாசனத்தில் போற்றி வைக்கப்பட்டுள்ள சமயச் சார்பின்மை என்னும் தத்துவத்தை மாற்றவோ, சீர்குலைக்கவோ (subvert and sabotage) முயலும் மாநில அரசின் நடவடிக்கைகள், அரசியல் சட்டத்தின்

விதிகளுக்கு இணங்க, மாநில அரசு தன் செயற்பாடுகளை மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்பட்டால் மட்டுமே சட்டப்படி கருதத்தக்கதாகும்.

* இதுதான் தற்போதுள்ள நாட்டின் சட்டம் (Law of the Land) 356-வது அரசியல் சட்டப் பிரிவைக் குறித்த விஷயங்களில் மத்திய அரசு அமைச்சரவையின் அறிவுரையை ஒரு எந்திரம்போல் அப்படியே ஏற்பதானால், பொம்மை விவகாரத்திற்குப் பிறகு, குடியரசுத் தலைவர் கத்திமுனையில் நடப்பது போலிருக்கும் என்பது இந்த நீதிமன்றத் தீர்ப்பைப் படிக்கும் எல்லோருக்கும் எளிதில் புரிந்திருக்கும்.

* குடியாட்சி முறை பண்படுத்தப்பட வேண்டும் என்பதிலும், மத்திய அரசை நிர்வகிக்கிறவர்கள் மீது சில விதிமுறைகளை வலியுறுத்துவதிலும் நீதிமன்றத்தின் ஆர்வம் தெளிவாகப் புலனாகும் இந்த வேளையில், குடியரசுத் தலைவர், நமது முன்னோடிகளை அப்படியே பின்பற்ற வேண்டுமென்றும், தம் அறிவைப் பயன்படுத்தாமல் அரசியல் சட்டம் 356-ஐக் கண்ணை மூடிக் கொண்டு அமல்படுத்த வேண்டுமென்றும் கூறுவது அவர்க்குத் தரப்படும் தவறான ஆலோசனையாகும்.

இந்தச் சட்டக் கெடுபிடிகள் ஒருபுறமிருக்க, ஒரு பண்பட்ட குடியாட்சிக்கு இசைந்த கோட்பாடுகளை நிலைநிறுத்துவதில் திரு. நாராயணன் தாமே மிகவும் உன்னிப்பாக இருக்கிறார். எனவே, ராப்ரி அரசுக்கு எதிரான மத்திய அரசின் நடவடிக்கை, சட்டம் விதிக்கும் நிர்பந்தங்களைச் சரியாகப் புரிந்து நடக்கவில்லை, என்பதை மட்டுமல்லாமல் குடியரசுத் தலைவரின் நல்ல நோக்கங்களையும் புரிந்து நடக்க மத்திய அரசு தவறிவிட்டதையும் உணர்த்துகிறது.

ஆணை செல்லத்தக்கதா? என்பது நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்பட வேண்டியது என்பதும், ஏதாவது ஆதாரத்தின் பேரில் ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா? அவ்வாறு பிறப்பிக்கப்பட்டிருந்தால் இது எந்த அளவுக்குப் பொருத்தமானது? என்பதைக் கண்டறியும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு உள்ளது என்பது நீதிமன்றக் கருத்தின் சாராம்சமாகும்.

மேலும், குறைந்தபட்சம் நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளும் ஒப்புதல் அளிக்காத நிலையில், மாநில சட்டமன்றத்தை கலைப்பது போன்ற மாற்றமுடியாத

நடவடிக்கைகளைக் குடியரசுத் தலைவர் மேற்கொள்வதை இந்த ஆணை தடை செய்கிறது. முடிவாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் ஆணைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டாலும், ஆணை பிறப்பிக்கும் முன் இருந்த நடைமுறை நிலையை திரும்பக் கொணர்வது, அதாவது, சட்டமன்றம் மற்றும் அமைச்சரவையைத் திரும்ப உயிர்ப்பிப்பது நீதிமன்றத்தின் முடிவுக்கே விடப்படும்.

இன்னொரு விஷயமும் இதற்கு இணையான முக்கியத்துவத்தைப் பெறுகிறது. இதன்படி, அரசியல் சட்டப் பிரிவு 74(2) அதாவது குடியரசுத் தலைவருக்கு அளிக்கப்படும் யோசனையை நீதிமன்ற ஆய்விலிருந்தும் பாதுகாத்து வந்த பிரிவு, தற்போது ஓரளவு மாற்றப்பட்டுள்ளது. அந்தச் சட்டப் பிரிவு கூறுவதாவது : எந்த, எப்படிப்பட்ட ஆலோசனை குடியரசுத் தலைவருக்கு அமைச்சர்களால் வழங்கப்பட்டாலும், அது எந்த நீதிமன்றத்திலும் விசாரிக்கப்படக் கூடாது. என்பதை மாற்றி, குடியரசுத் தலைவர் எந்த ஆதாரத்தின் அடிப்படையில் தமது மனநிறைவை வெளியிட்டாரோ, அந்த ஆதாரத்தை நீதி மன்றம் மதிப்பீடு செய்வதற்கு அரசியல் சட்டத்தின் 74(2) ஆம் பிரிவு தடையல்ல என்று பொம்மை தீர்ப்பு தெளிவாக்கியுள்ளது.

இந்தத் தீர்ப்புக்குப் பிறகும் கூட, குடியரசுத் தலைவர் அவசரக் கோலத்தில் கையெழுத்திடுவார் என்று ஒரு அப்பாவி மட்டுமே நம்ப முடியும். தமக்கு முன் வைக்கப்பட்டுள்ள விஷயத்தை நன்கு பரிசோதிக்கவும், அரசியல் சட்டச் சீர்குலைவு குறித்து தாம் மனநிறைவு அடைவதற்கு முன்னால் ஆய்ந்து பார்க்கவும் பொம்மை ஆட்சிக் கலைப்பு விவகாரம் குடியரசுத் தலைவரை நிர்பந்தப்படுத்துகிறது.

உத்திரப் பிரதேசத்தில் பி.ஜே.பி. அரசைக் கலைக்க கூறிய திரு. குஜ்ரால் அரசின் தீர்மானத்தை மறுபரிசீலனை செய்ய குடியரசுத் தலைவர் திரு. கே. ஆர். நாராயணன் கூறியதிலிருந்து இது தெளிவாகிறது.

உச்சநீதிமன்றம் எந்த ஆதாரத்தையும் மதிப்பீடு செய்யவும், அந்த ஆதாரம் ஏற்புடையதுதானா என்பதைக் கண்டறியவும் தனக்கு அதிகாரம் உள்ளது என்று கூறிவிட்டதால், அப்படிப்பட்ட நீதிமன்ற மதிப்பீட்டைத் தாங்க இயலாது என்று மறுத்தளிக்கும் துணிகர முடிவை மறுபரிசீலனை செய்யக் கோரும், தன்னுடைய உரிமையைக் குடியரசுத் தலைவர் ஆணையில் கையெழுத்திடுவாரானால் நீதிமன்றமும், வெளிஉலகும், அவர்

அரசியல் சட்டப்பிரிவு 74(1) இதன்படி அவருக்கு அளிக்கப்படும் ஆலோசனையின் பேரில் நடக்க வேண்டிய கடமையுள்ளவர் ஆதலால், அவ்வாறு செய்துள்ளார் என்பதை விளங்கிக் கொள்ளும்.

அவர் முன் வைக்கப்பட்ட ஆதாரம் குறித்து, அவர் தொடக்கத்தில் திருப்தியடையவில்லை என்பதையும் நீதிமன்றங்கள் தெரிந்து கொள்ளும்.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை மதிக்க வேண்டும் என்னும் குடியரசுத் தலைவரின் விருப்பத்தையும், தம்மைக் காத்துக் கொள்ள ஒரு பாதுகாப்பு சாதனத்தைப் பயன்படுத்த அவர் நினைத்ததையும் மத்திய அமைச்சரவை உணரத் தவறிவிட்டது. பீகார் விஷயத்தில் ஏற்பட்ட பெருந் தோல்விக்கு இதுதான் காரணம்.

பி.ஜே.பி.யின் துரதிர்ஷ்டம் என்னவென்றால், நீதிமன்றம் முன்வந்து 356- சட்டப் பிரிவைப் பயன்படுத்துவது பற்றிய விதிகளை வகுத்த பிறகு, மத்தியில் ஆட்சிப் பொறுப்பை அது ஏற்க நேரிட்டுள்ளதுதான்!

உடன்பிறப்பே!

இத்தனை பிரச்சினைகளையும் ஜெயலலிதா போன்றவர்கள் உணர்ந்திருந்தாலும், உணரும் வாய்ப்பை பெறாமலிருந்தாலும், உணர மறுத்தாலும் அவர்களுக்குள்ள ஆதங்கம் எல்லாம், ஜனநாயக வழிக்குப் புறம்பாக எப்படியாவது கொல்லைப்புற வழியில் தமிழக ஆட்சிப் பொறுப்புக்கு மீண்டும் வந்து கொள்ளையடிக்க வேண்டும்! அதற்குச் சாதகமாக கழக ஆட்சியைக் கலைத்து விடவேண்டும்! அவ்வாறு கலைத்தால்தான் பல கோடி ரூபாய் ஊழல் மற்றும் மோசடி வழக்குகளிலிருந்து தப்ப முடியும் என்பதும்தான்! பாவம்! நிறைவேற முடியாத ஆசைகளுக்காக நெருக்கடி கொடுக்கிறார்கள் டெல்லிக்கு! இவர்களின் நிர்பந்தங்களுக்கு ஆட்படவும் முடியாமல், ஒரேடியாக ஆட்சேபிக்கவும் முடியாமல் நெருப்பை மிதித்துக் கொண்டிருக்கின்றது டெல்லி. ஆனால் நீதிமன்றங்களின் தீர்ப்பும், நேர்மை தவறாத குடியரசுத் தலைவரின் துணிவும் இவர்களின் ஆசையை நிராசையாக்கி விடும் என்பது மட்டும் உறுதி.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(12-10-1998)

2435. என் வேண்டுகோள் - ஏற்று நடப்பாய்!

உடன்பிறப்பே,

இந்தக் கடிதத வாயிலாக நான் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் குறித்து ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றேன். அடுத்த ஆண்டு ஜூன் 3-ஆம் நாள் நிறைவு பெற இருக்கிற என் எழுபத்தி ஐந்தாம் ஆண்டு அகவையையொட்டி, இந்த ஆண்டே பவளவிழா நிகழ்ச்சிகளை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் கொண்டாடுவதாக முடிவு செய்து, மாவட்டக் கழகச் செயலாளர்கள் இதுவரை ஏழு அல்லது எட்டு மாவட்டங்களில் கொண்டாடி முடித்துள்ளனர். இன்னும் சுமார் இருபது மாவட்டங்களில் கொண்டாடுகிற ஏற்பாடுகளுக்கான தொடக்க முயற்சிகளில் ஈடுபட்டுமிருக்கின்றனர்.

இதுவரை கொண்டாடப்பட்ட இடங்களில் செய்யப்பட்ட தேவையில்லாத ஆடம்பரங்களையும், அலங்காரங்களையும் நான் அந்த விழா மேடைகளிலேயே கண்டித்து இனி, இவற்றை நிறுத்துங்கள் என்று கேட்டுக் கொண்டுள்ளேன்.

நூறு கழகக் கொடிகளை வரிசையாகக் காணும் போது எனக்கு ஏற்படுகிற எழுச்சியும் மகிழ்ச்சியும் ஆயிரம் அலங்கார விளக்குகளைக் காணும்போது ஏற்படவில்லையென்று கோவை நிகழ்ச்சியில் நான் குறிப்பிட்டதை நீ ஏடுகளில் படித்திருப்பாய். இன்றல்ல; என்றுமே என் இனிய தம்பிமார்கள் பலரிடம் இதனைப் பலமுறை கூறியிருக்கிறேன்.

பவளவிழா நிகழ்ச்சியென்பது அதில் கலந்து கொள்கிற கழக முன்னணியினர், மற்றும் சொற்பொழிவாளர்கள் அனைவரது உரைகளுமே என்னையே சுற்றிச்சுற்றி அமைகிறதேயன்றி, நாட்டு நடப்பு - அரசியல் நிலவரம் - நமதியக்கக் கொள்கை விளக்கங்கள் -கழக அரசின் சாதனைகள் - அரசு பற்றிய விமர்சனங்களுக்கு

ஆதாரபூர்வமான விளக்கங்கள் - என்பன போன்ற பலவற்றை மக்கள் மனத்தில் பதிய வைக்கத் தவறிவிடுவதை நான் ஒவ்வொரு பவளவிழா நிகழ்ச்சியிலும் கண்டு மிகுந்த வேதனைப்படுகிறேன்.

எனவேதான் நான் திடமாக முடிவெடுத்து இப்போது அறிவிக்கிறேன். இனி என்னை அழைத்து பவளவிழா நிகழ்ச்சிகளை நடத்த வேண்டாம் என்று!

பவளவிழா என்ற பெயரில் நிகழ்ச்சிகளை அமைக்காமல் பொதுக் கூட்டங்களில் என்னைக் கலந்து கொள்ளச் செய்தால், நானும், அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் முன்னணியினர் மற்றும் சொற்பொழிவாளர்களும் கழகத்தின் அரசியல் - சமுதாய - பொருளாதாரக் கொள்கைகளைப் பற்றிய விளக்கங்களைப் அளிக்க முடியும். பொதுமக்களுக்கும் அவை பயனுடையதாக அமையும்.

என்னைப் பற்றித்தான் தமிழ்ப் பெருமக்களுக்கு அறுபது ஆண்டுகளாகத் தெரியுமே! அதையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருப்பதும் - இறுதியாக அந்த நிகழ்ச்சியில் நான் ஏற்புரை ஆற்றிடுவதும் - தேவையில்லை! தேவையே இல்லை!

எனவே இனி, என்னை மாவட்டங்களில் பொதுக் கூட்ட நிகழ்ச்சியென்று அழைத்தால் தான் அவற்றில் கலந்து கொள்வதாக இருக்கிறேன். அந்த நிகழ்ச்சிகளே சமுதாயத்துக்கும், நாட்டுக்கும் பயன்படும் கருத்துப் பூங்காவாக விளங்கிட முடியும் என்பது என் எண்ணம்.

இஃதன்னியில், மற்றொரு முக்கியமான தகவலையும் என் உடன்பிறப்புகளுக்குத் தெரிவிப்பது என் கடமை!

ஒரு திருமணத்திற்கு ஒருவர் தேதி வாங்கியிருப்பார். அதே நாளில், அதே ஊரில் இரண்டு மூன்று திருமணங்களுக்கு ஏற்பாடு செய்து அவற்றில் கலந்து கொள்ள என்னை வற்புறுத்தி ஒப்புதலைப் பெறுகிறீர்கள். அதனால் என்ன விளைவு ஏற்படுகிறது தெரியுமா?

ஒரு திருமணத்திலாவது, நமது கழகத்தின் சமுதாயக் கொள்கைகளை எடுத்துக் கூறவோ, விரித்துக் கூறவோ இயலாமல் வெறும் வாழ்த்துரையுடன் நிகழ்ச்சியை முடித்துவிட்டு, அடுத்த நிகழ்ச்சிக்குப் பறந்து சென்றிட வேண்டியுள்ளது.

கடந்த வாரம் கோவையில் இரண்டு திருமண நிகழ்ச்சிகள். அவற்றில் ஒரு நிகழ்ச்சியில்தான் பகுத்தறிவுக் கொள்கை பரவிட வேண்டியது பற்றியும், மூடநம்பிக்கைகளில் இருந்து தாய்மார்கள் விடுபட வேண்டியது பற்றியும், நிதி நிறுவன மோசடிகளிலும், புதுப்புது சாமியார்களின் மோசடிகளிலும் மக்கள் இன்னமும் ஏமாந்து கொண்டிருப்பது பற்றியும் விளக்கமாகப் பேச முடிந்தது.

இத்தகைய திருமண நிகழ்ச்சிப் பேச்சுகள் என் புத்தகத் தொகுப்பிலேகூட இடம் பெற்றிருப்பதை நீ அறிவாய்!

ஆனால், அன்றைக்கே மேலும் இரண்டொரு திருமண நிகழ்ச்சிகள் இருந்திருந்தால், எல்லா நிகழ்ச்சிகளிலுமே வாழ்க மணமக்கள்! என்ற அளவோடு என் பேச்சு நிறைவுற்றிருக்கும்.

எனவே ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ள ஒரு திருமண நிகழ்ச்சியுடன், மற்றொரு திருமண நிகழ்ச்சியை ஒட்டுப் போடுகிற வேலையில் கழக உடன்பிறப்புகள் ஈடுபடவேண்டாமென்று கண்டிப்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

பெரியார் காலத்திலிருந்து இந்த இயக்கத்தின் சமுதாயக் கொள்கை, கோட்பாடுகளை, மாநாடுகளை விட அதிகமாக மணவிழாக்களிலேதான் நாம் பேசி வருகிறோம்.

அந்த மணவிழாக்கள் தான், காங்கிரஸ் ஆட்சியின் எமர்ஜன்சிக் கொடுமை தலைவிரித்தாடியபோது ஓரளவாவது மக்களைச் சந்திக்க, நமது கருத்துகளை வெளியிடுவதற்குப் பயன்பட்டன என்பதை மறந்துவிட முடியுமா?

அண்மையில் நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை, அரசு நடைமுறைப்படுத்திடத் தொடங்கியுள்ள இந்த வேளையில், அந்த முடிவுகள் மொட்டுக்களாகவே இல்லாமல், மக்களிடையே மலர்ந்து மணம் தருபவைகளாகவும் ஆக்கிடவும் - சமத்துவ சமதர்ம சமுதாயம் கண்டிடவும் - மணவிழாக்களாயினும் மற்றும் எந்தப் பொது விழாவாயினும் அங்கெல்லாம் நமதியக்கத்தின் கொள்கை முழக்கம் இடம் பெற வேண்டும் என்பது எனது அன்பான வேண்டுகோளாகும்.

அதுமட்டுமின்றி, கழக உறுப்பினர் அட்டைகள் வழங்கப் பெற்று, கிளைக் கழக நிர்வாகிகளுக்கான தேர்தல்கள்

அறிவிக்கப்பட உள்ள கால கட்டத்தில், கழகத்தை மேலும் வலிவும் பொலிவுமுள்ளதாக ஆக்கிட அந்தப் பணிகளிலே ஆர்வமுடன் செயல்படவும் - பட்டிதொட்டி முதல் பட்டினக் கரைகள் வரையில் கழகத்தின் கொள்கை விளக்கங்கள், அரசின் சாதனைகள் பற்றிய செய்திகளைப் பரப்பிடவும் - முனைந்திட வேண்டுமேயல்லாது எனக்குப் பவளவிழா எடுக்கும் நிகழ்ச்சிகளை தொடராமல் இத்துடன் நிறுத்திக் கொள்வதே முறையாகும்! நன்மையும் பயக்கும்!

என்னை அழைத்திடுவதைத் தவிர்த்திட வேண்டுமென்பதற்காக இதனைக் கூறவில்லை! தாராளமாக அழைத்திடு! தயங்காமல் வருகிறேன்!

பொதுக் கூட்டமாக அந்த நிகழ்ச்சி இருக்கட்டும் - எனக்காகவோ அல்லது என்னைப் பாராட்டவோ அந்த நிகழ்ச்சி இருந்திடல் வேண்டாம்!

காரணம், கருத்து விளக்கம் - கொள்கை விளக்கம் - கழகத்தின் செயல்திட்ட விளக்கம் இவற்றுக்கு ஏற்றது பொதுக்கூட்ட நிகழ்ச்சிதான்! விழா நிகழ்ச்சி அல்ல! என் வேண்டுகோள்! ஏற்று நடப்பாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(01-11-1998)

2436. குன்றின் மேலிட்ட விளக்காக, ஒரு குலவிளக்கு!

உடன்பிறப்பே,

ஓர் அரசு என்னதான் சமூக நலப்பணிகளிலும், ஏழை எளியோர் பொருளாதாரத்தில் ஏற்றம் பெரும் செயல்களிலும் ஈடுபட்டு, அவற்றுக்கெனப் பெரும் நிதியைச் செலவிட்டாலும், சமூக வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள் அயரா முயற்சியுடனும் பாடுபட முன் வந்தால்தான் நாடும், சமுதாயமும் நல்விளைவுகளைக் காண முடியும்.

இந்தக் கருத்துக்கு வலிவூட்டும் வண்ணமும், நம்பிக்கையூட்டும் வகையிலும், இதோ ஒரு பெண்மணி ஆந்திர மாநிலத்தில் ஒளிவிளக்காகத் திகழ்வதை கேசிபகவான்ஜி என்பவர் எழுதி சில ஏடுகளில் வெளிவந்துள்ளதைப் படித்துப் பரவசமுற்றேன். என் மகிழ்ச்சியை உன் போன்றோர் பகிர்ந்து கொள்வதற்காக மட்டுமல்ல, அந்தப் பெண்மணி, சமுதாய நலனில் கொண்டுள்ள ஊக்கத்தையும், அதற்காக வழங்கிடும் உழைப்பையும் உன் போன்றோரும் பெற்றிட வேண்டுமென்பதற்காகவே அந்தப் பெண்மணியைப் பற்றியும், அவர் ஒரு கிராமத்தில் ஆற்றி வருகிற அரும்பணி பற்றியும் குறிப்பிடுகிறேன்.

பெண்களுக்கு நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் குறிப்பிட்ட சதவீத இட ஒதுக்கீடு கோரிக்கை வலுப்பெற்றுவரும் இந்தக் காலத்தில், தமிழகத்தில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களிலும் - வேலைவாய்ப்புகளிலும் அத்தகைய விகிதாச்சார இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் - அந்தப் பெண்மணிகள் ஆற்ற வேண்டிய பணிக்கும் மட்டுமல்லாமல், ஆடவர்கள் ஆற்ற வேண்டிய பணிக்கும் வழிகாட்டத்தக்க இந்த வனிதாமணியின் தொண்டு சிறப்புடையதாக உயர்ந்து, குன்றின் மேலிட்ட விளக்காக ஒளியுமிழ்கிறது என்றே பெருமிதத்துடன் கூறலாம்.

அந்தப் பெண்மணியின் பெயர் பாத்திமா பீவி! ஆந்திரத்தில் தல்வா என்ற கிராமத்தின் பஞ்சாயத்துத் தலைவியாக இருக்கிறார். அந்தக் கிராமம் ஆந்திர மாநிலம் கர்நூல் மாவட்டத்தில் இருக்கிறது. இந்த ஊராட்சி மன்றத் தலைவிக்கு 1998-ஆம் ஆண்டின் வறுமை ஒழிப்புப் பணிக்காக (Race aganst poverty Awards) ஐ.நா. மன்றத்தின் விருது கிடைக்கிறது.

மகளிர் குலம் மகிழ வேண்டிய செய்தி - வாழ்த்திட வேண்டிய தகவல் - பாராட்டுக்குரிய அந்தப் பரிசினைப் பெறும் பாத்திமா பீவி என்பவர் யார்?

ஒரு சிறிய கிராமத்து பஞ்சாயத்துத் தலைவிதான்! படிப்பறிவில்லாத, தன் கிராம எல்லைக்கு அப்பால் என்ன இருக்கிறது என்று அறியாத, பல காலம் தன் குடும்பத்தைத் தவிர, பிற ஆடவரிடம் பேசி அறியாத இந்தப் பெண்மணிக்கு ஐ.நா. விருது தேடி வருகிறது என்றால், அதற்கு அவரது அயராத உழைப்பு, விதியை நொந்து கொண்டே மூலையில் முடங்கிக் கிடக்காமல் வீறுகொண்டு எழுந்து பிரச்சினைகளை நேருக்கு நேர் நின்று சமாளித்து வெற்றி கண்ட உத்வேகம் - ஆகியவை தான் காரணங்கள்.

வறுமையை ஒழிப்போம் என்று மேடையில் வாய் கிழியக் கூவி விட்டு, அதேபோல் மீண்டும் கூவுவதற்கு இன்னொரு மேடையை நோக்கிப் போகும் வெறும் பேச்சாளராக இல்லாமல், தன் கிராமத்து மக்களை, குறிப்பாக பெண்களை ஒன்று திரட்டி, தங்கள் பிரச்சினைகள் என்ன, அவற்றைக் களைய என்னென்ன செய்ய வேண்டும், யார் யாரைப் பார்த்துப் பேச வேண்டும் என்று திட்டமிட்டு, அல்லும் பகலும், முயன்று அவர் பாடுபட்டதால், மக்கள் பங்கேற்புத் திட்டங்கள் அவர் அறிமுகப்படுத்தியதால் மூன்றே ஆண்டுகளில், அவர் கிராமத்திற்கு மின் வசதி வந்தது. கான்கிரீட் சாலை போடப்பட்டது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் போன்ற வசதிகள் வந்தன.

முன்பெல்லாம் மரம் வெட்டி, மாடு மேய்த்துக் கொண்டு திரிந்த அந்தக் கிராமச் சிறுவர்கள் இப்போது, பகலில் எம்ப்ராய்டரி வேலையில் ஈடுபட்டு, பின்பு மாலையில் படிக்கச் செல்கிறார்கள்.

பன்னிரண்டு வயதிலேயே திருமணம் செய்து வைத்த அந்தக் கிராம மக்கள், இப்போது ஏற்பட்ட கல்வி அறிவால் தங்கள்

பிள்ளைகளுக்கு 18 வயது ஆன பின்புதான் திருமணம் என்ற தீர்மானத்திற்கு வந்திருக்கிறார்கள்!

பாத்திமா பீவி எதையும் திட்டமிட்டுச் செய்வார். முதற்கட்ட நடவடிக்கையாக இந்த மக்கள் பங்கேற்பு இயக்கத்தில் பல துணைக் குழுக்களை ஏற்படுத்தினார். ஒவ்வொரு குழுவிலும் பன்னிரெண்டு அல்லது பதினான்கு உறுப்பினர்கள். இவர்கள் வாரம் ஒரு முறை கூடி கடன் விஷயங்கள் - சொந்தக் குடும்ப விவகாரங்கள் ஆகிய பல்வேறு பிரச்சினைகளை அலசுகிறார்கள்! அதனால் என்ன உருவாகியது?

விவசாயத்திற்குக் கடனா, வீடு கட்டப் பணமா? இந்தக் கிராம மக்கள் வங்கிகளை நம்பிக் கொண்டு இல்லை. இந்தக் குழுவே இரண்டு சதவீத வட்டியில் அவர்களுக்கு கடன் தருகிறது! அதுவும் ஜாமீன் கொடுத்து, சொத்து அடமானம் இவற்றின் பேரிலா? இல்லை! சம்பந்தப்பட்ட நபர்களின் சொந்த நாணயம், நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில்தான்! இதெல்லாம் நடக்கிற காரியமா என்கிறீர்களா? நடக்கிறதே..... நடத்திக் காட்டிக் கொண்டிருக்கிறார் பாத்திமா பீவி!

தூங்கி வழிந்து கொண்டிருந்த தல்வா கிராமத்தைத் தட்டி எழுப்பி, அதன் முகத்திற்குப் பெரிய பொலிவை ஊட்டி உலகிற்குக் காட்டியிருக்கிறார் இந்தப் பெண்மணி. இவர்தான் உண்மையில் சமூக வீராங்கனை. அவர் பணியை, முயற்சியைக் கண்டு வியந்து அங்கீகரித்து விருது வழங்குகிறது ஐ.நா. சபை.

பாத்திமா பீவியின் கணவர் சையத் மோதின் பாஷா வாணிபத்தில் ஈடுபட்டுள்ளார். மூன்று மகன்களுக்குத் தாயான இவர், 33 வயதே நிரம்பியவர். வறுமை ஒழிப்புப் பணிகளுக்காக ஐ.நா.வின் இந்தப் பெருமைமிக்க விருதைப் பெறும் முதல் இந்தியப் பெண் என்ற சிறப்பையும் பெறுபவர் இவர்.

உடன்பிறப்பே, மகளிர் குல விளக்குகள், ஆந்திரத்துப் பாத்திமா பீவி போல நாடு முழுதும், அதிலும் குறிப்பாக சிற்றூர், பேரூர்களில் ஒளிவிட்டுப் பிரகாசிக்கத் தொடங்கினால் ஏழை எளியோர்க்காகவும் - பெண்கள் முன்னேற்றத்திற்காகவும் - கல்வி வளர்ச்சிக்காகவும் அரசு தீட்டும் திட்டங்கள் சிறிதளவும் சேதாரமின்றி தக்க பயன் உருவாக்கும் என்பதில் அய்யம் அணுவளவும் உண்டோ!

உதாரணமாக, நமது தமிழகத்தில் கழக அரசு நிறைவேற்றி வரும் நமக்கு நாமே திட்டம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், சமத்துவபுரத் திட்டம், ஏழைப் பெண்கள் திருமணத்திற்கான மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திட்டம், கலப்புத் திருமணத் திட்டம், பெண் குழந்தை காப்புத் திட்டம், இலவச தொகுப்பு வீட்டுத் திட்டம், மகளிர் வேலை வாய்ப்புத் திட்டம், விதவைத் திருமணத் திட்டம், பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் போன்ற எண்ணற்ற திட்டங்கள் மேலும் வெற்றிகளைக் குவித்திட, ஆந்திர மாநிலத்து தல்வா கிராமத் தலைவி பாத்திமா பீவி போல, தமிழகத்தில் பெண்மணிகள் மட்டுமல்ல, ஆடவரும் - தாங்கள் ஏற்றுள்ள பொறுப்புகளை தூய்மையான இதயத்துடனும், துடிப்புடனும், தொண்டுள்ளத்துடனும், நாணயமாகவும் நிறைவேற்றிட முன்வர வேண்டுமென்ற தணியாத ஆசையின் காரணமாகத்தான் இதனை எழுதுகிறேன்.

என் ஆசை நிறைவேறுவதற்கான கடமைகளை தொய்வின்றி ஆற்றிட, உள்ளாட்சி அமைப்புகளிலேயிருந்து அரசின் உச்ச அமைப்புகள் வரையில் பொறுப்பில் இருப்பவர்கள், அவர்கள் ஆடவராயினும், பெண்டிராயினும் முன்வருவார்களேயானால், இந்த என் கடிதத்திற்குப் பயன் உண்டு என்று நம்புகிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(04-11-1998)

2437. அய்யத்துக்கிடமின்றி அடையாளம் காட்டப்பட்டவர்!

உடன்பிறப்பே,

நவம்பர் நான்காம் நாள் புதன்கிழமையன்று முரசொலியில் குன்றின் மேலிட்ட விளக்காக, ஒரு குலவிளக்கு! என்ற தலைப்பில் கடிதமொன்று எழுதியிருந்தேன். மீண்டும் முழுமையாக அந்தக் கடிதத்தை நினைவூட்டுவதற்குப் பதிலாக அக்கடிதத்தின் முதற்பகுதியை மட்டும் உனக்குக் கோடிட்டுக்காட்டுகிறேன்.

ஓர் அரசு என்னதான் சமூக நலப்பணிகளிலும், ஏழை எளியோர் பொருளாதாரத்தில் ஏற்றம் பெரும் செயல்களிலும் ஈடுபட்டு, அவற்றுக்கெனப் பெரும் நிதியைச் செலவிட்டாலும், சமூக வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள் அயரா முயற்சியுடனும் பாடுபட முன் வந்தால்தான் நாடும், சமுதாயமும் நல்விளைவுகளைக் காண முடியும்.

இந்தக் கருத்துக்கு வலிவூட்டும் வண்ணமும், நம்பிக்கையூட்டும் வகையிலும், இதோ ஒரு பெண்மணி ஆந்திர மாநிலத்தில் ஒளிவிளக்காகத் திகழ்வதை கேசிபகவான்ஜி என்பவர் எழுதி சில ஏடுகளில் வெளிவந்துள்ளதைப் படித்துப் பரவசமுற்றேன். என் மகிழ்ச்சியை உன் போன்றோர் பகிர்ந்து கொள்வதற்காக மட்டுமல்ல, அந்தப் பெண்மணி, சமுதாய நலனில் கொண்டுள்ள ஊக்கத்தையும், அதற்காக வழங்கிடும் உழைப்பையும் உன் போன்றோரும் பெற்றிட வேண்டுமென்பதற்காகவே அந்தப் பெண்மணியைப் பற்றியும், அவர் ஒரு கிராமத்தில் ஆற்றி வருகிற அரும்பணி பற்றியும் குறிப்பிடுகிறேன்.

பெண்களுக்கு நாடாளுமன்ற, சட்டமன்றங்களில் குறிப்பிட்ட சதவீத இட ஒதுக்கீடு கோரிக்கை வலுப் பெற்றுவரும் இந்தக் காலத்தில், தமிழகத்தில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களிலும் - வேலைவாய்ப்புகளிலும் அத்தகைய விகிதாச்சார இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் - அந்தப் பெண்மணிகள் ஆற்ற வேண்டிய பணிக்கும் மட்டுமல்லாமல், ஆடவர்கள் ஆற்ற வேண்டிய பணிக்கும் வழிகாட்டத்தக்க இந்த வனிதாமணியின் தொண்டு சிறப்புடையதாக உயர்ந்து, குன்றின் மேலிட்ட விளக்காக ஒளியுமிழ்கிறது என்றே பெருமிதத்துடன் கூறலாம்.

அந்தப் பெண்மணியின் பெயர் பாத்திமா பீவி!

ஆந்திரத்தில் தல்வா என்ற கிராமத்தின் பஞ்சாயத்துத் தலைவியாக இருக்கிறார். அந்தக் கிராமம் ஆந்திர மாநிலம் கர்நூல் மாவட்டத்தில் இருக்கிறது. இந்த ஊராட்சிமன்றத் தலைவிக்கு 1998-ஆம் ஆண்டின் வறுமை ஒழிப்புப் பணிக்காக (Race aganst poverty Awards) ஐ.நா. மன்றத்தின் விருது கிடைக்கிறது.

மகளிர் குலம் மகிழ வேண்டிய செய்தி - வாழ்த்திட வேண்டிய தகவல் - பாராட்டுக்குரிய அந்தப் பரிசினைப் பெறும் பாத்திமா பீவி என்பவர் யார்?

ஒரு சிறிய கிராமத்து பஞ்சாயத்துத் தலைவிதான்! படிப்பறிவில்லாத, தன் கிராம எல்லைக்கு அப்பால் என்ன இருக்கிறது என்று அறியாத, பல காலம் தன் குடும்பத்தைத் தவிர, பிற ஆடவரிடம் பேசி அறியாத இந்தப் பெண்மணிக்கு ஐ.நா. விருது தேடி வருகிறது என்றால், அதற்கு அவரது அயராத உழைப்பு, விதியை நொந்து கொண்டே மூலையில் முடங்கிக் கிடக்காமல் வீறுகொண்டு எழுந்து பிரச்சினைகளை நேருக்கு நேர் நின்று சமாளித்து வெற்றி கண்ட உத்வேகம் - ஆகியவை தான் காரணங்கள்.

இதுதான் அந்தக் கடிதத்தில் நான் எழுதியிருந்த முதற்பகுதி!

சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்த பாத்திமா பீவியின் சிறப்பினை எடுத்துரைத்து நான் பாராட்டியது, அவரைப் போற்றிப் புகழ்ந்து நம் கழகத்திற்கு ஆதாயம் தேடிக் கொள்ள வேண்டுமென்பதற்காக அல்ல - அந்தப் பெண்மணியின் தூயதொண்டினைப் பின்பற்றி, இன்றைக்குப் பல்வேறு பொறுப்புகளில் இடம் பெற்றிருக்கிற மகளிர், பொது வாழ்வில் மறுமலர்ச்சித் தூதுவர்களாக - மக்கள் பணியே மகேசன் பணியென்கிற தூயமனத்துடன் தொண்டாற்றும் துடிப்புமிக்கவர்களாக விளங்க வேண்டும் என்ற தீராத ஆர்வத்தின் காரணமாகத்தான் அம்மடல் தீட்டினேன்.

அதனைப் படித்தோர் பாராட்டினர் - பாத்திமா பீவியின் அரும்பணி குறித்து வியந்து பேசினர் - வாழ்த்துக் கடிதங்கள் எழுதினர் - என் ஆசை நிறைவேறுவதற்கான கடமைகளை தொய்வின்றி ஆற்றிட, உள்ளாட்சி அமைப்புகளிலேயிருந்து அரசின் உச்ச அமைப்புகள் வரையில் பொறுப்பில் இருப்பவர்கள், அவர்கள் ஆடவராயினும், பெண்டிராயினும் முன்வருவார்களேயானால் இந்த என் கடிதத்திற்குப் பயன் உண்டு என்று நம்புகிறேன் எனக் குறிப்பிட்டு, அந்தக் கடிதத்தை நிறைவு செய்திருந்தேன் என்பதையும் நீ மறந்திருக்கமாட்டாய்!

உடன்பிறப்பே, நம் வீட்டுக்கு அடுத்த வீட்டின் கூடத்திலோ, தாழ்வாரத்திலோ ஒரு குத்துவிளக்கு இருப்பதை நாம் பார்க்க நேரிடுகிறது என வைத்துக் கொள்வோம். அடுத்த வீட்டுக்காரர் நம்மை விருந்துக்கு அழைத்தபோதோ - அல்லது வேறு அலுவலாக நாம் அவர் வீட்டுக்குச் சென்றிருந்தபோதோ - அந்தக் குத்து விளக்கைக் காண நேரிடுகிறது. பொலிவுமிக்கதாகப் புதிய வடிவமைப்புக் கொண்டதாக உருவாக்கப்பட்டிருந்த அந்த விளக்கின் உச்சியில் அன்னப்பறவையொன்று அழகுற அமர்ந்திருக்கும் அற்புத வேலைப்பாடும் இடம் பெற்றிருப்பது கண்டு அதிசயித்துப் போகிறோம். உடனே என்ன நினைக்கிறோம். அதைப் போன்ற ஒரு குத்து விளக்கு நம் வீட்டுக் கூடாரத்திலும் வைக்க வேண்டும் என்று விரும்புகிறோம். அதுபோன்ற விளக்கை எங்கு வாங்கலாம் - அல்லது யாரிடம் கூறி அதேபோல ஒரு விளக்கை உருவாக்கச் சொல்லலாம் என்று யோசிக்கிறோம் - இது இயல்பு! ஆனால் இது போன்ற விஷயங்களில் வேறுவிதமாகச் சிந்திப்பவர்களும் உண்டு!

விருந்துக்கு அழைத்தார்களே, அவர்கள் வீட்டிலிருக்கும் அந்த விளக்கையே திருடிக் கொண்டு வந்துவிட்டால் என்ன? என்பதுதானே அந்தச் சிந்தனை!

அதனை, சிந்தனையென்றால் அந்தச் சொல்லுக்கே களங்கம் ஏற்படும்! எனவே, சிந்தனையல்ல அது! வஞ்சனை! வஞ்சனை!

அடுத்த ஊரில் ஒரு குழந்தை அறிவிற் சிறந்து வளர்கிறது எனக் கேள்விப்பட்டு - அக்குழந்தைபோல நம் வீட்டுக் குழந்தையையும் அறிவூட்டி வளர்த்திட முன் வரவேண்டுமேயல்லாமல், விளக்கையே திருடிக் கொண்டு வந்துவிடலாமா எனத் துளிர்த்திடும் தீய எண்ணம்போல, அந்தக் குழந்தையையே நம் வீட்டுக்குத் தூக்கி வந்துவிடலாமா என்ற எண்ணம் தலைதூக்குமேயானால், அத்தகையோரை மனிதரில் பதர் என்றே உலகம் கூறும்.

பணியாற்றி மக்கள் நலன் குவித்த பாத்திமா பீவி எனும் பெண்மணி, ஆந்திராவில் ஒரு சிற்றூரில் இருக்கும் செய்தியும் - அவர் ஐ.நா. விருது பெறும் அளவுக்குப் புகழேணியில் ஏறியுள்ள செய்தியும் - அவரைப் போல எல்லோரும் பெருமை பெற்றுத் திகழ வேண்டும் என்ற என் கடிதமும் வெளிவந்த இரண்டொரு நாட்களுக்கெல்லாம் - சிலர் ஓடினார்கள் ஆந்திராவுக்கு! அழைத்து வந்தார்கள் அந்தச் சகோதரியை சென்னைக்கு! ஆந்திராவில் அந்தச் சகோதரியின் நிர்வாகப் பொறுப்பில் உள்ள தல்வா கிராமத்துக்கு நிதியுதவி அளிப்பதாக புகைப்படத்துடன் செய்தி வெளியிட்டார்கள்! அந்தோ பரிதாபம்! அத்துடன் நிறுத்தவில்லை! அந்தப் பெண்மணி தமது கட்சியில் உறுப்பினராகச் சேர்ந்துவிட்டதாகவும் அறிவிப்புப் பிரகடனம் செய்தார்கள். அத்துடன் விட்டார்களா? ஆந்திர மாநிலத்திற்கே தமது கட்சியின் மகளிர் அணி அமைப்பாளராகவும் நியமித்துவிட்டதாக அறிக்கைகளையும் ஏடுகளில் பரப்பினார்கள்!

குத்துவிளக்கைக் கொள்ளையடிக்க நினைத்த குறுமதி - குணாளனாக வளரும் குழந்தையை அபகரிக்க எண்ணிய குரூர புத்தி - எத்தகையோருக்கு உண்டோ, அத்தகையோர் பாத்திமா பீவியை தமது கட்சிக்கே இழுத்து அதன் மூலம் சிறுபான்மை மக்களைக் கவரலாம் - செமத்தியாக ஏமாற்றலாம் - எனத்திட்டமிட்டு இத்தகைய சதியைத் தீட்டினர்.

ஆனால், கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரியும் என்ற பழமொழிக்கு மாறாக எட்டு நாட்கள் கூட காத்திராமல், அதற்குள்ளாகவே இவர்களின் புளுகு அம்பலமாகிவிட்டது. மோசடி முகமூடி கிழிந்துவிட்டது.

சிறுபான்மை சமுதாய மக்களிடத்தில் இந்த விஷமிகள் ஆடத் தொடங்கிய மாய்மால நாடகத்தை முதல் காட்சியே கூட முழுமையாக நடைபெறவிடாமல், முறியடித்துவிட்டார் அந்த ஆந்திரத்து வீராங்கனை பாத்திமா பீவி!

ஒரு பானைச் சோறுக்கு ஒரு சோறு பதம்! என்பதுபோல இவர்களின் பொய் - புளுகு - அபாண்ட - அடாவடிக் கூத்துக்களுக்கு, ஊழல் காரியங்களுக்கு - இந்த ஒரு நிகழ்ச்சியே சரியான சாட்சியாகத் திறந்தவெளிக் காட்சியாக விளங்கும்போது, இவர்கள் எனக்கும், கழகத்திற்கும் சிறுபான்மை சமுதாயத்தின் மீது அக்கறையில்லையென்றும் - அவர்களுக்காக நாம் நீலிக் கண்ணீர் வடிப்பதாகவும் கூறுவது, மந்தி மயிலைப் பழிப்பதுபோல் இருக்கிறது என்பதா? கோட்டான் குயிலைப் பழிப்பது போன்றது எனக் கருதுவதா?

சிறுபான்மை சமுதாயத்தை ஏமாற்றி மோசடி செய்திட, அள்ளிக் கொடுத்த ஒரு லட்சத்தையும், மகளிர் அணி அமைப்பாளர் என்று சூட்டிய மகுடத்தையும் தூசாகக் கருதி தூக்கி எறிந்துவிட்ட அந்தத் தூய பெண்மணி பாத்திமா பீவி அவர்களிடம் இவர்கள் நடத்த முனைந்த நாடகமொன்றே இவர்கள் யார்? எப்படிப்பட்டவர்கள்? என்பதை நாட்டுக்கு மீண்டுமொரு முறை அடையாளம் காட்டியிருக்கிறது என்பதில் ஒரு துளி அய்யத்துக்கும் இடமே இல்லை!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(19-12-1998)

2438. அண்ணல் நபிகளார்
அன்புவழி நடப்போம்!

உடன்பிறப்பே,

நபிகள் நாயகம் வாழ்க்கை வரலாறு குறித்து ஒரு நிகழ்ச்சி - கண்பட நின்று கடுமொழி கூறுவோர் - புண்படப் பேசுவோர் - எவராயினும் அவர்களை வெறுத்து ஒதுக்காமல் - வெகுண்டெழுந்து விரோத உணர்வு காட்டாமல் - வெம்மைக்குப் பதில், ஒளியுமிழும் உள்ளத்தையே பிரதிபலிக்கும் உத்தமராகத் திகழ்ந்தவர் அந்தப் பெருமகனார் என்பதற்கு அந்த நிகழ்ச்சி, தக்க சான்றாக இன்றளவும் நிற்கிறது. என்றும் நிற்கும்.

நாயகப் பெருமான் வழக்கமாக நடந்து செல்லும் வீதியொன்று - அந்த வீதியில் அவர் நடக்கும்போது, ஒரு குறிப்பிட்ட வீட்டைக் கடக்கும் நேரத்தில் எல்லாம் அந்த வீட்டின் மாடியிலிருந்து ஒரு அம்மணியார் அவரது தலையில் குப்பையைக் கொட்டுவார். இது, ஒருநாள் இருநாள் அல்ல! நித்திய நிகழ்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

தன் மீது குப்பைக் கூளங்கள் மழையாகப் பொழிவது பற்றிக் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் நாயகப் பெருமான் அவர்கள், தன் வழியில் சென்று கொண்டேயிருப்பார். விழியில் கனல் காட்டியதில்லை. மொழியில் தணல் கிளம்பியதில்லை. இதயமும், இதழ்களும் ஒரு சேர அல்லா என்று மட்டும் உச்சரித்தனவேயல்லாமல், எள்முனையின் நுனியளவுகூட உணர்ச்சி வசப்படவில்லை அவர்!

நாள்தோறும் நடைபெறும் இந்த நிகழ்ச்சி ஒரு நாள் மட்டும் நடைபெறவில்லை. அந்த வீதி வழி வந்த நபிகள் நாயகத்துக்கு வியப்பு. ஒரு வேளை அந்த அம்மணியார் தினந்தோறும் தன் மீது குப்பை கொட்டிக் களைப்படைந்து போய் நிறுத்திவிட்டாரோ என்று எண்ணினார் - ஆயினும் ஓர் ஆர்வம்! அந்த

அம்மையார் தினந்தோறும் என் மீது குப்பைக்கூளம் கொட்டிக் கொண்டிருப்பாரே, இன்று என்ன ஆயிற்று? என்ற சந்தேகத்துடன் திரும்பிப் பார்த்தார்.

அவரது ஆவலைப் புரிந்து கொண்ட அவரது விசுவாசி ஒருவர் நாயகத்தை நோக்கி, பெருமானே! நாள்தோறும் தங்கள் மீது குப்பையைக் கொட்டிக் கொண்டிருந்த அம்மணியாருக்கு இன்று உடல்நலமில்லையாம். அதனால்தான், அந்த நித்திய நிகழ்ச்சி நடைபெறவில்லை என்றாராம்.

அதைக் கேட்டவுடன் நபிகள் நாயகம் அவர்கள், அந்த வீட்டுக்குள் சென்று உடல் நலிவுற்றுப் படுக்கையில் இருந்த அந்த அம்மையாரைப் பார்த்து உடல்நலம் விசாரித்து, விரைவில் குணம் பெற வேண்டுமென வாழ்த்தியிருக்கிறார்.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல் எனும் கருத்துக்கு வடிவமாக வந்து நின்ற அண்ணலைக் கண்டும், அவர் வாய்மொழி கேட்டும் அம்மையார் அதிர்ந்து போனார். இதுவரை செய்த தவற்றுக்கு மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். தனது செயலுக்கு வெட்கமுறுவதாகத் தெரிவித்தார்.

உடன்பிறப்பே, நாயகப்பெருமானின் வாழ்க்கையில் இதுபோன்ற அருள் ததும்பும் நிகழ்வுகளும் உண்டு - அவர் போதித்த புனிதக் கொள்கைகளை வீழ்த்திட முனைந்தோரை வீழ்த்திக் காட்டிய வீரங்கொப்பளிக்கும் நிகழ்வுகளும் உண்டு!

நமது இயக்கம் காத்துவரும் பொறுமைக்கும் - கடைப்பிடித்துவரும் அடக்கத்துக்கும் - என்றைக்கும் வெற்றியுண்டே தவிர, நமது கொள்கை கோட்பாடுகளுக்கு வீழ்ச்சியென்பது இல்லவே இல்லை என்பதை நபிகள் நாயகத்தின் வாழ்க்கையில் நடந்த இந்த நிகழ்ச்சியின் வாயிலாக நம்பிக்கையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பல முனைகளிலுமிருந்தும் பகையுணர்வின் தாக்குதல் - எழுத்தில் ஏச்சு - பேச்சில் எரிச்சல் - எதிர்ப்பதற்கென்றே எதையாவது எதிர்த்துக் குரல் கொடுக்கும் கொடுமை - இத்தனையும் இந்தக் கழகம் தாங்கிக் கொண்டுதான் தன் பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறது. அளவு கடந்த சகிப்புத்தன்மையுடன்! எல்லையற்ற பொறுமையுடன்!

இதற்குப் பயன் உண்டு என்பதற்குச் சான்றாகத்தான், இதோ! இப்போது உள்ளாட்சி மன்ற இடைத்தேர்தல்களில் நமது அணிக்குக் கிடைத்துள்ள வெற்றி அமைந்திருக்கிறது.

கழக ஆட்சிக்கு விரோதமாகத் தொடர்ந்து நடத்திவரும் விஷமப் பிரச்சாரங்களையெல்லாம் பொருட்படுத்தாமல் - அதேசமயம், நடுநிலையாளர்களின் நல்லுரைகளை அறிவுரைகளாக ஏற்றுக் கொண்டு நாம் செயல்படுகிற காரணத்தினால்தான், உள்ளாட்சிமன்ற இடைத்தேர்தல்களில் பெரும்பான்மையான இடங்களில் நமது அணியினர் வெற்றி பெற்றிருக்கிறார்கள்.

நாம் பெற வேண்டிய பொறுமை உணர்வுக்கு நபிகள் நாயகம் அவர்களின் வாழ்க்கையின் ஒரு துளி, வழிகாட்டியாக அமைந்திருக்கிறது.

தினந்தோறும் குப்பை கொட்டும் அம்மணிகள் திருந்துகிறார்களோ இல்லையோ, நாம் மட்டும் நாயகப் பெருமானாரின் பகைவர்க்கும் அருளும் நெஞ்சத்தை வழி காட்டியாகக் கொண்டு பயணத்தைத் தொடர்வோம்!

அவ்வாறு அயர்வின்றி - தொய்வின்றி - அப்பழுக்கின்றி - இன்றுபோல் நம் பயணம் நடைபெறுமேயானால், என்றுமே நமக்கு வெற்றிதான்!

வெற்றிக்காக வியர்வை சிந்திய உடன்பிறப்புகள் அனைவருக்கும் என் நன்றியும், பாராட்டு, வாழ்த்தும்!

அவதூறுகளுக்கும், ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டுகளுக்கும் பிறகுகூட நமது அணி பெற்றுள்ள இந்த வெற்றி, இதைத் தொடர்ந்து பெற இருக்கிற வெற்றிகளுக்கு அறிகுறி என்பதை மறந்துவிடாமல், அந்த வெற்றி முகடு நோக்கி விழியோட்டி அண்ணலார் காட்டிய அன்பு வழி நடப்போம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(20-12-1998)

2439. ஜோக்(கிந்தர்) சிங்கின் புத்தாண்டு ஜோக்!

உடன்பிறப்பே,

ஒரு நாளேடு (தினமணி) தனது தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பது போல, புதுடெல்லியில் ஒரு விநோதமான நூல் அவசரக் கோலத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. ஓராண்டுக் காலம் சி.பி.ஐ. பதவி வகித்த ஜோகிந்தர் சிங் அவர்கள் எழுதிய அந்த நூலை வெளியிட்டவர் மத்திய பாதுகாப்பு அமைச்சர் மாண்புமிகு ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா மீது வழக்கு தொடர்வதற்கு அப்போதைய ஐக்கிய முன்னணி ஆட்சியில் தமக்கு நிர்பந்தம் வந்ததாகக் கூறியுள்ள அந்த அதிகாரி, மறைமுகமாக முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.ஆர்.பி. அவர்கள் மீது புகார் கூறியதையும், அதற்கு திட்டவட்டமான மறுப்பையும், விளக்கத்தையும் திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள் அளித்திருப்பதையும் அனைவரும் அறிவார்கள்.

புத்தாண்டு பிறக்கப் போகும் நேரத்தில் ஜோகிந்தர் சிங் அவர்கள், தன்னையே ஒரு ஜோக் (கிந்தர்) சிங்காக மாற்றிக் கொண்டு, இப்படியொரு நூலை வெளியிட்டிருக்கிறார் என்றே கருத வேண்டியுள்ளது.

வெளிநாட்டிலிருந்து மூன்று லட்சம் அமெரிக்க டாலர் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு, அவர் முதலமைச்சராக இருந்தபோதே அனுப்பப்பட்டதாக குற்றச்சாட்டு. அதுகுறித்து மாநில அரசு விசாரிக்கத் தொடங்கியபோது கிடைத்த விபரங்கள் என்ன? ஜெயலலிதா தரப்பில் கூறப்பட்ட செய்திகள் என்ன? வெளிநாட்டுப் பண விவகாரம் என்ற காரணத்தினால் மாநில அரசு மேற்கொண்ட நடவடிக்கை பற்றியும் - மேலும் அது குறித்த

சில விபரங்களை எனது ஆடிட்டருடன் கலந்து பேசியதன் அடிப்படையிலும் விளக்க விரும்புகிறேன்.

வெளிநாட்டிலிருந்து முதல்வர் ஜெயலலிதாவுக்கு தபால் மூலம் யார் அனுப்பினார்கள் என்று தெரியாமல் வந்து சேர்ந்த மூன்று இலட்சம் டாலருக்கான வங்கி டிராப்டை அவருடைய ஆடிட்டரின் ஆலோசனையின் பேரில், வங்கியிலே கட்டிவிட்டதாக கூறிய ஜெயலலிதாவின் கூற்று பொய்யாக இருக்கக் கூடுமென்றும், அதுவும் அன்பளிப்பு என்ற பெயரிலே வாங்கிய லஞ்சத்தை வரி கட்டாமல், கறுப்பை வெள்ளையாக்கிய கதை என்றும் சந்தேகப்பட்ட தமிழக போலீஸ் அதுபற்றி வெளிநாடுகளில் விசாரிக்க வேண்டுமென்றும், அதற்கான ஆதாரம், ஆள் வசதி மத்திய சி.பி.ஐ. இடம்தான் இருக்கிறதென்றும், எனவே இந்தக் குறிப்பிட்ட வழக்கை சி.பி.ஐ.தான் விசாரிக்க வேண்டுமென்றும் மத்திய அரசிற்கு எழுதியது.

கட்சிக்காரர்கள் கொடுத்த பிறந்த நாள் பரிசென்றும், ஐதராபாத்தில் இருக்கும் திராட்சை தோட்டத்து வருமானம் என்றும் மற்றும் எந்தவிதமான கணக்கும் இல்லாமல் கோடிக் கணக்கில் ஜெயா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தின் வங்கிக் கணக்குகளில் ரொக்கமாக கட்டிவிட்டு கணக்கில்லாமல் 1993-94 ஆம் ஆண்டிற்கான வருமான வரி கணக்கை கொடுக்காமலேயே கறுப்பை வெள்ளையாக்கிக் கொண்டிருந்தவர்கள், வெளிநாட்டிலிருந்து ஒரு கோடி ரூபாய் தனக்கு அனுப்பியதாக ஏன் சொல்ல வேண்டும்? இந்த ஒரு கோடி ரூபாயையும் தனக்கு பிறந்த நாள் பரிசளிப்பதற்காகவே அவதாரம் எடுத்திருக்கும் கட்சி உடன்பிறப்பான குப்பனும், சுப்பனும் கொடுத்ததாகக் கணக்கு காட்டியிருக்கலாமே? அங்கேதான் இருக்கிறது சூட்சுமம்.

1993இல் அன்னியச் செலாவணியிருப்பு மோசமானதைத் தொடர்ந்து மத்திய அரசு ஒரு திட்டத்தை அறிவித்தது. அதாவது சட்டத்திற்குப் புறம்பாக, வெளிநாடுகளில் அன்னியச் செலாவணியில் பணம் வைத்திருப்பவர்கள் 31.12.1993க்கு முன்னர் அதை இந்தியாவிற்கு கொண்டு வந்து தங்கள் வங்கிக் கணக்கிலே கட்டி விட்டு, அதுகுறித்து வருமான வரி அதிகாரிகளிடம் குறிப்பிட்ட படிவத்திலே தெரிவித்து விட்டால், அதற்கென சில சலுகைகள் மத்திய அரசு அதிலே அளித்தது.

இப்படி மத்திய அரசு அறிவித்த போதிலும், இந்த அறிவிப்பிற்கு மூன்று முக்கியமான விதிவிலக்குகளைத் தெரிவித்திருந்தது. அந்த மூன்று விதிவிலக்குகள் வருமாறு :-

1. போதை மருந்து சட்டப்படியான வழக்குகளிலும்,
2. லஞ்ச ஒழிப்பு சட்டப்படியான வழக்குகளிலும்,
3. பயங்கரவாத தடுப்பு சட்டப்படியான வழக்குகளிலும்,

மேற்படி விதிவிலக்கு அளிக்கப்படமாட்டாது. அதாவது யாராவது - போதை மருந்து விற்பனை வியாபாரத்தில் ஈடுபட்டு பெரும் பணம் சம்பாதித்தோ, லஞ்ச லாவண்யத்தில் ஈடுபட்டு பெரும் பணம் திரட்டியோ பயங்கரவாதத்திற்காக பெற்றுக் கொண்ட பெரும் பணத்தையோ - வெளிநாட்டிலே வைத்திருந்து அதை இந்தத் திட்டத்தின் கீழ் இந்தியாவிற்கு கொண்டு வந்து தங்கள் வங்கிக் கணக்கில் கட்டி வருமானவரி அதிகாரிகளிடம் அதற்கான படிவத்தைத் தாக்கல் செய்திருந்தால் மேற்படி சட்டத்தின்கீழ் அவர்களுக்கு மேற்படி மூன்று சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட குற்றங்களிலிருந்து விதி விலக்கு கிடையாது என்பதேயாகும்.

சற்று சிந்தித்துப் பார்த்தால் இதன் பின்னே உள்ள காரணம் புரியும். எல்லோருக்குமே இந்த வசதியை இந்தத் திட்டத்தின்கீழ் கொடுத்தால் என்னவாகும்? போதை மருந்து வியாபாரிகளும், பயங்கரவாதிகளும் வெளிநாட்டிலிருந்து பெரும் பணத்தை இங்கே கொண்டு வந்து விடுவார்கள். லஞ்சத்தைப் பொறுத்த வரையில் முதல் அமைச்சர்கள், அமைச்சர்கள், உயர் அதிகாரிகள், எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலுங்கூட, லஞ்சப் பணத்தை இந்த முறையில் வெள்ளையாக்கி விடலாம். எனவேதான் இந்தத் திட்டம், இந்த மூன்று வகையான சட்டத்தின் கீழான குற்றம் புரிந்தவர்களுக்கு செல்லாது என்று அறிவிக்கப்பட்டது.

மேற்படி திட்டத்தை சரிவர புரிந்து கொள்ளாமல், ஒரு கோடி லஞ்சப் பணத்தை வெள்ளையாக்க மேற்படி திட்டத்தை ஜெயலலிதா பயன்படுத்தினார். விதிவிலக்கு இல்லாத காரணத்தால், மாநில அரசு மத்திய அரசின் சி.பி.ஐ.யை இந்த ஒரு கோடியை யார் அனுப்பியது, எதற்காக அனுப்பினார்கள் என்பது

போன்ற விசாரணைகளை வெளிநாட்டில் செய்ய வேண்டிக் கொண்டது.

இதைப்பற்றித்தான் ஜோக் கிந்தர் சிங் தனது புத்தகத்தில் எழுதியிருக்கிறார். வருமான வரி அதிகாரிகளுக்கு தெரிவித்து விட்டதாலேயே இதில் குற்றம் எதுவும் இல்லையாம். Remittance of Foreign Exchange (Immunity) Scheme 1993யின் ஷரத்துகளை ஜெயலலிதாவும் அவரது ஆடிட்டரும் மட்டுமல்ல; சி.பி.ஐ.யின் முன்னாள் இயக்குனரும் புரிந்து கொள்ளவேயில்லை என்பதே உண்மை.

இதைத் தவிர, தனது பிறந்தநாள் பரிசாக வந்த கோடிக்கணக்கான ரூபாய்களையும் வருமான வரி கணக்கில் காட்டி விட்டதால் பிரச்சினை எதுவுமேயில்லையாம். இது எப்படியிருக்கிறது என்றால் ஒரு முகமூடிக் கொள்ளைக்காரன் தான் கொள்ளை அடித்த பணத்தை தனது வங்கிக் கணக்கிலே கட்டி விடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். அதை வருமானவரி அதிகாரி விசாரிக்கும்போது யாரிடமோ கடன் வாங்கியதாக சொல்கிறான் என்று வைத்துக் கொள்வோம். ஆனால் வருமான வரி அதிகாரியே அதை ஏற்காமல் முப்பது சதவிகிதம் வரி விதிக்கிறார். கொள்ளைக்காரனும் வரியைக் கட்டி விடுகிறான். வருமான வரி கட்டி விட்டதாலேயே கொள்ளைக் குற்றம் மறைந்து போய்விடுமா? இல்லை, கொள்ளையடித்து சம்பாதித்தது என்றே கூறினாலும் அதற்கும் வருமான வரி உண்டு. Income Tax Act is not concerned with illegality of the Income என்பது பல கோர்ட் அடிப்படையிலானது. நான் கொள்ளை அடித்த பணத்திற்கு வருமான வரி கட்டி விட்டேன், எனவே இந்திய பீனல் கோடின்படி, கொள்ளை அடித்த குற்றத்திலிருந்து எனக்கு விதிவிலக்கு என்று யாராவது கூற முடியும் என்றால் மட்டுமே ஜோக் (கிந்தர்) சிங்கின் கூற்றை ஏற்க முடியும். இதை முதலாண்டு சட்டக் கல்லூரி மாணவர் கூட ஏற்க முடியாது.

வெளிநாட்டிலிருந்து யார் அனுப்பினார்கள் என்றே தெரியாமல், தனக்கு தபால் மூலம் வந்து சேர்ந்து, தானும் தனது வங்கிக் கணக்கில் கட்டிக் கொண்டதாக ஜெயலலிதா சொன்ன இந்த ஒரு கோடியைப் பற்றிய விசாரணையை சி.பி.ஐ. ஜவ்வு மிட்டாய் போல் இழுத்துக் கொண்டிருந்தது. இதைப் பற்றித்தான்

இப்போது ஜோக்கிந்தர் சிங் ஜோக்கடித்திருக்கிறார். கீழே தள்ளியதுமில்லாமல், குதிரை குழியையும் பறிக்கிறது. ஆம்! இது 1999ஆம் ஆண்டுக்காக 1998 இறுதியில் வெளிவந்துள்ள புத்தாண்டின் அட்வான்ஸ் ஜோக்காகவே அமைந்துள்ளது.

இந்த வழக்கு விசாரணை இன்னும் முடிவடையவில்லை. இந்நிலையில் சி.பி.ஐ.க்குள் நடந்ததாகக் கூறப்படும் அந்தரங்க விவரங்களை ஜோகிந்தர் சிங் இப்போது வெளியிடுவது முறைதானா? என்று எழும் கேள்விக்கு என்ன பதில்? என்ன நடவடிக்கை? இது நாட்டுக்கு தெளிவாக்கப்பட வேண்டாமா?

அன்புள்ள,

மு. கருணாநிதி

(01-01-1999)

2440. அண்ணா நினைவு நாள் அஞ்சலியும் அணி வகுப்பும்!

உடன்பிறப்பே,

மனித நேயப் பண்பாளர் பேரறிஞர் அண்ணா நினைவு நாளாம் பிப்ரவரி 3ஆம் நாள் காலையில், சென்னை அண்ணா சதுக்கத்தில் நானும், பொதுச் செயலாளரும், பொருளாளரும், துணைப் பொதுச்செயலாளரும் மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற - சட்டப்பேரவை உறுப்பினர்கள், கழக முன்னணியினர் வழக்கம்போல் அமைதி ஊர்வலமாகச் சென்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகிறோம். அதே நேரத்தில் எல்லா ஊர்களிலும் அண்ணா சிலையிருக்கும் இடங்களிலும், அண்ணா படமிருக்கும் இடங்களிலும் கழக அமைப்புகளின் சார்பில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்த உன்போன்ற உடன்பிறப்புகள் கூடிடுவீர் - அதே நாள் மாலையில் 4 மணி அளவில், அனைத்து ஊர்களிலும் காவல் துறையினரின் அனுமதி பெற்று அவர்கள் குறிப்பிடும் வழிகளில் கழகக் கொடிகள் ஏந்தி மதவெறியையும் - தீண்டாமைக் கொடுமையையும் - வன்முறைச் சேட்டைகளையும் எதிர்த்து ஊர்வலங்கள் நடத்திடவேண்டுமென்று ஏற்கனவே கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

ஊர்வல முடிவில் நடைபெறும் கூட்டங்களில், மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய கருத்துக்கள் குறித்து விளக்கிடக் கழகச் சொற்பொழிவாளர்கள் கூட்டம், பிப்ரவரி 2ஆம் நாள் காலையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற இருக்கிறது. ஊர்வலத்தில் எழுப்பிட வேண்டிய முழக்கங்கள் குறித்தும் முன்பே கூறியிருக்கிறேன்.

அனுமதிக்க மாட்டோம்
அனுமதிக்க மாட்டோம்
மதவெறிக் கொடுமையை அனுமதிக்க மாட்டோம்

**

அகற்றுவோம்
தீண்டாமைத் தீமையை
அகற்றுவோம்!

**

இடம் தரமாட்டோம்
இடம் தரமாட்டோம்
வன்முறைச் சேட்டைக்கு
இடம் தரமாட்டோம்!

இந்த முழக்கங்களுடன் மேலும் சில முழக்கங்களை ஒலித்திட வேண்டிய நிலையை மத்திய அரசு திடீரென உருவாக்கி விட்டிருக்கிறது.

மத்திய அரசே!
மத்திய அரசே!
உணவுப் பொருள் விலையை
உயர்த்தாதே! உயர்த்தாதே!

**

மத்திய அரசே!
உரவிலையை
உயர்த்தாதே! உயர்த்தாதே!

இந்த முழக்கங்களையும் அந்த ஊர்வலத்தில் இடியொலியென எழுப்பிட வேண்டும்.

விவசாயிகளைப் பெரிதும் பாதிக்கக் கூடியது உரவிலை என்பதையும், ஏழை - எளிய மக்களைப் பெரிதும் பாதிக்கக் கூடியது

அரிசி விலை உயர்வு என்பதையும் முதன் முதலாக எடுத்துக் காட்டி நான் அறிக்கை விடுத்ததை நாடு நன்கறியும். நான் மட்டுமல்ல! பா.ஜ.க. அரசில் கூட்டணியில் இருக்கிற கட்சிகளின் முதலமைச்சர்களும் - நாடு முழுதும் இருக்கின்ற மக்கள் நலம் நாடும் பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் இந்த திடீர் விலை உயர்வை எதிர்த்துக் கண்டனம் தெரிவித்துள்ளார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இப்போது நியாய விலைக் கடைகளில் அரிசி விலை 3 ரூபாய் 75 காசுக்கு வழங்கிக் கொண்டுள்ளோம். நாம் இந்த அரிசிக் கொள்முதலுக்காக செலவிடுகிற தொகைக்கும் நியாய விலைக் கடைகளில் நாம் வழங்குகிற விலைக்கும் இடையே பெரும் வேறுபாடு இருப்பதால், இப்போதே நமது அரசு அதற்காகத் தருகிற மானியத் தொகை ஆயிரம் கோடி ரூபாயைத் தாண்டுகிறது.

இப்போது மத்திய அரசு திடீரெனக் கடுமையாக உயர்த்தியுள்ள விலை காரணமாக, அரிசி விநியோகத்தில் மேலும் இருநூறு அல்லது முன்னூறு கோடி ரூபாய் தமிழக அரசுக்கு மானியச் செலவு அதிகமாகக் கூடும்.

அந்தச் செலவை மக்களின் தலையில் சுமத்திட தமிழக அரசுக்கு எண்ணமில்லை. அப்படிச் செய்யப் போவதுமில்லை.

எனினும், ஏற்கனவே மத்திய அரசுக்குச் சமமான ஊதியம் வழங்கியது போன்ற பல கோடி ரூபாய் அதிகச் செலவை ஏற்றுக் கொண்டிருக்கிற தமிழக அரசு, இந்த கூடுதல் மானியத் தொகைச் சுமையையும் தாங்கித் தீர வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதையும் மக்களுக்கு விளக்க வேண்டியிருக்கிறதல்லவா? அதனால்தான் பிப்ரவரி 3ஆம் நாள் ஊர்வல முழக்கங்களில் இந்த முழக்கங்களையும் இணைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பிப்ரவரி 3 பற்றிய எனது அறிக்கை, தலைமைக் கழக சார்பில் வெளிவந்தவுடன் மாவட்டக் கழகச் செயலாளர்கள் உடனடியாக, அந்த மாவட்டத்தில் உள்ள கழக அமைப்புகளுடன் தொடர்புகொண்டு அண்ணா நினைவு நாள் அஞ்சலி நிகழ்ச்சியும், அன்று மாலை நடைபெற வேண்டிய ஊர்வல நிகழ்ச்சியும் ஆங்காங்கு மிகுந்த ஆர்வத்துடன் நடைபெறுவதற்கான எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளனர். அவர்களுடைய

முயற்சிகளுக்கு கழகத்தின் அனைத்து அமைப்புகளும் உடனிருந்து ஒத்துழைப்பு தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அன்று ஊர்வலங்களில் எழுப்பப்படும் ஒலி முழக்கங்கள் விண்ணையெட்டும் என்பதை நானறிவேன்! அதன் விளைவு வெற்றிகரமாக இருக்குமென்ற நம்பிக்கையையும் பெறுகின்றேன்! அன்று கழகத்தின் கரங்களில் ஏந்திவரும் கழகக் கொடிகள், கடல் அலைகளை வென்று காட்டுமென்பதையும் நானறிவேன்! அந்த வலிவில்தான் எதிர்காலத் தமிழகத்தின் பொலிவு இருக்கிறது என்பதை அனைவரும் அறிவர்!

ஆண்டுதோறும் ஒருநாள் மட்டும் அண்ணாவை நினைப்போரல்ல நாம், நம் சிந்தை அணு ஒவ்வொன்றிலுமே அவரே நிறைந்திருக்கிறார். அவரது மனிதநேயப் பண்பாடுதான் நிறைந்திருக்கிறது - மக்கள் தொண்டே மகேசன் தொண்டு எனும் அவரது அறிவுரையே நிறைந்திருக்கிறது.

எனவே அவரது நினைவு நாளில், மதவெறி - தீண்டாமைக் கொடுமை - வன்முறைச்சேட்டை - இவற்றுக்கு விடை கொடுத்தனுப்பிடவும், மாநில அரசுகளின் சங்கடத்தையும், மக்களின் வாழ்க்கை நிலவரங்களையும் அறியாது செயல்படும் மத்திய அரசுக்குப் பாடம் புகட்டிடவும், நாம் எழுப்பிடும் முழக்கமும், எடுத்திடும் ஊர்வலமும் பயன்படட்டும்! பயன்படுமென்றே நம்பிக்கையுடன் நமது பணியினைத் தொடர்வோம்! அண்ணா வாழ்க! அவர்தம் கொள்கைகள் வெல்க! வெல்க!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(01-02-1999)

2441. வெற்றிக்கொடி நாட்டுவோம் வாரீர்!

உடன்பிறப்பே,

நேருக்கு நேர் சந்திக்கும் வாய்ப்பு நிரம்பக் கிடைத்துவிட்டதால் கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள இடையிலே பல நாட்கள் கடிதங்கள் தேவைப்படாமலே போய்விட்டன. ஏதோ மாதத்தில் இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் சுற்றுப் பயண நிகழ்ச்சிகள் - அவற்றில் என் உடன்பிறப்புகளைக் காணும் நிலை என்றில்லாமல், கடந்த மாதத்தில் மட்டும் ஏறத்தாழ, முப்பது நாட்களும் ஒரு மணி நேர ஓய்வுகூட இல்லாமல், ஒவ்வொரு நாளும் ஐந்தாறு நிகழ்ச்சிகள் - சென்னை முதல் குமரிமுனை வரையில் சென்று மதிய உணவு, மாலை நான்கு மணிக்கு - இரவு உணவு எதற்காக? எனும் கேள்வியுடன் ஒரு மாபெரும் சுற்றுப்பயண வேள்வியே முடித்து, என்ன இருந்தாலும் எலும்பு, தோலால் ஆன உடல்தானே, இரும்பால் ஆன இயந்திரம் அல்லவே? அதனால் நாலைந்து நாட்களாக படுத்த படுக்கையானேன்.

உளைச்சல் ஓய்ந்திடவும், வலித்தொல்லை ஒழிந்திடவும், உடலில் புத்தெழுச்சி ஏற்பட்டிடவும், மருத்துவர்கள் தந்த ஊசிகள், மருந்துகளுடன் புலிக்குன்றில் நமது இந்திய வீரர்கள் விளைத்த வெற்றிச் செய்தியும் சேர்ந்து கொண்டு என்னை எழுப்பி உட்கார வைத்துவிட்டது. இன்னும் பெற வேண்டிய வெற்றிகள் பல இருக்கின்றன நமது கார்கில் எல்லையில் களம் கண்டுள்ள வீரத்திருமகன்களுக்கு!

இந்த ஒரு வெற்றிச் செய்தியே பாகிஸ்தான் அதிபரைப் பதறச் செய்து, கிளிண்டனிடம் ஓடச் செய்திருக்கிறது. இந்தப் புதிய திருப்பத்தை உருவாக்கிடத் தியாகம் புரிந்த தீரர்களுக்கும், தியாகத் திருவிளக்குகளாகப் போர்க்களத்தில் அணி வகுத்திடும் வீர மறவர்களுக்கும் இந்த மண்ணும், இந்த மண்ணின் மைந்தர்களும் எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறோம் என்று கணக்கிடவே இயலாது.

சீனத்துடன் நடைபெற்ற போரிலும், வங்க தேசம் உருவாக்கிட பாகிஸ்தானுடன் நடைபெற்ற போரிலும் உயிரிழந்த இந்திய வீரர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது, இப்போது கார்கில் பகுதியில் மாண்டு மடிந்த மாவீரர்களின் தொகை அளவில் மிகக் குறைவுதான் எனினும், நாடு காக்கும் போரில் ஒரு வீரனை இழப்பினும் - அந்த இழப்பு எத்துணைத் துன்பத்தை எரிநெருப்பாய்த் தூவும் என்பதை இதோ கண்டு கொண்டிருக்கிறோமே!

கொடும் பனியும், கொடிய குளிரும் தாக்கும் பகுதிகள் - குண்டு மழை பொழியும் களங்கள் - அங்கே உயிரைத் திரணமாக மதித்து உலா வரும் வீரர்கள்! அவர்கள் நடமாடும் திசை நோக்கிக் கை கூப்பி வணங்குகிறோம். களத்தில் கரமிழந்து, கண் இழந்து, கையொடிந்து, காலொடிந்து இந்தத் தாயகம் காத்திடத் துடித்திடும் தங்கங்கள் அல்லவா அவர்கள்!

உயிர் வெல்லமன்று! உன்மத்தர் நுழைவுக்கு இஃது இடமும் அன்று! எனச் சூளுரைத்து, திரும்புகிறேனோ, இல்லையோ திரும்பாவிடில், மறவனைப் பெற்ற மகிழ்ச்சியை, பெற்றோர் பெறுக! மாவீரனை மணந்த மகிழ்ச்சியை மனைவி பெறுக! - என விடைபெற்றுச் சென்றுள்ள காளையர், நாடு காக்கும் போரிலே எத்தனை எத்தனை பேர்! அவர்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்தல் நம் கடமையன்றோ!

தீவிரவாதிகள் எனும் முக்காடிட்ட தீய விரோதிகளை முறியடித்து, அந்த வெறியரைத் திணற அடித்து, வெற்றி வாகை சூடிடும் நம் சகோதரர்களுக்கு என்றும் பக்கபலமாக நின்றிடுவோம்.

நமது வாழ்வு, நமது மகிழ்ச்சி, நமது சுதந்திரம், நமது நாட்டுரிமை, நமது பாதுகாப்பு அனைத்துக்கும் அந்த வீரர்கள்தானே பொறுப்பேற்றுள்ளனர்.

எல்லை காக்கின்றனர். தொல்லை தவிர்க்கின்றனர். அவர் வாழ்வில் துன்பத்திற்கோர் எல்லையில்லை. தொல்லைக்கோர் அளவில்லை.

அந்தத் துயர்துடைக்கும் பணியில் நாமெல்லாம் இந்தப் போர் அணியில் முன்னணியாக இருப்போம்.

கொடிய போர்க்களத்தில் தாமிருந்தாலும், தம்மை நம்பியிருக்கும் குடும்பத்தைக் காப்பாற்ற நாடு இருக்கிறது,

நாமெல்லாம் இருக்கிறோம் என்ற நம்பிக்கையில்தானே போர்க்களத்தில் புல்லர்களை எதிர்த்து நிற்கின்றனர் புலிநிகர் வீரர்!

அவர்தம் நம்பிக்கையை நாசமாக்கலாமா? மாசு மறுவற்ற அந்த மாணிக்கங்களின் குடும்பங்களில் வறுமை எனும் தூசு படரவிடலாமா?

இந்தக் கவலை நிறைந்த உணர்ச்சிமிகு கேள்வியுடன் தான், மத்திய அரசு திரட்டும் கார்கில் போர் வீரர் நிவாரண நிதியில் சேர்ப்பதற்கு தமிழக அரசும் நிதி திரட்டுவதுடன், அந்நிதியிலிருந்து தமிழகத்தைப் பொறுத்தவரையில், கார்கில் களத்தில் வீரமரணமடைந்த தியாகச் சுடர்களின் குடும்பங்களுக்குப் பின்வருமாறு உதவிகளைப் புரிந்துள்ளது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆறு வீரர்கள் கார்கில் எல்லையில் நடைபெறும் போரில் இறந்திருக்கிறார்கள்.

மேஜர் எம். சரவணன், பீகார் ரெஜிமெண்ட், பீமநகர், திருச்சி. நாயக் ஆர். காமராஜ், ஹெவி மோட்டார் ரெஜிமெண்ட், தஞ்சாவூர். சாப்பர் மா. ஜெயவேலு, இஞ்சினீயரிங் படைப்பிரிவு, திருவண்ணாமலை மாவட்டம். கன்னர் ந. பழனி, ராஷ்ட்ரீய ரைபிள் படைப்பிரிவு, திருவண்ணாமலை மாவட்டம். ப்ளைட் லெப்டினெண்ட் முகிலன், சிவகங்கை மாவட்டம். லெப்டினெண்ட் கர்னல் நடராஜ் விஜயராகவன், தாம்பரம்.

இவர்கள் ஆறு பேருக்கும் தமிழக அரசின் சார்பில், இரண்டு இலட்சம் ரூபாய் வீதம் வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டு, முகிலனைத் தவிர மற்ற ஐந்து பேருக்கும், தலா இரண்டு லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கப்பட்டுவிட்டது. முகிலன் குடும்பத்தினர் உத்தரப் பிரதேசத்தில் இருப்பதால், வழங்கிட இயலவில்லை. விரைவில் அவர்கள் தமிழகம் வரும்போது, அந்தத் தொகை வழங்கப்படவுள்ளது.

இறந்தவர்களின் குடும்பங்களுக்கு வீடு வழங்கிட தமிழக அரசு ஆணை பிறப்பித்து, அதில் தாம்பரத்தைச் சேர்ந்த நடராஜ் விஜயராகவனின் குடும்பத்தாருக்கு திருவான்மியூர் பகுதியில் வால்மீகி நகரில் எச்.ஐ.ஜி. டைப் ப்ளாட் எண் : 82/எப். 1 வீடு 11.78 இலட்சம் ரூபாய் மதிப்புள்ளது இலவசமாக அரசின் சார்பில், வழங்கப்பட்டுவிட்டது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் பழனி, ஜெயவேலு இருவரது குடும்பத்தாருக்கும், வேலூர் சத்துவாச்சாரியில் குடியிருப்பு வீடுகளில் முறையே எண்கள் 82 மற்றும் 83 வீடுகள் தலா 7.3 இலட்சம் ரூபாய் மதிப்புள்ளவை வழங்கப்பட்டுவிட்டன.

தஞ்சையைச் சேர்ந்த காமராஜ் குடும்பத்தினருக்கு எச்.ஐ.ஜி. வீடு 6.14 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வீடு ஒதுக்கப்பட்டுவிட்டது. இரண்டொரு நாளில் சாவி வழங்கப்பட்டு விடும்.

திருச்சி சரவணன் குடும்பத்தாருக்கு திருச்சி நாவல்பட்டு பகுதியிலே உள்ள வீடுகள் காட்டப்பட்டபோது அது பிடிக்கவில்லை என்றும், சென்னையிலே வீடு வேண்டுமென்றும் கூறியதன்பேரில், அவர்களுக்குச் சென்னையில் வீடு வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

மேலும் இந்த வீரர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கவும், மேற்படிப்பு வசதிகள் செய்து கொடுக்கவும் தேவையான பணிகளை, இதற்காகவே அரசின் சார்பில் நியமிக்கப்பட்ட, முன்னாள் படை வீரர்கள் நல இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் பொறுப்பில் இருக்கும் கேப்டன் க. ஜீவானந்தம் சிறப்பு அலுவலராக இருந்து மேற்கொண்டுள்ளார்.

தமிழக அரசின் சார்பில் மட்டுமல்லாது, தமிழகத் திரைப்படத் துறையினர் மதுரையிலும், சென்னையிலும் நிகழ்ச்சிகள் நடத்துவதன் வாயிலாகத் தாயகம் காத்திடும் தவப்புதல்வர்களின் குடும்ப நிவாரண நிதியினை வழங்கிட முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.

நமது கழகம் எதிர்க்கட்சியாக இருந்த வேளையில் 1962ல் சீனப்போரின்போது, யுத்தநிதி வசூலித்து அன்றைய முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்களிடமும் - ஆளுங்கட்சியாக இருந்த வேளையில் 1972ல் பாகிஸ்தான் போரின்போது, அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அவர்களிடமும் வழங்கி வரலாறு படைத்ததாகும்.

எனவே பணியிலிருப்போர், பதவியில் இருப்போர், தொழில் புரிவோர், தொண்டுள்ளம் கொண்டோர் - யாராயினும் அவர்தரும் தொகை ஒரு சல்லிக்காசுதான் எனினும், அது, நமது வீரர்கள் பக்கம் இந்திய நாட்டின் மொத்த மக்கள் தொகையும்

இருக்கிறது என்பதைக் காட்டுகிற அடையாள முத்திரை என்பதை மறந்திடலாகாது!

நாம் வழங்கும் உற்சாகம் - உத்வேகம் - ஆதரவு இவைதான் களத்தில் நிற்கும் நமது வீரர்கள், எல்லையோர மலைச்சிகரங்களில் நாட்ட இருக்கும் வெற்றிக்கொடிகளைத் தூக்கிப்பிடிக்கும் கரங்களுக்கு உரமூட்டும் என்பது நினைவிருக்கட்டும்!

எனவே, உடன்பிறப்புகள் நீங்கள் ஒவ்வொருவரும் வழங்கிடும் நிதியை ஏற்கனவே அறிவித்தவாறு செயலாளர், பொதுத் துறை, தமிழக அரசு, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை 600 009 என்று முகவரியிட்டு, நேரடியாக அனுப்பிடவோ அல்லது அளித்திடவோ வேண்டுகிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(07-07-1999)

2442. “இருநூறு ஆண்டுக்கு முன்பும் - பின்பும்!”

உடன்பிறப்பே,

டெல்லியில் ஜூலை 7ஆம் நாள் பிரதமர் வாஜ்பாய் அவர்கள், கூட்டிய முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள உடல்நலிவையும் பொருட்படுத்தாமல் சென்றிருந்தேன். இன்னுமா உடல்நலிவு என்று நீ உருக்கத்துடன் என்னைப் பார்ப்பது எனக்குத் தெரிகிறது. என்ன இருந்தாலும் என் உடன்பிறப்பல்லவா நீ! உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் தீவிரவாதச் செயல்கள் திடுமெனத் தோன்றலாம் - எச்சரிக்கையாக இருத்தல் வேண்டுமென உரிய துறையினர் அதிகாரபூர்வமாக அறிவித்திடுவதைக் கூட, அது என்னைப் பற்றிய விஷயமென்பதால் விமர்சிப்பவர்களும், கேலிபுரிபவர்களும், தமக்கு இதமான அரசியலாக்குபவர்களும் ஒரு சிலர், மாற்று முகாம்களில் இருந்திடும்போது கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட நயத்தக்க நாகரிகம் காத்திடும் மனித நேயப் பண்பை, தொடக்க முதல் தொடர்ந்து பேணிவரும் இந்த இயக்கத்தின் கண்மணியாகிய உனக்கு என் மீதுள்ள எல்லை கடந்த சகோதர பாசம் அப்படிக்கேட்டிடத்தான் தூண்டும்!

ஆம்! உடல்நலிவு நீங்கினாலும், நலிவு நீங்கிட நாலைந்து நாட்கள் உட்கொண்ட கடுமையான மருந்துகளின் விளைவு இன்னும் என்னை விட்டபாடில்லை. ஆயினும், மிக முக்கியமான கட்டத்தில் நாடு இருக்கும் போது நலிவு நமக்கிருந்தால் என்ன? நாட்டுக்கு இருந்திடலாகாதே! எனும் உணர்வு உந்தித் தள்ளி என்னை டெல்லியில் கொண்டு போய் சேர்த்தது.

ஜூலை 6 இரவு டெல்லி போய்ச் சேர்ந்தேன். மறுநாள் காலையில், பிரதமர் இல்லத்தில் அவரைச் சந்தித்துப் பேசுவதற்காக

அரைமணி நேரம் ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த அரைமணி நேரத்தில் நமது மாநில மக்களின் தேவைகளைக் குறித்து முறையீடுகளைத் தெரிவிக்கவும், அவற்றை விளக்கிடவும் நானும், என்னுடன் வந்த சட்ட அமைச்சர் தம்பி ஆலடி அருணாவும், மாநில அரசு அதிகாரிகளும் பயன்படுத்திக் கொண்டோம். எவை குறித்தெல்லாம் பிரதமரிடம் வலியுறுத்தப்பட்டது என்பதை ஏடுகள் வாயிலாக நீ அறிந்திருக்கிறாய் என்பதால் விரிவஞ்சி இக்கடிதத்தில் அவற்றை விட்டுவிடுகிறேன்.

கார்கில் களத்தில் தீரப் போரிட்டு, தியாக விளக்குகளாகச் சுடர்விடும் வீரர்கள் நிவாரண நிதி தமிழக அரசின் சார்பில் திரட்டப்பட்ட தொகை பதினைந்து கோடி ரூபாய்!

திரட்டப்பட்ட தொகை என்று கூறுவதைவிட, ஈரநெஞ்சமுடைய தமிழ்மக்கள் வலுவில் வந்து வாரி வழங்கிய நிதிக்குவியல் என்றே அதனை எடுத்துக் கொள்ளவேண்டும். அரசின் சார்பில் ஒரு வேண்டுகோள்தான் விடுத்தேன். அரசு அலுவலர், ஆசிரியப் பெருமக்கள், காவல் துறை நண்பர்கள், தொழிலாளத் தோழர்கள், மாணவ மணிகள், ஆலைகளின் அதிபர்கள், ஆட்டோ ஓட்டுநர்கள், பெட்டிக்கடைகள் முதல் பெரும் வணிக நிலையங்கள் வைத்திருப்போர் வரையில் அனைத்து வணிகப் பெருமக்கள், வழக்கறிஞர்கள், மருத்துவர்கள், கலைஞர்கள் என எல்லாப் பகுதியினரும் - ஏன்? ஏழைபாழைகளும்கூட அவர்களாகவே முன் வந்து அள்ளித் தந்த நிதிதான் அந்தப் பதினைந்து கோடி ரூபாய்!

மகிழ்ச்சியுடன் அதைப் பெற்றுக் கொண்ட பிரதமர் அவர்கள், இதனை முதல் தவணையாகப் பெற்றுக் கொள்கிறேன் என்றதும், அப்படியே வைத்துக் கொள்ளுங்கள். எங்கள் தமிழ்நாட்டு மக்கள் நாட்டுரிமை காப்பதிலும், அதற்காகத் தங்களையே ஒப்படைத்துக் கொள்வதிலும் நிகரற்றவர்கள். மேலும் மேலும் போர் நிதி வழங்கிடுவர் என்றேன்.

1971 வங்கதேசத்துக்காக திருமதி இந்திராகாந்தி அவர்கள் தலைமையில் நடைபெற்ற போரின்போது, இந்தியாவிலேயே தமிழ்நாடு ஒன்றுதான் ஆறு கோடி ரூபாய் நிதி திரட்டித் தருகிறது

என்றுரைத்தவாறே அவரிடம் சென்னை தீவுத்திடலில் நிதி வழங்கியது என் நினைவுக்கு வந்தது. இந்திராகாந்தியின் சொந்த மாநிலமான உத்திரப் பிரதேசம் வழங்கியதைவிட ஒரு பங்கு இது அதிகம் என்று நான் மேடையில் கூறியதும், அதற்கு அவர்கள் பதில் அளித்தார்கள், உ.பி. பொருளாதாரத்தில் பின்தங்கிய மாநிலம். அதனால்தான் எங்கள் மாநிலத்தில் போர் நிதி குறைவு என்று!

சரியாக 10 மணிக்கு முதலமைச்சர்கள் மாநாடு தொடங்கியது. கார்கில் போரில் உயிர் நீத்த வீரர்களுக்கான இரங்கல் தெரிவிக்கும் பொருட்டு இரண்டு நிமிடம் மௌனம் கடைப்பிடிக்கப்பட்டது. பின்னர் முக்கால் மணி நேரம் முப்படைத் தளபதிகள், இன்று கார்கில் பகுதியில் நடப்பது என்ன என்பது குறித்து, தனித்தனியாக விளக்கிப் படங்கள் பலவற்றுடன் பல செய்திகளைப் புரிய வைத்தார்கள். பிரதமர் அவர்களின் துவக்க உரையை ஒட்டி, முதலமைச்சர்களின் வரிசையில் முதலாவதாகப் பேசுவதற்கு நான் அழைக்கப்பட்டேன். என் பேச்சில், முக்கியமாக,

“இவ்வேளையில், இந்த மாநாட்டின் மூலம் இரண்டு செய்திகளை நாம் தெரிவித்திட வேண்டும். பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஆற்றல் மறவர்களுக்கு நம்முடைய ஒட்டு மொத்த ஆதரவை அளித்திட உறுதி ஏற்பதுடன், அவர்களை நாம் வியந்து பாராட்டுவதையும், அவர்களுக்கு நாம் அனைவரும் கடமைப்பட்டுள்ளோம் என்பதைத் தெரிவிப்பதையும் வெளிப்படுத்திட வேண்டும்.

இரண்டாவதாக, நமது ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவத்திற்கும், மதச் சார்பின்மைக்கும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலுக்கு எதிராக இந்த நாடு ஒரு பாறை போல உறுதியுடன் ஒன்றுபட்டுள்ளது என்பதை நமது எதிரிகளுக்கு நாம் உணர்த்திடவும் வேண்டும்.

தேர்தலுக்கு நாம் நம்மைத் தயார்படுத்தி வருகின்ற போதிலும், சிறு சிறு அரசியல் மாச்சரியங்களை ஒதுக்கி வைத்து விட்டு, நாட்டின் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு அளிப்பதில் நாம் உறுதியேற்றிட வேண்டும். பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளவர்களின் உறுதியை -

கட்டுப்பாட்டு அமைதியைப் பாதிக்கும் வண்ணம் எந்த வகைப் பேச்சிலும், செயலிலும் ஈடுபடுதல் கூடாது.

கார்கில் பிரச்சினை தொடர்பாக விவாதிப்பதற்கு ராஜ்ய சபாவின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென ஒரு கோரிக்கை வந்துள்ளது. அனைத்து மாநில முதல்வர்களுடனும், அங்கீகாரம் பெற்றுள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களுடனும் விவாதிப்பது உகந்தது, மிகவும் பொருத்தமானது என்பது என்னுடைய ஆழ்ந்த கருத்தாகும்.

நம்முடைய பகுதியிலிருந்து ஊடுருவல்காரர்கள் வெளியேறும் வரை பாகிஸ்தானுடன் மேற்கொண்டு பேச்சு வார்த்தை நடத்தப்படமாட்டாது என அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நமது பிரதமர் அவர்கள் உறுதியுடன் தெரிவித்திருக்கிறார். கார்கில் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில், மூன்றாவது நாடு சமாதானத்தில் ஈடுபடுவதை இந்தியா ஏற்காது என்பதையும் அதில் வெளிப்படுத்தியுள்ளார். பிரதமரின் இந்த நிலையினை வரவேற்பதுடன், இந்த மாநாடு அதனை வலியுறுத்திடவும் வேண்டும்.

பாகிஸ்தான், வரலாற்றில் இருந்து எந்த ஒரு படிப்பினையும் பெறாமல் இருப்பது துரதிருஷ்டமானது. பாகிஸ்தான், தாஷ்கண்ட் பிரகடனத்தையும், சிம்லா ஒப்பந்தத்தையும் மதிக்கத் தவறிவிட்டது.

கார்கில் பிரச்சினையில் இந்தியா மேற்கொண்டுள்ள கொள்கை ரீதியான முடிவுகளுக்கு, உலக அளவில் ஆதரவு கிடைத்துள்ளது நமக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. அண்மையில் நடைபெற்ற ஜி.8 நாடுகளின் மாநாடும், பிற நாடுகளின் தலைவர்களும் இந்தியாவின் நிலைக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

நமது பிரதமரின் சாதுரியமான நடவடிக்கைகளாலும், ராஜ தந்திரத்தாலும் வரலாற்றில் முதன்முதலாக, பாகிஸ்தான் இப்போது அனைத்து நாடுகளாலும்

தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்காகப் பிரதமருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கருத்தையும், பாராட்டினையும் ஏற்பதன் அடையாளமாகப் பெரும்பாலான முதலமைச்சர்கள் கையொலி செய்து வரவேற்றது உணர்ச்சிகரமாக இருந்தது.

மாநாடு முடிவுற்று இரவு ஏழு மணிக்கு டெல்லியிலிருந்து புறப்படும் விமானத்தில் சென்னை திரும்பினேன். மாநாட்டில் நானும், மற்ற முதலமைச்சர்களும், பிரதமர் அவர்களும் ஆற்றிய உரைகள் நெஞ்சில் அலைபாய்ந்திட விமானத்தில் அமர்ந்திருந்தேன்.

"பயங்கரவாதத்தை ஒடுக்குவதில் மாநிலங்கள் உறுதியுடன் செயல்பட வேண்டும். மாநிலங்களில் வகுப்பு மோதல்களை தூண்டி விட எதிரிகள் முயற்சிக்கலாம். இதுகுறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும். திறமையான பாரபட்சமற்ற நிர்வாகத்தின் மூலமே இவற்றை முறியடிக்க முடியும்."

இவை பிரதமரின் கருத்தாக மட்டுமல்ல, வந்திருந்த முதலமைச்சர்கள் அனைவரின் திட்டவட்டமான கருத்தாகவும் இருந்தது. நமது மாநிலத்திலும் இதில் மேலும் உறுதியான நடவடிக்கைகள் தேவை என்பது பற்றி சிந்தித்துக்கொண்டே விமானத்தில் வைக்கப்பட்டிருந்த ஸ்வாகத் (Swaghat) என்ற ஆங்கில ஏட்டைப் புரட்டினேன்.

மகாராஜா ரஞ்சித் சிங்கைப் பற்றிய ஒரு கட்டுரை - அதில் அவரது வீரப்பிரதாபங்கள் - அவர் கடைப்பிடித்த எளிமை - சிம்மாசனத்தில் அமராமல் - மகுடம் புனையாமல் - அவர் மாமன்னராகத் திகழ்ந்த புதுமை - அனைத்தும் சுருக்கமாக எழுதப்பட்டிருந்தது.

மக்களை சரி சமமாக நடத்துவதோடு, அவர்களிடையே எந்தவிதமான சாதி சமய வேறுபாடுகளையும் காட்டக்கூடாது என்ற கொள்கையில் ரஞ்சித் சிங் அழுத்தமாக இருந்தார் என்பதும், இந்துக்களையும், முஸ்லிம்களையும், சீக்கியர்களையும் சம

உரிமைகளுடன் நடத்தினார் என்பதும் - மத வேறுபாடுகளுக்கு இடமளிக்காமல், சாதிய உணர்வுகளுக்கு இடமளிக்காமல் பாரபட்சமின்றி அரசு நடத்தினார் என்பதும் என் உள்ளத்தைக் கவர்ந்தன.

ஒருவர் எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், அதைப்பற்றி எந்தவிதக் கவலையுமின்றி ரஞ்சித் சிங், அவரிடம் மிகுந்த மரியாதை கொண்டிருந்தார்.

லாகூரில் ஷலமார் தோட்டத்திற்கு அருகில் உள்ள இடத்தில் இஸ்மாயில் என்கிற வாதா நினைவாக கட்டிடம் அமைக்க 80 பிகாஸ் நிலத்தை தானமாக வழங்கினார். மேலும், லாகூரிலே உள்ள மசூதிகளின் பராமரிப்புப் பணிக்காக, 15 ஆயிரம் ரூபாய் நன்கொடையாகவும் வழங்கினார். அதைப்போலவே, மற்ற இடங்களில் உள்ள மசூதிகள் மற்றும் பல மதங்களைச் சார்ந்தவர்களின் புனிதமான இடங்களை பரமாரிக்கத் தாராளமாக நன்கொடைகளை வழங்கினார்.

அதைப்போலவே, இந்து மதத்தைச் சார்ந்த கோவில் பணிகளுக்கும் தாராளமாக நன்கொடை வழங்கினார். வாரணாசியில் உள்ள விஸ்வநாதர் ஆலயத்திற்கு ஆறு குவிண்டால் தங்கத்தை நன்கொடையாக வழங்கினார். ஜ்வாலாமுகி கோவிலுக்கு தான் சென்று வந்தபோதெல்லாம் நன்கொடைகளை வழங்கினார்.

ரஞ்சித் சிங் செய்த முக்கியமான ஒரு காரியம் என்னவென்றால், அவர் 1833-ஆம் ஆண்டு மார்ச் 12-ந் தேதி ஆப்கானிஸ்தானின் மன்னரோடு செய்துகொண்ட ஒப்பந்தம்தான். அந்த ஒப்பந்தத்தின் முக்கியமான ஒரு ஷரத்து - அதற்கு 800 ஆண்டுகளுக்கு முன்பு, கஜினி முகமதுவினால் தூக்கிச் செல்லப்பட்ட சோமநாதர் ஆலயத்தின் சந்தனத்தாலான நுழைவாயிலை, மறுபடியும் திரும்பக் கொடுத்து விடுவது என்பதாகும். இந்த நிகழ்ச்சி ரஞ்சித் சிங் சோமநாதர் ஆலயத்தின் மீது கொண்டிருந்த மிகுந்த மரியாதையைக் காட்டுவதோடன்றி, நாட்டின்

மிகப்பெரிய கௌரவத்தை மீட்டுத் தருவதாகவும் அமைந்தது.”

இவற்றை அந்த ஏட்டில் படித்து முடித்த பிறகுதான், அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்த ஒரு தேதியை கவனித்தேன். அதாவது 1799 - சரியாக இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு - ஜூலை 7 ஆம் நாள் அந்த மாவீரர் ரஞ்சித் சிங் வெற்றி வீரராக லாகூர் கோட்டைக்குள் நுழைந்தார். அப்போது அவரை இந்து, முஸ்லிம், சீக்கியர் அனைவரும் ஒன்றாக அணிவகுத்து வரவேற்றனர் என்பதே எனக்கு ஆச்சரியம் விளைவித்த அந்தத் தேதியாகும்.

புலிக்குன்றிலே கிடைத்த வெற்றிக்குப் பிறகு டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாடும் ஜூலை 7 தான்! அது 200 ஆண்டுகளுக்கு முன்பு! இது 200 ஆண்டுகளுக்குப் பிறகு! எப்படியோ ஒரு பொருத்தம் இருக்கிறது பார்த்தாயா உடன்பிறப்பே,

அன்புள்ள,

மு. கருணாநிதி

(09-07-1999)

2443. இருமுனை வெற்றி - இனிதே பெறுவோம்!

உடன்பிறப்பே,

சங்கத்தமிழ் எனும் நான் எழுதிய புத்தகத்தையே நேற்றிரவு படித்துக் கொண்டிருந்தேன். அகமென்றும், புறமென்றும் சங்க காலப்புலவர்கள் பாடியுள்ள பாடல்களில், புறப்பாடல்களுக்கே நான் அதிக முக்கியத்துவம் தந்து எழுதுவதும், பேசுவதும் நீ அறிந்த ஒன்றேயாகும். அகநானூறு, காதல் பேசும் அதிகமாக! பிரிவு பற்றிப் புலம்பும்! புறநானூறு, வீரம் சொல்லும்! களம் பல காட்டும்!

போர்ச்சூழ்நிலை, இந்திய எல்லையில் கடுமையாக இருப்பினும் - புறப்பாடல்களில் என் கவனம் செல்லாமல் அகப்பாடலைத் தேடிற்று! இரவுநேரம் என்பதாலா? என்று நீ கேட்கமாட்டாய், இந்த எழுபத்தாறைப் பார்த்து! இருபத்தாறுகள் விரும்பும் அகப்பாடல்களிலும் களங்கள் உண்டு - புறப்பாடல்களிலும் காதல் உண்டு என்பதை, இரண்டையும் படித்தோர் நன்கு உணர்வர் சங்க இலக்கியங்களில்!

அந்த எழுச்சிமிகு இலக்கியப் பாடல்கள் குறித்து நான் தீட்டிய சங்கத்தமிழ் ஏட்டினை, நானே மீண்டும் அனுபவித்துப் படித்துக் கொண்டிருந்தபோது, சிறிது உற்சாகமிருக்கட்டுமே என்பதற்காக அகநானூறு பாடல் ஒன்றைத் தேடினேன். அகப்பட்டுவிட்டது. எழுபத்தி ஏழாவது பாடல் அது. மருதன் இளநாகனார் எனும் புலவர் பாடியது. படித்திருக்கிறேன் முன்பே எனினும், எள்முனையளவு மறதி தலை நீட்டியதால் மீண்டும் படித்தேன். அந்தப் பாடலுக்கு நான் தீட்டியிருந்த மெருகினை!

அகப்பாடல்தானே? அதனால் அது முழுவதும் காதல் செய்தியொன்றைத்தான் பேசும் என்ற நம்பிக்கையுடன் படித்த எனக்கு திடீர் ஏமாற்றம்!

பாடல் வேறு விதமாகப் போயிற்று. அந்தப் பாடலை நான் இம்மடலில் எழுதவில்லை. பாடலுக்குரிய பொருளை மட்டும் குறிப்பிடுகிறேன். சங்க இலக்கியத்தில் சற்று சிரமப்பட்டுத் தேடி, நீதான் அந்தப் பாடலைப் பார்த்துக் கொள்ளவேண்டும் என்பதற்காகவும், அந்த இலக்கிய ஆர்வம் இளைய தலைமுறைக்கு எழவேண்டும் என்பதற்காகவும் அதனை இக்கடிதத்தில் இணைத்திடவில்லை. பொருளை மட்டும் படித்துப் பழந்தமிழ் நிலத்தின் புகழ்மிகு வரலாற்றைப் புரிந்துகொள்ள இக்கடிதம் பயன்படட்டும். பயன், மேலும் விரிவடைந்து நாம் ஆற்றவேண்டிய பணிகளுக்கும் வழிகாட்டட்டும்!

பழைய பாடல் நல் நுதல் பசப்பவும் ஆள்வினை தரீ இயர் என்று ஆரம்பமாகிறது - அதற்கு நான் எழுதிய எளிய தமிழ் விளக்கத்தின் ஒரு பகுதியை மட்டும் இதோ கண்டிடுக!

> “பாவைதனைப் பிரிந்து பொருளீட்ட - அவன் பயணம்
> நடத்திடவேண்டிய வழியோ பெரும் பாலையாம்!
> இடியுமிழ்ந்து வானம் அங்கே - ஒரு துளி மழையும்
> வழங்காததாலே குடி பெயர்ந்து மக்கள், கும்பியை
> நிரப்புவதற்கு கும்பல் கும்பலாய் ஓடிவிட, கொதிக்கின்ற
> சுடு நிலத்தில் - வீரம் கொப்பளிக்கும் படுகளத்தில்
> பகைநாட்டுப் படையிரண்டு மோதிக்கொண்டு தொகை
> தொகையாய் வீரர் பிணம் சிதறிக் கிடக்கும். அவர்தம்
> கச்சையினை விலக்கிக் கழுகும் பருந்தும் அவற்றின்
> இச்சையெலாம் தீர வயிறுகளைக் கொத்தி, குடலை
> உருவியெடுத்துத் தம் குடலுக்கு இரையாக்கிக்
> கொள்கின்ற கொடுமையினைப் பார்க்கும்போழ்து,
> உருவி எடுக்கின்ற வீரர் குடலுக்கு உவமையாக
> ஊராட்சிக்குழு தேர்வுதனைப் புலவர்பிரான் ஒப்பிட்டு
> உரைப்பதுதான் என்னே பொருத்தம்!
>
> உலகிற்குத் தமிழர் நாட்டு பழஞ்சேதியொன்றை - இந்த
> உவமையினால் விளக்கும் நேர்த்தி அருமையினும்
> அருமையன்றோ! ஊர்மக்கள், பொதுமன்றில் ஒரு
> சேரக்கூடி நின்று, யார் யார் குழுவுக்கு உறுப்பினராய்
> ஆக வேண்டுமென்று கயிறு கட்டிய குடமொன்றில் -
> தத்தம் கருத்துகளை ஓலைகளில் எழுதி வாக்களித்து,
> முத்திரையிட்ட குடங்களையே, நடுவர் - மிகப்
> பத்திரமாக வைத்திடுவர். பின்னர் ஆவணக் களரியர்

எனும் அலுவலர் வந்து அகற்றிடுவர் முத்திரையை - அதன்பின் ஒவ்வோர் ஓலையாய்க் குடமிருந்து இழுத்து, உறுப்பினர் தேர்வில் வென்றோர் யாரென ஊரார் மத்தியில் எண்ணி அறிவிப்பர் - அக்குழு ஊர்நலம் பேணிடப் பல உரிமைகள் கொண்டதுவாம்!

மருதன் இளநாகனார் இந்த மாண்புறு மரபினைத்தான் மன்பதையின் எதிர்காலத் தலைமுறையார் உணர்வதற்கு, சான்று கூறும் சரித்திர வரிகளாகத் தோன்றுமாறு படைத்திட்டார். சங்க இலக்கியத்தில்! கழுகும், பருந்தும் களத்தில் மாண்ட காளையின் உடலில் குடலை உருவுதல், கடமையாற்றும் ஊர்நலக்குழுவுக்குக் குடத்தில் இட்ட வாக்குச்சீட்டாம் பனை ஓலைகளை, கையை நுழைத்து உருவி எடுப்பது போல் கண்முன் தெரிவதாய்க் கவிஞர் உரைக்கின்றார்!"

களத்தினைக் காணும் போதும் - அங்கே வீரர்தம் பிணத்தினைக் கொத்தும் கழுகுகளைக் காணும்போதும் - கவிஞருக்கு நினைப்பு, அவற்றுடனேயே ஒன்றிப் போய்விடாமல் மக்களாட்சியின் மாண்பு பற்றியும் விரிவடைகிறது.

வீரர்கள் மோதும் களம் - வீழ்ந்துபட்ட உடல்கள்மீது கழுகு பிராண்டும் காட்சி - கவிஞர் மனமோ, அக்காட்சிக்கு உவமை தேடியலைந்து ஊரின் ஆட்சிக்குரியோரைத் தேர்வு செய்யும் முறையினை எடுத்துச் சொல்கிறது.

ஆம்! இப்போதுகூட கார்கில் களம்சென்று, நாடு காத்திட நமது வீரர்கள் உயிர்த்தியாகத்திற்கும் தயாராகத் தடந்தோள் தட்டி முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். சிலர் உயிரற்ற உடல்களாகத் திரும்புகின்றனர். இருபது, முப்பது பேரைக் காணவில்லையென்ற செய்தி. எங்குற்றனரோ? அந்த மலைக்குகையிடையிலோ? எந்த இடத்துப் பனிப் புழுதியிலோ? எந்த நிலையிலோ?

இவற்றையெல்லாம் கண்கலங்கக் கருதிப் பார்த்து, அந்தப் போர்ப்புலிகளுக்கு ஒல்லும் வகையெல்லாம் உதவுவதற்கு இந்தத் துணைக்கண்டம் முழுதும் துடித்து நிற்கிற நிலை காணுகிறோம்.

இந்நிலையுடன் மருதன் இளநாகனாரின் அகநானூறுப் பாடலையும் நினைத்துப் பார்க்கிறோம்.

தீவிரவாதிகளைத் திருப்பியடித்து பாகிஸ்தானுக்கு விரட்டிடும் தீரப் போரினிடையே, தேர்தலொன்று வரப்போகிறதே அதையும் நினைத்துப் பார்க்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

களத்தில் கண்ட காட்சியுடன் குடவோலைச் சீட்டுக்களை ஒப்பிட்டு தேர்தலையும் நினைவூட்டுகிறாரே கவிஞர்! அது தவிர்க்க முடியாதது என்பதுபோல, இதுவும் தவிர்க்க முடியாதது என்று இரண்டொரு திங்களுக்குள் இறங்கியாக வேண்டும் இந்த ஜனநாயகக் களத்திலும்!

ஜனநாயக இந்தியாவைக் காத்து மேலும் பலப்படுத்திட, சர்வாதிகாரப் பாகிஸ்தானுடன் போர் நடத்தும் வேளையில், இந்தியாவின் ஜனநாயகத்தை நிலைநாட்டிடவும் நாம் எதிர்கொள்ளும் நாடாளுமன்றத் தேர்தலில் ஈடுபட்டாக வேண்டும்.

நமது நாடு, நமது மக்கள், நமது சுதந்திரம், நாம் கட்டிக்காக்கும் ஜனநாயகம் இவற்றுக்காக, தீவிரவாதிகளைத் தீர்த்துக் கட்டும் போர்முனையிலும் நிற்கிறோம் - தேர்தல் களத்திலும் அடியெடுத்து வைக்கிறோம்.

பாகிஸ்தான் சர்வாதிகாரம் காட்டுத் தீ! அதனை அணைப்போம் வாரீர்! இந்திய ஜனநாயகம் வீட்டு விளக்கு! அதனை அணையாமல் காப்போம் வாரீர்!

ஜனநாயக முறையில் தேர்தலை சந்திக்க அணிகள் தயாராகின்றன - நமது அணியும் அகில இந்திய அளவில், தேசிய ஜனநாயக கூட்டணியாக பாரதீய ஜனதா தலைமையிலும் - தமிழக அளவில், தி.மு.க. தலைமையிலும் உருவாகியுள்ளது.

இந்த அணியில் இடம்பெற்றுள்ள கழகத்தின் நாடாளுமன்றத் தேர்தல் நடைமுறைச் செயல் திட்டங்களை வகுத்திட முதல்கட்டமாக, ஜூலை 17 மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் இளைஞரணி மாவட்ட அமைப்பாளர்கள் கூட்டம் நடைபெறுகிறது. சென்னையில், அண்ணா அறிவாலயத்தில்! நாடு காத்திடக் கார்கில் களத்திலும் வெற்றி; நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி! இந்தக் குறிக்கோளுடன் கூடுகிறோம். ஜூலை 17ல்! இந்த இருமுனை வெற்றி இனிதே பெறுவோம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(10-07-1999)

2444. ஒருமைப்பாடும் தேசியமும் ஒளிந்தது எங்கே?

உடன்பிறப்பே,

இந்திய நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு இவைபற்றியெல்லாம், ஆண்டாண்டு காலமாக வானம் சிதற ஒலிமுழக்கம் செய்து வருகின்றன தேசிய நீரோட்டத்தில் தங்களுக்கு மட்டுமே முழுமையான ஈடுபாடு என மார்தட்டிக்கொள்ளும் அகில இந்தியக் கட்சிகள்! ஆனால் ஒவ்வொரு மாநில நலனும், உரிமையும் பாரபட்சமின்றிப் பாதுகாக்கப்படுவதில்தான் உண்மையான தேசியம் ஒளிவிட முடியும் என்பதைத் தங்களின் அரசியல் ஆதாயங்களுக்காக அவை மறந்துவிடுகின்றன.

உதாரணமாக, காவிரி நதிநீர்ப் பங்கீட்டுப் பிரச்சினை - 1924 ஆம் ஆண்டு வெள்ளையராட்சியில் ஏற்பட்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் எவ்வளவு சிக்கல் - எத்துணைப் போராட்டங்கள் - எத்தனை முறை மாநில முதலமைச்சர்களின் பேச்சுவார்த்தை - எவ்வளவு வழக்குகள் - நடுவர்மன்ற இடைக்கால ஆணையைக் கூட ஏற்றுக்கொள்ளாமல், இறுதியில் சென்ற ஆண்டு தானே பிரதமர் முன்னிலையில் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையான 205 டி.எம்.சி. தண்ணீர் வழங்கிடக் கர்நாடகம் ஒப்புதல் அளித்தது! இத்தனைக்கும் பழைய ஆயக்கட்டுதாரர்களின் உரிமையைப் பேணிட வேண்டுமென்ற விதிமுறைகள் திட்டவட்டமாக இருந்தும், தேசியக் கட்சிகளின் அரசுகளுடன் தி.மு.க. - அ.தி.மு.க. போன்ற மாநிலக் கட்சிகளின் அரசுகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமைக்காக எவ்வளவு பாடுபட வேண்டியிருந்தது என்பதை கடந்த கால வரலாறு காவிரிப் பிரச்சினையைப் பொறுத்த வரையில், தெளிவாகவே உணர்த்திக் கொண்டிருக்கிறது.

பெரியாறு அணையின் உயரம் 152 அடி என்று இருந்தால், தென்மாவட்ட மக்களின் விவசாயப் பிரச்சினைக்கு மகிழ்ச்சிகரமான தீர்வு ஏற்படுமென்பதற்காகத்தானே தமிழக அரசு, கேரள அரசுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. அதற்கென ஆய்வுக்குழு ஒன்று அமைக்கப்பட்ட பிறகும் - இருமாநிலப் பொதுப்பணித்துறை அமைச்சர்களின் பேச்சுவார்த்தை முடிந்து, முதலமைச்சர்களின் மட்டத்தில் பேசலாமென்று பலமுறை கேரளத்துக்குக் கடிதங்கள் எழுதப்பட்டும் கூட, மௌனம்தானே பதிலாக இருக்கிறது. தேசிய நீரோட்டத்தில் அக்கறையுள்ள அகில இந்தியக் கட்சியான மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சிதான் அந்த மாநிலத்தில் ஆளுங்கட்சி - அதுமட்டுமல்ல அதன் முதல்வர் திரு. நாயனார் அவர்கள் எனக்கு நெருக்கமான நண்பருங்கூட! ஆனாலும் அரசியல் குறுக்கீடுகள் காரணமாக, கேரளத்துக்கும், தமிழகத்திற்கும் இடையிலான இதுபோன்ற நதிநீர்ப் பிரச்சினைகள் இன்னமும் முற்றாக ஒரு முடிவுக்கு வந்தபாடில்லை.

அன்றைக்கு 1969 ஆம் ஆண்டில் கேரள முதலமைச்சராக திரு. இ.எம்.எஸ். நம்பூதிரிபாடு அவர்கள், இருந்தபோது திருவனந்தபுரத்தில் அவருடன் நான், ஒருமணிநேரம் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தி - பரம்பிக்குளம் ஆளியாறு பிரச்சினை எளிதாக தீர்க்கப்பட்டது.

பின்னர் திரு. அச்சுதமேனன் தலைமையில் கேரள அரசு அமைந்த காலகட்டத்தில் 1973ல் கோவை மாநகருக்கு சிறுவாணி தண்ணீர் வழங்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு, அதற்கென கோவையில் நானும், திரு. அச்சுதமேனன் அவர்களும் கலந்துகொண்ட பாராட்டு விழா ஒன்றும் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இன்றைக்கோ நமக்கும், கேரள அரசுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் முழு அளவில் நடைபெறுவதற்கே இயலாத சூழ்நிலை! தமிழ்நாட்டு நலனை மட்டும் மையமாக வைத்து நாம் எந்த மாநிலத்துடனும் உறவு கொள்ள எண்ணிடவில்லை. பரஸ்பரம் மாநிலங்களுக்கிடையே உதவிக்கொள்ளவேண்டும் என்ற கொள்கையை என்றைக்கும் நாம் மறந்துவிட்டவர்கள் அல்லர். அந்த உணர்வுடன்தான் மற்ற மாநில உதவிகளைக் கோருகிறோம். உன் வீட்டிலிருந்து அவல் கொண்டு வா - என் வீட்டிலிருந்து உமி கொண்டு வருகிறேன்! இரண்டையும் கலந்து ஊதி ஊதி தின்போம் என்ற நிலை எடுப்பவர்களல்ல நாம்!

ஒரு மாநிலம் தண்ணீர் திறந்தால், அதற்கு மாற்றாக இங்கு விளையும் உணவு தானியத்தை அந்த மாநிலத்துக்கு வழங்குவது - உற்பத்தியாகும் மின்சாரத்தை முறையாகப் பகிர்ந்து கொள்வது என்பன போன்ற, பரஸ்பர உதவிக்கு எத்தனையோ வழி வகைகள் இருக்கின்றன. அந்த அடிப்படையில்தான் தேசிய நீரோட்டம் என்ற தத்துவம் செயல் வடிவங்கொள்ளவேண்டுமே தவிர, எல்லா மாநிலங்களும் இந்திய நாட்டில்தான் இருக்கின்றன; காலில் காயமென்றால் தலைக்கு என்ன வந்தது என்று கவலைப்படாமலிருந்தால், புரையோடும் புண்ணாக அது மாறும் என்பதைச் சுட்டிக்காட்டாமல் இருக்கமுடியவில்லை.

இந்தியா ஒரு நாடு என்கிறபோது மாநிலங்கள் அதன் உறுப்புகள் என்பதை எப்படி மறுத்துவிட முடியும்?

ஓர் உறுப்புக்கு ஏற்படும் கேடு, அந்த உறுப்போடு நின்றுவிடுவதில்லையே! அதனை அறுத்து வீசிவிட்டால் தவிர, உயிர் தப்பிட முடியாத அளவுக்கு உடலுக்கே அந்தக் கேடு பரவிவிடுமே!

எனவேதான் உடல் ஆரோக்கியத்துக்கு, உடலின் அனைத்து உறுப்புக்களும் பாதுகாக்கப்படவேண்டும். இந்தத் தெளிவான உணர்வுடன் செயல்படுவதுதான் தேசியமென்றால், இந்தத் தேசியத்தை இரு கையேந்தி வரவேற்கிறோம்.

அந்த உணர்வுக்கு மதிப்பளித்துத்தான் - அதனை மற்றவர்களிடமும் எதிர்பார்த்துத்தான் - இந்திய நாட்டின் எல்லா மாநிலங்களின் நன்மைகள், உரிமைகளுக்காக தேசிய முன்னணியில் முன்பே பங்கு பெற்றோம்! இன்றும் தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கிறோம்!

ஆனால் தேசியவாதிகள் எனத் தங்களைக் கூறிக் கொள்வோர் - ஒருமைப்பாட்டுக்கு உதாரண புருஷர்கள் தாங்கள் மட்டுமே என்று தமுக்கடிப்போர் - அந்தத் தேசிய வெளிச்சத்திலிருந்து குறுகிய கண்ணோட்டக் கும்மிருட்டுக்குள் ஓடி ஒளிந்துகொள்வதும், ஒருமைப்பாட்டை வெறும் உதட்டளவு உச்சரிப்பாக அர்த்தமில்லாத மந்திரச் சொல்லாக ஆக்கிவிடுவதும் - அரசியல் ஆதாயங்களுக்காக நடைபெறும் நிகழ்வுகளாக ஆகிவிட்டன.

எமர்ஜன்சியை எதிர்த்தோம் என்பதற்காக - ஜெயப்பிரகாஷ் நாராயண் தலைமையில் அணிவகுத்தோம் என்பதற்காக - தி.மு.க.

ஆட்சியை 1976 ஜனவரியில் கலைத்துவிட்டு - அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அவர்கள், சென்னைக் கடற்கரையில் கூட்டம் போட்டு அப்போது அறிவித்ததுதான் சென்னைக்குக் கிருஷ்ணா தண்ணீர் வழங்கும் தலைநகர் மக்களின் தாகம் தீர்க்கும் திட்டம்.

ஆனால் அதற்கான ஒப்பந்தம் ஆந்திரத்தில் என்.டி. ராமராவ் அவர்களும், தமிழகத்தில் திரு. எம்.ஜி.ஆர். அவர்களும் முதலமைச்சர்களாக இருந்தபோது 1983ல்தான் கையெழுத்திடப்பட்டது. அதாவது, அறிவிக்கப்பட்டு ஏழாண்டுக்குப் பிறகு!

பின்னர் அந்தத் திட்டம் வேகமாக நடைமுறைக்கு வரவில்லை. இடையே சென்னாரெட்டி அவர்களும், விஜயபாஸ்கர ரெட்டி அவர்களும், ஜனார்த்தன ரெட்டி அவர்களும் ஆந்திர முதலமைச்சர்களாக இருந்தபோதும், அந்த திட்டத்திற்கான பேச்சுவார்த்தைகள் பல்வேறு மட்டங்களில் நடைபெற்று, மெல்ல மெல்ல வளர்ந்து வந்தது.

1983ல் ஏற்பட்ட ஒப்பந்தத்தை எவ்வளவு காலம் தாமதப்படுத்துவது என்ற பேச்சு எழுந்தபோதெல்லாம், ஆந்திர முதலமைச்சர்களாக இருந்தவர்கள், அவர்கள் காங்கிரசாராயிருந்த போதிலும் - சென்னைக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தில் அக்கறையுடையவர்களாகவே விளங்கினர்.

ஆந்திர முதல்வராக திரு. சந்திரபாபு நாடு பொறுப்பேற்ற பிறகு, தமிழக அரசின் சார்பில் மேலும் விரிவான வாதங்கள் நடைபெற்று சென்னைக்குக் குடிதண்ணீர் 1996ல் திறந்து விடப்பட்டது. எனினும், இயற்கையின் காரணமாக சில இடையூறுகள் ஏற்பட்டு, அனைத்தும் சரி செய்யப்பட்டு கிருஷ்ணா தண்ணீர் ஒப்பந்தப்படி சென்னைக்குக் கிடைத்திட வழிவகை காணப்பட்டது.

1976ல் அறிவிக்கப்பட்டு 1996ல் இருபது ஆண்டுகளுக்குப்பின், ஒப்பந்தப்படி சென்னைக்கு வழங்கப்படும் குடி தண்ணீரைக்கூட தடுத்திடும் அளவுக்கு ஆந்திர மாநிலத்தில் சில அரசியல் தலைவர்களின் ஒருமைப்பாட்டு தத்துவமும், தேசிய உணர்வும் ஓங்கி உயர்ந்திருப்பது (?) கண்டு உள்ளபடியே வேதனைப்படுகிறேன். ஆந்திர காங்கிரசார் சென்னைக்கு வரும் குடிதண்ணீரைத் தடுக்கும் போராட்டத்தை நடத்துவதற்கு

தங்களின் ஒப்புதல் உண்டா என்று கேட்டு காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களுக்குக்கூட தொலைநகல் (Fax) கடிதமொன்று அனுப்பியிருக்கிறேன்.

1983ல் இந்திரா அம்மையார் காலத்தில், கிருஷ்ணா தண்ணீர் குறித்து தமிழகமும், ஆந்திரமும் செய்து கொண்ட ஒப்பந்தம் பற்றிய விளக்கத்தை நமது பொதுப் பணித்துறை அமைச்சர் தம்பி துரைமுருகன் ஓர் அறிக்கை வாயிலாக தெரிவித்துள்ளதை நீ படித்திருப்பாய் - சென்னைக்குக் குடிநீர் வழங்குவது என் கடமை - சென்னையில் வாழ்ந்து, சென்னைத் தண்ணீர் குடித்து வளர்ந்த நான், நன்றி மறக்கமாட்டேன் என்று மறைந்த நண்பர் என்.டி.ராமராவ் பலமுறை சொன்னதையும் மறந்திருக்க மாட்டாய்!

ஏறத்தாழ எழுநூறு கோடி ரூபாய் செலவில் கிருஷ்ணா தண்ணீரைக் கொண்டு வந்து, மாநகரில் அதனை விநியோகிப்பதற்காக மட்டும் சுமார் முந்நூறு கோடி ரூபாய்க்கு மேல் செலவிட்டுக் கொண்டுள்ள தமிழக அரசு, ஆந்திரத்துக் காங்கிரஸ் நண்பர்களின் அரசியல் ரீதியான கிளர்ச்சி கண்டு இன்னமும், அமைதியும், பொறுமையும் கடைப்பிடிக்கவே விரும்புகிறது.

ஆனாலும் இந்தக் கடிதம் எழுதி முடித்தபோது, எனது அன்பு நண்பர் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அவர்கள், தொலைபேசி மூலம் என்னைத் தொடர்பு கொண்டு, தடைக் கற்களைத் தகர்த்து, தலைநகர் சென்னையின் தாகம் தீர்த்திட தண்ணீர் வருகிறது என்று நம்பிக்கை தெரிவித்து என்னை மகிழ வைத்துள்ளார்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(12-07-1999)

2445. தொண்டு தொடர்வோம்; வென்று காட்டுவோம்!

உடன்பிறப்பே,

கடந்த ஜூன் 25 ஆம் தேதியன்று வேண்டுகோள் விடுத்து, ஜூலை 13 ஆம் தேதிக்குள் மொத்தம் பதினெட்டே நாட்களில் கார்கில் போர் வீரர் நிவாரண நிதிக்கு பதினைந்து கோடி ரூபாய் சேர்ந்து விட்டதையும், மேலும் மேலும் சேர்ந்து கொண்டிருப்பதையும் எண்ணிப் பார்க்கும்போது ஏற்படுகின்ற தெம்பும் - நாடாளுமன்றத் தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்டது மட்டுமல்ல, தமிழகத்தில் செப்டம்பர் முதல் வாரத்திலேயே தேர்தல் ஆரம்பமாகிவிடுகிறது என்ற அறிவிப்பும் ஏற்படுத்துகின்ற உத்வேகமும் கலந்து இந்தக் கடிதத்தை உனக்கு எழுதுகிறேன்.

நீயும், உன் போன்ற உடன்பிறப்புகளும் என்னைவிட இன்னும் பரபரப்பாக இருப்பீர்கள் என்று எனக்குத் தெரியும். நேற்று சென்னையில், தம்பி கவிஞர் வைரமுத்துவின் பெய்யெனப் பெய்யும் மழை என்ற நூலினை வெளியிட்டேன். விமரிசையான விழா ஒன்றில்!

இந்தக் கழகத்தின் கண்மணியாக - ரத்த நாளமாக - இதயத்துடிப்பாக - இயங்கும் சுவாசமாக விளங்கும் உடன்பிறப்பாகிய நீதான் பெய் என்று கூறியவுடன் பெய்கின்ற மழையாகவும் - வீசு எனச் சொன்னவுடன் வீசுகின்ற புயலாகவும் இருக்கின்றாயே! அதையும் நினைத்துக்கொண்டே அமர்ந்திருந்தேன் அந்த நூல் வெளியீட்டு விழா மேடையில்! ஆனால் அதை ஒலிபெருக்கியின் முன்னால் வெளிப்படுத்திடவில்லை - காரணம், ஓர் இலக்கிய விழா நிகழ்ச்சியினை இலக்கிய விழா நிகழ்ச்சியாகவே நடத்திட வேண்டும் என்று நான் மெத்தவும் அக்கறை கொண்டவன் என்பதுதான்!

தேர்தல் வரப்போகிறது என்று வாரங்களையும், மாதங்களையும் நகர்த்திக் கொண்டிருந்த நம் முன்னால் இப்போது

தேர்தல் வந்தேவிட்டது. தோழமைக் கட்சிகளுடன் விவாதித்து தொகுதிப் பங்கீடுகளை வரையறுக்க வேண்டிய பணி ஒரு கட்டம்! பின்னர் நாற்பது தொகுதிகளிலும் நாமும், தோழமைக் கட்சிகளின் வேட்பாளர்களும் நின்றாலும், நாற்பதிலும் நாமேதான் நிற்கிறோம் என்ற தெளிவான உணர்வுடன் தேர்தல் பணியாற்றிடத் திட்டங்கள் வகுத்துக் கொள்ள வேண்டியது மற்றொரு கட்டம்! அடுத்து தேர்தல் களத்தில் நமது அணியின் மாபெரும் வெற்றிக்குப் பகலிரவு எனப் பாராது பாடுபட்டுழைக்கவேண்டியது இன்னொரு முக்கியமான கட்டம்!

இந்தக் கட்டங்கள் பற்றியெல்லாம் வருகிற 18ந் தேதி ஞாயிறன்று மாவட்டக் கழகச் செயலாளர்களுடனும், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்களுடனும் விவாதித்து முடிவெடுக்க முனைந்துள்ளோம். எந்தத் தேர்தலாயினும் நமது கொள்கை விளக்க அணியினர் கலந்துகொள்ளும் கூட்டங்களும், அவற்றில் எடுத்து வைக்கப்படும் கருத்துகளும், அதற்கென வகுத்துக்கொள்ளும் பாணியும் தரம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் - நமது அணிக்கு உரம் சேர்ப்பதாக அமைதல் வேண்டும் என்பதில் எப்போதுமே நான் மிகுந்த விழிப்புணர்வுடன் இருப்பேன் என்பதை என் உடன்பிறப்புகள் எவரும் மறந்திருக்க மாட்டீர்கள்!

அதிலும் இந்தத் தேர்தலில், நமது மேடைகளில் ஒலிக்கும் சொற்றொடர் ஒவ்வொன்றும் - ஏன்? சொற்களே கூட ஒவ்வொன்றும் - அரசியல் பண்பாடு எனும் வளையத்தைக் கடந்து சென்றுவிடக் கூடாது.

ஏன் தெரிகிறதா? இரண்டொரு மாதங்களுக்கு முன்பு வரையில் ஒரே அணியில் உறவாடி மகிழ்ந்து - ஒரே மேடையில் முழக்கமிட்டு - ஒரே களத்தில் நின்றவர்கள், அவரவர்க்குரிய சூழ்நிலை காரணமாக வெவ்வேறு அணியில் இருந்திட வேண்டியவர்களாகி விட்டோம்! எனவே பழகியது, பேசியது, செயல்பட்டது, நட்புறவு கொண்டிருந்தது அனைத்துமே நீரில் விழுந்த பனிக்கட்டியாக - நெருப்பில் பட்ட பஞ்சுப் பொதியாக ஆகிவிடுவதுதான் முறையென்று வாதிடும் வக்கிர புத்தி படைத்தவனல்ல நான்! நீயும் அப்படி ஆகிவிட மாட்டாய் - ஆகவும் கூடாது என்று அன்பாக ஆணையிடும் பொறுப்பை உன்போன்றோர் எனக்கு அளித்திருக்கிறீர்கள்!

தோழமையுடன் இருந்து இன்று தொலைவில் இருப்போர் நம்மைப்போல் சிந்திக்கிறார்களோ அல்லது எவரேனும் சிலர் நம்மை நிந்திக்கிறார்களோ! அதுபற்றிக் கவலை கொள்ளாமல், நமது அணி வென்றிட - நாம் என்னென்ன கருத்துக்களை மக்களிடம் எடுத்துப்போக வேண்டும், எந்தெந்தச் செய்திகளை மக்களுக்குச் சொல்ல வேண்டும் என்பதில் மட்டுமே உரிய கவனத்தை முறையாகச் செலுத்திட வேண்டும்.

எதிர் அணி தோற்கடிக்கப்பட வேண்டும் என்பதற்கு நாம் தொடுத்திடும் கணைகளை விட - நமது அணி வென்றிடவும், நமது அணியின் சார்பில் மத்தியில் ஆட்சி அமைந்திடவும், நமது நாட்டுக் கோடானு கோடி மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக ஒளிவிடும் வாஜ்பாய் அவர்கள், மீண்டும் பிரதமராக அமர்ந்திடவும் நாம் தொகுத்திடும் காரணங்களே முதலிடத்தைப் பிடித்திட வேண்டும்.

தம்முடன் இல்லையே என்று நம்மீது நமது பழைய தோழமைக் கட்சிகளுக்குக் கோபம்கூட இருக்கலாம். ஆனால், அந்தக் கோபத்தைத் தமிழ்நாட்டு நலன் என்ற பொதுப் பிரச்சினைகளில்கூடக் காட்டி மௌனம் சாதிப்பார்கள் என்று நான் நினைக்கவே இல்லை.

ஏறத்தாழ எழுநூறு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட செலவில், இருபதாண்டு காலமாகக் கிடப்பிலே போடப்பட்டு, மெல்ல மெல்ல நகர்ந்து கழக ஆட்சி எடுத்த அயராத முயற்சியினால் இறுதியாக, இரண்டு ஆண்டுக் காலமாகச் சென்னை மாநகர் மக்களின் தாகத்தைத் தீர்த்திட ஒப்பந்தப்படி ஆந்திர அரசு திறந்து விட்டு - அந்தத் தவணை முறைப்படி வந்துகொண்டிருந்த கிருஷ்ணா நதிக் குடிநீரைக்கூட, ஆந்திரக் காங்கிரசார் அணையாக நின்று தடுத்து நிறுத்தியபோது நமது பழைய நண்பர்கள் யாரும் துடித்தெழுந்து ஒரு மென்மையான கண்டனம் கூட தெரிவிக்கவில்லையே என்பது எனக்கு வேதனைதான்! அதைவிட வேதனை தமிழ்நாட்டுக் காங்கிரசார், ஆந்திரக் காங்கிரசாரின் அத்துமீறிய போராட்டத்துக்கு ஆதரவளித்த செயலாகும்.

ஆந்திர மண்ணில் பிறந்த திரையுலகத் தாரகை விஜயசாந்திகூட மக்களின் அன்றாடப் பிரச்சினையான குடிநீர்ப்பிரச்சினையை, தங்களின் சுயநலத்திற்காக ஆந்திர மாநில

காங்கிரசார் அரசியல் ஆக்குவது வன்மையாக கண்டிக்கத்தக்கது என்றும், அன்னை இந்திரா காந்தி அறிவித்த திட்டத்தையே எதிர்க்கும் காங்கிரசாரின் அரசியல் அநாகரிகத்தை கண்டித்துப் போராட்டம் நடத்துவேன் என்றும் அறிக்கை விடுத்திருப்பதையும், நமது ஊர் அரசியல் தலைவர்கள் அமைதியாக இருந்ததையும் ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியவில்லைதான்.

எப்படியோ நமது கழக அரசின் சார்பிலும் - தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள தோழமைக் கட்சிகள் சார்பிலும் விடுத்த கண்டனங்கள், எடுத்த முயற்சிகள், ஆந்திர முதல்வர் காட்டிய உறுதிப்பாடு இவற்றின் காரணமாக, சென்னைக்குக் குடிநீர்ப் பஞ்சம் வராமல் தடுக்கப் பட்டுள்ளது. அந்த மகிழ்ச்சியும்கூட உனக்கு மடல் எழுதும் வேளையில் சேர்ந்துகொண்டது.

உடன்பிறப்பே, கார்கில் களத்தில் கிடைத்துள்ள வெற்றியைக் காட்டிலும் மகிழ்ச்சியும் - பூரிப்பும் தரக்கூடியது, இந்தியத் திருநாட்டு மக்கள் ஓரணியில் நின்று காட்டியதுதான்!

இந்தத் திருநாட்டின் ஜனநாயக தீபத்தை தூக்கிப் பிடிக்கும் போட்டியை, போர் எனக் கருதாமல் - அவ்விதம் ஆக்கிடாமல், ஒரு புனிதக் கடமையெனக் கொண்டு தொண்டு தொடர்வோம்! வென்று காட்டுவோம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(15-07-1999)

2446. நஞ்சு தூவி மதநல்லிணக்கம் மாய்ப்பதா?

உடன்பிறப்பே,

ஆயிரம் முறை யோசித்த பிறகே இந்தக் கடிதம் எழுதுகிறேன். முதலில் எழுதத் தேவையில்லையென்ற முடிவுக்கே வந்தேன். இறுதியாகத்தான், எழுதுவது தவிர்க்க முடியாதது என்ற நிலை. நீயும்கூட, இது தேவையா என்றுதான் கேட்பாய். ஆனால் நம் மீது, வேண்டுமென்றே திட்டமிட்டு இளவல் வீரமணி அவர்களால் வீசப்பட்டுள்ள பழிக்கு விளக்கம் அளிக்க வேண்டியது எனது கடமையும், பொறுப்பும் ஆகிவிட்டது என்பதுடன், இப்போது மேடைகளிலும், ஏடுகளிலும் தொடர்ந்து மதநல்லிணக்கம் சமூக ஒற்றுமை என்று பேசி வருகின்றவர்களின் சொல்லுக்கும், செயலுக்கும் இடையிலான முரண்பாடு எத்தகையது என்பதையும் எடுத்துக் காட்டுகிற வாய்ப்பாகவும் இக்கடிதம் பயன்படும் என்பதால் எழுத நேரிட்டுள்ளது என்பதும்தான் தெளிவான உண்மையாகும்.

மதவாதம் - மதச்சார்பின்மை - மத நல்லிணக்கம் - சமூகங்களுக்கிடையே ஒற்றுமை - இவை, இன்றைக்கு அரசியல் மேடைகளில் மிக அதிகமாகப் புழங்குகின்ற சொற்களாகிவிட்டன. இந்தச் சொற்களைப் பயன்படுத்துகிறவர்கள், நாம், அவர்களது அணியில் இல்லாத காரணத்தால் - அல்லது அவர்கள் நமது அணியில் இருக்க இயலாத காரணத்தால் - நம்மை மதவாதிகள் என்றும், மதவாதிகளுக்கு துணை போகிறவர்கள் என்றும் குறிப்பாக, சிறுபான்மைச் சமுதாயங்களான இஸ்லாமியர் - கிறிஸ்துவர்களுக்கெதிரான அணியை அமைத்திருக்கிறோம் என்றும் குற்றம்சாட்டி வருகிறார்கள்.

குற்றம் சாட்டுவது மட்டுமின்றி, இன்றைக்கு உருவாகியுள்ள அ.தி.மு.க. அணியில் உள்ள கட்சியினரை அழைத்து மதவாத எதிர்ப்பு மாநாடுகளையும் தொடர்ந்து பல இடங்களில் நடத்தி, அவற்றில் முக்கியமாக தி.மு.கழகத்தைத் திட்டித் தீர்ப்பதைத் தலையாய கடனாகக் கொண்டிருப்பது திராவிடர் கழகத்தின் ஒரு பெரும் அரசியல் சமுதாயப் பணியாக ஆக்கியிருக்கிறது என்பதை உன் போன்றோர் அறிவீர்கள். அந்த மாநாடுகளில் மார்க்சிஸ்டு மற்றும் இந்திய கம்யூனிஸ்டு கட்சிகளின் தலைவர்களும் பங்கு பெறுகிறார்கள். அவர்களும் சேர்ந்து கொண்டு என்னையும், நமது கழகத்தையும் பற்றி எத்துணை அவதூறான செய்திகளை அள்ளிக் கொட்டுகிறார்கள் என்பதற்கு அந்தச் செய்திகள் வெளி வந்துள்ள ஏடுகளே என்னிடம் ஆதாரங்களாக உள்ளன.

இவை இங்ஙனமிருக்க இவற்றுக்கிடையே இளவல் வீரமணி அவர்கள், திடீரென ஒரு அறிக்கை வெளியிட்டு அந்த அறிக்கை திராவிடர் கழகத்தின் அதிகார பூர்வமான விடுதலை இதழில் முதல் பக்கத்தில் அச்சாகியுள்ளது.

தந்தை பெரியார் கொள்கைக்கு விரோதி தி.மு.க. என்பதுதான் அவரது அறிக்கைக்கு தரப்பட்டுள்ள தலைப்பு. அந்த அறிக்கையின் சில பகுதிகளை மட்டும் இம் மடலில் தருகிறேன்.

> “திராவிடர் கழகத்தின் சார்பில் கடந்த ஜூன் மாதம் 12 ஆம் தேதி சேலத்தில் மதவாதக் கண்டன மாநாடு நடைபெற்றது. மாநாட்டையொட்டி கழகத் தோழர்கள் பகுத்தறிவுப் பிரச்சாரத் தட்டிகளை வைத்திருந்தனர். பகுத்தறிவுப் பாசறையில் வந்ததாகப் பறைசாற்றும் தமிழக முதலமைச்சர், அந்தத் தட்டியின் வாசகங்கள் மத நம்பிக்கை உள்ளவர்களின் மனதைப் புண்படுத்துவதாகப் பிரச்சாரம் செய்தார். சிறுபான்மையினர் - இன்றைய தி.மு.க.வுக்கு எதிரணியில் ஆவேசமாகத் திரண்டு நிற்கும் நிலையில், சிறுபான்மையினரின் மத உணர்வை திராவிடர் கழகம் புண்படுத்துகிறது என்று திசை திருப்ப இதனைப் பயன்படுத்த முயற்சித்தார். முதல்வரின் உள்நோக்கத்தை சிறுபான்மை மக்கள் புரிந்துகொண்டனர்.

இதனால் ஆத்திரம் கொண்ட முதலமைச்சர் ஒரு மாதத்துக்குப் பின், நேற்று திடீரென்று சேலம் கழகப் பொறுப்பாளர்களைக் கைது செய்ய உத்தரவிட்டார்.

பகுத்தறிவுப் பாசறையில் புடம் போட்டதாகத் தம்மைச் சொல்லிக் கொள்ளும் முதலமைச்சர், இந்தச் செய்கையின் மூலம் எந்தப் பக்கம் இருக்கிறார் என்பதைத் தனக்குத்தானே பிரகடனப்படுத்திக் கொண்டுள்ளார்"

வீரமணி அவர்களின் இந்த அறிக்கை சேலம் திராவிடர் கழகத்தினர் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பதற்காக வெளியிடப்பட்டது. இதில் நான், தி.மு.கழகம் பெரியாரின் கொள்கைக்கு விரோதி என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இது 15.7.99 விடுதலையில் வெளியான அறிக்கை. இதற்கு முன்பு 10.6.99 அன்றைய தேதியிட்ட விடுதலையில் ஆளுவது தி.மு.க.வா? அல்லது பா.ஜ.க.வா? என்று கேட்டு கொட்டை எழுத்துத் தலைப்புச் செய்தியொன்று வெளிவந்தது.

அந்தச் செய்தியையும் உன் போன்றோர் படித்துப் பார்ப்பது நல்லது. அந்தச் செய்தி வருமாறு :-

சேலத்தில் நடைபெறவிருக்கும் மதவாத எதிர்ப்பு மாநாட்டையொட்டி, திராவிடர் கழகத்தால் வைக்கப் பட்டிருந்த கொள்கைப் பிரச்சாரத் தட்டிகளை, இந்து முன்னணி மாவட்டத் தலைவரின் புகாரின் அடிப்படையில் சேலம் காவல்துறை அகற்றியுள்ளது.

12.6.99 அன்று சேலத்தில் திராவிடர் கழகத்தின் சார்பில் மதவாத எதிர்ப்பு மாநாடு நடைபெற உள்ளது.

மாநாட்டில் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி, அ.இ.அ.தி.மு.க. இலக்கிய அணிச் செயலாளர் புலவர் புலமைப்பித்தன் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு), ஜனதாதளம், ராஷ்டிரீய ஜனதா தளம், தமிழ்ப் பாட்டாளி மக்கள் கழகம் ஆகிய கட்சிகளைச் சேர்ந்தோர் உரையாற்ற இருக்கிறார்கள்.

மாநாட்டையொட்டி சேலம் மாநகரம் முழுவதும் நல்ல அளவுப் பிரச்சார ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. கொள்கை முழக்கத் தட்டிகளும் வைக்கப்பட்டிருந்தன.

கா894.8116
கருணா.மு

திமுக அறக்கட்டளை பொதுநிதி நூல் நிலையம் சென்னை

தாதகாப்பட்டி கேட்டிலிருந்து மாநாடு நடைபெறும் நேரு கலையரங்கம் வரை 400 தட்டிகள் வைக்கப்பட்டிருந்தன.

பொதுமக்கள் மத்தியில், குறிப்பாகச் சிறுபான்மையினர் மத்தியில் இந்த மாநாட்டுக்குப் பெரும் வரவேற்பு இருந்துவரும் நிலையில், இதனைக் கண்டு ஆத்திரப்பட்ட இந்து முன்னணியினர் ஏதாவது குந்தகம் விளைவிக்க வேண்டும் என்கிற நோக்கத்தோடு, கொள்கை முழக்கத் தட்டிகளில் மனம் புண்படும்படி எழுதி இருக்கிறார்கள் என்று, ஏதோ சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லி புகார் மனு ஒன்றை காவல்துறைக்குக் கொடுத்துள்ளனர். இந்து முன்னணி மாவட்டத் தலைவர் மல்லிகார்ச்சுனன் என்பவர் அந்தப் புகாரைக் கொடுத்துள்ளார்.

தி.மு.க.வுடன் பாரதீய ஜனதா கட்சி கூட்டணி வைத்துக்கொண்டு விட்டதல்லவா?

திராவிடர் கழகப் பொறுப்பாளர்களைக் கூப்பிட்டுக் கூடக் கேட்காமல், விசாரிக்காமல், தட்டிகளையெல்லாம் காவல்துறை அகற்றியதோடு அல்லாமல், வழக்கு ஒன்றையும் பதிவு செய்துள்ளதாம்.

உடன்பிறப்பே, நானூறு தட்டிகள் வைக்கப்பட்டிருந்தன, அவை அனைத்தும் மதவாத எதிர்ப்புக்கான கொள்கைப் பிரச்சாரத் தட்டிகள், அவற்றை தி.மு.க. அரசு அகற்றிவிட்டது என்று வீராவேசமாகக் கண்டனச் செய்தி வெளியிட்டவுடன், அந்தக் கொள்கைப் பிரச்சாரத் தட்டிகள் எப்படிப்பட்டவை என்பதை மதுரையில் செய்தியாளர்கள் என்னைச் சந்தித்தபோது நான் பொது மக்களுக்கு வெளியிட வேண்டிய அவசியத்துக்கு ஆளானேன்.

மதவாத மோதுதல்கள் கூடாதென்றும், மத நல்லிணக்கம் வேண்டுமென்றும், சமூகங்களுக்கிடையே ஒற்றுமையைக் கட்டிக்காக்க வேண்டுமென்றும், சிறுபான்மை சமுதாய மக்களுக்குப் பாதுகாப்புக் கவசமாக இருக்க வேண்டுமென்றும் முழங்குவதற்காக மாநாடு நடத்துகிறவர்கள் கொள்கைப் பிரச்சாரம் என்ற பெயரால் ஒட்டிய சுவரொட்டிகளும் - வைத்திருந்த தட்டிகளும் - மதங்களுக்கிடையே ஒற்றுமையையும்,

நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தக் கூடியவைகள்தானா? அல்லது கசப்பையும், கலவரத்தையும் தூண்டக் கூடியவைகளா? என்பதைத் தயவு செய்து சற்றே சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

இதோ! அந்த மாநாட்டுக்காக வைக்கப்பட்டுக் காவல் துறையினரால் அகற்றப்பட்டு சிலர் கைது செய்யப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள நிலைக்குக் காரணமான அந்தத் தட்டிகளில் உள்ள வாசகங்கள் சிலவற்றைக் காண்க!

* ஏசுவின் பிறப்பை டாக்டர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா?
* பார்ப்பான், பாதிரி, முல்லா ஆகியோர் பரலோகத் தபால்காரர்களா?
* 786 என்பது அல்லாவின் தொலைபேசி எண்களா?
* பரிசுத்த ஆவியில் இட்லி வேகுமா?

இப்படித்தான் சேலம் நகரிலும், நகரைச் சுற்றிலும் நானூறுக்கு மேற்பட்ட தட்டிகள் கட்டப்பட்டிருந்தன. அவற்றை அகற்றியதைக் கண்டித்து இளவல் வீரமணி அவர்கள் மட்டுமல்ல, அ.தி.மு.க. அவைத் தலைவர் நாவலர் அவர்களுக்கும் சீற்றம் பிறந்து, அவரும் திருவள்ளூரில் 1.7.99 அன்று நடைபெற்ற திராவிடர் கழகத்தின் மதவாதக் கண்டன மாநாட்டில் கலந்து கொண்டு, பெரியாரின் இத்தகைய கருத்தமைந்த தட்டிகளை அகற்றச் செய்த கருணாநிதி பெரியாரின் சீடரா? என்று கேட்டு இடியொலி முழங்கியிருக்கிறார். அதுவும் விடுதலையில் வெளிவந்துள்ள செய்திதான்.

எனக்கொரு சந்தேகம்! நமது பேராசிரியர் அவர்கள் அண்மையில் சில நாட்களுக்கு முன்பு திருப்பூர் கூட்டத்தில் வினா எழுப்பியது மாதிரி இப்போது வீரமணி அவர்களும், நாவலர் அவர்களும் பேசுவது போலவும், தட்டிகள் வைத்தது தவறல்ல என்பது போலவும் பெரியார் அவர்கள், முஸ்லிம்களையும், கிறிஸ்துவர்களையும் புண்படுத்திப் பேசியிருக்கிறாரா என்பதுதான் அந்தச் சந்தேகம்! பெரியார் இப்படி சிறுபான்மை சமுதாயத்தினரை மனம் நோகப் பேசியதில்லையென்று பேராசிரியர் அவர்கள் திருப்பூரில் விளக்கமளித்து, சில வினாக்களையும் தொடுத்திருக்கிறார். பேராசிரியரின் திருப்பூர் பேச்சில் ஒரு பகுதி இதோ :-

இந்த நேரத்திலேதான் திராவிடர் கழகத்தினுடைய பொதுச்செயலாளர் வீரமணி அவர்கள், ஏதோ நமக்கு அவ்வப்போது அறிவுரை சொல்கிறார். அவர் ரொம்ப பெரிய மனுஷன். ஏதோ தவறிப் போய் இளைஞராக இருக்கிறாரே தவிர, அவர், பெரியார் சொன்னதை நாங்கள் திரும்பச் சொல்கிறோம், சொன்னதைச் சொல்கிறோம். கலைஞர் அவர்கள் அதை எதிர்க்கலாமா? ஏற்க மறுக்கலாமா? அதற்காக காவல்துறை நடவடிக்கை எடுக்கலாமா? என்று கேட்கிறார். இப்போது இந்த முஸ்லிம்கள் போடுகிற 786 என்பது போல ஒரு அடையாளம் போடுகிறார்களே, அதை என்றைக்கு பெரியார் கேலி பண்ணினார்? சொல்ல முடியுமா? பெரியார், நபிகள் நாயகம் விழாக்களுக்கெல்லாம் எத்தனை இடத்தில் போய் இஸ்லாம் மக்கள் மனம் மகிழும்படி பேசினார்.

இஸ்லாமியர்களை ஆதரிக்கிறபோது கூட பெரியார் சொன்ன ஒரேயொரு வார்த்தை, என்னுடைய மதத்திலே இருக்கிற சாதி வேற்றுமை எல்லாம் உங்களிடத்திலே சட்டப்படி இல்லை. நபிகள் நாயகம் எல்லாரும் ஒன்றுதான் என்று சொன்னார். அதற்காகத்தான் உங்களை ஆதரிக்கிறேன் என்று சொன்னார். நீங்கள் அந்த எண் போட்டு முஸ்லிம்களுடைய மனம் புண்படும்படி அல்லாவுக்கு டெலிபோன் செய்கிற நம்பரா இது, அல்லாவுடைய நம்பரா இது என்று கேட்கிறீர்களே! சிறுபான்மை மக்களை மதிக்கிற அழகா இது? அல்லாவுக்கு டெலிபோன் நெம்பர் எதுக்குத் தேவை? ஆண்டவன் என்று இருந்தால் எங்கேயும் இருக்கிறான். நீ எழுதுகிற பேனாவிலேயும் இருக்கிறான். இஸ்லாம் கொள்கைப்படி ஆண்டவன் அனைத்தும் வல்லவன், எங்கும் நிறைந்தவன், எல்லாம் தெரிந்தவன் என்பது அவர்களுடைய கொள்கை. அவருக்கு டெலிபோன் நெம்பரா என்று கேட்பது முஸ்லிம்களை கேவலப்படுத்துவதில்லையா?

அதேமாதிரி ஏசுநாதரைப் பற்றி கேலி பண்ணி அவருடைய பரிசுத்த ஆவி வந்தால் இட்லி வேகுமா? என்று தட்டி

வைக்கிறாய்! உன் இட்லி வேகிறதற்கு ஜெயலலிதா ஆவி வந்தால் கூட போதுமே. அதற்கு ஏசுநாதருடைய ஆவி எதற்கு? ஜெயலலிதாவை சொல்லித்தானே உமது வீட்டிலே இட்லியே வேகுது. நாங்கள் ஏதோ சிறுபான்மை மக்களிடத்திலே மாறுபாடு கொண்டு பாரதிய ஜனதா கட்சியை அணுகவில்லை. சிறுபான்மை மக்களுக்கு ஆதரவாக பி.ஜே.பி.யை எங்களால் மாற்ற முடியும் என்ற நம்பிக்கையோடுதான் இந்த அணியிலே நாம் சேருகிறோம்.

நஞ்சு தூவி மதநல்லிணக்கம் மாய்க்கும் செயலைக் கண்டித்து பேராசிரியர், இவ்வாறு வழங்கியுள்ள விளக்கத்தைத் தொடர்ந்து, வேறு சில விளக்கங்களையும் நான் தர விரும்புகிறேன்.

கசப்பு உணர்வும், கலவர உணர்வும் தூண்டிவிடப்பட, துணை நிற்கக் கூடிய தட்டிகளை மதவாத எதிர்ப்பு என்ற பெயரால் வைத்துவிட்டு அதை அகற்றி, வழக்கும் தொடுத்தால் - பெரியார் சிலையை நாகையில் களங்கப்படுத்தினார்களே, இந்த ஆட்சியில் நடவடிக்கை உண்டா? ஒரத்தநாட்டில் பெரியார் சிலையை களங்கப்படுத்தினார்களே; இந்த ஆட்சி நடவடிக்கை எடுத்ததா? இப்போது மட்டும் தட்டி வைத்ததற்கு நடவடிக்கையா? என்று திரு. வீரமணி அவர்கள் அறிக்கை விட்டுக் கேட்டுள்ளார்.

18.4.98 அன்று நாகையில் பெரியார் சிலையின் கைத்தடி சேதப்படுத்தப்பட்டது. அதன் தொடர்பாக மணி என்பவர் கைது செய்யப்பட்டு, வழக்கு தொடர்ந்து, குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு இன்னமும் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஒரத்தநாட்டில் பெரியார் சிலையை களங்கப்படுத்தியது தொடர்பாக, தீவிரப் புலன் விசாரணைக்குப் பின் குப்பன் என்பவர் 2.6.99 அன்று கைது செய்யப்பட்டு வழக்கு நடைபெறுகிறது.

இந்த உண்மைகளை மறைத்து திராவிடர் கழகத் தோழர்களை உசுப்பிவிட்டு, தி.மு.கழகத்தின் மீது வெறுப்பு கொள்ளச் செய்யலாம் என்று காணும் கனவு நிச்சயமாகப் பலிக்கப் போவதில்லை என்பதை மட்டும் நான் உறுதிபடக் கூற வேண்டியவனாக இருக்கிறேன்.

பெரியாரின் கொள்கைகளுக்கு நாம் விரோதிகளாம்! வேதனை தரும் குற்றச்சாட்டை நம் மீது சுமத்துவதில் அவருக்கு ஒரு இன்பம் என்றால், தாராளமாகச் சுமத்தட்டும்! அதையும் தாங்கிக் கொள்கிறேன்.

பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் - அன்னை நாகம்மையார் பெயரால் - அன்னை மணியம்மையார் பெயரால் முறையே மகளிர் கல்வித் திட்டங்கள் மற்றும் ஆதரவற்ற சிறார்க்கான திட்டங்கள்! பெரியார் கொள்கை போற்றும் எத்தனையோ சாதனைகள்! சட்டங்கள்! அந்தத் தி.மு.கழகம் பெரியாரின் கொள்கைக்கு விரோதி என்கிறார் வீரமணி அவர்கள்!

பெரியார் வலியுறுத்திய சமுதாயப் புரட்சியான சுயமரியாதைத் திருமணங்களைச் சட்டபூர்வமானதாக ஆக்கினார் அண்ணா - அந்த அண்ணா உருவாக்கிய தி.மு.கழகம் பெரியாரின் கொள்கைக்கு விரோதி என்கிறார்!

1929-ல் செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் பெரியார் நிறைவேற்றிய பெண்களுக்கு சொத்தில் சமபங்கு என்ற தீர்மானத்தை 1989-ல் சட்டமாக்கியவன் நான். என் தலைமையில் உள்ள தி.மு.கழகம் பெரியாரின் கொள்கைக்கு விரோதி என்கிறார்!

உள்ளாட்சிப் பொறுப்பு - வேலை வாய்ப்பு - இவற்றில் மகளிர்க்கு உரிய 33 விழுக்காடு ஒதுக்கீடு என்ற பெரியாரின் கொள்கையை நடைமுறைப்படுத்திய கழக அரசும், கழகமும் பெரியாரின் கொள்கைக்கு விரோதி என்கிறார்!

கலப்புத் திருமணங்கள், கைம்பெண் திருமணங்கள் என்ற பெரியாரின் கொள்கையை ஊக்கப்படுத்திட திட்டம் வகுத்துச் செயல்படும் கழக அரசும் - கழகமும் பெரியாரின் கொள்கைக்கு விரோதியென்கிறார்!

ஆலயங்களில் அறங்காவலர் குழுக்களில், கட்டாயம் ஆதி திராவிடர் ஒருவர் இருந்திட வேண்டுமென்று விதி வகுத்திட்ட கழக அரசும், கழகமும் பெரியாரின் கொள்கைக்கு விரோதியென்கிறார்.

நீதிக்கட்சி காலத்தில் உதயமான இடஒதுக்கீட்டுக்கு ஏற்பட்ட ஆபத்தை விலக்கிடப் போரிட்டு வென்ற பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர் வழி நின்று, மிகவும் பிற்படுத்தப்பட்டோர்க்கும் தனி ஒதுக்கீடு வழங்கி சமூக நீதி காத்து

வருகிற - இன்னமும் அதற்காகக் குரல் கொடுத்து வருகிற கழக அரசும், கழகமும் பெரியாரின் கொள்கைக்கு விரோதி என்கிறார்!

விரோதமாக இருந்த கால கட்டத்திலேகூட, பெரியாருக்கு விசுவாசிகளாக இருந்தவர்கள் நாம்! விசுவாசிகளாக நடித்தவர்கள்தான் உண்மையிலேயே அன்றும், இன்றும் பெரியாருக்கே விரோதிகள்! விரிக்கிற் பெருகும்! வேண்டாமென இத்துடன் நிறுத்துகிறேன்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(17-07-1999)

2447. உரிமையும் உண்டு; உரிய வழியும் உண்டு!

உடன்பிறப்பே,

அகஇருள் நீக்கி ஒளியேற்றும் பணியை, பத்திரிகைகள் செய்திட வேண்டும் என்ற எண்ணத்துடன், காரிருள் அகத்தில் நல்ல கதிரொளி நீதான்! பேரறிவாளர் நெஞ்சில் பிறந்த பத்திரிகைப் பெண்ணே! என்று பாவேந்தர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதை தீட்டினார்.

அவரது எண்ணத்தை நூற்றுக்கு ஐம்பது விழுக்காடு அளவிலாவது ஏடுகள் செய்திடுமானால் மகிழ்ச்சிதான்! வரவேற்று வாழ்த்திடவும் நம்மைப் பொறுத்தவரையில் தயக்கமில்லை! தயாராகவே இருக்கிறோம்!

ஆனால் உண்மை நிலை என்ன? ஒரு காலத்தில் ஏதாவது ஒரு செய்தி காதில் விழுந்தால், அப்படியா? இந்தச் செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறதா? என்று கேட்டு, ஆம், வந்திருக்கிறது என்று எடுத்துக்காட்டினால், ஓ! அப்படியானால் உண்மையாகத்தானிருக்கும் என்ற நம்பிக்கையை நாட்டுப்புறத்து மக்கள்கூடப் பெற்றார்கள். ஆனால் இன்றைக்கு அந்த மக்கள், பத்திரிகையில் ஒரு செய்தி என்றால், ஊம்கூம்! பத்திரிகைச் செய்திதானே - அப்படியானால் தீர விசாரித்துத்தான் உண்மையைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கூறுகிற அளவுக்கு வியாபாரத்தை மட்டும் நோக்கமாகக் கொண்ட ஏடுகள் சில போட்டி போட்டுக்கொண்டு பொய்களை மூலதனமாக்கி சந்தைக்கு வரத் தொடங்கிவிட்டன.

இதனால் சமுதாயத்திற்கு ஏற்படுகிற இழப்பு என்னவென்றால், அந்த ஏடுகளில் வருகிற உண்மையான செய்திகளால் வெளிப்படுத்தப்பட வேண்டிய ஊழல்கள், மோசடிகள், சமூக விரோத நடவடிக்கைகள்கூட, அதே ஏடுகளில் வெளியிடப்படுகிற

முற்றிலும் கற்பனையான பொய்ச் செய்திகளால் அடிபட்டுப் போய்விடுகின்றன.

இந்தக் கருத்தை இன்றைக்குத்தான் என்று இல்லாமல் - எத்தனையோ முறை பத்திரிகை சம்பந்தமான விழாக்களில் ஆட்சிப் பொறுப்பில் இல்லாத கால கட்டங்களிலும் - ஆட்சிப் பொறுப்பில் இருந்திடும் கால கட்டங்களிலும் நான் எடுத்துரைத்து அது ஏடுகளிலும் வெளி வந்திருக்கிறது.

நம்மைப் பற்றி ஒரு தவறான செய்தி ஒரு இதழில் வருவதாக வைத்துக்கொள்வோம் - அதுகுறித்து அந்த இதழ் ஆசிரியர் அல்லது உரிமையாளருடன் தொடர்புகொண்டு உண்மை நிலையை உரைத்தால் அல்லது மடல் வாயிலாகத் தெரிவித்தால், அதனை ஒரு திருத்தமாக அந்த இதழில் வெளியிடுகிறவர்களும் உண்டு. அந்தச் செயலைப் பாராட்டாமல் இருக்க முடியாது. ஏற்கனவே நாங்கள் வெளியிட்டது வெளியிட்டதுதான், அதனை உண்மையல்ல என்று தெரிந்த பிறகும் திருத்தம் எதுவும் வெளியிட மாட்டோம் என்று விடாப்பிடியாக இருப்பவர்களும் உண்டு. இந்த நிலையில் அந்தச் செய்திகளால் பாதிக்கப்படுபவர்கள் தங்கள் நிலையைத் தெளிவுபடுத்திட நீதிமன்றங்களுக்குச் செல்வதைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விடுகிறது.

தனிப்பட்ட ஒருவரோ - அல்லது ஓர் அரசோ - அல்லது ஒரு நிறுவனமோ - சட்ட ரீதியான நடவடிக்கைகளில் ஈடுபட்டு நியாயத்தை நிலை நாட்டுவதற்கு மாறாக, வன்முறைச் செயல்களின் வாயிலாக அந்த ஏடுகளின் உரிமையாளர்களை அல்லது அலுவலாளர்களை தண்டிக்கலாமென முற்படுவது பத்திரிகை சுதந்திரத்தில் அக்கறையுள்ள எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

அதனால்தான் சொல்லுகிறேன்! இயன்ற வரையில் எந்தவொரு ஏடானாலும், தவறானதும் பொய்யானதுமான தகவல்களைத் தரும்போது, சம்பந்தப்பட்டவர்கள் அந்த ஏடுகளைத் தொடர்புகொண்டு விளக்கமளிப்பது நல்லது. அந்த ஏடுகள் அதனை அலட்சியப்படுத்திவிட்டு, அவற்றின் போக்கிலேயே போகுமானால் நீதிமன்றங்களில் அவற்றைச் சட்டப்படி சந்திக்க முனைவதில் எந்தத் தவறுமில்லை. அதற்காக பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்படுவதாக எவராலும் கூற முடியாது. கூறினால் அது பெரும் தவறான காரியமாகும்.

அண்மையில் ஒரு நாளேட்டில் அமைச்சர் வீராசாமி குறித்து - மின் வாரியத் தலைவர் மாற்றப்பட்டது தொடர்பாக ஒரு தவறான செய்தி வந்தது. உடனே அவர் அந்த தினசரி இதழுக்கு மறுப்பு விளக்கம் எழுதி அனுப்பினார். அந்த இதழ் அதனைப் பிரசுரித்து உண்மையைத் தெளிவுபடுத்தியது.

முன்னாள் தலைமைச் செயலாளர் திரு. நம்பியார் அவர்கள், இன்னமும் தமிழக அரசின் ஆலோசகராக இருப்பதாகவும் - அவர் வலியுறுத்தித்தான் திருமதி. சாந்த ஷீலா நாயர் அவர்களை உள்துறைச் செயலாளராக நியமித்ததாகவும் ஒரு பிரபல வார இதழில் ஒரு கட்டுரை வெளிவந்தது. உடனே நான் அந்த வார இதழ் ஆசிரியருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு - திரு. நம்பியார் அவர்கள் தலைமைச் செயலாளர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு - அரசின் ஆலோசகர் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவில்லையென்றும், எனவே தாங்கள் வெளியிட்ட செய்திக்கு அடிப்படையே இல்லையென்றும் தெரிவித்தேன். அதைக் கனிவுடன் கேட்டுக் கொண்ட அந்த நண்பர் அடுத்த வார இதழிலேயே அந்தத் தவற்றினைத் திருத்தி வெளியிட்டுவிட்டார்.

இதுபோன்ற முயற்சிகளை மேற்கொள்ளாமலும் - அல்லது சட்ட ரீதியாக இதுபோன்ற பிரச்சினைகளை நீதிமன்ற வாயிலாக அணுகாமலும் - கடந்த காலத்து அ.தி.மு.க. ஆட்சியில் தராசு அலுவலகத்தில் தாக்குதலும், இரு ஊழியர்கள் கொலையும் நடைபெற்றதை நாடறியும்.

உரிமைப் பிரச்சினைக்காக முரசொலி செல்வம் கூண்டில் ஏற்றப்பட்டதும் - சுனில் என்ற நிருபரைக் கைது செய்யாமல் விட மாட்டேன் என்று அன்றைய சபாநாயகர் சூளுரை மேற்கொண்டதுமான செயல்களைக்கூட, பத்திரிகைச் சுதந்திரத்தின் மீது விடப்பட்ட அறைகூவல் என்று விமர்சிக்காமல் இருந்துவிடலாம் - சட்டப்பேரவையின் நடவடிக்கையென்று விட்டு விடலாம். ஆனால் நக்கீரன் ஏடுகள், ஊருக்கு ஊர் ஆளுங்கட்சியினரால் கொளுத்தப்பட்டதையும் - சூறையாடப்பட்டதையும் - அந்த ஏடு அச்சான அலுவலகம் தாக்கப்பட்டு, அச்சக உரிமையாளர் மரண முகப்புக்கே தள்ளப்பட்டதையும், எழுத்தாளர்கள் பலரை உருவாக்கிய ஆசிரியர் சாவி அவர்கள், அவரது ஏட்டில் வெளிவந்த ஒரு கவர்ச்சிப் படத்திற்காகக் கைது செய்யப்பட்டு லாக் அப்பில்

வைக்கப்பட்டதையும் - அப்போது எத்தனை கட்சித்தலைவர்கள் கண்டித்தனர் என்று தெரியாது. நாம் நிச்சயமாகக் கண்டித்துக் குரல் கொடுத்துள்ளோம்.

இப்போதுகூட இந்த ஆட்சியில், கும்பகோணத்தில் நக்கீரன் நிருபர் மீது நகராட்சி சிப்பந்தியொருவர் கொடுத்த புகாரின் மீது அந்த நிருபர் கைது செய்யப்பட்டு, உடனே விடுவிக்கப்பட்டார் எனினும், கைது செய்யப்பட்டு அவர் கைவிலங்கிடப்பட்டார் என்ற செய்தி குறித்து உண்மை அறிந்திட நியாயமான விசாரணை நடக்க வேண்டுமென்பதற்காக, இன்ஸ்பெக்டர் உள்ளிட்ட போலீஸ் அதிகாரிகள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இச்செயல் பத்திரிகை சுதந்திரத்தின்மீது இந்த அரசுக்குள்ள அக்கறையைப் புலப்படுத்துவதாகும்.

இந்துக்கள், இஸ்லாமியர், கிறித்தவர் - மனத்தைப் புண்படுத்தும் வாசகங்கள் அடங்கிய தட்டிகளை மதவாதக் கண்டன மாநாட்டையொட்டி, நூற்றுக்கணக்கான இடங்களில் வைத்தனர் என்பதற்காக திராவிடர் கழகத்தினர் சிலர் சேலத்தில் கைது செய்யப்பட்டதுடன், விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது கை விலங்கு இடப்பட்டனர் என்பதற்காக, அச்செயலை வன்மையாகக் கண்டித்து சேலம் காவல்துறை ஆணையாளர், கைவிலங்கிட்ட அந்தக் காவலர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளார்.

எழுத்து சுதந்திரம் - பத்திரிகை சுதந்திரம் - இவற்றை துஷ்பிரயோகம் செய்யும்போது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்போதுகூட, மனித உரிமைக்கு விரோதமாக எல்லைமீறிச் செயல்படுவதற்குக் காவலர்கள் எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதற்கு இந்த அரசு மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கைகள் தக்க சான்றுகளாகும்.

ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருக்கும் நானும், 1942ஆம் ஆண்டு முதல் ஒரு பத்திரிகைக்காரன் என்கின்ற உரிமையுடன்தான் பத்திரிகைக்காரர்களிடம் பழகி வருகிறேன்.

சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற நகரங்களில் பத்திரிகைக்காரர்களுக்கான குடியிருப்புகள் வழங்கியதும், பத்திரிகையாளர்கள் குடும்பப் பாதுகாப்பு நீதி மற்றும் ஓய்வூதியம் போன்ற நன்மைகளைச் செய்ததும் - இவற்றுக்கெல்லாம்

மேலாக, பத்திரிகையாளர்களை மரியாதையுடன் மதிப்பதும் இந்த ஆட்சியில்தான் என்பதை விவரிக்கத் தேவையில்லை.

* குறைகளைச் சுட்டிக் காட்டவும் - குற்றங்களைக் கண்டித்து எழுதவும் - என்றைக்கும் எந்தவொரு ஏட்டுக்கும் உரிமை உண்டு!

* உண்மையெனில் திருத்திக் கொள்ளவும் - இல்லையெனில் விளக்கமளிக்கவும் - திட்டமிட்டு அவதூறு கூறினால், சட்டரீதியாக சந்திக்கவும் ஜனநாயகத்தில் எல்லோருக்கும் உரிய வழி உண்டு!

எனவே உரிமை எனினும், உரிய வழி எனினும் இரண்டுமே மனச்சாட்சிக்கு மாறாக பயன்படுத்தப்படக்கூடாது!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(19-07-1999)

2448. மனம் திறந்து எழுதினேன் இந்த மடல்!

உடன்பிறப்பே,

இந்த மாத இறுதிக்குள்ளாக தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெறும் கட்சிகளுக்கிடையிலான தொகுதிப் பங்கீடுகள் - கட்சிகளின் வேட்பாளர்கள், நிற்கும் தொகுதிகள், பெயர்கள் அறிவிப்பு போன்ற நடைமுறைகள் முற்றுப்பெற்று வெற்றிமுகடு நோக்கி வீறு நடைபோடத் தொடங்கிவிடுவோம்.

நமது மாவட்டக் கழகச் செயலாளர்களையும், இளைஞர் அணியின் மாவட்ட அமைப்பாளர்களையும், அமைச்சர்களையும் நாற்பது தொகுதிகளின் நிலவரங்கள் பற்றி விசாரித்து அறிந்த நிகழ்ச்சியைக் கூட, சில ஏடுகள் இப்போதே வேட்பாளர் தேர்வு நடைபெற்று விட்டதாகக் கற்பனைக் கதைகள் கட்டி வெளியிட்டிருக்கின்றன. அந்தச் செய்திகளுக்கு உன்னைப் போன்ற உடன்பிறப்புகள் எவ்வளவு மதிப்பு கொடுப்பீர்கள் என்று எனக்குத் தெரியும்.

ஒரு சில இதழாளர்கள், இத்தகைய கூட்டங்களைப் பற்றி நம்மவரிலேயே சிலரிடம் செய்திகளைச் சேகரிக்க முனைந்து - அதற்காக ஓரிருவரை ஏற்பாடும் செய்தும் வைத்திருக்கிறார்கள். அந்த ஓரிருவர், தம்மிடம் செய்தி சேகரிக்க வருபவர்களிடம் வேண்டுமென்றே எதையாவது இட்டுக்கட்டி - ஆதாயத்தை இழக்க மனமின்றி அதிகாரபூர்வமற்றதும், ஆதாரமற்றதுமான கயிறுகளைத் திரித்து கதை ஜோடித்து அனுப்பி வைத்து விடுகிறார்கள். அவர்களை அடையாளம் கண்டுகொண்டுள்ள நானும், சபாஷ்! அனுபவி ராஜா அனுபவி! என்று மனத்துக்குள்ளாக அந்த அகடவிகட சாமர்த்தியசாலிகளை வாழ்த்திக் கொண்டுதானிருக்கிறேன்.

யானை வேட்டைக்குச் செல்லும்போது பூனையின் மியா மியா ஒலி கேட்டு மிரண்டு விடவோ, புலி வேட்டைக்குப் போகும்போது

எலிகளின் கீச்சுமூச்சு சத்தம் கேட்டு கிலி கொண்டு நிற்கவோ முடியுமா? அப்படி மிரண்டாலோ-நின்றாலோ-குறிக்கோளில் சிரத்தையில்லாதவர்கள், கோழைத்தனம் குடி கொண்டவர்கள் என்ற பழிப்புக்குத்தானே ஆளாகித் தீரவேண்டும்.

எனவே உடன்பிறப்பே, எவர் என்ன சொன்னாலும், எத்தகைய செய்திகள் வெளியிடப்பட்டாலும் அவை பொய்யாக இருப்பினும், ஒரு வேளை உண்மையாகவே இருப்பினும் நமது கழகத்திற்கு அறிஞர் அண்ணா வழங்கியுள்ள கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் மந்திரச் சொற்களை மறந்துவிடாமல் செயலாற்றிடச் சிங்கக் குட்டிகளென சிலிர்த்தெழுந்திடுக என்று உன்னையும், உன்போன்ற என் உயிரினுமேலான உடன்பிறப்புகளையும் அழைக்கிறேன்.

மனிதனாக வாழ வேண்டும் என்பது உயர்ந்த தத்துவ போதனைதான் - அதை நான் மறுக்கவில்லை! ஆனால் மனிதனுக்குப் பல குணங்கள் உண்டு - பகை பாராட்டுதல், பழிவாங்க முனைதல், அதிகமாக ஆசைப்படுதல், அசூயை கொள்ளுதல் இத்தகைய கேடான குணங்களுடன், சாதிப்பற்று, மதவெறி, பணத்தாசை, பதவிப்பித்து போன்ற கீழான குணங்களும் உண்டு! இவற்றையெல்லாம், எப்படியோ எந்தவொரு அளவிலாவது கொண்டுள்ள மனிதனிடமிருந்து தன்னைவேறுபடுத்திக்கொண்டு கழக உடன்பிறப்புகள் திகழ்ந்திட வேண்டுமென்பதுதான் என் தீராத ஆசை!

அப்படித் திகழ்ந்திட வேண்டுமெனத் தீர்மானித்துக் கொண்டு, காலமெல்லாம் உழைத்துக் கொண்டிருக்கும் கழகத்தின் கண்மணிகளை நான் நேரில் சந்தித்து வாழ்த்திப் பாராட்ட வாய்ப்புகள் குறைவாகக் கிடைத்த போதிலும், அவர்கள் எங்கிருந்தாலும் நெஞ்சார வாழ்த்திக் கொண்டுதானிருக்கிறேன். பாராட்டிக் கொண்டுதானிருக்கிறேன். அத்தகைய உடன்பிறப்புகளை ஆம் - ஒற்றுமையுடன் செயல்பட உறுதியெடுத்துக் கொண்டுள்ள உடன்பிறப்புகளை நிறைந்த நம்பிக்கையுடன் அழைக்கிறேன்.

நடைபெறுகின்ற நாடாளுமன்றத் தேர்தல் சர்வாதிகாரக் குணம் கொண்டோரிடமிருந்து ஜனநாயகத்தைப் பாதுகாத்திட நடைபெறும் போராட்டம் - அரசியல் நாகரிகம், பண்பாடுகளுக்கு விரோதமாக, மரபுகளை, நெறிமுறைகளை மண்ணில் போட்டு

புதைத்துக் கொண்டிருக்கும் மதோன்மத்தர்களிடமிருந்து இந்த நாட்டு மக்களை விடுவிப்பதற்காக நடைபெறும் போராட்டம் - உத்தம வேடம் போட்டுக்கொண்டு ஊர்நாறும் ஊழல்களை, தொட்டில் முதல் சுடுகாட்டுக் கொட்டகை வரையில் செய்து முடித்துவிட்டு, மீண்டும் தமிழ்நாட்டையே கூறுபோட்டு விற்றுவிடத் துடித்துக் கொண்டிருக்கும் லஞ்ச லாவண்யப் பேய் பிசாசுகளை, இனியும் தேட்டை போடவிடாமல் விரட்டியடிக்கும் போராட்டம்!

இந்தப் போராட்டத்தில் வெற்றி நமது தேசிய ஜனநாயக கூட்டணிக்கே எனினும், வெற்றிமாலை இப்போதே நமது கழுத்தில் வந்து விழுந்துவிட்டதாகக் கற்பனை செய்து கொண்டு மெத்தனமாக இருந்துவிடக் கூடாது என்பதற்காகவே இந்தக் கடிதம் எழுதுகிறேன்.

வாக்குகள் வலியவந்து நமது வேட்பாளர்களுக்குக் குவியப் போகின்றன என்றும் - அதற்கு அறிகுறிதான் ஆங்காங்கு கூடிடும் அலைமோதும் மக்கள் கூட்டங்கள் என்றும் - நீயும், நானும் கருதிக்கொண்டு மந்தமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்தால், பிறகு நான் உனக்கு, ஆரம்பப் பள்ளியில் படித்த ஆமையும், முயலும் கதையைத்தான் ஞாபகப்படுத்த வேண்டியிருக்கும்.

அதுவும் முயலாக இருக்கின்ற நம்மை வெல்ல நினைக்கும் இந்த ஆமை, சாதாரண ஆமை அல்ல!

- பொங்கும் பொறாமை!
- அரசியல் நாகரிகம் அறியாமை
- நீதிக்குத் தலைவணங்காமை
- நேர்மையான நிர்வாகம் நடத்திட விரும்பாமை!
- ஒரு துளியும் உண்மை பேசாமை!
- ஊழல் புரிய அஞ்சாமை

இந்த ஆமையுடன் நடத்தும் போட்டிப் பந்தயத்தில், துள்ளிக் குதித்துத் துடிதுடிப்புக் காட்டி, ஆர்வங் கொந்தளிக்க ஆர்ப்பாட்டம் செய்து, வெற்றி வெற்றி என்ற அதீத நம்பிக்கையில் அலட்சியமாகச் சிறு தூக்கம் போடலாமென நினைத்தாலும், அது இந்திய நாட்டுக்குப் பெருந்துக்கமாக மாறிவிடும் என்பதை நமது

அணியினர் மறந்து விடக்கூடாது. நமது அணியின் வெற்றிக்காக சுற்றிச் சுழலும் உன்னைப் போன்ற என் உயிரினுமேலான அன்பு உடன்பிறப்புகளும் மறந்துவிடலாகாது!

ஒவ்வொரு தொகுதியிலும், இப்போதே பட்டிதொட்டி முதல் பட்டினக்கரை வரையில் உள்ள வாக்காளர்களை நாள்தோறும் சந்தித்து வாக்கு கேட்கும் பணியில் ஈடுபடுவது என்பது, எறும்புகளையும், தேனீக்களையும் மிஞ்சக் கூடிய அளவுக்கு சுறுசுறுப்புடன் அமைந்திடல் வேண்டும்.

நாம் கறந்து வைத்த பாலை நாமே கவிழ்த்துவிட்டது போலவோ - வெண்ணெய் திரளும்போது தாழியை உடைத்துவிட்டது போலவோ - எல்லாம் நன்மையாகக் கூடி வரும்போது, அவசரம், ஆர்ப்பாட்டம், பரபரப்பு, பதற்றம், ஒற்றுமையின்மை, உள்ளொன்று புறமொன்று எனும் தன்மை - இவற்றுக்கு எள்முனையளவு இடம் தந்தாலும் காரியம் கெட்டுவிடும் என்பதை உணர்ந்து கடமையாற்றிட வேண்டுகிறேன்.

சற்று மனம்திறந்து எழுதியுள்ளதற்குக் காரணமே, என் உணர்வுகளில் நீயும் ஒன்றிக் கலந்து, உண்மையாகவே உழைத்து ஒரு பெரும் வெற்றியை இந்த அணிக்கு தேடித் தருவதின் மூலம் இந்தியாவையும், தமிழகத்தையும் காப்பாற்றுவாய் என்பதற்காகவே!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(22-07-1999)

2449. சாகாத சரித்திரம் - சாகடிக்க முடியாத சரித்திரம்!

உடன்பிறப்பே,

நாட்டுப்பற்றிலும், நாட்டுக்காக உயிர்த்தியாகம் செய்வதிலும், வாழ்வு சீரழிவது பற்றிக் கவலைப்படாமல் சிறைச் சாலைகளில் பல ஆண்டுகள் வாடுவதிலும் இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்தையும் விட, ஒரு நூல் இழைகூடத் தாழ்வானதல்ல நமது தமிழ்நாடு என்பதை வரலாறு, வான்முட்ட முழங்கிக் கொண்டிருக்கிறது.

தேசக்கொடி காத்திட உயிர் கொடுத்த திருப்பூர் குமரனும் - செக்கிழுத்துச் சித்திரவதைக்குள்ளான செம்மல் சிதம்பரனாரும் - தென்னாப்பிரிக்காவில் கறுப்பர் விடுதலைப் போராட்டத்தில் அண்ணல் காந்தியுடன் அணிவகுத்து, அந்த மண்ணில் புதைந்திருக்கும் தில்லையாடி வள்ளியம்மையும் - ஆஷ்துரையின் ஆவியைப் போக்கித் தன்னையும் மாய்த்துக் கொண்ட வீரவாஞ்சியும் - பல்லாண்டு காலம் சிறையில் தவமிருந்தவர்களான மூதறிஞர் ராஜாஜியும் - கர்மவீரராம் பெரும் தலைவர் காமராஜரும் - வைக்கம் வீரர் தந்தை பெரியாரும் - தமிழ்த் தென்றல் திரு.வி.க.வும் - வைராக்கிய நெஞ்சினர் வரதராஜுலு நாயுடுவும் - இளைமைப் பருவத்திலேயே செயிண்ட் ஜார்ஜ் கோட்டையில் பிரிட்டிஷ் கொடியை அகற்றி, தேசியக் கொடியேற்றிட அந்த நெடுங் கம்பத்தில் ஏறிய ஆரியா என்ற பாஷ்யமும் - இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். அவ்வளவு பெரிய தியாகிகளின் பட்டியல் - வீரத் தலைவர்களின் பட்டியல் - தீரத்தளபதிகளின் பட்டியல் இந்திய நாட்டு விடுதலைப் போர்க்காலத்தில் தமிழகத்தில் உண்டு என்பதுதான் என்றைக்கும் சாகாத சரித்திரம். எவராலும் சாக அடிக்க முடியாத சரித்திரம்.

ஆனால் திராவிட இயக்கத்தின் பெயரால் நாம், தியாக வரலாற்றில் கூட தெற்குப் பகுதி தேய்கிறது என்ற உண்மையை

எடுத்துரைத்துப் பெருங்கண்டனக் குரல் எழுப்பிய பிறகுதான், தெற்குப் பகுதியில் திட்டமிட்டு மறைக்கப்பட்ட நமது வரலாறு வைரவரிகளில் மின்னிடத் தொடங்கியது.

அதிலும்கூட காங்கிரஸ் கட்சியின் நூற்றாண்டு விழா மலரில், பட்டாபி சீத்தாராமய்யாவின் படத்தைப் போட்டுக் காமராசர் என்று அதன் கீழே அச்சடித்துக் கொடுத்த வேதனையான வேடிக்கைகூட, விபரம் புரிந்தவர்களாலேயே நடத்தப்பட்ட விஷம வேலையாக விளங்கியதைக் கண்டு, அதிர்ச்சியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள தமிழ்நாட்டு அரசியல்வாதிகளுக்குப் பல நாட்கள் தேவைப்பட்டதை நாமறிவோம்.

இதுபோன்ற பாரபட்சம் - பாராமுகம் - இரண்டாம் நிலை அல்லது மூன்றாம் நிலையில், பொதுவாக மாநிலங்களையும் குறிப்பாக நமது தமிழகத்தையும், வைத்து எடைபோடும் செயல் மத்தியில் உள்ள அரசியல்வாதிகளின் பொழுதுபோக்காகவே இருந்ததற்கு முக்கிய காரணமாக அமைந்தது இந்திய தேசிய காங்கிரஸ்தான் என்பதை அரசியலில் அரிச்சுவடி மட்டும் பயின்றவர்கள் கூட தெளிவாகவே அறிவார்கள்.

மத்தியில் சுட்டிக்காட்டப்பட்ட அந்த ஆதிக்கக் கோட்டையை உடைத்து - மாநிலங்களின் உரிமைகளும் - அவற்றுக்கு அதிகாரப்பரவல் தேவை என்ற கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சூழ்நிலை சில ஆண்டுக்காலமாகவே உருவாகியிருக்கிறது. அதாவது மத்தியில் ஒரு கட்சியின் ஆட்சி என்ற ஏகபோக நிலை தகர்க்கப்பட்டு, மாநிலக் கட்சிகளின் பிரதிநிதித்துவம் வாய்ந்த கூட்டணி ஆட்சிகள், ஏற்பட்டன. இந்த சமயத்தில் கூட்டணி ஆட்சிக்கும் கூட்டாட்சிக்குமுள்ள வேறுபாட்டையும் மறந்துவிடக் கூடாது.

மாநிலத்தில் சுயாட்சியும், மத்தியில் கூட்டாட்சியும் என்ற நமது முழக்கத்திற்குரிய பொருளும் - மாநிலக் கட்சிகளின் கூட்டணி ஆட்சி என்பதற்குரிய பொருளும் வேறு வேறானவை என்ற போதிலும், இதனை கூட்டாட்சி தத்துவத்தை அடைவதற்கான ஒரு படிக்கல் என்று வைத்துக்கொள்ளலாம்.

ஆனால் இந்தக் கூட்டணி ஆட்சிகள் நிலையான ஆட்சிகளாக நீடிக்க முடியாமல் இடையிடையே சில நிகழ்வுகள், அந்தக் கூட்டணியில் உள்ள கட்சிகளாலேயே ஏற்பட்டுள்ளன.

நிலையான ஆட்சிக்கு வாக்களியுங்கள் என்று கடந்த ஆண்டு கால தமிழக வாக்காளர்களிடம் உறுதியளித்து வெற்றி பெற்ற ஜெயலலிதாவின் அ.தி.மு.க., வெற்றி பெற்றவுடனேயே தமிழகத்தில் மிகப் பெரும்பான்மையுடன் நிலையான ஆட்சி நடத்தும் தி.மு.க. அரசைக் கலைத்திட வேண்டுமென்று தலைகீழாக நின்று வாஜ்பாய் அவர்களின் முன்னால் கடுந்தவம் புரிந்தது.

தன்மீதுள்ள ஊழல் வழக்குகளில் இருந்து தப்பித்திட தி.மு.க. அரசு கலைக்கப்பட்டாக வேண்டுமென்று துடியாய்த் துடித்து, அது நடைபெறாத காரணத்தால் - பா.ஜ.க. அரசைக் கவிழ்த்திட திருமதி சோனியாவின் துணையை நாடியது. இருவரும் இணைந்து நின்று, இன்னும் சிலரின் உதவியையும் பெற்றுக்கொண்டு வாஜ்பாய் அவர்களின் ஆட்சியைக் கவிழ்த்து ஓராண்டுக்குள்ளாக மீண்டும் ஒரு நாடாளுமன்றத் தேர்தலுக்கு வழிவகுத்துவிட்டனர்.

முழுமையான அதிகாரம் பெறாத காபந்து சர்க்காராக - இடைக்கால அரசின் பிரதமராக திரு. வாஜ்பாய் அவர்கள் பொறுப்பேற்றுள்ள இக்காலகட்டத்தை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நச்சு நினைப்புடன், பாகிஸ்தான் தீவிரவாதிகளின் ஊடுருவல் கார்கில் பகுதியில் மேலும் மேலும் முடுக்கிவிடப்பட்டது. பாரதிய ஜனதா மற்றுமுள்ள கூட்டணிக் கட்சிகளின் பொறுப்பு மிகுந்த நிர்வாகத்திறன் - இந்திய நாட்டு மக்கள் ஓரணியில் நின்ற கடமை உணர்வு, நாட்டுப்பற்று - இவற்றின் காரணமாக இந்தியத் திருநாடு இன்று வெற்றிச் சிகரத்தில் ஏறி நிற்கிறது.

இந்த வெற்றிக்கும், நமது தமிழ்நாடு பல வீரர்களின் உயிரையும், உதிரத்தையும் வழங்கிடத் தவறவில்லை. நாட்டு விடுதலைக்கு நமது தமிழகம் தியாகங்கள் பல புரிந்ததை இன்றைக்கும் தொடர்ந்து நினைவூட்டும் வண்ணம் இதோ...

1. மேஜர் எம். சரவணன், பீகார் ரெஜிமெண்ட், பீமநகர், திருச்சி.
2. நாயக் ஆர். காமராஜ், ஹெவி மோட்டார் ரெஜிமெண்ட், தஞ்சாவூர்.
3. சாப்பர் மா. ஜெயவேலு, இஞ்சினீயரிங் படைப்பிரிவு, திருவண்ணாமலை.

4. கன்னர் ந. பழனி, ராஷ்ட்ரீய ரைபிள் படைப்பிரிவு, திருவண்ணாமலை மாவட்டம்.

5. ப்ளைட் லெப்டினெண்ட் முகிலன், சிவகங்கை மாவட்டம்.

6. லெப்டினெண்ட் கர்னல் நடராஜ் விஜயராகவன், தாம்பரம்.

7. செந்தில், தேனி மாவட்டம்.

8. பாஸ்கரன், ஆய்வாளர், கூத்தூர் கிராமம், திருச்சி மாவட்டம்.

9. சபியுல்லா, காவேரிப்பட்டினம், தர்மபுரி மாவட்டம்.

10. சிப்பாய் அப்துல் சத்தார், குன்னூர், நீலகிரி மாவட்டம்.

ஆகிய வீரமறவர்கள் மண்ணில் புதைந்து இந்த மண்ணைக் காத்துள்ளனர்.

அதுமட்டுமா? இந்தியாவில் எந்த மாநிலமும் தந்திராத அளவுக்கு இங்கே எனது அன்பு வேண்டுகோளுக்கு மதிப்பளித்து, இந்திய ராணுவ வீரர்களின் மீது கொண்டுள்ள பற்றுக்கும் பாசத்துக்கும் அடையாளமாக, வலுவில் வந்து இதுவரை மிகக் குறுகிய காலத்திற்குள்ளாக இருபத்தி ஐந்து கோடி ரூபாய்க்கும் அதிகமாக நிதி வழங்கியிருக்கிறார்கள் நமது தமிழ்நாட்டு மக்கள் என்பது, என்றைக்கும் நாம் இந்த நாட்டுக்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் வழங்குவதற்கு தயாராக இருப்பவர்கள், அன்றும் சரி! இன்றும் சரி! இதுதான் நமது நிரந்தரமான நிலை என்பதை உலகிற்கு உணர்த்தும் உண்மையாகும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(23-07-1999)

2450. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கத்தான் செய்யும்!

உடன்பிறப்பே,

நவாப் தர்பார் ஒன்றில் நடைபெற்ற சுவைமிகுந்த சம்பவம் - சம்பவம் என்று கூறுவதை விட சமயோஜிதமாக வழங்கப்பட்ட தீர்ப்பு என்பதே மிகவும் பொருத்தமானதாகும்.

ஒரு வணிகரின் ஒட்டகம் காணாமற்போய்விட்டது. அது தானாகக் காணாமற் போகவில்லை அதைக் கடத்திக்கொண்டுபோய் பதுக்கி வைத்திருக்கிறார்கள். இந்த விஷயத்தில் எனக்கு இரண்டு பேர் மீது தான் சந்தேகம் என்று அந்த இருவரின் பெயரைக் குறிப்பிட்டு, அவ்வணிகர் நவாப் தர்பாரில் புகார் கொடுத்திருந்தார்.

குற்றம் சாட்டப்பட்ட இருவரையும் விசாரிப்பதற்காக தர்பாருக்கு அழைத்து வருமாறு நவாப் ஆணை பிறப்பித்திருந்தார். இருவரும் தர்பாரில் நவாப்புக்கு முன்பு நிறுத்தப்பட்டனர்.

வணிகர் தனது வழக்கைத் தர்பார் மண்டபத்தில் விரித்துரைத்தார்.

மன்னவனே! பாலைவனப் பயணம் முடிவுற்று நேற்றிரவு என் ஒட்டகத்தை வழக்கம்போலப் பாதுகாப்பான இடத்தில்தான் தங்க வைத்திருந்தேன். நள்ளிரவில் இந்தக் கள்வர்களில் ஒருவனோ அல்லது இருவருமே இணைந்தோ என் ஒட்டகத்தைக் கடத்திக்கொண்டு போயிருக்கின்றனர். பிரபு அவர்கள் உண்மை அறிந்து என் ஒட்டகத்தை மீட்டுத் தருவதுடன், கடத்தியவர்களுக்கும் கடுந்தண்டனை விதித்திட வேண்டுகிறேன்.

நவாப், அந்த வணிகரின் புகாரை ஏற்றுக்கொண்டு குற்றம் சாட்டப்பெற்ற இருவரிடமும், குடைந்து குடைந்து கேள்விக்கணைகளைத் தொடுத்தார்.

கொற்றவனே! நாங்கள் குற்றமற்றவர்கள் என்றே இருவரும் திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.

இருவரில் ஒருவர்தான் இந்தக் கடத்தலைச் செய்திருக்க வேண்டும் என்றார் அருகில் இருந்த அமைச்சர். அந்தப் பேர்வழி யார் என்று உம்மால் அனுமானிக்க முடியவில்லையா? என்று வினவினார் நவாப்! அமைச்சர் அவசரப்பட்டு யார் குற்றவாளி என்று உரைத்திடத் தயாராக இல்லை.

மன்னவா! இருவருமே மிகவும் திட்டவட்டமாக மறுக்கிறார்கள். பிடிவாதக்காரர்களாகவும் இருக்கிறார்கள். கடுமையான முறைகளைக் கையாண்டுதான் உண்மையை வரவழைக்க வேண்டும் என்று முடிவாகத் தெளிவு படுத்தினார் அமைச்சர்.

கடவுள் மீது சத்தியமாகச் சொல்லுங்கள்! நீங்கள் ஒட்டகத்தைக் கடத்தவில்லை என்கிறீர்களா? எங்கே பார்க்கலாம் கடவுள் ஆணையாகக் கூறுங்கள்!

நவாப், இப்படிக் கேட்டதும், ஒருக்கணம் கூடத் தாமதிக்காமல் அந்த இருவரும் ஆண்டவன் மீது ஆணையாகச் சொல்கிறோம் - எங்களுக்கும் ஒட்டகக் கடத்தலுக்கும் சம்பந்தமில்லை என்று ஒரே நேரத்தில், ஒரே குரலில் அந்தத் தர்பார் மண்டபம் அதிரக் கத்தினார்கள்.

இருவருமே இறைவன் மீது சத்தியம் செய்து இல்லை என்று மறுத்தபிறகு, நவாப்புக்கு வேறுவழியே தெரியவில்லை தீர்ப்புக்கூற!

சரி! நீங்கள் போகலாம் - நீவிர் இருவருமே கடவுள் மீது சத்தியம் செய்துள்ளீர்! யார் உண்மையில் குற்றவாளியோ அவரைக் கடவுள் தண்டிக்காமல் விடமாட்டார்! என்றுரைத்த நவாப், அவர்களைத் தர்பாரிலிருந்து வெளியேறுமாறு பணித்தார்.

இருவரும் மண்டியிட்டு நவாப்பை வணங்கியெழுந்து, அந்த மண்டபத்தைவிட்டு வெளியேறத் தொடங்கினர். திடுமென்று நவாப், அந்த இருவரும் சென்றிடும் திக்குநோக்கி சற்று உரத்த குரலில் ஓய்! ஒட்டகம் கடத்தியவரே! என்று கூப்பிட்டார்.

உடனே இருவரில் ஒருவன், உண்மையிலேயே ஒட்டகத்தைக் கடத்திய கயவன் - இவ்வளவு நேரம் நவாப்புக்கு எதிரே,

கடத்தவில்லையென்று கடவுள் மீது கூட சத்தியம் செய்தவன் - நவாப்பைத் திரும்பிப் பார்த்து விட்டான் அவனையுமறியாமல்!

குற்றவாளியை மிக எளிதாக - ஆனால் மிகத் திறமையாக - தனது சமயோஜித புத்திக் கூர்மையினால் கண்டுபிடித்துவிட்ட நவாப்பின் ஆற்றலை அந்தக் கொலுமண்டபத்தில் இருந்தோர் அனைவரும் மகிழ்ந்து பாராட்டினர். ஒட்டகக் கடத்தல்காரனுக்கு உரிய தண்டனை வழங்கப்பட்டு, கடத்தப்பட்ட ஒட்டகமும் வணிகரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தக் கதை ஏன் இப்போது? என்று நீ கேட்பாய்!

நேற்று நான் உனக்கு எழுதிய கடிதத்தில் யார் பெயரையும் குறிப்பிடாமல், எந்தக் கட்சியென்றும் சுட்டிக்காட்டாமல் நடைபெற இருக்கிற நாடாளுமன்றத் தேர்தலில் நமது அணியின் வெற்றிக்கு எத்தகைய அரும்பணியாற்றிட வேண்டுமெனக் குறிப்பிட்டிருந்தேன். நம்மை வெல்ல நினைக்கும் ஆமை, சாதாரண ஆமை அல்ல!

பொங்கும் பொறாமை!
அரசியல் நாகரீகம் அறியாமை!
நீதிக்குத் தலைவணங்காமை!
நியாயத்தை போற்றாமை!
நேர்மையான நிர்வாகம் நடத்திட விரும்பாமை!
ஒரு துளியும் உண்மை பேசாமை!
ஊழல் புரிய அஞ்சாமை!

இந்த ஆமையுடன் நடத்தும் போட்டிப் பந்தயத்தில், துள்ளிக் குதித்துத் துடிதுடிப்புக்காட்டி ஆர்வங் கொந்தளிக்க ஆர்ப்பாட்டம் செய்து, வெற்றி வெற்றி என்ற அதீத நம்பிக்கையில் அலட்சியமாகச் சிறு தூக்கம் போடலாமென நினைத்தாலும், அது இந்திய நாட்டுக்குப் பெருந்துக்கமாக மாறிவிடும் என்பதை நமது அணியினர் மறந்துவிடக் கூடாது. நமது அணியின் வெற்றிக்காக சுற்றிச் சுழலும் உன்னைப் போன்ற என் உயிரினுமேலான அன்பு உடன்பிறப்புகளும் மறந்துவிடலாகாது என்று எச்சரித்திருந்தேன்.

ஆமைகளைப் பற்றி நான் குறிப்பிட்டிருந்தது கண்டு யாருக்கும் வராத ஆத்திரம் செல்வி ஜெயலலிதாவுக்கு வந்து, ரௌத்திரகாரமான ஓர் அறிக்கையைக் கையிலேந்திக்கொண்டு என்னுடன் தெருச் சண்டைக்கே கிளம்பிவிட்டார்.

என் செய்வது? இப்படி அவர் கோரமாகக் கூத்தடிப்பதை நான் வீட்டுக்குள்ளிருந்தே ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்துச் சிரிக்கலாமே தவிர, நானும் அவர்கள் பாணியில் தெருவில் இறங்கிச் சண்டைபோட இயலுமா?

உடன்பிறப்பே, ஒட்டகம் கடத்தியவரே! என்று கூப்பிட்டதும், உண்மையிலேயே ஒட்டகம் கடத்தியவர் திரும்பிப் பார்த்து சிக்கிக் கொண்டதுபோல - ஆமைகள் எவை எவை என்று என் கடிதத்தில் நான் விளக்கியவுடன் அம்மையார் வெகுண்டெழுந்து ஒட்டகம் கடத்தியவனோடு தன்னையும் ஒப்பிட்டுக் கொண்டு உண்மையை வெளிப்படுத்தியதற்காக நாம் சிரிக்கத்தானே வேண்டியிருக்கிறது! குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கத்தானே செய்யும்!

ஓராயிரம் கோட்டைகட்டி உள்ளே பத்திரமாக ஒளித்து வைத்தாலும், அனைத்தையும் உடைத்துக்கொண்டு உண்மை வெளியே வந்துவிடும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(24-07-1999)

2451. எங்கே பகுத்தறிவு என்னும் பேரருவி பாய்ந்திடுமோ...

உடன்பிறப்பே,

சுழன்றடிக்கும் அரசியல் சூறாவளிக்கிடையே அமைதியாக அமர்ந்து கொண்டு கவிதைகளையோ, இலக்கியங்களையோ படிப்பதிலும் அவற்றில் நெஞ்சத்தைப் பறிகொடுப்பதிலும் எனக்கு ஒரு தனிச் சுகமே உண்டு. அந்தச் சுகத்தை உன் போன்ற உடன்பிறப்புகளுடன் பகிர்ந்து கொள்வதற்காகவே இந்தக் கடிதம்.

எங்கே மனத்தில் அச்சம் இல்லையோ, எங்கே தலையானது, நிமிர்ந்து நின்றிடுமோ, எங்கே அறிவு முடக்கப்பட்டு இல்லையோ, எங்கே குறுகிய மதில்கள் எழுப்பப்பெற்று இந்த உலகம் சீர்குலையவில்லையோ, எங்கே உண்மையின் ஆழத்திலிருந்து தூயசொற்கள் பீறிட்டுக் கிளம்பிடுமோ, எங்கே பகுத்தறிவு என்னும் பேரருவி, காய்ந்து சருகான பழக்கவழக்கமென்னும் கடும் வெப்பப் பாலை நிலத்தின் மண்ணுக்குள் மறையாமல் பாய்ந்திடுமோ, எங்கே உன் துணை வலிமையால் பரந்த சிந்தனை, செயல்களை நாடி இந்த நெஞ்சம் முன்னேறிச் சென்றிடுமோ, அந்த இனிய சொர்க்க வாழ்வு கண்டிட அருமைமிகு எந்நாடு விழித்தெழு தந்தையே! அருள் பொழிந்திடுவாயாக!

இவ்வாறு கவியரசர் தாகூர், பாடிய முறையீட்டுக் கவிதை கீதாஞ்சலியில் இடம்பெற்றுள்ளது. பகுத்தறிவுப் பேரருவி, பழக்க வழக்கமெனும் பாலைவனத்தில் பாய்ந்தோட வேண்டுமாம். அப்படிப் பெருகியோடும்போது அந்தத் தெளிந்த நீரை, பாலைவனத்து மணல் உறிஞ்சிவிடக் கூடாதாம். எனவே, மண்ணுக்குள் மறையாமல் அந்த நீர் பழமைப் பாலையைப் பகுத்தறிவுச் சோலையாக்க வேண்டுமாம். பகுத்தறிவுப் பிரச்சாரம், காட்டில் எரிந்த நிலவாக ஆகிவிடக்கூடாது என்பதிலே தாகூர் கொண்டுள்ள அக்கறையைத்தான் இந்த

வரிகள் தெளிவாக்குகின்றன. பாலைவனத்தில் ஓடுகின்ற தண்ணீரின் கதியும் அப்படித்தான் ஆகிவிடும். அதனால்தான் கவிஞர், மிக்க கவனத்தோடு கூறுகிறார், மண்ணுக்குள் தண்ணீர் மறைந்துவிடக்கூடாதென்று!

இங்கே பாலைவன மணல் என்பது யாரைக் குறிப்பிடுகிறது? மக்கள் சமுதாயத்தைத்தான்! அந்தச் சமுதாயத்தை வளமாக்கப் பாய்ந்துவரும் பகுத்தறிவு வெள்ளத்தை அந்தச் சமுதாயமே, தனக்கெனப் பயன்படுத்திக் கொள்ளாமல் வீணாக்கிவிடக் கூடாதல்லவா? அதனால்தான் ரவீந்திரர், எங்கே பகுத்தறிவு என்னும் பேரருவி, காய்ந்து சருகான பழக்க வழக்க மெனும் கடும் வெப்பப் பாலை நிலத்தில் மண்ணுக்குள் மறையாமல் பாய்ந்திடுமோ, என்று உருக்கமும் உணர்ச்சியும் இழையோடிட மிகுந்த முன் எச்சரிக்கையுடன் பாடுகிறார்.

“எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”

“எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”

எனும் குறட்பாக்கள் வழிநின்று சிந்தித்துச் செயல்படுவதே பகுத்தறிவின் பயனாகும். விஞ்ஞானத்தின் விரிவாக்கமும், அதன் விளைவாக மனிதன் வெண்ணிலாவுக்குப் பயணம் சென்று திரும்பியதுமான நிகழ்ச்சிகளை நடத்திக் கொண்டிருக்கிற உலகத்தில், இந்தச் சாதனைச் சரித்திரங்கள், எப்படிப் படைக்கப்படுகின்றன என்பது பற்றியே கவலைப்படாமல், அந்த விஞ்ஞானக் கருவிகளுக்குப் பொட்டிட்டு, பூ சூட்டி, சாம்பிராணி தூபம் காட்டிக்கொண்டிருக்கிற வேலையில் அல்லவா சிலர் வேகமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

விண்வெளி ஆராய்ச்சியில் வெளிநாடுகளைப் போலவே இந்தியநாடும் முன்னேறுகிறது எனக் கண்டு மகிழ்கிறோம். அதே நேரத்தில் கையை மூடித்திறந்தால் சிறியதோர் சிவலிங்கம் வருகிறது. அல்லது சிங்கப்பூர் கெடிகாரம் வருகிறது. குறைந்தபட்சம் குங்குமம் விபூதியாவது வருகிறது என்று மந்திர தந்திர மாயாவிகளின் காலில் விழுந்து கிடக்கிற மக்கள் கணக்கற்றோர் இருக்கிறார்களே! புதிய பக்தர்கள் புறப்படுகிறார்களே!

வறுமைக்கும், வாட்டத்திற்கும் காரணம் என்ன? இதற்கும் கிடைக்கும் பதில், விதி!

ஒருவன் வாழவும், ஒருவன் வாடவுமான நிலை இருப்பானேன்! அது தலையெழுத்து!

உயர் சாதிக்காரன் - தாழ்ந்த சாதிக்காரன் என்ற கேடு உலவிடுவானேன்? அதுவா? அது போன ஜன்மத்துப் பலன்!

இப்படிப்பட்ட ஆணவம் நிறைந்த பதில்கள், அறியாத மக்களின் உடலிலே, உள்ளத்திலே சவுக்கடிகளாக விழுந்து கொண்டிருக்கின்றன. அதைத் தடுத்து நிறுத்தியதுதான் பகுத்தறிவு! சாதி, மதமென்னும் சமூக அமைப்புகளால் ஏற்பட்ட பேதங்களை அகற்றுவதற்கு மட்டுமல்ல. உழைக்க ஓர் பிரிவு - உண்டு கொழுக்க ஓர் பிரிவு - என்ற பொருளாதார பேதத்தையும் சுட்டிக்காட்டி ஏற்றத்தாழ்வற்ற சமதர்ம சமுதாயம் அமைத்திடவும் பகுத்தறிவு மன்றமே தீர்ப்பு எழுதியது.

அதைத்தான் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பகுத்தறிவு மன்றத்தில் உலகம் என்ற பழைய முதலாளியினை நிற்க வைத்து விசாரணை நடத்தித் தீர்ப்பு வழங்குவதுபோல கவிதையொன்று தீட்டுகிறார்.

“கைத்திறனும் வாய்த்திறனும் கொண்ட பேர்கள்
கண் முடி மக்களது நிலத்தையெல்லாம்
கொத்திக் கொண்டேப்ப மிட்டு வந்ததாலே
கூலிமக்கள் அதிகரித்தார் என்ன செய்வேன்?”

என்று உலகப்பன் கைபிசைந்து நிற்கிறான், அந்த மன்றத்தில்! பாரதிதாசனின் பகுத்தறிவு மன்றம், என்ன கட்டளையிடுகிறது தெரியுமா?

“இந்நிலையில் இருப்பதனால் உலகப்பா நீ!
புதுக் கணக்குப் போட்டுவிடு. பொருளை எல்லாம்
பொதுவாக எல்லார்க்கும் நீ குத்தகை செய்”

இதுவே, பகுத்தறிவு மன்றத்தின் ஆணை! எனவே சமுதாயத்துறை, பொருளாதாரத்துறை, அரசியல் துறை

அனைத்திலுமே பகுத்தறிவு நீரோடை தங்கு தடையின்றிப் பாய்ந்தோடிட வேண்டும். அப்போதுதான் நாடு வாழும்! நலிவு தீரும்! பண்பு சிறக்கும்! பளிங்கெனத் தெளிவு பிறக்கும்!

பாலைநிலத்தில் பகுத்தறிவுப் பேரருவி எங்கே பாய்ந்திடுமோ, எனக் குறிக்கும் வங்கத்து தங்கக் கவிஞர், எங்கே மனத்தில் அச்சமில்லையோ, எங்கே தலையானது நிமிர்ந்து நின்றிடுமோ, எனச் சுட்டிக் காட்டுவதன் சரியான பொருள் உனக்குப் புரிகிறதல்லவா? தலையானது நிமிர்ந்து நிற்க வேண்டும். அதுதானே உடன்பிறப்பே! தன்மானம், சுயமரியாதை என்ற சொற்களால் சுட்டிக்காட்டப்படுகிறது! தலை நிமிர்ந்து நிற்க வேண்டும் - மனத்தில் அச்சம் கூடாது என்றால், அடக்கமின்றி வணங்காமுடியாக வாழவேண்டும் என்றோ - அஞ்சுவது அஞ்சாமை பேதமை என்ற குறளை மறந்துவிட வேண்டும் என்றோ - யாரும்கூற மாட்டார்கள்! சோதனைதான் வாழ்வுக்குச் சுவையளிக்கிறது, அந்த நிலையில் - தலையானது நிமிர்ந்து நிற்க வேண்டும், மனத்தில் அச்சம் அகற்றிட வேண்டும்.

அச்சமும், தலையிறக்கமும் கொண்ட சமுதாயம் அடிமைப் படுகுழியில்தானே கிடக்க நேரிட்டது ஏன்? என்று கேட்க அச்சம்! எப்படி என்று கேட்பதற்குத் தலைநிமிர முடியாத கொடுமை! ஆண்டை, ஆண்டவனின் படைப்பு! அடிமைகளோ, புழுக்களின் மறுபதிப்பு! இந்த நிலை, உலக முழுவதும் இருந்ததே - இன்று பெரும்பாலும் மாறிவிட்டதே! எவ்வாறு?

தாகூர் சொல்கிறாரே, தலைநிமிர்ந்து நில் என்று - அந்தத் தைரியம் பிறந்ததாலே! மனிதரில் நீயுமோர் மனிதன், மண் அன்று! இமை திற! இவ்வாறு மனத்தின் அச்சம் போக்கப்பட்டதாலே!

பகுத்தறிவு, அருவியாகப் பாய்கிறது! ஏன் என்ற தெம்பான கேள்வி எழுகிறது! அச்சம் தொலைகிறது! தலை நிமிர்கிறது! அதன்பிறகு உலகைச் சீர்குலைக்கும் குறுகிய மதில்கள் எழுப்பப்படுவதில்லை! தாகூரின் அந்தப் பரந்த உள்ளத்தைத்தான் பாரதிதாசனாரும் தனக்கே உரிய நடையில் நமக்குத் தெளிவாக்குகிறார்.

தூயஉள்ளம் அன்புள்ள பெரிய உள்ளம், தொல்லுலக மக்களெலாம் ஒன்றே என்னும் தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே சண்டையில்லை! தன்னலந்தான் தீர்ந்த தாலே! தன்னலம்,

முனை முறிந்து தேய்ந்து போவதாலே சண்டை சச்சரவே இல்லை என்று புரட்சிக் கவிஞர் புன்னகை பூக்கிறார்.

தன்பெண்டு தன் பிள்ளை சோறு வீடு சம்பாத்யம் இவை உண்டு தானுண்டென்பான் சின்ன தொரு கடுகுபோல் உள்ளங்கொண்டோன் தெருவார்க்கும் பயனற்ற சிறிய வீணன் என்றல்லவா தன்னலக்காரனுக்குக் கவிஞர் பட்டம் சூட்டுகிறார்.

உடன்பிறப்பே, எங்கே பரந்த சிந்தனை செயல்களை நாடி உன் துணை வலிமையால் இந்த நெஞ்சம் முன்னேறிச் சென்றிடுமோ, என்று தங்கக் கவிஞர் தாகூர், பிரார்த்தனை செய்வது, தந்தையே! என்று இறைவனை நோக்கி!

உன் துணை வலிமை என்ற சொற்றொடருக்கு நான் பொருள் கொள்வது, உடன்பிறப்பாகிய உன் துணை வலிமையைத்தான்!

நானிருக்க பயமேன் என்று என் நாவு முழங்கியதில்லை. நீ இருக்க பயமேன் என்றுதான் என் இதயம் நிம்மதியாகத் துடித்துக்கொண்டிருக்கிறது.

எங்கே அச்சமற்றதும், தலைநிமிர்ந்ததுமான நிலையிருக்கிறதோ - அங்கே நீயிருக்கிறாய்! உன் துணையுடன் பரந்த சிந்தனை செயல்களை நாடி இந்த நெஞ்சம் முன்னேறிச் சென்றிடும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(29-07-1999)

2452. வெறுப்பின் அடையாளமா? விரக்தியின் வெளிப்பாடா?

உடன்பிறப்பே,

திரு. மூப்பனார் அவர்களும், திரு. கிருஷ்ணசாமி அவர்களும், திரு. காதர்மொய்தீன் அவர்களும், திரு. ஜி.எ.வடிவேலு அவர்களும், அவர்கள் இணைந்துள்ள கூட்டணியின் சார்பில் ஓர் அறிக்கை விடுத்துள்ளனர். நெல்லை மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் கோரிக்கைகளை முன் வைத்து நடைபெற்ற ஆர்ப்பாட்டம், பேரணி போன்றவற்றில் பதினெட்டு பேர் நீரில் மூழ்கி உயிர் இழந்ததை முன்னிட்டு, வருகிற 31ஆம் நாள் சனிக்கிழமை மாவட்டத் தலைநகரங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படும் என்பதே அந்த அறிக்கையின் வாயிலாக வெளியிடப்படும் முக்கிய செய்தியாகும்.

ஜனநாயகத்தில் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது - உண்ணாவிரதம் இருப்பது - பேரணி - பொதுக்கூட்டம் - போன்ற பேச்சுரிமை மற்றும் எழுத்துரிமை நடவடிக்கைகள் ஏற்கப்பட்டவைகளேயாகும். அவற்றில் சில, வரம்புகளை மீறிப்போகும் போதுதான் வன்முறைகளும், அதன் தொடர்பான சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளும் தவிர்க்க முடியாத அளவுக்குத் தலைதூக்கி விடுகின்றன.

நெல்லை நிகழ்ச்சிகளாக சென்னைக் கோட்டை வாயிலில் உண்ணாவிரதம் என்று முதலில் அறிவிக்கப்பட்டது. அறிவிப்பு மட்டுமே செய்துவிட்டு அங்கே உண்ணாவிரதம் இருப்போமே தவிர, அதற்கான முன் அனுமதி பெறுவதற்குக்கூட விண்ணப்பம் எதுவும் தரமாட்டோம் என்ற ஒரு புதிய நிலை எடுக்கப்பட்டது.

ஐம்பது ஆண்டுக் காலத்தில் கோட்டை வாசலில் உண்ணாவிரதம் - ஆர்ப்பாட்டம் போன்ற எந்தவொரு நிகழ்ச்சியும் அனுமதிக்கப்பட்டதில்லையென்று கூறினால், 1993 ஆம் ஆண்டு

ஏப்ரல் மாதம் திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் உண்ணாவிரதம் நடைபெற்றிருக்கிறதே என்று வாதிடப்படுகிறது.

அந்த உண்ணாவிரதம், மூன்று காங்கிரஸ் உறுப்பினர்களை அவையிலிருந்து நீக்கிவைத்தமைக்காக, சட்டப்பேரவையிலிருந்து காங்கிரஸ் கட்சியினர் வெளிநடப்பு செய்து அதன் தொடர்பாகத் திடீரென நடைபெற்ற ஒன்றே தவிர, வெளியில் நடந்த ஒரு நிகழ்வுக்காகக் கண்டனம் தெரிவித்து அறிக்கை விடுத்து நடைபெற்றதல்ல! விதிவிலக்காக நடந்த ஒன்றேயாகும்.

வெளியில் நடந்த சம்பவங்களையொட்டி, அனுமதி கேட்காமல், அறிக்கை மூலம் மட்டும் தெரிவித்துவிட்டு திடீர் என உண்ணாவிரதம் கோட்டை வாசலில் இருப்போம் என்பதை முன் மாதிரி ஆக்கி வழிகாட்டிவிட்டால் - பின்னர் எல்லாக் கட்சியினரும், எல்லா இயக்கங்களும் அந்த முறையைப் பின்பற்றத் தொடங்கினால், இப்போது எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் நாளைக்கு ஆளுங்கட்சியாகவும் வருவதற்கு ஆசைப்படும் நிலையில் அப்போது எப்படியிருக்கும் என்பதை எண்ணிப் பார்த்திடல் வேண்டாமா?

சென்னை மாநகரத்திலும், மாவட்டத் தலைநகரங்களிலும் உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டம், பொதுக் கூட்டம் போன்றவைகளுக்கு அனுமதிக்கப்படக் கூடிய இடங்கள் என்று ஏற்கனவே வரைமுறை செய்யப்பட்ட பகுதிகளில் அவைகள் அனுமதி பெற்று நடைபெறுவதில் அரசின் சார்பில் எந்தவிதமான மறுப்பும் இருப்பதற்கு இடமில்லை.

எனவே போக்குவரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூறு விளைவிக்காத வகையில் ஆங்காங்குள்ள அதிகாரிகளிடம் முன்கூட்டியே தெரிவித்து, கலந்து பேசி, அனுமதி பெற்று அமைதியான முறையில் ஆர்ப்பாட்டமானாலும்? உண்ணாவிரதமானாலும் நடத்துவதற்கு எப்போதும் சரி! இப்போதும் சரி! எந்தவிதமான தடையும் இருக்கப் போவதில்லை. திரு. மூப்பனார் அவர்களே முன்னின்று உண்ணாவிரதப் போராட்டத்துக்கான அறிக்கைவிட்டிருப்பதால், நிச்சயமாகவும், உறுதியாகவும் அமைதிகாப்பதில் அக்கறை காட்டப்படும் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்பவும் உண்டு.

அவர்கள் கூட்டாக விடுத்துள்ள உண்ணாவிரத அறிக்கையில் என் மனம் புண்படும்படியாக வாசகங்கள் அமைந்திருப்பினும் - அந்த வாசகங்கள் எதுவும் என் மனத்தைப் புண்படுத்த முடியாது. காரணம், ஏற்கனவே இதுபோன்ற தாக்குதல்கள், கண்டனங்கள் எனும் ஈட்டிமுனைகளால் காயம்பட்டுப் புண்ணாகியுள்ள என் இதயத்தில் மேலும் புண்படுத்த இடமில்லை என்பதுதான்!

இவர்களுடைய கோரிக்கையை ஏற்று கலெக்டரை மாற்றம் செய்தால், அதை எதிர்த்து மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினர் கோஷம் போடுவார்கள் என்று நான் சொன்னதை வன்மையாகக் கண்டிப்பதாகவும் - சாதி மோதல்களைத் தூண்டிவிடும் முயற்சி என்றும் - மூப்பனாரும், அவரது தோழமைக் கட்சியினரும் அறிக்கையில் கூறியிருக்கின்றனர். கலெக்டரை மாற்றுக என்று இவர்கள் கூறியவுடன், அத்தகைய எதிர்ப்பான கருத்துக்கள் எனக்கு நேரடியாகவும், கடித மூலமாகவும் தெரிவிக்கப்பட்டதினால்தான் நான் அதைச் சொல்ல வேண்டியிருந்தது.

அதுமட்டுமல்ல! நீதி விசாரணையில் அந்த மாவட்டத்தில் உள்ள எந்த அதிகாரியின் மீது குற்றம் சாட்டப்பெற்றாலும், அவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமென்றும், அதே பத்திரிகையாளர் கூட்டத்தில் தெளிவுபடுத்தியிருக்கிறேன்.

தமிழகத்தில் பல்வேறு சமூக அமைப்புகளின் பெயரால் இத்தகைய கோஷங்கள் எழுப்பப்படுவதை அனுபவரீதியாக அனைவரும் உணர்ந்தே இருக்கிறோம் என்ற உண்மையை ஆழப்புதைத்து விட்டு - முதலமைச்சர் பொறுப்பிலேயிருந்து கொண்டு நான் சாதி மோதலைத் தூண்டி விடுகிறேன் என்று அவதூறு கூறுவது என்ன நியாயமோ எனத் தெரியவில்லை. சாதிகளுக்கு அப்பாற்பட்டவன் நான் என்பதும், சாதி மத மோதுதல்கள் கூடாது என்பதற்காக சமத்துவபுரங்களை உருவாக்கி வருபவன் நான் என்பதும், சாதி வேறுபாடுகளை அகற்றுவதற்கு வாய்ப் பேச்சில் வீரரடி என்றில்லாமல், அந்தக் கொள்கையை என் வீட்டிலேயே நடைமுறைப்படுத்தி வருகிறவன் என்பதும் நாடறிந்த உண்மையாக இருக்கும்போது, அந்த உண்மையை திசைதிருப்ப முனைவது வேடிக்கையாக தோன்றுகிறது.

அதுமட்டுமல்ல! நான் சாதி மோதலைத் தூண்டுகிறேன் என்று அறிக்கையிலே குறிப்பிட்டு விட்டு - அதே அறிக்கையின் முன்

பகுதியில் தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு தொடர்ந்து தமிழக அரசு, தலித்துகளுக்கும், தொழிலாளர்களுக்கும், சிறுபான்மை யோர்க்கும் எதிராக மக்கள் விரோதப் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளதே! அது சாதி மோதலை மட்டுமல்ல - மத மோதலையும் இந்த அரசுக்கு எதிராகக் கிளப்பி விடுகிற தேர்தல் நேரத்துத் தந்திரம் என்று சொல்லி விடலாமல்லவா!

என் தலைமையில் உள்ள இந்த அரசு, தலித்துகளுக்கும், சிறுபான்மையோர்க்கும், தொழிலாளர்களுக்கும், ஏழைகளுக்கும் விரோதமான அரசு என்கிறது மூப்பனார் அவர்களும், அவரது தோழமைக் கட்சித் தலைவர்களும் விடுத்துள்ள அறிக்கை!

என் செய்வது? இன்றைய தினம் எந்த சிறுபான்மை மக்களைத் தூண்டிவிட்டு தேர்தல் ஆதாயம் தேட முனைகிறார்களோ, அந்தச் சிறுபான்மை சமுதாயத்து இயக்கங்களை ஒரு காலத்தில் வகுப்புவாதக் கட்சிகள் என்று ஒதுக்கி வைத்தவர்கள் யார் என்பதும் - அன்றும் இன்றும் நாம்தான் சிறுபான்மை சமுதாயத்தைக் காத்திடும் அரண்களாக விளங்குகிறோம் என்பதும் அழிக்க முடியாத வரலாறு - அதனை அழிக்க முயற்சித்தால் தோல்வியைத்தான் தழுவிக் கொள்வார்கள்.

தலித் மக்களுக்கு இந்த அரசு விரோதி என்பதை எவரும் நம்பிடார் என்பது தெரிந்தும், தெளிந்த நீரோடையில் கல் எறியும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

தாழ்த்தப்பட்ட (தலித்) மக்களுக்கு, இந்த அரசுதான் இலவச கான்கிரீட் வீடுகளை இலட்சக்கணக்கில் கட்டுகிற திட்டத்தைத் தொடங்கி நடத்தியது என்பதையும் - அதை ஆரம்பத்தில் கேலி பேசியவர்கள் மத்தியில் இருந்த காங்கிரஸ் அமைச்சர்கள் என்பதையும் - பின்னர் அந்த மத்திய அரசே இந்திரா வீடு கட்டும் திட்டம் என்ற பெயரால், நமது அரசு தொடங்கிய திட்டத்தை எல்லா மாநிலங்களுக்கும் பரவலாக்கியது என்பதையும் - சரித்திரம், புன்னகையோடு பார்த்துக் கொண்டுதானிருக்கிறது!

தாழ்த்தப்பட்டோர்க்கும், மலைவாசிகளுக்கும் கல்வி வேலை வாய்ப்புகளில் 16 சதவீத இட ஒதுக்கீடு என்று இருந்ததை மலைவாசிகளுக்கு உட்பட 19 சதவீதமென உயர்த்தி வழங்கும் இந்த அரசு தலித்துகளுக்கு விரோதியாம்!

இந்தியாவிலேயே முதன் முதலாக அண்ணல் அம்பேத்கர் பெயரால் சட்டப்பல்கலைக்கழகம் அமைத்து, அதனை குடியரசுத் தலைவர் மேதகு கே.ஆர். நாராயணன் அவர்களை அழைத்து திறந்து வைத்த இந்த அரசு தலித்துகளுக்கு விரோதியாம்!

அரசுப் பணிகளில் ஆதிதிராவிடர்களுக்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்ட காலிப் பணி இடங்களை நிரப்பும்போது, தகுதியான விண்ணப்பதாரர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லை என்ற நிலையில், நிரப்பப்பட முடியாமல் உள்ள காலிப் பணி இடங்களை, மற்ற இனத்தவர்களைக் கொண்டு நிரப்பிடாமல், அப்பணி இடங்களை ஆதிதிராவிடர்களைக் கொண்டே நிரப்புவதற்கு ஏற்றபடி, அடுத்து வரும் ஆண்டிற்குக் கொண்டு சென்று நிரப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிவகை கண்ட இந்த அரசு தலித்துகளுக்கு விரோதியாம்!

தாழ்த்தப்பட்ட (தலித்) மக்களுக்கு எத்தனை எத்தனை கல்விச் சலுகைகள் - அவர்தம் குடியிருப்புகளுக்கு எத்தனை எத்தனை வசதிகள் - அனைத்தும் இந்த அரசின் சாதனைதான் என்பதை அறிக்கையாளர்கள் அறியமாட்டார்களோ!

மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்கள் இந்தியாவில் எந்த மாநிலத்திலுமில்லாத அளவுக்கு ஊதியம் பெறுகிறார்கள் - வசதி வாய்ப்புகளைப் பெற்றுள்ளார்கள் - அந்தத் தொழிலாளர்க்கும் தோட்டத்துத் தனியார் நிர்வாகத்துக்கும் பிரச்சினையென்றால், அந்தத் தொழிலாளர்கள் கலெக்டர் வீட்டு முன்பும் - கலெக்டர் அலுவலகம் முன்பும் - மறியல் செய்வது என்பது என்ன முறை? மறியல் செய்தவர்கள் விடுதலை செய்யப்பட்ட பிறகு - மீண்டும் மறியல் செய்ததால் கைது செய்யப்படல் என்பது சட்டம் ஒழுங்கு காத்திடும் செயல் அல்லவா! அதில் என்ன தவறு?

அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்பதற்காக கலெக்டர் அலுவலகத்திற்கு பேரணி என்றால், பேரணியில் வரும் முக்கிய தலைவர்களைச் சந்திக்க கலெக்டர் தயாராக இருந்த போதிலும் - பேரணியில் வந்த ஆயிரக்கணக்கானவர்களும் கலெக்டர் அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைவது என்பது எப்படி முறையாகும்?

இதன் தொடர்பான நெல்லைக் கலவரம் குறித்து, உண்மை அறிந்து நடவடிக்கை எடுத்திடத்தான் முதலில் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியொருவர் நியமிக்கப்பட்டார்,

அதுபோதாது என்றவுடன் மூப்பனார் அவர்களுடன், நானே தொலைபேசியில் தொடர்புகொண்டு, உச்சநீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதியை அந்த விசாரணைக்கென அரசு சார்பில் நியமிக்கப்பட்டுள்ளது.

நெல்லைச் சம்பவத்தில் உயிரிழந்த அப்பாவி மக்களுக்காக, அவர்தம் குடும்ப நிவாரண நிதி வழங்கிட ஆணையிட்டது மட்டுமல்ல! அந்த குடும்பங்களுக்காக ஆழ்ந்த இரங்கலையும் இந்த அரசின் சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விரும்பத்தகாத நிகழ்ச்சி - வேதனையான நிகழ்ச்சி - அதற்காக கலங்காத இதயங்கள் இருக்க முடியாது.

ஆழ்ந்த துயரை வெளிப்படுத்த மட்டுமல்ல, திரு. மூப்பனார் அவர்களும், மற்றவர்களும் கண்டனத்தை அறிவிக்கவும் கூட, உண்ணாவிரதம் இருப்பதில் எந்தக் குறையும் நான் காணவில்லை.

ஆனால் அதற்காக, என்மீது வேண்டுமென்றே திட்டமிட்டு தலித்துகளுக்கும் - தொழிலாளர்களுக்கும் - சிறுபான்மை சமுதாயத்தினர்க்கும் விரோதியென்று வீண்பழி சுமத்துவதை வெறுப்பின் அடையாளம் என்பதா? அல்லது விரக்தியின் வெளிப்பாடு என்பதா? அமைதியான பண்புக்கு உரியவராக வளர்ந்துள்ள திரு. மூப்பனார் அவர்கள், அடாவடி அரசியல்வாதிகளை அருகில் சேர்த்ததால் ஏற்படும் விளைவு, தமிழ்நாட்டின் தலையில் இடியாக விழுவதற்கு வழிவகுத்து விடாதா?

அன்புள்ள,

மு. கருணாநிதி

(30-07-1999)

2453. இருவிழி மழைதனைக் காணாதீர்; இதயம் மகிழ்வதைக் காண்பீரே!

உடன்பிறப்பே,

சங்ககாலப் புலவர்களின் பாடல்கள் பலவற்றுக்கு எழிலார்ந்த எளிய தமிழில் விரிவான விளக்கமளித்து நான் சங்கத் தமிழ் நூல் எழுதியுள்ளேன் அல்லவா? அவற்றில் இசைப்பாடல்களும் சில உண்டு.

“என் இருவிழி மழைதனைக் காணாதீர்;
என் இதயம் மகிழ்வதைக் காண்பீரே!
போர் வாளேந்தி என் மகன் பொன்முடி;
புல்லரை வீழ்த்தி உயிர் துறந்தான்;
என் இருவிழி மழைதனைக் காணாதீர்;
என் இதயம் மகிழ்வதைக் காண்பீரே!”

இந்த எடுப்புடன் தொடங்கும் இந்த இசைப்பாடலில், இரண்டாவது தொடுப்பாக,

“மானம், என் மகன் கேட்ட தாலாட்டு
மரணம் அவன் ஆடிய விளையாட்டு
பால் குடிக்கும் குழந்தையாய் இருந்தபோதே
வேல் பிடிக்கும் வித்தையினைக் கற்றுத் தந்தேன்
ஆல்விட்ட விழுதுபோல் தந்தைக்கு மகனாகி - ஆட்டு
வால்போலக் குட்டை மனம் கொண்டபகை; நம்
கோல்பறிக்கக் கூடாதென்று கொந்தளித்து; அவர்
தோல் உரித்துத் துரத்திவிட்டுப் போரில் மாளுகிறான்;
பெரும் புகழை ஆளுகிறான்”

எனும் வரிகள் என் மனத்திலும், உன் போன்ற என் அன்பு உடன்பிறப்புகள் பலருடைய மனத்திலும் என்றும் மறவாமல் முழங்கிக் கொண்டிருக்கக் கூடியவை. இந்த இசைப் பாடலை நடன நிகழ்ச்சியாகப் பலமுறை கண்டபோது என்னையறியாமல், என் கண்கள் அருவியாக ஆகியிருக்கின்றன ஒவ்வொரு முறையும்.

ஆனால் நேற்று, தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் இந்த சங்கத்தமிழ் பாடல் வரிகளை யாரும் இசைக்காமல், பாடலுக்கும் யாரும் நடனமாடி நடிக்காமல் - மெய்யாகவே அப்படியொரு காட்சி கண்டு விம்மினேன், விழி நீர் பெருக்கினேன்.

கார்கில் போர் வீரர்கள் நிவாரண நிதிக்காக விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, மிக விரைவாகக் குவிந்துள்ள நிதி முப்பத்து மூன்று கோடி ரூபாயைத் தாண்டியுள்ள நிலையில், இன்னமும் தலைமைச் செயலகத்தில் கியூ வரிசையில் நின்று காலை பத்து மணி தொடங்கி, பிற்பகல் ஒன்றரை மணி வரையில் நிதியினை வழங்கிக்கொண்டு தானிருக்கிறார்கள்.

அவ்வாறு வழங்குவதை நான் நின்றுகொண்டு வாங்கி, கால்களும் வலியெடுத்துவிட்டதால் நிதி வழங்குவோர் ஆணைப்படி, உட்கார்ந்து கொண்டும் வாங்கிக் கொண்டிருந்தேன். அப்போதுதான் நான் எழுதிய அந்த சங்கத் தமிழ்க் காட்சி என் எதிரே மெய்யாகவே வடிவெடுத்து வந்து நின்றது.

என்னிடத்தில் ஒரு கடிதத்தை நீட்டியவாறு ஒரு அம்மையார் - என் பெயர் அமிர்தவல்லி மாரியப்பன். நான் மாரியப்பன் மனைவி மட்டுமல்ல! கார்கில் போரில் உயிர் நீத்த மேஜர் சரவணனின் தாயுங்கூட! என்று கூறியவுடன், நான் அசைவற்றுப் போனேன். அவர்கள் தந்த கடிதத்தில் என்ன எழுதியிருப்பார்கள்? அவர்களுக்கு எல்லா உதவிகளும் செய்திருக்கிறோமே! ஐந்து லட்ச ரூபாய் நிவாரண நிதி - சென்னையில் பதினோரு லட்ச ரூபாயில் வீட்டு வசதி வாரியத்தின் உயர் வருவாய்ப் பிரிவு வீடு - சரவணனின் தங்கை ரேவதிக்கு எல்காட் நிறுவனத்தில் வேலை வழங்கிட அரசு ஆணை - மற்றொரு தங்கை சித்ராவுக்கு அவர் விருப்பப்படி, திருச்சி நாகமங்கலத்தில் உதவி மருத்துவராகப் பணி நியமனம் - இத்தனைக்கும் பிறகு, இந்தக் கடிதவாயிலாக என்ன உதவி கேட்கிறார்களோ என்று கணநேர சிந்தனையுடன் அதைப் படித்துப் பார்த்தேன். கடிதத்தின் வாசகம் பின் வருமாறு :-

மதிப்பிற்குரிய அய்யா,

நாங்களும் மிகவும் துயரமும், கவலையும் அடைந்திருந்த நேரத்தில், எங்களுக்காக ஆறுதலாக நீங்கள் தெரிவித்த வார்த்தைகளுக்காக என்னுடைய மகள்கள் சித்ரா மற்றும் ரேவதி ஆகியோர் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இழப்பிற்குள்ளாகியுள்ள ஒரு குடும்பத்தினருக்கு நம்முடைய சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும் அனுதாபமும், ஆதரவும் காட்டுவது அந்தக் குடும்பத்தினருக்கு பெரும் ஆறுதலைத் தரக்கூடிய நிகழ்ச்சிகளாகும். தமிழக அரசும், தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் உணர்ச்சித் ததும்ப எங்கள்பால் காட்டிய அன்பின் காரணத்தால் நாங்கள் மிகவும் ஆறுதல் அடைந்தோம். தமிழர்கள் என்பதற்காக நாங்கள் பெருமையடைகிறோம். என்னுடைய அன்பிற்குரிய வீரமகன், நம்முடைய புகழ்வாய்ந்த மாநிலத்திற்கு இத்தகைய பெருமையை சேர்த்ததை எண்ணி நாங்கள் பெருமையடைகிறோம். மேஜர் சரவணனை எண்ணி நாங்கள் எந்த அளவிற்கு பெருமையடைகிறோமோ. அந்த அளவிற்கு நீங்களும், தமிழக மக்களும் பெருமையடைவீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

என் மகன் மேஜர் சரவணன், செய்த மிகப் பெரிய தியாகம் காரணமாக, தேசிய எழுச்சியும், நாட்டுப்பற்றும் நம்முடைய மக்களிடம் புது வேகத்தில் எழுந்திருப்பதை எண்ணிப் பூரிப்பதால், நாங்கள் இனிமேலும் வருத்தமடையமாட்டோம்.

தாய்நாட்டின் பாதுகாப்புக்காக, உண்மையான ஒரு மகனை பரிசாக அளித்த பெருமைப்படக்கூடிய தாய் என்பதை உணரும்போதும், என்னை மற்றவர்கள் அடிக்கடி பட்டாளிக் கதாநாயகனின் தாய் (HERO OF BATALIK) என்று அழைக்கும்போதும் இறும்பூது எய்துகிறேன்.

என் மகன் செய்த வீரத்தியாகத்தைக் கௌரவப்படுத்தும் வகையில் அளிக்கப்பட்ட நிவாரண உதவிகளுக்காக,

தங்களுக்கு நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். அந்தச் செயல் எங்களுக்கு மிகப் பெரிய பாதுகாப்பினைத் தந்துள்ளது. இந்தக் குறுகிய கால இடைவெளிக்குள் எங்கள் குடும்பத்தின் உயர்விற்காகவும், என்னுடைய மகள்களின் நல் வாழ்விற்காகவும் தாங்கள் செய்த எல்லா உதவிகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களுடைய அன்பும், ஆதரவும் எங்கள் இதயத்தை பெரிதும் மகிழச் செய்துள்ளது. தங்களுடைய இதயத்தின் எண்ணத்தின் புனிதத் தன்மையும், உங்களுடைய ஆதரவும் ஒப்பிடுவதற்கு அப்பாற்பட்டவைகளாகும்.

மீண்டும் ஒரு முறை நன்றியுடன்.

அன்புள்ள

அமிர்தவல்லி மாரியப்பன்

உடன்பிறப்பே, மடலைப்படித்து முடிந்தவுடன் என் இருவிழி மழைதனைக் காணாதீர்! என் இதயம் மகிழ்வதைக் காண்பீரே! என்று ஒரு தாய் கூறுவதாக நான் தீட்டியிருந்த அந்தக் கவிதை, அப்படியே உயிர்பெற்று அமிர்தவல்லியெனும் அந்த வீரத்தாயாக என் முன்னால் நிற்பது கண்டு புல்லரித்துப் போனேன்.

அடுத்து அந்தத் தாயுடன் வந்திருந்த சித்ரா எனும் சரவணனின் தங்கை, ஒரு துண்டுக் காகிதத்தை என்னிடம் கொடுத்தார். அய்யா! தங்களால் வழங்கப்பட்ட உதவியையொட்டி எனக்குக் கிடைத்த பணியினால் பெற்ற ஊதியத்திலிருந்து ஐயாயிர ரூபாயை, தாங்கள் திரட்டும் கார்கில் போர் வீரர் நிதிக்கு வழங்குகிறேன் என்பதுதான் அந்தக் கடிதத்துடன் அவர் சேர்த்துச் சொன்ன வார்த்தைகளாகும். என் எதிரே நின்றவர்கள் மாவீரன் சரவணனின் தாயும், தங்கையும் என்றபோதிலும், நான் அவர்களை அந்த உறவு முறையில் மட்டும் நினைத்துப் பார்க்கவில்லை.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், தாயகத்தின் எல்லை மீட்கவும், காக்கவும் நடைபெற்ற போராட்டத்தில் பத்து பேர் வீர மரணமடைந்துள்ளனர். அவர்களின் குடும்பங்களுக்கு, சரவணனின் குடும்பத்திற்கு வழங்கியது போன்ற உதவிகளை தமிழக அரசும் வழங்கியுள்ளது - தமிழக மக்களும் வழங்கியுள்ளனர்.

அத்தகைய உதவிகளைப் பெற்ற குடும்பங்களுக்கு வழிகாட்டும் விதமாக திருச்சி சரவணனின் தாயாரும், சகோதரிகளும் நடந்து கொண்டதைக் கண்டபோது, நான் எண்ணி எண்ணி மகிழ்ந்து, நினைத்து நினைத்து உணர்ச்சிவயப்பட்ட நெஞ்சில் நிழலாட விட்டு நெகிழ்ந்தும் நிமிர்ந்து இரு நிலைகட்கு என்னை ஆட்பட வைத்த - நான் எழுதிய அந்த சங்கத் தமிழே அந்தப் புறநானூற்றுத் தாய் உருவில் என் முன்னே நின்று களிப்பு சிந்தியது! கண்ணீரும் உகுத்தது! அந்தக் களிப்பையும், கண்ணீரையும் ஒரு சேரக் கண்டபோது, அந்தப் பாடலின் முடிப்பு என் இதயத்தில் முழங்கத் தொடங்கியது!

“காதலுக்குத் தடை சொல்லக் கூடாதென்று - ஒரு
கட்டழகுப் பெட்டகத்தைத் துணை சேர்க்க; அவன்
கருத்துக்கு ஏற்றதொரு கன்னியிளமானை
களம் சென்று திரும்பியபின் மணமுடிக்கக்
காத்திருந்தேன்; அவனோ
களிறுகளைப் பந்தாடிப் புரவிகளைப் பஞ்சாக்கிக்
கயவர்களின் வாள்முனையை நெஞ்சில் தாங்கி
காதலியைத் தவிக்கவிட்டு காலத்தை நகர்த்துகின்ற
இந்தக் கிழவியையும்
கண்ணீரில் மிதக்கவிட்டு கடமையினை
முடித்துவிட்டான்...
களிப்பொரு பக்கம் - கண்ணில் நீர் ஒரு பக்கம்
களப்புகழ் பெற்ற மகனை வாழ்த்துகின்றேன்!
கருவில் சுமந்த தாயல்லவோ; அதனால் வாடுகின்றேன்!

மீண்டும் அந்தப் பாடலின் எடுப்பு :- என் இருவிழி மழைதனைக் காணாதீர்; என் இதயம் மகிழ்வதைக் காண்பீரே! என்று தொடர்ந்து ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(31-07-1999)

2454. மாஃபியாவும், ஊழலும் மறைந்த மாயம் என்னவோ?

உடன்பிறப்பே,

"மாரியப்ப வாண்டையார் தொடங்கி, அவரது பிள்ளைகளான ஸ்ரீதர் வாண்டையார், பிரேம் குமார் வாண்டையார் வரையில் நாற்பது ஆண்டுகளாக இந்த மாஃபியா கும்பல் சிதம்பரம் நகரத்தையே ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது. இந்தக் கும்பல், ஒயின் ஷாப்புகள் ஏலம் என்றாலும், மணல் குவாரி - சைக்கிள் ஸ்டாண்ட் - ஏரி, குளம் என எந்த ஏலமாக இருந்தாலும் தங்களைத் தவிர, வேறு யாரையும் எடுக்கவிடாமல் ஏகபோக உரிமை கொண்டாடி வருகிறது. எதிர்ப்பவர்களைத் தீர்த்துக் கட்டுவது இந்தக் கும்பலின் வாடிக்கை. இந்த ஏகபோகத்துக்கு எதிராக நின்று ம.தி.மு.க.வின் குமராட்சி ஒன்றிய செயலாளர் பழனிவேல் செயல்பட்டதால் 9.7.98 அன்று பட்டப்பகலில் மக்கள் கூட்டம் நிறைந்த பகுதியில் வாண்டையார் ஆட்கள் படுகொலை செய்துவிட்டு தப்பித்திருக்கிறார்கள்."

இப்படியொரு விமர்சனத்தையும், குற்றச்சாட்டையும் சிதம்பரத்தை சேர்ந்த ஸ்ரீதர் வாண்டையார் மீதும் - பிரேம்குமார் வாண்டையார் மீதும் ஆவேசமாகப் பொழிந்தவர் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா அவர்களாவார்கள். இந்தப் பேச்சு அவரது கட்சி ஏட்டிலேயே வெளியாகியுள்ளது.

வாண்டையார் குடும்பத்தினர் பழனிவேலுவைக் கொலை செய்ததாகச் செய்தி பரவியதும், வாண்டையார்கள் இருவரையும், மற்றும் கொலை செய்த ஆட்களையும் உடனடியாகச் கைது செய்யவேண்டுமென்று தமிழக அரசை வலியுறுத்தி சிதம்பரத்தில்

உள்ள எல்லாக் கட்சித் தலைவர்களும் கூட்டாக அறிக்கை விடுத்தனர். என்னையும் சந்தித்து கோரிக்கை வைத்தனர். பொதுக் கூட்டத்தில் அனைத்துக் கட்சியினரும் கலந்து கொண்டு, வாண்டையார் குடும்பத்தின் மீதும், அவர்களால் தூண்டிவிடப்பட்டதாகக் கூறப்பட்ட கொலையாளிகள் மீதும் இன்னமும் ஏன் அரசு நடவடிக்கை எடுக்கவில்லையென்று கோபாவேசமாகக் கேட்டனர். அந்தக் கேள்வியை உச்ச கட்டத்தில் கேட்டு ஓங்காரமாக ஒலித்தவர்கள் கம்யூனிஸ்டு கட்சிகளின் தலைவர்கள் என்பதை நாடறியும்.

புலன் விசாரணை அவசரக் கோலத்தில் நடைபெறாமல், ஆதாரபூர்வமாகக் குற்றவாளிகளைப் பிடிக்க வேண்டுமென்பதற்காக, காவல்துறையினர் கவனமாகச் செயல்பட்டு வாண்டையார் சகோதரர்கள் உட்பட, குற்றம் சாட்டப்பட்டவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளனர். அதற்குள் அரசின் காவல்துறை அவசரப்படாமல் நிதானமாகச் செயல்படுவதாகக் குறை கூறி நம்மீது ஆயிரம் குற்றச்சாட்டுகள்!

பின்னர், கொலைவெறிக்குத் தூண்டுகோலாயிருந்தவர்கள் என்போர் உட்பட, அந்தக் கும்பல் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டமைக்காக, அனைத்துக் கட்சியினரும் குறிப்பாக, கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களும் நேரில் வந்து இந்த அரசுக்கு நன்றியும், பாராட்டும்கூடத் தெரிவித்தனர்.

அவர்களை ஜாமீனில் விடக்கூடாது என்றும், ஜாமீனில் விடுவதற்கு அரசின் காவல்துறை நீதிமன்றத்தில் ஒப்புதல் அளிக்காமல் மறுப்பு தெரிவிக்க வேண்டுமென்றும் கம்யூனிஸ்டு கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சிகளும் அரசை வலியுறுத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றின.

அதை எதிர்த்து மூவேந்தர் முன்னேற்றக் கழகம் குரல் கொடுப்பது மாத்திரமன்றி, வாண்டையார் சகோதரர்களை ஜாமீனில் விடச்சொல்லி நீதிமன்றத்தையே நெருக்குகிற அளவுக்கு உண்ணாவிரதம் இருக்கப்போவதாகவும் அறிவித்துள்ளது.

தி.மு.கழக அரசைப் பொறுத்தவரையில், இதுபோன்ற நிகழ்வுகளில் எப்படி நடந்து கொண்டுள்ளது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். மதுரையில் லீலாவதி என்ற மாநகராட்சி உறுப்பினர் - மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் -

அவர் கொலை செய்யப்பட்டார் - அந்தக் கொலைக்கு ஒரு தி.மு.க. செயலாளர் மீது குற்றம் சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார் - அந்த தி.மு.க.காரர் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சிறையிலேதான் இருக்கிறார். ஜாமீனில் வெளிவர உச்சநீதிமன்றம் வரை பல மனுக்கள் போடப்பட்டும்கூட இந்த அரசு, பாரபட்சமின்றி நடந்து கொண்டு ஜாமீனில் வெளிவர இணக்கம் தெரிவிக்காததால், இன்னமும் அவர் தொடர்ந்து இரண்டரை ஆண்டுக் காலமாகச் சிறையிலேதான் இருக்கிறார்.

சட்டத்தையும், நீதியையும், நெறிமுறைகளையும் மதித்து நடக்கிற ஓர் அரசு, ஆளுங்கட்சிக்கு ஒரு நீதி, மற்றவர்களுக்கு ஒரு நீதி என்று ஒருதலைப்பட்சமாக நடந்து கொள்ள முடியுமா?

எனவே கொலைக்குற்றம் சாட்டப்பட்ட மதுரை தி.மு.க. வட்டச் செயலாளர், இன்னமும் ஜாமீனில் வெளிவராமல் இருப்பது போலவே - ஸ்ரீதர் வாண்டையாரும், பிரேம்குமார் வாண்டையாரும் ஜாமீனில் வெளிவர முடியாமல் சிறையிலேயே இருக்கிறார்கள்.

நீதிநெறிமுறையும் - சட்டத்தின் முடிவான தீர்ப்பும் அவர்களைக் குற்றவாளிகள் என்றோ அல்லது குற்றமற்றவர்கள் என்றோ தெரிவிக்கும் வரையில், அவர்களைக் காப்பாற்றவோ அல்லது வேண்டுமென்றே - பழிவாங்கவோ எந்தவொரு நிகழ்விலும் இந்த அரசு அக்கறை காட்டித் தவறான வழியில் சென்றதுமில்லை - செல்லப் போவதுமில்லை!

இதற்கிடையே இன்றைய பத்திரிகைகளில் ஓர் அறிவிப்பு கண்டேன். அந்த அறிவிப்பை அப்படியே தருகிறேன்.

மதுரையில் 25.07.99 அன்று நடைபெற்ற மூவேந்தர் முன்னேற்றக் கழகம், அகில இந்திய தேவர்பேரவை, தமிழ்நாடு முக்குலத்தோர் சங்கம் ஆகிய அமைப்புகளின் ஒருங்கிணைந்த தலைமைச் செயற்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, நடைபெற உள்ள தேர்தலில் கூட்டணி தொடர்பாக முடிவெடுக்க நிறுவனர் டாக்டர் சேதுராமனுக்கும், தலைவர் பிரேம்குமார் வாண்டையாருக்கும் முழு அதிகாரம் வழங்கப்பட்டது.

தலைவர் பிரேம்குமார் வாண்டையார் அவர்களுடன் நடத்திய ஆலோசனைக்குப் பிறகு, டாக்டர் சேதுராமன்

தலைமையில் மூ.மு.க.வினர், அ.இ.அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளர் செல்வி. ஜெயலலிதா அவர்களை சந்தித்துப் பேசினர். அதன் அடிப்படையில் அ.இ.அ.தி.மு.க., காங்கிரசு, கம்யூனிஸ்ட் கட்சிகள், முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் அடங்கிய கூட்டணியில் மூ.மு.க.வும் இடம்பெறும் என்று அறிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத, மக்கள் விரோத ஆட்சியை நடத்திவரும் தி.மு.க. தலைமையிலான கூட்டணியையும், தீவிரவாத இயக்கமான புதிய தமிழகம் இடம் பெற்றுள்ள த.மா.கா. தலைமையிலான கூட்டணிக் கட்சிகளையும் தோற்கடித்து - அ.தி.மு.க. கூட்டணிக் கட்சியின் வேட்பாளர்களை அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றி பெறக் கூடியவகையில் - மூ.மு.கவின் தொண்டர்களும், ஆதரவாளர்களும் தேர்தல் களத்தில் கடுமையாக உழைத்து வெற்றிக் கனியை புரட்சித் தலைவியிடம் ஒப்படைக்க வேண்டும் என தன் சார்பாகவும், தலைவர் பிரேம்குமார் வாண்டையார் சார்பாகவும் - டாக்டர் சேதுராமன் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த அறிவிப்பின்படி மாத்திரமல்ல, 30.7.99 மாலையில் செல்வி. ஜெயலலிதா வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையிலும், அ.தி.மு.க.வை ஆதரிக்கும் கூட்டணியில் உள்ள கட்சிகளின் பட்டியலில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளுடன் மூவேந்தர் முன்னேற்றக் கழகமும் இருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

அந்த மூவேந்தர் முன்னேற்றக் கழகத்தின் முழு அதிகாரம் படைத்த தலைவர் டாக்டர் பிரேம்குமார் வாண்டையார் என்று அந்தக் கழகத்தின் நிறுவனர் டாக்டர் சேதுராமனும், பொதுச் செயலாளர் ஆர்.எம்.எஸ். காடுவெட்டியாரும் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையின் மூலம் தெரிவித்திருக்கிறார்கள்.

மாஃபியா கும்பல் என்று மார்க்சிஸ்ட் தலைவரால் வர்ணிக்கப்பட்டவர்களுடன் - ஒரே கூட்டணியில் இருக்கலாமா? என்று யாரும் கேட்க முடியாது! கேட்கவும் கூடாது!

எப்படி இந்தத் தேர்தலில் ஊழல் ஒரு பிரச்சினை இல்லையோ, அதைப்போல மாஃபியா கும்பல் என்பதும் ஒரு பிரச்சினை இல்லை! என்று நம் மண்டையில் அடித்து அவர்கள் பதில் சொல்லுவார்கள்!

மாரியப்ப வாண்டையார் குடும்பத்தினரை மாஃபியா கும்பல் என்று விமர்சித்து, அவர்களில் பிரேம்குமார் வாண்டையாருக்கும், ஸ்ரீதர் வாண்டையாருக்கும் பழனிவேலு படுகொலை வழக்கில் ஜாமீன்கூட வழங்கப்படக் கூடாது என்று போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும் இப்போது அவர்களை விடுவிக்கக் கோரி மூவேந்தர் முன்னேற்றக் கழகம் (அதாவது பிரேம்குமார் வாண்டையார் தலைமையில் உள்ள அமைப்பு) அறிவித்துள்ள போராட்டத்திலும் இணைந்து நின்று அ.தி.மு.க. தேர்தல் கூட்டணியின் ஒற்றுமையை நிலைநாட்டப் போகிறார்களா என்பது தெரியவில்லை.

எப்படியோ செல்வி ஜெயலலிதா வெளியிட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையின் முன்னுரையில், மார்க்சிஸ்ட், இந்திய கம்யூனிஸ்டு கட்சிகளுடன் அதே பட்டியலில் பிரேம்குமார் வாண்டையார் தலைமையிலான மூவேந்தர் முன்னேற்றக் கழகமும் இடம்பெற்று முறுவலிக்கிறது.

அது மட்டுமா? சிலர் ஜாதிகளின் பெயரால் சிங்கம் என்றும், சிறுத்தைகள் என்றும் பெயர் வைத்துக்கொண்டு சாதாரண மக்களை மோதலில் ஈடுபடுத்துகிறார்கள். நமக்குத் தேவை சிறுத்தையுமல்ல - சிங்கமும் அல்ல. நமக்குத் தேவை மனிதநேயம்தான் என்று மார்க்சிஸ்ட் கட்சியின் மதிப்புக்குரிய நண்பர் சங்கரய்யா அவர்கள் பேசியது அவரது கட்சி ஏட்டிலேயே வெளிவந்துள்ளது - ஆனால் இப்போது சிறுத்தைகள் இடம் பெற்றுள்ள கூட்டணியில், இந்தக் கம்யூனிஸ்ட் மனித நேயர்களும் இடம்பெற்றிருப்பதை ஜெயலலிதாவின் தேர்தல் அறிக்கை அம்பலமாக்கியிருக்கிறது.

உடன்பிறப்பே, வாஜ்பாய் அரசு கவிழ்ந்த நாளிலே இருந்து மார்க்சிஸ்ட் நண்பர்களும், இந்திய கம்யூனிஸ்ட் நண்பர்களும் (ஒருசிலர் மட்டுமே) என்மீது வசைமாரி பொழிகிறார்கள் நாள்தோறும்! கண்டனக் கணைகளை வீசுகிறார்கள் கணக்கு வழக்கின்றி!

நான் இதுவரை மௌனமாகத்தானிருக்கிறேன். இப்போது கூட இந்தக் கடிதமூலம் நாட்டு நடப்பைத்தான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேனேயல்லாமல், எனது பழைய நண்பர்களைக்

குற்றம் சாட்டவில்லை என்பதை உணர்ந்துகொள்ள வேண்டுகிறேன். மறைவாய்ப் புதைத்த ஓடு மறைந்த மாயம் என்னவோ? என்று தியாகராஜ பாகவதர் பாடி, திருநீலகண்டர் படத்தில் கேட்டிருக்கிறேன். அதையே மாற்றி மாஃபியாவும், ஊழலும் மறைந்த மாயம் என்னவோ? என்று பாடத் தோன்றுகிறதல்லவா?

அன்புள்ள,

மு. கருணாநிதி

(01-08-1999)

2455. “இஞ்சி” என்றும் “முந்திரி” என்றும் இரு உவமைகள்!

உடன்பிறப்பே,

அந்தக் காலத்தில் திராவிட இயக்க மேடைகளில் முரசு போல் முழங்கக்கூடிய - பேரிகை போல் ஒலிக்கக் கூடிய குரலுக்குச் சொந்தக்காரர்களில் அண்ணன் திருப்பூர் மொய்தீன் அவர்களும் ஒருவராவார்!

மேடையில் ஏறி நின்றார் என்றால், அந்த வீரத்தோற்றமே நிமிர்ந்து தலைதூக்கி நிற்கும் வேங்கையை நினைவூட்டும். ஒலிபெருக்கியில்லாத காலம். உரக்கப் பேசவேண்டிய நிலைமை. அதற்கேற்ற உடற்கட்டு வாய்க்கப் பெற்ற அவரது சிம்மக் குரலில் கிளம்பும் சொற்றொடர்கள் ஒவ்வொன்றும், அம்பறாத்தூணியிலிருந்து புறப்படும் அம்புகளாகவே நாணேற்றப்பட்டு நாலு திசையிலும் சூழ்ந்து எதிர்த்திடும் பகைப்புலம் வீழ்த்தும்.

ஒலிபெருக்கியில்லாத கூட்டங்களில், ஒருநாள்கூட ஓய்வின்றி, உரையாற்றித் திராவிட இயக்கம் வளர்த்தவர் - இஸ்லாமிய சமுதாயத்தின் எழுச்சி கீதமாக எங்கணும் உலவியவர் - பின்னர் ஏராளமான ஒலிபெருக்கிகள் நிறைந்த சட்டப்பேரவையிலும் சங்கநாதம் செய்துள்ளார்.

இந்த இரண்டுவிதமான காலகட்டங்களிலும் நான் அவரை நன்கு அறிவேன். திருவாரூர் ஓடம் போக்கியாற்று மணல் வெளியிலும் - நாகை வெளிப்பாளையம் அவுரித்திடலிலும் - அவருடன் இணைந்து நின்று நான் பேசிய கூட்டங்களையும் எண்ணிப் பார்க்கிறேன். அவருக்கு முன்பாக சட்டப்பேரவையில் முதலமைச்சர் இருக்கையில் அமர்ந்து, அறிவுரைகள் குலுங்கிய அவரது விளக்கங்களைக் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியதையும் நினைத்துப் பார்க்கிறேன்.

இப்போது ஏன் எனக்கு இந்த நினைவுகள் எல்லாம் என்று என் உடன்பிறப்புகள் கேட்கக்கூடும்.

என்னுடன் பழகுகின்ற தம்பிமார்கள், பயணத்தில் என்னுடன் கலந்துகொள்ளும் தம்பிமார்கள் இவர்களுக்கெல்லாம் நன்கு தெரியும், நான் இந்த இயக்கத்தில் உழைத்திட்ட உத்தமர்களையும், ஓய்வறியாத உழைப்பாளிகளையும், ஊருக்கு ஊர் இயக்கம் வளர்த்த வீரர்களையும், தீரர்களையும் பற்றித்தான் நினைத்துக் கொண்டிருப்பேன், பேசிக்கொண்டிருப்பேன் என்ற உண்மை. அவர்களில் பலர் இன்று உயிரோடு இல்லை. இருப்பினும் நம்மோடு இல்லை என்பதற்காக, அவர்களால் இந்த இயக்கத் தரு எத்தகைய உரம் பெற்றது என்பதை என்றைக்கும் நான் மறந்தது கிடையாது. அவர்களை என் மனத்திலிருந்து விலக்கி வைத்ததும் கிடையாது.

அவர்களில் யாரேனும் இந்த இயக்கமெனும் மரத்தின் கிளையை வெட்டிட முற்படும்போதுகூட, அவர்கள் உரம் போட்டு வளர்த்த இந்த மரத்தை அவர்களால் கூட வீழ்த்த முடியாது என்றே நினைத்துப் பெருமிதம் கொள்வேன்.

இப்படி நான் இதயத் தொட்டிலில் இட்டுச் சீராட்டும் பெயர்கள் நூற்றுக் கணக்கில் உண்டெனினும், அவற்றில் ஒருவர் பெயர்தான் திருப்பூர் மொய்தீன்! அண்ணன் என்றுதான் அவரை நான் அன்பு பொழிய அழைப்பேன். அண்ணன் பட்டுக்கோட்டை அழகிரி - அண்ணன் சி.பி. சிற்றரசு - அண்ணன் திருப்பூர் மொய்தீன் - ஒருவரையொருவர் உறவுமுறை சொல்லி, அண்ணன் என்று மட்டுமல்ல - அத்தான் என்றும், மாமன் என்றும், மச்சான் என்றும், மாப்பிள்ளை என்றும் குடும்ப பாச உணர்வுடன், மதங்கள் சாதிகளை மறந்துவிட்டு தந்தை பெரியார் அவர்களாலும், பேரறிஞர் அண்ணா அவர்களாலும் வளர்க்கப்பட்ட திராவிட இயக்கமன்றோ இது!

எங்கேயோ அழைத்துக்கொண்டு போகிறாயே! விஷயத்துக்கு வா என்று கூறத் தோன்றும் உனக்கு!

கடந்த மாதம் வேலூரில் தம்பி சீதாபதி வீட்டுத் திருமணம் நடைபெற்றது என் தலைமையில் - மத்திய அமைச்சர் திரு. வாழப்பாடியார் வாழ்த்துரைக்க வந்திருந்தார். முதலில் வாழ்த்துரைக்க அருமை நண்பர் ஆர்க்காடு வீராசாமி, ஒரு வாலிபரை அழைத்தார். திருப்பூர் அல்டாப் என்பது அவர்

பெயர். தலைவர் அவர்களே! என அவர் அந்தக் கூட்டத்தில் விளித்ததுமே, அந்தக் கம்பீரக் குரல் கேட்டு வியப்பு கலந்த ஓர் எழுச்சி, மணவிழா மண்டபத்தில்! அவர் பேசப்பேச அவரையே பார்த்துக் கொண்டிருந்த வாழப்பாடியார் என்னை நோக்கி, இவர் என்று விழிகளால் வினா தொடுப்பதற்குள் - இவர்தான் அண்ணன் திருப்பூர் மொய்தீன் அவர்களின் மகன் என்றேன்.

தந்தையின் குரல் மட்டுமல்ல! அந்தத் தன்மானக் கொள்கை உணர்வையும் பெற்றுள்ள தனயன்! தனது வாழ்த்துரையில் அரசியல் சிறிது கலந்து, தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க. இடம் பெற்றிருப்பது பற்றியும் உவமையொன்று கூறி விளக்கினார்.

இஞ்சியை சாம்பார் சாதத்தில் கலந்தாலும் - தயிர் சாதத்தில் கலந்தாலும் - இஞ்சி, இஞ்சியாகத்தானிருக்குமே தவிர, அது தனது குணம், மணம், காரத்தை இழந்து விடாது என்பது போலத்தான், எந்தக் கூட்டணியில் இருந்தாலும், தி.மு.கழகம் தனது தனித்தன்மையை இழந்துவிடாது என்றுரைத்து மன்றத்தில் குழுமியிருந்தோர் கையொலியை நிரம்பப் பெற்றார்.

அந்த உவமையை நான் மிகவும் ரசித்து, தம்பி அல்டாப்பைத் தட்டிக் கொடுத்துப் பாராட்டிவிட்டு - பேச்சு நன்றாக இருந்தது. ஆனால் மற்ற அரசியல் கட்சித் தலைவர்களும் வந்துள்ள மண விழாவில், அரசியலில் ஆழமாக இறங்கிவிடக் கூடாது. மணவிழா என்பதால் யார் மனமும் கோணாமல் அரசியல் பேசுவதுதான் நலம். இன்று நீ அப்படித்தான் பேசினாய் என்று மகிழ்ச்சி தெரிவித்தேன்.

தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் மாநில இளைஞர் அணி தலைவராக இருப்பதால், தம்பி அல்டாப்பும் என் கருத்தை முழுமையாக ஏற்றுக்கொண்டு நன்றி தெரிவித்தார்.

இஞ்சி உவமையை நான் அன்றுடன் மறந்துவிட்டேன். மறந்துவிட்ட அதேமாதிரியான ஓர் உவமையை மீண்டும் படித்துச் சுவைக்கக் கூடிய ஒரு வாய்ப்பு எனக்கு ஏற்பட்டுள்ளது.

சென்னையில் ஜூலை 30 ஆம் நாள் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழா ஒன்றில், அன்புக்கினிய நண்பரும், தமிழ் மாநில காங்கிரஸ் தலைவருமான திரு. மூப்பனார் அவர்கள், அழகாகக் கூறிய உவமைதான் அது. ஏடுகளில் படித்த அந்த உவமையுடன் கூடிய அவரது பேச்சை அப்படியே தருகிறேன். நீயும் படித்துச் சுவைத்திட!

நாம் அமைத்துள்ள கூட்டணி பற்றி பலர் பலவிதமாகப் பேசுகிறார்கள். மூப்பனார் வேறு ஏதோ பாதையில் செல்கிறார் என்றுகூட எழுதுகிறார்கள். நான் எப்போதும் நேர் பாதையில்தான் செல்வேன். பாதை மாற மாட்டேன். முன்பு சென்ற பாதையும் நேர் பாதைதான். இப்போது செல்வதும் நேர் பாதைதான். இனி எப்போதும் செல்வதும் நேர் பாதைதான்.

முந்திரிப் பருப்பு பாயசத்திலும் போடுகிறார்கள். கறியிலும் போடுகிறார்கள். சாம்பாரிலும் போடுகிறார்கள். முந்திரியை எதில் போட்டாலும், அதன் சுவை மாறாது. அதன் தனித்தன்மை எந்தச் சூழலிலும் மாறாது.

உடன்பிறப்பே! மிகச் சரியான உவமையல்லவா இது! தம்பி அல்டாப் வாலிபர், அதனால், இஞ்சி எதில் கலந்தாலும் மணம் குணம் மாறாது என்றார் - திரு. மூப்பனார் அவர்களோ அவர் பெற்றுள்ள முதிர்ச்சிக்கு ஏற்ப முந்திரிப்பருப்பு உவமையை உரைத்து, அதை எதனுடன் கலந்தாலும் அந்த சுவை மாறாது என்று கூறியுள்ளார்.

இரவு உறங்குவதற்கு முன்பு இந்த ஏட்டைப் படித்து முடித்துவிட்டு, தம்பி வைரமுத்து பாதுகாத்து வைத்திருந்து என்னிடம் கொடுத்திருந்த அறிஞர் அண்ணா அவர்களின் கட்டுரைத் தொகுப்பு ஒன்றில் கண்ணையும், கருத்தையும் செலுத்தினேன்.

1947ஆம் ஆண்டு இந்திய நாடு சுதந்திரம் பெற்ற நாளை, துக்க நாளாக கடைப்பிடிக்க வேண்டுமென திராவிடர் கழகத் தலைவர் தந்தை பெரியார் அவர்கள் விடுத்த அறிக்கைக்கு மாறாக, அண்ணா அவர்கள் சுதந்திர நாளை இன்ப நாள் என்று அறிவித்து எழுதி வெளியிட்ட அறிக்கையில், அந்த நாளில் திராவிடர் கழகத்தாராகிய நாமும் பங்குபெற வேண்டும் என்று விரிவாகவும், விளக்கமாகவும் குறிப்பிட்டபோது - தம்பி அல்டாப் சுட்டிக் காட்டிய இஞ்சி உவமைக்கும், திரு. மூப்பனார் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள முந்திரி பருப்பு உவமைக்கும் பொருத்தமான ஒரு கருத்தை அப்போதே நமது இயக்கம் பற்றி எழுதிக் காட்டியுள்ளார். இதோ அண்ணாவின் அந்தக் கருத்து :-

“தொட்டால் துவண்டு விடக் கூடிய - மோதினால் நொறுங்கிவிடக் கூடிய வலிவற்ற கொள்கை அல்ல நாம்

கொண்டிருப்பது. எதில் கலந்தாலும் தனியாக விளங்கக் கூடியதும், எப்படியும் நிலைக்கக் கூடியதுமான ஜீவசக்தி நம் கொள்கைக்கு உண்டு என்பதிலே நமக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருக்கிறது"

அண்ணா கூறியுள்ள அந்த நம்பிக்கையுடன்தான்,

அண்ணா வழியில் அயராது உழைப்போம்.
ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்.
இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்.
வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்.
மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி.

என திருச்சி மாநாட்டில் 1970ஆம் ஆண்டு பிப்ரவரி 22-ல் நாம் உருவாக்கி எழுப்பிய இந்த ஐம்பெரும் முழக்கத்தை மறவாமல் இந்த மறவர் படையாம் தி.மு.கழகம் நடைபோட்டு வருகிறது. நமது வீரநடை, வெற்றிநடையாக விளங்கிட வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வலிமை காட்டுவோம்! வளம் சேர்ப்போம் தமிழகத்துக்கு மேலும் மேலும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(02-08-1999)

2456. திரு. சிதம்பரத்திடம் கேள்வியும் - அவர் பதிலும்! (1)

உடன்பிறப்பே,

பழகுவதற்கு இனியவரும், பண்பான முறையில் அரசியலை வளர்க்க வேண்டுமென்பதில் அக்கறை கொண்டவர்களில் ஒருவருமான எனது நண்பர் - மத்திய அரசின் முன்னாள் நிதி அமைச்சர் ப. சிதம்பரம் அவர்களிடம், ஒரு நாளேட்டின் சார்பில் எடுக்கப்பட்ட சிறப்புப் பேட்டியின் போது, அவரிடம் கேட்கப்பட்ட கேள்வியையும், அதற்கு அவர் அளித்துள்ள பதிலையும் படித்துப் பார்த்தேன். அது பற்றி சில விளக்கங்களை இக்கடித வாயிலாக எடுத்துரைப்பது என் கடமையாகும். உன் போன்றோர்க்கு தெரிய வேண்டியதுமாகும்.

தி.மு.க. ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள பா.ஜ.க கூட்டணிதான் அவசியம் என்று தி.மு.க.வினர் கூறுகின்றனரே! அப்படியானால் ஆட்சிக்காகவே நடக்கும் கட்சிதான் தி.மு.க.வா?

அந்தப் பத்திரிகையாளரின் இந்தக் கேள்விக்கு நண்பர் ப. சிதம்பரம் அளித்துள்ள பதில் வருமாறு :-

அரசுக்கு ஆதரவை அ.தி.மு.க. வாபஸ் பெற்ற பிறகு, நம்பிக்கை வாக்கெடுப்பு லோக் சபாவில் நடந்தது. இதில் தி.மு.க. தன் நிலையை மாற்றிக் கொண்டு பா.ஜ.க. அரசுக்கு ஆதரவாக வாக்களித்தது. இதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றாலும், ஒரு வகையில் இதை அவர்கள் நியாயப்படுத்தலாம். ஆனால் பா.ஜ.க. அரசு தோல்வி அடைந்த பிறகு, அடுத்தது தேர்தல்தான் என்ற நிலை உருவாகிவிட்ட பிறகு, பா.ஜ.க.வுடன் ஏன் தி.மு.க. தேர்தல் கூட்டணி வைத்துக் கொண்டது? இந்தக் கேள்விக்கு அவர்களிடமிருந்து இன்னும் பதிலே வரவில்லை. பா.ஜ.க. அரசுதான் தோற்றுவிட்டதே? அதன் பிறகு தி.மு.க. அரசுக்கு

எந்த ஆபத்தும் கிடையாதே! பிறகு ஏன் பா.ஜ.க.வுடன் தி.மு.க. கூட்டணி வைத்துக் கொண்டது?

இப்படியொரு பதிலை, கேள்வி வடிவத்திலேயே வழங்கியுள்ளார் நண்பர் திரு. சிதம்பரம் அவர்கள்.

முதலில் அவரைப் பார்த்து கேட்கப்பட்ட கேள்வியைச் சிறிது கூர்ந்து கவனித்தாக வேண்டும்.

ஆட்சிக்காகவே நடக்கும் கட்சிதான் தி.மு.கழகமா?

இது கேள்வியின் இறுதிப் பகுதியாகும். இதற்கு என் விடை!

ஆட்சிப் பொறுப்பை ஏற்பதும் தி.மு.கழகத்தின் குறிக்கோள்களில் ஒன்றுதான்! ஆட்சிமன்றத்திலும் நமதியக்கக் கொள்கை கோட்பாடுகளைச் செயல்படுத்துவதற்காக வாதிட வேண்டும் - அந்தப் பாராளுமன்ற ஜனநாயக ரீதியான போராட்டத்தை நடத்திட வேண்டுமேயானால், நாம் தேர்தலிலும் ஈடுபட்டு சட்டமன்றம், நாடாளுமன்றங்களுக்குச் சென்றாக வேண்டும் - அந்த வாய்ப்பு கிடைத்திட, நாம் தேர்தலில் ஈடுபட்டாக வேண்டுமென்று திருச்சியில் 1956 ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.கழக மாநில மாநாட்டிலேயே மக்களின் தீர்ப்பையேற்று அறிஞர் அண்ணா அவர்கள், தி.மு.க. தேர்தலில் நிற்கும் என்ற தீர்மானத்தை முன்மொழிந்து பேருரையாற்றியது கழக வரலாற்றில் ஒரு முக்கிய திருப்பமென்பதை எவரும் மறந்திடார்! மறுத்திடார்!

அதனையொட்டி 1957ல் தேர்தலில் களமிறங்கி, அண்ணா தலைமையில் பதினைந்து பேர் சட்டமன்றத்தில் இடம் பெற்று, எதிர்க்கட்சிக் குழுக்களில் ஒன்றாகத் திகழ்ந்து பணியாற்றினோம்.

பின்னர் 1962ல் நாவலர் தலைமையில், ஐம்பது சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட எதிர்க்கட்சியாகவே பொறுப்பேற்றோம்.

1957 முதல் 1966 முடிய ஏறத்தாழ பத்தாண்டு காலத்தில் எதிர் வரிசையிலேயிருந்து நாம் எடுத்துரைத்து வாதாடியவைகள்தான், சென்னை ராஜ்யம் என்ற பெயரை தமிழ்நாடு என்று இந்த மண்ணுக்குரிய பெயராக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையும் - சுயமரியாதைத் திருமணங்களை சட்டப்படி செல்லுபடியாக்க சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டுமென்ற கோரிக்கையும் - இந்தித் திணிப்பை அகற்றிவிட்டு - தமிழ், ஆங்கிலம் எனும்

இருமொழித் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கையும் - முப்பது ஸ்டாண்டர்டு ஏக்கரா உச்சவரம்பு சட்டத்தால் யாருக்கும் பயனில்லை. அது மிச்சவரம்பு சட்டமாகிவிட்டது என்பதால், பதினைந்து ஸ்டாண்டர்டு ஏக்கரா உச்சவரம்பு என நிர்ணயிக்க வேண்டுமென்ற கோரிக்கையும், குடியிருப்பு மனைகளை விவசாயத் தொழிலாளர்களுக்கு சொந்தமாக்க வேண்டும் என்ற கோரிக்கையும் - என்பன - தமிழக சட்டப்பேரவைச் சரித்திரம் சாற்றும் உண்மைகளாகும்.

இந்தக் கோரிக்கைகளும், இதைப்போன்ற வேறு பல முற்போக்கான கோரிக்கைகளும் அன்றிருந்த காங்கிரஸ் ஆட்சியினரால் காது கொடுத்துக் கேட்கப்படாமலே போய்விட்ட நிலையில்தான், 1967 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா தலைமையில், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைத் தமிழ்ப்பெருமக்கள் அமைத்துத் தந்தனர்.

அண்ணா தலைமையில் அமைந்த ஆட்சியிலும் - அவரது மறைவுக்குப்பிறகும் தொடர்ந்து நடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும், இப்போதும், அன்றைக்கு எதிர்க்கட்சியாக இருந்து எடுத்து வைத்த நமது கொள்கை கோட்பாட்டு வழித்திட்டங்கள் பெரும்பாலானவற்றை நிறைவேற்றிச் சாதனை புரியும் வாய்ப்பை நாம் பெற்றிருக்கிறோம்.

எனவே நமது கழகத்தின் குறிக்கோள்களில் ஒன்றாக, ஆட்சியில் அமர்வது என்பதும் இருப்பது ஏதோ பெருங்குற்றமான காரியமல்ல! பாபச் செயலுமல்ல!

சிதம்பரம் அவர்களிடம் கேள்வி கேட்டவருக்கு, தி.மு.கழகம் ஆட்சியில் இருப்பதால் இந்த மாநிலத்திற்கும் - மாநிலத்திலுமுள்ள எல்லா பிரிவு மக்களுக்கும் எத்தகைய நன்மைகள், நல்வாய்ப்புகள் கிட்டியுள்ளன என்பதை விரிவாக விளக்க வேண்டிய அவசியமில்லையென்றே கருதுகிறேன்.

தொழில்துறையில் மூன்றாண்டுகளுக்கு முன்பு, ஐந்தாவது இடத்தில் இருந்த தமிழகத்தை, இன்றைக்கு மராட்டிய மாநிலத்தையும் முந்திக்கொண்டு முதலிடத்துக்கு கொண்டு வந்திருப்பது கழக ஆட்சிதான்!

மேயர் - சேர்மன் - ஒன்றியம் - ஊராட்சி என்ற சொற்களையே மறந்துவிட்ட நகர்ப்புற கிராமப்புற மக்களுக்கு மீண்டும் அவற்றை

நினைவுபடுத்தி, உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தலை நடத்தி, அவற்றில் 33 சதவீதம் பெண்களுக்கு நிர்வாகப் பொறுப்பில் பங்கு வகிக்கும் வாய்ப்பளித்துள்ளது கழக ஆட்சிதான்!

பெண்களுக்கும் ஆண்களைப் போல, சொத்தில் சம உரிமை என்று சட்டம் செய்திருப்பது கழக ஆட்சிதான்!

கல்வி, வேலை வாய்ப்பு இடஒதுக்கீட்டில் மிகவும் பின்தங்கிய மக்களுக்கு இருபது சதவீதம் வழங்கியதோடு - கிராமப்புறத்து மாணவர்க்கும் 15 சதவீதம் ஒதுக்கீடு அளித்து சமூக நீதிக்காவல் அரணாக விளங்குவதும் கழக ஆட்சிதான்!

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் - பழைய கால மன்னர் ஆட்சிக்குப் பிறகு, முதன்முதலாக பாசன வசதி பெருகிட ஆறு, குளங்கள், கண்மாய்களைத் தூர்வாரி, ஆழப்படுத்தி, அகலப்படுத்திடும் அற்புதம் விளைத்தது கழக ஆட்சிதான்!

கல்விக்கூடங்களில் கணிப்பொறி யுகத்தைப் பரவலாக அறிமுகப்படுத்தி - புதியதோர் உலகம் படைத்திட வாரீர் என இளைஞர்களை ஊக்குவிப்பதும், தமிழ் இணையம் (இன்டர்நெட்) ஒருமித்த நிலையில் கண்டிட, உலகத் தமிழர்களை ஒன்று சேர்த்து மாநாடு நடத்தி வெற்றி கண்டுள்ளதும் கழக ஆட்சிதான்!

அரசு அலுவலர், ஆசிரியர், தொழிலாளர், நெசவாளர் மற்றும் அமைப்புசாரா பாட்டாளி மக்களுக்கும் அவர்தம் தேவையுணர்ந்து சேவை புரியும் ஆட்சி கழக ஆட்சிதான்!

சாதி மத பேதமெனும் மோதல் அகற்றிட, சர்வ கட்சியினர் கருத்துக்களைக் கேட்பதிலும் - வன்முறை வலைகளை அறுத்து, சட்டம், ஒழுங்கு, அமைதி காப்பதிலும் - எந்தப் பாகுபாடும் எவ்விதப் பாரபட்சமுமின்றி நடப்பதிலும் - முன்னோடியாக இருப்பது கழக ஆட்சிதான்!

பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம் எனும் சரித்திரம் படைத்துள்ளதும் கழக ஆட்சிதான்! சட்டமன்ற உறுப்பினர் திட்டம் நிறைவேற்றியதும் கழக ஆட்சிதான்!

இலட்சக்கணக்கான ஏழைப்பெண்களுக்கு, பத்தாயிரம் ரூபாய் வீதம் நிதி வழங்கி, திருமண உதவித்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருவதும் கழக ஆட்சிதான்!

இப்படி எத்தனையோ எண்ணற்ற சாதனைகள் கழக ஆட்சியின் ஒளிக்கதிர்களாக ஜொலித்துக் கொண்டிருக்கின்றன.

ஆட்சிக்காகவே நடக்கும் கட்சிதான் தி.மு.க.வா? என்று சிதம்பரம் அவர்களிடம் வினா எழுப்பியுள்ளவருக்கு, இந்தச் சாதனைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி,

ஆட்சிக்காகவும் நடக்கும் கட்சிதான் தி.மு.க.! என்று சொல்வதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.

பத்திரிகையாளரின் கேள்விக்கான விளக்கத்தை மட்டும் சொன்னால் போதாது. கொண்ட கொள்கைக்காக, அதாவது ஜனநாயகத்தைக் காத்திடும் போராட்டமான எமர்ஜென்சி எதிர்ப்புப் போராட்டத்திற்காக ஆட்சியை இழந்ததும் தி.மு.க.தான்!

ஈழத் தமிழர்களுக்காக கண்ணீர் விட்டதற்காக - அவர்தம் இன்னல் கண்டு கண்டனம் செய்ததற்காக - இரண்டாவது முறையாக ஆட்சியை இழந்ததும் தி.மு.க.தான்! என்பதையும் நான் நினைவுபடுத்தியாக வேண்டியிருக்கிறது!

அடுத்த கடிதத்தில், சிதம்பரம் அவர்கள் சொன்ன பதிலுக்கான விளக்கத்தை எழுதுகிறேன். எதிர்பார்த்திரு!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(04-08-1999)

2457. திரு. சிதம்பரத்திடம் கேள்வியும் - அவர் பதிலும்! (2)

உடன்பிறப்பே,

நாளேடு ஒன்றுக்குத் தந்த சிறப்புப் பேட்டியில், நண்பர் திரு. சிதம்பரம் அவர்களிடம் கேட்கப்பட்ட கேள்விக்கு, எனது பதில் என்ன? என்பது குறித்து நேற்றைய கடிதத்தில் எழுதியிருந்தேன். அந்தக் கேள்விக்கு சிதம்பரம் அவர்களால் அளிக்கப்பட்ட பதில் குறித்து என் விளக்கத்தை அடுத்த கடிதத்தில் எழுதுவதாகவும் கூறியிருந்தேன்.

எனவே அந்தப் பேட்டியில் அவர் தந்த பதிலை மீண்டும் ஒரு முறை நினைவுபடுத்திக் கொள்வது நலமென்று கருதுகிறேன்.

> "அரசுக்கு ஆதரவை அ.தி.மு.க. வாபஸ் பெற்ற பிறகு, நம்பிக்கை வாக்கெடுப்பு லோக் சபாவில் நடந்தது. இதில் தி.மு.க. தன் நிலையை மாற்றிக் கொண்டு பா.ஜ.க. அரசுக்கு ஆதரவாக வாக்களித்தது. இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றாலும், ஒருவகையில் இதை அவர்கள் நியாயப்படுத்தலாம். ஆனால் பா.ஜ.க. அரசு தோல்வி அடைந்தபிறகு, அடுத்தது தேர்தல்தான் என்ற நிலை உருவாகிவிட்டபிறகு, பா.ஜ.க.வுடன் ஏன் தி.மு.க. தேர்தல் கூட்டணி வைத்துக் கொண்டது? இந்தக் கேள்விக்கு அவரிடமிருந்து இன்னும் பதிலே வரவில்லை. பா.ஜ.க. அரசுதான் தோற்றுவிட்டதே? அதன் பிறகு தி.மு.க. அரசுக்கு எந்த ஆபத்தும் கிடையாதே! பிறகு ஏன் பா.ஜ.க.வுடன் தி.மு.க. கூட்டணி வைத்துக் கொண்டது?"

இப்படிக் கேள்வி வடிவத்திலேதான் சிதம்பரம் அவர்கள் தனது பதிலை அளித்துள்ளார்.

இந்தக் கேள்விக்கு அவரிடமிருந்து இன்னும் பதிலே வரவில்லை என்று அவர் கூறுவது சரியல்ல! நானளித்த பதிலை அவர் ஏடுகளில் படிக்கவில்லைபோலும். இதற்கான எனது பதில் எல்லா ஏடுகளிலும் பெரும் பகுதி வெளிவந்துள்ளது. முரசொலியில் முழுமையாக வெளியிடப்பட்டுள்ளது. இதற்கான எனது பதிலைச் சொல்லி பல நாட்கள், பல வாரங்கள் ஓடிவிட்டன. இருப்பினும் மீண்டும், அந்தப் பதிலைச் சொல்லுகிற வாய்ப்பு ஏற்பட்டிருப்பதற்காக ஒருவகையில் மன ஆறுதல் பெறுகிறேன்.

நம்பிக்கை வாக்கெடுப்பு நடந்தபோது, வாஜ்பாய் அரசுக்கு ஆதரவாக தி.மு.க. வாக்களித்ததை ஏற்றுக் கொள்ள முடியாது எனினும் ஒருவகையில், அதை அவர்கள் நியாயப்படுத்தலாம் என்று சிதம்பரம் அவர்கள் கூறியிருப்பதிலிருந்தே நியாயப்படுத்தக் கூடிய காரணம் இருக்கிறது என்பதை, அவர் ஒருவகையில் ஒப்புக்கொண்டிருக்கிறார் என்ற உண்மை ஒளிவிடத்தான் செய்கிறது.

முதலில் அந்த நியாயப்படுத்தக்கூடிய காரணம் என்னவென்பதை ஆராய்வோம்.

முழு முதல் காரணம், அய்யத்திற்கிடமின்றி உள்ளங்கை நெல்லிக்கனிபோலத் தெளிவாகத் தெரிந்த காரணம், இன்று பொதுமக்களிடம் ஜெயலலிதா அவிழ்த்துக் கொட்டும் பொய் மூட்டைகளில் இருந்து சிதறி உருளுகின்ற எந்தக் காரணமும் அல்ல என்பதும் - நூற்றுக்கு நூறு அந்த அம்மையாரின் சொந்த சுயநலத்துக்காகத்தான் மத்திய ஆட்சியைக் கவிழ்க்க முனைந்தார் என்ற காரணத்தை தி.மு.கழகம் நன்றாகவே உணர்ந்திருந்தது.

மதவாதம் - மதச்சார்பின்மை - என்றெல்லாம் இன்று அடுக்குத் தொடர் வசனங்களை எழுதிப் படிக்கிறாரே, இந்த அம்மையார், கடந்த 13 மாத ஆட்சிக் காலத்தில், அந்தச் சொற்களை மறந்தாவது பேசியதுண்டா என்றால் இல்லை! இல்லவே இல்லை!

மதவாதத்திற்காகவும் - விஷ்ணுபகவத் விவகாரத்துக்காகவும் - போராடித்தான் இறுதியில் எமது ஆதரவைத் திரும்பப் பெற்றோம் என்று கூட்டத்திற்குக் கூட்டம் கூவிப் பிதற்றுகிறாரே! பொக்ரான் அணுகுண்டு வெடித்த காட்சியை பிரதமர் அவர்கள், சிதம்பரத்துக்கும், மாறனுக்கும் மட்டுமே காட்டினார் என்று ஜமக்காளத்தில் வடித்த பொய்யைப் போகிற இடமெல்லாம்

புலம்பித் திரிகிறாரே! இவைபற்றியெல்லாம் அ.தி.மு.க. சார்பில் வாஜ்பாய் அவர்கள் எதிர்த்துப் பேசியபோது நாடாளுமன்றத்தில் குறிப்பிட்டதுண்டா? இல்லையே! தி.மு.க. ஆட்சியைக் கலைக்கச் சொன்னோம். அதை வாஜ்பாய் அரசு ஏற்றுக் கொள்ளவில்லை என்று, சாட்டப்பட்டதே தவிர, பா.ஜ.க. அரசு மதவாத அரசு, அதனால்தான் எங்கள் ஆதரவை வாபஸ் பெறுகிறோம் என்று முதலிலும் பேசவில்லை. பிறகும் பேசவில்லை.

அமைச்சர்கள் இலாகா மாற்றமா? வழக்கறிஞர்கள் நியமனமா? நீதிபதிகள் பந்தாடலா? தன்மீதுள்ள வழக்குகளை முடக்கிட நோட்டிபிகேஷனா? எல்லாவற்றுக்குமே போயஸ் தோட்டத்திலிருந்து ஆணைகள் கிளம்புவதும் - அவற்றை அட்டியின்றி நிறைவேற்றுவதற்கு மத்திய அரசின் மௌனமான சம்மதம் கிடைப்பதும் - என்ற நிலை தொடர்ந்து தொடர்ந்து இறுதியாக, இன்னும் ஒருக்கணம்கூட பொறுத்திட இயலாது! தமிழகக் கழக ஆட்சியைக் கலைத்தே தீரவேண்டும் என்று தோட்டத்துக் கட்டளைக்கு மத்தியிலிருந்து மறுப்பு வெளிப்பட்டவுடன்தான், சினம் பிறந்தது! சீற்றம் கிளம்பியது! இந்த ஆட்சியைக் கவிழ்க்கும் கூற்றம் நானே! என்று அம்மையார் புறப்பட்டார் டெல்லிப் பட்டணத்திற்கு!

எனவே, பெரியார் பாஷையில் சொல்ல வேண்டுமேயானால், வாஜ்பாய் ஆட்சியைக் கவிழ்க்க ஜெயலலிதாவுக்கு மதவாதமோ அல்லது மண்ணாங்கட்டியோ, எந்த வெங்காயமும் காரணம் இல்லை - தி.மு.க. ஆட்சியைக் கலைத்திட வாஜ்பாய் முன்வரவில்லை என்பதைத் தவிர!

நான் எங்கள் அ.தி.மு.க. உறுப்பினர்களின் ஆதரவை வாபஸ் பெறுகிறேன். நீங்கள் வாஜ்பாய் ஆட்சியைக் கவிழ்க்க ஆதரவு திரட்ட வேண்டும். ஆட்சி கவிழ்ந்த அடுத்த நிமிடமே நீங்கள் பிரதமர்! பிரதமர் பதவியேற்ற அடுத்த நாளே தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டும். இந்த நிபந்தனையை ஏற்றால் நான் என் கட்சி ஆதரவை வாபஸ் பெற்று வாஜ்பாய் கவிழ்ந்திட துணை நிற்கிறேன்

ஜெயலலிதாவின் இந்த வலைவீச்சில், திருமதி சோனியா சிக்கினார். ஒப்புக்கொள்ளத் தயக்கம் காட்டவில்லை. எழுதாத ஒப்பந்தம் நிறைவேறியது. இந்த ரகசிய ஒப்பந்தம் பற்றி சோனியா அவர்களைச் சுற்றியுள்ள காங்கிரஸ் முக்கிய தலைவர்களில் ஒரு சிலர் தம்பி முரசொலி மாறனிடம் கூறினர்.

தி.மு.க. அரசைக் கலைப்பது. தன்மீதுள்ள வழக்குகளைத் தானாகவே செத்துமடிய விடுவது. பல கோடி ஊழல்களிலேயிருந்து தப்பித்துக் கொள்வது. இந்தத் திட்டத்தை சோனியாவுடன் கலந்து பேசி டில்லிப் பட்டினத்திலே வகுத்துவிட்டு, வாஜ்பாய் ஆட்சிக்குத் தன் கட்சி கொடுத்துவந்த ஆதரவை ஜெயலலிதா வாபஸ் வாங்கிக் கொண்டதுதான் உண்மையாகவே நடைபெற்ற ரகசியச் சதி ஆகும்.

இதை தம்பி மாறன், நண்பர் சிதம்பரம் அவர்களிடமும், த.மா.கா. தலைவர் அவர்களிடமும் உரிய நேரத்தில் டெல்லியில் நேரிலேயே சந்தித்தும் கூறியிருக்கிறார். சென்னையில் நானும், அவரும் டெல்லி அரசியல் நெருக்கடி பற்றி விவாதித்த நேரத்திலும் இந்த சதி பற்றிக் கூறப்பட்டது.

அதனால்தான் திரு. சிதம்பரம் அவர்கள், தி.மு.க. வாஜ்பாய்க்கு ஆதரவாக வாக்களித்ததை ஒருவகையில் நியாயப்படுத்தலாம் என்று அந்தப் பேட்டியில் சுட்டிக் காட்டியுள்ளார் என்று கருதுகிறேன்.

உடன்பிறப்பே, நான் அளித்துள்ள இந்த விபரங்களிலேயிருந்து வாஜ்பாய் அரசை ஜெயலலிதா கவிழ்த்ததற்கு அந்த அம்மையார் மதச்சார்பின்மையின் மீது கொண்டுள்ள மகத்தான பற்றும், பாசமும் காரணமில்லை என்பது எல்லோராலும் புரிந்து கொள்ளப்படக் கூடிய உண்மையாகும்.

ஏனெனில் பா.ஜ.க. ஆட்சி வருவதற்கு முன்பு - பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பின்பு என இரு கூறுகளாகக் காலகட்டங்களைப் பிரித்துப் பார்த்தால், முதற்கால கட்டத்தில்தான் அயோத்தியில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட சம்பவம். அதற்கான கரசேவைக்கு ஆதரவளித்துப் பேசி டெல்லி முதலமைச்சர்கள் மாநாட்டில் ஜெயலலிதா முழங்கியதும் - மசூதி இடிக்கப்படும்போது டெல்லி காங்கிரஸ் ஆட்சியின் ராணுவம் ஏழு கிலோ மீட்டர் தொலைவில் நின்று வேடிக்கை பார்த்ததும் - சிறுபான்மை மக்கள் மறந்துவிட்ட நிகழ்ச்சிகள் அல்ல!

இன்றைக்கு அந்த ஜெயலலிதாவும், காங்கிரசும் கூட்டணி வைத்துக்கொண்டு - மதச்சார்பற்ற நிலை என்ற மந்திரத்தை உதட்டளவில் உச்சரிக்கிறார்கள் என்பதை உணர்ந்துள்ள வாக்காளப் பெருமக்கள் இவர்களிடம் அவ்வளவு எளிதாக ஏமாந்துவிடப் போவதில்லை!

அங்கொன்றும் இங்கொன்றுமாக சிறுபான்மை மக்கள் மீது தாக்குதல் - மோதல் - இந்த ஆட்சியில் நடைபெற்றிருப்பதும் கூட பெரும்பாலும் காங்கிரஸ் கட்சி ஆட்சி நடக்கும் மாநிலங்களிலேதானே தவிர, நாடு தழுவிய அளவில் எதுவுமில்லை.

அந்தச் சம்பவங்களுக்குக்கூட நம்மைப் போன்றவர்கள் கடும் கண்டனம் தெரிவித்த நேரத்தில், ஜெயலலிதா அப்போது எங்கே போயிருந்தார் என்ற கேள்வி சிறுபான்மைச் சமுதாய மக்களின் உள்ளத்தில் எழாமல் போய்விடாது!

வாஜ்பாய் அரசு கவிழாமல் இருந்திட வேண்டுமென்று வாக்களித்த தி.மு.கழகம் அதனை நியாயப்படுத்துவதற்கு இவைகளுங்கூட காரணங்கள்தான்!

இவை மட்டுமின்றி, 1968 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு முன்னிலையில் மாநிலங்களிடையே சுமார் 25 தடவைகளுக்கு மேல் பேச்சுவார்த்தை நடந்தும்கூட, காவிரிப் பிரச்சினையில் தீர்வு ஏற்படாமல் - இறுதியில் திரு. வி.பி. சிங் அவர்கள் காலத்தில் நடுவர் மன்றம் அமைந்தது. அந்த நடுவர் மன்ற இடைக்கால ஆணையையும் கர்நாடக அரசு நிறைவேற்ற முடியாது - 205 டி.எம்.சி. தருவதற்கு ஒப்புக்கொள்ள இயலாது - என்று மறுத்து வந்ததை மாற்றி, அந்த இடைக்கால ஆணையை கர்நாடகம் ஒப்புக்கொள்ளச் செய்தவர் பிரதமர் வாஜ்பாய் என்பதை தமிழ்நாட்டு மக்களின் நலன் நாடி உழைத்திடும் தி.மு.கழகம் நன்றியுணர்வுடன் நியாயப்படுத்துவதற்குரிய காரணங்களில் ஒன்றுதான்!

கன்னியாகுமரி கடற்கரையில் மண்டபம் எதுவும் இனி எழுப்பலாகாது என்றுள்ள தடையைக் காட்டி காமராஜர் மணிமண்டபத்துக்கு இருபது ஆண்டுகளுக்கு மேலாக மத்திய அரசுத் துறையினர் மறுத்து வந்ததையும் மீறி, நமது அரசின் கோரிக்கையை ஏற்று குமரிக் கடலோரம் காமராஜ் மணிமண்டபம் எழுப்பிட வாஜ்பாய் அரசு வாய்மொழி சம்மதம் தெரிவித்ததும்கூட, நாடாளுமன்ற நம்பிக்கை வாக்கெடுப்பின்போது நாம் எடுத்த நிலையை நியாயப்படுத்துவதற்குரிய காரணங்களில் ஒன்றுதான்!

சரி! பா.ஜ.க. அரசுதான் தோற்றுவிட்டதே? பிறகு தேர்தல்தான் என்ற நிலை ஏற்பட்ட பிறகு பா.ஜ.க.வுடன் ஏன் தி.மு.க. தேர்தல் கூட்டணி வைத்துக் கொண்டது?

இது சிதம்பரம் அவர்கள் அந்தப் பேட்டியின்போது விடுத்துள்ள கேள்வி! ஆம்! முக்கியமான கேள்வி! வாஜ்பாய் அரசை ஆதரித்து வாக்களித்ததைக் கூட கழகம் நியாயப்படுத்தலாம். ஆனால் அதற்குப் பிறகு, பா.ஜ.க.வுடன் தி.மு.க. தேர்தல் கூட்டணி வைத்துக் கொண்டதை எப்படி நியாயப்படுத்த முடியும்? என்பதுதான் திரு. சிதம்பரம் எழுப்பிடும் வினா!

இந்த வினாவுக்கான விடை அடுத்த கடிதத்தில்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(05-08-1999)

2458. திரு. சிதம்பரத்திடம் கேள்வியும் - அவர் பதிலும்! (3)

உடன்பிறப்பே,

1999 ஏப்ரல் 17 ஆம் நாளன்று, நாடாளுமன்றத்தில் வாஜ்பாய் அவர்களின் தலைமையிலான ஆட்சியின் மீது நம்பிக்கை கோரும் தீர்மானம் குடியரசுத்தலைவரின் ஆணையின்படி கொண்டுவரப்பட்டு, அந்தத் தீர்மானம் ஒரு வாக்கு வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டு வாஜ்பாய் அவர்களின் ஆட்சி கவிழ்ந்தது.

வாக்கெடுப்பின்போது நடுநிலை வகிக்கப்போவதாக நாடாளுமன்ற அவையிலேயே முழக்கமிட்டு அறிவித்த மாயாவதி அவர்களின் பகுஜன் சமாஜ் கட்சியினர், இறுதி நேரத்தில் முடிவை மாற்றிக்கொண்டு நம்பிக்கைத் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தனர்.

அப்போது சட்டப்பேரவை த.மா.கா. உறுப்பினர் ஒருவர் என்னைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார். இன்னொரு த.மா.கா. சட்டமன்ற உறுப்பினர் நேரிலேயே வந்தார். இருவரும் மாயாவதி கட்சியினரின் திடீர் முடிவு கேட்டு அதிர்ச்சியுற்றிருந்தனர். காரியம் கெட்டுவிடும் போலிருக்கிறது. உடனே கவனித்து மத்திய ஆட்சியைக் கவிழாமல் காப்பாற்ற முயற்சி செய்யுங்கள் என்று பரபரப்புடனும், பதைப்புடனும் கூறினார். நானும் உடனடியாக டெல்லிக்குத் தொடர்பு கொண்டு பேசி, அவர்கள் சொன்ன செய்தி உண்மை என்பதைப் புரிந்துகொண்டேன். இனி என்ன செய்ய முடியும் வாக்களிக்கும் நேரத்தில் முடிவை மாற்றிக் கொண்டவர்களை, மறுபடியும் மாற்ற முடியுமா, என்ன? என்று அவர்களிடம் கூறி சமாதானப்படுத்தினேன்.

வாஜ்பாய் ஆட்சி கவிழ வேண்டும் என்பதில் என்னிடம் தொடர்பு கொண்டு பேசிய அந்த த.மா.கா. நண்பர்களுக்கு

ஒருவேளை அக்கறை இருந்திருக்கலாம். ஆனால், ஜெயலலிதா முயற்சி செய்து அந்தக் கவிழ்ப்பு வேலையில் வெற்றி பெற்றுவிட்டார் என்ற நிலை ஏற்படக் கூடாது - அப்படி ஏற்பட்டால் அந்த அம்மையார் தலைகால் தெரியாமல் ஆடுவார் - பிறகு ஊழல் சாம்ராஜ்யாதிபதிகளால் எது வேண்டுமானாலும் செய்யமுடியும் என்ற ஆணவமும், அகந்தையும் ஏற்பட்டு சமுதாயமே சீரழிந்துவிடும் என்பதிலும் - அதைத் தடுத்து நிறுத்த வேண்டு மென்பதிலும் அந்த நண்பர்கள் அதிக அக்கறை கொண்டிருந்தார்கள் என்பதுதான் உண்மை!

அவர்கள் மட்டுமல்ல! அண்ணே! வாஜ்பாய் ஆட்சி, ஜெயலலிதா கட்சியில்லாமல் ஒரு ஆறுமாதமாவது நடக்க வேண்டும். இப்போது அவர் ஆட்சியைக் கவிழ்க்கும் அந்தப் பெருமையை ஜெயலலிதாவுக்கு விட்டுவிடக் கூடாது என்று என்னிடம் திட்டவட்டமாகக் கூறிய த.மா.கா.வின் முன்னணித் தலைவர்களும் கூட உண்டு.

அவர்களின் கருத்து, வாஜ்பாய் அரசு நீடிக்க வேண்டும் என்ற ஆசையால் எழுந்தது அல்ல - ஊழலில் ஊறித் திளைத்து, ஊர்க் கொள்ளையடித்து, உத்தமர்களைப் போல உலவிக் கொண்டிருப்பவர்கள்; தங்களுக்குக் கொடி தூக்கவும் - குடைபிடிக்கவும் - கொத்தடிமைகளாக இருக்கவும் - சொத்தை சோடைகளை மட்டுமின்றி, பிரபலங்களைக் கூட நல்ல விலை கொடுத்து வாங்கி அவர்கள் முதுகிலேறி பவனி வர முடியுமென்று நம்பிக் கொண்டிருப்பவர்களுக்கு இந்தக் கவிழ்ப்புப் படலத்தின் வாயிலாக ஒரு கித்தாய்ப்பு வந்துவிடக்கூடாதே என்ற ஆதங்கத்தினால் எழுந்ததுதான்!

அத்தகையோர் கருத்துக்கு ஆக்கம் பெருகிவருகிறது என்றும், அதன் வழிநின்று நம்பிக்கை வாக்கெடுப்பில் த.மா.கா. நடுநிலை வகிக்கக் கூடுமென்றும் முதல்நாள் இரவு வரையில் நாட்டுமக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஏடுகளும் அவ்வாறே எதிர்பார்த்து எழுதின. அப்படி த.மா.கா. நடுநிலை வகித்து இருந்தால் இன்று நாட்டின் வரலாறே வேறு!

ஆனால் த.மா.கா. தலைவர் அன்புக்குரிய மூப்பனார் அவர்கள், நேரு குடும்பத்தின் பால் கொண்டிருந்த பற்று, பாசம், உரிமை, உறவு, தூய்மையான விசுவாசம் இவைகளின் காரணமாக, வாஜ்பாய் அரசு கவிழ்க்கப்பட்டால் திருமதி சோனியா அவர்கள்

ஆட்சித் தலைமைப் பொறுப்புக்கு வரக்கூடும் என்றும் - வர வேண்டும் என்றும் - நினைத்திருந்தார் என்றால் அதில் என்னால் குறைகாண முடியாது. யாராலும் குறைகாண முடியாது.

ஆனால் சோனியா அவர்கள், மூப்பனார் அவர்களின் அந்த தூய்மையான கருத்துக்கும், நம்பிக்கைக்கும் மதிப்பளிக்கவில்லை என்பது அந்த அம்மையார் அவர்கள் முதலிலும் சரி, பின்னரும் சரி, நடந்துகொண்ட முறையிலே இருந்து நாட்டு மக்களுக்கு நன்றாகப் புரிந்துதான் இருக்கிறது.

இந்திய நாட்டு அரசியலில் சோனியாவை நுழைய விடமாட்டேன் - தீவிரமாக எதிர்ப்பேன் - என்று கோடையிடிக் குரலில் கர்ச்சனை செய்த ஜெயலலிதாவுடன் எத்தனை முறை டெல்லியிலே சோனியாவின் சந்திப்பு-அவர் இவர் இல்லம் வர, இவர் அவரைச் சென்று பார்க்க என்று எத்தனை எத்தனை செய்திகள்!

ஆனால் மூத்த தலைவர்களில் ஒருவரும் - நேரு குடும்பத்து விசுவாசியுமான மூப்பனாருக்கு மட்டும், அவர் டெல்லியில் பல நாள் காத்திருந்தும்கூட, வாக்கெடுப்புக்கு முதல் நாள்தான் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கப்படுகிறது என்பது கொடுமையிலும் கொடுமையல்லவா?

அதைப் பெரிதுபடுத்தாத பெருந்தன்மையின் காரணமாக, அரசியல் ரீதியாக நானும், வேறு சிலரும் விடுத்த வேண்டுகோள்களையும் - அவரை நண்பராகவும், அவரால் நண்பராகவும் முறையே ஏற்றுக்கொண்டுள்ளவர்களின் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களின் வேண்டுகோள்களையும் திரு. மூப்பனார் அவர்கள் புறக்கணித்துவிட்டு, தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவரின் வாக்குகளை வாஜ்பாய் அரசுக்கு எதிராக அளிக்குமாறு கட்சியின் சார்பில் கட்டளையிட்டார். நம்பிக்கை தீர்மானம் தோற்கடிக்கப்பட்டு விட்டது. வாஜ்பாய் அரசு கவிழ்ந்து விட்டது.

திரு. சிதம்பரம் அவர்கள் நம்மைப் பார்த்துக் கேட்கிற கேள்வியே இதுதான்! வாஜ்பாய் அரசுக்கு ஆதரவாக வாக்களித்தீர்கள் - அந்த அரசு கவிழ்ந்த பிறகும், அந்தக் கட்சியுடன் ஏன் கூட்டணி வைத்தீர்கள்?

இந்தக் கேள்விக்கு நான் விளக்கமளிக்கும் நேரத்தில் ஓராண்டுக்காலம் இந்திய அரசியல் அரங்கின் நிகழ்ச்சிகள் குறித்துப் பின்னோக்கிச் சென்று சிலவற்றைக் கூற வேண்டியுள்ளது.

1998 மார்ச் 19ஆம் நாள், திரு. வாஜ்பாய் அவர்களின் தலைமையில், மத்தியில் கூட்டணி ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்டது.

அந்த நாடாளுமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு முடிவுறும் வரையில் அந்த ஆட்சி வரக்கூடாது என்பதற்கு மக்களைத் திரட்டுகிற பணியில் ஈடுபட்டிருந்த அணியில் அங்கம் வகித்திருந்த தி.மு.கழகத்தின் தலைவன் என்ற முறையில், என்னைச் சந்தித்த செய்தியாளர்களிடம் ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள வாஜ்பாய் அவர்களுக்கு வாழ்த்துக் கூறினேன். அதனையொட்டி வாஜ்பாய் அரசு நீடிக்குமா? என்று செய்தியாளர்கள் வினவியபோது, எந்த ஆட்சியானாலும், அது ஜனநாயக ரீதியாக அமைந்துவிட்ட பிறகு, ஐந்தாண்டு காலம் நீடிப்பதையே நான் விரும்புகிறேன் என்று தெரிவித்திருக்கிறேன்.

மத்தியிலே பா.ஜ.க. கூட்டணி ஆட்சி, தொடக்கத்திலேயே ஜெயலலிதாவின் சொந்த நலத்தொல்லைகளைத் தாங்க முடியாமல் - புயலில் படகாக தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்தியப் பொதுச்செயலாளர் சுர்ஜித் அவர்கள், சென்னைக்கு வந்து என் இல்லத்தில் என்னையும், அதைப்போலவே மூப்பனார் அவர்களையும் சந்தித்துப் பேசினார்.

பா.ஜ.க. அல்லாத, காங்கிரஸ் அல்லாத மூன்றாவது புதிய அணியொன்று, முன்பிருந்த கூட்டணிகளைப் போல அல்லாது செம்மையான முறையில் அமைக்கப்பட வேண்டுமென்று கருத்து தெரிவித்தார். அதனை நாங்கள் ஏற்றுக் கொண்டோம்.

ஆனால் அதுபற்றி நாங்கள் டெல்லிக்குச் சென்றபோதும், கம்யூனிஸ்டு கட்சிகளின் தலைவர்கள் சென்னைக்கு வந்தபோதும்தான் பேசப்பட்டதே தவிர, ஆக்கபூர்வமான முயற்சிகள் எதுவும் ஆரம்பிக்கப்படவே இல்லை. ஓராண்டுக் காலத்துக்கு மேலாக அந்தப் புதிய அணி பேச்சளவில் மட்டுமே இருந்து, பின்னர் மங்கி மறைந்து போயிற்று என்றே கூறலாம்.

இந்தச் சூழலில், நிலையான ஆட்சி என்று வாக்காளப் பெருமக்களை வசீகரித்து வெற்றி பெற்றிருந்த ஜெயலலிதா, முற்றிலும் தனது சுயநல சூதாட்டத்திற்காகக் கடைசி வரையில் தன்னுடன் துணை வரவில்லையென்று கோபங்கொண்டு, பா.ஜ.க. ஆட்சிக்குத் தந்திருந்த ஆதரவை விலக்கிக் கொண்டார்.

பிறகுதான் - நான் முதலில் குறிப்பிட்டதைப் போல நாடாளுமன்றத்தில் நம்பிக்கைத் தீர்மானம்! வாக்கெடுப்பு! வாஜ்பாய் அரசுக்குத் தோல்வி!

நம்பிக்கைத் தீர்மானத்தில் வாக்களித்தீர்கள் சரி! அதற்குப் பிறகும் அவர்களுடன் கூட்டணி ஏன்? இதுதான் சிதம்பரம் அவர்களின் கேள்வி! இதற்கான விளக்கத்தை இதோ தொடங்குகிறேன்!

திரு. வாஜ்பாய் அவர்களை ஆதரித்து வாக்களித்தது ஏன்? என்று நாங்கள் மக்களுக்கு விளக்கமளிக்க எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. ஆனால் அதே நேரத்தில், வாஜ்பாய் அரசு கவிழ்ந்த பத்து நாளைக்குப் பிறகு, வாஜ்பாய் அரசுக்கு எதிராக ஏன் வாக்களித்தோம் என்று சென்னை திருவல்லிக்கேணியில் திரு. மூப்பனார் அவர்கள் தலைமையில், ஜனநாயக முற்போக்குக் கூட்டணி என்ற பெயரால் 28.4.99 அன்று ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்திற்கு அழைக்கப்பட்டு கலந்து கொண்டு உரையாற்றிய தலைவர்கள் த.மா.கா. சார்பில் திரு. மூப்பனார், திரு. சிதம்பரம் - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பில் திரு. சங்கரய்யா, திரு. வரதராஜன், இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பில் திரு. நல்லகண்ணு, திரு.சுப்பராயன், ஜனதாதளம் சார்பில் திரு. ஜி.ஏ. வடிவேலு, இந்திய தேசிய லீக் சார்பில் திரு.அப்துல் லத்தீப் ஆகியோர் ஆவர். அந்தக் கூட்டத்திற்கு தி.மு.க. அழைக்கப்படவில்லை.

ஏன் அழைக்கப்படவில்லை என்பதற்கு திரு. சிதம்பரம் அவர்கள் என்ன காரணம் கூறுவாரோ? தெரியாது!

மாறாக 21ஆம் தேதி, த.மா.கா. கட்சியும், இடதுசாரி கட்சிகளும் கூட்டம் கூட்டி பா.ஜ.க.விற்கு நான் ஆதரவு தெரிவித்ததை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்கள். அதைப்பற்றி என்னிடம் செய்தியாளர்கள் கேட்டபோது - இன்று (21.4.99) அவர்கள் கூட்டியக் கூட்டத்தை அந்தக் கட்சிகளின் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து நாடாளுமன்றத்தில் நம்பிக்கை தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு 17ஆம் தேதி நடந்ததே, அதற்கு முன்பு கூட்டி, தி.மு.கழகத்தையும் அதிலே கலந்து கொள்கிற

சூழ்நிலையை உருவாக்கியிருப்பார்களேயானால், நான் மகிழ்ச்சி அடைந்திருப்பேன். அடுத்தடுத்து நான் இரண்டு மூன்று தடவைகள் அவர்களோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியும், திரு. மூப்பனார் அவர்களை நேரில் சந்தித்துப் பேசியும்கூட, என்ன முடிவெடுக்க வேண்டும் என்பதை என்னிடத்தில் கூறாமலேயே, அவர்களாகவே எங்களைக் கலந்து கொள்ளாமல் முடிவெடுத்து, செயல்பட்டுவிட்டு இப்போது கூட்டம் நடத்தி அதுபற்றி பேசுவதிலே என்ன பயன் இருக்க முடியும். எங்களைப் பொறுத்தவரை பா.ஜ.க. அரசுக்கு நம்பிக்கை வாக்கெடுப்பில் ஆதரவு தெரிவித்தோம் என்பதைவிட, ஜெயலலிதாவினுடைய உள்ளார்ந்த நோக்கத்தைப் புரிந்து கொண்டு அதற்கெதிராகச் செயல்பட்டோம் என்பதுதான் உண்மையாகும் - என்று கூறினேன்.

இந்த என் பேட்டிக்குப் பிறகாவது, திருவல்லிக்கேணி கூட்டத்திற்கு முன்பு அந்த பத்துநாள் இடைவெளியில் ஒருநாள் என்னைச் சந்தித்து, அந்த ஜனநாயக முற்போக்கு கூட்டணியின் தலைவர்கள்; நடந்தது நடந்து விட்டது. இனிமேலாவது நமது பழைய அணியைத் தொடருவோம் என்று கூறினார்களா? என்றால் அதுவுமில்லை!

ஓராண்டுக் காலமாக உரைத்து வந்த புதிய அணியும் தோன்றவில்லை - பத்துநாள் இடைவெளியில் பழைய அணியைத் தொடருவோம் வா என்றும் என்னைச் சந்தித்துப் பேசி அழைத்திடவில்லை - திடீரென அந்தத் தலைவர்கள் கூடி, ஜனநாயக முற்போக்கு கூட்டணி யொன்றை தி.மு.க.வை விலக்கி விட்டு ஆரம்பம் செய்து, அதன் சார்பில் திருவல்லிக்கேணியில் ஒரு பொதுக் கூட்டமும் நடத்தி விட்டனர். அந்தக் கூட்டத்தில் பேசப்பட்டது என்ன?

கடிதம் நீண்டுகொண்டே போகிறது. நாளையும் தொடர்கிறேன்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(06-08-1999)

2459. திரு. சிதம்பரத்திடம் கேள்வியும் - அவர் பதிலும் (4)

உடன்பிறப்பே,

டெல்லியில் 17.4.99 அன்று, வாஜ்பாய் அவர்களின் அரசு நம்பிக்கை தெரிவிக்கும் தீர்மானத்தில் தோல்வியுற்று கவிழ்ந்த பிறகு - அடுத்தவாரமல்ல, அடுத்த நாள் கூட அல்ல, அடுத்த நிமிடமே மாற்று அரசை அமைப்போம் என்று மார்தட்டிக்கொண்ட கட்சிகள், புதிய பிரதமரைத் தேடி ஏறத்தாழ ஒரு வாரகாலம் டெல்லியில் வீட்டுக்கு வீடு - அலுவலகத்திற்கு அலுவலகம் - ஓட்டல்களுக்கு ஓட்டல் என்று அலைந்ததுதான் மிச்சம்!

அப்படி அவர்கள் அலைவதற்காக அமோகமான நேரம் அனுமதிக்கப்பட்டிருந்தும்கூட, எவ்விதப் பயனும் ஏற்படாமல் இறுதியாக, 26.4.99 அன்றைய தினம் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு வாஜ்பாய் அரசை இடைக்கால அரசாகக் குடியரசுத் தலைவர் அறிவித்தார்.

அரசு கவிழ்ந்ததற்கும், காபந்து அரசு அமைந்ததற்கும் இடையிலான நாட்களில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள் மத்திய அரசைத் தலைமையேற்று நடத்தும் பொறுப்பை காங்கிரஸ் ஏற்கவேண்டுமென்று கூறி, அதற்கான முயற்சிகளில் டெல்லி வட்டாரத்தில் ஈடுபட்டனர். ஜெயலலிதா இருக்கும் அணியில் இருக்க மாட்டோம் என்று திரு.ஜோதிபாசு போன்ற தலைவர்கள் ஏடுகளுக்குப் பேட்டி கொடுத்திருந்தாலும்கூட, அடுத்த ஓரிரு நாட்களில் அந்த அணியுடன் ஒருங்கிணைந்து செயல்படத் தொடங்கிவிட்டார்கள்.

திரு. சுர்ஜித் - சோனியா சந்திப்புகள்! ஜெயலலிதாவுடன் மார்க்சிஸ்ட், மற்றும் இந்திய கம்யூனிஸ்டு தலைவர்களின் சந்திப்புகள்! வாக்களிப்புக்கு முன்னரும் நடைபெற்றுப் புகைப்படங்கள் நாள்தோறும் ஏடுகளில் வெளிவரத் தொடங்கின.

மத்திய ஆட்சி கவிழ்ந்த பிறகும், அந்தச் சந்திப்புகளும், காங்கிரஸ் தலைவர் சோனியா அவர்களை பிரதமராக்கும் முயற்சிகளும் தொடர்ந்தன.

ஆம்! பாரதிய ஜனதா கட்சியும், காங்கிரஸ் கட்சியும் ஒன்றுதான் - வேறுபாடு கருதாமல் இரண்டு கட்சிகளையும் எதிர்க்கிறோம் என்று 1998 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள், கல்கத்தாவில் நடைபெற்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றிய தலைவர்கள், காங்கிரசை ஆட்சியில் அமர்த்திட டெல்லிப் பட்டினத்தில் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல!

அந்தப் பணிக்காக அவர்கள், ஜெயலலிதாவுடன் அணி வகுத்திடவும் தயங்கவில்லை. திரு. சரத்யாதவ் மீது ஊழல் வழக்கு இருக்கிறது என்பதற்காக, அவருக்கு ஐக்கிய முன்னணியின் தேவகௌடா அமைச்சரவையில் இடம் தரக் கூடாது என்று தடுத்தவர்களும், திரு. லல்லு பிரசாத் மீதும் அதுபோன்ற வழக்கு தொடரப்பட்டிருப்பதால், அவர் ஐக்கிய முன்னணி செயல்திட்டக் குழுவில் இடம் பெறலாகாது என்று வெளியேற்றியவர்களும் மார்க்சிஸ்ட் தலைவர்கள்தான் என்பதையும், அதே தலைவர்கள் திருமதி சோனியாவை பிரதமராக்கிட, இந்திய நாட்டு இமல்டா என்று புகழ் பெற்ற ஜெயலலிதாவுடன் அணி வகுத்துப் புறப்பட்டனர் என்பதையும் அகலக் கண்களைத் திறந்து, ஆச்சரியத்துடன் நோக்கியது இந்திய அரசியல் அரங்கம். எப்படியோ திருமதி சோனியாவைப் பிரதமராக்கும் முயற்சி தோல்வியுற்று, நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு விட்டது.

இதன்பிறகு ஏன் இந்தக் கூட்டணியில் தி.மு.க. இடம்பெறாமல், பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம் பெற்றது என்பதுதானே முக்கியமான கேள்வி! நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்பும், கலைக்கப்பட்ட பிறகும் இந்தக் கூட்டணியில் இருந்த பிற கட்சிகள் இந்தியாவைப் பொறுத்தவரையில் நடந்து கொண்ட முறையும், தமிழகத்தைப் பொறுத்தவரையில் தி.மு.க. மீது நடத்திய கடுமையான விமர்சனங்களும், இவர்களுடன் தி.மு.க. இருப்பதற்கானச் சூழ்நிலையை உருவாக்கியதா? அல்லது உருக்குலைத்ததா? என்பதை ஆழ்ந்து சிந்தித்து முடிவுக்கு வருவதுதான் முறையானதாகும்.

திருவல்லிக்கேணி கூட்டத்தில் கலந்துகொண்டு ஊழலும், மதவாதமும் ஒன்றுதான், அவற்றைப் பிரித்துப் பார்க்காமல் ஒரு சேர எதிர்க்கிறோம் என்று முழங்கிய தலைவர்கள், அதே உறுதியுடன் புதிய அணி திரட்டிய மூப்பனார் அவர்களுடன் இணைந்து இராமல், போயஸ் தோட்டத்துக்கல்லவா போய்விட்டனர்? பொதுக் கூட்டத்தில், மதவாதம் - ஊழல் இரண்டையும் எதிர்த்து எமது அணி தொடரும் என்று உறுதியளித்தவர்கள், ஊழலுடன் உறவாடச் சென்றுவிட்டனர் என்பது வேறு விஷயம்! அதனால் இரண்டு கம்யூனிஸ்டு கட்சிகளுக்கும் - இந்திய தேசிய லீகிற்கும் இடங்கள் கிடைத்துவிட்டன. இடம் கிடைக்காமல் மறுக்கப்பட்ட பிறகுதானே ஜனதாதள வடிவேலு அவர்கள், ஊழலை எதிர்த்துக் கர்ச்சனை புரிந்துகொண்டு, மூப்பனார் அவர்களிடம் ஓடிவந்து புகலிடம் தேடிக்கொண்டார்.

ஓரணியில் இருப்போம்! ஊழலையும், மதவாதத்தையும் எதிர்ப்போம்! என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டு பேசிய அதே திருவல்லிக்கேணி பொதுக் கூட்டத்தில், திரு.மூப்பனார் அவர்கள் தலைமையில் தி.மு.க. மீது தொடுக்கப்பட்ட கணைகளுக்குப் பிறகும், அந்த அணியில் தி.மு.க. அங்கம் வகிப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகவோ - அல்லது இருந்ததாகவோ எவரேனும் கணிக்க முடியுமா?

> பெரியார் கொள்கைக்கு சமாதி கட்டி விட்டார் தி.மு.க. தலைவர் என்றும்,
>
> கலைஞர் அவர்களே! நீங்கள் வாஜ்பாய் அரசுக்கு நம்பிக்கை வாக்களித்து அதைக் காப்பாற்ற நினைத்ததின் மூலம் தமிழ்மக்களின் தலையிலே மண்ணை வாரிப் போட்டிருக்கிறீர்கள்.
>
> என்றும், அந்தக் கூட்டத்தில் என்னையும், கழகத்தையும் கடுமையாக விமர்சிக்க வேண்டிய காரணம் என்ன?

ஐந்தாண்டுக்கால ஜெயலலிதா ஆட்சியில், தமிழர்கள் தலையில் மண்ணை அள்ளிப்போட்டு போட்டு, அவர்களின் வாழ்வையே மண்மேட்டுக்குள் நல்லடக்கம் செய்துவிடத் துணிந்த செயலைத் தடுத்து நிறுத்தி, மூடப்பட்டு மூச்சுத் திணறிய நிலையிலிருந்த தமிழ்ப்பெரும் சமுதாயத்தைக் கரம் கொடுத்துப் பலமனைத்தும் செலுத்தி வெளியில் எடுத்து புதிய விடியலை வழங்கிக் கொண்டிருக்கும் கழக ஆட்சியையும், இந்த ஆட்சியை

நடத்துகிற கழகத்தையும் இக்கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள என்னையும் பார்த்து தமிழ்மக்கள் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுவிட்டார் என்று பேசியதை தடுத்தும் நிறுத்தாமல் - பின்னராவது மறுத்தும் பேசாமல் - அப்படியொரு பொதுக்கூட்டம் நடைபெற்றதை யாருடைய மனச்சாட்சியாவது நியாயப்படுத்த முன்வர இயலுமா?

புதிய அணியொன்றை அந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்ட தலைவர்களை வைத்து உருவாக்க வேண்டும் என்ற ஆசையிலும் - உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையிலும் - தி.மு.க. மீது இத்தகைய வெளிப்படையான தாக்குதல் நடைபெறுகிறது என்பதைப் புரிந்து கொண்ட பிறகு வேறு வழிதேட வேண்டிய அவசியம், கழகத்திற்கு ஏற்பட்டதில் தவறு என்ன இருக்க முடியும்?

பா.ஜ.க. அரசு தோல்வி அடைந்த பிறகு, அடுத்தது தேர்தல்தான் என்ற நிலை உருவாகிவிட்ட பிறகு, பா.ஜ.வுடன் ஏன் தி.மு.க. தேர்தல் கூட்டணி வைத்துக் கொண்டது? இந்தக் கேள்விக்கு அவரிடம் இருந்து இன்னும் பதிலே வரவில்லை.

இதுதான் சிதம்பரம் அவர்களின் கேள்வி. இது உண்மையா? இந்தக் கேள்விக்கு இதுவரை நான் பதிலே அளிக்கவில்லையா?

26.4.99 தேதியிட்ட ஒரு ஆங்கில ஏட்டிற்கு (இந்தியன் எக்ஸ்பிரஸ்) நான் அளித்த சிறப்புப் பேட்டி வெளியாகியிருந்தது. அந்தப் பேட்டியில் செய்தியாளரின் முதல் கேள்வியே பா.ஜ.க. ஆட்சிக்கு இப்போது அளித்த ஆதரவு, தேர்தல் கூட்டணியென்றும் தொடருமா? என்பதுதான்.

இந்தக் கேள்விக்கு நான் அளித்த பதிலை, இப்போது சிதம்பரம் அவர்களுக்கு நினைவூட்டினாலே, அவரின் இப்போதைய கேள்விக்குப் பதிலாகிவிடுமென்று கருதுகிறேன். பா.ஜ.க.வுடன் தேர்தல் கூட்டணியை ஏன் தி.மு.க. வைத்துக்கொண்டது என்பதற்கான விளக்கமாக இந்தப் பதிலே அமையும். அப்போது நான் அளித்த பதில் வருமாறு :-

> இப்போது எழுந்த சூழ்நிலையில் தி.மு.க. இப்படியொரு நிலை எடுத்திருக்கிறது. இந்த நிலையில் நாங்கள் இப்போது உறுதியாகத்தான் இருக்கிறோம். அதை நான் மறைத்துப் பேச விரும்பவில்லை. தேர்தல்

வருகின்ற நேரத்தில் கலந்துபேசி, அந்தக் கூட்டணி எப்படி அமைவது என்பது பற்றி யோசிப்போம். இப்போது சொல்ல விரும்பவில்லை. ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த இயக்கம் சுயமரியாதை இயக்கத்தின் அடிப்படையிலே உருவானது. சுயமரியாதை இயக்கத்தின் கொள்கை கடவுளைப் பற்றி, மதத்தைப் பற்றி, சாதிகளைப் பற்றி, இவைகளைப் பற்றி சொல்கிற வழிகளாக இருந்தாலும் நாங்கள் எங்களுடைய சுயமரியாதையை, தனிப்பட்ட கருணாநிதியின் சுயமரியாதையை அல்ல! திராவிட முன்னேற்றக் கழகம் எனும் இந்த அமைப்பின் சுயமரியாதையை இழந்துவிட முடியாது. அதையும் சேர்த்துத்தான் நாங்கள் சுயமரியாதை இயக்கம் என்று சொல்கிறோம். அப்படிப்பட்ட ஒரு இயக்கத்தை ஒரு பேச்சுவார்த்தைக்குக் கூட காங்கிரஸ் இயக்கம் எங்களை அழைக்கவில்லை என்பதை நாங்கள் எப்படி எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியும்? அது உள்ளபடியே எங்களுக்கு வேதனை தரக்கூடிய செய்திதான். எங்களை அழைத்தே பேசவில்லையே!

என்று நான் அப்போதே பதிலளித்ததோடு மாத்திரமல்ல. வேறு சில விளக்கங்களையும் அந்தப் பேட்டியிலேயே நான் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன்.

அதாவது, கொள்கை அளவில் பா.ஜ.க.வுடன் Compromise (சமரசம்) செய்துகொள்ளும் அளவிலே இருக்கமாட்டோம். அந்த அரசுக்கு ஆதரவாக இருப்போம். அரசிலே இருந்துகொண்டு எங்கள் கொள்கைக்கு மாறாக நடந்தால், அதுகுறித்து விவாதிப்போம் என்று எப்படி 1998இல் கூட்டணியிலிருந்த சில புரட்சிகரமான கட்சிகள் சொன்னார்களோ, அதே நிலையைத்தான் எடுப்போம் என்றும் கூறியிருக்கிறேன்.

மேலும் அந்தப் பேட்டியில் சிறுபான்மைச் சமுதாயங்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் இவர்களோடு பா.ஜ.க.விலே உள்ளவர்கள் உறவாக இருக்கக் கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் அது நல்லதுதானே? மோதிக்கொண்டு நம்முடைய தனி நிலையைக் காட்டுவதைவிட, எல்லோரையும் இணைப்பதற்குக்கூட எங்களுடைய உறவு பயன்படும் அல்லவா?

இந்த விளக்கங்கள் எல்லாம் பா.ஜ.க. ஆட்சி கவிழ்ந்த பிறகு, அந்தக் கட்சியோடு தி.மு.கழகம் கூட்டணி வைத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது என்பதைப் பற்றி நான் அப்போதே அளித்தவை என்பதையும், சிதம்பரம் அவர்கள் பேட்டியிலே நான் விளக்கம் எதையும் இதுவரை தரவில்லை என்று கூறுவது சரியில்லை என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

இப்போது மேற்கொண்டுள்ள வழியில் கழகம் சென்றாலும், மதவாதப் பூசல் எனும் மதில் சுவர்கள் அதன் பயணத்தைத் தடுத்து நிறுத்த முடியாது - ஊழல் எனும் ஊற்றுக்கண் எந்தப் பகுதியிலும் தலைகாட்டிக் குறுக்கிடாமல் - ஏற்கனவே குறுக்கிட்டு தமிழகத்தை சீர்குலைத்த அந்த நச்சாறு அறவே தரைமட்டமாக்கப்பட தடந்தோள் உயர்த்தி இந்தப் பயணம் நமக்கேயுரிய கொள்கை உறுதிப்பாட்டுடன் நடைபெறும்.

திரு. வாஜ்பாய் தலைமையிலான அரசு நிலைத்து நீடிக்க வேண்டுமென்று நம்பிக்கை வாக்களித்தமைக்கும் - இப்போதும் அவர் தலைமையிலான அரசு அமைய வேண்டுமென்று கழகம் அணிவகுத்திருப்பதற்கும், இந்தத் தொடர் கடிதங்கள் எழுதத் தொடங்கியபோதே காரணங்களை விவரித்திருக்கிறேன்.

மேலும் இப்போதுகூறிய காரணங்களுடன், இக் கடிதத் தொடரை நிறைவு செய்கிறேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(07-08-1999)

2460. முத்தனும், முனியனும் பேசுவதையே இவரும் பேசினால்!

உடன்பிறப்பே,

எதிர்க்கருத்து கூறுவது - விமர்சிப்பது - கண்டிப்பது - கடிந்துரைப்பது, இவை தரத்தைப் பொறுத்துமிருக்கும், வயதைப் பொறுத்தும் அமையும். வாலிபத் துடுக்கில் கையாண்ட பாணியே, வயதான பிறகும் தொடர்கிறது என்றால், அதுவே அவர்களின் நிரந்தரமான தரமென ஆகிவிடுகிறது. வயது ஏற ஏற பேச்சிலும், எழுத்திலும் கடுமை குறைந்து கனிவு ததும்புகிறது என்றால், அவர்கள் அனுபவத்தின் பயிற்சியை வெளிப்படுத்துகிறார்கள் என்று பொருள்.

என்பதாகப் பல நேரங்களில் நான் வெளியிட்டுள்ள கருத்துக்கு ஏற்பத்தான் அரசியலாகட்டும், வேறு எந்த நிகழ்வுகளிலாகட்டும் என் அணுகுமுறையைக் கடைப்பிடித்து வருகிறேன்.

அதிலும் குறிப்பாக, அரசியலில் திடீரென எதிரும் புதிருமாக ஆகிவிட்டோம் என்பதற்காக, கடந்த காலத்தில் நெருங்கிப் பழகிய அந்தப் பழக்கத்தையெல்லாம் மறந்து விட்டு, மனம் போன போக்கில் புண்படுத்தும் விதமாக ஒருவரையொருவர் விமர்சிப்பது என்பது தேவையற்ற ஒரு விரசத்தை உருவாக்கக்கூடும். எனவே அந்த நிலையை அறவே தவிர்த்திட வேண்டுமெனத் தொடர்ந்து கூறி வருகிறேன்.

அண்மையில் நான் திரு. சிதம்பரம் அவர்கள், பேட்டியொன்றில் தி.மு.கழகம், பாரதீய ஜனதா கூட்டணி குறித்து எழுப்பியிருந்த கேள்விக்கு நாலு கடிதங்கள் எழுதி அதற்கான விளக்கமளித்திருந்தேன். அந்தக் கடிதங்களில் சிதம்பரம் அவர்களையோ, த.மா.கா. தலைவர் திரு. மூப்பனார் அவர்களையோ குறிப்பிடும் போதாகட்டும்! மற்ற கட்சித் தலைவர்கள் பற்றி கூறிய போதாகட்டும்! அணுவளவும் தரம் குறையாமல், அதே நேரத்தில் அவர்களது தகைமையைப் புகழ்ந்துரைத்தே செய்திகளுக்கும்,

கருத்துகளுக்கும் மட்டுமே முக்கியத்துவம் அளித்திருந்ததை நீயும் படித்திருப்பாய், நாட்டில் உள்ள நடுநிலையாளர்களும் படித்திருப்பார்கள்.

அவ்வாறு நாலு கடிதங்களில் நான் விளக்கமளித்து எழுதியதைப் படித்துவிட்டோ அல்லது ஒருவேளை அவை, அவரது பார்வைக்கு யாராலும் கொண்டு வரப்படாமலே போய், திரு.மூப்பனார் அவர்கள், அவற்றைப் படிக்காமலே, பவானி கூட்டத்தில் பேசியதாக இன்று பத்திரிகைகளிலே வந்துள்ளதைப் பார்த்துத் திகைத்தேன்.

கலைஞர் மதவாத சக்தியுடன் கூட்டணி வைத்துள்ளார். பாரதீய ஜனதா அரசு மீது நம்பிக்கைத் தீர்மானம் வந்தபோது, அந்த அரசு, தி.மு.க. ஆட்சியைக் கலைக்காததால் அந்த நன்றி விசுவாசத்துடன் அவர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டார்கள் என்று நினைத்தேன். ஆனால் இப்போது அவர்களுடனேயே கூட்டணி சேர்ந்து விட்டார்கள். ஏன் இந்தத் தடுமாற்றம்?

என்று பவானி கூட்டத்தில் திரு.மூப்பனார் அவர்கள் கேட்டுள்ளார். அரசியல் ரீதியாக அவர் ஆற்றியுள்ள உரையில் எந்தக் குறையும் காணமுடியாது. அதனால் அவரது அந்தக் கேள்விக்கு நான் நாலு கடிதங்கள் எழுதிப் பதில் அளித்து, அது முரசொலியில் மட்டுமல்லாமல், பல ஏடுகளில் வெளியிடப்பட்டப் பிறகும் மூப்பனார் அவர்கள் அந்தக் கேள்வியைக் கேட்பது, நான் பதில் சொல்ல முடியாமல் தடுமாறுவது போன்ற ஒரு தோற்றத்தைக் கற்பனை செய்வதாக இருப்பினும், அதை அரசியலில் அவர் எடுத்துள்ள நிலை என்ற அளவில் ஏற்றுக்கொள்ளலாம்.

ஏனெனில் கருத்துக்குக் கருத்து - வாதத்திற்கு வாதம் - கொள்கைக்குக் கொள்கை - என்ற அளவில் அரசியலில் மோதிக் கொள்வதில் எந்த விதமான அப்பழுக்கினையும் எவரும் கண்டிடார்!

ஆனால் அதே மேடையில், மூப்பனார் அவர்கள் பேசியுள்ள மற்றொரு விஷயம்தான் எனக்கு மிகுந்த மனவேதனை தருவதாகும். அதனை அந்த மேடையில், அவர் கட்சியைச் சேர்ந்த முத்தன் என்பவரோ, முனியன் என்பவரோ பேசியிருப்பார்கள் என்றால் அதை நான் பொருட்படுத்தியிருக்க மாட்டேன். பத்திரிகைக்காரர்களும் அதனை ஒரு பொருட்டாக மதித்து வெளியிட்டிருக்க மாட்டார்கள். ஆனால் அப்படிப் பேசியிருப்பது

மூப்பனார் அவர்கள் என்கிற போதுதான், அரசியல் மேடைகளின் தரத்தை மூப்பனாரைப் போன்ற மூத்த தலைவர்கள் இப்படித் தாழ்த்தலாமா என்ற ஆதங்கம் எனக்கு ஏற்படுகிறது.

சிறுபான்மை மக்களின் ஆதரவு தங்களுக்கு இருப்பதாக கலைஞர் கூறி வருகிறார். ஆனால் உண்மை என்னவென்றால், தி.மு.க. அமைச்சர் ரகுமான்கான் வேண்டுமென்றால் தி.மு.க.வுக்கு ஓட்டுப்போடுவார். ஆனால் அவரது வீட்டில் உள்ளவர்கள் தி.மு.கழகத்துக்கே ஓட்டுப்போட மாட்டார்கள்.

இதுதான் மூப்பனார் அவர்கள் பவானி மேடையில் உதிர்த்துள்ள முத்தான வாசகம்!

அப்படியென்ன சிறுபான்மைச் சமுதாயமான இஸ்லாமிய சமுதாயத்துக்கு தி.மு.கழகம் தீமை செய்துவிட்டது?

உடன்பிறப்பே, வேடிக்கை பார்த்தாயா? பாபர் மசூதி இடிக்கப்பட்டபோது வாயைத் திறக்காதவர்கள் - முஸ்லிம் லீக் என்பதே ஒரு வகுப்புவாதக் கட்சி என்று ஒதுக்கித் தள்ளியவர்கள் - கண்ணியத்துக்குரிய காயிதேமில்லத் அவர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள நினைவிடத்தை ஏதோ இந்த ஒரு தேர்தல் நேரத்தில் மட்டும் 27 ஆண்டுகளுக்குப் பிறகு நினைத்துக் கொண்டவர்கள் யார் யார் என்பதும் - அந்தச் சிறுபான்மை சமுதாயத்துடன் நீண்ட நெடுங்காலமாக நட்பும், உறவும் கொண்டுள்ள இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதும், இஸ்லாமிய சமுதாய மக்களுக்குத் தெரியாத விபரங்கள் அல்ல!

ஆனாலும் மூப்பனார் அவர்கள், சிறுபான்மையினரான முஸ்லிம்கள் தி.மு.க.வை வெறுக்கிறார்கள் என்று கூறுகிறார். மேடையில் அப்படியொரு கருத்தை வெளியிடுகிறார்.

அதனைக் கருத்தளவில் அவர் வெளியிட்டிருந்தால், அதை குறைக் காண்பது தவறு என்பதை நானறிவேன்.

ஆனால், முதிர்ச்சியுள்ள அரசியல் தலைவர்கள் வரிசையில் வைத்து நாம் எண்ணி மகிழ்கின்ற மூப்பனார் அவர்கள்,

அமைச்சர் ரகுமான்கான் தி.மு.க.வுக்கு ஓட்டுப்போடுவார் - ஆனால், அவர் வீட்டில் உள்ளவர்கள் தி.மு.க.வுக்கு ஓட்டுப் போடமாட்டார்கள்.

என்று பேசுவது எந்த வகையிலும், அரசியல் நாகரிகத்துக்கு ஏற்றது அல்ல!

இதே விஷயத்தை தனிப்பட்ட உரையாடல்களில், அவர் பேசியதாக என் காதில் விழுந்தது உண்டு - அதையே அவர் பவானி பொது மேடையிலும் பகிரங்கமாக பேசியிருப்பதுதான் என்னை வியக்க வைக்கிறது! வேதனைப்பட வைக்கிறது!

இதற்குப் பதிலுக்கு பதில் என்று நமது கழகச் சொற்பொழிவாளர்கள் யாரும் இலாவணி பாட ஆரம்பித்து விடக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய மனிதர்கள் வாயிலிருந்து சில நேரங்களில் இப்படி சிறிய வார்த்தைகள் வந்துவிடுவதுண்டு! யானைக்கும் அடி சறுக்கும் என்று நம்மை நாமே சமாதானப் படுத்திக்கொண்டு, இதனை மறந்துவிடுவோம்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(09-08-1999)

2461. முன்னாள் தேர்தல் ஆணையரும், இந்நாள் ஜோதிடரும்!

உடன்பிறப்பே,

நமது தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கிடையே, தொகுதிப் பங்கீடு பெருமளவுக்கு நிறைவு பெற்றுவிட்டது என்றே சொல்லலாம். பாட்டாளி மக்கள் கட்சிக்கும் - தமிழக ராஜீவ் காங்கிரசுக்கும் இடையே எழுந்துள்ள பிரச்சினையும் இந்தக் கடிதம் உன் கைக்குக் கிடைக்கும் நேரத்திற்குள்ளாக சுமுகமாக முடிந்துவிட வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

முதல் கட்டத் தேர்தல் நடைபெறும் தொகுதிகளுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதற்குக் கடைசி நாள் ஆகஸ்டு 18தான் என்றாலும், தேர்தல் பணிகளைத் தொடங்குவதில் காலதாமதம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில், உன்னைப் போலவே எனக்கும் ஆர்வம் உண்டு என்பதால், தலைமைக் கழகத்தினர் - மாவட்டச் செயலாளர்கள் - ஆங்காங்குள்ள கழக நிர்வாகிகள் அனைவருமே - அண்ணா அறிவாலயத்தில் பெருந்திரளாகக் கூடி, தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகள் போட்டியிடும் தொகுதிகளைப் பற்றிய கருத்துக்கணிப்பு ஆய்வுகளை நடத்திடப் பெருந்துணையாக இருந்தனர்.

ஒவ்வொரு தொகுதியிலும் போட்டியிட, சராசரி நாற்பதுக்கும் குறையாத வேட்பாளர்கள் விண்ணப்பம் செய்திருந்தனர். நேர்காணலில் அவர்களைச் சந்தித்து வெற்றி வாய்ப்புக்கான கருத்துகளைப் பெற்றோம். தொடர்ந்து ஒவ்வொரு தொகுதியிலுமிருந்து வந்திருந்த பரிந்துரையாளர்கள், நிர்வாகிகள் ஆகியோரது அபிப்பிராயங்களைக் கேட்டறிந்தோம்.

எந்த எந்தத் தொகுதிகளில் கழகம் போட்டியிடுகிறது - எவை எவை தோழமைக் கட்சிகள் போட்டியிடக் கூடியவை என்று முதலில் தெளிவாகாத காரணத்தால், விண்ணப்பங்கள் அளித்து

வேட்பாளர்களாக வந்தவர்களின் மூலம் கிடைக்கப்பெற்ற தொகை ரூபாய் இருபத்தி இரண்டு லட்சத்தைத் தாண்டியுள்ளது. இந்தத் தொகையில் தோழமைக்கட்சிகளுடன் பங்கிட்டுக் கொள்ளப்பட்ட தொகுதிகளுக்குக் கட்டியுள்ள பணம், அந்த வேட்பாளர்களுக்குத் திருப்பித் தரப்பட்டுவிடும். எஞ்சியுள்ள தொகை பதினாறு லட்சத்து ஐம்பத்தி ஐயாயிரம் ரூபாய் தலைமைக் கழகத்தின் தேர்தல் நிதியாக வரவு வைக்கப்படும்.

தொகுதிகள் பங்கீட்டுப் பேச்சுவார்த்தையும் - தொகுதிகளில் யார் யாரை நிறுத்துவது என்பதற்கான ஆய்வுப் பணியும் - எவ்வளவு தொல்லைதரும் விவகாரம் என்பது அந்தப் பணியில் ஈடுபடுவோர்க்கு மட்டுமே தெரியும். என் செய்வது? தொந்தரவுதான்! இருப்பினும் தொந்தரவுக்குள்ளே தோழி! சுகம் கண்டேன்! என்று பாவேந்தர் பாடியதுபோன்ற ஒரு சுகத்தை நமது உடன்பிறப்புகளை நூற்றுக்கணக்கில் தொடர்ந்து ஒருவார காலமாக அறிவாலயத்தில் கண்டபோதும், அவர்கள் தேர்தல் களத்தில் குதிப்பதற்கு முந்திக்கொண்டு துள்ளியெழுந்து வந்தபோதும் அடைய முடிந்தது என்பதை பொங்கும் பூரிப்புடன் கூறிக் கொள்கிறேன்.

ஏற்கனவே ஓரிரு வாய்ப்புகள் தவறிவிட்டது என்பதை நினைவூட்டிக் கண்கலங்கிய உடன்பிறப்புகளும் உண்டு - வாய்ப்பு கட்டாயம் கிடைக்க வேண்டுமென்பதற்காக நான் பணம் கட்டவில்லை - என் கடமையைச் செய்ய வேண்டும் என்பதற்காகவே பணம் கட்டிவிட்டு உங்களையெல்லாம் சந்திக்கலாமென்ற ஆர்வத்துடன் வந்தேன். நீங்கள் யாரை நிறுத்தினாலும், அவர்கள் வெற்றிக்காக உழைப்பேன் என்று தங்கள் மனத்தைத் திறந்து காட்டிய உடன்பிறப்புக்களும் உண்டு.

கண்கலங்கிய சிலரும், கடமையாற்றுவேன் என்று களிப்புடன் கூறிய பலரும் - இருசாராருமே என் அன்பு உடன்பிறப்புகள்தான்.

மொத்தமே நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகள்தான் - நாம் போட்டியிடுவதோ அவற்றில் பதினெட்டு தொகுதிகள்தான் - மற்றவை நாம் பணியாற்றி வெற்றி தேடித்தர வேண்டிய தோழமைக்கட்சிகளின் தொகுதிகள்!

அதனால் விண்ணப்பித்த எல்லோருக்கும், வாய்ப்பு வழங்கிட இயலாத சூழல்! இதனை நன்கு புரிந்துகொண்டு நேர்காணலுக்குப் பல உடன்பிறப்புகள் வந்து பங்கேற்றனர்!

நேர்காணலுக்கு வந்த ஒரு சகோதரி, தனக்கும் இந்த இயக்கத்திற்குமுள்ள ஈடுபாட்டினை மிக விரிவாக எடுத்துரைத்ததுடன் - மாற்று முகாமில் ஒரு தொகுதியில் போட்டியிடுகிற வேட்பாளர் ஆற்றிவருகிற உரை வெளிவந்த நாளேடுகளை எம்மிடம் தந்து, இப்படி ஜனநாயக நாட்டில் ஒருவர் பேசலாமா? அதுவும் மாநிலத்தில் தேர்தல் ஆணையாளராக அ.தி.மு.க. ஆட்சியிலும், அதன் பிறகு தி.மு.க. ஆட்சியில் பதவி நீட்டிப்புப் பெற்றும் பணியாற்றியவர், இவ்வாறு பேசுவது எந்த வகையில் நியாயம்? இந்தப் பேச்சைப் பார்த்தால், இவர் அந்தப் புனிதமான பணியில் இருந்தபோது நேர்மையாக நடந்துகொண்டார் என்று எப்படி நம்பிட இயலும்? எனப் படபடவெனப் பொறி பறக்கப் பேசினார்.

அப்படியென்ன அந்த வேட்பாளர் பேசியிருக்கிறார் என்று, அந்தச் சகோதரி தந்த நாளிதழை வாங்கிப் பார்த்தோம்.

உடன்பிறப்பே, தேர்தல் ஆணையத்தின் அந்த முன்னாள் அதிகாரி - கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போற்ற வேண்டியவர் - அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று தன் கீழுள்ள அதிகாரிகளுக்கும் - வாக்காளர்களுக்கும் எடுத்துச் சொல்லி தனது பணியை நேர்மையுடன் ஆற்றிட வேண்டியவர். இப்போது அந்தப் பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்றவுடன் எந்த அளவுக்கு முறைதவறி பேசியுள்ளார் என்பதைக் கண்டு அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தோம். நாளிதழில் வெளிவந்துள்ள அவரது உரை, பின்வருமாறு :-

> “35 இடங்களில் தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றுவிட்டால், அ.தி.மு.க.வை கலைத்து விடுமாறு ஜெயலலிதாவிடம் சிபாரிசு செய்வேன். அதேபோல 35 இடங்களில் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்றுவிட்டால், தி.மு.க.வை கலைத்துவிட கருணாநிதி தயாரா?”

என்று அறைகூவல் விடுத்த அந்த முன்னாள் தேர்தல் ஆணையாளர் மேலும் பேசியதாவது :-

> “எறும்பைப் போன்ற சுறுசுறுப்புடனும், நரியைப் போன்ற தந்திரத்துடனும், எருமையைப் போன்ற உறுதியுடனும் இந்த தேர்தலில் நீங்கள் பணியாற்ற வேண்டும்.

நமக்குச் சேர வேண்டிய ஓட்டைடப் பெற்று வர முயற்சி செய்யுங்கள். நமக்கு அந்த ஓட்டு இல்லையென்று தெரிந்தால் அதனைத் தடுத்து விடுங்கள். இதனை நான் சொல்லித்தான் செய்ய வேண்டியதில்லை. நீங்கள் தேர்தலைச் சந்தித்தவர்கள்".

இப்படியொரு பேச்சு, அதுவும் தேர்தல் ஆணையராகவும், உள்துறைச் செயலாளராகவும் இருந்தவரிடமிருந்து! இது என்ன நேர்மை? இப்படி ஆத்திரத்துடன் கேட்ட அந்தச் சகோதரி படித்துப் பட்டம் பெற்றவர். அந்தச் சகோதரி திண்டுக்கல் தொகுதிக்கு வாய்ப்பு கேட்டவர். வாய்ப்பு கிடைக்கவில்லையாயினும், நேர்காணலுக்குக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, தேர்தல் ஆணையராக இருந்த ஒருவரின் மனவளம் எப்படியிருக்கிறது என்பதை விளக்கிவிட்டுச் சென்றார்.

உடன்பிறப்பே, இதுபோன்ற உணர்ச்சிமிகு நிகழ்ச்சிகள் கொண்டதாக மட்டுமின்றி, ஒரு நகைச்சுவை நிகழ்ச்சிக்கும் நேர்காணல் சமயத்தில் இடமிருந்தது.

திருச்செந்தூர் தொகுதிக்கு ஒருவர் வேட்புமனு கொடுத்திருந்தார். நேர்காணலில் பேட்டி நடக்கும் இடத்துக்கு அவர் அழைக்கப்பட்டார்.

கேள்விகள் தொடங்கின!

நீங்கள் கழக உறுப்பினரா?

இல்லை! கழக அனுதாபி!

தொகுதியில் நிற்க விரும்புகிறீர்களே? எவ்வளவு செலவு செய்வீர்கள்?

ஐந்து லட்ச ரூபாய் வரையில் செலவு செய்யலாம்?

என்ன தொழில்? எப்படி வருமானம்?

ஜோதிடத் தொழில்! எனக்கு இந்தத் தொகுதியில் இரண்டு லட்சம் பேர் வாடிக்கையாளர்களே இருக்கிறார்கள். அவர்கள் ஓட்டுகள் எல்லாம் எனக்கே கிடைக்கும்.

ஜோதிடத்தில் அவ்வளவு நிபுணரா?

ஆமாம் - என் தொகுதியில் என் பெயர் ரொம்பவும் பிரசித்தம்!

ஜோதிடர் என்கிறீர்களே! இந்தத் தேர்தலில் உங்களுக்கு கழகத்தில் சீட்டு கிடைக்குமா? உங்கள் ஜோதிடப்படி என்ன சொல்கிறது?

கட்டாயம் கிடைக்கும்.

என்றார் சிரித்துக்கொண்டே! நாங்களும் அவருடன் சேர்ந்து சிரித்தோம் - அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை - இருந்தாலும் வாய்மணக்க வாழ்த்திவிட்டு விடைபெற்றுக் கொண்டார்.

சீரியஸ் காட்சிகளுக்கிடையே - சில காமெடிக் காட்சிகள் வேண்டும் என்பார்கள் சினிமாவிலும், நாடகத்திலும்!

இதுபோன்ற சமயங்களில் இது அரசியலுக்கும் தேவைப்படுகிறதல்லவா?

அத்தகைய காட்சிகளில் இரண்டைத்தான் இந்தக் கடிதத்தில் குறிப்பிட்டேன்.

இந்த நகைச்சுவைக் காட்சிகளின் கதாநாயகர்கள்தான், முன்னாள் தேர்தல் ஆணையரும், இந்நாள் ஜோதிடரும்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(10-08-1999)

2462. இக்கணமே எழுந்திடுக; அன்புக் கண்மணிகாள்!

உடன்பிறப்பே,

மேல்மருவத்தூரில் அருள்திரு பங்காரு அடிகளார், அவர்களின் பெரு முயற்சியால், பதினைந்து கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனைக் கட்டிடத்தைத் திறந்து வைக்க 11.8.99 மாலை 5 மணி அளவில், சென்னையிலிருந்து புறப்பட்டேன். சரியாக 7 மணியளவில்தான் மேல்மருவத்தூர் விழா மேடைக்குச் செல்ல முடிந்தது. சென்னையிலிருந்து வழி நெடுக கழகக் கண்மணிகளும், பொதுமக்களும் வழங்கிய வரவேற்புகளைப் பெற்றுக்கொண்டு அந்த ஊர் சென்றடைய இரண்டுமணி நேரமாயிற்று.

ஒரு மருத்துவமனைக் கட்டிடம் திறந்து வைக்கச் செல்லும் வழியிலேயே இத்துணை எழுச்சிமிக்க வரவேற்புகள் என்றால், அதிலும் மதுராந்தகத்தைத் தாண்டிச் செல்ல முடியாமல் தாழ்த்தப்பட்ட மக்களும் - இஸ்லாமிய சமுதாயத்து மக்களும் - வெள்ளம் போல் குழுமிநின்று வரவேற்றார்கள் என்றால், விரைவில் 18ந் தேதியன்று தேர்தல் பிரச்சாரத்துக்கான சுற்றுப் பயணத்தை நான் தொடங்கி எல்லா ஊர்களுக்கும் சென்றிடும்போது, இன்று ஆயிரக்கணக்கிலிருப்போர் - பல்லாயிரக்கணக்கில் பெருகிவிடின், எப்படி இந்தச் சுற்றுப் பயணத்தை சமாளிப்பது என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டு விட்டது.

சென்னையிலிருந்து மேல்மருவத்தூர் 93 கிலோ மீட்டர் தொலைவுதான். அந்தத் தொலைவினைக் கடந்து விழாவில் கலந்துகொள்வதற்கு இரண்டுமணி நேரத்திற்கு மேலாகிவிட்டது என்கிறபோது, தேர்தல் பிரச்சாரத்துக்காக பல நூற்றுக்கணக்கான கிலோ மீட்டர் தொலைவு பயணம் செய்து, பல மாவட்டங்களில் உள்ள தொகுதிகள் அனைத்திலும் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவது என்பது என்னைப் பொறுத்தவரையில், அதாவது

என் வயதைப் பொறுத்தவரையில், இமாலய சாதனையாகத் தான் இருக்கப் போகிறது. உழைத்து உழைத்து உரமேறிய கட்டைதான் இது என்றாலும், ஓய்வறியாச் சூரியனைக் கூட, ஓரிரு நிமிடங்கள் கிரகணம் ஓய்வெடுக்கச் செய்து விடும்போது, ஓய்வின்மையினால் தோன்றிடும் விளைவுகளைச் சமாளிப்பது என்பது என்பு தோல் போர்த்திய இந்த உடம்புக்கு எளிதான செயல் அல்லவே!

இருப்பினும் நீ இருக்கிறாய் - உன் நெஞ்சில் நான் இருக்கிறேன் என நான் அணுப்பொழுதும் மறவாமல், நினைத்து நினைத்து, உச்சரித்து உச்சரித்து, புதிய வலிவு பெற்றுப் புது வேகம் கொண்டு பணியாற்றிக் கொண்டுதானிருக்கிறேன்.

அத்துடன் உன் இடைவிடாத பணியும் இணைந்தால் தானே கொண்ட குறிக்கோளை எய்திட முடியும்.

கூட்டணிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி முடித்து இறுதி வடிவம் கண்டிடவும் - கழக வேட்பாளர்களை நேர்காணல் நடத்தி ஆய்வு செய்து அறிவித்திடவும் - இந்தக் காரணங்களே அன்னியில், முதல் கட்டத் தேர்தலுக்கு வேட்புமனு தாக்கல் செய்ய ஆகஸ்டு 18 வரையில் நேரம் இருக்கிறது என்பதாலும் - நமது கூட்டணியின் தேர்தல் பணிகள் சற்று சுணங்கியே, பின்னர் சுறுசுறுப்படைந்திருக்கின்றன.

ஓட்டப்பந்தயங்களில் இறுதியாக முதல் இடம் பெற்று வெற்றி காண்பவர்கள் தொடக்கத்தில் சற்று பின் வரிசையில்தான் இருப்பார்கள் - ஆனால் வெற்றிக்கனியை அவர்கள்தான் பறிப்பார்கள் - பதுங்கிப் பாய்தல் எனும் இலக்கணம் பயின்றவர்கள்.

அந்த இலக்கணத்தை நன்கு பயின்றுள்ளனர் எனது உடன்பிறப்புகள் என்பதற்குச் சான்றாகத்தான், 11ந் தேதியன்று மாலை நான் சென்னையிலிருந்து மேல்மருவத்தூர் செல்லும் வழியில் சாலையின் இருபுறமுமுள்ள சுவர்களில், அச்சுவர்களின் உரிமையாளர்களிடம் அனுமதி பெற்று எழுதப்பட்டிருந்த நமது தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் சின்னங்களும், வேட்பாளர்களின் பெயர்களும் விளங்கின.

காற்றுக்குக் கைலாகு கொடுத்துக் கொண்டிருந்த கழகக் கொடிகளின் வரிசையும் - கூட்டணிக் கட்சிகளின் கொடிகளும் பதாகைகளும் - என் உள்ளத்திற்கு மேலும் மேலும் தெம்பூட்டிக் கொண்டிருந்தது மட்டுமல்ல. இதைவிடப் பன்மடங்கு

ஆர்வத்தையும், அயரா உழைப்பையும் என் உடன்பிறப்புகளிடம் என் சுற்றுப் பயணத்தின் போதும் காணலாம். தேர்தல் முடியும் வரையில், வாக்குப்பதிவு நிறைவுறும் வரையிலும் காணலாம் என்ற நம்பிக்கை மலர்ந்திடச் செய்துள்ளன.

இதற்கிடையே இந்தியப் பிரதமரும், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தலைவரும் - கார்கில் வெற்றிக்கனி கிடைத்திட இந்திய மக்களை ஒன்று திரட்டியதோடு, அந்நிய நாடுகளின் ஏகோபித்த கருத்தை ஆதரவாகப் பெற்றவருமான - பெருமதிப்புக்குரிய வாஜ்பாய் அவர்கள் வரும் 21 ஆம் நாள் தமிழகம் வருகிறார். நாகர்கோயில், திருச்சி, இரு நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு தலைநகர் சென்னையில் அன்று மாலை 6 மணிக்குக் கடற்கரை காந்திசிலை அருகில் பேச இருக்கிறார். நானும், நமது கூட்டணிக் கட்சித் தலைவர்களும் அந்தப் பேரணியில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகிறோம்.

பேரணி என்றதும், சென்னை வீதிகளில் நடத்தும் நீண்ட ஊர்வலமாக்கும் என எண்ணிடல் வேண்டாம். வட மாநிலங்களில் பேரணி என்பதற்கு மாபெரும் பொதுக் கூட்டம் என்றே பொருள் கொள்கின்றனர். அவ்வாறே நடத்துகின்றனர்.

பேரணிகள் சென்னை போன்ற போக்குவரத்து நெரிசல் மிக்க நகரங்களில் பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் இடையூறுகளை அனுபவ ரீதியாக உணர்ந்து வரும் காரணத்தால், திரு. வாஜ்பாய் அவர்களும், கூட்டணிக் கட்சித் தலைவர்களும் கலந்து கொள்ளும் நிகழ்ச்சி மக்கள்கடல் சங்கமிக்கும் மகத்தான பொதுக்கூட்ட மாநாடாகவே நடைபெறும். பல்வேறு அணிகள் நடைபோட்டு வரும் அணிவகுப்பாகவோ, ஊர்வலமாகவோ இருக்காது. இரவு 10 மணிக்குள் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் முடிவுற வேண்டும் என்ற தேர்தல் கமிஷனின் ஆணையையும் கட்டுப்பாட்டுடன் நிறைவேற்றிட வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறதல்லவா!

எனவே ஆகஸ்டு 21 சென்னையில் நடக்க இருக்கும் அந்தத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திற்கு, கழக உடன்பிறப்புகளும், கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்களும் மட்டுமின்றி, ஒருபக்கம் திருவள்ளூர் மாவட்டத்திலிருந்து, ஒருபக்கம் வேலூர் மாவட்டம், ஒருபக்கம் காஞ்சி மாவட்டம், ஒருபக்கம் கடலூர் விழுப்புரம் மாவட்டங்களிலிருந்து தமிழ்ப் பெருங்குடிமக்கள் வெள்ளம் போல கூடிடுவர் என்பதை நானறிவேன்.

வரும் ஆகஸ்டு 16 அன்று, டெல்லியில் வெளியிடப்பட இருக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் அறிக்கை மற்றும் செயல்திட்டம் பற்றிய விளக்கவுரை, விரிவுரைகளையும் ஆகஸ்டு 21 சென்னைத் தலைநகரக் கூட்டத்தில் கேட்கலாம்.

உடன்பிறப்பே, வரவேற்புகள் - கூட்டங்கள் - இவற்றில் எழுச்சியும், அதுகண்டு எனக்கு மகிழ்ச்சியும் ஏற்பட்டால் மட்டும் போதாது!

நீ இதுவரையில் தேர்தல் களத்தில் இறங்கிப் பணி புரியத் தொடங்காமலிருந்தால், இந்தக் கடிதம் கண்டவுடன் தேனீக்கள் எனப் பறந்து திரிந்து, வெற்றி ஒன்றே நம் விழிக்குத் தெரிய வேண்டும் என்ற வைராக்கியத்துடன் பணிபுரியக் கிளம்புக என உன் அண்ணன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக் கேட்டுக் கொள்ளவும், உனக்கும், எனக்கும் ஆணையிடவும், ஓர் அண்ணன் இருந்தார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு!

இப்போதோ, பெருங்காயமிருந்த பாண்டத்தில் அதன் வாசனை மட்டும் இருப்பது போல நான்தானிருக்கிறேன்.

ஆணையிட்டு எனக்குப் பழக்கமில்லை - அவ்வளவு பெரிய பாரம்பர்யம் கொண்டவனுமில்லை - ஆணை என்ற சொல்லை, அண்ணா பயன்படுத்தாத நிலையிலும், அவரது அன்பு வேண்டுகோளைத்தான் நாம் ஆணையாகப் பாவித்து அல்லும் பகலும் அயராது பணியாற்றினோம்.

அப்போதும் - ஒவ்வொரு தேர்தலிலும் கூட்டணி அமைப்பதில், வேட்பாளர்களைத் தேர்வு செய்வதில் - எத்தனை மனக்குறைகள் கழகத்தவரிடம் எழுந்ததுண்டு!

அக்குறையினால் ஏற்படும் மனத்தாங்கல், அரை நாள், ஒருநாள் மட்டுமே அற்பாயுசுடன் இருந்து பின்னர் மறைந்துவிடும். அந்த மனத்தாங்கல் பூரண ஆயுளுடன் இருக்குமேயானால், அது இந்த இயக்கத்தையே இளைக்க வைத்து, எதிரிகளை உச்சிக்கொம்பில் ஏற்றி உட்கார வைத்துவிடும் - உண்மையான உடன் பிறப்புகள் அதற்கு ஒரு துளியும் இடம் தரமாட்டார் - என் உழைப்புக்கும், என் உள்ளத் தூய்மைக்கும், என் கொள்கை உறுதிக்கும் இணையாகவும், துணையாகவும் இருந்து வெற்றித்

திசை நோக்கி நெற்றி நிமிர்த்தி நடை போட்டிடுவார் என்றே எப்போதும் நான் நம்பியிருக்கிறேன். இப்போதும் நம்பியிருக்கிறேன்.

நமது தொகுதி இது - நமது கூட்டணிக் கட்சியின் தொகுதி இது - என்றெல்லாம் பிரித்துப் பார்க்காமல் நாற்பதும் நாம் நிற்கும் தொகுதிகளே என்று, பாறை போன்ற உறுதியும், பளிங்கு போன்ற தூய உள்ளமும் கொண்டு பணியாற்றிட இக்கணமே எழுந்திடுக என் அன்புக் கண்மணிகாள்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(13-08-1999)

2463. எத்தகைய ஒத்துழைப்பு எனக்குத் தேவை!

உடன்பிறப்பே,

உன் ஒளி முகம் காணவும் - தமிழ்ச் சமுதாயத்துப் பெருமக்களின் திருமுக தரிசனம் செய்யவும் - மாதத்தில் குறைந்தது இருமுறையாவது சுற்றுப்பயணங்களை மேற்கொண்டு மாவட்டந்தோறும் வந்து கொண்டிருக்கும் நான், இந்த முறை சுற்றுப்பயணத்தில் ஈடுபடுவது இந்திய நாட்டில் தேவையின்றித் திணிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்திற்காக என்பதை அறிந்துள்ள கழக உடன்பிறப்புகளும், தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களும் அந்தப் பிரச்சாரம் நடைபெற பெரிதும் ஒத்துழைப்பார்கள் என்ற நிறைந்த நம்பிக்கையுடன்தான் 18ந் தேதியன்று சென்னையை விட்டுப் புறப்படுகிறேன்.

அந்த ஒத்துழைப்பு என்பது என்ன? என்னை வரவேற்று உபசரித்து, உணவு தந்து, ஓய்வு கொள்ள விடுதி தந்து பின்னர் ஊருக்கு அனுப்புவது என்பதா? இல்லை! இல்லை! அவைதான் ஒத்துழைப்பு என்றால், ஊரில் உள்ள பங்களாக்களில் ஒன்பதை வாடகைக்கு எடுக்கச் சொல்லியும், ஓட்டல்களில் உள்ள அறைகளை எல்லாம் ஆக்ரமித்து வைக்கச் சொல்லியும், பல லட்சம் செலவானாலும் பரவாயில்லை, சில நிமிடங்கள் தங்கிச் செல்வதற்கு வாடகையாகவோ, விலையாகவோ வாரி வழங்கிவிட்டுப் போக முடியுமே!

அப்படியெல்லாம் நான் ஒத்துழைப்பு கேட்டதுமில்லை - அத்தகைய ஒத்துழைப்பை என் வாழ்க்கையில் நான் விரும்பியதுமில்லை - மாறாக அவற்றை வெறுத்து ஒதுக்கியவன் என்பதை நீயும் அறியாமலில்லை!

கழகத்தின் கொள்கை பரப்புச் செயலாளர் தம்பி ராஜேந்தர் என் சுற்றுப்பயணத் திட்டத்தை வெளியிட்டு அத்துடன்

குறிப்பொன்று எழுதி, வேண்டுகோள் விடுத்துள்ளாரே! அந்த வேண்டுகோளை முழுமையாக நிறைவேற்றுவதுதான் நான் குறிப்பிடும் ஒத்துழைப்புக்கு பொருத்தமான இலக்கணமாகும்.

சுற்றுப் பயணத்தின்போது வாணவேடிக்கை - ஆரத்தி எடுத்தல் மற்றும் சால்வை, மாலை அணிவித்தல் ஆகியவை கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். பொதுக்கூட்டம் என்று அறிவிக்கப்பட்ட இடங்களைத் தவிர, வேறெங்கும் மேடை அமைக்கக் கூடாது. பொதுக் கூட்டம் தவிர, மற்ற இடங்களில் பிரச்சார வேனில் இருந்தபடியே பேசுவார்.

இந்த வேண்டுகோளுடன் மேலும் சிலவற்றையும் இணைத்திட நான் விரும்புகிறேன்.

நான் வரும் பிரச்சார வேனின் முன்னால் அல்லது இருபுறமும் மோட்டார் சைக்கிள்களில் கழகக் கண்மணிகள் அமர்ந்துகொண்டு, முழக்கம் எழுப்பியவாறு - வேகமாகச் செல்ல வேண்டிய சுற்றுப்பயணத்தை - ஏறத்தாழ ஓர் ஊர்வலமாக ஆக்கிவிடுகிற நிகழ்ச்சிகள் கூடவே கூடாது! அதனை தொடக்கத்திலேயே தடுத்து நிறுத்திடக் கழக நிர்வாகிகள் முன்வர வேண்டும்.

என் பிரச்சார வேனுடன் வருகிற இரண்டொரு வாகனங்கள் மற்றும் பத்திரிகையாளர் அமர்ந்து வரும் வாகனம், அத்துடன் பாதுகாப்புக்காக வருகிற ஒன்றிரண்டு காவல்துறை வாகனங்கள், நான் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் தொகுதிக்குட்பட்ட கட்சி நிர்வாகிகளின் ஏழெட்டு வாகனங்கள் என எல்லாமே பத்து வாகனங்கள் அளவுக்குத்தான் வந்திட வேண்டும். அதை விடுத்து நூறு கார்கள், ஐம்பது வேன்கள் - அணி வகுக்கிறோம் பாரீர் என்று என் பின்னால் நூற்றுக்கணக்கில் வாகனங்கள் வரத் தேவையில்லை.

ஆர்வத்தில் நாம் போட்டி போட வேண்டுமேயல்லாமல் - ஆடம்பரத்தில் யாருடனும் போட்டி போடத் தேவையில்லை.

ஆளுங்கட்சி நாம் - அடக்க ஒடுக்கமாகத்தான் நடந்து கொள்ள வேண்டும்! புடவை உடுத்தி, பொட்டு வைத்து, பூச்சூடிய குடும்பப் பெண்ணாகத் திகழ வேண்டும் ஆளுங்கட்சி!

அலங்காரவல்லியாகக் காட்சி தருகிறேன் என்று ஆள் மயக்கும் உடைகள் அணிந்து, பாதாதிகேசம் வரையில் பலவகை

ஆபரணங்கள் பூட்டிக்கொண்டு அலுக்கி மினுக்கிக் குலுக்கிடும் ஆடம்பர மோகினியாகத் திகழக்கூடாது!

இது ஆளுங்கட்சிக்கு மட்டுமல்ல! அனைத்துக் கட்சிக்கும் தேவையான இலக்கணம்தான்!

அதற்காக முகம்கூடக் கழுவாமல், பல்லும் துலக்காமல், அழுக்கு நிறைந்த ஆடை அணிந்து, பார்ப்போர் முகஞ்சுளிக்குமளவுக்கு நாலுபேர் மத்தியிலே நடமாடுவதுதான் எளிமை என்றும் கூறிட மாட்டேன்!

இன்று நேற்றல்ல, நான் எப்போதுமே நமது கழக மாவட்ட ஒன்றியச் செயலாளர்களிடமும் வலியுறுத்திக் கூறுவதையே மீண்டும் கூறுகிறேன். ஆயிரக்கணக்கான மின்சார விளக்குகளை அமைப்பதற்குப் பதிலாக - எளிமையும் எழுச்சியும் கொண்டதாக நிகழ்ச்சிகள் அமைந்திட கழகக் கொடிகளை நூற்றுக்கணக்கில் நாட்டுங்கள் வரிசையாக! நமது கொள்கை முழக்கம் தீட்டப்பட்ட பதாகைகளை ஆங்காங்கு அமைத்திடுங்கள்!

அந்தக் கொடிகள் கம்பீரமாகப் பறப்பதையும் - பதாகைகள் கொள்கை முழக்கம் எழுப்புவதையும் - நான் பார்த்துப் பார்த்து பல முறை உன்னைப் போன்ற உடன்பிறப்புகளை வாழ்த்தியிருக்கிறேன் - பாராட்டியிருக்கிறேன். அந்த வாழ்த்தையும் பாராட்டையும் பெற்றிட, இந்தச் சுற்றுப்பணத்திலும் என் உடன்பிறப்புகள் தயாராக இருப்பார்கள் என்றே எதிர்பார்க்கிறேன்.

வெளிச்சத்துக்கு தேவையான விளக்குகள் இருந்தால் போதுமே!

அளவுக்கு மீறி அவற்றை அமைத்து, அமுதத்தையும் நஞ்சாக்கிட வேண்டாமே!

இந்தச் சுற்றுப்பயணத்தில் நான் எத்தகைய ஒத்துழைப்பை விரும்புகிறேன் என்பதை நீயும், உன்போன்ற உடன்பிறப்புகளும் உணர்ந்து கொண்டிருப்பீர்கள், இந்த கடித வாயிலாக!

இதனை நிறைவேற்றித் தருக! என் நெஞ்சம் இனிக்கச் செய்க!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(14-08-1999)

2464. அண்ணாவும், காயிதேமில்லத்தும் அன்று சொன்னது!

உடன்பிறப்பே,

அன்புக்கினிய நண்பர் திரு. மூப்பனார் அவர்களின் தலைமையில் இயங்கும் தமிழ் மாநில காங்கிரஸ் தேர்தல் அறிக்கை வெளியிட்டுள்ளது. அதன் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் சூழ்ந்து நிற்க, அவரே அந்த அறிக்கையை வெளியிட்டுள்ள நிகழ்ச்சியைத் தொலைக்காட்சிகளில் காணும் வாய்ப்பு கிட்டியது.

பின்னர் நூல்வடிவில் வெளிவந்துள்ள அறிக்கையையும் படித்துப் பார்த்தேன். அந்தத் தேர்தல் அறிக்கையின் இறுதிப்பகுதியில் இடம் பெற்றுள்ள சில வாக்கியங்களைப் பற்றி விளக்கமளிப்பது, உன் போன்றோர் மற்றவர்க்கு விளக்கமளித்திடப் பயன்படுமென்பதால் இக்கடிதம் எழுதுகிறேன்.

> "1998-ஆம் ஆண்டுத் தேர்தலில் பாரதிய ஜனதா கட்சியின் கூட்டணியில் அ.இ.அ.தி.மு.க. இருந்த இடத்தில் இன்று, தி.மு.க. நாணமில்லாமல் அமர்ந்து கொண்டுவிட்டது."

தி.மு.க.வுக்கு நாணமில்லை - அதனால் அ.தி.மு.க. இருந்த இடமான பாரதிய ஜனதா கூட்டணியில் அமர்ந்து கொண்டுவிட்டது என்பதுதான் த.மா.கா.வின் கேலிகலந்த குற்றச்சாட்டு!

இது நாணமில்லாமல் செய்த காரியம் என்றால், 1991 ஆம் ஆண்டு இன்றைய தமிழ் மாநில காங்கிரசார் (இ) காங்கிரஸ் என்ற பெயரில் எந்த அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்திருந்தார்களோ, அவர்களுடன் 1996ஆம் ஆண்டு தி.மு.க. கூட்டணி வைத்துக் கொண்டதும் நாணமில்லாமல் செய்த காரியம்தானா? என்று கேட்கத்தான் தோன்றும்.

1996-ஆம் ஆண்டு திடீரென 24 மணி நேரக் கெடுவில் திரு. மூப்பனார், திரு. சிதம்பரம், திரு. அருணாசலம், திரு.

எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், திரு. சோ பாலகிருஷ்ணன், திரு. தனுஷ்கோடி ஆதித்தன் போன்ற இ.காங்கிரசின் மூத்த தலைவர்கள் அக்கட்சியிலிருந்து விலகி தமிழ் மாநில காங்கிரசை அமைத்தார்கள்.

அவர்களுடன் தி.மு.க. கூட்டணி அமைக்க வேண்டுமென்று சூப்பர் ஸ்டார் ரஜினி போன்றவர்கள் முயற்சி மேற்கொண்டபோது, ஆகா! அது முடியவே முடியாது! இவர்கள் கடந்த 1991 தேர்தலில் அ.தி.மு.க.வுடன் ஒரே அணியில் அமர்ந்திருந்தவர்கள். இவர்களுடன் நாணமில்லாமல் இப்போது அணி சேர்ந்து அமர முடியாது என்று. தி.மு.க. சார்பில் நானோ அல்லது கழகத்தின் எந்தவொரு உடன்பிறப்போ சொன்னது கிடையாதே!

இவர்கள் தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதைப் பார்த்தால், சட்டப்பேரவையில் அ.தி.மு.க. அமைச்சர்கள் அமர்ந்து இருந்த இடத்தில் தி.மு.க.வினர் நாணமில்லாமல் அமர்ந்து கொண்டுவிட்டனர் என்று கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நாணம் என்பது குறித்து வள்ளுவர் நாணுடைமை என்ற அதிகாரத்தில் பத்து குறள்களில் விளக்குகிறார் அதிலே ஒன்று வருமாறு :-

“குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை”

கொண்ட கொள்கையில் தவறினால், குலத்துக்கு இழுக்கு ஏற்படும். அதற்கு நாணாமல் பிறர் பழிக்கும் செயல்புரிந்தால், நலமனைத்தும் கெடும், என்பதே இக்குறளுக்குப் பொருளாகும்.

கொள்கையிலிருந்து வழுக்கி விழுந்து, குலத்துக்கே இழுக்கு ஏற்படும் காரியத்தைச் செய்தால், அந்தக் காரியம் நாணமில்லாமல் செய்யப்பட்டது என்ற குறள் நூற்றுக்கு நூறு பொருந்தும்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் தி.மு.க. இடம் பெற்றிருப்பது, தி.மு.க.வின் தனித்தன்மையை இழந்துவிட்டோ அல்லது கொள்கைகளை விட்டுவிட்டோ அல்ல என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற தெளிவான உண்மையாகும். மூப்பனார் அவர்கள் சொன்ன முந்திரிப் பருப்பு உதாரணம் இதற்குப் பொருந்தாமல் போய்விடுமா என்ன!

அதுமட்டுமல்ல, தி.மு.க. இடம்பெற்றுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணியின் தேர்தல் அறிக்கை ஆகஸ்டு 16-ஆம் நாள் டெல்லியில் வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் பசுமரத்தாணிபோல் நம் மனத்தில் பதியக்கூடிய வாசகங்கள் என்ன? என்ன?

"தேசிய ஜனநாயகக் கூட்டணி இந்திய மக்களின் ஒட்டுமொத்த அரசியல் அணியாக விளங்கும். யாரும் புறக்கணிக்கப்பட மாட்டார்கள். நீதியும், நியாயமும் அனைத்துத்தரப்பு மக்களுக்கும் முறையாக வழங்கப்படும். யாருக்கும் சாதகமாகவோ, பாதகமாகவோ செயல்படாது என்று உறுதி அளிக்கிறோம்."

சிறுபான்மை சமுதாயங்களைச் சேர்ந்த சகோதர சகோதரிகளிடம் திறந்த மனதுடன், இதயபூர்வமாக நட்பார்ந்த முறையில் நாங்கள் நடந்துகொள்ள எங்களுக்கு வாய்ப்பளியுங்கள் என்று வேண்டுகிறோம்.

"நம்முடைய பழைய மனமாச்சரியங்களைத்
தூக்கி எறிவோம்.
நமக்குள் உள்ள பிளவுகளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்.
தகராறுக்குரிய பிரச்சினைகளைத் தள்ளி வைப்போம்.
பரஸ்பர நம்பிக்கை, நட்புணர்வு இவற்றால் நம்மை
நாமே பிணைத்துக் கொள்வோம்."

இந்த நெஞ்சினிக்கும் உறுதிமொழிகளுடன் வெளிவந்துள்ள தேர்தல் அறிக்கைக்கு உரிமை படைத்த தேசிய ஜனநாயகக் கூட்டணியில், தி.மு.க. இடம் பெற்றிருப்பதில் நாணமற்ற செயல் எங்கிருந்து வந்தது?

த.மா.கா. தலைமையில் மரியாதை கிடையாது. பெருந்தன்மை கிடையாது. ஐந்து இடம் அல்லது ஆறு இடம் என்றால் அணியே கிடையாது. நானில்லாமல் அணி எப்படி வந்தது? பத்து இடத்துக்குக் குறைந்தால் பற்றுமில்லை பாசமுமில்லை.

எனும் ரீதியில் பேட்டி கொடுத்தவர்களுடன் அரசியல் ரீதியாகப் பெரும்பான்மை காட்டி - கூட்டணியை ஒழுங்குபடுத்திக் கொண்ட த.மா.கா.வின் செயலை நாணமில்லாத செயல் என்று

யாராவது நாத்தழும்பேறக் கூற முடியுமா? அது நாகரிகம்தான் ஆகுமா? நாம் அப்படிக் கூற முற்பட்டோமோ? இல்லையே!

ஆனால் 1991 முதல் 1996 வரையில், அ.தி.மு.க.வுடன் ஐந்தாண்டுக் காலத்திற்குச் சற்றுகுறைவாக கூட்டணி வைத்திருந்த மூத்த காங்கிரஸ் தலைவர்கள் - தமிழ் மாநில காங்கிரஸ் தொடங்கியவுடன் அக்கட்சியுடன் தி.மு.க. கூட்டணி வைத்துக்கொண்டது மட்டும் தி.மு.க.வுக்கு நாணங்கெடாத செயல், அந்த அ.தி.மு.க. ஓராண்டுக் காலம் இருந்த பா.ஜ.க. கூட்டணியில் இப்போது தி.மு.க. சென்று அமர்வது மட்டும் நாணமற்ற செயல் என்பது என்ன நியாயமோ எனக்கு தெரியவில்லை.

> த.மா.கா.வுடன் தி.மு.க. கூட்டணி கண்டது நாட்டுக்கு நலன் பயக்கும் செயல் என்றுதான், அன்றைக்கும் எண்ணினோம். இப்போதும் அவ்வாறே கருதுகிறோம்.

அதேபோல்தான் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தி.மு.க. இப்போது இடம் பெற்றிருப்பதும், இந்திய நாட்டின் நலனுக்காகவும் - தமிழகத்தின் வளர்ச்சியை மேலும் பெருக்குவதற்காகவும் என்ற குறிக்கோளுடன்தான் என்பதைத் தெளிவாக்குவதுடன், எந்த அணியில் இருந்தாலும் நமது கொள்கைகளை இழக்கத் துணிந்திடோம் என்பதை மக்கள் மன்றத்தில் வீர சபதமாகவே முழங்குகிறோம்.

இந்தக் கருத்துக்கு வலுவூட்டும் வண்ணம் கண்ணியத்துக்குரிய காயிதேமில்லத் அவர்கள், அளித்துள்ள கருத்து ஒன்று துணை நிற்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள், இன்று என்னிடம் கண்ணியமிகு காயிதே மில்லத் என்ற நூல் ஒன்றைத் தந்து, நீங்கள் எழுதுவதற்குப் பயன்படும். படித்துப் பாருங்கள் என்றார்.

திரு. ஜே.எம். சாலி என்ற நண்பர் எழுதி, இந்தப் பிரச்சினைகள் எழாத காலமான 1995-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட புத்தகம் அது!

சிங்கப்பூர் பத்திரிகையொன்றில் பணியாற்றிய அந்த நண்பர், 1966 ஜூலை மாதம் திருக்குர்ஆன் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சிங்கப்பூர் சென்றிருந்த

கண்ணியத்துக்குரிய காயிதேமில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களிடம் பேட்டி கண்டு உரையாடிய நிகழ்ச்சியை அப்படியே வெளியிட்டுள்ளார் அந்த நூலில்! அது, பின்வருமாறு :-

> இறுதியாக, காயிதேமில்லத் அவர்களிடம் 1967 தேர்தல் கூட்டு பற்றி வினவினோம்.
>
> தமிழ்நாட்டில் தி.மு.கழகத்துடனும், சுதந்திராவுடனும் கூட்டு சேர்ந்திருக்கிறோம். சென்ற 1966 மே மாதத்தில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் ஏற்பட்ட கூட்டு இது. ஒரு குறைந்தபட்சத் திட்டத்தின் அடிப்படையில் மற்ற எதிர்க்கட்சிகளுடன் கூட்டு சேரத் தயார் என்பதே அந்தத் தீர்மானம் என விளக்கினார்.
>
> எந்த எதிர்க்கட்சியையும் கூட்டணியில் அனுமதிப்பீர்களா? என்று கேட்டோம்.
>
> தீர்மானம் அதைப் பாகுபடுத்தவில்லை. குறைந்தபட்சத் திட்டத்தின் அடிப்படையில், ஜனசங்கத்தைக்கூட சேர்த்துக் கொள்ளத் தயார். கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் இது பொருந்தும். இது ஒரு முக்கிய வாதம். இப்படிச் சொல்வதால் கொள்கையை விட்டுக் கொடுத்துவிட்டதாகப் பொருள் அல்ல. பரஸ்பரம் ஒருவர் உரிமையை மற்றவர் அங்கீகரிக்கும்போது, குறைந்தபட்சத் திட்டம் வேலை செய்யும். எதிர்க்கட்சிகள் அல்லது வெவ்வேறு கருத்துடைய கட்சிகள் எதிரும் புதிருமாக எப்போதுமே இருக்க வேண்டும் என்பதில்லை. குறைந்தபட்ச திட்டத்தின் அடிப்படையில் ஜனசங்கத்துடன்கூட கூட்டுச் சேரத்தயார் என்ற என் அறிக்கையை அமெரிக்கப் பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன. ஆனால் இந்தியாவில் பேச்சு மூச்சே இல்லை என்றார் அவர்.

உடன்பிறப்பே, நமக்கு நாணமில்லை என்று த.மா.கா.வினர் சொல்லி விட்டார்களே என்பதற்காக, பதிலுக்கு நான் அவர்கள் மீது பாணம்விட விரும்பவில்லை. கொள்கை தவறுவது - கொள்கையைத் துறந்துவிடுவது - கொள்கையே மறந்து விடுவது - ஆகிய இவற்றுக்கு நாணாமல் பிறர்பழிக்கும் செயலில் ஈடுபடக்கூடாது என்பதுதான் வள்ளுவர் இடித்துரைக்கும் கருத்து!

காயிதேமில்லத் அவர்கள் ஜனசங்கத்துடன்கூட கூட்டணி வைக்கத் தயார் என்று அன்றைய தினம் சொன்னது, யாருடன் கூட்டணி என்றாலும், கொண்ட கொள்கையில் அவர் கொண்ட உறுதியைத்தான் வெளிப்படுத்துகிறதே அல்லாமல், நாணமில்லாத செயல் என்று எவராலும் கணிக்கப்படவில்லை.

"தொட்டால் துவண்டுவிடக் கூடிய, மோதினால் நொறுங்கிவிடக் கூடிய வலிவற்ற கொள்கை அல்ல நாம் கொண்டிருப்பது!. எதில் கலந்தாலும் தனியாக விளங்கக் கூடியதும், எப்படியும் நிலைக்கக் கூடியதுமான ஜீவசக்தி நம் கொள்கைக்கு உண்டு என்பதிலே நமக்கு ஆழ்ந்த நம்பிக்கை இருக்கிறது."

என்று அண்ணா அவர்கள் கூறிய பொன்மொழியை நெஞ்சில் பதிய வைத்துக்கொண்டு - வசை புராணங்களையும் வாழ்த்துக் காவியங்களாக எண்ணிக்கொண்டு பயணம் தொடருவோம்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(19-08-1999)

2465. நாம் அளிக்க வேண்டிய பொருத்தமான பதில்!

உடன்பிறப்பே,

இந்தத் தேர்தல் நேரத்தில் - அ.தி.மு.க. பிரச்சாரக் கூட்டங்களில் ஜெயலலிதா என்மீது பாடிவரும் தேவார - திருவாசக - திருப்புகழ் வரிகளில் சிலவற்றை நாளேடுகளில் கண்டேன். நீயும் படித்திருப்பாய். படித்து விட்டு பதைத்திருப்பாய், பதற்றம் அடைந்திருப்பாய். ஆனால் எனக்கும் பதைப்பும் இல்லை, பதற்றமும் இல்லை.

நரகல் குவியலில் இருந்து நறுமணம் வீசவில்லையே என்றோ - மந்தி குதித்தாடும்போது மயிலைப்போல அழகாக இல்லையே என்றோ - கர்த்தபம் குரலெடுத்துப் பாடும்போது கானக் குயிலின் ஓசை கேட்கவில்லையே என்றோ - கவலைப்பட்டால்தானே, இந்த வனிதாமணியின் வசை புராணம் கேட்டுப் பதற்றமோ, பதைப்போ ஏற்படும்!

> “கருணாநிதி கீழ்த்தரமான மனிதர். அவருக்குக் கூட்டம் கூடவில்லை என்ற ஆத்திரத்தில் நிலை குலைந்து விட்டார். உளறிக் கொட்டுகிறார். கருணாநிதியைக் குப்பைத்தொட்டியில் வீசி எறியும் வரை ஓயமாட்டேன். கூவம் சாக்கடையில் கருணாநிதியைத் தூக்கி எறிவேன்’’
>
> இது ஜெயலலிதாவின் தேர்தல் பிரச்சாரப் பொழிவில் ஒரு பகுதி!

என் பேச்சைக் கேட்கக் கூட்டம் கூடவில்லையாம்! ஜெயலலிதாவின் இந்த விமர்சனம் கேட்டு, விழியிருப்போர் விலா நோகச் சிரிக்காமல் இருப்பார்களா?

அவரது இந்தப் பொய்யும் - பொல்லாங்கும் நிறைந்த பேச்சைக்கூட பத்திரிகைகள் வெளியிடுகின்றனவே என்று ஒருக்கணம் வியப்புற்றேன். உடனடியாக அடுத்தகணமே, அந்தப் பத்திரிகைகளின் செயலுக்குக் காரணமும் எனக்குப் புரிந்துவிட்டது.

எவ்வளவு ஆணவமாகவும் - அவதூறாகவும் இந்த அம்மையார், எப்படிப்பட்ட வார்த்தைகளால் பிறகட்சித் தலைவர்களை விமர்சிக்கிறார் என்பதை நாட்டு மக்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே, அந்த ஏடுகள் இத்தகைய இழிதகை உரைகளை வெளியிட்டுக் காட்டுகின்றன என்பதே நான் தெரிந்து கொண்ட உண்மை!

அதற்காக, அந்த அம்மையாரின் பாணியிலேயே நான் அவருக்குப் பதில் சொல்ல விரும்பவில்லை. நீயும் அவ்வளவு தரக்குறைவாக இறங்கிடக் கூடாது என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

யார் கீழ்த்தரம்? நீதான் கீழ்த்தரம்! யார் உளறுவது? நீதான் உளறுகிறாய்! உன்னைக் குப்பைத்தொட்டியில் வீசி எறிந்தால், அந்தக் குப்பைத்தொட்டிகூட உன்னை ஏற்றுக்கொள்ளாது. அவ்வளவு ஊழல் நாற்றம் உன் உடம்பில் வீசுகிறது! வட்டமிடும் கழுகு, வாய்பிளந்து நிற்கும் ஓநாய், வளைத்து விட்ட மலைப்பாம்பு இப்படியெல்லாம் பதிலுக்குப் பதில் உரைத்திட ஒரு பெரும் பட்டியலே இருக்கிறது! இருந்தாலும் அந்தப் பட்டியலைக் கிழித்தெறிந்துவிட்டு, இவர் போன்ற ஆணவங் கொண்டவர்களுக்கு அளித்திட வேண்டிய ஒரே ஒரு பதில் இருக்கிறது - அந்தப் பதிலை மட்டும் எப்பாடு பட்டாவது நீயும், உன் போன்ற தேசிய ஜனநாயகக் கூட்டணியின் உடன்பிறப்புகளும் அளித்திட வேண்டும்.

என்ன பதில் அது? நாற்பது தொகுதிகளிலும் நாம் வெற்றி காண உழைப்பதுதான் செயல்மூலம் காட்டிடும் சிறப்பான பதிலாகும்! அந்தப் பதிலைத் தந்து, இவர் போன்றோரின் வாய்களை மூடவேண்டுமே தவிர, இலாவணி பாடுவதால் எந்த இலாபமும் வரப்போவதில்லை.

இவர்களிடம் பாராட்டுரையும், புகழுரையும், வாழ்த்துரையும் பெற்றுத்தான் நான் வாழ வேண்டுமென்றில்லை - பெற வேண்டிய பெரியோர்களிடம், ஆன்றோர், சான்றோர், அருந்தமிழ்ப் புலவர், அறிவார்ந்த மேதைகள் மற்றும் அனைத்து நாடுகளில் வாழும் தமிழ்மக்களின் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் பெற்றவன் மட்டுமல்ல. உன்போன்ற உடன்பிறப்புகளின் வாழ்த்துக்கும் உரியவன்!

அதனால் என்னை யாரோ ஒருவர் கீழ்த்தரமான மனிதன் என்கிறபோது, ஆமாம்! கீழ்நிலையில் இருக்கிற சாதாரண

- சாமானிய - நலிவுற்ற மக்களுக்காக உழைக்கின்ற கீழ்த் தட்டு மனிதன்தான் நான் என்று நினைத்துக் கொண்டு என் தொண்டினைத் தொடருவேன்!

அதற்கு மாறாக, ஆகா! என்னை அப்படிச் சொல்லவும் துணிந்தாயா? என்ன பாடுபடுத்துகிறேன் பார் என்று முண்டா தட்டிக்கொண்டு, கோதாவில் இறங்கக் கூடியவனல்ல நான்!

உடன்பிறப்பே, உனக்குச் சினம் பிறந்திருக்கும் - சீற்றம் கொண்டிருப்பாய் - பதிலுக்குப் பதில் நாலு வார்த்தை நறுக் என்று கேட்டால்தான் மனம் அமைதி அடையும் என்றுகூடக் கருதுவாய்!

நாலு வார்த்தையென்ன நாலாயிரம் வார்த்தைகூடப் பேசலாம். ஆனால் இந்தப் பெண்மணியைப் பார்த்து அல்ல!

பட்டிதொட்டிகளில், பட்டினக்கரைகளில் இந்தத் தேர்தலை முன்னிட்டு நீ நேரில் சென்று காண வேண்டிய தாய்மார்களிடம், சகோதரிகளிடம் - தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டியது ஏன் என்பதற்கானக் காரண காரிய விளக்கங்களை நாலாயிரம் வார்த்தைகளில்கூட அல்ல, நாற்பதாயிரம் வார்த்தைகளில்கூடக் கூறலாம்!

நீ மட்டுமல்ல, நமது கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்களும் இப்பணியில் இடையறாது ஈடுபட வேண்டும்.

நாட்கள் இன்னும் இருக்கின்றனவே! நாளைக்குப் பார்க்கலாம் பொழுது விடியட்டும் என்று போர்த்திக் கொண்டு தூங்கினால், பின்னர் இந்தியாவுக்கு விடிய வேண்டிய நல்ல பொழுது விடியாமல் போய்விடும்.

இனி ஒருநாள்கூட தாமதம் செய்யாமல், இன்றே - இப்பொழுதே - இக்கணமே தேர்தல் களம் கண்டு, ஒற்றுமை உணர்வு கட்டிக்காத்து, உழைத்து உழைத்து, ஓய்வின்றி உழைத்து பெருவெற்றி காண்பது ஒன்றுதான், குப்பைத் தொட்டி, கூவம் சாக்கடை என்று கூறியவர்களுக்கு நீயும், நமது கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்களும் அளிக்கின்ற பொருத்தமான பதிலாகும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(24-08-1999)

2466. மதுரை மாநகரிலிருந்து ஒரு மடல்!

உடன்பிறப்பே,

தேர்தல் களத்தில் நாட்கள் நகருவதில்லை. ஓடுகின்றன. தமிழகத்தில் முதல் கட்டத் தேர்தலுக்கு, இடையில் இன்னும் நான்கு நாட்களும், அடுத்த கட்டத் தேர்தலுக்கு இன்னும் பத்து நாட்களும் மட்டுமே இருக்கின்றன.

விழி! எழு! பணியாற்று! வெற்றி குவித்திடு! என்று நான் உன்னை அடிக்கடித் தூண்ட வேண்டிய அவசியமில்லை.

உழைப்புக்கு மிஞ்சியது உலகில் வேறு எதுவுமே இல்லை - நான் அதற்குத்தான் முதலிடம் கொடுக்கிறேன். உழைப்பது போல் காட்டிக் கொண்டு பயனில்லை! உண்மையாகவே உழைக்க வேண்டும். எறும்பைப் பார். தேனீக்களைப் பார். அந்தச் சுறுசுறுப்புக்குப் போட்டியாக உன் விறுவிறுப்பைக் காட்டு!

நமது கூட்டணிக்கு மக்கள் ஆதரவு, பெருகிக் கொண்டேயிருக்கிறது. நமது உழைப்புதான் வெற்றியை உறுதிப்படுத்தக் கூடியது. அன்பு உடன்பிறப்பே! அண்ணன் வேண்டுகிறேன்! அயராமல் உழைத்திடுக! வெற்றியை அறுவடை செய்திடுக!

அன்புள்ள,

மு. க.

(01-09-1999)

2467. காண்டீபன் கண்ணுக்குத் தெரிந்தது என்ன?

உடன்பிறப்பே,

பாரதக் கதையிலிருந்து அண்ணா அவர்கள், ஒரு நிகழ்ச்சியை அடிக்கடி குறிப்பிடுவார்கள்.

ஒரு மரத்தின் உச்சியில் ஒரு பறவை அமர்ந்து இருந்தது. அதனைக் குறிபார்த்து வீழ்த்தவேண்டுமென்று தன் மாணவர்களுக்குத் துரோணர் கட்டளையிட்டார். ஒவ்வொரு மாணவனையும் பார்த்து, உன் அம்பின் நுனிக்கு என்ன தெரிகிறது? என்று கேட்டார். மரம் தெரிகிறது - கிளை தெரிகிறது - கொப்பு தெரிகிறது - தழை தெரிகிறது - உச்சியில் உட்கார்ந்துள்ள பறவையும் தெரிகிறது என்று எல்லா மாணவர்களும் கூறினர். ஆனால் காண்டீபனான அர்ச்சுனன் மட்டும் சொன்னான்,

குருதேவா! எனக்கு அந்தப் பறவையின் தலையைத் தவிர, வேறு எதுவுமே தெரியவில்லை என்றவாறு வில்லில் நாண் ஏற்றினான்.

சபாஷ்! அர்ச்சுனா! அப்படியானால் நீதான் குறி தவறாமல் அந்தப் பறவையை வீழ்த்துவாய்! என்று தட்டிக் கொடுத்தார் துரோணர்!

உடன்பிறப்பே, உனக்கும் இந்தத் தேர்தலில் கூட்டணி வேட்பாளர்களின் வெற்றி என்ற ஒன்றைத் தவிர, வேறு எதிலும் நாட்டம் செல்லக் கூடாது!

எந்தப் பிரச்சினையானாலும் அதனை ஒதுக்கி வைத்துவிட்டு, வெற்றியொன்றே குறிக்கோள் எனக் கொண்டு உழைத்திடு! உன்னை யார் என்று உலகிற்கு உணர்த்திடு! நல்ல செய்தி

வழங்குவாய் என்று நாடும், நானும் உன்னைத்தான் நம்பியிருக்கிறோம்!

காண்டீபனின் கண்ணுக்குத் தெரிந்ததுபோல் வெற்றி மட்டுமே உன் கண்ணுக்குத் தெரிய வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

(02-09-1999)

2468. முயல் தூங்கினால் முந்திக்கொள்ளும் ஆமை!

உடன்பிறப்பே,

தேர்தல் குறித்த கருத்துக் கணிப்புகள் தெம்பூட்டுவதாகவும் இருக்கும். திகைப்பூட்டுவதாகவும் இருக்கும். இரண்டையும் சமமாகக் கருதி, முறையே மதமதப்பு இல்லாமலும், மனச் சோர்வடையாமலும் தொய்வின்றி உன் பணியைத் தொடர்ந்திடு.

கழக வேட்பாளருக்கு பிறகட்சியினர் வேலை செய்யவில்லை என்றும், கழகத்தினர் பிற கட்சி வேட்பாளருக்கு வேலை செய்யவே இல்லை என்றும் சிண்டு முடியும் வேலையில் சிலர் ஈடுபட்டு, நமது கூட்டணிக் கட்சிகளுக்குள்ளே குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்து பார்க்கின்றனர். அந்தக் கற்பனைக் களஞ்சியங்களின் கலகமூட்டும் திருப்பணிகள், நமது அணியினர் முன்னே செல்லாது என்பதைச் செயல் வடிவில் காட்டிட சிலிர்த்தெழுக!

ஒருவேளை அவர்கள் கூறுவது உண்மையாயின், அதனைப் பொய்யாக்கிப் பொடியாக்கிட உடனே புறப்படு, புலிப்போத்து போல! புதர் விட்டெழுந்திடும் சிங்க ஏறுபோல!

முயல் தூங்கிவிட்டதால் முந்திக் கொண்டது ஆமை! என்பது பாலபாடத்துக் கதையாகவே இருக்கட்டும்! ஆனால் நீ அந்தப் படிப்பினையை மட்டும் மறந்துவிடாதே!

வீறு கொண்டெழு! வெற்றி நடைபோடு!

அன்புள்ள,

மு. க.

(03-09-1999)

2469. அண்ணா சொன்னதை மெய்ப்பித்துக் காட்டுக!

உடன்பிறப்பே,

என் குருகுலம் ஈரோடு நகரிலிருந்து இந்த மடல் எழுதுகிறேன். உன்னைப்போன்ற சில உடன்பிறப்புகள் பரிந்துரை செய்த வேட்பாளரை நமது தலைமைக் கழகம் தேர்தலில் நிறுத்தவில்லையாம்! அதனால் அவர்களில் சிலருக்கு தேர்தலில் வெறுப்பாம்! எனவே நமது கழக வேட்பாளரை எப்படியாவது தோற்கடிக்கத் திரைமறைவு சதிவேலை செய்கிறார்களாம். இந்தப் புரளியை நாம் நம்பவேயில்லை.

தான் கருவிலிருந்து வளர்ந்த தாயின் நெஞ்சைப் பிளப்பதற்கு எந்த மகன்தான் துணிவான்! அதேபோலக் கழகத்தைத் தாயாகக் கருதுகிற எவரும் கழகத்தையே அழிக்கும் இழிச்செயலில் இறங்கமாட்டார் என்பது எனக்கு நன்றாகவே தெரியும்.

அப்படி ஒருவர் இருவர் இருப்பின், அவர்கள் என் கண்ணுக்கும் தப்ப முடியாது! கழகம் எடுத்திடும் கடும் நடவடிக்கைக்கும் தப்ப முடியாது!

ஒரு தாயின் வயிறு தாங்கமுடியாது என்ற காரணத்தால் தனித்தனி தாய்களின் வயிற்றில் பிறந்த உடன்பிறப்புகள் நாம் என்பதை நமது அருமைத்தலைவர் அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டினார். அதனை மெய்ப்பித்துக் காட்டுவோம்.

அன்புள்ள,

மு. க.

(04-09-1999)

2470. முதற் பணி! முத்தான பணி! சத்தான பணி!

உடன்பிறப்பே,

இந்தக் கடிதம் படிக்கக் கூட உனக்கு நேரம் இருக்காது. இன்று, முதல்கட்டத் தேர்தல் வாக்குப்பதிவு அல்லவா? இறகை கட்டாமலே பறந்து கொண்டிருப்பாய்!

நடப்பதற்குக் கால்கள் என்றாலும், அவை ஓடுவதற்கும் பயன்படுமல்லவா! எனவே இன்று நீ, ஓடியாடி உழைத்திடுவாய் என்று எனக்குத் தெரியும்.

முதல் கட்டத் தேர்தலிலேயே என் உடன்பிறப்புகள் முந்திக் கொண்டார்கள் எனும் இனிப்பான செய்தி, செவியிரண்டிலும் செந்தேன் பாய்ச்சட்டும்!

நம் அணிக்கு வாக்களிக்க விரும்புவோரின் எண்ணிக்கைதான் அதிகம். அவர்கள் அனைவரும் வாக்குச் சாவடிக்கு வந்தாக வேண்டுமே - அதுதானே இன்றைய உன் முதற் பணி! முத்தான பணி! சத்தான பணி!

அன்புள்ள,

மு. க.

(05-09-1999)

2471. உழைப்பு! உழைப்பு!
உரிய நேரத்து உழைப்பு!

உடன்பிறப்பே,

முதற் கட்டம் முடிந்து விட்டது. உன் வியர்வைக்கு வெற்றி மகுடம் தயாராகிக் கொண்டிருக்கிறது. அடுத்த கட்ட வெற்றிக்கும் உன் வியர்வையும், விழிப்பு உணர்வும் தேவைப்படுகிறதே!

திரை கடல்கள் பல ஒன்று திரண்டது போல, நான் கலந்துகொள்ளும் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்கள் - நாள்தோறும் நாற்பதுக்கு மேற்பட்ட இடங்களில் களைப்பு சிறிதுமின்றி பேசுகிறேன். தேர்தல் பிரச்சார வாகனத்தில் மணிக்கணக்கில் அமர்ந்தவாறும், கூட்டங்களில் நின்றவாறும் பேசிப் பேசி கால்கள் வலியால் துவளுகின்றன. துணைக்கு நீ இருக்கிறாய் என்கிறபோது அந்தத் துன்பம் தூள்தூளாகிறது!

கூட்டணியின் தோழமைக் கட்சியினர், நான் காணுமிடமெல்லாம் அருமையாகப் பணியாற்றுகின்றனர். உன் பணியைப் பற்றிக் கேட்க வேண்டுமா? தெரியாதவர்க்கும் தேர்தல் பணியைக் கற்றுக் கொடுக்கும் கழகத்தின் கண்மணி ஆயிற்றே நீ!

வேகத்தில் பந்தயக் குதிரை - விவேகத்தில் பெரியாரின் பிள்ளை - அண்ணாவின் தம்பி - இந்தப் பெருமைகளைப் பெற்றுள்ள உடன்பிறப்பாகிய உன்னிடம் நான் தொடர்ந்து எதிர்பார்ப்பது, உழைப்பு! உழைப்பு! உரிய நேரத்து உழைப்பு!

அன்புள்ள,

மு. க.

(06-09-1999)

2472. மகத்தான மனிதருக்கு இந்த நிலைமையா?

உடன்பிறப்பே,

ஐக்கிய முன்னணியின் அரசு, மத்தியில் தேவகவுடா அவர்கள் தலைமையில் அமைந்தபோது, அமைச்சரவையில் சரத் யாதவ் அவர்களைச் சேர்க்கக்கூடாது, அவர்மீது ஹவாலா வழக்கு இருக்கிறது என்று தடுத்து நிறுத்தினார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு தலைவர் திரு. சுர்ஜித்!

அதேபோல பீகார் முதல்வராக இருந்தவரான திரு. லல்லு பிரசாத் யாதவ் மீது ஒரு வழக்கு வரப்போகிறது என்று செய்தி வந்தவுடனே, அவரை ஐக்கிய முன்னணியின் செயல்திட்டக் குழுவிலிருந்து நீக்குமாறு செய்தார், இதே மார்க்சிஸ்ட் தலைவர் திரு. சுர்ஜித்!

ஆனால் இப்போது, பல கோடி ஊழல் ராணியென்று மார்க்சிஸ்டுகளால் வர்ணிக்கப்பட்ட ஜெயலலிதா அம்மையாரின் கூட்டு! அவரது நெருங்கிய குடும்ப நண்பர், காபிபோசா சட்டத்தில் கைதாகி ஓராண்டு சிறையில் இருந்த தினகரன் என்பவருக்கு, பெரியகுளத்தில் கேட்கிறார்கள் மார்க்சிஸ்டுகள் வோட்டு!

அந்தோ பரிதாபம்! மகத்தான மனிதர் எனப் புகழப்படும் சுர்ஜித்துக்கு இப்படியொரு நிலைமையா? அவர் தலைமையிலேயே காபிபோசாவுக்கு வோட்டு வேட்டையா? எண்ணிப்பார், உடன்பிறப்பே!

அன்புள்ள,

மு. க.

(07-09-1999)

2473. தெளிவான உண்மை; தெரிகிறதா?

உடன்பிறப்பே,

இயந்திர வோட்டு பதிவு முறை, தேர்தல் ஆணையத்தினால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. அதில் எங்கேயோ ஓர் இடத்தில் பழுது ஏற்பட்டு, பிறகு சரி செய்யப்பட்டு, தொடர்ந்து வோட்டுகள் பதிவாகியிருக்கின்றன.

அதைச் சாக்காக வைத்து அந்த முறையே கூடாது! பழைய முறையே வேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் கூறியுள்ளார். அதற்கு விளக்கமளிக்க வேண்டியதும், விடைகூற வேண்டியதும் தேர்தல் ஆணையத்தின் வேலையாகும்.

தேர்தல் ஆணையம், சர்வ கட்சித் தலைவர்களை அழைத்துக் கூட்டம் நடத்திய போதே அ.தி.மு.க. சார்பாக இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கலாம். ஆனால் வெளியிடவில்லை.

அதுமட்டுமல்ல, இந்த இயந்திர வாக்குப் பதிவு முறையினால், தி.மு.கழகம் அதில் சூழ்ச்சி செய்து வெற்றி பெற்றதாக அறிவித்துவிடுமென்றும் அம்மையார் தெரிவித்துள்ளார்.

அவருக்கே தெரியும்! அப்படிச் செய்ய முடியாதென்று! இருந்தாலும் அவர் எதிர்நோக்கும் தேர்தல் முடிவுக்காக, இப்போதே ஒரு காரணம் கண்டுபிடித்துத் தொண்டர்களையும், மக்களையும் தொடர்ந்து ஏமாற்ற முனைகிறார் என்பதுதான் மிகவும் தெளிவான உண்மையாகும்.

அன்புள்ள,

மு. க.

(08-09-1999)

2474. சோர்வை ஒதுக்கு! சுடர்முகம் தூக்கு!

உடன்பிறப்பே,

இரண்டாம் கட்டத் தேர்தல் - இடையில் இருப்பது இன்னும் இரண்டே நாட்கள்! நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்பதை அறிந்துகொள்ள எனக்கு ஞானதிருஷ்டி இல்லையென்றாலும், அனுபவப் பார்வை இருக்கிறது! அதனால் உன் பணி பற்றிய முழுவிபரமும் தெரிந்துகொள்ள முடிகிறது என்னால்!

ஒரு சிங்கிள் டீ வாங்கிக் குடித்துக் கொண்டு, தி.மு.க. தொண்டன் தேர்தல் வேலை செய்வான் என்று, ஒருமுறை பெரியவர் பக்தவத்சலம், உன்னைப் பாராட்டியது என் நினைவில் இருக்கிறது.

அதற்காக உன்னைப் பட்டினி கிடந்து உழைத்திடச் சொல்லும் இதயமற்றவன் நானல்ல!

பகலிரவு பாராது, அடுத்த கட்டத் தேர்தல் முடியும் வரையில், பாடுபடு என்றுதான் உனக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

இது என்னோடும், உன்னோடும் முடிகிற பிரச்சினை அல்ல! நாட்டின் எதிர்காலத்தை - தமிழகத்தின் தலையெழுத்தை நிர்ணயிக்கிற பிரச்சினை!

சோர்வை ஒதுக்கு! சுடர்முகம் தூக்கு! சுளை சுளையாக வெற்றிச் செய்திகளைச் சொல்லு! என்னைக் களிப்பில் ஆழ்த்தி, என் களைப்பு போக்கு!

அன்புள்ள,

மு. க.

(09-09-1999)

2475. அதுபோலத்தான் இதுவும் இருக்கிறது!

உடன்பிறப்பே,

தி.மு.க. ஆட்சியின் போது தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள் உலவினார்கள் என்று ஜெயின் கமிஷன் குறிப்பிட்டிருக்கிறதாம். அதனால் தி.மு.க.வுடன் கூட்டணி அமைக்கவில்லையென்று திருமதி சோனியாகாந்தி ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.

1989ல் தி.மு.க. மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வருவதற்கு முன்பே, அ.தி.மு.க. ஆட்சியில், விடுதலைப்புலிகள் உள்ளிட்ட விடுதலைப் போராளிகள் பல பிரிவினரும் தமிழ்நாட்டுக்கு வந்து விட்டார்கள்.

அவர்களில் குறிப்பாக விடுதலைப்புலிகளுக்கு, இந்திராகாந்தியின் அரசு, நாடு முழுதும் முகாம்கள் அமைத்துக் கொடுத்தது - ஆயுதங்கள் வழங்கியது - தமிழக அரசு வெளிப்படையாகவே நான்கு கோடி ரூபாய் நிதி வழங்கியது. தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளுமே ஈழப்போராளிகளுக்கு போட்டி போட்டுக் கொண்டு ஆதரவு வழங்கின. இவை நாடறிந்த விஷயம்.

அவ்வளவு ஏன்? ராஜீவ் காந்தி அவர்களே விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனை பெங்களூரில் சந்தித்துப் பேசினார்.

தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோது ராஜீவ்காந்தி கொல்லப்படவில்லை. அவர் தமிழகம் வந்து டெல்லி திரும்பும் வரையில் எட்டு முறைக்கு மேலாக அவருக்கு தி.மு.க. ஆட்சியில் தக்க பாதுகாப்பு வழங்கப்பட்டு பத்திரமாகவே இருந்தார்.

கவர்னர் ஆட்சியில்தான் ராஜீவ்காந்தி படுகொலைக்கு ஆளானார்.

ஜெயின் கமிஷன் அறிக்கையில், தி.மு.க. பற்றி எந்தக் குற்றச்சாட்டும் இல்லை என்று திருமதி சோனியாவுக்குத் தெரியாது போலும்!

சோனியா காந்தி சொல்வது எப்படி இருக்கிறது தெரியுமா?

நரியொன்று வாய்க்காலின் மேல்பகுதியிலிருந்து தண்ணீர் குடித்தது. அது, கீழ்ப்பகுதியில் தண்ணீர் குடித்த ஆட்டுக்குட்டியைப் பார்த்து, நான் குடிக்கும் தண்ணீரை ஏன் எச்சில்படுத்துகிறாய் என்றது!

ஆட்டுக்குட்டி, அய்யே நான் எப்படி எச்சில்படுத்த முடியும்? இல்லவே இல்லை! என்றது.

நீ எச்சில் படுத்தாவிட்டாலும், உன் தாத்தாவோ, பாட்டியோ எச்சில்படுத்தியிருக்கலா மென்று எரிந்து விழுந்து, அந்த ஆட்டுக்குட்டியின் மீது அந்த நரி பாய்ந்ததாக சிறுவர்க்கான கதையொன்று உண்டல்லவா? அது போலத்தான் இதுவும் இருக்கிறது!

தி.மு.க. ஆட்சியில் விடுதலைப்புலிகளுக்கு எந்த உதவியும் செய்யவில்லை. அவர்களுக்கு நிறைய உதவிகளை தி.மு.க. ஆட்சியும், தமிழ்மக்களும் செய்ய வேண்டும் என்று ஜெயலலிதா அளித்த பேட்டிகளும், பேசிய பேச்சுக்களும் சோனியாவுக்குத் தெரியாது போலும்! அந்த ஜெயலலிதாவுடன் கூட்டணி மட்டும் இனிக்கிறதாம்! நல்ல உலகமடா இது!

அன்புள்ள,

மு. க.

(10-09-1999)

2476. முயலுக்கு மூன்றே கால்தான் என்கிறார்கள்!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டில் கடந்த 5ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில், அதிகபட்சமாக சிதம்பரம் தனித்தொகுதியில்தான் மற்ற எல்லாத் தொகுதிகளுடன் ஒப்பிடும்போது, 66.11 சதவிகிதம் வாக்குகள் பதிவாகியுள்ளன. ஆனால் அங்கே தலித் மக்களை, வாக்களிக்கவே விடவில்லை என்று திரு. மூப்பனார் அவர்கள் பேசியுள்ளார். வேண்டுமென்றே திட்டமிட்டு உண்மைக்கு மாறாகப் பேசுவதுதான் அரசியல் எனில், அதற்கு யார் என்ன செய்ய முடியும்! தலித்துக்குத் தன்னை சம்மந்தி என்று கலைஞர் கூறிக் கொள்கிறார். நான் மட்டும் தலித்துகளுக்கு நண்பராக இருக்கக் கூடாதா? என்றும் மூப்பனார் அவர்கள் பேசியிருக்கிறார்.

கூடாது என்று யார் சொன்னது? அவரும் தலித்துகளுக்கு சம்மந்தியானால் எனக்கு மகிழ்ச்சி தானே! ஆனால் ஒன்று! நண்பர் என்ற நிலையில் வன்முறைகளுக்குத் துணைபோய் விடக்கூடாது என்பதும், சாதிப்பூசல்கள் அமளிகள் ஏற்பட பக்கபலமாக இருந்துவிடக்கூடாது என்பதும்தான் எனது விருப்பமும், வேண்டுகோளுமாகும். தலித்துகளுக்கு அவர்களின் திறமை மூலமே பதவிகள் கிடைக்கின்றன. யாருடைய சலுகையினாலும் அல்ல என்றும் மூப்பனார் கூறியுள்ளார்.

சலுகை தேவையில்லை. உரிமையே தேவை என்று தலித் மக்களுக்காக போராடிய தலைவர் அண்ணல் அம்பேத்கர் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும். தமிழகத்தில் பெரியார் அதற்காகப் போராடியவர் என்பதும் வரலாறு. அவற்றின் காரணமாகத்தான் தகுதியுடையவர்களிலேயே பலர் புறக்கணிக்கப்பட்டும் கூட, அந்தப் புறக்கணிப்பையும் மீறி, திராவிட இயக்க அணுகுமுறை காரணமாக தலித்துகளின் உரிமையை மேலோங்கச் செய்திருக்கிறோம்.

தலித்துகள் மட்டுமல்ல! பிற்படுத்தப்பட்ட மக்கள், சிறுபான்மை மக்கள் அவர்களுக்குரிய பங்கினை, அரசியலிலும், அதிகாரங்களிலும் பெற்றுள்ள புள்ளி விபரத்தைப் பல முறை நான் அறிவித்தும் கூட, தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால்தான் என்று வாதிடும் த.மா.கா. தலைவர்களை நம்மால் எப்படிச் சமாளிக்க முடியும்!

அன்புள்ள,

மு. க.

(11-09-1999)

2477. இந்த தர்மம் இப்படியே தலைத்தோங்குக!

உடன்பிறப்பே,

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தான் வாஸ்து சாஸ்திரத்தில் சிக்கித் தவிக்கிறார் என்றால் இந்நாள் முதல்வரின் கோபாலபுரம் இல்லத்தில் லிப்ட் (LIFT) வசதி செய்யப் பட்டிருக்கிறது. ஆலிவர் சாலையில் உள்ள இல்லத்திலும் லிப்ட் போடுவதற்கு தேர்வுசெய்த இடத்தை ஜோசியர் சரியல்ல என்று கூறிவிட்டாராம். அதனால் அந்த வீட்டில் லிப்ட் போடவில்லை - இப்படியாக ஒரு வார ஏடு எழுதியிருக்கிறது.

பத்திரிகைகள் சில என்னதான் எழுதுவது என்று வரைமுறை இல்லாமல் போய் விட்டது என்பதற்கு, இதுவும் ஓர் எடுத்துக்காட்டு! என்னுடையை பகுத்தறிவுக் கொள்கைக்குப் பழுது ஏற்படுத்தும் இத்தகைய முயற்சிக்கு என்ன பெயரிடுவது என்றே புரியவில்லை.

உண்மை என்னவென்றால், கோபாலபுரம் இல்லத்திலும் லிப்ட் இல்லை! ஆலிவர் சாலை இல்லத்திலும் லிப்ட் இல்லை! நான் ஊரில் இல்லாத நேரத்தில் பொதுப்பணித் துறையின் சார்பாக, கோபாலபுரத்தில் லிப்ட் வசதி செய்திட முயற்சி மேற்கொண்டார்கள்.

அரசாங்கத்தின் செலவில் என் வீட்டுக்கு எந்தவிதமான வசதியும் செய்யப்படக் கூடாது. தேவைப்பட்டால், என் சொந்த செலவில் லிப்ட் வைத்துக் கொள்வேன் என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன்.

சந்தேகமிருந்தால் அந்த வார இதழின் உரிமையாளர் கோபாலபுரத்துக்கு வந்து, அங்கே லிப்ட் அமைக்கப்பட்டிருக்கிறதா என்பதை நேரிலேயே தெரிந்து கொள்ளலாம்.

புழுதி வாரித் தூற்றுவோம்! அது போய்ப் படிகிற வரையில் படியட்டுமே என்று கருதி, எதையாவது இட்டுக்கட்டி எழுதுவதுதான் பத்திரிகா தர்மம் என்றால், அந்தத் தர்மம் இப்படியே தழைத்தோங்கி, தமிழகத்தின் பெருமையை மேலும் உயர்த்தட்டும்!

அன்புள்ள,

மு. க.

(12-09-1999)

2478. ஆழ்ந்த சிந்தனை அவசியம் தேவை!

உடன்பிறப்பே,

தேர்தலில் கள்ள வாக்கு என்பது, போட்டியிடும் எல்லாக் கட்சிகளுமே எடுத்துச் சொல்லும் புகாராகிவிட்டது. உள்ள வாக்குகளை ஒழுங்காகச் சேர்த்து வைத்தாலே போதும். இந்தக் கள்ள வாக்கு இலாவணியை ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு பாடிக் கொண்டிருக்கத் தேவையில்லை.

இந்தப் பிரச்சினை ஒருபுறமிருக்கப் பொதுவாக வாக்களிக்கும் ஆர்வம் மக்களிடத்திலே போதுமான அளவுக்கு இல்லை. அதிலும் மக்களவைத் தேர்தலில் 50 சதவிகிதம், 60 சதவிகிதம் என்ற இலக்கினைத் தாண்டுவதில்லை. சட்டசபைத் தேர்தலும் இணைந்து நடந்த சில மாநிலங்களில் மட்டுமே வாக்குப் பதிவின் விழுக்காடு சிறிது உயர்ந்து காணப்படுகிறது.

மேலும் ஒரு வேதனையான வேடிக்கை! தேர்தல் நாளன்று வாக்குப்பதிவு செய்யும் நேரத்தில் மட்டுமே தங்களுக்கு வாக்கு இருக்கிறதா என்பதைச் சிலர் அறிய விரும்புவதும், அதற்காக வாக்குச் சாவடி வரையில் சென்று இல்லை என்பதைத் தெரிந்து கொண்டு திகைப்பதும் ஆகும்!

குறைந்தபட்சம், தேர்தல் அறிவிக்கப்பட்டவுடனேயாவது தங்கள் பெயர்கள் வாக்காளர் பட்டியலிலே இருக்கிறதா என்பதைச் சரிபார்க்கலாம் அல்லவா! அப்படிப் பார்த்திருந்தால் வாக்களிக்கும் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றிட முடியுமே!

எல்லோரும் வாக்களித்தே ஆகவேண்டும் என்பதற்காக ஒருவழி காண, எதிர்காலத்திலாவது ஓர் ஆழ்ந்த சிந்தனை அவசியம் தேவை.

அன்புள்ள,

மு. க.

(13-09-1999)

2479. அதுதான் முடிவு எனில் அதைவிட மகிழ்ச்சி ஏது?

உடன்பிறப்பே,

காலவரையற்ற உண்ணாவிரதம் என ஒன்று அறிவிக்கப்பட்டு, காலை 11 மணிக்குத் தொடங்கி மாலையில் முடித்துவைக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியில் அந்த மகாத்மா காந்தி ஆற்றியுள்ள அகிம்சா உரையில் அமைதி நிறைந்த ஒரு சபதம்! என்ன அது?

ஒவ்வொரு சேரிக்காரனையும், கருணாநிதிக்கு எதிராகத் திருப்புவது விடுதலைச் சிறுத்தைகளின் கடமை!

இப்படியொரு சபதம், திரு. மூப்பனார் மற்றும் அவரது அணித் தலைவர்களின் முன்னிலையில் அரங்கேற்றப்பட்டுள்ளது! ஏன்? எதற்காக? தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்தியாவிலேயே முதன்முதலாக இலவச காங்கரீட் வீடுகள் கட்டித்தரத் திட்டமிட்டு லட்சக்கணக்கான வீடுகள் தி.மு.க. ஆட்சியில் தானே கட்டப்பட்டு, இன்னும் கூடக் கட்டப்பட்டு வருகின்றன.

தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலை வாழ்மக்களுக்கு இடஒதுக்கீடு (கல்வி வேலைவாய்ப்பில்) பதினாறு சதவிகிதம் என்று இருந்ததை பத்தொன்பது சதவிகிதம் என உயர்த்தியதும் தி.மு.க. ஆட்சிதானே!

இப்படி அடுக்கிக் கொண்டே போகக் கூடிய அளவற்ற சாதனைகளை ஆதிதிராவிட மக்களுக்காக செய்ததும், செய்துகொண்டிருப்பதும் தி.மு.க. ஆட்சிதானே!

அதனால்தான் புதிய மகாத்மா ஒவ்வொரு சேரிக்காரனையும், கருணாநிதிக்கு எதிராகத் திருப்புவது எங்கள் இயக்கத்தின் கடமையென்று சூள் உரைத்திருக்கிறார்.

பரவாயில்லை! ஒரே இரத்தம் என்ற புதினம் எழுதியதற்காக - அதைப் பாடமாகவும் தயாரித்ததற்காக கருணாநிதியின் ரத்தம் சிந்தப்படுவதில் ஒரு பெருமை மேலும் கூடத்தான் போகிறது! நாடும் நல்லோரும் போற்றும் பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம் நிறைவேற்றப்படுவதற்காகவாவது எனக்கு அப்படியொரு முடிவு ஏற்படின், அதைவிட மகிழ்ச்சி இருக்க முடியுமா?

அன்புள்ள,

மு. க.

(14-09-1999)

2480. வாழ்க அண்ணா!
வளர்க, அவர் கற்பித்த பண்பாடு!

உடன்பிறப்பே,

இன்று நம் அண்ணனுக்கு 91 ஆவது பிறந்தநாள். அண்ணாவழியில் அயராது உழைப்போம் என்று நமது கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்களில் முதல் முழக்கமாக ஒலிக்கிறோமே! அதன் அடிப்படையிலேயே செயல்பாடுகளை வகுக்கிறோம். அப்படியே செயல்பட்டும் வருகிறோம்.

நமது இயக்கம் கொண்டுள்ள சமுதாயக் கொள்கைகளை நடைமுறைப்படுத்திட, ஆட்சிமன்றங்களுக்கு சென்றிட வேண்டும் என்று அண்ணா எண்ணினார். அதற்கும் ஒரு வாக்கெடுப்பு நடத்தினார் திருச்சி மாநாட்டில்!

அந்த மாநாட்டின் தீர்மானத்தின்படி, 1957இல் பொதுத்தேர்தலில் ஈடுபட்டோம். அண்ணன் ஜீவா அவர்களை மேடையில் வைத்துக் கொண்டே, தமிழ்நாட்டில் உண்மையான கம்யூனிஸ்டு கட்சி, தி.மு.க.தான் என்று பிரகடனம் செய்தவரல்லவா நமது அண்ணா! அதனால்தான் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று இறைவனின் தன்மைக்கே இலக்கணம் சொன்னார்.

அவர் காஞ்சிபுரத்தில் தேர்தலுக்கு நின்றபோது அவரைக் கடுமையான முறையில் விமர்சித்து எதிர்த்துப் பேசியோர், எழுதியோர், செயல்பட்டோர் அனைவரையும் அலட்சியச் சிரிப்பால் புறங்கண்டாரே தவிர, தன்மீதும், தன் இயக்கத்தின் மீதும் புழுதிவாரித் தூற்றியவர்களைக் கண்டு புலம்பி அழவில்லை! பதிலுக்குப் பொல்லாமொழி பேசவுமில்லை!

இறுதிவரை அந்த இனிமையான பண்பு அவரை விட்டுப்போகவுமில்லை!

இப்போது நம்மீது சுடு கணைகள்! கடும் விமர்சனங்கள்! கொடுமையான மொழிகள்! எத்தனை பார்த்திடினும், மறப்போம் மன்னிப்போம் - மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு எனும் அண்ணாவின் பொன்மொழிகளைக் கேடயங்களாக ஆக்கிக்கொண்டு அவர் வழியில் அயராது உழைத்துக் கொண்டே இருப்போம் - அணுப்பொழுதும் அவரை மறவாது இருப்போம்! வாழ்க அண்ணா! வளர்க அவர் கற்பித்த பண்பாடு!

அன்புள்ள,

மு. க.

(15-09-1999)

2481. ஜனநாயகத்தை வளர்க்க, வலிமைப்படுத்த வழி காண்போம்!

உடன்பிறப்பே,

1952 ஆம் ஆண்டு தமிழகத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தல் முதல், இந்த 1999 வரையில் ஒவ்வொரு தேர்தலிலும் பதிவான வாக்குகளின் விகிதாச்சாரம், மொத்தத்தில் மக்களுக்குள்ள ஜனநாயக உணர்வை எண்ணி மகிழத்தக்க வகையில் அமையவில்லை. 1952இல் நாடாளுமன்றத்துக்கும், சட்டமன்றத்துக்கும் இணைந்து நடந்த தேர்தலில் மொத்த வாக்குப் பதிவு 57.89 சதவிகிதம்தான். 1957இல் 47.71 சதவிகிதம்தான். 1967இல் மட்டுமே அதிக பட்சமாக 76.59 சதவிகிதம். பின்னர் 1971இல் 71.83 சதவிகிதம். அதன்பிறகு ஒவ்வொரு தேர்தலிலும் 67-66-73-66-63-66 என விகிதாச்சாரம் வேறுபட்டு, 1996 நாடாளுமன்றத்துக்கும், சட்டமன்றத்துக்கும் சேர்ந்து நடந்த தேர்தலில் 66.94 சதவிகிதமென்றிருந்து, 1998ல் நாடாளுமன்றத்துக்கு மட்டும் நடந்த தேர்தலில் 57.95 சதவிகிதம் என்ற அளவே வாக்குப் பதிவு இருந்தது.

இப்போது 1999 நாடாளுமன்றத்துக்கு மட்டும் நடந்துள்ள தேர்தலில் அஞ்சல் ஓட்டுக்கள் எண்ணப்படாத நிலையில், அதே 57.95 சதவிகிதமே வாக்குப்பதிவு ஆகியுள்ளது.

ஜனநாயக நாடுகளில் அதுவும், பெரிய ஜனநாயக நாடுகளில் ஒன்று எனப் புகழப்படும் இந்தியத் திருநாட்டில், வாக்களிக்கும் ஆர்வமும், விழிப்பு உணர்வும் இன்னமும் மந்தமாகவே இருப்பது கவலைக்குரிய ஒன்றேயாகும்.

வெற்றிபெற்று பொறுப்புக்கு வந்தவர்களிடம் மக்கள், அதிகம் எதிர்பார்க்கிறார்கள். கடமையுடன் வாக்களித்தால்தானே உரிமையுடன் அந்த எதிர்பார்ப்புகளுக்காக வாதாடவும், போராடவும்

முடியும்! எனவே யாருக்கு அல்லது எந்தக் கட்சிக்கு வாக்களிப்பது என்பதைவிட, வாக்குகளைப் பயன்படுத்த மக்களுக்கு எடுத்துக் கூறிட ஒரு பிரச்சாரம் தேவை!

முதலில் அந்தப் பிரச்சாரத்தை அரசாங்கம் மட்டுமல்லாமல், பல்வேறு துறையினரும் முடுக்கிவிடுவது, ஜனநாயகத்தை வளர்த்து வலிமைப்படுத்தும் செம்மையான செயலாகும்.

அன்புள்ள,

மு. க.

(16-09-1999)

2482. பெரியார் பிறந்த நாளில் நாம் ஏற்கும் சபதம்!

உடன்பிறப்பே,

சாதிமதச் சார்பில்லாத சமுதாயம் உருவாகவேண்டும், ஒளிவிட வேண்டும் என்று பெரியார் முழக்கமிட்டார். அவரின் பிறந்த நாள் கொண்டாடும் பொழுது, மதச் சார்பின்மையை மட்டும் பேசுகிறோம். சாதிச் சார்பின்மை குறித்து வாய் திறப்பதேயில்லை.

மதம் - மதவெறி அபாயகரமானது! சாதி அதைவிட அபாயகரமானது! சாதிவெறி மிகமிகப் பயங்கரமானது! ஒருவன் மதம் மாறிவிடலாம்! ஆனால் என்னதான் தலைகீழாக நின்றாலும், சாதி மாறிட முடியாது! ஓர் இந்து, முஸ்லிம் ஆகலாம்! கிறிஸ்தவர் ஆகலாம்! ஆனால், ஒரு செட்டியார், முதலியாராக முடியாது! பிள்ளைமார்கள் நாயுடுமார்களாக முடியுமா? முடியவே முடியாது! அதனால்தான் மதவெறியை விட சாதிவெறி தீவிரமானது என கருதப்படுகிறது!

எனவே தான் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்கள் சாதிவெறியை அழிப்பதைத் தனது தலையாய கொள்கையாகக் கொண்டார்.

தன்னை ஒரு முஸ்லிமாக மாற்றிக் கொள்ளவும் தயார் என்று அறிவித்தார் – தன்மீது குத்தப்பட்ட சாதி முத்திரையைப் பெரியார் ஏற்றுக் கொள்ளவுமில்லை. வேறு ஒரு சாதிக்காரராகத் தன்னை மாற்றிக்கொள்ளவும் விரும்பவில்லை! விரும்பினாலும் நடவாத செயல்! மதம் மாறலாம்! சாதி மாற முடியாது! இது சரித்திரக் கட்டாயமல்ல! சாத்திரக் கட்டாயம்!

இன்றைக்கு அரசியலில் சாதியின் ஆதிக்கம் தலைதூக்கத் தொடங்கியிருக்கிறது – அதற்குப் பெயர் சாதியல்ல! வர்க்கம் என்று

வக்கனை பேசுபவர்களும் உண்டு! பாவம்! வர்ணம் பூசுகிறார்கள்! சமுதாய மக்களின் சமத்துவம் குலைந்து, ஏற்றத்தாழ்வுகள் சதிராடுவதை அனுமதித்து, அவற்றுக்கு சாமரம் வீசப்படுகிற சதிவேலையைத் தடுத்து நிறுத்துவதே தன்மான இயக்கம் கண்ட தந்தை பெரியாரின் குறிக்கோள்! இதற்குக் குறுக்கே வருவது மதவெறி ஆயினும், சாதிவெறி ஆயினும் இரண்டையும் இறக்கையொடித்து வீழ்த்துவதுதான் பெரியார் பிறந்த நாளில் நாம் ஏற்கும் சபதமாக இருக்கவேண்டும். நிச்சயமாக இருக்கும் என்பதில் எவருக்கும் ஐயம் தேவை இல்லை. தந்தை பெரியாரின் கொள்கை வெல்லட்டும்! தமிழர்களின் தன்மானம் சிறந்து ஓங்கட்டும்!

அன்புள்ள,

மு. க.

(17-09-1999)

2483. கழகத்தின் எதிரிகள்; கடுகை மலையாக்குவர்!

உடன்பிறப்பே,

குக்கிராமங்கள், பட்டி தொட்டிகள், ஊராட்சி மற்றும் பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் அனைத்திலும் அடிப்படை வசதிகளை அக்கறையுடனும், கர்வத்துடனும் நமது கழக அரசு கவனித்து ஆவன செய்து வருவதை அனைவரும் பாராட்டுகின்றனர்.

தேர்தல் நேரத்தில், சில கிராமங்களில் அடிப்படை வசதியில்லையென்றும், அதனால் அவ்வூரார் வாக்களிக்க வரவில்லையென்றும் ஏடுகளில் பரபரப்பாகச் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

அப்படியொரு செய்தி, மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதியில் உள்ள நெட்ரம்பாக்கம் ஊராட்சியைப்பற்றி வெளிவந்தது. மாவட்டத்தின் ஆட்சித்தலைவரிடம் அது பற்றி விசாரித்தபோது பின்வரும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

இந்த மூன்றாண்டுகாலக் கழக ஆட்சியில்தான் எட்டு கிராமங்களை உள்ளடக்கிய அந்த ஊராட்சியில், ஐந்து மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள், பனிரெண்டு ஆழ்துளைக் கிணறுகள், இரண்டு நியாய விலைக் கடைகள், ஒரு பகுதி நேர நியாய விலைக்கடை, நூறு குழல் மின்விளக்குகள், இரண்டு சோடியம் ஆவி விளக்குகள், ஐந்தரை லட்சம் ரூபாய் செலவில் இரண்டு ஆண்டுகளில் தார்ச்சாலைகள், மூன்று பள்ளிக்கூடங்கள், கடந்த ஆண்டில் 44000 ரூபாய் செலவில் மயானப்பாதை, 87000 ரூபாய் செலவில் சாலைகள் மேம்பாடு மற்றும் தொகுப்பு வீடுகள் - கடன் உதவிகள் இத்தனையும் செய்யப்பட்டிருக்கின்றன.

இவைதவிர நடப்பு ஆண்டில், நான்கு சிறிய பாலங்கள் கட்டவும், தொலைக்காட்சி அறை அமைக்கவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தனை வசதிகள் ஒரு சிறிய ஊராட்சி மன்றத்துக்கு செய்து கொடுக்கப்பட்டிருந்தும், அந்த ஊரார் தேர்தலைப் புறக்கணித்தார்கள் என்றால் - அது ஒன்றும் ஆச்சரியமில்லை! அரசியல்தான் காரணம் என்பதால்!

இதிலிருந்து என்ன தெரிகிறது? கடுகைக் கூட மலையாக்குவதற்குக் கற்றவர்கள் கழகத்தின் மீது காழ்ப்புக் கொண்டவர்கள் என்பதற்கு இதுவே மறுக்க முடியாத சான்று!

அன்புள்ள,

மு. க.

(18-09-1999)

2484. வன்முறைத் தத்துவம் வாலாட்ட அனுமதிப்பதா?

உடன்பிறப்பே,

ஒரிசா மாநிலத்தில் கிறிஸ்துவ மதப் பாதிரியார்கள் இருவர் மீது தாக்குதலும், கொடுமையான கொலையும் நடைபெற்றதையொட்டி நாடு முழுதுமுள்ள நல்லோர் கொதித்தெழுந்தனர்.

ஒளிந்திருந்து இந்த வெறிச் செயலில் ஈடுபடுவது தாராசிங் என்று சுட்டிக் காட்டப்படுகிறது. எனினும் இன்னும் கைது செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்தக் கொடூரமான செயல்கள் தொடர் கதையாகாமல் இருக்க மாநில அரசு உரிய நடவடிக்கைகளை அவசரமாக எடுத்திட வேண்டும். மாநிலத்தில் இருப்பது காங்கிரஸ் அரசு என்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. எந்தக் கட்சி அரசாக இருந்தாலும், மதமோதுதல்களையும், சாதிக் கலவரங்களையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. கூடாது. ஒரிசாவில் காங்கிரஸ் அரசும் தனது கடமையைச் செய்யுமென்றே நம்புகிறேன்.

மத்தியில் உள்ள பாரதிய ஜனதா அரசு இப்போது இடைக்கால அரசு - அது, எந்த நிலையில் உள்ள அரசாக இருந்தாலும், மாநில அரசின் உரிமைகளை மதித்து அதன் வழியேதான் நடவடிக்கைகளை எடுக்க முடியும்.

C.B.I. வேண்டும் என்பது நியாயமான கோரிக்கையாக இருப்பினும், அந்த விசாரணையை, மாநில அரசு கோராமல் மத்திய அரசே அமைத்திட முடியாது. எனவே ஒரிசாவில் உள்ள காங்கிரஸ் ஆட்சியாளர்கள்தான், அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யக் கடமைப் பட்டுள்ளவராவர்!

மத அடிப்படையில் சிறுபான்மை சமுதாய மக்கள் இத்தகைய அவலங்களுக்கு ஆட்படுவதை எவரும், எந்தச் சூழ்நிலையிலும் ஏற்க இயலாது -

அதே நேரத்தில் பெரும்பான்மையினராயினும், சிறுபான்மையினராயினும் தீவிரவாதம் என்ற வன்முறைத் தத்துவத்தைக் கட்டவிழ்த்து விட்டு, நாட்டைக் காடாக்குவதையும் அனுமதிக்கக் கூடாது!

அன்புள்ள,

மு. க.

(19-09-1999)

2485. அந்தப் புத்தகங்களின் அர்த்தமுள்ள புன்னகை!

உடன்பிறப்பே,

சில ஆண்டுகளுக்கு முன்பு, சென்னையில் தி.மு.கழகத்தின் அலுவலகமாக விளங்கிய அன்பகத்தில் ஒரு பொதுப் பிரச்சினைக்காக தி.மு.க. தோழமைக் கட்சிகளின் கூட்டம் நடைபெற்றது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுக் கட்சி, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர்கள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள்.

கூட்டத்துக்கு, முதலில் முஸ்லிம் லீக் தலைவர் அப்துல்சமத் அவர்களும், அவருடன் அக்கட்சியின் தலைவர்களும் வந்துவிட்டனர். சிறிதுநேரம் கழித்து கூட்டத்துக்கு வந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் அன்பகத்தின் கீழே வாயிற்புறத்திலிருந்து செய்தி அனுப்பினர். என்ன செய்தி அது?

கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லிம் லீக்கை மதவாத வகுப்புவாத இயக்கமாகக் கருதுவதால் அவர்களும் கலந்து கொள்கிற சர்வகட்சி கூட்டத்தில் கலந்துகொள்ள இயலாது என்பதுதான் அவர்கள் அனுப்பிய செய்தி!

உடனே அப்துல்சமத் அவர்கள், மிகுந்த பெருந்தன்மையுடன் நமக்கு பிரச்சினைதான் பெரிது. கம்யூனிஸ்ட் தலைவர்கள் வந்து பேசி விட்டுப்போகும் வரையில், நாங்கள் அன்பகம் கீழ்த்தளத்தில் இருக்கிறோம். அவர்கள் வந்து பேசிவிட்டுச் சென்றபிறகு வருகிறோம் என்று கூறிவிட்டு, அன்பகத்திலேயே வேறு ஒரு அறையில் அமர்ந்து நீண்டநேரம் காத்திருந்தனர்.

கம்யூனிஸ்டு தலைவர்கள் அதன்பிறகே அன்பகத்தின் மாடிக்கு வந்து கூட்டத்தில் கலந்து கொண்டனர். அப்படியொரு

நிலைமை ஏற்பட்டதற்காக, நானும், பேராசிரியரும் திரு. அப்துல்சமத் அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டோம்.

இந்த பழைய நிகழ்ச்சியை நான் நினைவூட்டுவது எதற்குத் தெரியுமா?

அரசியல் நிலவர மாறுதல்களில் கம்யூனிஸ்டுகள், தங்களின் பிடிவாதமான முடிவுகளையும் மாற்றிக் கொள்ளும் நிலையைப் பாராட்டுவதற்காகத்தான்!

வாஜ்பாய் அரசு கவிழ்ந்ததையொட்டி, சென்னை திருவல்லிக்கேணியில் திரு. மூப்பனார் அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில், முஸ்லிம் தலைவர்களுடன் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டதும், இப்போது கூட திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் திரு. வீரமணி அவர்கள் முன்னின்று நடத்திய சிறுபான்மையோர் பாதுகாப்புக்கான மனிதச் சங்கிலி அணிவகுப்பில், முஸ்லிம் தலைவர்களுடன் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்கள் கலந்து கொண்டதும் புதிய அணுகுமுறை மட்டுமல்ல, பாராட்டத்தக்க அணுகுமுறையுமாகும்.

இம்மடல் எழுதும்போது என் மேஜையின்மீது, விடுதலைப் போரும் திராவிட இயக்கமும் என்ற தலைப்பில் மார்க்சிஸ்ட் தலைவர் பி. இராமமூர்த்தி அவர்கள் எழுதிய புத்தகமும் - அதற்கு விரிவான மறுப்பு அளித்து அதே தலைப்பில் திரு. வீரமணி அவர்களால் வெளியிடப்பட்ட மற்றொரு புத்தகமும் என்னைப்பார்த்து புன்னகை புரிந்து கொண்டிருக்கின்றன!

அது அர்த்தமுள்ள புன்னகையல்லவா?

அன்புள்ள,

மு. க.

(20-09-1999)

2486. அன்றைய கதையை விட இன்றைய கதை மேல்!

உடன்பிறப்பே,

ஏதோ இந்தத் தேர்தலில் மட்டுந்தான் வாக்குப் பதிவு சதவிகிதம் குறைந்துவிட்டது போன்ற ஒரு கற்பனையில், ஏடுகளில் பேட்டிகள் - தனியார் தொலைக்காட்சிகளில் விவாதங்கள் தொடர்ந்து நடைபெறுவதால், அது குறித்து இந்தக் கடிதம்.

இராஜாஜி, காமராஜர் போன்ற தேசத்தைப்பற்றி சிந்திக்கிற தலைவர்கள் இப்போது இல்லை. இதனால் யாருக்கு ஓட்டுப் போட்டு என்ன பயன் வந்துவிடப் போகிறது என்ற விரக்தியின் காரணமாகவே வாக்குப்பதிவு விகிதாச்சாரம் குறைந்துவிட்டது

இப்படியொருவர் பேட்டியளித்துள்ளார். அது ஒரு வார இதழில் வெளியாகியிருக்கிறது. இராஜாஜியும், காமராஜரும் சிறந்த தேசத்தலைவர்கள் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை. அவர்கள் இருவருக்குடையே கருத்து வேறுபாடு முற்றியது. அதுவேறு விஷயம்!

மூதறிஞர் இராஜாஜி ஆட்சிப் பொறுப்புக்கு வந்த 1952ஆம் ஆண்டு தேர்தலில், நாடாளுமன்றத்துக்கும் - சட்டமன்றத்துக்கும் சேர்ந்து நடைபெற்ற தமிழகத்தின் தேர்தலில் 57.89 சதவிகிதம்தான் வாக்குப்பதிவு ஆயிற்று என்பதற்கும் - பின்னர் 1954 இல் தமிழக முதலமைச்சராகக் காமராஜர் வந்தபிறகு, 1957இல் நடைபெற்ற நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தேர்தலில் 47.71 சதவிகிதம்தான் வாக்குப்பதிவு நடைபெற்றது என்பதற்கும் இந்த வாரப் பத்திரிகையின் பேட்டியாளர்கள் என்ன விளக்கம் சொல்லப் போகிறார்கள் என்பதே என் பணிவன்பான கேள்வியாகும்.

1967 இல் அறிஞர் அண்ணா முதலமைச்சரான போது நடந்த தேர்தலில், 76.59 சதவிகிதம் வாக்குப் பதிவு! 1971 இல் நான் முதலமைச்சராக இருந்து நடத்தியதும் - நான் மீண்டும் முதலமைச்சரானதுமான அந்தத் தேர்தலில், 71.83 சதவிகிதம் வாக்குப்பதிவு!

இந்தக் கடந்தகால வாக்குப்பதிவுகளையெல்லாம் தங்களுக்கு வசதியாக மறந்துவிட்டு, சில அரசியல் விமர்சகர்கள் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்ற ரீதியில் பேசுவது வேடிக்கையாகவே இருக்கிறது.

குறிப்பிட்ட அந்த வாரப் பத்திரிகையின் பேட்டியாளர் சுட்டிக் காட்டுகிற, தேசத்தைப் பற்றி சிந்திக்கின்ற தலைவர்கள் வாழ்ந்த காலத்திலேயே நடைபெற்ற தேர்தல்களில், மிகக் குறைந்த சதவிகித அளவிலேயே வாக்குப்பதிவு ஆகியிருக்கிறது என்பதை இக்கடிதமூலம் நினைவுபடுத்துவதுடன், தற்போது 57.95 சதவிகித வாக்குப்பதிவு எனினும், பொதுவாக சிறந்த ஜனநாயகம் தழைத்தோங்கிட வாக்காளர்கள், தங்கள் வாக்களிக்கும் கடமையிலிருந்து விலகிவிடக் கூடாது என்பதையும் வேண்டுகோளாக வைக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(21-09-1999)

2487. உயர்ந்த உள்ளங்களின் ஒத்துழைப்புக்கு, நன்றி!

உடன்பிறப்பே,

காவிரிப் பிரச்சினையில் திடீரென ஏற்பட்டுள்ள சிக்கல் குறித்து தமிழ்நாட்டில் உள்ள அரசியல் அனுபவம் வாய்ந்த தலைவர்கள், கர்நாடக அரசு நியாயமான முறையில் நடந்து கொள்ள வேண்டுமென வற்புறுத்தி அறிக்கைகள் விடுத்துள்ளனர். பிரதமர் அவர்களுக்குத் தந்தி மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பிரதமரைச் சந்திக்க குழுக்களையும் அனுப்பி வைத்துள்ளனர்.

தொடக்கத்திலிருந்தே மாநில அரசின் சார்பில் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டொரு நாட்களில் நமது தமிழக அமைச்சர்கள் டெல்லி சென்று பிரதமரிடம் நிலைமையை விளக்குவதற்கு நேரம் குறிக்கப்பட்டுள்ளது. பிரதமரும் இந்தப் பிரச்சினையில் மிகுந்த அக்கறை காட்டுகிறார்.

டெல்டா பகுதிக்கு நான் அனுப்பிவைத்த நமது அமைச்சர்கள், அங்குள்ள விவசாயப் பிரதிநிதிகளுடனும், அதிகாரிகளுடனும், பொறியாளர்களுடனும் கலந்து விவாதித்து தற்காலிகமாக ஒரு நல்ல ஏற்பாட்டை வகுத்தளித்துள்ளார்கள். அந்த ஏற்பாடு சரிவர நடைபெறுவதற்கு விவசாயிகள் ஒத்துழைக்குமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று மட்டுமல்ல, என்றுமே நான் இந்தப் பிரச்சினையில் தமிழ்நாட்டு மக்களுக்கும், கர்நாடக மக்களுக்கும் இடையில் கசப்பு உணர்வு ஏற்படாமல் பார்த்துக் கொள்வதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்பவன்!

அங்கே ஒருசிலர் தேவையற்ற விஷமப் பிரச்சாரத்தில் ஈடுபடுவது குறித்து செய்திகள் வருகின்றன. அதற்காக தமிழ்மக்கள் உணர்ச்சி வயப்படத் தேவையில்லை.

இங்கேயும் ஒருசிலர் இதை அரசியலாக்க முனைந்தாலும் கூட, அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு இந்தப் பிரச்சினையில் அரசுடன் ஒத்துழைத்துத் துணை நிற்கும் தலைவர்கள் அனைவருக்கும் இதயமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டு, மேலும், அவர்களின் உயர்ந்த உள்ளத்து ஒத்துழைப்பைப்பெற விழைகிறேன் என்பதையும் உறுதிபடக் கூறுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(22-09-1999)

2488. சமூக விரோதிகளை அடக்காமல் சட்டம் கைகட்டி நிற்குமா?

உடன்பிறப்பே,

மதுரை அவனியாபுரம் பகுதியில் மண்ணும் கல்லும் கலந்து அமைக்கப்பட்டிருந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களின் சிலையை யாரோ சில மதோன்மத்தர்கள் - சமூகவிரோதச் செயல்களைச் சர்க்கரைப் பொங்கல் போலக் கருதிச் சுவைக்கும் கயவர்கள் உடைத்து விட்டார்கள். மாற்றாக வேறு சிலை வைத்திட மாவட்ட அதிகாரிகள் உறுதியளித்ததின் பேரில், கிளர்ச்சி எதுவும் பரவிடாமல் ஐந்தாறு அரசுப் பேருந்துகள் மீது கல்லெறிதலுடன் அடங்கிவிட்டது.

கயமைச் செயலில் ஈடுபட்டவர்களும் கைதாகியுள்ளனர். ஆனால், மதுரைச் சிலை உடைப்பு நிகழ்ச்சியின் எதிரொலியாகத் திண்டிவனத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்களின், மருத்துவமனையைத் திட்டமிட்டு சில தீயோர் சேதப்படுத்தியுள்ளனர். தனது கட்சியின் சின்னமாகவே காரல்மார்க்ஸ், பெரியார், அம்பேத்கர் ஆகிய தலைவர்களின் உருவப்படங்களை அமைத்துக்கொண்டு அரும்பணியாற்றி வருபவர் டாக்டர் இராமதாஸ் அவர்களாவார். அவரை என்னமோ அம்பேத்கர் அவர்களின் விரோதி என்பதுபோல சித்தரித்துக் கொண்டு சில விஷ சக்திகள், சமூக விரோதிகளைத் தூண்டிவிட்டு அவர் மருத்துவமனையைச் சூழ்ந்துகொண்டு கலவரம் புரிந்தது, அம்பேத்கர் சிலையை மதுரையில் உடைத்தது எப்படிக் கண்டனத்துக்குரியதோ, அத்தகைய கண்டனத்துக்குரியதாகும்.

அத்துடன் நிற்கவில்லை. மதுரையைப் போலவே திண்டிவனம் பகுதியிலும் சாலை மறியல், பேருந்துகள் சேதம் என வன்முறைகள். காவல்துறை அதிகாரியின் கார் மீது தாக்குதல், கல் வீச்சு எனக் காட்டுமிராண்டித்தனம்.

கழக அரசும், கழகமும் அண்ணல் அம்பேத்கர் மீது கொண்டுள்ள மதிப்பும், மரியாதையும் இந்த வன்முறையாளர்களுக்குத் தெரியாமற்போனதுதான் வேதனை!

கழக ஆட்சி பொறுப்புக்கு வந்த மூன்றாண்டுகளுக்குள் வடசென்னையில் அம்பேத்கர் கலைக் கல்லூரி ஏற்படுத்த முயற்சி எடுத்து, அதனை நிறைவேற்றியதை மறந்துவிடுவதா?

மராட்டியத்தில் அம்பேத்கர் பெயரில் பல்கலைக் கழகம் அமைய தமிழகத்தின் சார்பில் கழகம்தான் குரல் கொடுத்து வெற்றி கண்டது என்பது நினைவில்லையா?

இந்தியாவிலேயே முதன்முதலாக அம்பேத்கரின் பெயரால், சட்டப் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டிருப்பது இந்த ஆட்சியில்தான் என்பதை அறிய மாட்டாரோ?

அம்பேத்கர் மணிமண்டபத்தை அழகுற அமைத்து வரும் இந்த ஆட்சிக்கு எதிராக, அம்பேத்கர் பெயராலேயே கலவரங்களைத் தூண்டுவது என்றால், அமைதிக்குப் புறம்பாகச் செயல்படத் துடிக்கும் அராஜகவாதிகள் எவராயினும், அவர்களை மக்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

சதித்திட்டங்கள் வகுக்கப்படுவதையும், அவை செயல்பாட்டுக்கு வருவதையும் சட்டம், கையைக் கட்டிக்கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது.

அன்புள்ள,

மு. க.

(23-09-1999)

2489. அறுந்த காதுகளில் பூ சுற்றியது யார்?

உடன்பிறப்பே,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரபூர்வமான வார இதழில் ஒரு கட்டுரைத் துணுக்கு வந்திருப்பதாக ஒரு நாளிதழ், செய்திக்குறிப்பு வெளியிட்டிருக்கிறது. அதில் எனக்கும், திரு. மூப்பனார் அவர்களுக்கும் ஏகப்பட்ட அர்ச்சனையாம்!

என் செய்வது? ஓரணியில் இருந்து ஒரே மேடையில் பேசியவர்கள், ஒன்றாக அமர்ந்து கலந்துரையாடியவர்கள், ஏதோ அரசியல் சூழ்நிலை காரணமாக பிரிந்து நின்று செயல்பட வேண்டிய நிலைமை ஏற்படும்போது - பழைய தோழமையை மறந்துவிட்டோ, அரசியல் பண்பாடுகளைத் துறந்துவிட்டோ ஒருவரையொருவர் தாக்கிக் கொள்ளாமல் இருப்பது அவசியம் என்பதை நான், நமது கழகத்தினருக்கும் தெளிவாக்கியிருக்கிறேன். நம்மிடம் தோழமைக் கட்சிகளாக இருந்த முன்னோடிகளிடம் நேரிலும், தொலைபேசியிலும்கூடக் கூறியிருக்கிறேன்!

அவர்களும், ஆமாம்! அதுதான் நல்லது என்று என்னிடம் கூறிவிட்டு, நாட்கள் நகர நகர அவர்கள் அந்த அரசியல் பண்பாட்டிலிருந்து தங்களைத் தாங்களே வெகு தொலைவுக்கு விரட்டிக்கொண்டு போய் விட்டார்கள்.

அண்மைக்காலமாக அவர்தம் கட்சி ஏடுகளில் கொள்கைரீதியான விமர்சனங்களை விட்டுவிட்டு, என்னையும் கழகத்தையும், கழக முன்னோடிகளையும் தனிப்பட்ட முறையில் தகாத முறையில் அவதூறாக எழுதிய நிலையில்கூட, அவர்களிடம் இந்த முறை தேவையா? இது இப்படியே தொடரலாமா? என்று கேட்டுமிருக்கிறேன். ஆனால் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை.

அவ்வாறு நான் த.மா.கா. தலைவர்களிடமும், மார்க்சிஸ்ட் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் தலைவர்களிடமும் தொலைபேசியில் பேசியிருக்கிறேன். ஓரளவு பலன், தமிழ் மாநிலக் காங்கிரஸ்

தலைமையிடத்திலிருந்து மட்டுமே கிடைத்தது. எனக்காக அல்ல! என் தலைமையில் உள்ள கழகத்துக்காக அல்ல - எல்லாக் கட்சிகளும் இருக்கின்ற இந்தப் பெரும் சமுதாயத்தின் அரசியல் நாகரிகம், பண்பாடு இவற்றைப் பாதுகாப்பதற்காகத்தான்!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் வார இதழில் வந்துள்ள கட்டுரையின் வாசகங்கள் இவைதான்! அந்த வார இதழ் எனக்குக் கிடைக்கவில்லை - இப்போது எனக்கு அது அனுப்பப்படுவதுமில்லை! அதுபற்றி ஒரு நாளிதழில் வந்ததை மட்டும் குறிப்பிடுகிறேன்.

பா.ஜ.க.வின் தமிழக முகவராக தி.மு.க. மாறிவிட்டது. இந்த ஆண்டு பிப்ரவரி வரை பா.ஜ.க.வை கடுமையாக விமர்சித்த தி.மு.க. திடீர் என அந்தர் பல்டி அடித்து அரசியல் மோசடி செய்துவிட்டது. எதிர் துருவங்களாக இருந்த பா.ம.க., ம.தி.மு.க., த.ரா.கா.க்கு சீட்டுகளை பிரித்துக் கொடுக்கும் பா.ஜ.க.வின் தமிழக மொத்த ஏஜெண்டாக கருணாநிதி நூதன அவதாரம் எடுத்துள்ளார். மதவெறியும் கூடாது, ஊழலும் ஆகாது என்று சொல்லிக்கொண்டு காதறுந்த ஊசிகளை எல்லாம் சேர்த்துக் கொண்டு கடைவீதிக்கு வரும் மூப்பனாரின் மூன்றாவது அணி ஒப்பேறாது.

இந்தக் கட்டுரையில் உள்ள கொள்கை விளக்கங்களுக்குள் சென்று நான் விவாதிக்க விரும்பவில்லை.

என்னை மொத்த ஏஜெண்டு என்றும், காதறுந்த ஊசிகளை எல்லாம் சேர்த்துக்கொண்டு மூப்பனார் கடைவீதிக்கு வந்துள்ளார் என்றும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி எழுதுகிற அளவுக்கு எங்கள் தரம் தாழ்ந்துவிடவில்லை - தாழ்ந்தும் விடாது - அதனால் இப்படி ஒரு தரம் தாழ்ந்த எழுத்துக்கு இந்திய கம்யூனிஸ்டு ஏடு உரிமை கொண்டாடலாமா?

பிப்ரவரி வரையில் பா.ஜ.க.வை கடுமையாக விமர்சித்த தி.மு.க., திடீர் என அந்தர் பல்டி அடித்து, அரசியல் மோசடி செய்து விட்டது என்கிறது அந்த ஏடு.

திருப்பிக் கேட்க எவ்வளவு நேரமாகும்? பிப்ரவரிக்குப் பிறகும் கூட ஜெயலலிதாவின் ஊழல் கொள்ளைக்கு எதிராக எக்காளம் முழக்கிக் கொண்டிருந்த இரு கம்யூனிஸ்டு கட்சிகளும் அடித்தது என்ன பல்டி? என்று கேட்க எவ்வளவு நேரமாகும்!

திரு. மூப்பனார் காதறுந்த ஊசிகளை எல்லாம் தன்னுடன் சேர்த்துக்கொண்டதாக ஒரு கிண்டல்! கேலி! சரி! வாதத்திற்காக அந்தக் கட்சிகள் காதறுந்த ஊசிகளாகவே இருக்கட்டும் - காது அறுபடாத ஊசிகளான உங்களையும், இன்னும் சில கட்சிகளையும் சேர்த்துத்தானே சென்னை திருவல்லிக்கேணியில் திரு. மூப்பனார் தலைமையில் சர்வ கட்சிக் கூட்டம் நடந்து, ஊழலையும், மதவாதத்தையும் ஒரு சேர ஒழிப்போம் என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டீர்கள். அதற்குப் பிறகு, உங்கள் காதுகளை அறுத்து, உங்களை மூப்பனாரிடமிருந்து பிரித்து, உங்கள் அறுந்த காதுகளில் பூ சுற்றியது யார்? என்று பதிலுக்குக் கேட்க முடியாதா என்ன?

உங்களைக் கள்ளங் கபடமின்றி நம்பிய மூப்பனாருக்கு நம்பிக்கை மோசம் செய்தீர்களே! அதுதானே அரசியல் மோசடி!

மொத்த ஏஜெண்டு -

நூதன அவதாரம் -

அரசியல் மோசடி -

காதறுந்த ஊசிகள் -

இத்தனை பட்டங்களும் தங்களுக்கே உரிமையென்று முழுக் குத்தகை எடுத்துக்கொண்டுள்ள இந்திய கம்யூனிஸ்டுகள் இனிமேலாவது, அரசியல் பண்பாடு காத்திட முயற்சி செய்தால் - நாட்டுக்கு நல்லது! சமுதாயத்துக்கும் நல்லது! எல்லாவற்றையும்விட பழகிய நட்புக்கும் நல்லது!

எனவே தோழமைக் கட்சிகளாக இருந்தவர்கள், தனிப்பட்ட முறையில் தாக்குகின்ற தரக் குறைவான, ரசக் குறைவான விமர்சனங்களை முதலில் தொடங்கியது யார் என்பதைச் சற்று பின்னோக்கி திரும்பிப் பார்த்து, திருத்திக் கொள்ள முயற்சிக்கலாம் அல்லவா?... முடிந்தவரையில்!

எல்லாவற்றுக்கும் ஒரு வழி பாதையே இருக்க முடியாதல்லவா?

அன்புள்ள,

மு. க.

(24-09-1999)

2490. கனவில் வந்ததும், பேசியதுமே ஒரு கடிதம்!

உடன்பிறப்பே,

காவிரிப் பிரச்சினை குறித்து டெல்லியில் 24 ஆம் நாளன்று நடைபெறும் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் தமிழக அரசின் தலைமைச் செயலாளரும் மற்றும் அதிகாரிகளும் அங்கு வலியுறுத்த வேண்டிய மிக முக்கியமானதும், அவசர அவசியமானதுமான பிரச்சினைகள் எவை என்பது குறித்து அவர்களுடன் விவாதித்துவிட்டு, அவர்களை விடை கொடுத்து அனுப்பிவிட்டு வீடு திரும்பினேன்.

காவிரிப் பிரச்சினையை தமிழக முதலமைச்சர் அரசியலாக்குகிறார் என்று தலைப்பிட்டு ஒரு நண்பர் விடுத்துள்ள நீண்ட அறிக்கை அவரது கட்சிப் பத்திரிகையில் வந்திருந்ததைப் பார்த்தேன்.

இந்தப் பிரச்சினையை அரசியலாக்கிக் கொண்டு அலைந்து திரிகிற அந்த நண்பர், அதற்காகவே அவரே முன்னின்று அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தி, நடுவர் மன்றத் தீர்ப்புக்கு கர்நாடக அரசு கட்டுப்படத் தேவையில்லை என்ற அறிக்கைப் புகழ் அம்மையாரின் அகம் களிக்கும் வண்ணம், வாஜ்பாய் தலைமையில் காவேரி உடன்பாடு ஏற்பட்டவுடன், தமிழக அரசு சுப்ரீம்கோர்ட்டில் தொடுத்திருந்த வழக்கு வாபஸ் பெற்றுக்கொண்டது என்று ஒரு அப்பட்டமான பொய்யைத் தீர்மான வாசகத்தில் இணைத்து நிறைவேற்றியது எவ்வளவு பெரிய விஷமம் என்பதை, தமிழக மக்களுக்குத் தெளிவாக கழக அரசின் சார்பில் விளக்கிய பிறகும், காவிரிப் பிரச்சினையை தமிழக முதலமைச்சர் அரசியலாக்குகிறார் என்று கதைப்பது கடைந்தெடுத்த பொய்யுரையல்லவா?

ஏனிப்படி? தமிழக உரிமைகளைத் தங்களின் கோபதாபங்களுக்காகத் தங்களை அறியாமலேயே

கர்நாடகத்துக்குக் காட்டிக் கொடுக்கிறார்கள் என்ற ஆதங்கத்துடன் உறங்கப் போனேன். உறக்கம் என்னைத் தழுவிட நீண்ட நேரமானது.

அந்த உறக்கத்திலும் ஓர் கனவு! என் முன்னே அந்தக் குள்ள உருவம்! ஆம்! அதே குணக்குன்றம் குறுஞ்சிரிப்பு! அறிஞர் அண்ணா! என்ன தம்பீ! சரியான தூக்கமின்றி புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருக்கிறாய்? என்று வெற்றிலைக் காவி படிந்த உதடுகளைப் பிரித்தவாறு கேட்டுக்கொண்டே, என் தோளில் தட்டினார்.

ஒன்றுமில்லை அண்ணா! என்று தழுதழுத்த குரலில் பதில் அளிக்கிறேன். ஆனால், அண்ணாவைக் கண்ட அதிர்ச்சியில் அதற்கு மேல் விளக்கமளிக்க உடனடியாக நாவெழவில்லை.

தெரியும் தம்பி எனக்கு! - காவிரிக்கரையில் பிறந்து - காவிரித் தண்ணீர் அருந்தி - அந்தக் காவிரிக் கரையிலேயே வளர்ந்த உன்னைப் பார்த்து, உனக்கு காவிரிப் பிரச்சினையில் அக்கறையில்லை என்பதுபோல வெளிவந்துள்ள அறிக்கைகள் பற்றித்தானே உனக்குக் கவலை? அறிக்கை விட்டவர்களை உனக்கும், எனக்கும் தெரியாதா?

தெரியுமண்ணா!

பிறகேன் அவர்களைப் பற்றிக் கவலைப்படுகிறாய்? உனக்கு நினைவிருக்குமே! 1967 ஆம் ஆண்டு பெரியாரின் எதிர்ப்பையும் சமாளித்து, தேர்தலில் வென்று பெரியாரிடம் வாழ்த்துப் பெற திருச்சிக்குச் சென்றோமே? அப்போது இந்த அறிக்கையாளர், நம்மை எவ்வளவு வெறுப்புடன் நோக்கினார்? பெரியார் நம்மைச் சந்திக்கக் கூடாது - நம்மை அவரது இல்லத்திலேயே வரவேற்கலாகாது என்று - எவ்வளவு தலைகீழாக நின்றார் என்பதையெல்லாம், அப்போதே அன்பில் தர்மலிங்கம் சொன்னாரே! அதை மறந்துவிட்டாயா?

ஆமண்ணா! மறப்போம்! மன்னிப்போம்! என்று நீங்கள்தானே சொல்லியிருக்கிறீர்கள் - அதனால் மறந்து விட்டேன்.

தெரியும் எனக்கு! மறந்துவிட்டதால்தான் கழக ஆட்சி கலைக்கப்படப் போகிறது என்ற நெருக்கடியான சமயத்திலே கூட அவர்கள் நிறுவனத்துக்கு விதிவிலக்கு கொடுத்தாய் என்பதெல்லாம் எனக்குத் தெரியும்! மறப்போம் என்று நான்

சொன்னது, சிலரது தவறுகளை பெருந்தன்மையுடன் விட்டு விடுவோம் என்ற பொருளில்தான்! மாறாக, ஒரு நிகழ்ச்சியை நினைவிலிருந்தே அகற்றிவிடுவது என்ற பொருளில் நான் சொல்லவில்லை! எனவே தம்பி! அப்படிப்பட்ட அருங்குணாளர்களிடம் நாம் இதைத்தான் எதிர்பார்க்க முடியும்!

காவிரிப் பிரச்சினை பற்றி நான் மட்டுமல்ல அண்ணா! - நடுநிலையாளர்கள், நல்ல மனம் படைத்த விவசாயப் பெருங்குடி மக்கள் - உண்மை தெரிந்த உயர்ந்த உள்ளம் கொண்ட தலைவர்கள் எல்லோருமே, உரிய தீர்வு ஏற்பட்டும் இன்னும் தேவையின்றி கர்நாடக அரசு பிரச்சினை உருவாக்குகிறதே என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போது - புண்ணில் ஈக்கள் மொய்த்துத் துன்புறுத்துவது போல சிலர் நடந்து கொள்கிறார்களே என்பதை எண்ணினேன் அண்ணா! அதனால்தான் தூக்கம் வரவில்லை.

தம்பீ... புண்ணில் மொய்க்கும் ஈக்களைத் தடி கொண்டா தாக்க முடியும்? ஒரு தாள் கொண்டாவது விசிறி விட்டு அவற்றை அகற்ற வேண்டுமே தவிர... புண் விரைவில் ஆறிட முயற்சி மேற்கொள்ள வேண்டியதுதானே முக்கியம்?

ஆம் அண்ணா! ஆம்! அந்த முயற்சியில்தான் மும்முரமாக ஈடுபட்டிருக்கிறேன் - தமிழகத்தின் முதிர்ந்த அரசியல் தலைவர்களின் துணையுடன்!

பிறகேன், இடையில் கேட்கும் இந்த முணுமுணுப்பு ஒலிகளுக்காக கவலைப்படுகிறாய்? அதையும் உன் முயற்சிக்கு வழங்கப்படும் ஊக்க டானிக்காக நினைத்துக் கொள்ள வேண்டியதுதானே!

அப்படித்தான் அண்ணா அவர்களின் அறிக்கைகளையும், கண்டனங்களையும் பிரச்சினையை தீர்க்கப் பயன்படும் கருவிகளாகவே நினைத்துக் கொள்கிறேன்... ஆனாலும்...

பிறகென்ன தம்பி! ஆனாலும்...?

ஒன்றுமில்லையண்ணா! அவர்கள் ஜெயலலிதாவுடன் சேர்ந்துகொண்டு...

அதற்குக் கூட நீயும், நானும் மகிழ்ச்சி அடையத்தானே வேண்டும். உனக்கு நினைவில்லையா? பிராமணியம்தான் நமக்கு

எதிரியே தவிர, பிராமணர்கள் அல்ல என்று நான் சொன்னபோது அதனை திரிபுவாதம் என்று கண்டித்தவர்கள் - இன்றைக்கு அவர்களே நான் சொன்னதையேற்று செயலில் காட்டி வருவது மகிழ்ச்சிக்குரியதுதானே!

சரியாகச் சொன்னீர்கள் அண்ணா! நான் எந்தப் பார்ப்பனருக்கும் விரோதியல்ல, பார்ப்பனீயத்துக்குத்தான் விரோதி என்று பெரியார் சொன்னதை பொன்மொழி என்ற புத்தகமாகவே வெளியிட்டவர்கள், அதை நான் எடுத்துக்காட்டியபோது என்மீது சீறி விழுந்தார்கள். இன்றைக்கு அவர்கள், அவர்களே வெளியிட்ட பெரியார் பொன்மொழி நூலில் உள்ளவாறு நடந்து கொள்கிறார்கள். அதாவது பெரியாரை விட்டு பல படிகள் கீழே இறங்கி ஜெயலலிதாவின் வழி நடப்பவர்களாகவே தங்களை மாற்றிக் கொண்டுவிட்டார்கள்!

சரி தம்பி! பகுத்தறியும் மக்கள், எல்லோரையும் நன்றாகப் புரிந்து வைத்துக்கொண்டு தானிருக்கிறார்கள். கவலைப்படாமல் தூங்கு... காலையில் எழுந்தவுடன் கடிதம் எழுத வேண்டாமா உடன்பிறப்புகளுக்கு!

இல்லையண்ணா! எழுதப் போவதில்லை! காரணம் - இந்தக் கனவில் நீங்கள் வந்ததும், பேசியதுமே ஒரு கடிதம் ஆகிவிட்டது!

அன்புள்ள,

மு. க.

(25-09-1999)

2491. மயிலைப் பார்த்து, ஏதோ ஒன்று பழித்த கதை!

உடன்பிறப்பே,

என்ன ஆச்சரியம்! கருத்துக்கணிப்பு எடுத்து, தேர்தலில் எந்த அணிக்கு, எத்தனை இடங்கள் வெற்றிபெற வாய்ப்பு என்று வெளியிடுகிற போட்டியில் ஈடுபடுகிற பத்திரிகையாளர்களிடம் கள்ளவோட்டு போட்டவர்கள்கூட உரையாடுகிறார்கள் என்ற கற்பனைகள் வெடித்துச் சிதறுவதைப் பார்க்கும்போது விந்தையாகத்தானிருக்கிறது. நான் எத்தனை தரம் கருப்புப் புள்ளியை மருந்து கொண்டு அழித்துவிட்டு கள்ள வோட்டு போட்டேன் தெரியுமா? என்று அவர்கள் கணக்கு சொல்வதாகக் கதைகளையும் சேர்த்து எழுதுகிற நிபுணத்துவம் வாய்ந்த நிருபர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாதுதான். ஆசிரியரின் மேஜையில் உட்கார்ந்து கொண்டே ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்கள் சுற்று வந்து கணிப்புகளைக் குவிக்கும் திறமைசாலிகளும் உண்டு.

வாய்த்துக் கொண்டால் கிழவியும் பாடுவாள் என்பது போல, நமது ஊரில் உள்ள சில ஏடுகளில் வெளிவரும் கருத்துக் கணிப்புகள் சில நேரங்களில் சரியாகவும் அமைந்து விடுவதுண்டு.

கருத்துக்கணிப்பு ஆய்வுகள் சில,முறைப்படி நடத்தப்படுவதும் உண்டு. சில கருத்துக்கணிப்புகள், குறிப்பிட்ட கட்சிகளின்மீது விருப்பு வெறுப்புடனோ அல்லது நடுநிலையாகவோ - நூறு இருநூறு பேரை பேட்டி கண்டோ அல்லது ஆயிரக்கணக்கான வாக்காளர்களை பேட்டி கண்டோ வெளியிடப் படினும், அவற்றில் முரண்பாடுகள் வருவதுண்டு.

அதனால்தான் நான் அதைப்பற்றிச் செய்தியாளர்கள் கேட்டபோதெல்லாம், கருத்துக்கணிப்பை ஜோசியத்துடன் ஒப்பிட்டுக் கூறியிருக்கிறேன். கருத்துக்கணிப்பை நம்பிக்

கொண்டிராமல், நமது தோழமைக் கட்சிகளில் செயலாற்றும் தொண்டர்கள் மதமதப்பின்றி தேர்தல் பணியாற்றவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துமிருக்கிறேன்.

கருத்துக்கணிப்பில் கள்ள வோட்டுப் போட்டவர்களும் எப்படிக் கருத்துக் கூறினார்கள் என்பதுதான் புதுமையான செய்தியாகும்.

கள்ள வோட்டு குறித்து ஒவ்வொரு கட்சியும், இன்னொரு கட்சியைக் குற்றம் சாட்டுவது என்பது தேர்தல் நேரத்து வாடிக்கையாகிவிட்டது. அதிலும் வெற்றி வாய்ப்பில் சந்தேகம் ஏற்பட்டாலோ அல்லது தோற்றுவிட்டாலோ கள்ள வோட்டு கோஷத்தை பயங்கரமாக கிளப்பிவிடுவார்கள்.

1971ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழகத்தில் தி.மு.க. கூட்டணி மகத்தான வெற்றியை, வரலாற்றிலே முதல் தடவையாகப் பெற்றபோது - பெருந்தோல்வியடைந்த காங்கிரஸ் கட்சியினரும், சுதந்திரா கட்சியினரும் ரஷ்ய மை கொண்டு செய்யப்பட்ட மாயம் என்று ஒரு கற்பனைக் கதையை கட்டி விட்டனர். ஆனால் அந்தக் கதையை மக்கள் நம்புவதற்குத் தயாரில்லை என்பதால், அந்த வதந்தி அற்ப ஆயுளில் மறைந்து போய்விட்டது.

தமிழகத்தில் தங்களின் வெற்றி வாய்ப்பு குறித்து முழுமையான சந்தேகத்தில் மூழ்கிவிட்ட சில கட்சிக்காரர்கள், தேர்தலில் முறைகேடு - அராஜகம் - கள்ள வோட்டு போன்ற முக்காடுகளால் தங்களின் முகம் மறைத்துக்கொள்ள இப்போதே முஸ்தீபு செய்து கொள்ளப் புறப்பட்டுவிட்டார்கள்.

திருவிழாக் கூட்டத்தில் திருடன்! திருடன்! விடாதே பிடி! பிடி! என்று கத்திக் கொண்டே ஒருவன் ஓடினான். எல்லோரும் எங்கே திருடன்! எங்கே! எங்கே என்று கேட்டுக் கொண்டே கையில் கிடைத்ததை எடுத்துக் கொண்டு திருடனைப் பிடித்துத் தாக்க ஓடினர். யாரும் அகப்படவில்லை.

கடைசியில் பார்த்தால் திருடன்! திருடன்! விடாதே; பிடி! பிடி! என்று கத்திக் கொண்டு அந்தக் கூட்டத்திலிருந்து தப்பி ஓடினவன்தான் திருடன் என்று தெரிந்து, திருவிழாக் கூட்டத்தினர் ஒருவரையொருவர் பார்த்து, திருதிரு என விழித்து தாங்கள் ஏமாற்றப்பட்டதைப் புரிந்து கொண்டனர்.

அ.தி.மு.க.வுடன் சேர்ந்து தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர்களும் கையெழுத்திட்ட புகார் மனுவுடன் மற்றும் சில கட்சிகளின் பிரதிநிதிகளுடன் கவர்னர் அவர்களைச் சந்தித்து விளக்கமளித்து விட்டு வந்து, பின்னர் ஒரு பொதுக்கூட்டத்தில் வீர முழக்கமிட்டுள்ளனர்.

காங்கிரஸ் மற்றும் மார்க்சிஸ்ட் கட்சிகள் தமிழ் நாட்டில் கூட்டணி! ஆனால் கேரளத்தில் எதிரணிகள்!

அந்த அணிகளின் அழகு பற்றி ஆங்கில ஏடுகளில் வெளிவந்துள்ள செய்தியின் முகப்புப் பகுதியை மட்டும் படித்துப் பார்க்கலாம்!

"Thiruvananthapuram, Sept, 21 - The Congress(I)'s anti-CPI(M) campaign is all set to take a new turn with the one-day hunger-strike to be staged by two of its seniormost leaders, Mr. A.K. Antony and Mr. Thennala Balakrishna Pillai, on Wednesday.

The 9 a.m. to 9 p.m. hunger stir is being staged at the Martyrs column here in protest against the "large - scale election malpractices" perpetrated by the CPI(M)."

அதன் தமிழாக்கம் வருமாறு :-

திருவனந்தபுரம், செப்டம்பர் 21 - காங்கிரஸ் கட்சியின் இரண்டு மூத்தத் தலைவர்களாகிய திரு. ஏ.கே. அந்தோணியும், திரு. தென்னல பாலகிருஷ்ண பிள்ளையும் புதன்கிழமையன்று ஒருநாள் உண்ணாவிரதம் மேற்கொள்ள முடிவு செய்துள்ளதால், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிரான காங்கிரசின் பிரச்சாரம் புதிய திருப்பத்தை ஏற்படுத்திட உள்ளது.

காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை, தியாகிகள் நினைவுத் தூணுக்கு அருகில் மேற்கொள்ளப்பட உள்ள இந்த உண்ணாவிரதப் போராட்டம், மார்க்சிஸ்ட் கட்சியினர் கட்டவிழ்த்துவிட்ட பெருமளவிலான தேர்தல் முறைகேடுகளைக் கண்டித்தே ஆகும். இதுதான் அந்தச் செய்தி!

இவர்களில் திரு. அந்தோணி அவர்களிடம் எனக்கு நெருங்கிப் பழகும் வாய்ப்பில்லை எனினும் - நேர்மையில் நெருப்பு போன்றவர் என்று கேள்விப்பட்டுள்ளேன்.

இங்கு தேர்தல் முறைகேடு குறித்துக் கூச்சல் போடுகிற கூட்டத்தில் சிலர் இருக்கிறார்களே! வஃப் வாரிய சொத்தையே வயிற்றுக்குள் போட்டுக்கொள்ள வாயை அகலப் பிளந்தவர்கள் - சிறார்களுக்கு வழங்கும் இலவச செருப்புகளிலேகூட பணத்தைச் சுருட்டியவர்கள் - சுயநிதிக்கல்லூரிகளில் சொந்தக் கட்சிக்காரனிடமே சுரண்டுபவர்கள் - அவர்களைப் போல இல்லாது அறநெறி போற்றுபவர் எனப் பெயர் எடுத்த அந்தோணிதான் கேரளத்து மார்க்சிஸ்ட் கட்சி மீது தேர்தல் முறைகேடு குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார் என்பதையும் மறந்துவிடக்கூடாது!

கேரளத்தில் ஆட்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைமையில் நடக்கிறது. அந்த ஆட்சியில் தேர்தல் முறைகேடு என்று காங்கிரஸ் குற்றம் சாட்டுகிறது! இங்கே அந்த இரண்டு கட்சிகளும் தோள்மீது கை போட்டுக் கொண்டு நம்மீது வாள் ஓங்குகின்றன.

மயிலைப் பார்த்து எதுவோ பழிப்பதாக ஒரு பழமொழி உண்டல்லவா? அந்தப் பழமொழிதான் நினைவுக்கு வருகிறது.

அன்புள்ள,

மு. க.

(26-09-1999)

2492. கட்சி அரசியலுக்கு அப்பால் அணுக வேண்டிய காவிரிப் பிரச்சினை!

உடன்பிறப்பே,

காவிரிப் பிரச்சினை தொடர்பாக, இப்போதுள்ள சூழ்நிலையில் சில விவரங்களை உனக்கும், தமிழக மக்களுக்கும் விளக்கிட விரும்புகிறேன்.

சட்டம் பயின்றவர்கள், காவிரிப் பிரச்சினையை ஏறத்தாழ முப்பது ஆண்டுக் காலமாக கவனித்து வருகின்ற மூத்தவர்கள் எல்லாம் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இந்தப் பிரச்சினை எத்தனை ஆண்டுக்காலமாக நடைபெற்று வருகிறது? 1968-ஆம் ஆண்டு இந்தப் பிரச்சினை ஆரம்பமானது. ஏறத்தாழ முப்பது ஆண்டுகள்! அண்ணா அவர்கள் 1967-இல் முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் நமக்குச் செய்திகள் வந்தன. கர்நாடகத்தில் ஹேமாவதி அணை கட்டப்படுகிறது. ஹேரங்கி அணை கட்டப்பட்டிருக்கிறது. கபினி அணை கட்டப்பட்டிருக்கிறது என்று செய்திகள் வந்தபொழுது 1924 ஆம் ஆண்டு காவிரி நீர் பங்கீட்டிற்காக அன்றைய மைசூர் அரசுக்கும் சென்னை ராஜ்யத்திற்கும் வெள்ளைக்காரன் காலத்தில் ஏற்பட்ட ஒப்பந்தம் இருக்கிறதே, அதை எடுத்துப் படித்துப் பார்த்தபோது - தமிழகத்தின் ஒப்புதல் பெறாமல் எந்தவொரு அணையும் கர்நாடகம் கட்டக் கூடாது என்றிருக்கின்றது. ஆனால் அதை மீறி இருபது ஆண்டுக்காலம் மத்தியிலும் இரு மாநிலத்திலும் இருந்த காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஹேமாவதி, கபினி, ஹேரங்கி போன்ற அணைகள் எல்லாம் அங்கே கட்டப்பட்டன.

அண்ணா அவர்கள், இதைப்பற்றி சிந்தித்து அமைச்சரவைக் கூட்டத்திலே விரிவாகப் பேசிப் பொறியாளர்களை எல்லாம் அழைத்து உரையாடி, அன்றைக்குப் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்த என்னிடம் மைசூர் அரசோடு பேசுமாறு பணித்தார். அந்தப் பேச்சுவார்த்தை டெல்லியிலே நடைபெற்றது.

அப்போது கர்நாடக முதலமைச்சர் திரு. வீரேந்திர பட்டீல் அவர்களிடம் பொதுப்பணித்துறையும் இருந்தது. எனவே அதுபற்றிப் பேச முதல்வரே வந்தார். அப்போது கே.எல். ராவ் அவர்கள், மத்திய நீர்பாசனத்துறை அமைச்சர். அவர் முன்னிலையில் நானும், கர்நாடகத்தின் முதல்வர் வீரேந்திர பட்டீலும் பேசத் தொடங்கினோம். ஒருமுறை அல்ல, இருமுறை அல்ல! அதற்குப்பிறகு பல பிரதமர்கள் மாறினார்கள். கர்நாடகத்தில் பல முதல்வர்கள் மாறினார்கள். 26 முறை பேச்சுவார்த்தை நடைபெற்றது. இடையிலே சில பேச்சுவார்த்தைகள் என்னுடைய அருமை நண்பர் எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோதும் நடைபெற்றிருக்கின்றன. அதற்குப் பிறகு நாம் ஐந்து முறை உச்சநீதி மன்றத்தினுடைய கருத்துக்கு ஏற்ப, இன்றைய கர்நாடக முதல்வர் படேல் அவர்களோடு டெல்லியிலும், சென்னையிலும், கர்நாடகத்திலும் பேச்சுவார்த்தை நடத்தினோம். ஏறத்தாழ இந்த முப்பது ஆண்டுக்காலத்தில் 31 முறை பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறோம். எந்த முடிவும் அப்போது ஏற்படவில்லை.

17.2.1970 அன்று நடுவர் மன்றம் அமைத்திட வேண்டுமென தமிழ்நாடு அரசு சார்பில், மத்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டது. 1971ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, மேலும் பேச்சுவார்த்தைகளால் பயன் ஏற்படாது என்று கருதி, நடுவர்மன்றம் அமைக்க வேண்டும் என்ற ஒரு கருத்தை அரசாங்கத்தின் சார்பில் எடுத்துச் சொன்னேன். 8.7.1971 அன்று நடுவர்மன்றம் அமைத்திட வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அது மாத்திரமல்ல. 1971இல், ஒரு வழக்கும் ஹேமாவதி அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்டது. அந்த வழக்கு தொடரப்பட்டபோது அதை முரசொலி மாறன், கோ.சி. மணி, அன்பிற்குரிய நண்பர் மூப்பனார் மற்றும் தஞ்சை மாவட்ட பல்வேறு விவசாய சங்கங்கள் இவர்கள் எல்லாம், அன்றைக்கு அந்த வழக்கை முன்னின்று நடத்தினார்கள்.

பேச்சுவார்த்தை மூலம் பலன் காணலாம் என்று அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள், என்னை அழைத்துச் சொன்னார்கள். சரி என்று நான் ஒப்புக் கொண்டேன். அப்போது அம்மையார், நான் பேசுவதென்றால் இந்த வழக்கு இருக்கும்போது

பேச முன் வருவார்களா? எனவே என்னை நம்பி இந்த வழக்கைத் திரும்பப் பெறுங்கள் என்று கேட்டார்கள். அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்து, தலைமைச் செயலகத்திலே அதுபற்றிப் பேசி, அந்த வழக்கைத் திரும்பப் பெறுகின்ற நேரத்திலே கூட, மீண்டும் வழக்குப்போட வழி வைத்துக்கொண்டுதான் அந்த வழக்கை தமிழக அரசு திரும்பப் பெற்றது.

தஞ்சை விவசாயிகள் சார்பாக தொடரப்பட்ட - முரசொலி மாறன் முன்னின்று தொடர்ந்த அந்த வழக்கும், இந்திரா காந்தி அவர்களுடைய வார்த்தையை நம்பி திரும்பப் பெறப்பட்டது. நாங்கள் இந்திரா காந்தியின் வார்த்தையை நம்பினோம். இந்திரா காந்தி அம்மையார், கர்நாடக அரசு இணங்கி வருமென்று அவர்களுடைய வார்த்தையை நம்பினார்கள். இரண்டு பேருக்கும் ஏமாற்றம் ஏற்பட்டது.

திரு. வி.பி. சிங் அவர்கள், பின்னர் பிரதமராக இருந்தபோது தி.மு.கழக ஆட்சியிலே, சட்டமன்றத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றினோம். இனி எங்களால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. எனவே ஒரு நடுவர் மன்றத்தை நியமித்து, அதன் தீர்ப்பை வழங்கச் செய்யுங்கள் என்று பிரதமர் வி.பி. சிங் அவர்களைக் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றினோம். அந்தத் தீர்மானம் செயல்படுவதற்கு முன்பு தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாய சங்கத்தின் சார்பில் திரு. ரெங்கநாதன் அவர்கள் ஒரு வழக்கைப் பதிவு செய்தார். உச்சநீதிமன்றத்தில் அந்த வழக்கில் தமிழக அரசும் தன்னை இணைத்துக் கொண்டிருந்தது. அந்த வழக்கு நடைபெற்ற நேரத்தில் தி.மு.க. ஆட்சி தமிழகத்தில் நடைபெற்ற காரணத்தால், பிரதமர் வி.பி. சிங் அவர்களோடு தொடர்பு கொண்டு நடுவர்மன்றம் அமைக்க நீங்கள் ஒத்துழைப்பு தாருங்கள் என்று கேட்டோம். அதுபற்றி சிந்தித்துக் கொண்டிருக்கும்போது உச்சநீதி மன்றத்திலே அந்த வழக்கு விரைவாக, விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.

மத்திய அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் அவர்களுடைய கருத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். அது பற்றி பிரதமர் வி.பி. சிங் அவர்கள், தொலைபேசி மூலமாக தமிழக முதல்வராக இருந்த என்னை தொடர்பு கொண்டு மத்திய அரசு உச்சநீதிமன்றத்திலே என்ன சொல்லலாம் என்று கேட்டார். அதற்கு நான், இனிமேல் பேச்சுவார்த்தைக்கு தமிழ்நாடு தயாராக இல்லை, இதைத்

தெளிவாக்கிவிடுங்கள். அப்போதுதான் எங்களுக்கு நடுவர்மன்றம் கிடைக்கும் என்று சொன்னேன்.

நல்லவேளையாக அப்போது சட்டப்பேரவை நடைபெற்றுக் கொண்டிருந்தது. இனி பேச்சுவார்த்தை பயன்படாது, நடுவர்மன்றம்தான் தேவை, மத்திய அரசை வலியுறுத்துகிறோம் என்ற தீர்மானத்தை பேரவையிலே 24.4.1990 அன்று நிறைவேற்றி உடனடியாகப் பிரதமர் வி.பி. சிங் அவர்களுக்கு அனுப்பி வைத்தோம். அவர் மத்திய அரசின் வழக்கறிஞர் மூலமாக - உச்சநீதிமன்றத்திற்கு அதைத் தெரிவித்தார். தெரிவித்தவுடன் உச்சநீதிமன்றம், இனி பேச்சுவார்த்தை இல்லையென்றால், நடுவர் மன்றம் அமைக்க உத்தரவிடுகிறோம் என்று தெரிவித்தது.

கிராமப்புறத்திலே உள்ள சிலருக்கு நடுவர்மன்றம் என்றால் என்ன என்று தெரியாமல் இருக்கலாம். அது சட்டரீதியான பஞ்சாயத்து, அப்படிப்பட்ட பஞ்சாயத்துமன்றம், நடுவர்மன்றம் அமைக்க வேண்டும் என்று கேட்டு, வி.பி.சிங் அமைத்துக் கொடுத்தார். நடுவர்மன்றமே வராது, தர முடியாது, தரவிடமாட்டோம், தடுப்போம் என்று சொன்ன நிலையை மாற்றி பிரதமர் வி.பி. சிங் அவர்களோடு வாதாடி, நடுவர் மன்றத்தைக் கொண்டுவந்த என்னைப் பார்த்து தமிழர்களைக் காட்டிக் கொடுப்பவன் என்றும், தமிழகத்திற்கு துரோகம் செய்பவன் என்றும் அறிக்கை விடுபவர்களுக்கு தமிழக மக்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

நடுவர்மன்றத்திடம் நாங்கள் 28.7.1990 அன்று ஒரு விண்ணப்பம் செய்தோம். ஒரு இடைக்காலத் தீர்ப்பு அளியுங்கள். முழுமையாக விசாரித்து முடிவு தெரிவிக்க ஏழெட்டு ஆண்டுகளாகும். இடைக்காலமாக காவிரியில் தமிழகத்திற்கு எவ்வளவு தண்ணீர் விடலாம் என்று ஒரு தீர்ப்பு அளியுங்கள் என்று கேட்டோம். நடுவர்மன்றம் 5.1.1991 அன்று சொன்னது என்ன தெரியுமா? இடைக்காலத் தீர்ப்பு தர எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னது. அதிகாரம் உண்டா, இல்லையா என்று 10.1.1991 அன்று தி.மு.க. ஆட்சியில் உச்சநீதிமன்றத்திலே ஒரு வழக்கு போட்டோம். அதிகாரம் உண்டு என்று 26.4.1991 அன்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

நடுவர்மன்றம் விசாரணையை நடத்தி ஒரு இடைக்கால ஆணையைப் பிறப்பித்தது. அந்த ஆணைதான் 25.6.1991இல்

பிறப்பிக்கப்பட்ட இடைக்கால ஆணை. அந்த நடுவர் மன்ற இடைக்கால ஆணை என்னவென்றால் - ஆண்டு ஒன்றுக்கு 205 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடகம் தன்னுடைய நீர்த் தேக்கத்திலிருந்து விடுவித்து அந்த நீர் பின்கண்ட விவரப்படி, ஜூன் மாதம் முதல் மே மாதம் வரையிலான 12 மாதங்களில் மேட்டூர் நீர்தேக்கத்தை அடைய வேண்டும்.

மாத வாரியாக எவ்வளவு நீர்த் தர வேண்டும் தெரியுமா?

ஜூன் மாதத்தில் - 10.16 டி.எம்.சி.

ஜூலை மாதத்தில் - 42.76 டி.எம்.சி.

ஆகஸ்ட் மாதத்தில் - 29.36 டி.எம்.சி.

அக்டோபர் மாதத்தில் - 30.17 டி.எம்.சி.

நவம்பர் மாதத்தில் - 16.05 டி.எம்.சி.

டிசம்பர் மாதத்தில் - 10.37 டி.எம்.சி.

ஜனவரி மாதத்தில் - 2.51 டி.எம்.சி.

பிப்ரவரி மாதத்தில் - 2.17 டி.எம்.சி.

மார்ச் மாதத்தில் - 2.40 டி.எம்.சி.

ஏப்ரல் மாதத்தில் - 2.32 டி.எம்.சி.

மே மாதத்தில் - 2.01 டி.எம்.சி.

இவ்வாறாக மொத்தம் 205 டி.எம்.சி. தண்ணீரை மாதா மாதம் பிரித்து, கர்நாடகம் தமிழகத்திற்கு வழங்க வேண்டும் என்பதுதான் நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு. (ஒரு டி.எம்.சி. என்பது நூறு கோடி கன அடி தண்ணீராகும்)

மாதாந்திர அளவான நீர், வாராந்திர அடிப்படையில் சமமாகப் பிரித்து வழங்கப்பட வேண்டும். ஏதாவது ஒரு வாரத்தில் தண்ணீரின் அளவு குறையுமானால் அதை அடுத்த வாரத்தில் ஈடுகட்ட வேண்டும்.

மேலே கூறிய நீரின் அளவில், பாண்டிச்சேரிக்கு ஆறு டி.எம்.சி. தண்ணீரை தமிழ்நாடு வழங்க வேண்டும்.

கர்நாடகம் அதனுடைய கூற்றின்படியே மே மாதம் 1991 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பாசன பரப்பான 11 இலட்சத்து 20

ஆயிரம் ஏக்கருக்கு மேல் அதை விரிவாக்கம் செய்யக்கூடாது. அதை விரிவாக்கிவிட்டால், தண்ணீர் அங்கே அதிகமாகப் பயன்பட்டுவிடும். தமிழகத்திற்குக் கிடைக்காது என்கிற எச்சரிக்கை உணர்வோடு நடுவர்மன்ற இடைக்கால ஆணையில் இந்தப் பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது.

அரசின் சார்பாக இவ்வளவு எச்சரிக்கையுடன் செயல்பட்டிருந்தும், காவிரிப் பிரச்சினையில் நான் தமிழகத்திற்கு கேடு செய்துவிட்டதாகச் சொல்கின்றவர்களின் வரலாற்றையும் சினிமாப் படங்களில் ஃப்ளாஷ்பேக் (Flash Back) என்பார்களே, அதைப்போல கொஞ்சம் பின்னோக்கிப் பார்ப்போம்.

1991-இல் இந்த இடைக்காலத் தீர்ப்பு வந்தவுடன், இதை நிறைவேற்ற முடியாது - நடைமுறைப்படுத்த முடியாது - இதற்கு இணங்க முடியாது என்று கர்நாடக மாநிலம் கண்டிப்பாகச் சொன்ன பிறகு, 1991 ஜூலை மாதம் 8-ஆம் தேதி தமிழக சட்டமன்றத்தில் முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பின்வரும் தீர்மானத்தை முன்மொழிந்து நிறைவேற்றினார். அந்தத் தீர்மானமாவது :-

"ஆண்டு ஒன்றுக்கு மேட்டூர் அணையில் 205 டி.எம்.சி. நீர் கிடைக்கும் வகையில், கர்நாடக நீர்த் தேக்கங்களிலிருந்து வாராந்திர அடிப்படையில் நீர் விடப்படவேண்டும் என்பதோடு, காவிரி நதி நீர்த் தாவா நடுவர் மன்றத்தின் 25.6.91-ஆம் நாளிட்ட இடைக்கால ஆணையை நிராகரிக்கும்படி, கர்நாடக மாநிலத்தின் இரு சட்டமன்றங்களும் தீர்மானம் நிறைவேற்றியதாக பத்திரிகைகளில் வந்துள்ள செய்திகள் இந்தப் பேரவைக்கு ஆழ்ந்த கவலை தருவதாக உள்ளது.

வழக்கமாக ஜூன் 12-ஆம் தேதி, பாசனத்திற்குத் திறக்கப்பட வேண்டிய மேட்டூர் நீர்தேக்கம் நீர் இருப்புக் குறைவாக இருப்பதாலும், நடுவர் மன்றத்தின் ஆணைக்கிணங்க நீர் திறந்து விடுவது பற்றி கர்நாடக அரசிடமிருந்து உறுதியான அறிகுறிகள் இல்லாத நிலையிலும், இன்னும் திறக்கப்படாமல் இருப்பது கவலை அளிப்பதாக உள்ளது. நடுவர்மன்றம் அளித்துள்ள இடைக்கால நிவாரண ஆணை இம்மாநிலத்தின் தேவையையும் மற்றும் மாநில அரசினால் கோரப்பட்ட நீர்

அளவையும் விடக் குறைவாக இருந்தாலும், ஒவ்வொரு மாநிலமும் இவ்வாணையின் மீது மாறுபட்ட கருத்துக்கள் கொண்டிருப்பினும், 56-ஆம் ஆண்டைய நதி நீர்த் தகராறு சட்டத்தின்படி சட்ட ரீதியாக அமைக்கப்பட்ட உயர் அதிகாரம் வாய்ந்த நடுவர் மன்றத்தின் ஆணை முற்றிலும் மதிக்கப்படவேண்டும் என்பது இந்தப் பேரவையின் உறுதியான கருத்தாகும்."

இதுதான் 8.7.1991 அன்று சட்டப் பேரவையிலே அன்றைய முதல் அமைச்சர் செல்வி ஜெயலலிதாவால் முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம்.

நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை கர்நாடக அரசு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்ட பிறகு, ஏழாண்டு காலம் அந்தக் கோரிக்கையை கர்நாடக அரசு ஏற்கவில்லை.

ஆனால் ஏழாண்டுக்குப் பிறகு, 1998-ல் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையின்படி, கர்நாடகம் இதை ஏற்றுக் கொண்டிருக்கின்றது.

இது நமக்கு கிடைத்த நல்ல தீர்வா? அல்லவா? என்பதை நடுநிலையோடு சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து 1992-ஆம் ஆண்டு, ஜெயலலிதா அவர்களுக்கு மத்திய நீர்பாசனத் துறை அமைச்சராக இருந்த திரு. சுக்லா அவர்கள் ஒரு கடிதம் எழுதுகிறார். நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்புக்குப் பிறகு காவிரிப் பிரச்சினை குறித்து ஒரு கடிதம் எழுதுகிறார். 9.6.92 தேதியிட்டு மத்திய அமைச்சர் சுக்லா அவர்கள் எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் :-

ஜெயலலிதா அவர்களே,

காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை மனதிலே கொண்டு, அதனை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பினை மத்திய நீர்க் குழுமத்திடம் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் ஒத்துழைப்போடு விடலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. புதுவை மாநில முதல்வர் திரு. வைத்தியலிங்கம் அவர்கள், இந்தத் திட்டத்தினை பொதுவாக ஒப்புக் கொண்டுள்ளார். மத்திய நீர்க்குழுமத்தின் தலைமைப் பொறியாளர் தலைமையிலே அமையும் இந்த ரெகுலேஷன் குழுக்களில், சம்பந்தப்பட்ட மாநில அரசுகளின் பிரதிநிதிகளும் இருப்பார்கள். இந்த ஏற்பாட்டிற்கு

உங்களின் ஒப்புதலை உடனடியாகத் தெரிவித்தால் மிகவும் உதவியாக இருக்கும். அதற்குப் பிறகுதான் இந்த ரெகுலேஷன் குழுக்களை அறிவித்து ஆணைகளைப் பிறப்பிக்க இயலும்.

இதற்குப் பதில், முதல்வராக இருந்த ஜெயலலிதாவிடமிருந்து எப்போது செல்கிறது தெரியுமா? 92-ஆம் ஆண்டு வந்த கடிதத்திற்குப் பதில் கடிதம் 93-ஆம் ஆண்டு - அதாவது ஒன்பது மாதங்கள் கழித்து 30.3.1993 அன்று கையெழுத்திடப்படுகின்றது. அந்தக் கடிதம் 14.4.1993 அன்றுதான் சென்னையிலிருந்து அனுப்பப்படுகின்றது. காவிரிப் பிரச்சினையிலே மிகுந்த அக்கறையுள்ள (?) இந்தக் காவிரி தந்த கலைச்செல்வி ஜெயலலிதா அம்மையார் இத்தனை நாட்களுக்குப் பிறகு பதில் அனுப்புகிறார். எழுதப்பட்ட கருத்து மாறுபாடான கருத்தா? அல்ல! எதிர்க் கருத்தா? அல்ல! அமைக்கப்படுகின்ற குழுவை ஆதரிக்கின்ற பதில். அதையும் படிக்கிறேன்.

Dear Shri Shuklaji,

I invite kind attention to your D.O. letter dated 9th June 1992. I would like to convey the concurrence of the Government of Tamil Nadu to your proposal.....

அதாவது 30.3.1993-இல் எழுதுகிறார் பதில். சுக்லாவின் 9.6.92 தேதியிட்ட கடிதம் கிடைத்ததைக் குறிப்பிட்டு பதில் எழுதுகிறார்.

(உங்களுடைய ஏற்பாட்டிற்கு தமிழ்நாடு அரசு தன்னுடைய ஒப்புதலைத் தெரிவிக்கின்றது. காவிரிப் பிரச்சினைக்காக நடுவர் மன்றத்தினுடைய இடைக்கால ஆணையை நிறைவேற்ற நீங்கள் உருவாக்குகின்ற முயற்சிகளுக்கு தமிழக அரசினுடைய ஒப்புதலைத் தருகிறேன்.)

"I thank you for the initiative you have taken for creating a suitable adminstrative machinery for monitoring the implementation of the interim Orders of the Cauvery Water Disputes Tribunal"

(காவிரிப் பிரச்சினைக்காக நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை நிறைவேற்ற நீங்கள் நிர்வாக இயந்திரம் ஒன்றை உருவாக்குகின்ற முயற்சிகளுக்கு என்னுடைய ஒப்புதலைத் தருகிறேன்)

என்று எழுதியிருக்கிறார். எதிர்க்கருத்து என்றால் கூட ஒன்பது மாதம் தாமதமாகியிருக்கலாம். இது ஒன்பது மாதங்கள் தாமதிக்கக் கூடிய விஷயமா? உடனடியாகப் பதில் அளித்திருக்க வேண்டிய விஷயமல்லவா?

ஏற்றுக் கொள்கிறேன் என்று எழுதுவதற்கு ஒரு முதலமைச்சர் ஒன்பது மாதங்கள் காலம் எடுத்துக் கொண்டார் என்றால், காவிரிப் பிரச்சினையிலே அவருக்கு எவ்வளவு அக்கறை இருந்திருக்கின்றது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

1993-ஆம் ஆண்டு இந்தப் பிரச்சினைக்காக சம்மதம் தெரிவித்து ஜெயலலிதா கடிதம் எழுதிய பிறகும், அந்தக் குழு அமைக்கப்படாத காரணத்தால் 18.7.1993 அன்று ஒரு உண்ணாவிரதத்தைத் தொடங்கினார்.

அந்த உண்ணாவிரதத்தின் குறிக்கோள் என்ன என்பதை உண்ணாவிரதப் பந்தலுக்கு வந்த கவர்னர் சென்னா ரெட்டியிடம், ஜெயலலிதா குறிப்பிட்டது பத்திரிகைகளிலே வெளிவந்திருக்கின்றது. அது என்ன தெரியுமா?

> "காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பை அமல் படுத்தும்படி அரசியல் சட்டத்தின் 256ஆவது விதியின் கீழ், கர்நாடக அரசுக்கு பிரதமர் நரசிம்மராவ் உத்தரவிட வேண்டும். அதுவரை நான் எனது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட மாட்டேன்."

அப்பொழுது நரசிம்மராவ் பிரதமராக இருந்தார். அவர், அவருடைய அமைச்சரவையிலே இருந்த அமைச்சர் திரு. சுக்லாவை சமாதானத்திற்கு அனுப்பினார். சுக்லா வந்தார். செல்வி ஜெயலலிதாவை உண்ணாவிரத மேடையிலே சந்தித்தார். காவிரிப் பிரச்சினைக்காக உண்ணாவிரதம், காவிரிப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பு 205 டி.எம்.சி. தண்ணீரை வழங்க வேண்டுமென்று நரசிம்மராவ் கர்நாடக முதலமைச்சருக்குக் கட்டளை இட வேண்டும். அப்படி கட்டளையிட்டால்தான் நான் உண்ணாவிரதத்தை நிறுத்துவேன். இல்லாவிட்டால் சாகும்வரை உண்ணாவிரதம் என்றார்.

நரசிம்மராவ் உத்தரவிட்டாரா? இல்லை. உண்ணாவிரதத்தை இவர் கைவிட்டாரா? இல்லையா? அது எல்லோருக்கும் தெரியும்.

கைவிட்ட காரணத்தினால்தான் இன்றைக்கும், ஹைதராபாத்தில் இருந்து கொண்டே அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றார்.

பிரதமர் நரசிம்மராவ் கர்நாடக அரசுக்கு உத்தரவு பிறப்பிக்கும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட மாட்டேன் என்று கூறியவர் உண்ணாவிரதத்தைக் கை விட்டார். எப்படி? மத்திய அமைச்சர் சுக்லா சென்னைக்கு வருகிறார். வந்து குழு அமைக்கப்படும் என்று கூறுகிறார். முதலிலே கடிதம் எழுதி, அதனை ஜெயலலிதா ஒப்புக்கொண்டார் அல்லவா? அதுபோன்ற குழு அமைக்கப்படும் என்று சுக்லா சொல்கிறார். உடனே வெற்றி! வெற்றி! என்கிறார்கள்.

சுக்லா கொண்டு வந்த யோசனை என்ன தெரியுமா? ஒரு பெரிய கமிட்டி, ஒரு சிறிய கமிட்டி - அந்தப் பெரிய கமிட்டியில், தமிழ்நாடு அரசின் செயலாளர், கர்நாடக அரசின் செயலாளர், கேரள அரசின் செயலாளர், புதுவை அரசின் செயலாளர் என்று நான்கு செயலாளர்களும் இருப்பார்கள். இவர்களுக்கெல்லாம் தலைமையேற்பவராக மத்திய அரசின் செயலாளர் இருப்பார். இது ஒரு கமிட்டி.

அந்தக் கமிட்டியினுடைய தாக்கீதுகளை நடைமுறைப்படுத்த ஒரு கண்காணிப்புக் கமிட்டி (நடைமுறைக் கமிட்டி) இருக்கும். இப்படி இரண்டு கமிட்டிகள் அமைக்கப்படுமென்று சுக்லா, ஜெயலலிதாவிடம் உறுதியளித்தார். இந்த உறுதியையே வெற்றி, வெற்றி என்று ஜெயலலிதா கொண்டாடினார். அறிக்கை விடுத்தார். வெற்றி வந்துவிட்ட காரணத்தினால், உண்ணாவிரதத்தைக் கைவிடுகிறேன் என்று சொல்லி தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கெல்லாம் நன்றி தெரிவித்துக் கொண்டார். ஆனால் அந்தக் கமிட்டிகள் சட்டரீதியான கமிட்டிகளா என்றால், இல்லை. மேலும் தற்போது அமைந்துள்ள ஆணையத்தைப் போன்றோ, அதன் கீழ் உள்ள கண்காணிப்புக் குழுவைப் போன்றோ சட்டரீதியான வரைமுறைகளைக் கொண்ட அமைப்புகள் அல்ல. சுக்லா உறுதியளித்த அந்தக் கமிட்டிகளாவது அமைந்தனவா? என்றால் இல்லை. மத்திய அரசின் தலைமைச் செயலாளரைக் கொண்ட கமிட்டியும் அமையவில்லை. கண்காணிப்புக் கமிட்டியும் அமையவில்லை.

கடைசிவரையிலே அவைகள் அமையவே இல்லை. மாறாக பில்லிகுண்டுலுவிற்கும், மேட்டூருக்கும் வரும் தண்ணீரின்

அளவை ஒப்பிட்டுச் சரி பார்ப்பதற்காக என்று ஒரு நிலைக்குழு (Standing Committee) மாத்திரம் அமைக்கப்பட்டது. அது நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை அமல்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட குழு அல்ல.

குழு போடுவதாகச் சொன்னதற்கே, அது நல்ல தீர்வு! எனவே வெற்றி வெற்றி என்று சொன்னார்கள். 1998-ல் பிரதமர் வாஜ்பாய் தலைமையில் ஏற்பட்ட உடன்பாட்டின்படி, 205 டி.எம்.சி. தண்ணீர் தர கர்நாடக அரசே ஒப்புக் கொண்டுள்ளது நல்ல தீர்வு அல்லவாம். மாறாக மோசடி, துரோகம் என்று சுட்டிக்காட்டுகின்றார்கள்.

அறிக்கை விட்டே காவிரிப் பிரச்சினையை கட்சி அரசியலாக்குகிற ஜெயலலிதா, 1991 ஆம் ஆண்டில் நடுவர்மன்ற இடைக்காலத் தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு, 91, 92, 93, 94, 95 - இந்த ஐந்தாண்டுக் காலம் முதலமைச்சராக இருந்தவர், அந்த இடைக்காலத் தீர்ப்பை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்தாரா? அல்லது வெற்றி பெற்றாரா? இல்லை. 97 ஆம் ஆண்டில் பிரதமராக இருந்த திரு. குஜ்ரால் அவர்களை, தி.மு.கழகத்தின் சார்பில், கழக ஆட்சியின் சார்பில் வலியுறுத்தி, அதன்பிறகு தயாரித்த திட்டம்தான், இன்றைக்கு பிரச்சினைக்கு உரியதாகப் பேசப்படுகின்ற திட்டம்.

அந்தத் திட்டம் குறித்துப் பேசி முடிவெடுக்க பிரதமர் வாஜ்பாய் அவர்கள், 1998-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில், நான்கு முதலமைச்சர்களையும் அழைத்தார். 12 ஆம் தேதி உச்சநீதிமன்றம் இந்தத் திட்டத்தைப் பற்றிய அபிப்பிராயத்தைக் கேட்டிருக்கிறது. அதற்குள்ளாக நீங்கள் சேர்ந்து ஒரு நல்ல முடிவு எடுக்கலாம் வாருங்கள் என்று அழைத்தார்.

நான் ஏறத்தாழ 40க்கும் மேற்பட்ட கட்சித் தலைவர்களை எல்லாம் அழைத்துப் பேசினேன். அதிலே ஏறத்தாழ 30 பேர் டெல்லிக்குச் சென்று பேச வேண்டும் என்று எனக்குக் கட்டளையிட்டார்கள். ஒரு 10, 11 பேர் போகக் கூடாது என்றார்கள். நான் கேட்கிறேன்? ஜனநாயகத்தில் 30 பேர் சொன்னதைக் கேட்பதா? 10 பேர் சொன்னதைக் கேட்பதா? அதுமாத்திரமல்ல, தமிழர்களுக்கு ஒரு நியாயம் கிடைக்கப் போகிறது என்கிற நேரத்தில் நழுவவிடலாமா? அதை நழுவ விட நானும் விரும்பவில்லை. மற்றவர்களும் விரும்பவில்லை. போகச் சொன்னார்கள். போனேன்.

எல்லாப் பிரச்சினைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு அங்கு நாங்கள் சென்றோம். நான், அமைச்சர்கள் துரைமுருகன், ஆலடி அருணா மற்றும் அதிகாரிகள் இரண்டு நாட்கள் எங்களோடு உட்கார்ந்து பேசி, இந்தப் பிரச்சினைக்கு பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் ஒரு தீர்வினைக் கொண்டு வந்திருக்கிறார். 10.8.1998 அன்று காலையிலே, இந்த அம்மையார் அறிக்கை விடுகிறார். இது எங்களுக்கு உடன்பாடல்ல. நாங்கள் நிராகரிக்கிறோம் என்று.

ஆனால் 12.8.1998 அன்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளரான திரு. நல்லக் கண்ணு அவர்கள், இந்த உடன்பாட்டைப் பற்றி மதுரையிலே செய்தியாளர்களிடம் கூறியது என்ன தெரியுமா?

தஞ்சாவூர் டெல்டா பகுதி விவசாயிகள் உட்பட அனைவரும் இந்த உடன்பாட்டை வரவேற்றுள்ளனர். ஆனால் அ.தி.மு.க. மட்டும் எதிர்ப்பது ஆச்சரியமாகவுள்ளது. இதுபோன்ற நல்ல உடன்பாட்டை எதிர்ப்பதால், மாநில விவசாயிகளின் நலன்தான் பாதிக்கப்படும். காவிரிப் பிரச்சினையில் சில ஆண்டுகளுக்கு முன்பு உண்ணாவிரதம் இருந்த ஜெயலலிதாவிடம் அப்போதைய மத்திய நீர்வளத்துறை அமைச்சர் வி.சி. சுக்லா தெரிவித்த கண்காணிப்புக் குழு அமைக்கலாம் என்ற யோசனையை அவர் ஏற்றுக் கொண்டார். ஆனால் இன்று காவிரி நதிநீர் ஆணையத்தால் கண்காணிப்புக் குழு அமைக்கப்படும் என்பதை எதிர்க்கிறார். இது அரசியல் உள்நோக்கம் கொண்டது.

திரு. நல்லகண்ணு மாத்திரமல்ல, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரபூர்வமான ஏடு, (தீக்கதிர்) தனது 11.8.1998 தேதிய தலையங்கத்தில் குறிப்பிடும் போது :-

பிரதமர் முன்னிலையில் தமிழக, கர்நாடக, கேரள, புதுவை முதல்வர்கள் நடத்திய பேச்சு வார்த்தையின் பலனாக, நீண்டகாலமாக இருந்து வந்த காவிரி நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினையில் நல்லதொரு உடன்பாடு ஏற்பட்டுள்ளது. பிரச்சினையில் தொடர்புடைய அனைத்து மாநிலங்களாலும் இந்த உடன்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது வரவேற்கத்தக்கது.

காவிரி நடுவர்மன்றத்தின் இடைக் காலத் தீர்ப்பின்படி கர்நாடகம், தமிழகத்திற்கு ஆண்டொன்றுக்கு 205 டி.எம்.சி. தண்ணீர் திறந்துவிடுவது என்பது இந்த உடன்பாட்டின் மூலம் உத்தரவாதம் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஜெயலலிதாவைப் பொறுத்தவரை, எந்தவொரு பிரச்சினையிலும் மாநில மக்களின் நலன் குறித்து அவருக்கு அக்கறை இருந்தது இல்லை. இதில் தனக்கு என்ன லாபம் என்றே பார்த்துப் பழக்கப்பட்டுவிட்டவர். காவிரிப் பிரச்சினையை இழுத்தடித்துக்கொண்டே போய் தனது சுயநல அரசியல் சித்து விளையாட்டுக்களை நடத்திக் கொண்டிருக்கலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தார்.

ஆனால் இந்த உடன்பாடு, பிரச்சினைக்குத் தீர்வு காண்பது போல் அமைந்துவிட்டதால், ஆத்திரத்தில் அறிக்கைகளை அள்ளி வீசுகிறார். இந்த உடன்பாட்டை ஏற்க முடியாது என்றும், முந்தைய செயல்திட்டத்தை அரசிதழில் வெளியிட வேண்டுமென்றும் அவர் பிடிவாதம் பிடிப்பது குதர்க்கமானதே தவிர நியாயமானது அல்ல.

என்றும் எழுதியிருப்பதைக் காணும்போது, இன்றைய தினம் அவர்கள் அணி மாறியிருந்த போதிலும், அவர்களின் கருத்துக்கள் உண்மையை உலகத்திற்கு தெளிவாக்கிட தவறவில்லை.

மேலும் சிலர், இதிலே நாம் ஏதோ காலதாமதம் செய்துவிட்டதைப் போலச் சொல்கிறார்கள். இதில் நாம் எந்தவிதமான காலதாமதமும் செய்யவில்லை. இந்த ஆண்டு ஜூலைத் திங்கள் 13 ஆம் தேதியிலிருந்து இந்தப் பிரச்சினை குறித்து மத்திய அரசுக்கும், கர்நாடக அரசுக்கும் தமிழக அரசின் சார்பில் பல கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. யாருக்காவது அதைப்பற்றி சந்தேகம் வருமேயானால், அத்தனை கடிதங்களையும் தேதி வாரியாக வெளியிடவும் தயாராக உள்ளேன்.

இப்போது என்ன நிலைமை தெரியுமா? கர்நாடகம் ஏழு ஆண்டிற்கு முன் ஏற்றுக்கொள்ள மறுத்ததை - தொடர்ந்து ஏழு ஆண்டுகளாக மறுத்து வந்ததை 1998 உடன்பாட்டின் படி ஏற்றுக்கொண்ட பிறகும், தமிழகத்தின் வயல்கள் காய்கின்ற அளவிற்கு நிலைமை முற்றிய பிறகும் கர்நாடகம் தண்ணீர் விட மறுக்கின்றது. அதற்காக வாஜ்பாய் முன்னிலையில் ஏற்பட்ட உடன்பாட்டையே குறை கூற முடியுமா? முடியாது. ஏனென்றால் 1924 ஆம் ஆண்டு ஏற்பட்ட உடன்பாடு, கர்நாடக அரசினால் பல முறை மீறப்பட்டு, தமிழக அரசின் கருத்துக்களைக் கேளாமல், தடுத்தும் நிற்காமல், பல அணைக்கட்டுகளை கட்டி முடித்திருக்கிறதே, அதனால் 24 ஆம் ஆண்டு ஒப்பந்தமே சரியில்லை என்று கூறிவிட முடியுமா? அதைப்போலத்தான் கடந்த

ஆண்டு வாஜ்பாய் தலைமையில் தமிழகம், கர்நாடகம், கேரளம், பாண்டிச்சேரி ஆகிய நான்கு மாநில ஒப்பந்தமுமாகும். அதை கர்நாடகம் இப்போது நிறைவேற்றத் தயங்குகிற காரணத்தால், ஒப்பந்தமே சரியில்லை என்று கூறிவிட முடியாது. அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தத்தான் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு தமிழ் மக்கள் அனைவரும் அணிவகுத்துள்ளார்கள். ஜெயலலிதாவைத் தவிர!

உடன்பிறப்பே,

இந்த விவரங்களிலிருந்து காவிரிப் பிரச்சினையை கடந்த காலத்தில் அரசியலாக்கியதும், இப்போது அரசியலாக்கி அனுதினமும் அறைகூவல் அறிக்கைகளை விட்டுக் கொண்டிருப்பதும் யார் என்பதையும், அவர்களது உள்நோக்கம் என்னவென்பதையும் நீயும், நடுநிலையாளர்களும் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

அன்புள்ள,

மு. க.

(28-09-1999)

2493. ஆணையம் அமைந்தது சட்ட ரீதியாகத்தான்!

உடன்பிறப்பே,

இரண்டு நாட்களுக்கு முன்பு காவிரிப் பிரச்சினை பற்றிய ஒரு சில விளக்கங்களை உனக்கும், தமிழக மக்களுக்கும் தெளிவாகப் புரிய வைத்திட விரிவாக நான் எழுதியிருந்ததைப் படித்திருப்பாய்! அதைத் தொடர்ந்து மேலும் சில விளக்கங்கள் - அதாவது நடுவர்மன்றத்தின் ஆணையைச் செயற்படுத்த உருவாக்கப்பட்ட திட்டம் (Scheme) குறித்து மற்றவர்களுக்கு நீ விளக்கிட வேண்டுமென்ற எண்ணத்தோடு இதனை எழுதுகிறேன்.

என்னுடைய கடிதத்தில் 98 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் முதல் வாரத்தில் பிரதமர் வாஜ்பாய் அவர்கள், டெல்லிக்கு உடனடியாக என்னை வரும்படி அழைத்ததையும், அப்போது நான் தமிழகத்திலுள்ள ஏறத்தாழ 40க்கும் மேற்பட்ட கட்சித் தலைவர்களை அழைத்துப் பேசி, அவர்களின் கருத்துக்களை அறிந்து, பெரும்பான்மையோரின் எண்ணப்படி டெல்லி சென்றதையும் குறிப்பிட்டிருந்தேன்.

பிரதமர் என்னை அழைத்தபோது, ஆகஸ்ட் 12 ஆம் தேதி உச்சநீதிமன்றத்தில் நடுவர்மன்ற ஆணையைச் செயற்படுத்தும் திட்டம் (Scheme) குறித்த வழக்கு வருகிறது. அதற்குள் நான்கு மாநில முதல்வர்களும் கூடி ஒரு நல்ல முடிவெடுக்கலாம் என்று கூறியிருந்தார். அதைப்பற்றி நான் ஆகஸ்ட் 3 ஆம் நாள் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் குறிப்பிட்ட சில கருத்துக்கள் வருமாறு :-

> இந்த வழக்கு அரசியல் சாசனப் பிரிவினால் (Constitution Bench) விசாரணை செய்யப்பட்டு வந்தபோது 9.4.1997 அன்று மத்திய அரசின் தலைமை வழக்குரைஞர் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச்

செயலாக்கம் செய்ய, மத்திய அரசு ஒரு திட்டத்தைத் தீட்டி, சம்பந்தப்பட்ட மாநில அரசுகளின் கருத்தைப் பெற்று, இறுதியாக்கம் செய்யுமென்று தெரிவித்தார். அதன் அடிப்படையில் மத்திய அரசு ஒரு வரைவுத் திட்டத்தைத் தீட்டி, அதை 30.5.1997 நாளிட்ட கடிதத்தில் மாநிலங்களின் கருத்தை அறியவேண்டி அனுப்பியது. 23.6.97 அன்று பொதுவாக இத்திட்டத்தை ஏற்றுக்கொள்வதாகத் தமிழக அரசு, மத்திய அரசுக்குத் தெரிவித்தது. கேரளம், பாண்டிச்சேரி மற்றும் கர்நாடக மாநில அரசுகளும் தங்கள் கருத்துக்களை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தன.

கர்நாடகம் மாத்திரம், ஏற்கனவே ஐக்கிய முன்னணியினுடைய மத்திய அரசு எடுத்த நிலைக்கு மாறாக, வேறொரு நிலையை எடுத்து அத்தாரிட்டி என்ற ஒன்றை அமைக்கத் தேவையில்லை. எனவே அத்தாரிட்டி என்று இருக்கக் கூடாது, ஒருங்கிணைப்புக் குழு (Coordination Committee) என்றிருந்தால் போதுமானது என்று கூறியுள்ளது. மத்திய அரசு கூறும் அந்த அத்தாரிட்டியினுடைய பணி என்னவென்றால், நடுவர்மன்றம் அளித்த இடைக்காலத் தீர்ப்பில் உள்ள எல்லா அம்சங்களும் அமலாக்கப்படுவதை உறுதி செய்வதுதான்.

30.5.1997 - இல் மத்திய அரசால் தயாரிக்கப்பட்ட வரைவுத் திட்டத்தின்படி, ஒரு ஆணையம் அமைந்து அதன் ஆணையை எந்தவொரு மாநிலமும் செயல்படுத்தாவிட்டால் காவிரி நதியில் உள்ள எல்லா நீர்த் தேக்கங்களின் இயக்கத்தையும், பராமரிப்பையும் ஏற்படுத்தவுள்ள ஆணையம் தன்வசம் எடுத்துக்கொண்டு, தேவைப்படும் காலம் வரை இயக்கி வரும் என்ற விதியை நீக்க வேண்டுமென்று கர்நாடகம் மற்றும் கேரள மாநில அரசுகள் வலியுறுத்தி உள்ளன.

இவ்வாறு நான் 3.8.98 சென்னை அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் குறிப்பிட்டதின் தொடர்பாக, பிரதமர் வாஜ்பாய் அவர்கள் 6.8.98 அன்று டெல்லியில் கூட்டிய கூட்டத்தில் கலந்துகொண்ட கேரள முதல்வர் திரு. ஈ.கே. நாயனார் ஆற்றிய

உரையிலே ஒரு பகுதியைக் குறிப்பிடுவது முக்கியமென்று கருதுகிறேன். அணைகள் மீது ஆக்ரமிப்புச் செய்யலாம் என்ற பிரிவை ஏன் அகற்றினார்கள் என்பதற்கும் நாயனாரின் உரை நல்ல பதிலாக அமையும்.

"When the original scheme for constituting the Authority was sent to us, we had expressed reservations about some of its provisions, which might have negated the very spirit of federalism. In the earlier draft of the scheme that was circulated, there was a provision for the Authority to take over certain Cauvery reservoirs and structure, in the event of a State Government refusing to comply with the Authority's directions. We had objected to this provision at the meeting convened by the Minister of water Resources in September 1997.

திரு. நாயனார் உரையின் தமிழாக்கம் வருமாறு :-

(ஒரு ஆணையம் உருவாக்கப்பட வேண்டுமென்ற வரைவுத் திட்டம் முதலிலே எங்களுக்கு அனுப்பப்பட்டபோதே, அது கூட்டாட்சி தத்துவத்திற்கே முரண்பட்டதென்பதால், அதிலேயுள்ள சில பகுதிகளுக்கு நாங்கள் எங்கள் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தோம். முதலில் அனுப்பப்பட்டிருந்த வரைவுத் திட்டத்தில் ஒரு மாநில அரசு, ஆணையத்தின் உத்தரவை மீறினால், அந்த மாநிலத்திலுள்ள காவிரி நீர்த்தேக்கங்களை ஆணையம் தன் வயப்படுத்திக் கொள்ளலாம் என்று ஒரு பிரிவு இருக்கின்றது. இந்தப் பிரிவுக்கு நாங்கள் 1997-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் மத்திய நீர்வளத் துறை அமைச்சர் கூட்டிய கூட்டத்திலேயே எதிர்ப்பை தெரிவித்தோம்)

அந்தக் கூட்டத்தில் கர்நாடக முதலமைச்சர் திரு. ஜே.எச். பட்டேல் அவர்கள் ஆற்றிய உரையின் ஒரு பகுதியையும் குறிப்பிட விரும்புகிறேன் :-

"The entire approach of the draft notification, which has been prepared by Government of India under Section 6A of the Act, militated against of the federal structure based on mutual trust and confidence as enshried in our Constitution. The scheme, if introduced now, is bound to cause new disputes and

interruption of the proceedings before the Tribunal, delaying the conclusion of the proceedings before the Tribunal and may lead to law and order problem in karnataka. There is no need for framing of a Scheme, at this stage, when the Tribunal is still adjudicating.

இதன் தமிழாக்கமாவது :-

(மத்திய அரசு மாநிலங்களுக்கு இடையேயான நதி நீர் தாவா சட்டம் 1956 பிரிவு 6-ஏ இன் கீழ் தயாரித்த வரைவுத் திட்டம் பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட நமது அரசியல் சட்டத்தின் கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது. இந்தத் திட்டத்தை இப்போது அறிமுகப்படுத்தினால், புதிய தகராறுகளை உருவாக்கும். மேலும் நடுவர் மன்றத்திலுள்ள நடவடிக்கைகளைத் தடைப்படுத்தும். நடுவர் மன்ற இறுதித் தீர்ப்புக்கு கால தாமதம் ஏற்படும். மேலும் கர்நாடக மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தும். எனவே, இந்தக் கால கட்டத்தில் இத்திட்டத்தை உருவாக்க வேண்டாம்)

பிரதமர் அவர்கள் கூட்டிய இதே கூட்டத்தில் நான் உரையாற்றும்போது -

"Karnataka Government's suggestion of a Co-ordination Committee which would only interpret and render advice for the implementation of the Tribunal's Order is not in conformity with Section 6-A of the Act. I would therefore urge the Hon'ble Prime Minister to prevail upon the Chief Minister of Karnataka to accept the "authority" as proposed by the Government of India.

I only wish to emphasize that the very federal structure of our country can be preserved and strengthened only if the States in the Union of India respect and honour the Law of the land."

இதன் தமிழாக்கமாவது :-

(கர்நாடக மாநிலம் கூறுகின்ற யோசனையான ஒருங்கிணைப்புக் குழு, நடுவர் மன்ற ஆணையைச் செயற்படுத்த ஆலோசனைதான் கூற முடியும். அது நதி நீர் தாவா சட்டம் 1956 பிரிவு 6-ஏ படி உருவாக்கும் திட்டத்திற்கு சமமாகாது. அதனால் நான் பிரதமர் அவர்கள் கர்நாடக முதல்வரை, மத்திய அரசு

தெரிவிக்கும் ஆணையத்தை ஏற்றுக் கொள்ள வலியுறுத்த வேண்டுகிறேன். இந்திய மாநிலங்கள் நாட்டின் சட்டத்தை மதித்து நடந்தால்தான் இந்தியக் கூட்டாட்சி தத்துவத்தைப் பாதுகாக்க முடியும், வலுப்படுத்த முடியும் என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன்)

இவ்வாறு மாநில முதலமைச்சர்கள் எல்லாம் தெரிவித்த பலதரப்பட்ட கருத்துகளுக்குப் பிறகுதான் இறுதியாக, தற்போதைய திட்டம் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நாட்டிற்கு அறிவிக்கப்பட்டது. தற்போது அறிவிக்கப்பட்ட திட்டம், சட்டரீதியான அந்தஸ்து பெற்றது. இது மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தாவா சட்டம் 1956-ன் கீழ் பிரிவு 6-ஏயின்படி உருவாக்கப்பட்ட திட்டமாகும். இந்த நதிநீர் தாவா சட்டமேகூட, இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் பிரிவு 262 இன் கீழ் இயற்றப்பட்ட சட்டமாகும். எனவே தற்போது பிரதமர் தலைமையிலே அமைக்கப்பட்டுள்ள காவிரி நதிநீர் ஆணையத்திற்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்ட ரீதியான அந்தஸ்தும், நடுவர் மன்றத் தீர்ப்பை அமல்படுத்துவதற்குத் தேவையான அதிகாரமும் நிச்சயமாக உண்டு.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவும், அவரைச் சேர்ந்த சில கட்சியினரும் முந்தைய வரைவுத் திட்டத்தின்படி, அதிகாரிகள் அளவிலான ஆணையம்தான் தேவை என்றும், பிரதமர் தலைமையில் நதிநீர் ஆணையம் அமைக்க ஒப்புதல் தந்ததின் மூலம் நான் ஏதோ துரோகம் இழைத்துவிட்டதாகவும் அறிக்கை விடுக்கிறார்கள். பிரதமர் தலைமையிலே உள்ள ஆணையத்தின் முடிவுகளையே ஏற்க மறுத்து கர்நாடக முதல்வரும், அமைச்சர்களும் அறிக்கைகளை விடும்போது அதிகாரிகளை மட்டும் கொண்டு ஆணையம் அமைந்தால் அந்தத் தீர்ப்புக்கு மட்டும் முதலமைச்சர், அமைச்சர்கள் மட்டத்திலே உள்ளவர்கள் செவிசாய்ப்பார்களா? அதிகாரிகளை மட்டும் கொண்ட ஆணையம் அதிகாரம் கொண்டதா? அல்லது பிரதமர் மற்றும் மாநில முதல்வர்களைக் கொண்ட ஆணையம் அதிகாரம் கொண்டதா? என்ற இந்த எளிய ஐயத்தைக்கூட புரிந்து கொள்ளாத அளவில் ஒரு முன்னாள் முதலமைச்சர் அறிக்கை விட்டு இப்பிரச்சினையை அரசியலாக்குகிறார்.

மேலும் ஜெயலலிதாவும், அவருடன் சேர்ந்து இந்தியா டுடே ஏடும் தற்போதுள்ள ஆணையத்திற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை என்று குறிப்பிடுவது முற்றிலும் தவறான வாதமாகும். 11.8.1998 அன்று மத்திய அரசின் அரசிதழில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த ஆணையத்திற்கு என்னென்ன அதிகாரம் என்பது வரையறுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி,

1. The role of the Authority shall be to give effect to the implementation of the interim order dated 25th June 1991 of the Tribunal and all its related subsequent orders.

2. The Authority shall frame rules and regulations for the conduct of its business.

3. The Authority may convene meetings as and when necessary.

(1. இந்த ஆணையத்தின் அதிகாரம் 25.6.1991 அன்று நடுவர்மன்றம் வழங்கிய இடைக்கால ஆணையையும் அது தொடர்பாக அதன்பின்னர் வழங்கப்படும் ஆணைகளையும் அமல்படுத்தப்பட வேண்டியதாகும்.

2. ஆணையம், தான் செயற்படுத்துவதற்குத் தேவையான விதிமுறைகளை தானே உருவாக்கிக் கொள்ளும்.

3. ஆணையம் எப்பொதெல்லாம் தேவையென்று கருதுகிறதோ அப்போது கூட்டத்தினைக் கூட்டும்)

இந்த ஆணையம் வெளியிடும் உத்தரவுகள், மாநில அரசுகளைக் கட்டுப்படுத்தும் என்று அரசு அறிவிக்கையிலேயே திட்டவட்டமாக வெளியிடப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரை ஆணையம், எந்தவிதமான ஆணையையும் பிறப்பிக்கவில்லை என்பதுதான் உண்மை. அதன் முதல் கூட்டமே தற்போதுதான் கூடவிருந்தது. கர்நாடக முதல்வரின் உடல்நலிவு காரணமாக ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அதற்குள்ளாகவே ஆணையத்திற்கு அதிகாரம் இல்லை என்பதைப் போல் தவறான பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகிறது.

இடைக்காலத்தில் ஓரிரு தடவைகளாவது ஆணையத்தின் (Authority) கூட்டத்தைக் கூட்டியிருக்கலாம். ஆனால் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியில், ஜெயலலிதா கட்சியினர் தொடர்ந்து விளைவித்து வந்த குழப்பம் - நிச்சயமற்ற தன்மை - மத்திய ஆட்சிக்கு ஏற்பட்ட நித்ய கண்டம் என்ற நிலை - ஆட்சி கவிழ்தல் - இவற்றுக்கிடையே கார்கில் போராட்டம் - இவைகளின் காரணமாக ஆணையக் கூட்டம் கூட்டப்படவில்லை என்பதை அறியாதவர்கள் இருக்க முடியாது.

1968 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பமான இந்தக் காவிரி நதி நீர் பிரச்சினையில், 26 முறைக்கு மேல் பேச்சுவார்த்தை நடத்தி, 1990 ஆம் ஆண்டு வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்தபோதுதான் அவரது துணையுடன் நடுவர்மன்றம் அமைக்கும் முயற்சியில் கழக அரசு வெற்றி கண்டது. ஆனால் 1991 ஆம் ஆண்டிலிருந்து 96 வரை, தமிழகத்தை ஜெயலலிதா ஆட்சி செய்தபோது கழக அரசால் அமைந்த நடுவர்மன்றம் அளித்த இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்த எந்தவிதமான திட்டமும் (Scheme) கொண்டு வரவில்லை. மாறாக 96 இல் மீண்டும் தி.மு.கழக ஆட்சி அமைந்தபிறகுதான், அந்த நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்தும் வகையில் சட்டரீதியாக ஒரு திட்டம் (Scheme) தயாரிக்கப்பட்டு, நான்கு முதல்வர்களாலும் ஒருமனதாக அது ஏற்றுக்கொள்ளப்பட்டு, நதிநீர் ஆணையம் அமையப் பெற்றுள்ளது.

இப்போது ஏற்பட்டுள்ள பிரச்சினைக்காக அந்த (Scheme) திட்டமே தவறானது என்பதோ, உடன்பாடு தவறானது என்பதோ சரியான வாதமாகாது!

1924 ஆம் ஆண்டு காவிரி ஒப்பந்தத்தை கர்நாடகம் தொடர்ந்து மீறி வந்தமைக்காக அந்த ஒப்பந்தமே தவறாகிவிட முடியாதல்லவா? அதைப்போலத்தான் இந்தத் திட்டமும், ஒப்பந்தமும் தவறாகி விட முடியாது.

அன்புள்ள,

மு. க.

(01-10-1999)

2494. வருந்த வேண்டும் என்பதற்காக அல்ல; திருந்த வேண்டும் என்பதற்காக!

உடன்பிறப்பே,

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிராமங்களில் கூறுவார்களே, உயிரைக் கொடுத்து வேலை செய்தான் என்று! அதைப்போல உண்மையிலேயே ஓய்வின்றி உழைத்த உன் போன்ற என் உயிரினுமேலான உடன்பிறப்புகளுக்கும், தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களாம் எனதருமை இளவல்களுக்கும், நமது அணிக்கு ஆதரவு தந்து, அத்துடன் வாக்கும் அளித்து வெற்றியினை இருபத்தாறு இடங்களில் வழங்கியுள்ள தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் - இதயமலர்கள் எடுத்து அன்பினில் நனைத்து அவர்தம் கால்மலர்களில் தூவி நன்றியும், வணக்கமும், வாழ்த்தும் சொல்கிறேன்.

புதுவை உள்ளிட்ட நாற்பது தொகுதிகளில் பதினான்கு இடங்களில் மட்டும் நமது வெற்றிக்கு முட்டுக்கட்டை போடப்பட்டுள்ளது! முட்டுக்கட்டை என்றால் ஓடிக் கொண்டிருக்கிற தேரினை நிறுத்திவிடுகிற செயல்! பலகாலமாகவே முட்டுக்கட்டை என்ற சொல்லை நல்ல காரியம் ஒன்றினை தடுப்பதற்குரிய செயல் என்ற கருத்திலேயே பயன்படுத்தி வருகிறோம். தேர்த் திருவிழாவின்போது, தேர் ஓடும் நேரத்தில் இந்த முட்டுக்கட்டை தேவைப்படும்.

பலநூறு பேர் கூடி தேர் இழுக்கும்போது, அந்தத் தேர் சில சமயங்களில் ஒழுங்கான பாதையில் போகாமல் சற்று மாறிச் செல்லுமேயானால், உரிய பாதைக்கு அதைக் கொண்டு வரவும் குறிப்பாக, மூலை திரும்பும்போதும் அந்த முட்டுக்கட்டையைத்தான் பயன்படுத்துவார்கள். இப்போதும் பயன்படுத்துகிறார்கள். எனவே முட்டுக்கட்டை என்பது தடுத்து

நிறுத்துவது என்ற பொருள் அளவில் மட்டும் கருதக்கூடியதல்ல. மாறாக தடுத்து நிறுத்தி ஒழுங்கான பாதையில் செல்லவைக்கும் ஒரு கருவியாகும் என்பதே அதைப்பற்றிய சரியான விளக்கமாகும்.

அந்த நிலையிலேதான் பதினான்கு தொகுதிகளில், நாடாளுமன்றத் தொகுதி அளவிலோ அல்லது அதற்குள் அடங்கிய ஆறு சட்டமன்றத் தொகுதிகளின் அளவிலோ, ஒன்றிய, நகர அளவிலோ சில அரசு அதிகாரிகளின் நிர்வாகத்தின் காரணமாகவோ - அல்லது நமது மக்கள் பிரதிநிதிகளின் அக்கறையற்ற தன்மை காரணமாகவோ - ஏற்பட்டுள்ள சிறு குறைகள்கூட தேரின் பாதையில் இடையூறாக இருக்கின்ற குண்டு குழிகளாக விளங்கக்கூடும். அதில் தேர்ச்சக்கரம் ஏறாவிட்டாலும் அல்லது இறங்கி விட்டாலும் அவற்றிலிருந்து அச்சக்கரத்தை மீட்டு உரிய பாதையில் செலுத்திடவும் அவசியம் முட்டுக் கட்டை போடத்தான் வேண்டும். எனவே, நம்மை அறவே தடுத்து நிறுத்தப் போடப்பட்ட முட்டுக் கட்டைகளாக அந்தப் பதினான்கு தொகுதிகளின் தீர்ப்பையும் கருதாமல், தடுத்து நிறுத்தி, இடையில் உள்ள குறைகளைசுட்டிக் காட்டி, அதை நாம் செம்மைப்படுத்திக் கொண்டு செயல் படுவதற்கு ஏற்ற வகையில் பயன்படுகிற முட்டுக்கட்டைகளாகத்தான் அந்தப் பதினான்கு தீர்ப்புகளையும் கருதிக்கொள்ள வேண்டும். மேலும் கழகத்தோ் - கழக ஆட்சித் தோ், வீதியில் அழகுற அசைந்தாடிச் செல்கிற அரிய பவனி நடப்பதற்காகத்தான் இந்த முட்டுக்கட்டை!

தோ்தல் முடிவுகள் வெளிவந்தவுடன், வாழ்த்துச் செய்தியுடன் என்னைச் சந்தித்து பேட்டி கண்ட செய்தியாளர்களிடம், நான் என்ன சொல்லியிருக்கிறேன் என்பது உனக்கு நினைவிருக்கும். வெற்றி கிட்டாத இடங்களில், அதற்கு நாம் காரணமாக இருக்கிறோம் என்பதை உணருகிற கழகத் தோழர்கள் இனிமேலாவது, தங்களது குறைகளைப் போக்கிக் கொள்ள வேண்டும். அக்கறையற்று இருந்திருந்தால், அதைப் போக்கிக் கொண்டு ஆர்வத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். தவறியும் கழுத்தறுப்பு வேலைகளில் ஈடுபடாமல், ஒருவேளை, அவ்வாறு ஈடுபடுவோர்க்கும் இடம் தராமல், கட்சிப்பணியும், மக்கள் பணியும் ஆற்றிட வேண்டும்.

நமது நிகழ்ச்சிகள், விழாக்கள், கூட்டங்கள் இவைகளில் தேவையற்ற ஆடம்பரங்கள், படாடோபங்கள்

தவிர்க்கப்பட்டாலும்கூட, அவற்றுக்கான சுவரொட்டிகள் - பத்திரிகை விளம்பரங்கள் இவற்றில் எல்லாம் கழகத்தின்மீது பொதுமக்கள் முகச்சுளிப்பு காட்டுகிற காரியங்கள் நடைபெறுவதைக் கண்டு பலமுறை நான் நேரில் கண்டித்தும் - மறைமுகமாகச் சுட்டிக்காட்டியும் கூட, இன்னமும் திருத்தப்பட்டபாடுமில்லை. நிறுத்தப்பட வேண்டும் என்ற நினைப்பும் வரவில்லை. அதிலும் இப்போது ஒரு புது மேனியா வளர்ந்து வருகிறது. பழைய காலத்தில் சங்கீத வித்வான்கள் திருவாடுதுறையார், சித்தூரார், அரியக்குடியார் என்றெல்லாம் அழைக்கப்படுவதுபோல, இப்போது நமது கழக முன்னணியினர் பலரின் பெயர்கள் மாவட்ட முதல் ஒன்றியம், நகரங்கள் வரையில் உள்ள அமைப்புகளின் நிர்வாகிகள் பெயர்கள் - அவர்களது பெயர்கள் மறைக்கப்பட்டு அவர்களது ஊரின் பெயராலேயே தேவையற்ற அடைமொழிகளுடன், பட்டங்களுடனும் அழைக்கப்படுகிற விரும்பத்தகாத ஒரு நிலை - பொதுமக்களால் வெறுக்கப்படுகிற ஒரு நிலை உருவாகியுள்ளது.

நான் சொன்னால், உரிமையுடன் சொல்லுகிறேன் என்பதற்காக சிரித்துக்கொண்டே பொறுத்துக் கொள்வார்கள். அத்துடன் திருத்திக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் சொல்லுகிறேன். செங்கை மாவட்டச் செயலாளர் தம்பி கண்டோன்மெண்ட் சண்முகத்தை - வள்ளல் கண்டோன்மெண்ட்டார் என்றே பெயர் பொறித்து சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன. திருவள்ளூர் மாவட்டச் செயலாளர் தம்பி வேணுவை கும்மிடிப்பூண்டியார் என மாற்றி சுவரொட்டி விளம்பரங்கள்! இவையெல்லாம் கழகத்தவர்க்கு உற்சாகமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும். ஆனால் பொது மக்களுக்கு எரிச்சலையூட்டும்!

மாவட்டச் செயலாளர், எம்.எல்.ஏ.க்கள் பற்றியே இப்படி விளம்பரங்கள் என்றால், படிப்படியாக மந்திரிகள் வரையில் இதன் வேகம் பெருகிக்கொண்டேபோவதால், பாறையில் வெயில்பட்ட வெண்ணெய்போல, கழகத்தின் செல்வாக்கு உருகிக்கொண்டே போய்விடுமல்லவா? அதைத் தடுக்க முடியாத கையில்லாத முடவன் நிலையில் நானில்லாத காரணத்தினால்தான் - உரிமையுடன் தடுக்க முனைகிறேன்.

யாராவது சிலர், காரியம் சாதிக்க முனைவோர் - காக்கா பிடிக்கும் குணத்தினர் - இதுபோன்ற சுவரொட்டிகள், பேனர்கள்,

பத்திரிகை விளம்பரங்கள் செய்தால்; அதை சம்பந்தப்பட்டவர்கள் பொறுத்துக்கொண்டு இருக்கவும் கூடாது. மனதுக்குள் ரசித்துக்கொண்டு அவர்களை வாழ்த்திக் கொண்டுமிருக்கக் கூடாது.

எதற்கும் ஒரு அளவு இருக்க வேண்டும். என்னையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்.

தோகையுடைய மயில் அழகாக இருக்கும் - அதற்காக தோகையை முதுகில் கட்டிக்கொண்டவர்கள் எல்லாம் தோகை மயில் ஆகிவிட முடியுமா? மக்களின் முன்னால் வேடிக்கைப் பொருளாகவும் வெறுப்புக்குரியவர்களாகவும் ஆக வேண்டும்.

இதுபோன்ற சின்னஞ் சிறு அருவருக்கத்தக்க செயல்களைக்கூட நம்மை அணுகாமல் தடுத்து நிறுத்தி, ஆட்சிக்கும் கட்சிக்கும் அணுவளவு மாசும் ஏற்படக் காரணமாக நாம் இருந்துவிடக் கூடாது என்ற நோ்மை உறுதியுடன், தொடர்ந்து மக்கள் தொண்டினை ஆற்றிக் கொண்டே இருந்தால் - இப்போது பெற்றுள்ள வெற்றியை மிஞ்சக்கூடிய மகத்தான வெற்றியை இன்னமும் தொடர்ந்து பெற்றுக்கொண்டேயிருக்கலாம்.

உன்போன்ற உடன்பிறப்புகள் சிலர் வருந்த வேண்டும் என்பதற்காக இந்தக் கடிதமல்ல; திருந்த வேண்டும் என்பதற்காக!

அன்புள்ள,

மு. க.

(09-10-1999)

2495. அரசியல் குறுக்கிடுவதுதான் ஆச்சரியமான விஷயம்!

உடன்பிறப்பே,

அரசாங்கம் என்றால் அது தனிப்பட்ட ஒரு கட்சிக்கோ அல்லது தனிப்பட்ட ஒரு சிலருக்கோ சொந்தமானதல்ல. அரசாங்கத்தில் ஆளுங்கட்சி என்பது தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்டபிறகுதான். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து விட்டால் அனைவருக்கும் பொதுவானவர்கள். அரசாங்கத்தில் இருப்பவர்கள் எது செய்தாலும் அதை எதிர்க்கட்சி குறை கூறுவதும், பிறகு அதே எதிர்க்கட்சி ஆளுங்கட்சியாகி விட்டால் அதே காரியத்தைச் செய்யும் போது அதுவரை ஆளுங்கட்சியாக இருந்து எதிர்க்கட்சியானவர்கள் அதை எதிர்த்து போராடுவது என்பதும் நடைமுறையிலே இருந்தாலும், நல்ல ஜனநாயகத்திற்கு அது முழு இலக்கணமாகாது. நாட்டின் நடப்பு என்ன என்பதை அனைவரும் புரிந்துகொள்ள முன்வரவேண்டும்.

நடப்பு ஆண்டில் தமிழ்நாட்டிலே நிதிநிலை அறிக்கை என்பது 18 ஆயிரம் கோடி ரூபாயாகும். வருவாய்க் கணக்கில் மட்டும் வருவாய் 15 ஆயிரம் கோடி ரூபாய்தான். இதிலே அரசாங்கத்தின் சார்பில் பொது மக்களின் நன்மை கருதி மானியமாக தரப்படும் தொகை என்ற ஒரு கணக்கை எடுத்துக் கொண்டால், பொது விநியோகத் திட்டத்திற்காக, 95-96 இல் 600 கோடி ரூபாயாக இருந்த மானியம் கடந்த ஆண்டு 950 கோடி ரூபாய் மானியம் என்று உயர்ந்ததோடு, இந்த ஆண்டு 1200 கோடி ரூபாய் அளவிற்கு இது உயருமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. ஏன் இந்த அளவிற்கு இந்த மானியம் உயர்ந்துள்ளது?

மத்திய அரசு, மாநில அரசுக்கு வழங்கி வரும் அரிசியின் விலையை அவ்வப்போது உயர்த்தி வருகிறது. அதன் தொடர்சியாக மாறுதல் செய்யப்பட்ட பொது விநியோகத் திட்டம் 1-6-97 முதல் நாடு முழுவதும் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டு 45,790 டன்

அரிசி மட்டுமே குவிண்டால் ஒன்றுக்கு (நூறு கிலோ) 350 ரூபாய் வீதம் தமிழக அரசுக்கு மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது.

மத்திய அரசு, தமிழக அரசுக்கு அப்போது கூடுதலாக ஒதுக்கீடு செய்த 63,440 டன்களுக்கு 1-12-1997 முதல் குவிண்டால் ஒன்றுக்கு 700 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்தது. மேலும் 29-1-99 முதல் இந்த 63,440 டன் அரிசி விலையை குவிண்டால் ஒன்றுக்கு 905 ரூபாய் என்றும் மத்திய அரசு உயர்த்தியது. இத்துடன் இந்த அரிசியை கொண்டு வந்து பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பி வைப்பது உட்பட அனைத்துச் செலவையும் தமிழக அரசுதான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மத்திய அரசு இவ்வாறு ஒதுக்கீடு செய்யும் அரிசி மாநிலத்தின் முழுத் தேவைக்கும் போதுமானதாக இல்லாததால், தமிழக விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லை அரசே கொள்முதல் செய்கிறது.

இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் சாதாரண ரக நெல்லின் விலை 95-96இல் கடந்த கால ஆட்சியில் குவிண்டால் ஒன்றுக்கு 360 ரூபாய் என்றும், சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 375 ரூபாய் என்றும், மிகச் சன்ன ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 395 ரூபாய் என்றும், மேலும் இடைநிகழ்ச் செலவாக குவிண்டால் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் கூடுதலாகவும் வழங்கப்பட்டது.

ஆனால் தற்போது, இந்த ஆட்சியில் கொள்முதல் செய்யப்படும் சாதாரண ரக நெல் குவிண்டால் ஒன்றுக்கு 490 ரூபாய் என்றும், ஏ கிரேடு ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு 520 ரூபாய் என்றும் விலை நிர்ணயம் செய்யப்பட்டிருப்பதோடு, இடை நிகழ்ச் செலவாக குவிண்டால் ஒன்றுக்கு 35 ரூபாய் வீதமும், அதுவே கட்டாயக் கொள்முதலாக இருந்தால் 50 ரூபாய் வீதமும் வழங்கப்படுகின்றது.

இவ்வாறு கொள்முதல் செய்யப்படும் நெல்லை அரிசியாக மாற்றுவதற்கும், அதனைப் பகிர்ந்தளிப்பதற்கும் தேவைப்படும் செலவையும் மாநில அரசே ஏற்க வேண்டியுள்ளது. இதன் காரணமாக அரிசியின் அடக்க விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 10-35 ஆகின்றது.

ஆனால் அரசாங்கம், பொது விநியோகத் திட்டத்தின் மூலம் மக்களின் நலன் கருதி கிலோ ஒன்றுக்கு ரூ. 3.75 வீதம்தான்

வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மக்களுக்கு மாத்திரமல்லாமல், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள மக்களுக்கும் குடும்பம் ஒன்றுக்கு 20 கிலோ வீதம் வழங்கி வருகின்றது. இவ்வாறு வழங்குவதற்காகத்தான் தமிழக அரசு, பொது விநியோகத் திட்டத்திற்காக மட்டும் மானியம் 1,200 கோடி ரூபாய் இந்த ஆண்டு வழங்க வேண்டியுள்ளது என்று குறிப்பிட்டேன்.

அடுத்து, நெல் போன்ற அனைத்து வேளாண் பொருட்களை உற்பத்தி செய்யும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளின் நலன் கருதி, அவர்களுக்கு கழக அரசு, 89-90 ஆம் ஆண்டு முதல் இலவச மின்சாரம் வழங்க முற்பட்டதோடு அதை இன்றளவும் தொடர்ந்து வழங்கி வருவதால், மின் வாரியத்திற்கு ஏற்படும் இழப்பு மாத்திரம் இந்த நடப்பாண்டில் 1,900 கோடி ரூபாய். இதிலும் ஓரளவிற்கு மாநில அரசு மானியமாக (ரூபாய் 250 கோடி) மின் வாரியத்திற்கு வழங்க வேண்டியுள்ளது.

நிதி உதவி பெறும் அரசு சாரா தொடக்கப் பள்ளிகள் மற்றும் இடைநிலைப் பள்ளிகளுக்கு மாத்திரம் மானியமாக தமிழக அரசு நடப்பாண்டில் 947 கோடி ரூபாய் வழங்குகின்றது. இது தவிர, அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகளுக்கு மானியம் 192.15 கோடி ரூபாய். அரசு உதவி பெறும் தனியார் பல்தொழில் பயிற்சிப் பயிலகங்களுக்கு மானியம் 22.77 கோடி ரூபாய். இலவச மருத்துவச் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கான மருந்துகளுக்காக மட்டும் ஒதுக்கீடு 115 கோடி ரூபாய். பொங்கல் விழாவுக்கு இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்காக உதவித் தொகை மட்டும் 100 கோடி ரூபாய். கைத்தறித் துணிகளுக்கு தள்ளுபடி மானியமாக 72 கோடி ரூபாய்.

மாணவர்களுக்கு 12 ஆம் வகுப்புவரை இலவசப் பேருந்து அனுமதியை அரசு வழங்கியுள்ளது. அதற்கான நிதி ஒதுக்கீடு 80 கோடி ரூபாய். மேலும் மாணவர்களுக்குச் சீருடை வழங்குவதற்காக 56 கோடி ரூபாய். மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்குவதற்காக மட்டும் 25 கோடி ரூபாய்.

மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் திருமண நிதி உதவித் திட்டத்தின்படி, நடப்பாண்டிற்கு மாத்திரம் 70 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும், முதியோர் உதவித் தொகை மற்றும் பிற ஓய்வூதியங்களுக்காக 141 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிமுகப்படுத்திய சத்துணவு திட்டம், கழக ஆட்சி வந்தால் நிறுத்தப்பட்டு விடும் என்றெல்லாம் பயமுறுத்தினார்கள். ஆனால் அந்தத் திட்டத்தை, மேலும் சிறப்பாக கழக ஆட்சி, நிறைவேற்றுமென்று நான் அவையிலே அறிவித்ததோடு, முதலில் இரண்டு வாரங்களுக்கொருமுறை முட்டையோடு சத்துணவு வழங்கப்படும் என்றும், பிறகு வாரம் ஒரு முறை முட்டையோடு சத்துணவு வழங்கப்படும் என்றும் அறிவித்ததையொட்டி, சத்துணவு வழங்குவதற்காக ஊழியர்களின் ஊதிய உயர்வு உட்பட ஆகும் மொத்தச் செலவு நடப்பாண்டில் 567 கோடி ரூபாயாகும்.

இதுதவிர பல்வேறு தொழில்களுக்கு அளிக்கப்படும் மானியம் 50.85 கோடி ரூபாய். இந்த ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு அதிகக் கொள்முதல் விலை கொடுத்து வாங்கி, விற்பனை விலையை நுகர்வோர்க்கு குறைத்ததற்காக இழப்பீட்டுத் தொகையாக 15 கோடி ரூபாய் மானியம் ஒதுக்கப்பட்டுள்ளது. கதர் தள்ளுபடி மானியம் மற்றும் தமிழ்நாடு கதர் மற்றும் கைத்தொழில் வாரியத்திற்கான மானியம் 17.75 கோடி ரூபாய்.

வேளாண் மற்றும் கால்நடை பல்கலைக் கழகங்களுக்கு அளிக்கப்படும் மானியங்கள் 67 கோடி ரூபாய். அனைத்து சமூகத்தினர்க்கும் இலவச வீட்டு மனைக்கான ஒதுக்கீடு மாத்திரம் 36.68 கோடி ரூபாய். ஏழை மாணவர்களுக்கான படிப்புதவித் தொகை 85.14 கோடி ரூபாய்.

எனவே இவ்வாறாக, இந்த இனங்களுக்காக மாத்திரம் சுமார் 5,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்திலே உள்ள பல்வேறு பிரிவு மக்களுக்காக செய்யப்படும் மானியச் செலவுகளைப் பற்றி விவரித்துள்ளேன். இந்தப் பணிகளையெல்லாம் முறையாகச் செய்து வரும் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு மத்திய அரசுக்கு இணையாகவும், ஒருசில இனங்களில் அதற்கு மேலாகவும் 89ஆம் ஆண்டிலேயே ஊதியம் வழங்கியது கழக அரசுதான். மேலும் மத்திய அரசின், ஐந்தாவது ஊதியக் குழு பரிந்துரைகளையொட்டி, மத்திய அரசு ஊதிய உயர்வை அறிவித்ததும் மற்ற மாநிலங்கள் எல்லாம் அந்தப் பரிந்துரைகளை அமல்படுத்தாத நேரத்திலேயே தி.மு.கழக அரசு அந்தப் பரிந்துரைகளையெல்லாம் 1-1-96ஆம்

தேதி முதலே அமலுக்குக் கொண்டு வரும் என்று அறிவித்ததோடு, ஆண்டு ஒன்றுக்கு மொத்தத்தில் சுமார் 10,000 கோடி ரூபாய் அளவிற்கு ஊதியம் வழங்கி வருவதோடு மாத்திரமல்லாமல், அண்மையில் மத்திய அரசு, அகவிலைப்படி உயர்வு ஒன்றினை அறிவித்தவுடனே வேறு எந்த மாநிலங்களும் வழங்க முன்வராத நிலையில், தமிழகத்திலே அந்த அகவிலைப்படி உயர்வையும் அறிவித்து அமல்படுத்தியிருப்பதும் கழக அரசுதான்.

மானியங்களுக்காகவும், அரசு அலுவலர்களுக்காகவும் மாத்திரமல்ல. கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே மாத்திரம் தமிழகத்திலே உள்ள ஊரகப் பகுதிவாழ் மக்களுக்கான திட்டங்கள் 3,755 கோடி ரூபாய் அளவிற்கு நிறைவேற்றப்பட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தவிர நகர்ப்புற மக்களுக்காக, 1,286 கோடி ரூபாய்க்கு திட்டங்கள் நிறைவேற்றப்பட நிதி ஒதுக்கீடு பல்வேறு துறைகளின் சார்பில் செய்யப்பட்டுள்ளது.

அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 11-12 ஆம் வகுப்புகளில் கணினியை விருப்பப்பாடமாக வழங்க முதல் கட்டமாக, 112 கோடி ரூபாய் செலவில் 30,000 மாணவர்கள் பயனடைய 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் கணினி பாடத் திட்டம் 5.10.1999லிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உடன்பிறப்பே,

இந்த விவரங்களையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்திட்டால் தற்போது செய்யப்பட்டுள்ள பேருந்துக் கட்டண உயர்வான கிலோமீட்டருக்கு நான்கு பைசா என்பது டீசல் உயர்விற்காக மாத்திரம் செய்யப்பட்டதல்ல என்பதையும், ஒட்டுமொத்தமாக ஓர் அரசின் நிதிநிலை விவரங்களையெல்லாம் கணக்கிட்டுச் செய்யப்படும் காரியம் என்பதையும் புரிந்து கொள்ளலாம். போக்குவரத்துத் துறையிலேயேகூட அந்தத் துறையின் அலுவலர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கியது மாத்திரமல்லாமல், ஆண்டுக்காண்டு போனஸ் மற்றும் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட வேண்டும். பேருந்துகளின் பராமரிப்புக்கான செலவு, அந்தப் பேருந்துகள் செல்லும் சாலைகளின் பராமரிப்புக்கான செலவு ஆகியவைகளையும் கணக்கிலே கொள்ள வேண்டும்.

மேலும் தமிழக வரலாற்றிலேயே முதன் முறையாக, கடந்த நிதி நிலை அறிக்கை தயாரிப்பதற்கு முன்பாக வர்த்தகச் சங்கங்களின்

பிரதிநிதிகளையெல்லாம் அழைத்து வைத்துப் பேசி பல்வேறு வரி சீரமைப்புகளையெல்லாம் கழக அரசு செய்ததை தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள். சாதாரண ஏழையெளிய மக்கள் அன்றாடம் பயன்படுத்தக்கூடிய எண்ணெய், பருப்பு போன்றவற்றிற்கு முழு வரி விலக்கு அளித்துள்ளோம்.

அரசாங்கம் என்று ஒட்டுமொத்தமாகப் பார்த்துத்தான் பிரச்சினைகளை அணுக வேண்டுமே தவிர, தனித்தனி துறைகளாக எடுத்துக்கொண்டு விமர்சிப்பது முறையாகாது. எனவே பேருந்துக் கட்டண உயர்வு என்பது, டீசலுக்காக மாத்திரம் செய்யப்பட்டதைப் போல கருதிக் கொண்டு விமர்சிப்பது சரியாக இருக்காது. மக்களுக்கு பேருந்து விடுவதேகூட, அரசாங்கம் நடத்தும்போது லாப நட்டத்தை மாத்திரம் கணக்கிலே எடுத்துக்கொண்டு விடக் கூடாது என்பதற்காகத்தான், நட்டம் வந்தாலும் மக்களுக்கு வசதி செய்து தரப்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்த அரசு செயல்பட்டு வருகின்றது. தற்போதைய கட்டண உயர்வுக்குப் பிறகும், ரூபாய் 170 கோடி போக்குவரத்துக் கழகத்துக்கு நட்டம் ஏற்படுகிறது என்பதையும் மறந்துவிடக் கூடாது.

மேலும் அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களின் ஊதிய விகிதம் நிர்ணயிக்கும்போது, தனியார் தருவதைவிட அதிக அளவில் ஊதியம் தரவேண்டியுள்ளது. இந்தக் காரணங்களையெல்லாம் கொண்டுதான் தனியார்மயமாக்க வேண்டுமென்ற கருத்துகூட அண்மைக் காலத்தில் சிலரால் அழுத்தமாகத் தெரிவிக்கப்படுகிறது.

வளர்ச்சித் திட்டங்களும் நிறைவேற்றப்பட வேண்டும், வரியையும் உயர்த்தக் கூடாது, கட்டணங்களையும் அதிகமாக்கக் கூடாது, அலுவலர்களுக்கும் சலுகைகளையும், ஊதியத்தையும் அதிகமாக்கிக் கொண்டே போக வேண்டும் என்றால் எப்படி இயலும் என்பதை போராட்டத்திற்காகவே போராடுகிறவர்களைத் தவிர, உண்மையான நிலையை பொதுமக்கள் புரிந்துகொள்ள முன்வரவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

பேருந்துக் கட்டணத்தை உயர்த்தக் கூடாது, ஆனால் புதிய பேருந்துகள் வேண்டும், பேருந்துகளை நன்றாகப் பராமரிக்கவேண்டும், ஆனால் வரியும் போடக் கூடாது என்றால், பொருளாதார ரீதியாக அது எப்படி சாத்தியமாகும்?

ஓரணாவுக்கு கிடைத்த தினசரி ஏடுகள் இன்றைக்கு இரண்டரை ரூபாய் விலை என்றும் - எட்டணாவுக்குக் கிடைத்த வார ஏடுகள் இன்றைக்கு நான்கு ரூபாய், ஐந்து ரூபாய் விலை என்றும் - ஒரு குவிண்டால் நெல் இருபத்தி ஐந்து ரூபாய் என்றிருந்தது இப்போது அரசு கொள்முதல் செய்யும் விலையே ஐநூற்றி ஐம்பத்தி ஐந்து ரூபாய் என்றும் - மாறியிருப்பதை நியாயப்படுத்தும்போது, மற்ற மாநிலங்களைவிடக் குறைவானதும், மிகவும் சீரானதுமான பேருந்துக் கட்டண மாற்றத்தை மட்டும் ஏற்க முடியாமல் அரசியல் குறுக்கிட்டு விடுவதுதான் ஆச்சரியமான விஷயமாகும்!

அன்புள்ள,

மு. க.

(23-10-1999)

2496. இரு நாட்களும் இனிய திருநாட்கள்தான்!

உடன்பிறப்பே,

ஓர் இடைவேளை - இதோ மீண்டும் ஓலை - உனக்கும் உன் போன்ற உடன்பிறப்புகளுக்கும்.

அடிக்கடி எழுதும் கடிதங்கள் இடையே நின்று விட்டது ஏன்? நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு வெற்றிக் களிப்பில் அடிக்கடி எழுதாமலிருந்து விட்டாயா? அல்லது சில இடங்களில் எதிர்பார்த்த அளவு வெற்றி நடை போட வேண்டிய நிலைமையை இடையே படுகுழிகள் தடுத்தும், சில கரடுகள் இடறியும் சீர்குலைத்து விட்டனவே என்ற துன்பத்தில் ஆழ்ந்து எழுதாமல் விட்டு விட்டாயா? என்றெல்லாம் கேட்பாய் நீ!

வெற்றியில் வெறிகொண்டு ஆடுவதும் - தோல்வி வரின் துவண்டு துன்பத்தில் ஆழ்வதும் - கழக வரலாற்றிலும் சரி! என் வாழ்க்கையிலும் சரி! கனவில் கூட காண முடியாத காட்சிகள் என்று உனக்குத் தெரியாதா என்ன?

வேறொன்றுமில்லை உடன்பிறப்பே! வேக வேகமாக புயலின் வீச்சுப் போல எதிர்முகாம்களிலிருந்து விடப்படும் அக்கினியாஸ்திரங்களை, வருணாஸ்திரங்களை மட்டுமே சமாளிப்பது என முடிவு செய்து கொண்டு மௌனம் காத்து வருகிறேன்.

தமிழ் மக்களை, மாற்றார் - திசை திருப்பிடச் செயல்படும்போது நமது தம்பிமார்கள் அளிக்கின்ற விளக்கங்கள் மட்டுமே போதும், நாம் ஆக்கபூர்வமான திட்டங்களை நிறைவேற்றுவதில் மட்டும் கவனம் செலுத்துவோம் என்று முடிவெடுத்து, அதனை இதுவரை

வெளியில் சொல்லாமல் செயல்படுத்தி வருகிறேன் வீணாக அலட்டிக் கொள்ளாமல்!

அந்த ஆக்கப்பணிகளில் ஒன்றாக - என் அடங்காத ஆவல் தீர்த்திடும் பணியாக - அனைத்து நாடுகளில் வாழும் தமிழ் மக்களும் அகமகிழும் பணியாக, இதோ ஒரு பணி!

சூழும் தென்கடல் ஆடும் குமரி என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சிறப்பித்துக் கூறிய தென்னகத்து முனையில், திருவள்ளுவப் பெருந்தகைக்குச் சிலை எடுக்கும் விழா! உலகத் தமிழினமே ஒன்று திரண்டு நிற்க - இரண்டாயிரம் ஆண்டு தொடக்கத்தின் முதல் நாளே நடைபெற இருக்கிறது.

என் வாழ்நாளின் மிகப் பெரிய ஆசையொன்று நிறைவேறப்போகிறது. இருபத்தி ஐந்து ஆண்டுக்காலமாக எண்ணியெண்ணி விடுத்த பெருமூச்சு வீண்போகாமல், விண்முட்டும் சிலையொன்றை விரிகடற்பரப்பின் எல்லையில் எழுப்பி விட்டோம்.

வெளிநாட்டு தமிழ் வல்லுநர்கள், தமிழகத்து அறிஞர் பெருமக்கள் - அரசியல் தலைவர்கள் - கலைஞர்கள் - கவிஞர்கள் - அனைவரும் பங்கு கொண்டு அறம், பொருள், இன்பமென முப்பால் யாத்த முதுபெரும் தமிழ் ஞானியின் திறம்பாடி, திசையெல்லாம் அவர் புகழ் பரப்பி, வள்ளுவர் வகுத்த நெறியே இந்த வையகத்துப் பொது நெறியென சுட்டிக்காட்ட இருக்கின்றனர்.

1999 டிசம்பர் 31 - 2000 ஜனவரி 1 அந்த இரு நாட்கள் சங்கமிக்கும் இனிய எழுச்சி வாய்ந்த வேளையில்தான், முக்கடல் சங்கமிக்கும் குமரியில், குறளார்க்குச் சிலை வடித்துத் தொழுதேத்தும் திருவிழா அமைகிறது.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு - தேசியக்கவி பாரதியாரின் இந்தத் தேனினுமினிய பாடல் நம் சிந்தை அணு ஒவ்வொன்றையும் சிலிர்க்கச் செய்யும் விந்தைதான் என்னே!

விந்தை புரிந்து நம்மைக் கட்டியாளும் கணுக்கரும்பு சுவை சேர்த்துக் குறள் வெண்பாக்கள் வாயிலாக வாழ்வுக்குத் தேவையான கொள்கைகள் வகுத்தவர் - சமத்துவ சகோதரத்துவத்துக்கு சட்டங்களாய்க் குறள் பாக்களைத் தொகுத்தவர் - இப்படித்தான்

வாழ வேண்டுமென மாந்தர், பின்பற்றுதற்கேற்ப இலக்கணம் யாத்தவர் - அந்த அற்புத ஞானிக்குப் பொற்புடை சிலையொன்றை அமைத்திடவும், அது உலகு உள்ளவரை நிலைத்திடவும் வேண்டுமென்ற தீராத அவா இந்தத் தமிழ் ஊறிடும் நெஞ்சில் எத்தனை எத்தனை நாட்களாகத் தவழ்ந்தது - தள்ளாடியது - தத்தி நடக்க எத்தனித்தது - இறுதியாக நடந்தே விட்டது என்பதைக் காணும்போது, நான் பிறவியெடுத்த பயனாக மக்கள் தொண்டு என ஒரு பகுதி ஒதுக்கப்படினும் - எஞ்சியுள்ள பகுதியனைத்தும் சிலை எழுப்பிய இச்செயலால் நிறைவுற்ற பயன் பெற்றதாகவே எண்ணிக் களிக்கிறேன்.

இளம் பிராயத்திலேயே பெரும் பகுதி பேச்சரங்குகளில் குறளை நினைவூட்டியே தலைப்புகள் அமைத்துக் கருத்துக்களை வழங்கியிருக்கிறேன்.

அறிஞர் அண்ணா முதல்வராகி என்னைப் பொதுப்பணித்துறைக்கும், போக்குவரத்துத் துறைக்கும் அமைச்சராக்கிய போது, பொதுப் பணித்துறை விடுதிகளில் குறளுடன் வள்ளுவர் படம், போக்குவரத்துத்துறை பேருந்துகளில் வள்ளுவர் படமும் குறளும் இடம் பெறச் செய்தேன்.

பின்னர் வள்ளுவர் படம் வரைந்த வேணுகோபால சர்மாவின் குடும்ப நிதி உதவி.

அடுத்து குறளோவியம் -

அது இந்தி மொழி பெயர்ப்பாகவும் - ஆங்கில மொழி பெயர்ப்பாகவும் வெளிவந்தது.

அதற்கடுத்து 1330 குறளுக்கும் எழுதிய உரை! ஆம் - உள்ளது உள்ளபடி எழுதிய உரை!

1975இல் தமிழகத் தலைநகரில் வள்ளுவர் கோட்டம்!

இதோ நம் கண்ணெதிரே குலுங்கும் பூந்தோட்டம் -

தேமதுரத் தமிழோசையுடன் குமரியில் நடைபெற இருக்கும் தேரோட்டம் -

களை நீக்கித் தமிழ்க் கழனி செழிக்க நிகழ்த்தும் ஏரோட்டம் -

இரு நாட்கள் திருநாட்கள்தான் - அருவியெனத் தமிழ் பாய்ந்திடவும், அரசியல் மாச்சரியங்கள் மறந்து, அன்பில் அனைவரும் நனைந்திடவும், குழல் இனிது! யாழ் இனிது! எனும் குறளையும் மிஞ்சும் இனிய தமிழ் நெஞ்சங்கள் ஆங்கே கலந்திடவும் - அந்த இரு நாட்களும் எழில்மிகு திருநாட்கள்தான்! ஏற்றமிகு திருநாட்கள்தான்!

அன்புள்ள,

மு. க.

(06-12-1999)

2497. அய்யன் வள்ளுவனுக்கு அழியாத நினைவுச்சின்னம்!

உடன்பிறப்பே,

“தெள்ளு தமிழ்நடை சின்னஞ் சிறிய இரண்ட டிகள்,
அள்ளு தொறுஞ்சுவை உள்ளந் தொறும்உணர்
வாகும்வண்ணம்
தொள்ளும் அறம், பொருள் இன்பம் அனைத்தும்
கொடுத்த திரு
வள்ளுவ னைப்பெற்ற தாற்பெற்ற தேபுகழ் வையகமே!

வெல்வாத தில்லை திருவள்ளு வன்வாய் விளைத்தவற்றுள்
பொல்வாத தில்லை புரைதீர்த்த வாழ்வினி லேஅழைத்துச்
செல்வாத தில்லை பொதுமறை யான திருக்குறளில்
இல்வாத தில்லை இணையில்லை முப்பாலுக் கிந்நிலத்தே!

தொன்னூற் படியில்லை திராவிடர் தூய கலைஒழுக்கம்
பின்னூற் படியிற் பெறும்படி இல்லை! பிழைபடியா
அந்நூற் படிதிரு வள்ளுவன் தந்தனன் ஆயிரத்து
முந்நூற்று முப்பதும் முத்தாக முன்று படியளந்தே!

கன்னல் இதுஎனக் காட்டியே மக்கள் கடித்தணுமோர்
இன்னல் தராது பருகுக சாறென ஈவதுபோல்,
பின்னல் அகற்றிப் பிழைதீர் நெறிஇது பேணிர் என்றே,
பன்னல் உடையது வள்ளுவன் முப்பாற் பனுவலொன்றோ!”

இந்தக் கவிதையைப் படித்திருக்கிறாயா? யாரும் பாடிக் கேட்டிருக்கிறாயா? படித்த தில்லையெனில், இப்போது படி! பாடிக் கேட்டதில்லையெனில், இந்தக் குளிர் தமிழ் கீதத்தை குமரிமுனையில் வள்ளுவர் சிலை திறப்பு விழாவின்போது, சீர்காழி

சிவசிதம்பரமும், டி.கே.எஸ். கலைவாணனும் பாடிடும்போது உள்ளமெலாம் பூரித்திடக் கேட்டுக் குதித்திடலாம் வா!

1999ஐ வழியனுப்பி வைத்துவிட்டு வலது காலையோ அல்லது இடது காலையோ, ஏதோ ஒரு காலினை எடுத்து வைத்து நம் வாசலுக்கு வர இருக்கும் 2000 ஆம் ஆண்டின் முதல் நாளாம் ஜனவரி முதல் நாள், தெள்ளு தமிழ் நடை சின்னஞ்சிறிய இரண்டடிகளால் தமிழ் மறை யாத்த வள்ளுவப் பெருமகனார்க்கு, வான் தொடும் வண்ணம் வடித்த சிலையைத் திறந்து வைக்கும் மாபெரும் விழா! மகத்தான விழா! நம் மனக்கண்களை விட்டு என்றைக்குமே நீங்காத விழா!

விழா நிகழ்ச்சிக்கென்று நாம் விண்ணப்பித்து, அதற்காகவே புரட்சிக்கவிஞர் பாரதிதாசனார் எழுதிய கவிதை போல இருக்கிறதல்லவா! இந்த வரிகளை நம் விழிகள் முத்தமிடும்போதும் அந்த முத்தத்தின் ஈரத்தால் நம் சித்தம் நனைந்திடும் போதும்!

நாம் எழுத வேண்டுவதும், அவர் தயக்கமின்றி, உடன் எழுதி அனுப்புவதும் வியப்புக்குரியதல்லவா!

1942-ஆம் ஆண்டில் திருவாரூர் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்ற விழாவுக்கு நான் எழுதிக்கேட்டு, அவர் இயற்றி அனுப்பி வைத்த கவிதைதானே;

“தண் பொழிலில் குயில்பாடும் திருவாரூரில்
தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் காண்...
வண்மையொடும் உண்மையொடும் வாழ்ந்திடுங்காண்
மக்களிடை எழுச்சிக்கு மருந்தாகுங் காண்
புண்வாய்ந்தோர் அல்லர் காண் திருவாரூரின்
புலி இளைஞர் காண்! தோள்கள் பூரித்தார் காண்!
கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டம்
கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக் கூட்டத்தை

என வரும் இன முழக்க வரிகள்!

அதுபோல அல்ல இது எனினும், 2000-ஆம் ஆண்டின் முகப்பு வாயிலில் நாம் வள்ளுவர் சிலையைத் திறப்போம் என்றும் - அதற்கு 1975ஆம் ஆண்டிலேயே திட்டமிட்டு அறிவிப்போம் என்றும் - முன்கூட்டியே தெரிந்து கொண்டவர்

போல அந்தத் தொலைநோக்குப் புரட்சிப் பாவேந்தர் அன்றே எழுதி வைத்துள்ளார்! ஆம்! குன்றே போல் புகழ் குவித்த நம் குலக் கவிஞர்.

ஒரு வெள்ளி விழா ஆண்டுக்காலம்! ஆம்! இருபத்தி ஐந்து ஆண்டுக் காலம் - அப்போது கழக அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முடிவு! முடிவு அறிவிக்கப்பட்ட முப்பதே நாட்களில் முடிவு கட்டப்பட்டது நமது ஆட்சிக்கு 1976-ல்! பின்னர் வந்த ஆட்சிகளில் தொடர் முயற்சிகள் இல்லை - இருந்த முயற்சிகளும் தொய்வு விழுந்து சரிந்து போயின. 1989-ல் மூன்றாவது முறையாக கழக ஆட்சி வந்தபோது, குமரிக்கடல் ஓரத்தில் வள்ளுவர் சிலையைச் செதுக்கி வைக்கும் பணியைத் தொடங்கி வைத்தேன். அந்த ஆட்சியும் அற்ப ஆயுளில் கலைக்கப்பட்டது. அடுத்து முனைப்பான முயற்சிகள் இல்லாததுடன், பணிகளும் முடக்கிப் போடப்பட்டு விட்டன. 1996-ல் நான்காவது முறையாகப் பொறுப்பேற்றவுடன் முதல் வேலையாகக் குமரிமுனையில் என் கனவு நனவாக வேண்டுமேயென்ற ஆர்வம் நெஞ்சில் அலை மோதியது.

பூம்புகார் எழில் மாடத்தை என் கருத்திற்கேற்ப அமைத்துத் தந்தவரும் - பாஞ்சாலங்குறிச்சியில் இடிந்த கோட்டையை எழுப்பித் தருவதற்கு உடனிருந்து உதவியவரும் - வள்ளுவர் கோட்டம் வையகம் புகழ்ந்திட உருவாகிட சிற்பி திரு. ஆச்சார் அவர்களுடன் இணைந்து கையில் உளி எடுத்தவரும் - அண்ணா அறிவாலய முகப்பினையும், கலைஞர் அரங்க முகப்பினையும் அழகுற அமைத்துத் தந்தவரும், சிற்ப சித்தருமான கணபதி ஸ்தபதியார் அவர்கள், மூன்றாண்டு காலத்திற்கு மேலாக அல்லும் பகலும் அயராது பாடுபட்டு நமது அய்யன் வள்ளுவனுக்கு காலத்தால் அழியாத நினைவுச் சின்னத்தை, என் இதயம், இறக்கைகள் பெற்றுப் பறந்து மகிழ்கிற அளவுக்கு - என் இரத்த நாளங்களில் இன்ப அருவி பாய்ந்து பரவுகிற அளவுக்கு - என் மேனியின் சல்லி நரம்புகளும் துள்ளிச் சதிராடும் அளவுக்கு - என் சுவாச கோசங்கள் ஆனந்தப் பெருமூச்சால் நிரம்பிப் பிதுங்குகிற அளவுக்கு - வடித்தெடுத்து நிலை நாட்டிவிட்டார் வங்கமும், இந்துவும், அரபியும் என முக்கடல் சங்கமிக்கும் குமரி முனைப்பாறை முற்றத்தில்!

அவருக்கும், அவருடன் சேர்ந்து அற்புதச் சிலையைப் பொற்புடன் உருவாக்கியுள்ள சிற்பிகள் - அலுவலர் - பணியாளர் - பொறியாளர்கள் அனைவர்க்கும்,

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற குறளை நினைவூட்டி, அதன்படி என் ஆய்வுக்கேற்ப வினை முடித்தமைக்காக, ஆயிரம் பதினாயிரம், இலட்சோப இலட்சம் நன்றி மலர்களைத் தூவுகிறேன்.

உடன்பிறப்பே, சிலை திறப்பு விழாக் குழுத்தலைவரும், விழாவுக்குத் தலைமையேற்க இருப்பவருமான நமது பேராசிரியரும், துணைத்தலைவர் முனைவர் தமிழ்க்குடிமகனும், செயலாளர் தம்பி முல்லைவேந்தனும் விழாவுக்கான ஏற்பாடுகளைக் குமரி மாவட்டம் சென்று கூர்மையாகக் கவனித்து ஆவன செய்வதுடன், அங்குள்ள மாவட்ட அதிகாரிகள் கொண்ட குழுவினரும், தம்பி சுரேஷ்ராஜனும் ஆர்வமுடன் பணியாற்றி வருகின்ற செய்தியையும் எனக்கு எடுத்துக் கூறி என்னை மகிழ்வித்து வருகின்றனர்.

ஒப்பற்ற குறளாசானின் ஒளிமிகு வழி காட்டுதலை எடுத்தோதிடும் ஆற்றல்மிகு அறிஞர் பெருமக்கள் பலரும் விழாவில் கலந்து கொள்கின்றனர். வெளிநாட்டுச் சான்றோர் ஜெர்மனியிலிருந்து முனைவர் தாமஸ் மால்டனும், ஸ்காட்லாந்திலிருந்து திரு. ஆர்.இ. ஆஷரும், மலேசிய அமைச்சர் டத்தோ திரு. சாமிவேலுவும், இலங்கை அமைச்சர் திரு. ஆறுமுகம் தொண்டைமானும், மொரிஷியஸ் அமைச்சர் திரு. இராமசாமி சிதம்பரம் பிள்ளையும், சிங்கப்பூர் வை. திருநாவுக்கரசும், இலங்கை முனைவர் கா. சிவத்தம்பியும், ஆஸ்திரேலியா முனைவர் பொன். சத்தியநாதனும், சிகாகோ திரு. ரிச்சர்டு வீசும், ஜப்பான் திருமதி யூகோ புக்குராயும், ஒப்புதல் வழங்கியுள்ளனர் உவகையுடன்! நாமும் உவகையுடன் உளமார அவர்களை வரவேற்கக் காத்திருக்கிறோம்.

கலையுலகப் பெருமக்களின் சார்பாக, அவர்களின் மூத்த பிரதிநிதியாக, என்னாருயிர் சகோதரர் நடிகர் திலகம் சிவாஜியும் கலந்து கொள்கிறார்.

அரசியல் கட்சித் தலைவர்களாகவும், அதே சமயம் தமிழ் ஆர்வலர்களாகவும் விளங்குகிற வித்தகர்கள் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் என் இனிய நண்பர் நாவலர் மட்டுமே தொலைபேசியில் தெரிவித்த வாழ்த்துடன் நிறுத்திக்கொண்டுள்ளார். இன்னமும் எதிர்பார்க்கிறேன் வருகை தருவாரென!

கவியரசர்கள் கவிதை மழை பொழிகிறார்கள் - அந்த அரசர்களின் கவி தர்பாரில் இந்த முதலமைச்சன் தலைமையேற்கிறான்.

ஆய்வரங்கமென்றும், கருத்தரங்கமென்றும், கோட்டம் முதல் குமரி வரை மலர் வெளியிடும் நிகழ்ச்சியென்றும், இளந்தளிர்கள் குறளில் கொண்ட ஆற்றலை வெளியிடும் நிகழ்ச்சியென்றும் - நாயன இசை - நடனக்கலை - நல்ல தமிழ் இசையென்றும் - இருநாளும் திருநாளாகவே இருக்கும்! எந்நாளும் நம் நினைவில் நிற்கும்!

என்னுயிர் உடன்பிறப்பே, குமரி முனை சிறிய இடம்! வசதிகளை அதிகமாக எதிர்பாராமல், செவியமுதம் பருகிட கண்ணமுதமாம் வள்ளுவப் பெருமானின் வான்தொடும் சிலை கண்டிட... வருக, வருக, என அழைக்கின்றேன் என்றும் வற்றாத வாஞ்சையுடன்!

அன்புள்ள,

மு. க.

(20-12-1999)

2498. வாட்டாக்குடி சுந்தராங்கள் வளர்க்கும் தமிழ்!

உடன்பிறப்பே,

அண்மையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழுவில், கழக அரசு, ஐந்தாம் வகுப்பு வரையில் தமிழ்க் கல்வி கட்டாயம் என ஆணை பிறப்பித்துள்ளது குறித்து நான் உரை நிகழ்த்தும்போது வெளியிட்ட சில செய்திகளை நீ பொதுக்குழு உறுப்பினர் என்ற முறையில் நேரிலும் கேட்டிருக்கிறாய். அப்பேச்சு வெளிவந்துள்ள ஏடுகளையும் படித்தறிந்திருப்பாய். தமிழ் மொழியில் கல்வி குறித்து பொதுக்குழுவில் நான் பேசியதில் சில பகுதிகள் வருமாறு :-

நேற்றைக்கு என்னுடைய பேத்தி பூங்குழலி, என்னுடைய மகன் தமிழரசனுடைய செல்வி பூங்குழலி, எட்டேகால் மணிக்கு நான் மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தை முடித்து விட்டு வீட்டிற்குத் திரும்பியபோது, தம்பி ஸ்டாலினும், அவளும் இருந்தார்கள். வீட்டிலே உள்ளவர்களெல்லாம் என்னை சூழ்ந்து கொண்டு பூங்குழலி (அவளை பூங்கி, பூங்கி என்றுதான் கூப்பிடுவார்கள்) பூங்கி, ஏதோ உங்கக்கிட்ட பேசணும், பேசணும்னு ஐந்தாறு நாளா தயங்கிட்டிருக்கா, பயப்படறா, அதை என்னான்னு கேளுங்க என்றார்கள். ஸ்டாலினும் ஆமாம்ப்பா கேளுங்க என்றார். என்னம்மா என்று கேட்டேன். ஒண்ணும் இல்லை தாத்தா. பெரிய எதிர்ப்பு வந்திருக்கு. இந்த மொழிப் பிரச்சினைக்கு - இங்கிலீஷ் படிக்கலைன்னா என்ன ஆகுறது அப்படியென்றாள்.

முதலில் கொஞ்சம் கோபமாகப் பேசினேன். இந்த மாதிரி விஷயங்களில் முதலில் அமைதியாகப் பேச ஆரம்பித்தால் நாம் ஜெயிக்க முடியாது. முதலில் கொஞ்சம் கோபமாகப் பேச ஆரம்பித்தேன். மழலையர் பள்ளி, அந்தப் பள்ளி, இந்தப் பள்ளி என்று வெச்சிக்கிட்டு சம்பாதிக்கிறவன் கிளப்பி விடறான் எல்லாரையும். நீயும் அதைக் கேட்டுக் கிட்டு எங்கிட்ட கேள்வி

கேட்கிறாயா? என்று கேட்டேன். இல்லை தாத்தா. என்ன ஆகுறது எதிர்காலம் எல்லாம்?

ஒன்றும் ஆகாது. உங்க தாத்தாவே ஏழாவது, எட்டாவது வரைக்கும் தமிழில்தான் படித்தார். உங்க தாத்தாவினுடைய தலைவர் அறிஞர் அண்ணா இருந்தாரே, அவரும் 8-வது, 9-வது வரைக்கும் தமிழ் படித்துத்தான் அறிஞர் அண்ணா ஆனார். உலகம் போற்றும் தலைவர்களில் ஒருவராக ஆனார். இன்னும் உதாரணம் சொல்லட்டுமா? என்றேன். வேண்டாம் தாத்தா. வேண்டாம் தாத்தா போதும் என்றாள்.

ஐந்தாம் வகுப்புக்கு மேல் ஆங்கிலம் படிக்கக் கூடாது என்று நாங்கள் யாரும் தடுக்கவில்லை. படிக்கலாம். ஐந்தாவது வகுப்பு வரையில் நம்முடைய தாய்மொழியிலே - அதாவது குழந்தை பிறந்து, காலூன்றி நடக்கிற வரையில் தாய்ப்பால் குடிக்கணும் என்று சொல்கிறோம். தாய்மொழியிலே படிக்கிறது தாய்ப்பால் குடிக்கிறது மாதிரி என்று, ராஜாஜியே சொல்லியிருக்கிறார். சில பேர் சொல்கிறார்கள், தமிழைத் திணிக்கிறார்கள் என்று. எந்த மொழியினுடைய திணிப்பையும் ஏற்றுக் கொள்ளாதவர்கள் நாம். அது ஆங்கிலமாக இருந்தாலும், இந்தியாக இருந்தாலும் எந்த மொழியினுடைய திணிப்பையும் ஏற்றுக் கொள்ளாதவர்கள் நாம். தமிழைத் திணிக்கவில்லை. தமிழை மறக்காதே! தமிழை அழித்து விடாதே! என்று தமிழர்களைப் பார்த்து சொல்வது தமிழைத் திணிப்பதாக ஆகாது.

இவ்வளவு தூரம் சிலர் பேசுகிற காரணத்தால், கொஞ்சம் மெதுவாகத்தான் போகிறோம். அதை நான் சொல்கிறேன். எனக்கு 76 வயது. என்னை விட மூத்தவர் பேராசிரியர். நாங்க மெதுவாக நடக்கிறோம். அதனாலே இந்த மொழிப் பிரச்சினையிலும் மெதுவாகத்தான் போவோம். ஆனால் மொழி வேகம் உள்ளத்திலே இருக்கும். அந்த வேகத்தை இழக்கமாட்டோம். அந்த வேகத்தை இழந்தால் தமிழன் என்கின்ற உணர்வே பட்டுப்போய் விடும் என்பதற்காகத்தான் சொல்கின்றேன்.

என் மகள் கனிமொழி ஒவ்வொரு முறை என்னையும், தமிழ்க்குடிமகனையும் சந்திக்கும்போதெல்லாம், கனிமொழி நன்று ஆங்கிலம் கற்றவள். எல்லோரிடத்திலும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக் கூடிய ஆற்றல் பெற்றவள். அந்தக் கனிமொழி திருமணமாகி

சிங்கப்பூர் செல்கிற வரையில், ஒவ்வொரு நாளும் என்ன அப்பா! எப்போது தமிழ் மொழியை பயிற்று மொழியாக்கப் போறீங்க? எவ்வளவு காலத்திற்கு இந்த நிலைமை? என்று கேட்டுக் கொண்டே இருக்கின்ற காட்சி தமிழ்க்குடிமகனுக்கு நன்றாகத் தெரியும். எனவே வளருகின்ற ஒரு சமுதாயத்தில் தாய்மொழியை மறந்துவிட்டு, பிறமொழியை படித்து விட்டு வளர வேண்டும் என்று இல்லை.

இந்த என் பேச்சை பட்டுக்கோட்டையைச் சேர்ந்த வாட்டாக்குடி சுந்தரம் என்ற உடன்பிறப்பு ஒருவர் படித்து விட்டு, அவர் என் மகன் மு.க. தமிழரசுக்கு ஒரு கடிதமும், கவிதையும் அனுப்பியுள்ளார்.

தம்பி வலம்புரி ஜான் மூலமாகவும், திரு. இறையன்பு மூலமாகவும், அண்மையில் பட்டுக்கோட்டை சென்றிருந்த கவிஞர் தம்பி வைரமுத்து மூலமாகவும், என்னிடம் தொடர்பு கொண்டிட எடுத்த முயற்சிகள் பற்றி குறிப்பிட்டுவிட்டு, என் பேத்தி, அதாவது தமிழரசின் மகள் பூங்குழலிக்குக் கவிதை மடல் ஒன்று தீட்டியிருக்கிறார்.

முழுமையான கவிதை இலக்கணம் கொண்டதல்ல எனினும், நான் எழுதும் கவிதையல்ல போன்ற இனத்தைச் சேர்ந்த உணர்ச்சி வரிகள் என்று ஏற்று மகிழக் கூடியது அந்தக் கவிதை மடல் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமேயில்லை.

பத்திரிகைகளைத் தவறாமல் படிக்கிற உடன்பிறப்புகளில் ஒருவர் வாட்டக்குடி சுந்தரம் என்பதில் எனக்கோர் மகிழ்ச்சி! தமிழ் மொழியில் இத்துணை ஆர்வலர் - பற்றுடையார் என்பதிலே இரட்டிப்பு மகிழ்ச்சி!

இப்படிப்பட்ட தமிழ் மொழி உணர்வாளர்களைத்தானே இளைஞர் சமுதாயத்தில் இப்போது நான் தேடித் திரிகிறேன். வெறும் கேளிக்கைகள், பொழுது போக்குகள், கூத்துக்கும்மாளங்கள் என்றில்லாமல் சமுதாய முன்னேற்றம், இனம், மொழி, நாடு, இவற்றில் அக்கறை கொண்டு அறப் பணியாற்றிட இளைஞர்கள், வாலிபர்கள் அணி வகுத்தவாறே இருந்திடல் வேண்டும் - இடையில் தொய்வு ஏற்படலாகாது என்பதில் மிகுந்த கவலையுடன் கூடிய கவனம், எனக்கும், பேராசிரியருக்கும் உள்ளது என்பதை உன் போன்ற உடன்பிறப்புகள் அறிவீர்கள் அல்லவா!

வளர்ந்து வரும் விஞ்ஞான யுகத்தின் வேகத்திற்கேற்ப, நம் தமிழ் மொழியையும் வளர்த்திட வேண்டுமென்பதற்காகக் கழகமும், கழக அரசும் எடுத்து வரும் முயற்சிகளை முனை முறித்திடச் சிலர் முனைந்தாலும், அவர்களின் முனைப்பை முடக்கி வீழ்த்திட மொய்த்தது தமிழ் இளைஞர் கூட்டம் என்பதைக் காணும்போது எத்துணை இன்பம் ஏற்படுகிறது நெஞ்சத்தில்! இதோ அந்த வாலிபர் குழாமில் ஒருவராய் நின்று வாட்டக்குடி சுந்தரம், என் பேத்திக்கு எழுதியுள்ள நீண்டதோர் கவிதை மடலில் சில வரிகளை மட்டும் நீயும் சுவைத்திடத் தருகிறேன்.

"தம்பி மகளே! தமிழரசு மகளே!
தங்க மகளே! சிங்கத் தமிழ் வாரீசே!

அஞ்சுகத் தெய்வத்தின் அடிச் சுவடே!
நெஞ்சுரங் கொண்ட தலைவரின் பேத்தியே!

அம்மா! மகளே! பூங்கி! எதிர்காலத்தில்
நீயும் ஒரு தமிழ் வங்கிதான்!
சும்மா இராமல் தினம் சுற்றி வா
காலையில் உன் தாத்தா பாட்டியை!

தமிழரசு உன் தந்தையிடம் தமிழைக்கேள் அவர்
தமிழக முதல்வரிடம் தானமாய் வாங்கித் தருவார்

மதுரை பெரியப்பாவிடம் மனம் விட்டுக்கேள்
தமிழை அவர்
அதிரடிப்படை முலம் அனுப்பி வைப்பார் அட்டியின்றி!

மாநகராட்சி சென்னைக்கு ஒரு மனுவைப் போட்டுவை
மா மேயர் பெரியப்பாவும் மங்காத் தமிழ் உனக்குத்
தந்திடுவார்

முறிக்க வேண்டாம் உறவை முத்த பெரியப்பாவிடமும்
முத்துத் தமிழ் கேள்!
அறிந்த பெருமகன்தான் அவர்!

நீரடித்து நீர் விலகாது
நீட்டு உந்தன் நேசக்கரத்தை
நெடுந்தூரம் தமிழ் கேட்டு

சிங்கப்பூர் அத்தையிடம் நீ சிங்காரத் தமிழ் கேள்!
வங்கத்து முரசு போல் வழங்கிடுவார் கனிமொழியாய்!

உள்ளூர் அத்தை செல்வியிடம் உடனே
கேட்டுவிடு தமிழை
அள்ளிக்கொட்டி அன்பைக் கலந்து தருவார் அமுதமாக!

வாழ்க பூங்கி! வளர்க நல் தமிழ் வங்கியாய்!
வாழ்த்துகள் என்றும் நிரந்தரம் – நான்
வாட்டாக்குடி சுந்தரம்

உடன்பிறப்பே, சுமார் நூறு வரிகள் கொண்ட கவிதை மடலில் சில பகுதிகளை மட்டுமே உனக்குச் சுட்டிக் காட்டியுள்ளேன். அந்தக் கவிதை மடலை கையில் தூக்கிக் கொண்டு பூங்குழலி பூரிப்புடன் வீட்டில் அனைவரிடமும் காட்டி விட்டாள். அம்மடலில் ஒரு பகுதியை நான் உனக்கும் அனுப்பி விட்டேன்.

இந்தத் சுந்தரத்தை நான் இதுவரை நேரில் கண்டதாக நினைவில்லை. அடிக்கடி கடிதங்கள் மட்டும் எழுதுவார். அவருக்கு நான் பதில் எழுதவில்லையென்ற துன்பத்தைத் தீர்க்கவும் - நம் கண்ணில் படாமலே தமிழ் காத்திடும் களத்தில் இப்படிப் பல்லாயிரவர் தோள்தட்டி நிற்கின்றனரே என்ற என் நினைவில் இன்பத்தைப் பெருக்கவும் - உன் போன்ற உடன்பிறப்புகளுக்கும் மேலும் உற்சாகத்தை ஊட்டவும் இக்கடிதம் பயன்படுமென்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப உண்டு.

அன்புள்ள,

மு. க.

(25-12-1999)

2499. அனைவரும் சமம்; அய்யன் வள்ளுவனே தெய்வம்!

உடன்பிறப்பே,

கண்ணொளி கொண்ட தமிழரெல்லாம் கண்டுகளித்த காட்சி! செவிப்பறை பழுதுபடாத தமிழனெல்லாம் கேட்டு இன்புற்ற நிகழ்ச்சி! இதயமுள்ள தமிழனெல்லாம் உணர்ச்சியால் உந்தியெழுந்து குதித்திட்ட எழுச்சி! ஆம்! முக்கடலும் தம் அலை இதழ்களால் முத்தமிட்டு மயங்கும் குமரிக் கடற்கரையில், முப்பால் யாத்த ஞானத்தமிழ் அய்யன் திருவள்ளுவருக்கு விண்முட்டும் சிலை வடித்து அதைத் திறந்து வைத்திடும் வாய்ப்பு அமைந்ததே! அந்த வாய்ப்பு, என் வாழ்நாளில் என் நினைப்புக்கும், உழைப்புக்கும் கிடைத்த வரமல்லவா?

வழக்கமாகக் கதைகளிலும், புராணங்களிலும் வரம் பெறுவோர் எல்லாம் தம்மை வலுப்படுத்திக் கொண்டு தமது ஆதிக்கத்தை அகல விரிப்பதிலேயே அக்கறை செலுத்துவர் - ஆனால் எனக்கோ, கிடைத்த வரம், என் அய்யன் திருவள்ளுவனைச் சிலையாகக் கண்டிட! அதுவும் அவன் குறளில் எத்தனை அதிகாரம் இயற்றினானோ - அத்தனை அதிகாரம்! அதாவது, 133 அதிகாரங்களைக் குறிக்கும் 133 அடி சிலையை இந்திய பூபாகத்தில் வட இமயத்துக்கு நிகராகத் திகழும் தென் குமரியில் நிறுவிட முடியும் என்னால் என்ற வரமல்லவா!

அந்த வரத்தைத் துஷ்பிரயோகம் செய்யாமல், அதனை நிறைவேற்றவேண்டுமே யென்பதற்காக இருபத்தி ஐந்து ஆண்டுக்காலம் நித்தமும் தவம் செய்தேன். அந்தத் தவம் பலித்தது! என் தாபம் தணிந்தது! பிறவியெடுத்த பயனைக் கண்டேன் முழுமையாக!

உள்நாட்டு உயர் குணத்தார் - வெளிநாட்டுச் சான்றோராம் வித்தகப் பெருமக்கள் - புகழ்மிக்க அரசியல் தலைவர்கள் - புலமை மிக்கப் பெருங்கவிஞர்கள் - தமிழைத் தம் உயிராகக் கொண்ட தகைசால் பேரறிஞர்கள் - என் உயிரினு மேலான உடன்பிறப்புகள் - சாதி, மதம், கட்சி மாச்சரியம் அனைத்தும் கடந்த அரசியல் மற்றும் சமுதாயப் பண்பாளர்கள் - சமரச சன்மார்க்க அடியார்கள் - கலைஞர்கள் - இசைவாணர்கள் இன்னோரன்ன எத்தனை எத்தனை தமிழ் நெஞ்சினர் 2000 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1ஆம் நாள் இரவு ஏழரை மணிக்கு அய்யனின் சிலை, ஒளி வெள்ளத் திரை கொண்டு திறக்கப்பட்ட காட்சியைப் பார்த்து மெய்சிலிர்த்துப் போயினர்.

சிலை திறப்பதற்கான பொத்தானை அழுத்தியபோது என் விரல் என்னையறியாமல் அசைவற்றுப் போனது மட்டுமல்ல! என்னையே நான் மறந்துவிட்டேன். நாயன இசைவாணர்களும், தவுல் வித்வான்களும், அவர்தம் பக்க வாத்தியக்காரர்களுமாக சுமார் முன்னூறுக்கு மேற்பட்டோர், அய்யனின் சிலை திறக்கப்பட்டபோது இசை முழக்கம் திக்கெட்டும் எட்டிடச் செய்தார்களாம் - மறுநாள் காலையில் மற்றவர்கள் சொல்லக் கேட்டுத்தான் 133 நாயன இசை ஒலித்த செய்தியே எனக்குத் தெரியும். அந்த அளவுக்கு மெய் மறந்து போயிருந்தேன். சுமார் முக்கால் மணி நேரம் பேசியிருக்கிறேன். மறுநாள் ஏடுகளில் (குறிப்பாக முரசொலியில்) முழுப் பேச்சையும் படித்த பிறகுதான் என்ன பேசினேன் என்பது எனக்குத் தெரியும்.

இளமைப் பருவ முதல் எந்தவொரு தத்துவ வித்தகனை இமைப் பொழுதும் மறவாமல், எழுத்தில், பேச்சில், இயக்கத்தில் நினைவுபடுத்திக் கொண்டேயிருந்தேனோ - யாருக்கு வரலாறு போற்றும் வள்ளுவர் கோட்டம் அமைத்தேனோ - யாருக்காக ஆண்டுதோறும் பொங்கல் திருநாளுக்கு மறுநாள் வள்ளுவர் திருநாள் என அறிவித்தேனோ - பேருந்துகளிலும், பயணியர் விடுதிகளிலும் ஒழுக்கம் போதிக்கும் குறளை எந்த ஒளிமிகு ஏந்தலுக்காக எழுதச் செய்து உருவப்படத்துடன் அமைத்தேனோ - யாருடைய குறளுக்கு குறளோவியம் தீட்டி - பின்னர் 1330 குறளுக்கும் உரையும் எழுதினேனோ! அந்த அய்யன் திருவள்ளுவருக்கு, இருபத்தி ஐந்து ஆண்டுக் காலப் பெரு மூச்சுக்குப் பிறகு சிலை அமைந்தது! அதைத் திறந்து வைக்க

எனக்கு ஆயுளும் இருந்தது என்கிறபோது, என் மனநிலையை வர்ணித்திட தமிழ்த்தாய், தன்னிடமும் சொற்களுக்குப் பஞ்சமென்று சொல்லிவிட்டாளே! நான் என்ன செய்ய!

1975 ஆம் ஆண்டு (31.12.75) நான் முதல்வராக இருந்தபோது, அமைச்சரவைக் கூட்டத்தில் குமரிமுனையில் வள்ளுவர் சிலை அமைத்திட முடிவு எடுத்து அறிவிக்கப்பட்டது. 1975 டிசம்பர் 31ல் அறிவிப்பு - அடுத்து 30 நாட்களுக்குள் கழக ஆட்சி கலைக்கப்பட்டு விட்டது.

நான் முன்னின்று கட்டி முடித்த வள்ளுவர் கோட்டத்திலும் என் பெயர் பொறித்த அடிக்கல்லைத் தூக்கி எறிந்துவிட்டு, ஆட்சி கலைக்கப்பட்டதற்கு அடுத்த சில நாட்களுக்குள் எனக்கு அழைப்பு கூடத் தராமல், கோட்டத்தைத் திறந்து முடித்தனர் அன்றைய கோலேந்திகள்!

13 ஆண்டுக் காலம் அந்த வள்ளுவர் கோட்டத்திற்குள் நானும் காலடி எடுத்து வைக்கவில்லை. என் பெயருக்கும் ஓர் அங்குல இடமளிக்க யார் இதயமும் இடங் கொடுக்கவில்லை.

உடன்பிறப்பே, 25 ஆண்டுக்கால வள்ளுவர் சிலை வரலாற்றைச் சிறிது பின்னோக்கிப் பார்த்தால், உனக்கும் ஆறுதலாக இருக்கும், எனக்கும் ஆறுதலாக இருக்கும். உண்மைகள் சிலவற்றையும் உணர்ந்து கொள்ளலாம். ஏனெனில் அனைத்தும் ஆதாரபூர்வமானவை!

1975 ஆம் ஆண்டு திருவள்ளுவர் சிலையைக் கன்னியாகுமரியில் அமைப்பது பற்றிக் கழக அமைச்சரவையில் முடிவெடுத்து அறிவித்த பிறகு, அடுத்த மாதம் (நெருக்கடி காலத்தில்) கழக ஆட்சி கலைக்கப்படுகிறது.

குடியரசுத் தலைவர் ஆட்சி சில காலம் நடைபெற்று 1977 இல் அருமை நண்பர் எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வருகிறார். தேர்தலில் வெற்றி பெற்று!

1979 ஆம் ஆண்டு கன்னியாகுமரி ரயில்வே தொடக்க விழாவையொட்டி வருகை தந்த பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள், எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையில் வள்ளுவர் சிலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டினார். எப்போது? சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு! அதாவது 15.4.1979 அன்று!

அதன்பிறகு 2000 ஆம் ஆண்டு, ஜனவரி 1 ஆம் தேதியன்று, நான் சிலை திறந்த வரையில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் தொகுத்தளித்துள்ளேன். அளிக்க வேண்டிய நிலையை சிலர் ஏற்படுத்திவிட்டதால்!

15.4.1979-ல் அடிக்கல் நாட்டி, இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு 10.6.1981-ல் பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளரைத் தலைவராகக் கொண்ட நிபுணர் குழு ஒன்று திருவள்ளுவர் சிலை அமைப்பது பற்றிய பல்வேறு அம்சங்கள், சிலை அமைக்கப்படவிருக்கும் பாறையின் தன்மை ஆகியவற்றை ஆராய்ந்து, சிலை அமைப்பது பற்றிய திட்டங்கள் மற்றும் செலவு மதிப்பீடுகள் ஆகியவற்றைத் தயாரித்து அரசுக்கு அளிப்பதற்கென அமைக்கப்பட்டது. (அரசாணை எண் : 1132, பொது - செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, நாள் 10.6.1981)

அந்த நிபுணர் குழு 12.1.982-ல் தனது அறிக்கையை அரசுக்கு அளித்தது. சிலை அமைப்பதற்கு அந்த நிபுணர் குழு மூன்று வெவ்வேறு வழிமுறைகளை ஆராய்ந்துள்ளது. 75 அடி உயரமுள்ள திருவள்ளுவர் சிலையை கல்லால் செய்து நிறுவுவதற்கு சுமார் 331 இலட்சம் செலவு ஆகும் என்றும், அதற்கு 3 வருட காலம் பிடிக்கும் என்றும், சிலையை வெண்கலத்தால் செய்து நிறுவுவதற்கு சுமார் 364 இலட்சம் ரூபாய் செலவாகும் என்றும்,, இரண்டு வருட காலத்தில் இதை நிறைவேற்றலாம் என்றும்; செம்பினால் ஆன சிலையை நிறுவ சுமார் 341 இலட்சம் செலவு ஆகும் என்றும், இரண்டு வருட காலத்தில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம் என்றும் நிபுணர் குழு பரிந்துரை செய்திருந்தது.

பிறகு 1984 ஆம் ஆண்டு திருவள்ளுவர் சிலையை 402 இலட்சம் ரூபாய் செலவில் கல்லால் வடிவமைக்கலாமா அல்லது 432 இலட்சம் ரூபாய் செலவில் வெண்கலத்தால் வடிவமைக்கலாமா அல்லது நிதித்துறை கருத்து தெரிவித்தபடி, சிலை அமைக்கும் திட்டத்தை இன்னும் சில ஆண்டுகளுக்கு ஒத்திப்போடலாமா என அன்றைய நிதியமைச்சர் நாவலர் திரு.இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு குறிப்பு அனுப்பி, அதன் அடிப்படையில் மேலும் இரண்டு ஆண்டுகள் கழித்து 26.11.1986 அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் திருவள்ளுவர் சிலை பற்றி விவாதிக்கப்பட்டு,

"கன்னியாகுமரியில் திருவள்ளுவருக்கு நிலையான நினைவுச் சின்னம் அமைப்பது குறித்து பரிசீலிக்கப்பட்டது. திருவள்ளுவர் சிலை செப்புத் தகட்டினால் வடிவமைக்கப்பட வேண்டும். இதற்கென பொதுப்பணித்துறையின் மூலம் அனுப்பப்பட்ட வடிவமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதன் மதிப்பீடு ரூ. 432/- இலட்சம் ஆகும்''

என்று முடிவு செய்யப்பட்டது.

சிலை செய்து நிறுவும் பணிக்காக அரசாணை நிலை எண் : 547, செய்தி, சுற்றுலாத்துறை, நாள் 15.12.1986 வாயிலாக ரூ. 432 இலட்சம் ஒப்புதல் அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

இறுதியாக, சென்னை லார்சன் அண்டு டியூப்ரோ நிறுவனம், அல்லது சென்னை சிம்பளெக்ஸ் காண்கிரீட் பைல்ஸ் லிமிட்டெட் ஆகிய இரு நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோரலாம் அல்லது உலகளாவிய அளவில் ஒப்பந்தப்புள்ளிகள் (Global Tenders) கோரலாம் என தலைமைப் பொறியாளர் 21.4.1987 அன்று கருத்துத் தெரிவித்தார். உலக அளவில் ஒப்பந்தப்புள்ளி கோரும் கருத்துருவிற்கு, அன்னியச் செலாவணி தேவை என்பதால் மத்திய அரசின் ஒப்புதல் பெற வேண்டும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில் இது சம்பந்தமாக நியூயார்க்கில் உள்ள சுதந்திர தேவி சிலை (Statue of Liberty), பாரீஸ் மற்றும் இங்கிலாந்து, சென்று கட்டுமானப் பணிகளில் கையாளப்பட்டுள்ள தொழில் நுட்பங்களைக் கண்டறிந்து வர நிபுணர் குழு ஒன்று அனுப்பப்படலாம் என்று முடிவு செய்யப்பட்டு, அதற்கு மைய அரசிடம் அனுமதி கோரப்பட்டது. திரு. ராஜீவ் காந்தி தலைமையிலான மைய அரசு இந்தக் கோரிக்கையை நிராகரித்துவிட்டது.

இந்த நிலையில் 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் தேர்தலில் வென்று நமது கழக அரசு பதவியேற்றது.

கல்லில் சிலை அமைப்பதே ஏற்புடையது என்பதாலும், காலங்கடந்து நிற்கும் இந்தியக் கற்கோயில்கள் போல் கல்லால் சிலை அமைப்பது, நமது கலாச்சாரத்தை எடுத்துக்காட்டுவதாக அமையும் என்பதாலும், தமிழ்நாடு அரசு சிற்பக் கல்லூரி முதல்வர், திரு. கணபதி ஸ்தபதி அவர்களுடன் மக்கள் தொடர்புத்துறை

இயக்குநர் பேசி ஆலோசனை பெற்று, அதன்படி மேல் நடவடிக்கை எடுக்கலாம் என முடிவு செய்யப்பட்டு, 10.11.1989 அன்று திரு. கணபதி ஸ்தபதி அவர்களுடன் நானே விவாதித்து அந்த விவாதத்தின் தொடர்ச்சியாக திரு. கணபதி ஸ்தபதி 1.3.90 அன்று வரைபடமும், திட்ட மதிப்பீடும் தந்தார்.

17.3.1990 அன்று நிதிநிலை அறிக்கையைச் சட்டமன்றப் பேரவையில் வைத்தபோது, கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை 133 அடி உயரத்தில் நிறுவப்படும் என்று அறிவித்தேன். அது தொடர்பாக 25.3.1990 அன்று திரு. கணபதி ஸ்தபதி அவர்களுடன் விவாதிக்கப்பட்டு திருவள்ளுவர் சிலையினை செம்பால் செய்வதற்குப் பதில் கல்லால் செய்ய முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி, கன்னியாகுமரியில் திருவள்ளுவருக்கு 133 அடி சிலை அமைக்கும் பணியை திரு. கணபதி ஸ்தபதியிடம் ஒப்படைக்க முடிவு செய்து ஆணை வழங்கப்பட்டது. 6.9.1990 அன்று கன்னியாகுமரியில் சிலை வடிக்கும் பணியை நான் தொடங்கி வைத்தேன். இந்த நிலையில் 1991 ஜனவரி 31 அன்று மீண்டும் கழக ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது.

அதற்குப் பிறகு குடியரசுத் தலைவர் ஆட்சியில் ரூ. 45 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதன் பின்னர் 91 முதல் 96 வரை நடைபெற்ற ஐந்தாண்டு கால ஆட்சியில், பணி மந்தமாகி மீண்டும் ஒதுக்கப்பட்ட நிதியும்,

சென்னையில் உள்ள அட்மிராலிட்டி கட்டிடத்தை பழுது பார்க்க ரூ. 18.75 இலட்சம்;

திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயில் திருப்பணிக்காக ரூ. 7.25 இலட்சம்;

சென்னை கோயம்பேட்டில் பழக்கடை கட்டுதல் பணிக்கு ரூ. 14 இலட்சம் என வேறு பணிகளுக்கு திருப்பப்பட்ட (Divert) காரணத்தால் திரு. கணபதி ஸ்தபதி சிலை அமைப்புப் பணியை 1.3.1995 முதல் அறவே நிறுத்திவிட்டார்.

13.5.1996-ல் நான்காவது முறையாக, கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, சிலை அமைப்புப் பணி மீண்டும் தொடங்கியது.

25.6.1997 அன்று, என் தலைமையில் நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் சிலை அமைப்புப் பணிகளை விரைவுபடுத்துவது பற்றி விவாதிக்கப்பட்டு, இரண்டு ஆண்டுகளுக்குள் சிலை அமைப்புப் பணியை முடிக்க வேண்டும் என்று காலக்கெடு நிர்ணயம் செய்யப்பட்டு, அது தொடர்பாக திரு. கணபதி ஸ்தபதி அவர்களுக்கு, அரசே நேரிடையாக இனி நிதியை வழங்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

30.7.1997 அன்று சிலை அமைப்புப் பணிக்குரிய திருத்திய மதிப்பீடுகள் ஒப்புதல் அளிக்கப்பட்டு, சிலை அமைப்புப் பணிக்கு திருத்திய மதிப்பீட்டின்படி, ரூ. 614 இலட்சம்,

தமிழ்நாடு கட்டுமானக் கழகம் மேற்கொள்ள வேண்டிய பணிகளுக்கு திருத்திய மதிப்பீடாக, ரூ. 172 இலட்சம் என நிதி ஒப்பளிப்புச் செய்து ஆணையிடப்பட்டது.

திரு. கணபதி ஸ்தபதி மேற்கொண்ட பணிகளை, ஒவ்வொரு மாதமும் பொதுப்பணித் துறை பொறியாளர்கள் மூலம் ஆய்வு செய்து, செய்த பணியின் அளவிற்கு ஏற்ப நிதி வழங்கப்பட்டு வந்தது.

6.2.1999 அன்று திருவள்ளுவர் சிலை அமைக்கப்பட்டு வரும் பாறை அருகேயுள்ள கப்பலோடையை சரி செய்வதற்கு 86 இலட்சம் ரூபாயும், அதற்குத் தேவையான பொருள்களை கரையிலிருந்து எடுத்துச் செல்வதற்கு 7 இலட்சம் ரூபாயும், ஆக 93 இலட்சம் ரூபாய் கட்டுமானக் கழகத்திற்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டது. 19.10.1999 அன்று சிலை அமைப்புப் பணிகள் முற்றுப் பெற்றன.

திருவள்ளுவர் சிலைக்கு மின் விளக்குகள் அமைக்க 19 இலட்சம் ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

திருவள்ளுவர் சிலை அமைந்துள்ள பாறையில் வெடிப்புகளை நிரப்பி சரி செய்வதற்கும், சிலையின் உட்புறத்தில் தேவையான பணிகளுக்கு கட்டுமான பொருட்களையும், சாரப் பொருட்களையும் எடுத்துச் செல்வதற்கும் 44.50 இலட்சம் ரூபாய்க்கு 22.12.1999 அன்று ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே, சிலை வரலாறு பற்றிய அனைத்து ஆதாரங்களையும் முறைப்படி எடுத்துரைத்துள்ளேன்.

குமரிமுனையில் கோலாகலமாகத் திறப்பு விழாத் திருவிழா நடைபெறும் வேளையில் குழப்பம் ஏற்படுத்திட சிலர் முயன்றார்களே? அதற்காகத்தான் இந்த விளக்கமும், வரலாறும் தேவைப்பட்டது.

எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரை மறைக்க வேண்டுமென்ற குறுகிய மதி எனக்கு என்றைக்கும் இருந்ததில்லை. இப்போதும் வள்ளுவர் சிலைக்கருகே அந்த அடிக்கல் இடம்பெறத்தான் போகிறது. காணத்தான் போகிறார்கள். திறப்பு விழா நிகழ்ச்சிப் பந்தலிலேயே அந்தக் கல்லை லட்சக்கணக்கானோர் கண்டுமிருக்கிறார்கள்.

எம்.ஜி.ஆர். உயிரோடு இருந்தபோது அவர் பெயர் சூட்டப்பட்ட மருத்துவப் பல்கலைக் கழக மசோதா சட்டப் பேரவையில் நிறைவேறியது. அவர் மறைந்த பிறகு அதனை அப்படியே கிடப்பில் போட்டுவிடாமல், அன்றைய குடியரசுத் தலைவர் திரு.ஆர்.வி. அவர்களை அழைத்து, பல்கலைக் கழகத்திற்கு புதிய கட்டிடம் கட்டி, அதன் முகப்பில் எம்.ஜி.ஆர். சிலையும் வைத்து குடியரசுத் துணைத் தலைவர் திரு. கிருஷ்ணகாந்த் அவர்களை அழைத்து அதனை திறந்து வைத்ததும் நான்தான்.

திரையுலகம், மற்றும் பல பிரமுகர்கள் ஒருமித்த குரலில் திரைப்பட நகருக்கு எம்.ஜி.ஆர். பெயர் வைக்க வேண்டுமென்று எழுப்பிய கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, கடந்த கால ஆட்சியாளர்கள் தமது பெயரையே வைத்துக் கொண்டார்கள். திரைப்பட நகருக்கு 1996-ல் எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் என்று பெயர் வைத்ததும் நான்தான் என்பதும், நாட்டுக்கும், நல்லோருக்கும் நன்கு தெரியும்.

என் செய்வது? திருவள்ளுவர் சிலை திறப்பு விழா இவ்வளவு சீரும் சிறப்புடன் நடந்துவிட்டதேயென்று சிலருக்கு எரிச்சல்! ஆத்திரம்!

அண்டை மாநில ஏடுகளும், அயல்நாட்டுத் தமிழர்களும் அக மகிழ்ச்சியை வெளிப்படுத்துவது கண்டு சிலரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை!

ஆனால் எனக்கோ, இவர்களின் செய்கையால் எந்த வருத்தமும் இல்லை! சினமுமில்லை! சீற்றமுமில்லை!

அப்படி ஒரு வேளை வேதனையும், மனத்தில் வேகமும் ஏற்பட்டால்கூட அதனைத் தீர்த்து அறவே அகற்றும் அருமருந்தாக

உள்நாட்டு, வெளிநாட்டுச் சான்றோர் ஆன்றோர்களின் இனிய உரைகளும் கருத்துகளும், வாழ்த்துகளும் அமைந்துவிட்டன என எண்ணிப் பூரிக்கின்றேன்.

விழுப்புண் பெற்றவனுக்கு, அவன் வேல்விழிக் காதலி வேது கொண்டு ஒத்திடும்போது ஏற்படும் ஒருவிதமான சுகமன்றோ, தமிழ் ஆர்வலர்களின் ஆறுதல் வார்த்தைகளால் எனக்கு ஏற்படுகிறது.

இதோ தமிழ்நாட்டு ஏடுகள் மட்டுமல்ல! வடபுலத்திலிருந்து வரும் ஆங்கில ஏடுகள் எழுதியுள்ள நீண்ட கட்டுரைகளில் இருந்து சில பகுதிகளைத் தருகிறேன். நீயும்! உன் போன்ற உடன்பிறப்புகளும் சுவைத்திடுவீர் என்பதற்காக!

டைம்ஸ் ஆப் இந்தியா எனும் பிரபல ஆங்கில நாளேட்டில் 2.1.2000 என்பவர் எழுதுகிறார்.

133 அடி உயரமுள்ள தெய்வப் புலவர் திருவள்ளுவர் சிலையைப் புத்தாண்டு நாளன்று தமிழ்நாடு முதல் அமைச்சர், மு. க. அவர்கள், கன்னியாகுமரியில் திறந்து வைத்துள்ளார். இந்த மிகச் சிறந்த நினைவுச் சின்னம் தமிழ்ச் சமுதாயப் பண்பாட்டினை மட்டும் உணர்த்துவது அல்ல. ஜைன சமயத்தில் நிலைபெற்ற போதனைகளையும் உணர்த்துவதாகும். அவர் தனது நூலில் ஆதிபகவன் என - ஜைன சமயத்தை முதல் முதல் நிறுவிய ஆதிநாதரைக் குறிப்பிடுகிறார். மனித உளவியல் பற்றிய முழுமையான அறிவாற்றலை இவரது அணுகுமுறை மிகச் சிறப்பாக வெளிப்படுத்துகிறது. தீமைக்கு எதிராகப் போராடுவதில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைப் பண்புகளை மக்களுக்கு அளிப்பதே வள்ளுவரின் அணுகுமுறை

உடன்பிறப்பே, வள்ளுவரை பல மதத்தினரும் தமது சமயத்தவர் என்று உரிமை கொண்டாடுவதின் அடிப்படையில் உருவானதுதான் இந்தக் கருத்தும்! டைம்ஸ் ஆப் இந்தியா மேலும் எழுதுகிறது பார்.

முதலமைச்சர் மு. க. அவர்கள், கம்யூனிச சித்தாந்தத்தில் வளர்ந்திருந்தாலும், திருக்குறளின் ஆழமானதும் - தொடர்ச்சியானதுமான தாக்கம் அவருக்கு உணர்வூட்டியுள்ளன. கம்யூனிசக் கொள்கைகளில் ஈடுபாடு இருந்தபோதிலும், கருணாநிதி சோதிடத்தில் நம்பிக்கையுள்ளவர் என்றும்

சொல்லப்படுகிறது. ஆனால் அவருடைய உயிருக்கு ஆபத்து வரும் என்று சோதிடர்கள் எச்சரித்த போதிலும், துணைக் கண்டத்தின் முனையில் சிலை திறப்பதில் அவர் காட்டிய உறுதி, அவரது வாழ்க்கையில் மற்றுமொரு முத்திரையாகும்.

உடன்பிறப்பே,

டைம்ஸ் ஆப் இந்தியா கட்டுரையாளருக்கு, எனக்கு சோதிடத்தில் நம்பிக்கையுண்டு என்று யாரோ தவறாகச் சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் அவரும் சொல்லப்படுகிறது என்று மட்டும் எழுதியுள்ளார்.

ஏசியன் ஏஜ் என்று மற்றொரு பிரபலமான ஆங்கில ஏடு எழுதுகிறது. ஆர். பகவான் சிங் என்பவர் அந்த ஏட்டில் எழுதியுள்ள கட்டுரையில் சில பகுதிகளை மட்டும் காண்க.

இச்சிலைத் திறப்பு விழா நிகழ்ச்சி முதலமைச்சர் திரு. கருணாநிதியின் உடல் நலத்திற்கு உகந்ததல்ல என சோதிடர்கள் எச்சரித்திருந்த போதிலும், கன்னியாகுமரியில் முக்கடல்களும் கூடும் தென்முனையில் 133 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள தமிழ் முனிவர் திருவள்ளுவரின் சிலையினைப் புத்தாண்டின் தொடக்கத்தில் தமிழக முதலமைச்சர் கருணாநிதி திறந்து வைத்துள்ளார்.

சுமார் 7000 ஆயிரம் டன் கருங்கற்களால் உருவாக்கப்பட்டுள்ள இச்சிலையை அமைப்பது குறித்த சிந்தனை தமிழ் இலக்கியத்திற்குப் பெருந்தொண்டாற்றி வரும் தி.மு.க. தலைவரின் எண்ணத்தில் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் (1975ல்) உதித்தது. இது அவரது வாழ்க்கையின் மிகப் பெரிய குறிக்கோளாகும். இச்சிலை திருவள்ளுவருக்குச் செய்யும் மிகப் பெரிய நினைவுச் சின்னமாகும்.

1989ஆம் ஆண்டில் சிலைக்கு அடிக்கல் நாட்டிய பொழுது திரு.கருணாநிதி ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலக் கட்டத்தில் அவர் தனிப்பட்ட முறையிலும், அரசியல் ரீதியாகவும், பல கடுமையான சோதனைகளையும், வீழ்ச்சிகளையும் சந்திக்க நேரிட்டது. ஆனால், திராவிட இலக்கியப் படைப்பாளி தனக்கு மிகவும் பிடித்தமான இந்த திட்டத்தைக் கைவிட்டு விடவில்லை. 1996இல் மீண்டும் ஆட்சி அமைந்ததும் மேற்கொள்ளப்பட்ட முக்கிய பணிகளில் ஒன்றாக, பத்து கோடி

ரூபாய் செலவில், இச்சிலையினை வடித்தெடுக்க உலக அளவில் சிலை வடிப்பில் தேர்ச்சி பெற்றவரும், தேசிய அளவில் பல பரிசுகளைப் பெற்றுள்ளவருமாகிய திரு. கணபதி ஸ்தபதியிடம் ஒப்படைக்கப்பட்டது. வாஸ்து சாஸ்திர முறைப்படியும், சிலைகளை வடிவமைப்பதில் கடைப் பிடிக்கப்பட்டு வரும் அண்மைக்காலத் தொழில் நுட்பத்தின் அடிப்படையிலும் மிகப் பிரம்மாண்டமான இச்சிலை அமைக்கும் பணி மூன்று ஆண்டுகளில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது.

உடன்பிறப்பே,

குறளை அவரவர்களும் தமது கோணத்தில் பொருள் கொண்டு பார்ப்பதைப் போலவே, அய்யன் குறளாசானின் கருத்துகளையும் - அந்த அய்யனின் சிலையை அமைத்திட்ட என்னையும், என் இலட்சியங்களையும் அவரவர் கோணத்தில் பார்க்கின்றனர் என்பதற்கு இந்த இரு ஏடுகளின் கட்டுரைகளே தக்க சான்று!

எதுவாயினும், ஜனவரி 1ஆம் நாள், குமரி முனையில் திறக்கப்பட்ட வானுயர வள்ளுவர் சிலையை மறுநாள் காலை அருகில் சென்று பார்த்துவிட்டு திரும்பியதிலிருந்து என் நெஞ்சு ஓயாது உச்சரித்துக் கொண்டிருக்கும் உணர்ச்சிமிக்க சொற்றொடர் ஒன்றே குலம்! ஒருவனே தேவன்! என்பதைப் போல அனைவரும் சமம்! அய்யன் வள்ளுவனே தெய்வம்! என்பதுதான்!

“வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் - குறள்”

அன்புள்ள,

மு. க.

(05-01-2000)

2500. பாரதிபுரத்திலா இந்தப் பாதகச் செயல்?

உடன்பிறப்பே,

கண்ணே மணியே என்று கொஞ்சி தலை வாரிப் பூச்சூடி நித்தம் பாடசாலைக்கு அனுப்பி வைத்த பெற்றோர், அந்தச் செல்வங்கள் அரும்பாகி, மலராகி, கல்லூரி வரை சென்று பயின்று காயத்ரியாக - ஹேமலதாவாக - கோகிலவாணியாகத் திரும்பி வருவார்கள் என்று எதிர்பார்த்திருக்கும்போது அம்மூவரும் அவரவர் வீடுகளை நோக்கி கரிக்கட்டைகளாய் - சாம்பல் பொடிகளாய் வந்தனர் என்றால், அந்த மகள்களைப் பெற்ற மகராசிகளின் வயிறு எப்படிப் பற்றி எரிந்திருக்கும்?

அந்தத் தீ, அந்தப் பெண்களைக் கருக்கிய தீயை விட, ஆங்காரமாக அந்த ஈனச் செயல் புரிந்த கயவர்களைத் தாக்கும் சக்தி படைத்ததன்றோ! ஆனால் அதை அறியாமல், கண்ணீர் அஞ்சலி செலுத்த வேண்டியவர்கள் - கயவர்களைத் தண்டித்துத் தண்டிக்க வேண்டியவர்கள் - அதற்கு மாறாக நம் மீதல்லவா காய்ந்து விழுகிறார்கள்!

ஒரு கட்சியின் தொண்டரோ அல்லது அக்கட்சியின் உறுப்பினர்களில் ஒருவரோ, ஏதோ ஒரு வன்முறைச் செயலில் ஈடுபட்டார் என்று செய்தி கேள்விப்பட்டால், அக்கட்சியின் தலைமை அந்த நபரின் மீதோ அல்லது நபர்களின் மீதோ நடவடிக்கை எடுக்கவும் - சட்டம் எடுக்கும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்புத் தரவும் தயக்கம் காட்டக் கூடாது என்பதைச் செயலில் காட்டி வருவது நமது கழகமும், கழக ஆட்சியும் என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகள் இருக்கின்றன.

நான்கு முறை ஆட்சிக்கு வந்துள்ள நமது கழகம் முதல் மூன்று முறைகளிலும் கூட, தவறு செய்தவர்கள் கழகத்தின் முக்கிய பிரமுகர்களாக இருந்தபோதிலும், தயவு தாட்சண்யம் காட்டாமல் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நான்காவது முறையாக இப்போது நடக்கும் நமது ஆட்சியிலும் அதே பாரபட்சமற்ற நிலை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

ஓர் அலுவலரிடம் தகராறு செய்தார் என்பதற்காக வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் (கழகத்தவர்தான்) கைது செய்யப்பட்டார் சில மாதங்களுக்கு முன்பு! சுமார் மூன்றாண்டுகட்கு முன்பு மதுரையில் மார்க்சிஸ்ட் கட்சி மாநகராட்சி உறுப்பினர் திருமதி லீலாவதி அவர்கள், கொலையுண்ட நேர்வில் உடனடியாகக் கழக நிர்வாகியும், கழகத்தினரும் கைது செய்யப்பட்டு சுமார் மூன்றாண்டுக்காலமாக ஜாமீனில் கூட வெளிவராமல் சிறையில் இருக்கின்றனர். தம்பி ரூசோ கொல்லப்பட்ட நிகழ்ச்சியில், வேறு கட்சிக்காரர்களின் பெயர்கள் வதந்தியில் மிதந்து வந்த போதிலும்கூட, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், இந்நாள் நகரச் செயலாளருமான கழகத்தைச் சேர்ந்த ஒருவர்தான் கைது செய்யப்பட்டு வழக்கு நடைபெறுகிறது. தூத்துக்குடி கழகச் சட்டமன்ற உறுப்பினரான மாவட்டக் கழகச் செயலாளர் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு ஓர் அதிகாரியிடம் தகராறு காரணமாக கைது செய்யப்பட்டதும் அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

கழக ஆட்சி கடைப்பிடிக்கும் இந்த பாகுபாடற்ற அறநெறியை கடந்த கால ஆட்சியினர் கடைப்பிடித்தார்களா என்பதை, கொடவாசல் கொலைக் கொடுமை கண்டவர்களும் - கொடியங்குளம் அமளி கண்டவர்களும் - கோர்ட்டு முகப்பில் நிர்வாண நடனம் கண்டவர்களும் அனுபவ ரீதியாகவே உணர்வார்கள். அப்போதும் சரி! இப்போதும் சரி! குற்றம் புரிந்தவர்கள் தமது கட்சியினர் என்பதை மனச்சாட்சி இடித்துரைத்தும் கூட, சட்டத்தை வளைத்து சதி வலை பின்னும் கலையில் சிறந்து விளங்குகின்றனரே தவிர, நியாயப்படி நடந்திடவோ அல்லது வன்முறையாளர் மீது சட்டம் பாய்ந்திட ஒத்துழைக்கவோ அவர்கள் தயாராக இல்லை. ஆம்! இல்லவே இல்லை!

இப்போதுகூடப் பாரேன்! குதிரை கீழே தள்ளியதுமல்லாமல், குழியும் பறித்தது என்ற பழமொழிக்கேற்ப, தர்மபுரி மாவட்டத்தில் நடந்த நெஞ்சம் பதறும் நிகழ்ச்சியை சூரியனைக் கையால் மறைப்பது போல மறைத்திட முயற்சி மேற்கொள்கின்றனர்.

அவர்களுடன் சேர்ந்துள்ள தோழமைக் கட்சியினர் சிலருக்கு இருதயம் இருக்கிற காரணத்தால் - தானாடாவிடினும் தன் தசையாடும் என்பதை மெய்ப்பிக்கும் வண்ணம் - உள்ளம் நெகிழ இரங்கல் அறிக்கைகளையும், கண்டன அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளனர். தமிழகத்தில் அரசியல் நாகரிகம் அறவே பட்டுப்போய் விடவில்லை என்பதை எண்ணி ஆறுதலடைகிறேன்.

ஆனால், அன்று இந்த மாநிலம் ஆண்ட மங்கையர் திலகம் அவர்களுக்கு மட்டும் மனம் வரவில்லை. தவறு செய்தவர் தன்னுடைய கட்சியைச் சேர்ந்தவராக இருப்பினும், தண்டிக்கப்பட வேண்டியவரே என்ற தர்ம நியாயம் புலப்படவில்லை.

ஆட்சியின் மீதும், ஆட்சியை நடத்தும் நம் மீதும் செய்தி வெளியிடும் ஏடுகள், தொலைக்காட்சிகள் மீதும் பழி போட்டுவிட்டுப் பெரும் பாதகச் செயலில் இருந்து தனது கட்சியினரைத் தப்புவிக்க ஏதேதோ கூறுகிறார் - ஏதேதோ பேசுகிறார் - பாவம்! நாவலரின் இரங்கல் கூட்டத்தைக் கூட தி.மு.க.வை நோக்கிப் புஜம் தட்டிப் போர்க் குரல் கொடுக்கவே பயன்படுத்திக் கொண்டிருக்கிறார். அது அவர் கற்ற அரசியல் மரபு - பண்பாடு என விட்டு விடலாம். ஆனால் பதைக்கப்பதைக்க மூன்று மலர்களை எரித்துச் சிதைத்து விட்ட கொடியவர்களைக் காப்பாற்ற - பிறர் மீது பழிபோடத் துடிப்பதை எவர்தான் ஏற்றுக் கொள்ள முடியும்!

நடைபெற்றது என்ன சாதாரண சம்பவமா? தமிழகத்தையே உலுக்கியுள்ள உருக்கமிகு சம்பவமல்லவா?

இதோ! என் தம்பியொருவர் எழுதியுள்ள கவிதை வரிகளைப் படித்துப் பார். சுந்தரப் பெருமாள் கோயில் இராமலிங்கம் என்பது அவர் பெயர். அவர் எழுதியுள்ள கவிதை வரி என் கண்களுக்கு நீர்த் திரையிட்டது. நீலோற்பல மலர்களை நெருப்பிலிட்ட இந்நிகழ்ச்சி நடைபெற்ற இடம் தர்மபுரி மாவட்டத்தில் - இலக்கியப்பட்டியை ஒட்டிய பாரதிபுரத்தில் என்பதை நீ அறிவாய்! அதை வைத்து தம்பி எழுதியுள்ளார் பார்!

“பாரதிபுரத்திலா இந்தப் பாதகச் செயல்!
மாதரை இழிவு செய்யும் மடமையைக்

கொளுத்தச் சொன்னவன் பாரதி!
ஆனால் மாதர்களை கொளுத்திவிட்டார்களே
மாபாவிகள்!"

இந்த உணர்வு ஒவ்வொரு மனித உள்ளத்திலும் தோன்றுவதற்கு அடையாளம்தான், இந்தக் கவிதை வரிகள்!

மனித உள்ளத்தில் தோன்றுகிறது, சரி! இந்த உணர்வு, மற்ற உள்ளங்களிலும் தோன்ற வேண்டுமென்பது விதியா என்ன? என்று கேட்பவர்கள் சமுதாயத்தில் இன்னும் இருக்கத்தானே செய்கிறார்கள்! அதனால்தான் பிறர் மீது பழி போட்டுத் தங்களை விடுவித்துக் கொள்ளத் தவியாய்த் தவிக்கிறார்கள்! இந்த உண்மை புரிகிறதா உடன்பிறப்பே! புரிந்தால் அனைவரையும் புரிந்து கொள்ளச் செய்!

அன்புள்ள,

மு. க.

(05-02-2000)

2501. மூன்று தொகுதிகள் முக்கனி பறிப்போம்!

உடன்பிறப்பே,

நேற்றுத்தான் சென்னை செயல்வீரன் - வடசென்னை மாவட்டக் கழகச் செயலாளர் தம்பி பலராமன் மகள் திருமண விழாவில், கழகத்தின் தொண்டர்கள் ஒரு மரத்தின் அல்லது கொடியின் வேர்களைப் போன்றவர்கள் என்றும், மரத்தின் கிளைகளைப் போலவும், தழைத்திருக்கும் கொப்புகளைப் போலவும், மணம் வீசிடும் மலர்களைப் போலவும், குலுங்கும் கனிகளைப் போலவும் கழகத்தின் தலைவர்களும், முன்னணியினரும் என்றும் குறிப்பிட்டேன். அது மட்டுமல்ல, கோபுரத்தின் அழகான கலசங்களைப் போன்றவர்கள் தலைவர்கள் என்றும் - அடித்தளக் கற்களைப் போன்றவர்கள் தொண்டர்கள் என்றும் கூறினேன்.

ஆம்! உன்போன்ற உடன்பிறப்புகள் தாங்கி நிற்காவிட்டால் கோபுரம் ஏது? கோபுரத்தின் உச்சியில் கோலம் காட்டும் கலசங்கள்தான் ஏது? பூமியின் ஆழத்திலும் - அகன்ற பரப்பிலும் வேர்கள் ஓடி நீரையும், உரத்தையும் சேமித்து வழங்காவிட்டால் மரத்தின் கிளைகள், தழைகள், மலர்கள், கனிகள்தான் ஏது?

அந்த உண்மையை உணர்ந்து உழைப்பவன் நான் என்பதை நீ அறியாத உடன்பிறப்பா என்ன? கழகப் பணியாற்றிட - அதுவும் களைப்பு, சோர்வு எதனையும் பொருட்படுத்திடாமல் பணியாற்றிட - கண் துஞ்சாது, பசி நோக்காது பணியாற்றிட நீ பெற்றுள்ள கடமையுணர்வு வேறு எவருக்கு வாய்த்திடும் என எண்ணி எண்ணி மகிழ்பவனல்லவா நான்!

தமிழகத்தின் காங்கிரஸ் பேரியக்கம் தோல்வி முகத்தைத் தொங்கவிடக்கூடிய காலகட்டம் தோன்றிய போது, அரசியல் அனுபவ முதிர்ச்சி பெற்றவரான பெரியவர் பக்தவத்சலம் அவர்கள்,

சட்டப் பேரவையிலேயே என்ன சொன்னார் - உன்னை எப்படிப் புகழ்ந்துரைத்தார் என்பதை மறந்துவிட முடியுமா?

ஒரு சிங்கிள் டீயைக் குடித்துவிட்டு, வேறு எதையும் எதிர்பாராமல் பகல் இரவு எல்லா நேரங்களிலும் உழைப்பவர்கள் தி.மு.க. தொண்டர்கள் என்ற நற்சான்றிதழை, வசிஷ்டர் வாயினால் பிரம்ம ரிஷி பட்டம் பெற்றதைப்போல பக்தவத்சலம் அவர்களிடமிருந்து பெற்றதுதான் நமது கழகம்!

நான்கூட நினைப்பதுண்டு - ஆம்! பெருமூச்சுடன் நினைப்பதுண்டு - தலைவனாக மட்டும் ஆகாமல் இருந்திருந்தால், முதலமைச்சராக மட்டும் ஆகாமல் இருந்திருந்தால், அன்றொரு நாள் ஆரூர் வீதியின் சுவர்களில் கழகக் கூட்டங்களுக்குச் சுவரொட்டி ஒட்டியது போல, இப்போதும் வரிந்து கட்டிக்கொண்டு ஒட்டலாமே - அன்று 1958-ஆம் ஆண்டு திருவாரூர் தைக்கால் திடலில் நடத்திய கழக மாநாட்டில், கொடிகளும், தோரணங்களும், வரவேற்பு வளைவுகளும் கட்டக் குழிதோண்டிடக் கடப்பாரையைக் கையில் பிடித்தது போல இப்போதும் பிடிக்கலாமே என்று நினைத்துப் பெருமூச்சு விட்டுக் கொண்டுதானிருக்கிறேன்.

என்ன அண்ணே இப்படி நினைக்கிறாய்? உன் வேலையையும் சேர்த்துச் செய்யத்தானே இத்தனை உடன்பிறப்புகள் இருக்கிறோம் - என்று நீ கேட்பாய் என்பது எனக்குத் தெரிகிறது - இருந்தாலும் என் மனத்திருப்திக்கு உன்னோடு சேர்ந்து கொடி கட்ட, தோரணம் அமைக்க, வரவேற்புத் தட்டிகள் எழுதிட - எல்லா நேரங்களிலும் இல்லாவிடினும், இந்த இடைத்தேர்தல் நேரத்திலாவது உன்னுடன் இணைந்து உழைத்திட துடிக்கிறேன்.

உழைத்திடும் உடன்பிறப்புகளுக்கு அலுப்பு ஏற்படுவது இயல்பு! அதைப் போக்கிட நான் கையாண்ட ஒரு முறையை உனக்குச் சொல்லட்டுமா?

ஆம்! அதே திருவாரூர் மாநாட்டிலேதான் நான் மன்னை நாராயணசாமி, என்.எஸ். இளங்கோ, தென்னன், அரங்கண்ணல், விஜயராகவன் ஆகியோர் மாலை ஐந்து மணிக்கு புறப்பட்டு இரவு இரண்டு மணி வரையில் மாநாட்டு நிதி வசூல் பொதுக் கூட்டங்களுக்குச் செல்வோம், கூட்டம் ஒன்றுக்கு ஐநூறு ரூபாய் கொடுக்கப்படும். கொடியேற்றிட எனில் நூறு ரூபாய்

வழங்குவார்கள். ஒவ்வொரு நாளும் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் சேர்த்துக் கொண்டு நடுநிசி கடந்து மாநாடு நடைபெறும் தைக்கால் திடலுக்கு வந்து சேருவோம்.

அப்போது பந்தல் அமைத்திட, கொடிகள் கட்டிட உழைத்து அலுத்த உடன்பிறப்புகள் சோர்ந்து போய் உறக்கத்தில் ஆழ்ந்திருப்பார்கள். நான் அவர்களை எழுப்ப மாட்டேன். அவர்களுக்குப் பதிலாக நானும், மன்னை போன்ற நண்பர்களும் பந்தலில் கொடித் தோரணம் கட்ட கயிறுகளில் பசை தடவுகிற பணியில் ஈடுபடுவோம். கொடிகளைக் கட்டுவோம். அதற்குள் ஓர் உடன்பிறப்பு விழித்துக் கொள்வார். விழித்துக் கொண்டவர் பதறியடித்துக் கொண்டு மற்றவர்களையும் உசுப்பி எழுப்பிவிடுவார். அனைவரும் எழுவர் - அவர்களோடு சேர்ந்து மாநாட்டு பணியாற்றுகிற பேறு பெற்றோமேயென்ற பெருமகிழ்வுடன் விடியும் வரையில் உழைத்த பிறகே வீடு திரும்புவோம். குளித்துவிட்டு மீண்டும் உழைப்பதற்கு தயாராக!

அப்படி உழைத்த காரணத்தினால்தான், தி.மு.க. மாவட்ட மாநாடு ஒன்றுக்கு முதன் முதலாக இருபதாயிரம் ரூபாய் மிச்சப்படுத்தி, அண்ணா அவர்களின் கையில் அந்த மாநாட்டில் ஒப்படைக்க முடிந்தது.

தம்பி கருணாநிதி! உன் கரம் பட்டு லட்சம் லட்சமாக சம்பாதித்தவர்கள் கலையுலகில் உண்டே! அப்படிப் பார்க்கும்போது இதுபோல பல இருபதாயிரம் ரூபாய்களை இந்த இயக்கத்திற்கு நிதியாக நீ திரட்ட முடியும்.

- என்று அந்த மாநாட்டில்தான் அண்ணா உரை நிகழ்த்தினார். நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு இருபதாயிரம் ரூபாய் என்பது எவ்வளவு பெரிய தொகை என்பது எல்லோரும் அறிந்த ஒன்றே!

அது, உழைப்பின் பலன்! ஒற்றுமையுடன் ஆற்றிய பணிக்குக் கிடைத்த வெகுமதி!

அந்த அண்ணன் இன்றில்லை - அவரை இழந்த துயரில் இன்னமும் கண்கள் பனித்திட உலவிக் கொண்டிருக்கும் நானிருக்கிறேன் - நான் தவம் செய்து பெற்றதைப் போல தங்கம் நிகர் உடன்பிறப்பாக நீ இருக்கிறாய்!

எந்த உழைப்புக்காகவும் - உண்மையான பற்றுக்காகவும் - கொள்கை ஆர்வத்திற்காகவும் - கௌரவம் பார்க்காத

பணிகளுக்காகவும் - அண்ணனின் வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் நான் பெற்றேனோ, அவற்றை உடன்பிறப்பே நீயும் பெற்று; அண்ணன் இல்லை, அதனால் என்னிடம் பெற்று இந்த இயக்கத்தின் வெற்றிப்பாதையில் எந்தத் தொய்வும் இல்லாமல் பார்த்துக் கொள் என உன்னை வேண்டுகிறேன்.

என்னிடம் நீயும் பெற்று! என்கிற போது, லட்சம் லட்சமாகப் பணம் பெற்று என்ற மறைமுக வாசகமெல்லாம் வேறிடத்தில் ஒலிக்கட்டும் - ஒலித்துக் கொண்டிருக்கின்றன ஆம்! வந்த வழி எதுவோ அந்த வழி அந்தப் பணமெல்லாம் போய்க் கொண்டிருக்கட்டும்!

ஆனால் நாம், பணத்தைப் பரப்பியல்ல, கொள்கை மணத்தைப் பரப்பி - கழக அரசின் சாதனைப் பட்டியலை விரித்துரைத்து - ஓடியாடி வாக்காளர்களைச் சந்தித்து - இடையிடையே விரிக்கப்படும் வஞ்சக வலைகளை அறுத்தெறிந்து - இந்த இடைத்தேர்தலில் மூன்று தொகுதிகளிலும் முக்கனி பறிப்போம். முடியும் உன்னால்! நீ நினைத்தால் முடியாதது என்ன இருக்கிறது!

அன்புள்ள,

மு. க.

(09-02-2000)

2502. உழைப்பை நம்புவோம்! ஒற்றுமை காப்போம்!

உடன்பிறப்பே,

இப்போது மணி 4.30 - ஒன்பதாம் தேதி இரவு, 10 ஆம் தேதி விடியற்காலை எழுதுகிற கடிதம். 11 ஆம் தேதியன்று உன்னையும், உன் போன்ற உயிரினுமேலான அன்பு உடன்பிறப்புகளையும் காண வருகிறேனே! அந்தச் செய்தியைச் சொல்வதற்காக, சிந்தை குளிரும் அந்தச் சந்திப்பு பற்றி முன்கூட்டியே நினைத்து மகிழ்வதற்காக! ஆம் உடன்பிறப்பே, அதற்காக எழுதுகிற கடிதம்தான் இது.

தூக்கம் தழுவிடத் துடிக்கிறது எனினும், நான் அதனிடமிருந்து நழுவிடவே செய்கிறேன், உனக்கு எழுத வேண்டியவற்றை எழுதி முடித்திட வேண்டுமென்பதற்காக!

எத்தனையோ இரவுகள் - விடியற்காலைகளில் உனக்கு மடல் தீட்டியிருக்கிறேன். ஆனால் இப்போது மடல் தீட்டும்போது மட்டும், ஏதோ ஓர் இனம் தெரியாத உணர்வு என்னை ஆட்டிப்படைக்கிறது.

அந்த உணர்வு, நமது தமிழ்ச் சமுதாயத்தைப் பற்றியதுதான், இன்னமும் தமிழ் மக்களை விழிப்படைய ஒட்டாமல் இமைக் கதவுகள் மூடிக்கிடக்கின்றனவே. உத்திராட்சப் பூனைகளாக, ஊழல் பெருச்சாளிகளாக உலவிடும் சந்தர்ப்பவாத அரசியல் தலைவர்களின் உண்மை உள்ளத்தை அறிந்துகொள்ளாமல் அவர்கள் அடிதொழும் மக்களைப் பற்றி நான் என்னதான் கருதுவது?

சாக்கடையில் விழுந்து புரண்டு, குளித்து மூழ்கிக் கரையேறி, சேறும் சகதியுமாய் துர்நாற்றப் பேருருவாய் வலம் வருவோரைப் பார்த்து கண்ணை மூடிக்கொள்வது தவிர வேறு வழிதான் என்ன?

அவர்தம் முகம் கண்டு தொழுதேத்தி - காலின் முனை தொட்டுக் கண்களில் ஒத்திக்கொண்டு - காலமெல்லாம் யாம் உமக்கடிமை! என கைகட்டி வாய் பொத்திக் கிடக்கும் ஒரு கூட்டம் இன்னமும் இருக்கத்தானே செய்கிறது!

அதனால்தான் நம் வழி, வேறு வழி என்றாகிவிட்டது. அவ்வழியில் நாம் தனித்துப் பயணிக்கவில்லை. தோழமை இயக்கங்களின் துணையுடன்தான், அந்த இயக்கங்களின் இனிய உடன்பிறப்புக்களுடன்தான்!

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரும் - பூமிப் பந்தில் எங்கெங்கெல்லாம் தமிழர் வாழ்கின்றனரோ, அவர்தம் இதயங்களில் சிம்மாசனம் போட்டமர்ந்துள்ள பேரறிஞர் அண்ணாவும் - சமதர்மக் காவலர், சமத்துவத் தூதர் அரசியல் மேதை அண்ணல் அம்பேத்கரும் - மனிதநேயர் மதநல்லிணக்கம் கண்ட கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத்தும் - நடந்து காட்டிய வழியே நம் வழி. எள் முனையளவும் ஊழல் எனும் நச்சுக்கிருமிக்கு இடம் தரலாகாது என்று நிமிர்ந்து நின்ற ஏந்தல் ஜெயப்பிரகாஷ் நாராயண் நம் வழிக்குத் துணைவன்!

இந்தத் தலைவர்களை இன்று நேசிப்பவர்களைப்போல பேசித் திரிபவர்கள், நேற்றும், அதற்கு முன்தினமும் இவர்களை வகுப்புவாதிகள் என்றும், வன்முறைப் புரட்சியாளர்கள் என்றும் வசைபாடி அலைந்தவர்கள். இன்று உதட்டளவில் மதச்சார்பின்மை மந்திரத்தை ஜெபித்துக் கொண்டு ஊழல் எனும் உளைச் சேற்றில் உல்லாசம் காண்பவர்கள் - அரசியல் வாழ்வில் இதுவன்றோ உற்சாகமென்று உற்சவமே கொண்டாடி ஊர்வலம் நடத்துபவர்கள் - உண்மையைச் சுருக்கமாகச் சொல்வதென்றால் உறக்கத்தில் நடந்து கொண்டிருப்பவர்கள் - எங்கு போய் முட்டிக் கொள்வார்களோ! எப்படித் தட்டுத் தடுமாறுவார்களோ! சிற்றினம் சேராமை பற்றிக் கூறிடும் அய்யன் திருவள்ளுவனுக்குத்தான் வெளிச்சம்!

நாட்டு நடப்பு பார்த்தாயா! லஞ்ச லாவண்ய வழக்குகள் எனும் சகதியில் மூழ்கி எழுந்தவர்கள், ஏதோ தியாக வேள்வி புரிந்து அரசியல் போர்க்களத்தில் ஆண்டுக்கணக்கில் தண்டிக்கப்பட்டதுபோல, பாவலா காட்டுகிற காட்சியுடன் கூடிய நாடகம் நடத்தப்படும் நாட்டு நடப்பு பார்த்தாயா? காட்டு தர்பாரை தொடர்ந்து நடத்தலாமென அவர்கள் காணும் கனவையும்

பார்த்தாயா? மலர்களைக் கருக்கிச் சாம்பலாக்கிவிட்டு, மந்திகள் அந்தி நேரத்துப் பவனி நடத்துமாம் - அவற்றின் வாய் அமைதி மந்திரத்தை அள்ளி வீசுமாம்! இந்த பொய் வேடம் கண்டும் ஏமாந்து நின்றிட இன்னமும் சிலர் உள்ளனரே! அந்தச் சிலரை திருத்திட - அவர்களின் கண்கள் திறந்திட ஆற்றித் தீர வேண்டிய உன் பணியை நிறுத்தாமல் தொடர்ந்திடுக என்று கேட்டுக் கொள்ளத்தான் புறப்பட்டு வருகிறேன்.

அறந்தாங்கி, திருச்சி, நெல்லிக்குப்பம் தொகுதிகளில் நான் பவனிவரப் போவதில்லை. பணிபுரியவே வருகிறேன். அதனால் பல வாகனங்களில் உன் போன்ற உடன்பிறப்புகள் ஏறி அமர்ந்துகொண்டு, என் பணியை ஆடம்பரமாக்கிக் களித்திட வேண்டுமென இம்மியளவும் எண்ணிடலாகாது! இது பவனியே அல்ல! பணி! பணி! பணி! அதற்கென நல்ல நோக்கத்துடன் அமைந்ததே நமது அணி! தேவைப்படும் ஒரு சில வாகனங்களில் நீயும், உடன்பிறப்புகள் ஒரு சிலரும் வந்தாலே போதும். ஆயிரக்கணக்கில் நீ என் பின்னால் வருகிறாய் என்று எண்ணிக்கொள்வேன். முகத்தைக் காட்டிவிட்டோம்! நாம் வேலை செய்வதாக முழுமையாக நம்பிவிடுவான் தலைவன் என்று நடிக்கும் உடன்பிறப்பல்ல நீ - செயல்வீரன்! செயல்வீரன்! வெட்டிவா என்றுரைத்தால் கட்டி வரும் செயல்வீரன் - உன்னை மட்டுமல்ல, தோழமைக் கட்சிகளின் தூய உடன்பிறப்புகளையும் இணைத்துத்தான் சொல்லுகிறேன். இப்படை தோற்கின் எப்படை ஜெயிக்கும் என்று அண்ணா அடிக்கடி சொல்வாரே! அந்த நம்பிக்கையெனும் புரவி மீதமர்ந்துதான், வேகத்தில் புயலாக, விரைவில் மின்னலாக ஓடியாடி உழைத்திடும் உன்னையும், அருமை வாக்காளப் பெருமக்களையும் அந்த மூன்று தொகுதிகளிலும் தரிசிக்க வருகிறேன்.

எதிர் முகாமினர் புண்படப் பேசுகின்றனர் எனக் கேள்விப்பட்டேன் - நம் நெஞ்சு நிறைய இருந்திடும் தழும்புகள் அனைத்தும், அந்தப் புண்கள் காய்ந்து பின்னர் காட்சியாக மாறியவைதானே! எனவே நமக்குக் குறிக்கோள்தான் முக்கியம் - குறுக்கே எழும் குதர்க்கங்களும், குரூர மொழிகளும் ஒரு பொருட்டல்ல! அக்கினிக் கணைகள் பாய்ந்துவரினும், அவற்றை உன் அலட்சியப் புன்னகையால் ஈரமாக்கி அணைத்துவிடும் லாவகம் உனக்கு உண்டு என்பதை நானறிவேன்.

வெற்றியைக் களத்து மேட்டுக்குக் கொண்டுவந்து சேர் - களத்தில் ஒரு நெல்மணியும் களவு போகாமல் கவனமுடன் காவல் இரு என்று ஒவ்வொரு தேர்தல் நேரத்திலும் திரும்பத் திரும்பச் சொன்னதையே இந்த இடைத்தேர்தலிலும் சொல்லுகிறேன்.

அறந்தாங்கி தொகுதி முதலில் வருகிறேன். அறம் முதலில் ஆரம்பமாகிறது - மாற்றாரின் பொருள் குவியும், களத்தில்! மலைத்திடாதே! இன்பம் பொங்கும் விதமாக வெற்றிக்கனி பறித்திடுவோம் மூன்று தொகுதிகளிலும்!

அதற்கு நம் உழைப்பையே நம்புவோம் - நம் ஒற்றுமையைக் கட்டிக் காத்து, உறுதியை முதலீடாக வைத்து ஊக்கமுடன் செயலாற்றுவோம். தோளோடு தோள் நின்று தொண்டாற்றும் தோழமைக் கட்சிகளின் செயல்வீரர்களுடன் சூளுரைத்துச் சுடர்முகம் தூக்கித் தேர்தல் களத்தில் நீ காட்டும் சுறுசுறுப்பைக் காண ஓடி வருகிறேன். இதோ வைகறைப்பொழுதும் ஆகிவிட்டது. விடிந்தால் வீட்டு வாசலில் ஒரு திருமணம். அடுத்து நாஞ்சிலார் இல்லத்துக்கு பிறந்தநாள் வாழ்த்துக் கூற! பின்னர் கலைவாணர் அரங்கில் மற்றொரு திருமணம். எனவே இத்துடன் கடிதத்தை நிறைவு செய்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(11-02-2000)

2503. வென்று காட்டுக! உடன்பிறப்பே, வென்று காட்டுக!

உடன்பிறப்பே,

ஏய்! அந்தப் பயலை பனைமரத்தில் கட்டிப் போட்டு கசையடி கொடுடா! இதோ இந்த திமிர்பிடிச்சவனைத் தென்னை மரத்தில் பிணைத்து கொதிக்கிற சாணிப்பாலை மேலே ஊற்றி சவுக்கடி கொடுடா!

இந்த மிடுக்கான குரல்கள் துடுக்குத்தனமாகக் கேட்டுக் கொண்டிருந்த காலத்தை மாற்றிக் காட்டி - சின்ன ஜாதிக்காரன் என்று எவனுமில்லை, அவனும் செருப்பு போட்டுக் கொண்டு நடக்கலாம். மேல் துண்டு போடுவது மேல் ஜாதிக்கு மட்டுமல்ல - எல்லா ஜாதிக்கும் உரிமையுடையதே என்று ஆக்கிய பெருமை, பெரியாரின் திராவிட இயக்கத்துக்கும் - அன்றைய கம்யூனிஸ்ட்டு கட்சிக்கும் - ஜீவா, சீனிவாசராவ், மணலி போன்ற செங்கொடிச் சிங்கங்களுக்கும், காலனி தோறும் திராவிடக் கழகக் கொடியேற்றி வைத்து, சமபந்தி விருந்துண்டு, கலப்புத் திருமணங்களை நடத்தி வைத்த மன்னை நாராயணசாமி, மணி மற்றும் என் போன்றோருக்கும் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் உரிய ஒன்றாகும் என்பதை அந்த மாவட்டத்தின் அரசியல் வரலாறு உணர்ந்தோர் ஒப்புக்கொள்ளும் உண்மையாகும்.

மக்கள் விரோதிகளின் மந்தகாச வாழ்வை - செருக்கு மிகுந்த செல்வாக்கை - மண்ணில் போட்டு மிதித்து செல்லாக்காசாக்கிய துணிவும், தூய்மையான உழைப்பும் இந்த இரு இயக்கங்களின் இமாலயச் சாதனையாகத் தஞ்சைத் தரணியில் ஒளிவிட்ட காரணத்தினால்தான், இன்றைக்கும் சுயமரியாதைத் தளிர்விட்டு தாழ்த்தப்பட்ட சமுதாயம் அந்த மாவட்டத்தில் மட்டுமல்ல, மாநில முழுவதுமே ஏறு நடைபோடுவதற்குத் தலைதூக்கி நிற்கும் காட்சியைக் காண முடிகிறது.

இந்த வரலாற்றுடன் சேர்ந்து வளர்ந்து வருகிற எனக்கு மனித நேயம் கற்றுக் கொடுக்கச் சில மா (?) மனிதர்கள் புறப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது இந்த வேதனையான வேடிக்கை கண்டு சிரிப்பதா, அழுவதா என்றே புரியவில்லை!

அரசியலில் வழுக்குப் பாறையில் பாதம் பதித்து விட்டு அவஸ்தைப்படுபவர்கள், நம்மைப் பற்றி நாள்தோறும் நடத்தும் அர்ச்சனைகளை மொத்தமாகத் தொகுத்து, இடைத் தேர்தல்கள் காலத்து தேர்தல் பிரச்சாரத்தில் அளவுக்கு அதிகமாகவே கொட்டியிருக்கிறார்கள்.

சிரங்கு பிடித்தவன் ஓயாமல் சொறிந்து கொள்வதும் - சொறிந்து முடித்தபின் எரிச்சலால் அவதிப்படுவதும் - அதன் காரணமாக சௌக்யமா? என்று கேட்பவரிடம் கூடச் சீறி விழுவதும் இயற்கை.

இல்லாதது - பொல்லாதது - ஏதும் கிடைக்காத காரணத்தால் இட்டுக் கட்டியது - இவற்றை ஆயுதங்களாக ஏந்திக் கொண்டு, இடைத்தேர்தலுக்காக நம்முடன் போரிடுபவர்களின் வாதங்களையும் - அவர்தம் புள்ளி விபரங்களையும் - கற்பனைக் குற்றச்சாட்டுகளையும் சுக்கு நூறாக, உடைத்துக் காட்டும் சம்மட்டி போன்ற ஆதாரங்கள் நம்மிடம் இருக்கின்றன.

குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு, குற்றம் நிரூபிக்கப்பட்டு, தண்டனை தரப்பட்ட பிறகும் - ஆகா ஊஹூ! என்று சிலிர்த்துக் கொண்டு சினங் கொப்பளிக்க இவர்கள் ஆட்சியில் நடத்திய சாதனை என்னவென்று வீதிகளில் கேட்கிறார்கள். மேடைகளில் கேட்கிறார்கள். ஏடுகள் வாயிலாக அறிக்கைகளில் கேட்கிறார்கள்.

இதோ ஒரு பட்டியல் இருக்கிறது. கழக ஆட்சியில் இந்தியாவிலேயே முதன் முதலாகத் தொடங்கி நடைமுறைப்படுத்தி வரும் திட்டங்களை வரிசைப்படுத்திப் பார்ப்போம்.

குடிசை மாற்று வாரியத் திட்டம்

ஆதி திராவிடர்களுக்கு இலவச காங்கிரீட் வீடுகள் கட்டித் தரும் திட்டம்

விவசாயிகளுக்கு இலவச மின்சாரம்

பெண்களுக்குச் சொத்துரிமை

பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தனி அமைச்சகம்

மே தினத்திற்கு அரசு விடுமுறை

காவல்துறையினருக்காக போலீஸ் கமிஷன்

தொழுநோய் இரவலருக்கு மறுவாழ்வுத் திட்டம்

கண்ணொளி வழங்கும் திட்டம்

கைரிக்ஷாவை ஒழித்து இலவசமாக சைக்கிள் ரிக்ஷாக்கள் வழங்கி திட்டம்

வேளாண்மைப் பல்கலைக்கழகம்

கால்நடைப் பல்கலைக்கழகம்

அம்பேத்கர் பெயரில் முதல் சட்டப் பல்கலைக் கழகம்

மீனவர்களுக்கு இலவச வீட்டு வசதித் திட்டம்

அரசுப் பணிகளில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு

உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு

அரசு தேர்வுகளில் மாநில அளவில் - மாவட்ட அளவில் முதல் மூன்று மதிப்பெண் பெறுவோருக்கு அரசே உயர் கல்விச் செலவை ஏற்கும் திட்டம்

பட்டதாரிகள் இல்லாத குடும்பங்களிலிருந்து வரும் முதல் பத்து நிலை மாணவர்களின் உயர் கல்விச் செலவை அரசே ஏற்கும் திட்டம்

புதிய தொழிற்சாலைகள் தொடங்கிடத் தேவைப்படும் அனுமதிகள் அனைத்தையும் ஒரே இடத்தில் வழங்கிட ஒற்றைச் சாளர முறை

தொழிற் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கு ஒற்றைச் சாளர முறை அறிமுகம்

கிராமப்புற மாணவர்களுக்கு தொழிற் கல்வி பயில 15 சதவிகித இடஒதுக்கீடு

நமக்கு நாமே திட்டம்

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்

வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை எளியோர்க்கு உயிர் காக்கும் அறுவைச் சிகிச்சைகள் செய்து கொள்ள 25 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்கும் திட்டம்

அரசு பள்ளிகளில் கணினி பயிற்றுவிக்கும் திட்டம்

குடிசைவாசிகளுக்குத் தீப்பிடிக்காத கல்நார் கூரைகளுடன் குடியிருப்புகள் அமைக்கும் திட்டம்

மகளிர் சிறுவணிகக் கடன் திட்டத்தில் - இதுவரை 55 ஆயிரம் பெண்களுக்கு கடன் உதவி

பெண்களுக்குத் திருமண உதவித் திட்டம் தலா 10 ஆயிரம் ரூபாய் நிதி.

கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ. 500 உதவி அளிக்கும் திட்டம்

அரசு அலுவலர்கள் இறந்தால் குடும்பப் பாதுகாப்பு நிதி ஒரு லட்சம் ரூபாய் அளிக்கும் திட்டம்

கிராமப்புறங்களுக்கு இணைப்புச் சாலைகள் போடும் திட்டம்

தொடக்கப் பள்ளிகள் இல்லாத குக்கிராமங்களே இல்லை என்ற நிலையை உருவாக்கும் திட்டம்

பள்ளி மாணவர்களின் நல் வாழ்வுக்கு வகை செய்யும் வாழ்வொளித் திட்டம்

உழவர் சந்தை திட்டம்

வரும் முன் காப்போம் திட்டம்

கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்

உடன்பிறப்பே,

இத்தனையும் இந்த ஆட்சியின் திட்டங்கள்தான் - நிறைவேற்றப்பட்டு வரும் தொடர் சாதனைகள்தான் - இவை அனைத்தும் ஊழலாம்! 40 லட்ச ரூபாய் அரிசி கடத்தப்பட்டதைக் கண்டுபிடித்து அந்தக் கயவர்களைக் கைது செய்திருப்பதும் ஊழலாம்! ஊழலில் புரண்டு, ஊழலில் வளர்ந்து, ஊழலையே வாழ்க்கையாகக் கொண்டுள்ள ஊழல் மகாராஜாக்களும், ஊழல் மகாராணிகளும், ஊர் செழிப்பதற்கு நாம் நமது ஆட்சியில் உருவாக்கி நடைமுறைப்படுத்தும் உயர்ந்த திட்டங்களைப் பழித்துப் பேசுவதால் பழியொன்றும் நமக்கு வந்து விடாது.

இந்த உறுதியுடன் நீயும், நானும் நமது பணியை உலைவின்றி ஆற்றுவோமேயானால், இடைத்தேர்தல் அல்ல! எல்லாத் தேர்தல்களிலும் வெற்றிக் கொடியை ஏந்துவோம் என்பது நிச்சயத்தில் நிச்சயமேயாகும்!

நேற்று சொன்னதை இன்று மறந்து விட்டு ஊருக்கு உபதேசம் செய்யும் உத்தமர்களை உணர்ந்து கொள்ள இதோ ஓர் உதாரணம்.

அரசியல் சட்டம் மறுபரிசீலனை என்பது பாரதிய ஜனதாவின் ரகசியத் திட்டங்களை செயல்படுத்துவதற்கான உபாயமாகும் என்றும், அதற்கு ஆதரவு காட்டுவது தி.மு.க. சொல்லும் மதச் சார்பின்மைக்கு முற்றிலும் விரோதமானதாகும் என்றும் இன்றுகூட ஓர் அறிக்கை அவசர அவசரமாக வெளியிடப்பட்டுள்ளது.

அரசியல் சட்டத்தைப் பரிசீலிப்பதா? திருத்துவதா? அது புனிதமானதல்லவா? என்று கேட்கிறார்களே - இவர்கள் யார் தெரியுமா?

தற்போதுள்ள ஆட்சி முறையில் தக்க மாற்றம் கொண்டு வந்து, நாட்டின் ஜனாதிபதியிடம் முழு அதிகாரம் வழங்கப்பட்டு, அமெரிக்க ஜனநாயக அமைப்பைப் போன்று ஜனாதிபதியை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறை அமைய வேண்டும் என்றும், அதற்கேற்ப அரசியல் சட்டமே மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்றும் இப்பொதுக் குழு கோருகின்றது.

உடன்பிறப்பே,

இப்படியொரு தீர்மானத்தை 18.8.1996 அ.தி.மு.க. பொதுக் குழுவில் நான்காவது தீர்மானமாக நிறைவேற்றியவர்கள்

தான் என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள். அவர்களோடு தற்காலிகமாக தோழமை கொண்டவர்களும் மறந்துவிட்டார்கள். நாம் மறக்க முடியுமா?

இதை மட்டுமா? கோடி கோடியாகக் கொள்ளையடித்தவர்கள் கோலாகலமாக ஊர்வலம் வர எண்ணுகிறார்களே! இந்த விசித்திரத்தையும் நாம் மறக்க முடியுமா?

முடியாது! முடியாது!

அதை நிரூபிக்க உடன்பிறப்பே! தோழமைக் கட்சிகளின் தொண்டுள்ளம் கொண்ட தூய உடன்பிறப்புகளுடன் இணைந்து எறும்புகளாய் - தேனீக்களாய்ச் சுறுசுறுப்பு காட்டி இடைத் தேர்தலில் மூன்று தொகுதிகளிலும் வென்று காட்டு! உடன்பிறப்பே! வென்று காட்டு!

அன்புள்ள,

மு. க.

(17-02-2000)

2504. விளையக்கூடாதது எது? விளையவேண்டியது எது?

உடன்பிறப்பே,

உன் உழைப்பால், உன்னுடன் இணைந்து நமது தேசிய ஜனநாயகக் கூட்டணியின் செயல்வீரர்கள் ஆற்றிய அரும்பணியால் இடைத்தேர்தலில் வெற்றிக் கனிகளைப் பறித்துள்ளது கண்டு களிப்புமிகக் கொள்கிறேன். இன்னும் ஒரு கனி, பாக்கியிருக்கிறதேயென்று நீ நினைப்பது புரிகிறது. அதுவும் கைக்குவந்த கனிதான் - வாய்க்கு எட்டவில்லையே என்று வருத்தப்படத் தேவையில்லை.

ஒவ்வொரு பொதுத் தேர்தலிலும் தொகுதிகளில், அது நாடாளுமன்றத் தொகுதியாக இருப்பினும் - சட்டப் பேரவைத் தொகுதியாக இருப்பினும் வகுத்திட வேண்டிய வியூகத்திற்கும், அதே தொகுதியில் இடைத் தேர்தலாக இருப்பின், வகுத்திட வேண்டிய வியூகத்திற்கும் நிரம்ப வேறுபாடு இருக்கிறது. அந்த வேறுபாட்டைப் புரிந்து கொண்டு விவேகமுடன் வியூகம் வகுத்து - வியர்வை சிந்திப் பாடுபட்டு - விழிமூடாமல் செயலாற்றி வெற்றிக் கனிகள் கொய்திட்ட உன்போன்றோர் திறன் கண்டு ஏடுகள் சிலாகித்து எழுதியவற்றை என் கண்களில் ஒத்திக் கொண்டு, உன் கைகளை எடுத்து ஒத்திக் கொண்டது போன்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளேன்.

அடடா! மாற்றார் முகாமிலிருந்து எத்தனை விதமான கணைகள் - எத்தனை விதமான கணிப்புகள் - எத்தனை விதமான கண்டனங்கள்! அனைத்தையும் அண்ணா கற்றுக் கொடுத்த ஓர் அலட்சியப் புன்னகையினால் புறக்கணித்து விட்டு மக்கள் குரலே மகேசன் குரல்! இடையில் எழும் மகானுபாவர்களின் குரலுக்குச் செவிசாய்த்துக் கொண்டிருக்கத் தேவையில்லையென்று வைத்த குறி தப்பாமல் வாகை சூடிவிட்டாய்.

பாரதக் கதையிலே வரும் பார்த்திபன் கண்ணுக்கு மரஉச்சியில் அமர்ந்திருந்த பறவையின் தலையும், நாண் ஏற்றப்பட்ட காண்டீபத்தில் பொருத்திய அம்பின் நுனியும் மட்டுமே தெரிந்தது. மரத்திலுள்ள கிளை, இலை, தழை, கொப்புகள் எதுவும் தெரியவில்லையென்று கூறப்பட்டுள்ளதே, அதே போல எதிர்முகாமிலிருந்து கிளம்பிய ஏச்சுப் பேச்சுகள், இழி மொழிகள், எடுத்தேன் கவிழ்த்தேன் எனும் விமர்சனங்கள் ஆகிய எதனையும் பற்றிக் கவலைப்படாமல், நீ ஆற்றிய பணிக்கு, காட்டிய அக்கறைக்குக் கைமேல் பலன் கிடைத்துவிட்டது.

தேர்தல் முடிந்த பிறகு - தீர்ப்பு வெளியான பிறகு - எதிர்தரப்பு நண்பர்களின் முகாமிலிருந்து வெளிப்படும் கருத்துகளைப் படித்திருப்பாய். அல்லது தொலைக்காட்சிகளில் நடைபெற்ற நேருக்கு நேர் பேட்டிகளில் பார்த்திருப்பாய்.

அதிகார துஷ்பிரயோகம் செய்யப்பட்டது - அமைச்சர்கள் முற்றுகையிட்டனர் - திருட்டு வாக்குகள் போடப்பட்டன - இவ்வாறு, தேர்தலில் தோல்வியென்றால் உச்சரிக்கத் தயாரித்துள்ள பாஷ்யங்களை மறவாமல் ஒப்புவித்துக் கொண்டிருக்கின்றனர். அமைச்சர்களுடன் சென்ற கார்களைவிட, காவல்துறை படைகளைவிட அம்மையார் சென்றபோது அணி வகுத்தவைதான் ஆயிரம் மடங்கு அதிகம் என்பதை அந்தத் தொகுதிகளின் மக்கள் தங்கள் கண்களாலே பார்த்துத்தான் இருக்கிறார்கள்.

அமைச்சர்கள் இந்த இடைத்தேர்தல்களுக்கு மட்டுமா சென்றார்கள்! 1963ஆம் ஆண்டு நடைபெற்ற திருவண்ணாமலை இடைத்தேர்தலுக்கு அந்நாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர், செஞ்சியிலே அரசு விடுதியில் தங்கிக் கொண்டு திருவண்ணாமலை தொகுதி முழுவதும் பம்பரம் போல் சுழன்று பணிபுரிந்தாரே? அவருடன் ஆர். வெங்கட்ராமன் உள்ளிட்ட எத்தனை அமைச்சர்கள் பவனி வந்தார்கள் - அந்தத் தேர்தலில் காங்கிரசை கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்த காரணத்தால் ஒரு கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையிலிருந்த கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான பாலதண்டாயுதம் பரோலில் விடுவிக்கப்பட்டு காங்கிரசுக்காக அந்த தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அப்போது பிரபலமாக வெளிவந்து கொண்டிருந்த நவமணி என்ற நாளேடு, திருவண்ணாமலை இடைத் தேர்தலில்

ப.உ. சண்முகத்துக்கும் - பத்ராசலம் பிள்ளைக்கும் போட்டி நடைபெறவில்லை. காமராசருக்கும், கருணாநிதிக்கும்தான் போட்டி நடைபெறுவது போல, இருவரும் கடுமையாக இடைத்தேர்தல் பணியாற்றுகிறார்கள் என்று தலைப்புச் செய்தியே வெளியிட்டதே! அதெல்லாம் மறந்துவிடக் கூடிய செய்திகளா? பெருந்தலைவர் காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்தாலும், காங்கிரஸ் கட்சியின் தலைவர் என்ற முறையில் அவருக்கே உரிய தொண்டுள்ளத்துடன் அந்த இடைத்தேர்தலில் பங்கெடுத்து வேலை செய்தது போல, அவர் வழிநின்று இப்போதும் வேலை செய்திட அமைச்சர்களுக்குள்ள உரிமையையும், கடமையையும் புறந்தள்ளிவிட முடியுமா என்ன! எனதருமை நண்பர் திரு. மூப்பனார் அவர்கள் திருச்சியில் தேர்தல் கமிஷன் விசாரணை நடத்துவதிலிருந்தே, தேர்தலில் தவறு நடந்தது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது என வியாக்யானம் செய்து அறிக்கை விடுத்துள்ளார்.

என் செய்வது? விசாரணை முடிந்து, வக்கீல்களின் வாதம் முடிந்து, தீர்ப்பு எழுதப்பட்டு ஓராண்டு தண்டனையும் பெற்றுவிட்டவர் மீது தவறு இல்லையென்றும் - அதே சமயம் திருச்சி தேர்தல் பற்றி விசாரணை என்றாலே, தவறு நிரூபிக்கப்பட்டுவிட்டது என்றும் அவரை சொல்ல வைத்த சக்தி எது என்றுதான் எனக்குப் புரியவில்லை.

அ.தி.மு.க.வுடன் கூட்டு என்ற இந்தப் புதியநிலை உருவான போது அவர் அறுதியிட்டுச் சொன்னதற்கும், சன் டி.வி.யில் திரு. வீரபாண்டியன் நடத்திய நேருக்கு நேர் விவாதத்தில், தம்பி பொன்முடியுடன் வாதிட்ட நண்பர் அழகிரி எம்.எல்.ஏ. அவர்களின் கருத்துக்கும் எத்துணை முரன்பாடு!

அ.தி.மு.க.வுடன் ஏற்பட்டிருப்பது கூட்டணியல்ல, இது தற்காலிக ஏற்பாடுதான் என்று த.மா.கா. தலைவர் உறுதிபடச் சொன்னார். ஆரம்பத்தில் உறவு அரும்பியபோது!

ஆனால் அவரது தலைமையில் உள்ள அழகிரி அவர்களோ சன் டி.வி. பேட்டியில், அ.தி.மு.க.வுடன் கொண்டுள்ள கூட்டணி தொடரும், இந்த அணி 2001 தேர்தலில் வெற்றிக் கொடி நாட்டும் என்ற அறைகூவல் விடுவது போலக் கருத்தறிவித்ததை என் காதாலே கேட்டு வியந்தேன். அவர் கருத்துப்படி, இதே அணி

(அதாவது தலைவரால் தற்காலிக ஏற்பாடு என்று சொல்லப்பட்ட அணி) தொடர்ந்து அம்மையாரையே முதலமைச்சராக்கும் முயற்சியில் ஈடுபடுமா? ஆம் எனில், காமராசர் ஆட்சி எனும் குறிக்கோள் கைவிடப்பட்டுவிட்டதா?

இப்போது உறவு இல்லை எனத் த.மா.கா. தலைவர் இன்றைய பேட்டியில் கூறியுள்ளபடி காமராசர் ஆட்சி என்பதுதான் மீண்டும் குறிக்கோளா? ஒன்றுமே விளங்கவில்லை, பராபரமே! மாற்று முகாமில் இதுபோன்ற குழப்பம் இன்னும் தொடர்கிறது!

உடன்பிறப்பே, உனக்கும், எனக்கும் குழப்பமில்லை - நமக்கு பாதை தெளிவானது - நமது அணி வலிவானது - உறுதியானது. மேலும் கூர்மைப்படுத்துவதற்கும், உறுதியாக்குவதற்குமான உணர்வுக்கும், ஊக்கத்திற்கும் குறைவில்லை! அதற்கான உற்சாகத்தைத் தரவல்லதாக இந்த இடைத்தேர்தல் வெற்றி அமைந்துள்ளது.

இந்த வெற்றியால் நமக்கு விளையக் கூடாதது மெத்தனப் போக்கு! ஆம்! இனிக் கவலையில்லையென்ற அலட்சிய மனப்பான்மை! இவை விளைந்தால், வளைந்துவிடும் தமிழகம் வஞ்சக ஊழல் வடிவங்களின் நுழைவால்!

எனவே விளையவேண்டியது, ஆரவாரமற்ற அடக்கம் - அமைதியான அணுகுமுறை - அறிவார்ந்த வகையில் விளக்கமளித்து மக்களை மேலும் மேலும் திரட்டுகிற ஆர்வம்! தமிழகம் வாழ்ந்திட - அதுவே வழி! அது ஒன்றே உகந்த வழி!

அன்புள்ள,

மு. க.

(28-02-2000)

2505. நீ கற்பனை செய்தால்; நான் பொறுப்பல்ல!

உடன்பிறப்பே,

ஒரு வேடிக்கைக் கதை சொல்லட்டுமா? கதையைப் படித்துவிட்டு நீ சிரிக்காவிட்டால் அது என் குற்றமல்ல! சே! இதுதானே - எனக்கே தெரிந்த விஷயம்தானே! என்று நீ சொல்லி விடுவாய் என்பதையும் நானறிவேன். இருந்தாலும் இந்தக் கதையை, நீ சிரித்தாலும், சிரிக்காவிட்டாலும் - அல்லது விழுந்து விழுந்து சிரித்தாலும் - ஏன்? விலா நோகச் சிரித்தாலும் எப்படியாயினும், இந்தக் கதையை நான் சொல்லியே ஆகவேண்டும். சிரிப்பதில் எத்தனை வகை உண்டு என்பதை நகைச்சுவைச் சக்கரவர்த்தி கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள், ஒரு படத்தில் சிரித்துக் காட்டும் ஒரு பிரபலமான பாடலையே பாடியுள்ளார்.

இந்தக் கதையைப் படித்துவிட்டு நீ சிரிக்கப் போவது எந்த வகைச் சிரிப்போ நானறியேன்! பீடிகை இருக்கட்டும், கதையைச் சொல் என்று நீ அவசரப்படுவாய் - அதற்காகவே அதைச் சொல்லி விடுகிறேன். சிரிப்பதும், சிரிக்காததும் உன்பாடு! உன்னுடன் சேர்ந்து இதைப் படிப்பவர்கள் பாடு!

இரண்டு மல்யுத்தக்காரர்களுக்கு இடையிலே பயங்கரப் போட்டி என்று பிரம்மாண்டமான விளம்பரங்கள் - போட்டி நடைபெறும் நாளை எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தனர். என்று வரும் அந்நாள்? காணவேண்டும் அந்தக் காட்சியை என்று துடித்துக்கொண்டிருந்த மக்களின் துடிப்பு அடங்கும் வண்ணம் மல்யுத்தப் போட்டி நடக்கும் நாளும் வந்தது.

பந்தய மைதானம் நிரம்பி வழிகிற அளவுக்கு மக்கள் வெள்ளமெனத் திரண்டனர். மல்யுத்தத்தில் யார் வெற்றி பெறுவார்கள் என்ற கேள்விகளும், பதில்களும் அந்தக்

கூட்டத்தினிடையே எழுந்து பரவி, அவை மெல்ல மெல்ல சவால்களாகவும் - சபதங்களாகவும் மாறிக்கொண்டிருந்தன.

எங்க ஆள்தான் ஜெயிப்பார்! அவரை ஜெயிக்க இதுவரை யாரும் பிறக்கவில்லை. மூணு ரவுண்டு நடக்கப் போகிற போட்டியுத்தத்திலே, எதிரியை மூணு ரவுண்டிலும் மண்ணைக் கவ்வ வைக்கப்போவது எங்க ஆள்தான்!

சும்மா, அலட்டிக்காதீங்க! இங்கே கூடியிருக்கிற கூட்டத்தைப் பாத்தீங்களா? இதிலே முக்கால்வாசிப் பேருக்கு உங்க ஆள் ஜெயிக்கக்கூடாது! எங்க ஆள்தான் ஜெயிக்கணும்னு ஆசை! அதனால எங்க ஆசைதான் நிறைவேறும்.

இந்த உரையாடல்கள் - அறைகூவல்கள் அந்த மைதானத்தில் பல பகுதிகளில் ஒலித்துக் கொண்டிருந்தபோது, போட்டி தொடங்குவதற்கான மணி அடிக்கப்பட்டு விட்டது.

செவ்வண்ண மின்னொளியால் மல்யுத்த மேடை ஜோதி மழை பொழிவது போல் காட்சி தந்தது. மைதானத்தில் ஆவல் மிகுந்த அமைதி. இரண்டு மல்யுத்தக்காரர்களும் ஒருவர் பின் ஒருவராக கம்பீரமாக ஓடிவந்து போட்டி மேடையில் ஏறினார்கள். முதலில் வந்தவன், மேடையின் நான்கு புறமும் சென்று மக்களை வணங்கி, பின்னர் மேடையைத் தொட்டு வணங்கி நின்றான். அடுத்து வந்து மேடையேறியவனோ, அலட்சியமாகக் கையை அசைத்துவிட்டு தனக்கே வெற்றி என்பதைப் போல இரு விரல்களை விரித்துக் காட்டிவிட்டு, இரு புஜங்களையும் தட்டிக்கொண்டு நின்றான்.

மோதிக் கொள்ளலாம் என்பதற்கானக் குறிப்பை போட்டியின் நடுவர் ஊதுகுழல் மூலமாக வெளிப்படுத்தினார். ஆரம்பத்தில் கடுமையான மோதல்தான். ஆனால் நேரம் ஆக ஆக அடக்கமான குணமுடைய மல்யுத்த வீரனின் கை ஓங்கத் தொடங்கியது. அவன்தான் வென்றிட வேண்டுமென எண்ணியவர்கள் பலத்த கையொலி செய்து அவனுக்கு மேலும் மேலும் உற்சாக மூட்டினர். அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத மற்றொரு மல்யுத்தக்காரன் போட்டி நடுவரைப் பார்த்து இந்த மக்களை அடக்கி வையுங்கள் என்று புகார் கூறினான். நடுவரும் கூட, வழக்கமில்லாத வழக்கமாக அவன் புகாருக்கு மதிப்பு கொடுத்து பொது மக்கள் யாரும் கைதட்டக் கூடாது என்று ஒலிபெருக்கி மூலம் கடுமையான உத்தரவு போட்டுக் கேட்டுக் கொண்டார்.

ஆயினும் பயனில்லை - மக்கள் கட்டுப்பட்டு அமைதி காத்த போதிலும் புகார் கூறிய மல்லன் போட்டியில் வென்றிட முடியவில்லை.

ஒருமுறைக்கு இருமுறை, இருமுறைக்கு மூன்று முறை அதே மைதானத்தில் தொடர்ந்து நடைபெற்ற அந்த மல்யுத்தப் போட்டியில், நடுவரிடம் புகார் கூறியே ஜெயித்துவிடலாம் என்று திட்டமிட்டுப் போரிட்ட அந்த ஆரவார மல்யுத்தக்காரன் மூன்றாவது முறையும் தோல்வியுற்று வீழ்ந்து நீண்ட நேரம் கழித்தே நடுவர் கைகொடுத்துத் தூக்கிவிட மெல்ல எழுந்து வேகமாக மேடையை விட்டு வெளியேற முடிந்தது.

நடுவரின் வேண்டுகோளுக்கிணங்க, அமைதி காத்த பெருங் கூட்டத்தினர் வாழ்த்து முழக்கங்களுடன் வெற்றி பெற்ற மல்யுத்த வீரனுக்கு மாலைகளை அணிவித்தனர். போட்டி ஏற்பாடு செய்த மன்றத்தின் சார்பாக அவனுக்குக் கோப்பையும், பதக்கமும் வழங்கப்பட்டது. வென்றவன் மக்களுக்கு மரியாதை கலந்து வணக்கத்தைத் தெரிவித்து, மன்றத்தினருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டு விடைபெற்றுச் சென்றான்.

திடீரென அந்தப் போட்டிமேடையில் தோற்றுவிட்ட மல்யுத்தக்காரன், கையில் ஒரு தீவட்டியுடன் வந்து நின்றான். கலைந்தவர்கள் போக மிஞ்சிய சில நூறு பேர்கள் ஆவலுடன் வாய் பிளந்துகொண்டு அவன் என்ன சொல்லப் போகிறான் என்று ஆர்வத்துடன் அவனிடம் ஓடினர்.

மகாஜனங்களே! நான் தோற்கவில்லை! தோற்கவே இல்லை! உண்மையில் அந்தக் கோப்பையும் பதக்கமும் எனக்குச் சேரவேண்டியவை! ஆம்! என்னுடையவை! அதை அவன் வெற்றி பெற்றதாகச் சொல்லி என்னிடமிருந்து பறித்துக் கொண்டான்! நீங்கள் எல்லாம் கண்ணால் பார்த்தீர்களே! நான்தானே ஜெயித்தேன் - நான் மூன்று முறையும் விழுந்ததாக நடுவர் சொன்னது தப்பு! ஆரம்பத்திலேயே இந்த நடுவர், அவனை வெற்றி பெற்றவனாக அறிவிப்பதற்குத் தயாராக இருந்தவர் - அதனால்தான் நான் தோற்றுவிட்டதாக அறிவித்து, அவரும் சேர்ந்து என் கோப்பையையும், பதக்கத்தையும் பறித்துக் கொண்டார்கள். போட்டி மேடையில் அடிபட்டு விழுந்தது நானல்ல! அந்த நடுவர், தானே விழுந்து விட்டு, அவரே ஒன்று, இரண்டு, மூன்று என

எண்ணிக்கொண்டு - அவரால் எழுந்து நிற்க முடியாமல் - என்னைப் பார்த்து தோல்வி அடைந்துவிட்டதாக அறிவித்துவிட்டார். அதை நம்பாதீர்கள் நம்பாதீர்கள்!

இப்படிக் காட்டுக்கூச்சல் போட்டான் தோற்றுப்போன அந்தப் போர்வழி!

அதற்கும் கை தட்டுவதற்கு அந்த நூறு பேரில் ஒரு சிலர் இருந்தார்கள்! மற்றவர்களோ முகத்தைச் சுளித்துக்கொண்டும், உதட்டைப் பிதுக்கிக் கொண்டும் அங்கிருந்து மெல்ல நழுவிச் சென்றனர்!

இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டு வெற்றி பெற்ற வீரன், தனக்குள் சிரித்துக் கொண்டான்.

இக்கதை கேட்டு நீ சிரிக்கிறாயோ இல்லையோ, இந்தக் கதைக்கும் அறந்தாங்கி, திருச்சி, நெல்லிக்குப்பத்துக்கும் ஏதோ ஒரு பொருத்தம் இருப்பதாக நீ கற்பனை செய்து கொண்டால் அதற்கு நான் பொறுப்பல்ல!

அன்புள்ள,

மு. க.

(05-03-2000)

2506. நலிந்தோர்க்கு நல்விருந்து படைப்பீர்!

என் உயிரினுமேலான அன்பு உடன்பிறப்பே,

வரும் ஜூன் மூன்றாம் நாள் என் பிறந்த நாள். என்னுடைய பிறந்த நாள் என்று மட்டும் சொல்லிவிட்டு, சந்தடிசாக்கில் என் வயது எழுபத்தி ஏழு தொடங்குகிறது என்ற உண்மையை மறைத்துவிட முடியுமா என்ன!

காட்டாற்று வெள்ளப் பெருக்குகளில் எதிர் நீச்சல் போட்டு - காடு, மலை, வனாந்திரங்களில் கால்தேயப் பயணித்து - பாறாங்கற்களைப் பாதையில் உருட்டும் சூறாவளிகள், பூகம்பங்கள், பாலைவனத்தில் பார்வையை மறைக்கும் பெருங்காற்று - இவற்றுக்கு ஈடுகொடுத்து, விஷந்தோய்ந்த விமர்சனக் கணைகளை விலாப்புறத்தில் ஏந்தி - வேதனைகள், சோதனைகள் விநாடிக்கு விநாடி துளைத்தெடுப்பதையும் தாங்கிக் கொண்டு - வியர்வைக்கும், உழைப்புக்கும் மரியாதை கொடுத்து, வலுவற்ற உடலில் வலுவான கொள்கைகளை மட்டும் உரமாகக் கொண்டு வளர்ந்த ஒருவன் எழுபத்தியேழுவரை வாழ்ந்து விட்டேன் என்பது எனக்கே வியப்பூட்டும் செய்திதான். எனவே உடன்பிறப்பாகிய நீ மகிழ்வதிலும், மனமார வாழ்த்துவதிலும் வியப்பு ஏதுமில்லைதான்.

பெரியாரின் தொண்டனாக, மாணவனாக, பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக நாட்டுக்கு அறிமுகமான எனக்கு, உன்போன்றோர் உடன்பிறப்புகளாக வாய்த்ததைவிட, வேறு ஒரு பேறு என்ன இருக்க முடியும்?

எனக்கு எழுபத்திஏழு என்றதும் இதனை எவ்வண்ணம் கொண்டாடலாம், விழாவுக்கு எப்படி அழகு சேர்க்கலாம், எத்தகைய சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தலாம், எத்தனை வாகனங்களில் சென்னைக்கு புறப்படலாம் என்றெல்லாம் நீயும், ஏனைய உடன்பிறப்புகளும் திட்டம் தீட்டுகிற தகவல் எனக்குக் கிடைக்காமலில்லை. அதிலும் கழக அமைப்புகளில் புதிதாகப்

பொறுப்புக்கு வந்தவர்களின் ஆர்வம் புதுவெள்ளம்போல் பொங்கிடும் என்பதையும் நன்கு அறிவேன்.

ஆனால் என் வேண்டுகோளைப் புறக்கணிக்காமல், நீயும், மற்ற உடன்பிறப்புகளும் வீணே அலையாமல் - சென்னைக்கு வருவதைத் தவிர்த்து, ஆங்காங்கு என் பிறந்த நாளைக் கொண்டாடி மகிழ வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். ஆம்! அந்த நாள், நமது கழகக் கொள்கை விளக்க நாளாக அமைய வேண்டும், கழக ஆட்சியின் சாதனைகளை விரித்துரைக்கும் நாளாக இருந்திடல் வேண்டும்.

1988-ஆம் ஆண்டு என் பிறந்தநாள் முதல் ஆண்டுதோறும் மரக்கன்றுகள் நடும் பணியினை ஆற்றிக் கொண்டு வருகிறாயல்லவா? அது இந்த ஆண்டும் தொடர வேண்டுகிறேன்.

நீயும், நமது இயக்கச் செயல்வீரர்களும் ஊரிலேயே இருந்து கொண்டு வசதிக்கேற்ப நூறுபேரிலிருந்து ஆயிரம் பேர் வரையில் ஏழை எளியோருக்கு உணவு படைக்கும் அரிய தொண்டினை ஆற்றலாமே! அந்த நல்லோரின் வாழ்த்துகள் உன்னையும், என்னையும், கழகத்தையும் மகிழவைக்குமே!

எனவே சென்னைக்கு வரும் எண்ணம் விடுத்து, வாகனச் செலவுகளை மிச்சப்படுத்தி சமூகநலப் பிரச்சினைகளில் முழுக் கவனத்தையும் அன்றைக்குச் செலுத்திடுமாறு விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அவற்றில் ஒன்றுதான் நலிந்தோர்க்கு நல்விருந்து படைப்பதுமாகும்.

நீ அப்படித்தான் சொல்வாய். நான் நேரில் வந்து பார்த்தே தீருவேன் என்று தயவு செய்து அடம்பிடிக்க வேண்டாம். நான் வந்து உன்னையும் மற்ற உடன்பிறப்புகளையும் பார்ப்பது என்பது மிக எளிதானதாக இருக்கும்போது, என் வேண்டுகோளை மறுக்காமல் என் பிறந்த நாளில் ஆற்றவேண்டிய சமூகநலக் கடமைகளை இருந்த இடத்திலிருந்தே ஆற்றிடுமாறு கைகூப்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(23-05-2000)

2507. “அசுவத்தாமா! அதகா குஞ்சரகா”!

உடன்பிறப்பே,

பாரதக் கதையில் ஒரு கிளைக்கதை சொல்வார்கள். பாரதப் போர் நடந்து கொண்டிருக்கும்போது துரோணரை வீழ்த்துவதற்கு வழி என்ன என்று கண்ணன் யோசித்தானாம். துரோணருக்கு அவரது மகன் அசுவத்தாமன் மீது அளவு கடந்த பற்றும் பாசமும் - அதனால் அவன் போரில் மடிந்து விட்டதாக ஒரு பொய் சொன்னால் துரோணர் கலங்கிப் போய் களத்தில் தோற்று விடுவார் என்று கண்ணன் கருதினான். அந்தப் பொய்யை தருமர் சொன்னால்தான் துரோணர் நம்புவார் என்று கண்ணனுக்குத் தெரியும். தர்மரோ பொய் சொல்ல மாட்டார். அதற்காகக் கண்ணன் என்ன செய்தான் தெரியுமா? போரில் அசுவத்தாமன் என்ற பெயருடைய யானை இறந்து விட்டதாக தர்மரிடம் கூறினான். அதைத் தர்மரைத் திரும்பவும் கூறுமாறு கேட்டுக் கொண்டான். தர்மரும் ஒப்புக் கொண்டு அசுவத்தாமா அதகா குஞ்சரகா! என்று உரக்கக் கூவினார். உடனே கண்ணன் தந்திரமாக, குஞ்சரகா என்ற வார்த்தை மட்டும் வெளியே கேட்காமல் தனது சங்கை எடுத்து குஞ்சரகா என்ற ஒலியை மறைக்கும்படியாக உரக்க ஊதிவிட்டானாம். அசுவத்தாமா! அதகா! என்பதுமட்டும் துரோணர் காதில் விழவே, அசுவத்தாமன் இறந்து விட்டதாக நம்பி புத்திர சோகத்தால் துரோணர் களத்தில் மயங்கி நின்று பாண்டவர்களிடம் தோற்று வீழ்ந்து விட்டார்.

குஞ்சரகா என்றால் யானை. அதகா என்றால் வீழ்த்தப்பட்டதாகப் பொருள். அசுவத்தாமா அதகா குஞ்சரகாவில் குஞ்சரகாவைக் கண்ணன் மறைத்து விட்டதைப் போலவேதான் - பனகல் பூங்காவில் என் பிறந்த நாள் விழாப் பேச்சில், பாதியை மறைத்து விட்டு சில பத்திரிகைகள் விஷம விளையாட்டு விளையாடிக் கொண்டிருக்கின்றன.

பனகல் பூங்காவில் நான் பேசியது என்ன? தொடர்ந்து விடுத்த விளக்க அறிக்கையின் விபரம்தான் என்ன?

இலங்கையில் ரத்தம் சிந்துகிற கொடுமை நின்று, அமைதி நிலவ வேண்டும் என்று மனித இதயம் உள்ள எல்லோரும் நினைப்பது இயல்பு!

அந்த இயல்புக்கு மாறாக என்னால் சிந்திக்க முடியுமா?

ஆண்டாண்டு காலமாக இலங்கையில் ஈழத் தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு அதற்காக அறவழிப் போராட்டங்கள் நடைபெற்றன என்பது வரலாறு அல்லவா? அஃதென்ன வெறும் வறட்டுக் கற்பனையா? இல்லையே! கொடுமைகள் அதிகமாகி, வெளிக்கடை சிறைச்சாலைகளின் சித்ரவதைகள் தொடர்கதையாகி - உடமைக்கு, உயிருக்கு, ஏன் கற்புக்கு, மானத்துக்கு அங்கே தமிழனுக்கு உத்திரவாதமில்லை என்ற நிலை எழுந்த பிறகு - விரும்பத்தகாத வன்முறைச் செயல்கள் அந்தத் தீவில் தோன்றியதையும் நடுநிலையாளர்கள் யாரும் கண்டு கொள்ளாமல் விட்டுவிட முடியாது. ஆனால் அத்தகைய வன்முறைகள் இந்திய நாடு வரையில் - குறிப்பாக தமிழ்நாடு வரையில் பரவியதுதான் வேதனைக்கும், வன்மையான கண்டனத்துக்கும் உரியவை ஆயின என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

இன்றைய நிலை என்ன? இன்னமும் இரத்தம் சிந்தும் போர் நின்றபாடில்லை. நமது இந்திய அரசு இலங்கை அரசுக்கு உதவியாக இராணுவம் அனுப்புவதில்லை என்று முடிவெடுத்து அறிவித்துவிட்டது. தேசிய ஜனநாயக கூட்டணி அரசு எடுத்துள்ள இந்த முடிவை இந்தியாவில் உள்ள எல்லாக் கட்சிகளும் ஆதரித்துள்ளன. பல்லாயிரக்கணக்கான உயிர்களை இருபுறமும் பலி கொண்டும் - ஆயிரக்கணக்கான அகதிகளைத் தமிழகம் தாங்க வேண்டிய நெருக்கடிக்கு உள்ளாக்கிக் கொண்டும் - கொடுந்துன்பத்தின் உச்சகட்டமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற இந்த யுத்தம் நின்று அந்தத் தீவில் அமைதி ஏற்பட வேண்டுமென்று நல்லோர் பலரும் கருதுவது போலவே நமது கழகத்தின் சார்பில் நானும் கருதினேன்! அவரவர்களும் சொன்ன அல்லது சொல்கிற வழிமுறைகளைப் போலவே நானும் சில யோசனைகளைச் சொன்னேன்.

"மணவாழ்வில் மனக்குறை ஏன் வந்தது? அதை ஆராய வேண்டும். அதைத் தீர்க்க முடியுமா? முடியாதா? அதை இலங்கை அரசுதான் தீர்மானிக்க வேண்டும்".

என்றுதான் பனகல் பூங்காவில் ஜூன் 3-ஆம் நாள் நான் பேசினேன்.

இவ்வாறு நான் பேசியது தேசிய ஜனநாயக கூட்டணி (N.D.A.) யை வற்புறுத்திக் கூறப்பட்ட கருத்துமல்ல! இந்திய மத்திய அரசுக்கு விடப்பட்ட கோரிக்கையுமல்ல!

கொடுக்க வேண்டிய உரிமைகளைக் கொடுத்து அரசியல் தீர்வு, நிரந்தரத் தீர்வு (Permanent Solution) காண முன்வாருங்கள் என்று இலங்கை அரசை - இலங்கை மக்களை கேட்டுக் கொள்வதிலே எந்தத் தவறும் இருக்க முடியாது.

செக்கோஸ்லோவேக்கியாவைப் போல தனி நாடு அமைவதுதான் தீர்வா? - அல்லது இலங்கை அரசு இறங்கி வந்து தமிழர்களுக்குத் தேவையான உரிமைகளையெல்லாம் கொடுப்பேன் என்று சொல்வதுதான் தீர்வா என்ற கேள்விக்கு விடை கண்டாக வேண்டும்.

பனகல் பூங்காவில் இவ்வாறு ஆற்றிய உரையைத் தொடர்ந்து நான் விடுத்த விளக்க அறிக்கையில் கூட,

அரசியல் தீர்வு என்பது என்ன? குவாசி பெடரலா? கான்பெடரலா? அல்லது செக்கோஸ்லோவேக்கியா மார்க்கமா? இதில் எந்த மார்க்கத்தை இரு சாராரும் ஒப்புக் கொண்டாலும் இந்தியாவுக்கோ, தமிழ் நாட்டுக்கோ, தெற்கு ஆசியாவுக்கோ எந்த ஆபத்தும் வந்துவிடாது.

என்று மூன்று வகையான யோசனைகள்தான் சொல்லப்பட்டதே தவிர, தேசிய ஜனநாயக கூட்டணி அரசு இந்த யோசனையை எடுத்துப் போட்டுக் கொண்டு செயல்பட வேண்டுமென்று வலியுறுத்தவில்லை.

சொல்லப்பட்ட கருத்து, இலங்கை அரசுக்கு விடுத்த கருத்தே தவிர - தேசிய ஜனநாயக கூட்டணி மீது திணிக்கப்பட்ட கருத்து அல்லவே அல்ல!

“நான் மீண்டும் சொல்கிறேன்! ஏதாவது ஒரு மார்க்கத்தை தேர்ந்தெடுத்து அரசியல் தீர்வு கண்டு போரை நிறுத்துங்கள். தமிழ் நாட்டுக்கு அகதிகளை அனுப்பி எங்களை அவதிப்பட வைக்காதீர்கள். இந்தியாவின் கொல்லைப் புறத்தில் அமைதி தவழட்டும்”.

என்றே நான் பனகல் பூங்கா பேச்சிலும் சரி, அதையொட்டிய விளக்க அறிக்கையிலும் சரி, திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறேன்!

ஆனால் இங்கே சிலர், ஏன் சில ஏடுகள், பழைய பாரதக் கதையில் வரும் அசுவத்தாமா! அதகா குஞ்சரகா! பாணியில் என் பேச்சையும், விளக்கத்தையும் பாதியில் மறைத்து விட்டு காணப் போகும் பலன்தான் என்னவோ?

அன்புள்ள,

மு. க.

(11-06-2000)

2508. மருந்தென உணர்ந்து மடல் தீட்டுகிறேன் - (1)

உடன்பிறப்பே,

செப்டம்பர் முதல் நாள் தொடங்கி உனக்குக் கடிதம் எழுதிட வேண்டுமென்று இருந்தேன். கன்னட நடிகர், டாக்டர் ராஜ்குமார் அவர்கள், கடத்தப்பட்ட நிகழ்ச்சியினைத் தொடர்ந்து அடர்ந்துவிளைந்த பணிகளின் காரணமாக இயலாமற்போயிற்று. பெரியார், அண்ணா, கழகம் பிறந்த நாட்களை செப்டம்பர் 15-16-17 ஆகிய நாட்களில் வழக்கம்போல் சென்னை மாநகரில், முப்பெரும் விழாவாகக் கொண்டாட தலைமைக் கழகத்தின் சார்பிலேயே எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு, அந்த முப்பெரும் விழா கண்டிட முத்தான என் உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுக்காமல் இருந்துவிட்டால் இந்த அண்ணன் மீது கடுங்கோபம் கொள்வாயல்லவா! கொற்றக் குடையின் ஆணைக்கோ, ஆதிக்கக் குரலுக்கோ, ஆரவார மிரட்டலுக்கோ குனிந்து கொடுக்கும் பழக்கமில்லாத நான், உன் கோபங்கண்டு மட்டுமே குனிந்து கொடுக்கும் இயல்புடையோன் - அத்தகைய இனிய பாசம் உன்பால் உடையோன் என்பது நீ அறியாதது அல்லவே!

அதனால் துளைத்தெடுக்கும் கணைகளென ஆயிரம் தொல்லைகளுக்கிடையிலேயும், உனக்குக் கடிதம் எழுதினால் அதுவே கணைகள் துளைத்திட்ட காயங்களுக்கு ஏற்ற மருந்தென உணர்ந்து மடல் தீட்டுகிறேன்.

கர்நாடக, தமிழகக் காடுகள் - வீரப்பனின் கடத்தல்கள் - அவற்றின் ஒரு கட்டமாகக் கன்னடத்துப் பெரும் நடிகர், டாக்டர் ராஜ்குமார் அவர்கள், வீரப்பன் கூட்டாளிகளால் வீரப்பன் தலைமையில் கடத்தப்பட்டு இன்றுடன் நாற்பது

நாட்கள் ஓடிவிட்டன. கர்நாடகக் காவல்துறையினரும், தமிழகக் காவல்துறையினரும் ராஜ்குமார் அவர்களை முன் கூட்டியே எச்சரிக்கை செய்திருக்கிறார்கள் - காவல் துறைக்குத் தகவல் சொல்லாமல் எங்கும் பயணம் மேற்கொள்ள வேண்டாம் என்று வற்புறுத்திக் கூறியிருந்தும் கூட, ராஜ்குமார் அவர்கள் தனக்கேயுரிய எளிமையின் காரணமாகவும் - நாம் யாருக்கு என்ன தீங்கு செய்தோம்? நம்மை யார் என்ன செய்ய போகிறார்கள் என்ற தன்னம்பிக்கையின் உச்சத்தின் காரணமாகவும் காவலர்கள் துணை தேவையில்லையென்று ஒதுக்கித் தள்ளிவிட்டதின் விளைவாக, வீரப்பனால் வெகு எளிதாகக் கடத்தப்பட்டு விட்டார்.

செய்தி கர்நாடகத்தைக் கதிகலங்கவைத்தது. தமிழ்நாட்டு மக்களை கவலைக் கடலில் ஆழ்த்தியது. முள்ளிலே சேலை விழுந்துவிட்டது, கிழியாமல் எடுத்தாக வேண்டுமே என்ற நெஞ்சத்துயருடனும் - நிதானத்துடனும் செயல்படுவதற்குத் தமிழக அரசும், கர்நாடக அரசும் அதற்கேற்பப் பணி தொடங்கின. தொடங்கிய பணி தொடர்ந்து கொண்டுமிருக்கிறது.

இதற்கிடையே சிலர், இந்த விபரீத நிகழ்ச்சியை விளையாட்டாக ஆக்கிக் கொண்டு வேடிக்கை காட்டுகின்றனர். விதூஷகத்தனம் செய்கின்றனர். வீரப்பனைச் சுட்டுத் தள்ளி விட்டு, ராஜ்குமாரை மீட்டு வருவதற்கு எவ்வளவு நேரமாகும்! என்கின்றனர். வீரப்பனின் பிடியில், ராஜ்குமாருடன் அவருடன் மூன்று பேரும் சிக்கிக் கொண்டிருக்கும்போது, ராஜ்குமாருக்கோ அவருடன் இருப்பவர்களுக்கோ உயிர்ச் சேதம் எதுவுமின்றி மீட்கப்பட வேண்டுமே என்ற பதைப்பும், பரபரப்பும் இவற்றுக்கு மேலாக இருக்க வேண்டிய மனித நேய உணர்வும் ஒரு துளியுமில்லாதவர்களின் வரட்டுக் கூச்சலுக்கு வடிகால்தான் ஏது? குழந்தையின் தலையில் ஊர்ந்து செல்லும் வண்டினை மெல்லக் கையால் எடுத்து வீசுதல் சரியா? அதற்கு மாறாகச் சுத்தியல் கொண்டு வண்டினை வதைக்கிறேன் என்று குழந்தையின் மண்டையைப் பிளப்பது சரியா? இதை உணர்ந்து பார்த்து ஆழமாகச் சிந்திப்பவர்கள் எவராயினும் அவர்கள், வீரப்பனைப் பிடிக்க முடியாத கையாலாகாத அரசுகள் என்று கருதவும் மாட்டார்கள். கட்டுரைகள் தீட்டவும் மாட்டார்கள். வண்டினை அகற்றிடவே நிதானப் போக்கு தேவைப்படும்போது, வலைவீசி வளைத்துப் போட்டுக் கடத்தியுள்ள ஒரு பயங்கர நிகழ்ச்சியில்,

எடுத்தேன்! கவிழ்த்தேன்! என்று நடவடிக்கைகளில் ஈடுபட்டால் நமது முதலுக்கே மோசம் வந்துவிடுமேயென்று சிந்தித்துச் செயல்படுவது கோழைத்தனமா? அல்லது சில அறிவு ஜீவிக் கட்டுரையாளர்கள் குறிப்பிட்டிருப்பது போல பேடித்தனமா?

உடன்பிறப்பே, கர்நாடக முதல்வருடன் கலந்து பேசிட பெங்களூர் சென்றிருந்தபோது, நூறுக்கும் குறையாத செய்தியாளர்கள் சூழ்ந்து கொண்டு கேள்விச் சரங்களைத் தொடுத்தனர். ராஜ்குமார் பிரச்சினையில் தமிழக அரசும், நக்கீரன் கோபாலும் சரியாகச் செயல்படவில்லையென்றும், பொதுவாக வீரப்பனை எதிர்கொள்வதில் கர்நாடகத்துடன் தமிழக அரசு ஒத்துழைக்கவில்லையென்றும் ஒரு நிருபர் சற்றுக் கோபத்துடன் குற்றம் சாட்டிக் கேள்வி கேட்டார். அதற்கு நான் சொன்ன பதில் என்ன தெரியுமா?

> “இதே வீரப்பன் 1967 ஆம் ஆண்டு கர்நாடக வனப் பகுதியிலிருந்து ஒன்பது வன இலாக்கா அலுவலர்களைக் கடத்திக் கொண்டுபோய் மறைத்துவைத்திருந்தபோது தமிழக அரசின் இடைவிடாத ஒத்துழைப்புடனும், நக்கீரன் கோபால் அவர்களின் கடும் முயற்சியுடனும் தான் அந்த ஒன்பது அலுவலர்களும் மீட்கப்பட்டார்கள். எனவே இப்போது கூட ராஜ்குமார், தமிழக வனப்பகுதியில் கடத்தப்பட்டிருந்தாலும் இங்கே கடத்தப்பட்டாரே என்பதற்காக அல்ல, அவர் எங்கே கடத்தப்பட்டிருந்தாலும் 1997 ஆம் ஆண்டினைப் போலவே அவரை மீட்பதற்குக் கர்நாடக அரசுடன் இணைந்து செயல்படும் கடமை உணர்வு எங்களுக்கு உண்டு. அந்த உணர்வுடன்தான் இப்போது நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கிறோம் என விடையளித்து விட்டு மேலும் விளக்கிச் சொன்னேன்:-”
>
> “கர்நாடகத்தில் வாழ்கின்ற மக்களிடத்தில் அவர்கள் கன்னட மொழி பேசுகின்றவர்களாயிருந்தாலும், தமிழ் மொழி பேசுகின்றவர்களாக இருந்தாலும் அவர்களிடம் சகோதர உணர்வு வேண்டுமென்பதில், இன்று நேற்றல்ல நீண்ட நாட்களாக நான் அக்கறையுடையவன். கர்நாடகத்திற்கும், தமிழகத்திற்கும் இடையில் கொடுக்கல் வாங்கலில் (காவிரிப் பிரச்சினை) சிக்கல் இருக்கலாம், ஆனால் ஒருவருக்கொருவர்

பழிவாங்கும் எண்ணத்துடன் இருப்பார்கள் என்று நான் கருதவில்லை. ராஜ்குமார் பிரச்சினையை தமிழ்நாட்டு மக்களும், கர்நாடக மாநில மக்களும் ஒரே மாதிரிதான் சிந்திக்கிறார்கள். கர்நாடக மக்களின் வேதனையில் தமிழ்நாட்டு மக்களும் பங்கு போட்டுக் கொள்கிறார்கள். அதைத் தெரிவிப்பதற்காகத்தான் நான் இன்றைக்கு வந்திருக்கிறேன். முதல்வர் கிருஷ்ணா அவர்களைச் சந்திப்பதற்காக மட்டுமல்ல. இரு மாநில மக்களுக்குமிடையே இருக்க வேண்டிய சகோதர உணர்வு பட்டுப் போகாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும்தான் இந்தச் சந்திப்பு. அதே நேரத்தில் ராஜ்குமாரை விடுவிக்க வேண்டிய மிக முக்கியமான முயற்சிகளிலும் ஈடுபட்டிருக்கிறோம்."

உடன்பிறப்பே, இந்த நல்லெண்ணத்தை நடுநிலையோடு சிந்திப்பவர்கள் உணர்ந்து வாழ்த்தக்கூடும், வக்கிரமாகச் சிந்திப்பவர்கள் மட்டுமே வக்கணைகள் கூறித் திரிவர். நீண்டநாள் வயிற்றெரிச்சலைத் தீர்த்துக்கொள்ள ஒரு வாய்ப்பு கிடைத்ததே என்று வித்தாரம் பேசி அலைவர். காட்டிலிருந்து வீடியோ கேசட்டுகள், ஆடியோ கேசட்டுகள் கொண்டு வருவதைக் கூட காமெடி விமர்சனத்துக்கு உட்படுத்திடும் வேதனையை என்னவென்று கூறுவது! ராஜ்குமார் மீது அளவற்ற பற்றுப் பாசமும் கொண்டு தவிக்கும் அவரது ரசிகர்கள், குமுறிக்கொண்டு துடிக்கும் அவரது மன்றத்தினர் மற்றும் குடும்பத்தினர் இந்த ஒருமாத காலத்திற்கு மேலாக சற்று நிம்மதிப் பெருமூச்சுவிட்டு ஆறுதல் பெற்றிடவும், அமைதி தொடர்ந்திடவும், அமளியேதும் நிகழாவண்ணம் தடுத்திடவும் அந்த கேசட்டுகள் பயன்பட்டன என்பதை மறந்துவிடலாமா? கேலி, கிண்டல், கண்டனம் இவற்றுக்கு மாறாக, நெருப்பு வளைத்துக்குள் சிக்கியுள்ள கற்பூரத்தை எரிந்து போகாமல் எடுக்கும் வித்தையினை எவர் கற்றுத்தர முன்வரினும் ஏற்பதற்குத் தயார்தான் - ஆனால் எவரும் அதற்கு முன்வரவில்லையே!

கடைசியாக வேறு வழியின்றிப் பயன்படுத்த வேண்டிய ஆயுதத்தை, ஆரம்பத்திலேயே கையில் எடுக்க வேண்டாமென்றுதானே இரு அரசுகளும் இப்போது எடுத்துள்ள முயற்சிகளையே தொடர்கின்றன. இதைப் புரிந்து

கொள்ளாதவர்களுக்குத்தான் இந்த விளக்கங்கள் தேவை. புரிந்தும் புரியாதவர்கள் போல நம் மீது பகை கக்குவோர்க்கு விளக்கம் தேவைப்படாது. உன் போன்றோர் இந்த விபரங்களைத் தெரிந்துகொண்டாலே போதுமானது.

இக்கடிதத்தின் தொடர்ச்சியாக நாளையும் எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(10-09-2000)

2509. மருந்தென உணர்ந்து மடல் தீட்டுகிறேன் - (2)

உடன்பிறப்பே,

நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்ட பிரச்சினையை வைத்து, அதற்குக் கையும் காலும் கட்டிவிட்டு, மூக்கு முழிகளை அப்பி, ஒரு கலவரச் சூழ்நிலையில் தமிழர்களுக்கும், கன்னட மொழி பேசுகின்றவர்க்குமிடையில் அமளியை மூட்டிவிட்டு அந்த நெருப்பில் குளிர் காய்வதற்கு வழிகாண முடியுமா என்று ஒரு சில அரசியல்வாதிகளும், அங்கும் இங்கும் நடைபெறுகிற ஓரிரு ஏடுகளும் முனைந்து பாடுபடுவதைத் தெளிவாகவே உணர முடிகிறது. அப்படியொரு விரும்பத்தகாத நிலைமை ஏற்பட்டுவிடக் கூடாது என்பதிலே நானும், கர்நாடக முதல்வர் திரு.கிருஷ்ணா அவர்களும், அருமைத் தம்பி சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் அவர்களும் மிகுந்த அக்கறையுடன் இருந்து வருகிறோம்., எங்களைப் போலவே ராஜ்குமார் அவர்களின் துணைவியார் பார்வதம் அம்மையார் அவர்களும், அவர்களது பிள்ளைகளும் கருதுகிறார்கள் என்பது மட்டுமல்ல. கவலையெடுத்துக் கொண்டு காரியமாற்றுகிறார்கள் என்பதை அவர்களைக் காண்பதற்கு ரஜினி அவர்களும், நக்கீரன் கோபால் அவர்களும் பெங்களூரில் உள்ள அவர்களது இல்லம் சென்றபோது உணர்ந்து மகிழ்ந்திருக்கிறார்கள். அந்தக் குடும்பத்தாருக்கு ஆறுதல் சொல்ல நான் சென்ற போதும், ராஜ்குமாரைப் பிரிந்திருக்கும் துக்கத்துடன் இருக்கும் அவர்கள், கன்னட மொழிக்காரர்கள், தமிழர்களிடையே நிலவிட வேண்டிய ஒற்றுமை குறித்தும் நிரம்பவே அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பது அறிய முடிந்தது.

இரு மொழியினரிடையே இந்தப் பிரச்சினை காரணமாக சகோதர உணர்வு பட்டுப்போய்விடாமல் பார்த்துக் கொள்ள

வேண்டும் என்ற அந்த நோக்கம் முக்கியமானது என்பதை என் பெங்களூர் பயணத்தின்போது கர்நாடகச் செய்தியாளர்களின் கூட்டத்திலேயே தெரிவித்திருக்கிறேன். இரண்டு ஆடுகள் முட்டிக் கொண்டால் இரத்தம் குடிக்கலாம் எனக் கனவு காணும் ஓநாய்க் குணம் கொண்டவர்கள் சிலர்தான், அமளி முகிழ்க்காதா? ஆனந்தமாக நமது வியாபாரம் நடக்காதா? என்று நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டு எச்சில் வழிய எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

அதனால்தான் நான் பெங்களூர் சென்று வந்ததைக் கூடத் தங்களின் கற்பனைச் செய்திகளால் திசை திருப்பத் திட்டமிட்டு ஏதேதோ எழுதுகிறார்கள், பேசுகிறார்கள். என்னை என்னவோ அங்கே ராஜ்குமார் ரசிகர்கள் எல்லாம் சூழ்ந்து வந்து எதிர்த்து விரட்டியது போல இங்குள்ளோர் எழுதுவது எந்த அளவுக்கு உண்மைக்கு மாறான செய்தி என்பது மட்டுமல்ல, இது தேவையற்ற ஒரு புகைச்சலை இருசாராரிடம் ஏற்படுத்துமே என்று சிறிதளவும் கவலைப்படாமல் வெளியிடுகிற செய்தியுமல்லவா? பெங்களூரில் என்னை ராஜ்குமார் ரசிகர் மன்ற நிர்வாகிகளும் வந்து சந்தித்தனர். அவரை விரைவில் விடுவிக்கத்தக்க முயற்சிகளை மேற்கொள்வது பற்றி என்னுடன் கலகலப்பாகவே உரையாடினர். அங்குள்ள தமிழர்களிடம் ராஜ்குமார் அவர்கள், எவ்வளவு அன்புடனும், மகிழ்ச்சியுடனும் பழகினார் என்பதற்கானப் புகைப்படங்களையும் எனக்குக் காட்டினர். பெங்களூரில் ஒரே ஒரு கரும்புள்ளி என்று சொல்ல வேண்டுமேயானால், அங்குள்ள அ.தி.மு.க.தான் எனக்குக் கறுப்புக் கொடி காட்டப்படும் என்று அறிவித்திருந்தது. ஆனால் விமான நிலையத்திலும் சரி, நான் விதான் சௌதாவில் முதல்வர் கிருஷ்ணாவை சந்திக்கச் சென்ற வழியிலும் சரி, பின்னர் ராஜ்குமார் இல்லம் சென்று, ஆறுதல் கூறிவிட்டு பதினைந்து நிமிடங்களுக்கு மேல் அங்கிருந்தபோதும் சரி, அ.தி.மு.க.வின் கறுப்புக் கொடி ஒன்றைக் கூடக் காண முடியவில்லை. ராஜ்குமார் விடுவிக்கப்படுவதற்காக பெங்களூரில் முதல்வரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துகிற ஒரு முக்கியமான நிகழ்ச்சியில் கூட தங்களுடைய அரசியல் நாகரிகத்தை (?) காட்டிக் கொள்ள நினைத்து அந்த முயற்சியில் ஈடுபட முடியாமலே முடங்கி விட்ட அ.தி.மு.க.வின் குறுகிய மனப்பான்மைக்கு இதைவிடத் தக்க சான்று வேறு தேவையில்லை அல்லவா?

தி.மு.க. ஆட்சியில்தான் வீரப்பனின் இந்தக் கடத்தல் எல்லாம் - வீரப்பன் நடத்தும் அடாவடிச் செயல் எல்லாம்! ஆனால் எங்கள் ஆட்சியில் இதெல்லாம் நடந்தது உண்டா? என்று ஆட்சியிலிருந்த அம்மணியும், அப்போதிருந்த காவல்துறை அதிகாரிகள் சிலரும் கூட அறிக்கைகள் விட்டதையும், இன்னமும் விட்டுக் கொண்டிருப்பதையும் காண முடிகிறது.

உடன்பிறப்பே, ஒரு புள்ளி விபரம் தருகிறேன், படித்துப் பார். இந்தப் புள்ளி விபரம் இப்போது நடந்துள்ள சம்பவத்தை நியாயப்படுத்துவதற்காக அல்ல! ஏற்கனவே அவர்கள் ஆட்சியிலும், அதிகாரத்திலும் நடக்கவே இல்லையென்று பம்மாத்து செய்கிறார்களே! அந்த உளறலை உடைத்தெறிவதற்காகத்தான்.

நாட்டில் அம்மணியின் கொடியும், காட்டில் வீரப்பனின் கொடியும் பறந்து கொண்டிருந்த கடந்த கால ஆட்சியில் 3-7-1991 அன்று பென்னாகரத்தில் வங்கி கொள்ளை முயற்சியில் காவலர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

10-11-1991இல் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்த டெபுடி கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட்ஸ் திரு. சீனிவாஸ் என்ற ஐ.எப்.எஸ்., அதிகாரி தலை துண்டிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். இதுவும் கடந்த கால ஆட்சியிலேதான்!

20-5-1992இல் ராமாபுரம் காவல் நிலையம் தாக்கப்பட்டு ஐந்து காவலர்கள் கொலை செய்யப்பட்டனர். இருபது பேர் காயம் அடைந்தனர். இதுவும் கடந்த கால ஆட்சியிலேதான்!

14-5-1992இல், ஆம்! கடந்த கால ஆட்சியிலேதான் கர்நாடகத்தில் மீன்யம் அருகில் மைசூர் எஸ்.பி., அரிகிருஷ்ணா மற்றும் ஐந்து காவலர்கள் மறைந்திருந்து தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். 20 பேர் காயம் அடைந்தனர்.

9-4-1993இல் சுரைக்காய் மடுவு என்ற இடத்தில் கண்ணி வெடித் தாக்குதலில் 22 பேர் (ஐந்து பேர் காவல் துறையினர், இரண்டு வனத் துறையினர் உட்பட) கொலை செய்யப் பட்டனர். கோபாலகிருஷ்ணன் என்ற எஸ்.பி., உட்பட 13 பேர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நடைபெற்றதும் இப்போது திரிபுவாதம் பேசுகிறார்களே, அவர்களுடைய ஆட்சியிலேதான்.

அதற்கு அடுத்த மாதமே 24-5-1993 அன்று கர்நாடக எல்லையில் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் ஆறு கர்நாடக காவல் துறையினர் மரணம். மைசூர் எஸ்.பி. கோபால் ஹொசூர் உட்பட ஏழு பேர் காயம். இச்சம்பவத்தில் ஐந்து எஸ்.எல்.ஆர். துப்பாக்கிகளும், தோட்டாக்களும் போலீஸ் வசமிருந்து வீரப்பனால் கைப்பற்றப்பட்டது. இந்தத் துப்பாக்கிகள்தான் தற்சமயம் ராஜ்குமாருக்கு எதிராகத் திரும்பியுள்ளன.

4-11-93 அன்று போலீஸ் உளவாளி என்று சந்தேகிக்கப்பட்ட ஏழு பேர், சத்தியமங்கலம் காட்டுப் பகுதியில் மஞ்சுகும்மப்பட்டி என்ற இடத்தில் கொல்லப்பட்டனர்.

17-9-1994 அன்று எல்லைப் பாதுகாப்பு காவலர் ஒருவரும், தமிழக காவல் துறையினர் இருவரும் தமிழகத்தில் ஆசனூர் காவல் நிலைய எல்லையில் கைலாச பள்ளம் என்ற இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

8-10-1994 அன்று ஐந்து பழங்குடியினர், போலீஸ் உளவாளி என்ற சந்தேகத்தில், தமிழகத்தில் ஆசனூர் எல்லையில் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

8-8-1995 அன்று தமிழகத்தில் அதே ஆசனூர் காவல் நிலைய எல்லையில் போலீஸ் உளவாளி என்று சந்தேகிக்கப்பட்ட ஐந்து பேர் கைகள் கட்டப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.

9-8-1995 அன்று கர்நாடகத்தில் சாம்ராஜ்நகர் எல்லையில் புஞ்சனூரில் போலீஸ் உளவாளி என்று சந்தேகிக்கப்பட்ட ஐந்து பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

17-2-1996 அன்று தமிழகக் காவல்துறை தலைமைக் காவலர் செல்வராஜ் என்பவர் தமிழகத்தில் ஆசனூர் காவல் நிலைய எல்லையில் அரேபாளையம் என்ற இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். காவல்துறை கண்காணிப்பாளர் திரு. தமிழ்ச் செல்வன் உட்பட நான்கு காவல் துறையினர் படுகாயம் அடைந்தனர்.

இத்தனை சம்பவங்கள் நடைபெற்றதும் கடந்த கால ஆட்சியிலேதான். இது மாத்திரமா? கடந்த கால ஆட்சியிலே கடத்தல் சம்பவமே நடைபெறவில்லையா? 1991க்கும் 1996ஆம்

ஆண்டுக்கும் இடையே அவர்களின் ஆட்சியிலே நான்கு கடத்தல் சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. அந்த நான்குமே தமிழக எல்லையிலேதான் நடைபெற்றன.

15-1-1992 அன்று ஈஸ்ட் இந்தியா மைனிங் கம்பெனியின் மேற்பார்வையாளர் குப்பு ராஜ் என்பவர் கடத்தப்பட்டார். பர்கூர் காவல் நிலைய எல்லையிலே நடைபெற்ற நிகழ்ச்சி இது.

21-4-1992 அன்று அதே பர்கூர் காவல் நிலைய எல்லையில் ஜி.டி.பி. கிரானைட் கம்பெனியின் மானேஜர் கடத்தப்பட்டார். இதுவும் கடந்த ஆட்சியில் நடைபெற்ற சம்பவம்தான்.

1994ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் சிதம்பரநாதன் என்பவரும், மேலும் மூன்று பேரும் கடத்தப்பட்டு பிணைக் கைதிகளாக 25 நாட்கள் வைக்கப்பட்டிருந்தனர். இந்தக் கடத்தல் சம்பவம் நடைபெற்றதும் கடந்த கால ஆட்சியிலேதான். அதற்கடுத்த ஆண்டு, நவம்பர் 1995இல் மூன்று வனத்துறை அலுவலர் கடத்தப்பட்டனர். 19 நாட்களுக்குப் பிறகுதான் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். இந்தச் சம்பவம் நடைபெற்றதும் கடந்த கால அம்மணியார் ஆட்சியிலே தான்.

ஒட்டுமொத்தமாகக் கூற வேண்டுமேயானால், கடந்த கால ஆட்சியில் அம்மணியார் முதல் அமைச்சராக இருந்த போது வீரப்பன் குழுவினரால் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 95. ஆண்டுவாரியாக புள்ளி விவரம் - 1991 ஆம் ஆண்டு 3 பேர்; 1992 ஆம் ஆண்டு 20 பேர்; 1993 ஆம் ஆண்டு 49 பேர்; 1994 ஆம் ஆண்டு 14 பேர்; 1995 ஆம் ஆண்டு 8 பேர்; 1996 ஆம் ஆண்டு ஒருவர்.

இதில் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் 28 பேர், வனத்துறையினர் 3 பேர்.

மேலும் கடந்த கால ஆட்சியிலே வீரப்பனின் கூட்டாளிகளையெல்லாம் தாங்கள் கைது செய்ததாக அறிக்கை விட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் ஐந்தாண்டு கால ஆட்சியிலே அவர்கள் கைது செய்த வீரப்பனின் முக்கிய கூட்டாளிகள் அர்ஜுனன், அய்யந்துரை, ரங்கசாமி என்ற மூன்றே மூன்று பேர்தான். மற்றவர்கள் எல்லாம் சாதாரணமானவர்கள்.

ஆனால் தற்போது கழக அரசில், வீரப்பனின் முக்கிய கூட்டாளிகள் பன்னிரெண்டு பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இவற்றையெல்லாம் மறந்துவிட்டு அல்லது மறைத்து விட்டு அ.தி.மு.க. அம்மணியார், இப்போது வெளியிட்ட தனது அறிக்கையிலே -

> "மேலும் காலம் தாழ்த்தாமல் தமிழக, கர்நாடக மாநில அரசுகள் வீரப்பன் பதுங்கியுள்ள காட்டிற்குள் அதிரடிப்படைகளை அனுப்பி, தாக்குதல் நடத்தி அவனை சுட்டுத் தள்ளுவது அவசியமாகும். இதை இரு மாநில அரசுகளும் செய்ய முடியாவிட்டால் அவை உடனடியாக ராஜினாமா செய்ய வேண்டும் என்று கூறியிருக்கிறார்."

அவர் ஆட்சியிலே இருந்தபோது அதிரடிப்படைகளை அனுப்பி வீரப்பனை சுட்டுத் தள்ளுவதைத் தடுத்தது யார்?

அப்போதே அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் இப்போது இந்தக் கடத்தல் நாடகம் நடைபெற்றிருக்காதே?

தற்போது காட்டிற்குள் அதிரடிப்படையை அனுப்பினால், அடுத்த கணமே வீரப்பன், ராஜ்குமாருக்கும், மற்றவர்களுக்கும் ஆபத்து விளைவிக்க வாய்ப்பு ஏற்படுமல்லவா?

அப்படி ஒரு சம்பவம் நடக்க வேண்டும் என்பதுதான் அம்மணியாரின் விருப்பம்போலும்.

அந்தச் சம்பவம் நடைபெற வேண்டும், அதன் காரணமாக கர்நாடகாவில் உள்ள லட்சக்கணக்கான தமிழர்கள் மீது கன்னடர்கள் தாக்குதல் நடத்த வேண்டும், சட்டம் ஒழுங்கு பிரச்சினை இரண்டு மாநிலங்களிலும் ஏற்பட வேண்டும், அதைக் காரணமாகக் காட்டி, தான் எப்படியாவது ஆட்சிக்கு வந்துவிட வேண்டும் என்ற நப்பாசை தானே அவருக்கு. அவருடைய ஆட்சியிலேயும் நடைபெற்ற கடத்தல் சம்பவங்களை இங்கே நான் தொகுத்துக் காட்டியிருக்கிறேன். அப்போது அரசு சார்பாக, வீரப்பனைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று பிடித்தார்களா அல்லது அரசின் சார்பாக என்ன அறிக்கை விடப்பட்டது, அரசின் சார்பிலே கருத்து தெரிவித்தவர்கள் என்ன கூறினார்கள் என்பதெல்லாம் தமிழக சட்டப்பேரவை குறிப்பேடுகளில் இருக்கின்றன இன்னமும்!

உடன்பிறப்பே,

பெங்களூரில் நானும், முதல்வர் கிருஷ்ணா அவர்களும் மற்றும் இரு மாநில அமைச்சர்களும், அதிகாரிகளும் கலந்து பேசி எடுத்த முடிவு குறித்து அங்கே அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்று, இன்றைய சூழலில், இப்போதைய நடை முறையே சரியானது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இங்கேயும் தமிழகத்தில் அ.தி.மு.க. நீங்கலாக மற்ற அரசியல் கட்சித் தலைவர்களின் கருத்தும், இந்தப் பிரச்சினையைப் பொறுத்தமட்டில் ஒன்று போலவே இருப்பதறிந்து ஆறுதல் பெறுகிறேன்.

நேற்று சென்னையில் நடைபெற்ற ஆர்.எம்.வீ. பவள விழாவில் பேசிய அன்பு நண்பரும், த.மா.கா.வின் முக்கிய பிரமுகர்களில் ஒருவருமான முக்தா சீனிவாசன் அவர்கள், ராஜ்குமாரை விடுவிக்க தமிழக அரசும், கர்நாடக அரசும் எடுக்கின்ற முயற்சிகளைப் பாராட்டி, வகுக்கும் வியூகத்தைப் புகழ்ந்து இந்த நடவடிக்கையை ஆதரிக்கும் முகத்தான் மண்டபத்தில் குழுமியுள்ள அனைவரும் கையொலி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். கையொலியால் மண்டபம் அதிர்ந்தது. அதை நான் முக்தா சீனிவாசன் அவர்களின் கருத்தாக மட்டும் எண்ணவில்லை,திரு. மூப்பனார் அவர்களின் கருத்தாகவே ஏற்கிறேன். ஏனெனில் ராஜ்குமார் விவகாரம் குறித்த அவரது பேட்டிகளின் மொத்த விளக்கமாகவே முக்தாவின் பேச்சும் அமைந்திருந்தது.

அன்புள்ள,

மு. க.

(11-09-2000)

2510. அரங்கம் - கோட்டம் - அலைகடலோரம்!

உடன்பிறப்பே,

மூட மெளடீக இருள் திரையைக் கிழித்திட பகுத்தறிவு ஒளி விளக்கை ஏற்றி வைத்த தந்தை பெரியார் - தமிழ் இனத்தை அடையாளங்காட்டித் தன்மானத்துடன் வாழும் முறையை நெறியாக்கித் தந்த அறிஞர் அண்ணா - ஆதிக்க மற்ற சமுதாயம் அமைத்திடவும், இந்தித் திணிப்பை என்றும் எதிர்த்திடவும் - வன்முறை தவிர்த்து வறுமையை வென்றிடவும் - மாநில சுயாட்சி மத்தியில் கூட்டாட்சி எனும் கொள்கையை நிலைநாட்டிடவும் அரண் என அமைந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய நாட்களை முப்பெரும் விழாவாக எடுக்கும் நிகழ்ச்சிகளுக்கான முரசு கொட்டப்பட்டுவிட்டது.

விழா வெற்றிகரமாக நடைபெறத் தலைமைக் கழகத்தினரும், தம்பிகள் சைதை கிட்டு, பலராமன், பரிதி இளம்வழுதி ஆகிய மாவட்டச் செயலாளர்கள் தலைமையில் சென்னை மாநகரத்துக் கழகச் சிங்கங்களும், அணியினர் பலரும் செயற்களத்தில் இறங்கிவிட்டனர். சென்னை மாநகருக்கு வந்து விழாவொன்றில் கலந்துகொண்டு பல நாட்களாயிற்றே! நம் தமையனிடமிருந்து எப்போது அழைப்பு வரும் என எதிர்பார்த்துக் கொண்டிருந்த உன் போன்ற உடன்பிறப்புகள் உவகையால் கூத்திடுகின்றனராம் அழைப்பு வரப் போகிறதென்று! ஆமாம்! இதோ அழைப்பு உன் இனிய முகம் மகிழ்ச்சியால் மலர்ந்திட, உன் பாசக் கரங்களை நேசமுடன் தழுவிட வருகிறது! வந்தே விட்டது! அன்பழைப்பு!

உடன்பிறப்பே! அய்யா - அண்ணா - கழகம் பிறந்த நாட்களை ஒருங்கிணைத்து மூன்று நாட்கள் முப்பெரும் விழாவாகக் கொண்டாடுகிறோம்.

முதல் நாள் செப்டம்பர் 15 ஆம் நாள் மாலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில், இனமானப் பேராசிரியர் அவர்கள் தலைமையில் விழா தொடங்குகிறது.

மேல்நிலைப்பள்ளித் தேர்வில் உயர் மதிப்பெண்கள் பெற்ற மாணவ - மாணவியர்க்கு தி.மு.க. அறக்கட்டளை சார்பில் நிதியளிப்புடன் சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியை நான் நடத்தி வைக்கிறேன். அதனைத் தொடர்ந்து முரசொலி அறக்கட்டளை சார்பில் ஓர் அரிய நிகழ்ச்சி.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் ஒப்பித்தல் போட்டியில் மாநில அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரி, மற்றும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவ - மாணவியர்க்கு முரசொலி அறக்கட்டளை ஆண்டுதோறும் நிதியும், சான்றிதழும் வழங்குவதோடு - சிறந்த ஆட்டோ ஓட்டுநர்களுக்கான சான்றிதழும், ரொக்கப் பரிசும் வழங்குகிறதல்லவா! அந்த நிகழ்ச்சிக்கு மத்திய தொழில் வர்த்தக அமைச்சர் தம்பி முரசொலி மாறன் தலைமை தாங்குகிறார். முரசொலி அறக்கட்டளை அறங்காவலர்களான தம்பிகள் செ. குப்புசாமி எம்.பி., மிசா. ஆர். கணேசன், எஸ்.ஏ.எம். உசேன் ஆகியோர் முறையே, முன்னிலையுரை, வரவேற்புரை, நன்றியுரை ஆற்றுகிறார்கள்.

மாலை 7 மணியளவில் இந்த நிகழ்ச்சிகள் நிறைவுற்று அடுத்து முப்பெரும் விழா விருது வழங்கும் நிகழ்ச்சி அதே அரங்கில் தொடர்கிறது. பேராசிரியர் தலைமையில், கழகப் பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி, துணைப் பொதுச் செயலாளர்கள் தம்பி க. சுந்தரம், தங்கை சுப்புலட்சுமி ஜெகதீசன் ஆகியோர் முன்னிலையில், பெரியார் விருதினை என் இளமைக் கால நண்பர் திருவாரூர் தென்னனுக்கும், அண்ணா விருதினை அடலேறாம் தம்பி பரமக்குடி தங்கவேலனுக்கும், பாவேந்தர் விருதினைக் இலக்கிய அணிக் கண்மணி திருவில்லிப்புத்தூர் தம்பி அமுதனுக்கும், கலைஞர் விருதினை கொள்கைக் குன்றம் பெங்களூர் தம்பி திராவிட மணிக்கும் நான் வழங்கி உரையாற்றுகிறேன்.

அந்த நிகழ்ச்சியைத் தொடர்ந்து, அதே அரங்கில், சரியாக எட்டு மணிக்கு, முத்தரசியின் கலைக் கோயில் வழங்கும் சங்கத்தமிழ் நாட்டிய நாடகம், ஒரு மணி நேரம் நடைபெறுகிறது. அந்த

நாடகத்துக்கு கவிஞர்கள் சுரதா, அப்துல் ரகுமான், வைரமுத்து, ஈரோடு தமிழன்பன் முன்னிலை வகிக்கிறார்கள்.

சங்க காலத் தமிழ்க் குலத்தின் வாழ்க்கை, பண்பாடு, காதல், வீரம், இவற்றைச் சித்தரிக்கும் இசைப்பாடல்கள் கொண்ட இந்த நடன நாடகம், என்னால் எழுதப்பட்டு வெளி நாடுகள் உள்ளிட்ட பல இடங்களில் 150 நாடகங்கள் இதுவரை நடைபெற்றிருக்கிறது. எழுதி நடித்தபோது இருந்ததைவிட இப்போது பட்டை தீட்டப்பட்ட வைரமாக ஒளிவிடும் அந்த நடனக் காவியத்தை நீ காணப் போகிறாய் - ஆம்! சங்க காலத் தமிழகத்திற்கு ஒரு மணி நேரம் சென்று வரப்போகிறோம்.

அடுத்த நாள் செப்டம்பர் 16 ஆம் நாள், எங்கள் இனப்பகைவர் எங்கே ஒளிந்தார்? எனத் தோள் தட்டிக் கேட்கும் இளைஞர் அணியினர் முப்பெரும் விழாவுக்குப் பெரும் சிறப்பு சேர்த்திடும் வண்ணம் பல்கலை மேடை நிகழ்ச்சியொன்றை மாலை 6 மணிக்கு நடத்துகின்றனர். எங்கே தெரியுமா? நான் கட்டி முடித்த பிறகு, கண்ணைக் கட்டி என்னை வெளியே தள்ளிவிட்டுத் திறப்பு விழா நடத்தினார்களே மிசா மிராசுகள் அந்தப் புகழ்மிக்க வள்ளுவர் கோட்டத்தில்!

இளைஞர் அணிச் செயலாளர் தம்பி ஸ்டாலின் வரவேற்புரையாற்றிட அளிக்கப்படும் கலை விருந்துக்கு, அல்ல! அல்ல! மருந்துக்குப் பெயர்,

வேர்கள் விழுதுகள் என்பதாகும். திருச்சி கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரியினர் நடத்தும் புதிய கலை நிகழ்ச்சி - நானும் இதுவரை கண்டதில்லை. உன்னுடன் அமர்ந்துதான் கண்டுகளிக்க இருக்கிறேன்.

மூன்றாம் நாள் செப்டம்பர் 17 - முப்பெரும் விழா நிறைவு நாள். சென்னைக் கடற்கரை - காமராசர் சாலை - காந்தி சிலை அருகில் - மாபெரும் பொதுக் கூட்டம். உடன்பிறப்பே, நானே சொல்லிக் கொள்கிறேன் அது மாபெரும் பொதுக் கூட்டமென்று! நீயில்லாமல் அது எப்படி மாபெரும் கூட்டமாகும்? நீயும், உனையொத்த உடன்பிறப்புகளும், அவர்தம் குடும்பத்தினரும் வந்து பெருகினால்தானே அலை கடலோர மணற்பரப்பில் நடைபெறும் கழகத்தின் முப்பெரும் விழா கூட்டம் அக்கடலினை

வெற்றி கொள்ளும் என்பது எனக்குத் தெரியாதா? உனக்குத்தான் தெரியாதா?

என்றும் போல் இந்த ஆண்டும் முப்பெரும் விழா எடுக்கிறோம் என்றாலும்; இது தேர்தலை மனத்திற்கொண்டு எடுக்கும் விழா அல்ல! இதய சுத்தியுடன் என்றைக்கும் வணங்கி வாழ்த்துகிற நம் ஊனோடும், உயிரோடும், உயிர் மூச்சோடும் கலந்த பெரியாரை, பேரறிஞர் அண்ணாவை இந்த விழாவிலும் நெஞ்சில் நிறுத்தி சூளுரை மேற்கொள்ளப் போகிறோம்!

எனவே, தேர்தலுக்காக இந்த விழா அல்ல! விழா எடுப்பதையொட்டி சில மாதங்களில் தேர்தல் வர இருக்கிறது.அவ்வளவுதான்!

தேர்தலுக்காக அணிகள் தயாராகின்றன! தேர்தல் உத்திகள் ஆழமாகச் சிந்திக்கப்படுகின்றன! வியூகங்கள் வகுக்கப்படுகின்றன! எந்த அணி - எந்த வரிசை - ஆட்சி கூட்டாகவா அல்லது தனித்தா? இந்தத் தகராறு வலுத்துக் கொண்டே போகிறது... தமிழகமே அல்லோலகல்லோலப்படுகிறது! ஆனது ஆகட்டும், நன்றியுள்ள மக்கள் நம்மைக் கைவிட மாட்டார்கள், பச்சைக் கொடி எது? பச்சைப் பாம்பு எது? என்று அறிந்து செயல்படும் பக்குவம் பெற்றவர்கள், தங்களையும் காப்பாற்றிக் கொண்டு, தமிழ்நாட்டையும் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கையுடன் நாம் அமைதி காத்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் தேர்தல் வட்டாரங்கள் சிலவற்றில் பிடரியைப் பிடித்துத் தள்ளினாலும், உன் பின்னால்தான் வருவேன் என்று உறுதிபடக் கூறுகிற வீராதி வீரர்களைக் காண முடிகிறது! சில நேர்வுகளிலோ அய்யோ பாவம்; ஓங்கிய கை வலிக்கப் போகிறது எனக் கசிந்துருகி ஒத்தம் கொடுக்க ஓடிடும் பிரமுகர்களைப் பார்த்துப் பரிதாபப்பட வேண்டியிருக்கிறது.

உடன்பிறப்பே, இந்தக் காட்சிகளையெல்லாம் கண்ணுறும்போது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு நான் எழுதிய ஒரு காவியக் கதைதான் என் நினைவுக்கு வருகிறது. அமிர்தமதி என்பது அக்கதையின் தலைப்பு. சுகம் எங்கே? என்ற ஒரு தலைப்பில் கூட அதே கதை முரசொலியில் அப்போது வெளியாகியிருக்கிறது. அந்தக் கதை முழுவதையும் இப்போது

உனக்கு எழுதிக் காட்டாவிடினும், ஓரிரு பகுதிகளை மட்டும் உன் கவனத்திற்குக் கொண்டு வருகிறேனே! என் நண்பர் ஒருவனிடத்தில் அக்கதையைச் சொல்வது போல் அமைந்த எழுத்தோவியம் அது! நண்பன் குறுக்கிட்டுப் பேசுவது உட்பட, அப்படியே அந்தக் காவியக் கதையைச் சொல்லுகிறேன், கேள்! கேட்ட பிறகு இந்தக் கதையில் வரும் கதாபாத்திரங்கள் இன்றைய அரசியலில் யார் யாருக்குப் பொருந்துகிறது என்று நீ ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டால் அது உன் அறிவுத் திறனுக்கு எடுத்துக்காட்டே தவிர, என் மீது பழி போடுவதற்கு ஏதுமில்லை! இதோ, அமிர்தமதி அல்லது சுகம் எங்கே ஆரம்பமாகிறது!

"யசோதரன் அவந்தி நாட்டு மன்னன். அவனது பட்டத்து ராணி அமிர்தமதி. ராணியின் மனமறிந்து மகிழ்ச்சியளிக்கும் மன்னன்தான் யசோதரன். சுந்தரரூபன், சுகுமாரன். நாட்டுக்கு அதிபதி! அத்தகைய செங்கோலேந்தியின் சிற்றின்பக் கூடாரத்தை அலங்கரிக்கக்கூடிய பாக்கியம் அந்தச் சிங்காரி அமிர்தமதிக்குக் கிடைத்திருந்தது. மன்னவனின் மஞ்சத்து மயில் என்றால் சாதாரணமா? தாதிகள் உண்டு! தயவு கேட்டு நிற்கப் பல சேவகருண்டு! தங்கம் கலந்த உணவை உண்டு - அங்கம் பூரிப்பு கண்டு - காதல் மிஞ்சுதே சேடி - காவலனைக் கூப்பிட்டு வாடி! என்று அழைத்த கணமே அவர்கள் ஓடி, ஆடிப்பாடி அரசனை அழைத்து வருவர். ஆனை மேல் அம்பாரியா? அணி தேர்ச் சவாரியா? பூனை ரோமத்தால் மிதியடியா? புலிப்பாலா? புரவிக் கொம்பா? எது கேட்பினும் தருவர் - அதற்கெனவே எடுபிடிகள் ஏராளமாக உளர். இந்தச் செல்வாக்கின் மத்தியிலே செல்ல நடைபோடும் சேயிழையாள் அந்த அமிர்தமதி!"

ஆகா பிரமாத வர்ணனை! சொல்! இன்னும் சொல்!

அழகி அமிர்தமதியும், அரசன் யசோதரனும் ஒரு நாள் அந்தப்புரத்தில் இன்பக் கேளிக்கையில் ஈடுபட்டனர்.

ஓகோ! ஒய்யாரமான கட்டமே இப்போதுதான் ஆரம்பம் போலும் - சொல் நண்பா, சொல்!

கட்டிற் காவியம் எழுதி முடித்தனர் - கண் அயர்ந்தனர்.

சரிதான், சுருக்கமாக முடித்துவிட்டாய்! பிறகு காலையில் எழுந்தனர். அவ்வளவு தானே?

இல்லை இல்லை - அரசன் தூங்கும் சமயம், ராணி கண் விழித்தாள். ஆமாம்! மலர் விழித்துக் கொண்டது. வண்டோ தூங்கிக் கொண்டிருந்தது. விழித்த சமயம் அந்த இரவில் ஓர் இனிய கானம் அவள் காதில் ஒலித்தது!

சரி!

கானம் வந்த பக்கம் கருத்தைச் செலுத்தினாள். அந்தக் கானம் எழுப்பியவனைக் கட்டித் தழுவ வேண்டுமென்று துடித்தாள்!

அய்யய்யோ - அப்புறம்!

மறுநாள் தன் தோழி குணவதியை அனுப்பினாள். அர்த்த ராத்திரியில் பாடியவன் யாரென்று அறிந்து வர! தோழியும் போய் அவனைக் கண்டாள். இசையை எழுப்பியவன் ஒரு யானைப் பாகன். அவன் எப்படிப்பட்ட அழகுடையவன் தெரியுமா? தோழி வாயிலாகக் கவிஞர் கூறுகிறார் கேள் :-

நரம்புகள் விசித்த மெய்யன், திரங்கிய விரலன், கையன், சிறுமுகன், சீறிற் குரங்கினையனையன், கூனன், குழிந்து புக்கழிந்த கண்ணன்!

இன்னும் பலவாறாக அவனது விகாரங்களை வர்ணித்து, அவன் மீது ஆசை வைப்பது தகாது என்று ராணியிடம் தோழி கூறுகிறாள். அமிர்தமதியோ, அவன் எப்படியிருந்தாலும் கவலையில்லை. அவனை அணைத்து மகிழத்தான் வேண்டும் என்று பறக்கிறாள். கனியிருப்பக் காய் பறிக்கலாமா அம்மா! சகல அழகும் பொருந்திய அரசர் பெருந்தகையின் மனைவியாகிய நீங்கள், கேவலம் குரங்கைப் போன்ற - ஒரு சாக்கடை மனிதனைக் கொஞ்சிக் குலவ விரும்பலாமா தாயே! என்றெல்லாம் குணவதி தடுக்கிறாள். ஆனால் அரசியோ, அவன் எப்படியிருந்தாலும் எனக்கென்ன? அவன் நல்ல இசைவாணன் - அவன் அணைப்பிலேதான் சுகம் இருப்பதாக நான் உணர்கிறேன் என்று கூறியதோடு, அந்தப் பாடல் கற்ற யானைப் பாகனையும் வலிய இழுத்து, அணைத்து மகிழ்ந்தாள். நாளொரு மேனியாக அந்தக் காதல் வளர ஆரம்பித்தது. ஒரு நாள் அரசனே அவர்களது... காதல் களியாட்டத்தைத் தூர நின்று பார்த்துவிட்டான். அப்போது என்ன நடந்தது தெரியுமா? அரசன் எந்தக் காட்சியைக் கண்டான் தெரியுமா? வழக்கமாக யானைப் பாகனைச் சந்திக்கும் அமிர்தமதி அன்று சற்றுத் தாமதமாக

அவனிடம் வந்துவிட்டாளாம். அதற்காக அந்த யானைப் பாகன் - அட்டபங்கன் என்னும் பெயருடைய அந்த அவலட்சணம் - அமிர்தமதியின் அழகுக் கருங் கூந்தலைக் கையால் இழுத்து எறிந்து, அவளைக் கீழே தள்ளி, இரு கைகளாலும் நையப்புடைத்து ஏன் காலம் தாழ்த்தி வந்தாய்? என்று கனல் கிளம்பக் கேட்கிறான்.

கட்டளையிட்டால், காதம் யோசனை என்ற தூரம் ஓடிக் காரியமாற்றிடும் பணியாளர்களின் தலைவி - மண்டலாதிபதியின் மனைவி - ஒரு அழுகிய உடல் படைத்த யானைப்பாகன், தன்னைத் திட்டி அடிப்பதிலே சுகம் காண்கிறாள். அவள் மலர்ப் பாதங்களை அர்ச்சிக்க ஆயிரம் பேர் காத்திருப்பர் - அவள் அந்தப் பாகனின் கால்களைக் கண்ணில் ஒத்திக் கொண்டு காலந்தாழ்ந்தமைக்கு மன்னிப்புக் கோருகிறாள்.

நன்றாயிருக்கிறது - சந்தனத்தை மறுத்துச் சாக்கடையிலே சுகம் கண்ட ராணியின் கதை நன்றாயிருக்கிறது.

உடன்பிறப்பே, நண்பன் சொன்னதுபோல, நன்றாயிருக்கிறது! சந்தனத்தை மறுத்துச் சாக்கடையில் சுகம் காண்பவர் கதை நன்றாயிருக்கிறது என்று சொல்ல உனக்கும் தோன்றுகிறது அல்லவா?

என் செய்வது! இத்தகைய வேதனையான யதோதரா காவியங்கள் நடைபெறும் அரசியல் அரங்கத்தில்தான் நாம் சங்கத்தமிழ் நடை பயில வேண்டியிருக்கிறது. வேர்களை வலுவாக்கி விழுதுகளை வளர்க்க வேண்டியிருக்கிறது. அதை நினைவூட்டவே முப்பெரும் விழாவில் சங்கத் தமிழ் நடன நிகழ்ச்சியும், வேர்கள் விழுதுகள் கலைநிகழ்ச்சியும் நடைபெற இருக்கின்றன. இந்த இரு நாள் நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, மூன்றாம் நாள் சென்னைக் கடற்கரையில், அன்னைத் தமிழகத்தின் எதிர்காலத்திற்கான ஒளிவிளக்கு ஏற்றிடவும் - வெற்றி முரசும் ஒலித்திடவும் மூன்று நாட்களும் நீயும், மற்ற உடன்பிறப்புகளும் தலைநகரில் முகாமிட வேண்டியதுதான்! உன் அண்ணன் நான் உன்னை ஆவலுடன் எதிர்பார்க்கலாமா? அரங்கிலும், கோட்டத்திலும், அலைகடலோரத்திலும்!

அன்புள்ள,

மு. க.

(12-09-2000)

2511. என் சிந்தையும் விழிகளும் உன்னை நோக்கி!

உடன்பிறப்பே,

செப்டம்பர் 15 ஆம் நாள் முதல் 17 ஆம் நாள் நிறைவாக, சென்னையில் அரங்கத்திலும் - கோட்டத்திலும் - அலைகடலோரத்திலும் நடைபெற இருக்கிற முப்பெரும் விழா குறித்து நேற்று மடல் தீட்டியிருந்தேன். அந்த மடலில் யசோதரா காவியத்தின் கதாநாயகி அமிர்தமதி பற்றி ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருப்பாய் என்பது எனக்குத் தெரியும். கட்டழகுக் கணவன், கட்டிலறைச் சொர்க்கம் காட்டும் காவலன், கனகமணி குவிந்துள்ள அரண்மனைக்கு அரசன்! அவனையும், அவன் காட்டிய அன்பையும் புறக்கணித்துவிட்டுப் பெருவியாதி பிடித்த அவலட்சண யானைப்பாகனின் மடியிலும், அவன் பிடியிலும் மகத்தான இன்பங் கண்டு, அவன் அடித்தாலும், உதைத்தாலும், ஆபாசமாக அர்ச்சித்தாலும், அலட்சியப்படுத்தி வெறுத்தாலும் அவன் உறவே உலக இன்பம் என்று கருதிக் கொண்டு அவன் காலடியில் கிடந்த ஒய்யாரியாம் அமிர்தமதிக்கு ஈடானோர், அரசியலிலும் அநேகம் பேரைக் கண்டு அதிசயிக்கிறோம். அகம்மிக நொந்து அலட்டிக் கொள்கிறோம். குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியும் தோண்டத் தொடங்கியது போல, அந்த அரசியல் அமிர்தமதிகள், யானைப்பாகனுடன் கட்டுண்டு மயங்கியதோடு நில்லாமல் - தேவையில்லாமல் - நாம் அவர்களைப் பற்றி எதுவும் வாய் திறக்காமல் இருக்கும்போதே, எச்சில் துப்பி வம்பு வளர்ப்பது என்று சொல்வார்களே! அதுபோல அல்லவா நம்மீது நச்சு மழை பொழிய ஆரம்பித்திருக்கிறார்கள்.

அதற்காக நாமும் பதிலுக்குப் பதில் லாவணிக் கச்சேரி நடத்த முற்படுவதா? சந்து முனை சிந்து பாடலாம் வாரீர் என்று சவால்விட்டுப் பேசுவதா?

நம்மை ஆளாக்கி ஆலமரத்தின் விழுதுகள் போல ஆக்கியுள்ள அண்ணா அவர்கள், இப்படியொரு அறிவுரையை நமக்குக் கூறுவாரா? இதுவரை கூறியுள்ளாரா? இல்லையே! சந்தனப் பேழையில், சமுத்திரக் கரையோரத்தில் உறங்கும்போதுகூட, இப்படியொரு சொல் அவர் படுத்திருக்கும் பக்கமிருந்து வராதே!

அழைக்கின்றார்! அழைக்கின்றார் அண்ணா! என்று இசை முரசு அனிபா ஒலிக்கும்போது, அரசியல் அமிர்தமதிகளுக்குப் பதில் சொல்லவா அழைக்கின்றார்? இல்லையே! கடற்கரையில் நமது இசை முரசு ஒலிக்கப் போகிறது பார்! அழைக்கின்றார் அழைக்கின்றார் அண்ணா - அருமைமிகு தமிழகத்தின் துயர் துடைக்க இன்றே இந்த இசை முரசம் எத்தனை ஆண்டுகளாய் நம் செவிகளில் புகுந்து நம்மை சிங்கநடை பயிலச் செய்திருக்கிறது! செம்மாந்து நிமிர்ந்திடச் செய்திருக்கிறது!

சின்னஞ்சிறு வயதிலேயே என்னைப் போல இந்த இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர் நாகூர் அனிபா! "இன்னும் என்ன செய்யப் போறிங்க? காங்கிரசாரே எந்த முறையில் ஆட்சி நடத்தப் போறிங்க?"

இளைஞர் அனிபாவின் இந்தப் பாடல் வரி மூலம் கிளம்பிய இடி முழக்கக் கேள்விக் கணைக்கு விடையாகத்தான் வீழ்ந்தது காங்கிரஸ் ஆட்சி 1967 ஆம் ஆண்டு! - அதே அனிபாதான் இன்றைக்கு கழக மேடைதோறும் அழைக்கின்றார்! அழைக்கின்றார் அண்ணா! என்று முழக்குகின்றார். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு நம்நாடு இதழில் வெளிவந்த இந்தப் பாடலைத் தேடியெடுத்து நாகூர் அனிபாவிடத்திலே கொடுத்து மெட்டமைத்துப் பாடுமாறு கேட்டுக் கொண்டவன் நான்.

அன்று பாடத் தொடங்கியவர் வாலிபப் பருவம் கடந்து, இன்று வயதானவராக வம்ப் வாரியத் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள நிலையிலும், அழைக்கின்றார்! அழைக்கின்றார் அண்ணான் என! எக்காளக்குரலெடுத்துப் பாடுகிறார். இஸ்லாமிய சமுதாயத்திலிருந்து இந்த இயக்கத்திற்குக் கிடைத்த தலைதாழாச் சிங்கம், தன்மானத் தங்கம் இசை முரசு அனிபாவின் இசை நிகழ்ச்சியுடன்தான் சென்னையில், அலைகடலோரத்தில் அந்த அலைகளை வெல்லும் விதத்தில் உன் போன்ற உடன்பிறப்புகளின் தலைகள் காட்சியாகி என்னைக் களிப்பில் ஆழ்த்தப் போகின்றன.

சென்னைப் பயணத்திற்கு நீயும், உன் இணை மயிலும், சிங்காரச்சிட்டும் மற்றும் உன்னைப் பெற்றெடுத்த தாயும், தந்தையும் தயார் என்று நீ சொல்வது, தம்பி எவ்வளவு தொலைவிலிருந்தாலும் என் காதில் கேட்கிறது தெரியுமா? அது கற்கண்டுச் சுவையாக இருப்பதுணர்ந்து களிப்பிலாடுகின்றேன். யாருக்கு விழா எடுக்கிறோம்! என்றைக்கும் நம் உணர்வோடு கலந்திருக்கும் உத்தமத் தலைவர்களுக்கல்லவா விழா எடுக்கிறோம்!

“தேற்றும் மொழிக்கரசன் தென்பாங்கின் பெருவேந்தன்
ஏற்றும் விளக்கெல்லாம் ஏழைக்கே ஒளிகாட்ட –
வேண்டுமென்று
சேற்றில் தாமரை போல் கருத்தவிழ்த்த நம் அண்ணன்
காற்றுத் தாலாட்டும் கல்லறையில் உறங்குகின்றான்
மனக்கதிராய் ஒளிவீசும் மாமல்லன் ஊரில் பிறந்த
பல்லவனவன்
தனக்கெதிராய் எழுந்திட்ட சூழ்ச்சிகளைப் புறங்காணும்
சோழனவன்
வனப்புமிகு தமிழ் வளர்க்கும் பணியினிலே பாண்டிய
வேந்தனவன்
வாகைசூடிப் பகைப்புலத்தை வெல்வதிலே சேரனும்
அவனேயானான்”

அந்த மாமனிதன் புகழ் பாடுதற்கே மகத்தான விழா எடுக்கின்றோம்.

“அவன் தலைவராய்க் கொண்ட தலைவர் யார்?
நமக்கவர் பிறந்தநாள்தான் தெரியும்;
நட்சத்திரம் தெரியாது.
நட்சத்திரங்களைப் பற்றி அவர்
கவலைப்பட்டதும் கிடையாது.
ஆனால் அவர் லக்கினம் என்னவோ சிம்மம்தான்.
அந்தச் சிம்மத்தின் முன்னே சிறு நரிகள்
வாலாட்டம் செல்லுபடியானதில்லை.
பொங்கும் எரிமலை அவர் – அதன்

நெருப்புக் குழம்பு வைதீக புரியைக் கலக்கிற்று!
கரைகளையுடைத்துப் பெருகும்
காட்டாற்று வெள்ளம் அவர் - அந்த
வெள்ளத்தில் பழம் பஞ்சாங்க மண் வீடுகள்
இருந்த இடம் தெரியவில்லை.
சிந்து பாடும் சிற்றாறுகள் சீறிப்பாய்ந்தாலே
சீரழிவைத் தடுக்க முடியவில்லையே - அவரோ
பெரியாறு! அது சினந்து கிளம்பினால்
ஆதிக்கவர்க்கத்தின் ஆணிவேரே
அறுந்து போகாதா?"

என வையமே வியப்புறுகின்ற வெண்தாடி வேந்தருக்கு விழா எடுக்கின்றோம்.

"அண்ணா, பெரியார், கழகத்தை - நாம்
எண்ணாதிருக்கும் நாள் உண்டா?
கண்ணாம் கொள்கை காப்பதற்கு
இந்நாள் சூளுரை மேற்கொள்வோம்
பொன்னோ பொருளோ எதற்காக?
போலிகள் அலைவார் அதற்காக! உடன்பிறப்பே,
முப்பெருங் கடலும் கண்டோம்
முத்தமிழ் மன்னர் கண்டோம்
முப்பெரும் மன்னர் கண்டோம்
முக்கொடி பறக்கக் கண்டோம்
முச்சங்கப் பெருமை கண்டோம்
முக்கனிச் சுவையும் கண்டோம்
முப்பெரும் விழாவைக் காண்போமே"

என முழங்கியவாறு, கிளம்பிடுக! சென்னை நோக்கி!

"ஆகஸ்டு 15 சுதந்திரம் பிறந்தநாள்
செப்டம்பர் 15 - தமிழனுக்குச் சுவாசம் பிறந்தநாள்
செப்டம்பர் 17 - தமிழனுக்குச் சூடு பிறந்தநாள்
அதே நாளில் சொரணையும் பிறந்ததாலே
நாம் பிறந்தோம்;

ஆம், கழகம் பிறந்தது இத்தனையும் இணைத்தே இரும்புச்
சத்தனைய கொள்கை விளக்கம் தர முத்தனைய விழா
முப்பெரும் விழா எடுக்கின்றோம்

என 1994 - ஆம் ஆண்டு அண்ணா, அய்யா, கழகம் பிறந்தநாள் முப்பெரும் விழாவில் நடந்த கவியரங்கிற்குத் தலைமையேற்றுக் கவிதை பாடினேன் நினைவிருக்கிறதா உனக்கு! நினைத்துக் கொண்டால் மட்டும் எப்போதாவது, பெரியார் சிலைக்கு மாலை - அண்ணா நினைவிடத்துக்கு மலர்வளையம் - என்று அந்தத் தலைவர்கள் மீது அன்பு கொண்டவர்களைத் தேர்தல் நேரத்திற்காக ஏமாற்றும் வித்தை கற்றவர்களல்லவே நாம்!"

எல்லா நேரத்திலும் எங்களின் தலைவர்கள், வழிகாட்டிகள் என நெஞ்சில் பதியவைத்துக் கொண்டு அவர்கள் வகுத்தளித்த பாதையில் பயணிப்பவர்களாயிற்றே! அந்த உரிமையோடுதான் நம் உடன்பிறப்பு, ஓடிவா சென்னைக்கு! என அழைக்கிறான் என்று, நீ எண்ணிய மாத்திரத்தில் சென்னையில் வந்து நிற்பாய் என எனக்குத் தெரியும்.

போக்குவரத்து இடையூறு கருதி, சென்னையில் நமது விழாவையொட்டிய பேரணியோ ஊர்வலமோ எதுவுமில்லை. ஆனாலும் சென்னை நகர்ச் சாலைகள், கழக உடன்பிறப்புகளின் கால்பட்டுத் தேய்ந்ததோ! எனுமளவுக்கு நம் கூட்டம் எங்கெங்கும் நிறைந்திருக்க வேண்டும். அலைகடலோரத்திலோ ஆயிரக்கணக்கிலோ அல்ல, பல்லாயிரக்கணக்கில் அல்ல, உன் அண்ணன் அதிலெல்லாம் திருப்தி அடையமாட்டேன் - லட்சோப லட்சமெனத் திரள வேண்டும். இலட்சியத் திருவிளக்கை ஏற்றிப் பிடிக்க வேண்டும்.

இந்த இனத்தின் முகவரி தி.மு.க.! இனிய தமிழ்மொழி காத்திடும் இரும்புக் கோட்டை தி.மு.க.! தன்மானப்பாசறை தி.மு.க. தந்தை பெரியார்! தலைவர் அண்ணா வகுத்தளித்த தடம் பார்த்து நடக்கும் பேரியக்கம் தி.மு.க.! இதனைத் தொடர்ந்து நிலைநாட்ட வாராய், வாராய்! என் இனிய உடன்பிறப்பே வாராய்! வந்திடுக சென்னை நோக்கி! என் சிந்தையும் விழிகளும் உன்னை நோக்கி!

அன்புள்ள,

மு. க.

(13-09-2000)

2512. பழைய கதை கேட்டு, புதிய நினைவுகளுடன் வா!

உடன்பிறப்பே,

இன்றைக்கு உனக்கு ஒரு கதை சொல்லப் போகிறேன். இந்தக் கதை யசோதரா காவியத்து அமிர்தமதி கதைபோல கிளுகிளுப்பு ஊட்டாது. மிக மிகச் சாதாரணமான கதை. நீ கேட்டுக் கேட்டுப் பழகிப் போய்விட்ட பழங்கதை. ஆனாலும், அந்தப் பழங்கதை தமிழ்நாட்டு அரசியலிலும் நடக்கிறதே என்பதைப் பார்க்கும்போது, மீண்டும் ஒரு முறை அதைச் சொல்லித்தான் வைப்போமேயென்று அந்தப் பழைய கதைக்குக் கொஞ்சம் வர்ணனை முலாம் பூசி வழங்குகிறேன். இதோ கதை!

கிழக்குத் திக்கில் செம்பொன் உருக்கி வார்த்தது போல, தகத்தகாயமாகக் கதிரவன் எழுகிறான். அவனது ஒளிக்கதிர்களில் உலகம் உற்சாகம் பெற்று, உறக்கம் கலைந்து நிமிர்கிறது. உதயசூரியக் கதிர்கள் ஊடுருவியோடும் பகுதிகளில் எல்லாம் பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலமெனப் பலவித வானவில் நிறங்களில் கண்கொள்ளாக் கவின் காட்சி, மலைகளின் உச்சிகள் எல்லாம் வைரக் கலசங்கள் வைத்தது போல் பிரகாசிக்கின்றன அந்தக் கதிரொளியில்! பாறைகள் அனைத்தும் பட்டுப் பீதாம்பரங்களைப் போர்த்திக் கொண்டிருப்பது போலக் கண்களுக்கு விருந்தளிக்கின்றன. சிறிய நதியொன்று பசுஞ்சோலையைக் கிழித்துக் கொண்டு சிந்துபாடிச் சென்று கொண்டிருக்கிறது. நதியின் இரு மருங்கிலுமுள்ள கரையோரச் சோலைகளில் மானினம், தேன்சிட்டு, மயில், குயில், மாடப்புறா என ஆட்டமும் பாட்டமுமாக உயிரினங்களின் உவகை! உவகை!

மேற்குத் திசையிலிருந்து கிழக்குத் திசை நோக்கி மருங்குவண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடை அது போர்த்தி நடந்தாய் வாழி நதிப் பெண்ணே! என்று கீதமிசைக்கத் தக்க

வகையில் சலங்கையொலிக்கச் சதிராடும் மங்கையென அந்தச் சிறிய நதி, நிலம் தழுவி ஓடிக் கொண்டிருப்பதை அங்கு வேகமாக வந்த ஒரு வெள்ளாட்டுக் குட்டி காண்கிறது. தாகம் அதற்கு. நதியோரம் நடந்து போகிறது. கரை மீது நின்றவாறு நீரருந்த முனைகிறது. அது தண்ணீர் குடித்துக் கொண்டிருக்கும் இடத்திற்கு மேல் பகுதியில் திடீரென ஓநாய் ஒன்று வந்து நிற்கிறது. அதற்கும் தாகம் போலும். தரணியில் உயிர் இனங்கள் அனைத்துக்கும் தாகம் இயற்கைதானே. அதனால் அந்த ஓநாயும், தண்ணீர் குடிப்பதற்குக் கரையிலிருந்தவாறே தலை தாழ்த்துகிறது.

அப்போது அந்த ஆட்டுக்குட்டி, நதியின் கீழ்ப் பகுதியில் நின்று தண்ணீர் அருந்துவது ஓநாயின் கண்ணில் பட்டு விடுகிறது. ஆற்றுத் தண்ணீர் குடித்துத் தாகத்தைத் தணித்துக் கொள்வதை விட, ஆட்டுக்குட்டியின் ரத்தத்தைக் குடித்து ஆவலைத் தீர்த்துக் கொள்ளலாமே என்று நினைத்தது அந்த ஓநாய்! பச்சை ரத்தம் தாகத்தை மட்டுமின்றிப் பசியையும் தீர்க்குமல்லவா! எப்படித் தன் நினைப்பை நிறைவேற்றிக் கொள்வது என ஓநாய் யோசித்தது. ஆற்றின் மேல் பகுதியில் நின்றவாறு அது அந்த ஆட்டுக் குட்டியைப் பார்த்துக் கோபமாகக் கேட்டது, நான் அருந்தும் தண்ணீரை நீ குடித்து ஏன் எச்சில்படுத்துகிறாய்?

இப்படியொரு பழிபோட்டு ஆட்டுக்குட்டியைப் பசியாற எண்ணிய ஓநாயின் கேள்வியினால், வெள்ளாட்டுக் குட்டி வியப்பில் மூழ்கியது. ஓநாயைப் பார்த்து பவ்யம்மாகவே சொன்னது,

நான் நதியின் கீழ்ப்பகுதியில் நின்று தண்ணீர் குடிக்கிறேன். நீயோ மேல்பகுதியில் நின்று தண்ணீர் குடிக்கிறாய். நான் எப்படி நீ குடிக்கும் தண்ணீரை எச்சில் படுத்தியிருக்க முடியும்?

ஆட்டுக்குட்டியின் பதில் கண்டு, அந்த ஓநாய், ஒருக்கணம் மௌனமாயிற்று. நியாயமான கேள்வி ஆயிற்றே? எப்படிப் பதில் சொல்வது? எப்படிப் பழிபோட்டு ஆட்டுக் குட்டியைப் பலி கொள்வது? ஓநாய் அடுத்த கணமே, தன்னைத் தயார்படுத்திக் கொண்டுவிட்டது.

நான் குடிக்கும் தண்ணீரை நீ எச்சில்படுத்தாமல் இருக்கலாம். ஒரு வேளை உன் பாட்டி ஆடு, பாட்டன் ஆடு எச்சில் படுத்தியிருக்கலாம் அல்லவா? அதற்குப் பரிகாரம் இப்போது உன் மீது பாய்கிறேன் என்று கூறியவாறு, ஓநாய் பாயத் தொடங்கியது.

அப்போது கண் இமைக்கும் நேரத்தில் வேடன் ஒருவனின் வில்லில் இருந்து அம்பு புறப்பட்டுவிட்ட பயங்கர ஓசை கேட்டது. வேடனைக் கண்ட ஓநாய் உயிர் பிழைக்க எடுத்தது ஓட்டம் - ஆட்டுக்குட்டியும் தனக்கு ஆயுள் கெட்டியென்று நினைத்துக் கொண்டு அங்கிருந்து விரைந்து நடந்தது. உடன்பிறப்பே, இந்தப் பழைய கதைக்கு புதிய மெருகு தந்தது மட்டுமல்ல! இறுதி பகுதியிலும் முடிவைச் சுபமுடிவாக மாற்றியிருக்கிறேன்! ஓநாயும் உயிர் பிழைத்தேன் என்று ஓடி விடுகிறது. ஆட்டுக்குட்டிக்கும் ஆயுள் கெட்டி என்பதாக மாற்றியிருப்பது தவிர, மற்றபடி கதை மிக மிகப் பழையதுதான்!

அதுசரி! இந்தக் கதையை இப்போது ஏன் சொல்ல வந்தாய் என்று கேட்கத் தோன்றும் உனக்கு. சொல்லுகிறேன் கேள்.

சிறைகளை நிரப்பும் போராட்டம் ஒன்றை தமிழ் மாநில காங்கிரஸ் நடத்தப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. தாராளமாக நிரப்பட்டும். அதற்குத் தமிழக அரசும் சட்டப்படி உதவி செய்து ஒத்துழைக்கத் தயாராகத்தான் இருக்கும். ஆனால் இவர்கள் சிறையை நிரப்பப் போவதற்கு முன்பு, தேவையில்லாததும் உண்மை ஒரு துளியும் இல்லாததுமான ஒரு பழியை அல்லவா நம் மீது போடுகிறார்கள்? சிறை நிரப்பும் போராட்டத்துக்கு அறிவிப்பு கொடுத்துவிட்டுச் செய்தியாளர்களைச் சந்திக்கிறார் எனது அருமை நண்பர் மூப்பனார் அவர்கள். அவர்கள் கேட்கிறார்கள்,

> "மதச் சார்பற்ற கூட்டணியில் குழப்பத்தை விளைவிக்க தி.மு.க. முயற்சி செய்கிறது என்று கம்யூனிஸ்டுகள் கூறியிருக்கிறார்களே? என்று!"

அதற்கு அவர், எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையை ஆளுங்கட்சி குலைப்பது இயற்கையாக நடப்பதுதான். தமிழகத்திலும் அந்த முயற்சியை ஆளுங்கட்சி மேற்கொண்டு வருகிறது என்பதாக, விடையளித்துள்ளார்.

காங்கிரசார் ஆளுங்கட்சியாக இருந்தபோது 1952-ல் நடந்ததை, அதாவது உழைப்பாளர் கட்சியையும், காமன் வீல் கட்சியையும் உடைத்தார்களே? அதை மனத்தில் வைத்துக் கொண்டு எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையை ஆளுங்கட்சி குலைப்பது இயற்கைதான் என்று மூப்பனார் அவர்கள் சொல்லியிருப்பாரேயானால், அதில் ஒன்றும் நமக்கு

ஆச்சரியமில்லை. ஆனால் ஆட்டுக்குட்டியின் மீது ஓநாய் வீண்பழி போட்டதுபோல் இன்றைய மதச்சார்பற்ற (?) கூட்டணியை தி.மு.க. உடைக்கிறது என்று கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்துகொண்டு பழி கூறுவதுதான் வேதனையாக இருக்கிறது.

உடன்பிறப்பே! உனக்கும் தெரியும், எனக்கும் தெரியும், ஊருக்கும் தெரியும். ஏன் - உண்மை என்னவென்று மூப்பனார் அவர்களுக்கும் தெரியும். ஈ.வெ.கி. சம்பத் நூல் வெளியீட்டு விழாவில், கூட்டணி ஆட்சி கிடையாது. தனித்துத்தான் ஆட்சி. பலமுள்ள தலைமையைத்தான் மக்கள் விரும்புகிறார்கள் என்று திரு. மூப்பனாரை மேடையில் வைத்துக் கொண்டே ஜெயலலிதா இடியென முழங்கினாரே! அந்தப் பேச்சு தி.மு.க. எழுதிக் கொடுத்ததா? இல்லையே! அந்தப் பேச்சுக்குப் பிறகு எத்தனை சொற்போர்கள் அவர்களுக்குள்ளாகவே! ஆடும் திருத்தலம் சிதம்பரத்து செயற்குழுவில் கூட, கூட்டணி ஆட்சிதான் என்று அறிவித்தார்களே! அப்படி அறிவிக்கச் சொன்னது நானோ, நீயோ அல்லவே! பிறகேன் இந்த மகத்தான மதச்சார்பற்ற (?) கட்சிகளின் ஒற்றுமையை நாம் குலைப்பதாகச் சொல்கிறார்கள்?

நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்ட பிரச்சினையில், கர்நாடகத்து காங்கிரஸ் முதலமைச்சர் கிருஷ்ணாவை ராஜினாமா செய்யச் சொல்லி ஜெயலலிதா அறிக்கை விடுத்தாரே? அது சிறு பிள்ளைத்தனமான அறிக்கையென்று தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தம்பி இளங்கோவன் பதிலடி கொடுத்தாரே? அதை மறுத்து இளங்கோவனை அரை வேக்காடு என்று அவர் அன்னையை விட்டே அறிக்கை விடச் செய்தார்களே? அதெல்லாம் தி.மு.க.வின் திருவிளையாடல்களா? என்று மூப்பனார் அவர்களைப் பார்த்துக் கேட்கத்தான் தோன்றுகிறது. அதனால் பயன் என்ன? என்ன பதில் கிடைக்கப் போகிறது?

வெள்ளாட்டுக் குட்டியின் கேள்விக்கு, ஓநாய் அளித்த விடை போலத்தான் நமக்கும் கிடைக்கும்.

அனைத்துக் கட்சி ஆலோசனைக் கூட்டத்திற்கு ஆரம்பத்தில் காங்கிரசுக்கு அழைப்பு இல்லை - அதை யார் தடுத்தது? அழைப்பு எழுதிய கைகளைப் போய் தி.மு.க.காரன் திடுமெனத் தடுத்து நிறுத்திவிட்டானா? தாமதமாக இப்போது அழைப்பு! அப்படித் தாமதமாகத் தரச் சொன்னது தி.மு.க.வா?

உடன்பிறப்பே, நாமும்தான் தி.மு.க. சார்பில் எத்தனையோ அனைத்துக் கட்சிக் கூட்டங்கள் நடத்தியிருக்கிறோம். அனைத்துக் கட்சித் தலைவர்கள் வருகைக்காக நான் காத்திருந்து, வரவேற்று நானும் கலந்துகொண்டு நடந்த கூட்டங்களையும் அந்தத் தலைவர்கள் அறிவார்கள்.

இன்றைக்குப் பாரேன்! தன் கட்சி அலுவலகத்திற்கே தலைவர்களை அழைத்துவிட்டு - அவர்களைக் கண்டுகொள்ளாமலேயே விட்டுவிட்ட கண்றாவியை! என் செய்வது? நமக்குச் சுயமரியாதை உணர்வு உண்டு - அதனால் மற்றவர்கள் சுயமரியாதைக்கு மதிப்பளித்தோம். அன்று சுயமரியாதை இரு பக்கமும் பாதுகாக்கப்பட்டது. இன்று பாவம் ஒரு வழிப்பாதையாகப் போய்விட்டது.

இந்த லட்சணத்தில் மதச்சார்பற்ற கட்சிகளின் (?) ஒற்றுமையை நாம் குலைக்கிறோமாம். வெள்ளாட்டுக் குட்டியின் மீது ஓநாய் கூறிய வீண்பழிபோல இருக்கிறதா இல்லையா? எப்படி இந்தப் பழைய கதை? கதை பழசுதான்! முடிவுதான் புதிது!

முப்பெரும் விழாவுக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் உனக்கு, இந்தப் பழைய கதை பல புதிய நினைவுகளைத் தூண்டுமே என்று எதிர்பார்த்துத்தான் எழுதியுள்ளேன்! அன்னை எதிர்நோக்கும் மகவைப் போல, சென்னை உன்னை எதிர்நோக்கிக் காத்திருக்கிறது.

அன்புள்ள,

மு. க.

(14-09-2000)

2513. வரலாறு யாரைச் சபிக்கும்? யாரை வாழ்த்தும்?

உடன்பிறப்பே,

இன்று செப்டம்பர் 15. இந்தக் கடிதத்தை நீ சென்னை நோக்கி வரும் வழியில் - இரயிலிலோ, பேருந்திலோ, அல்லது வேனிலோ படித்துக் கொண்டிருப்பாய் என்று எனக்குத் தெரியும். இன்றுதானே சிங்கநடையும், சிங்காரத் தென்றல் நடையும் பொங்கு கடல் நடையும், புரட்சித் தமிழ் நடையும், தன் புது நடையில் கண்ட பூமான் - நம் அனைவரையும் ஒரு தாயின் வயிறு தாங்காத காரணத்தினால் தனித்தனித் தாய்கள் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் எனக்கூறி, அண்ணன், தம்பி பாசம் உணர்த்திய அறிஞர் பெருமகன் - அண்ணா பிறந்த நாள்!

இந்த நாளில் சென்னை மாநகரில் உன்னை நானும், என்னை நீயும் கண்டு கலந்துரையாடி மகிழவே ஆண்டுதோறும் அழைப்பது போல் இப்போதும் அழைத்துள்ளேன். வருகிறாய் உன் இனை மயிலுடன்! இனிய மழலையுடன்! குடும்பத்தோடு வரும் உன்னை வரவேற்பதில்தான் எனக்கு எவ்வளவு குதூகலம் தெரியுமா? அந்தக் குதூகல உணர்ச்சியையும் மிஞ்சக்கூடிய கவலை ஒன்று என் இதயக் கதவிடுக்கில் எட்டிப்பார்த்துக் கொண்டு இருக்கும் என்பதையும் நினைவூட்டுகிறேன் உனக்கு!

அஃதென்ன அப்படிப்பட்ட கவலையெனக் கேட்கிறாயா? அண்ணன் அழைத்தான் என்று ஆயிரம் வேலைகள் இருப்பினும், அவற்றை ஒத்தி வைத்து விட்டுப் புறப்பட்ட உன் பயணம் நல்ல முறையில் நடந்தேற வேண்டும் என்ற கவலைதான் - இதுபோன்ற பெரிய விழாக்கள் ஒவ்வொன்றிலும், நமது மாநாடுகளிலும் நான் வேண்டிக் கேட்டுக் கொண்டு விடை தருவேனே - நினைவிருக்குமே உனக்கு!

நீங்கள் எந்தவித இடையூறுமின்றி ஊர் போய்ச் சேர்ந்தீர்கள் என்று செவியும், சிந்தையும் குளிரும் செய்தி வரும் வரையில், எனக்கு நிம்மதியிருக்காது. ஆகையால்

அன்பு உடன்பிறப்புகளே! பத்திரமாக நடக்கட்டும் உங்கள் பயணம். பகலில் புறப்படுங்கள். வாகனங்களின் வேகத்தை கட்டுப்படுத்திடுங்கள்.

என்று நான் அப்போது மட்டுமல்ல, இப்போதும் சொல்கிறேன்.

சாலை விபத்துகள் சாதாரணமாகிவிட்ட நிலைமையில் எச்சரிக்கையுடன் இருப்பதே அறிவுடைமை. விதி யாரை விட்டது? என்று கூறி விவேகமில்லாமல் நடந்து கொள்கிற கூட்டமல்ல நாம். விதியெனும் சொல்லுக்கே ஒரு விதி செய்து அதனை விரட்டிய பகுத்தறிவுப் பகலவனின் பட்டாளத்துச் சிப்பாய்கள் நாம். எனவே உற்சாக மிகுதியில் ஓட்டு வேகமாக என்று உத்திரவிடுவதும் நல்லதல்ல - ஓட்டுநர்களும் இந்த விஷயத்தில் உரிமை எடுத்துக் கொள்வது சரியும் அல்ல!

வா என்று வாஞ்சையுடன் உனையழைத்துக் கடிதம் எழுதிவிட்டேன். நீ வந்து விட்டுத் திரும்பிப் போய்ச் சேரும் வரையில் எனக்கு உறக்கமிருக்காது.

எனவே, நான் மகிழுமளவுக்கு முப்பெரும் விழா நிகழ்ச்சிகளில் வெள்ளம் போல் தமிழர் கூட்டம் காட்டிடத் திரண்டு வரும் திராவிடத் திருவிளக்கே! நீ வரும்போதும், திரும்பும் போதும் உன் பயணம் பத்திரமாக இருக்க வேண்டும் என்பதே என் வேண்டுகோள்!

திராவிடத் திருவிளக்கே! என உனை அழைக்கிறேன். திராவிடம் எனும் சொல் கண்டு சீறிப் பாய்வோர் இன்றும் உண்டு. நீராரும் கடலுடுத்த எனும் தமிழ்த்தாய் வாழ்த்திலும் - ஜனகணமன எனும் நாட்டுப் பாடலிலும் திராவிடம் எனும் சொல்லை எப்படித்தான் இவர்கள் பொறுத்துக்கொண்டு நிகழ்ச்சிகளின்போது நிற்கின்றனரோ தெரியவில்லை - ஏனெனில் அந்த அளவுக்கு திராவிடக் கட்சிகளைத் தீண்டினால் திருநீல கண்டம் என்று பேசத் தொடங்கியிருக்கிறார்கள். பேசுவார்களே தவிர, திராவிடக் கட்சிகளிலொன்றைச் சார்ந்துதான் இவர்களின் தேர்தல் கூட்டணிகளே வகுக்கப்படுகின்றன.

ஒரு வார ஏடு - நாகரிகமாகக் கருத்துக்களையும் கட்டுரைகளையும் வெளியிடுகிற ஏடு - அதன் வி.ஐ.பி. மேடையில் ஒருவர் நஞ்சு கலந்து எழுதியுள்ளார். அதாவது திராவிடக்

கட்சிகளால்தான், அந்தத் தலைவர்களால்தான் வீரப்பன்களே உருவாகியிருக்கிறார்கள் என்ற பொருள்படக் கூறிவிட்டு, இத்தகைய தலைவர்களை வருங்கால வரலாறு காறித்துப்பும் என்று முடிவும் கூறியுள்ளனர்.

வரலாறு யாரைக் காறித்துப்பும்? என்று சிறு குழந்தைகளுக்குக் கூடத் தெரியும். அந்தக் கட்டுரையாளரைப் போல கணத்திற்கொரு கட்சி மாறுகிறவர்களின் முகத்தில்தான் வரலாறு அந்த அபிஷேகத்தை அதிவிமரிசையாகச் செய்யுமே தவிர, உண்மையான திராவிடத் தலைவர்கள் மீதல்ல!

தமிழர் கூட்டம் என்று கூறும்போது மொழியின் உணர்வையும் - திராவிடர் திருவிளக்கே என்று கூறும்போது இனத்தின் பெருமையையும் நினைவு கூர்கிறேன்.

வரலாறு யாரைச் சபிக்கும்? யாரை வாழ்த்தும்? என்பதை விளக்கமாகத் தெரிந்து கொள்ளத்தான் இந்த முப்பெரும் விழா!

அன்புள்ள,

மு. க.

(15-09-2000)

2514. வைரத்துக்கு முன் வைக்கப்பட்ட கூழாங்கல்!

உடன்பிறப்பே,

கழக வரலாறு என்பது தமிழக வரலாற்றுடன் பின்னிப் பிணைந்தது என்ற உண்மையை உணர்த்துகின்ற வகையிலும், திராவிட இயக்கம் சமூகநீதி காத்திடவும் - ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்திடவும் - தமிழுக்கும், தமிழர்களுக்கும் அரணாக நின்று இந்தி போன்ற பிற மொழி ஆதிக்கங்களை எதிர்கொள்ளும் போர் வீரனாகச் சீறிப் பாய்ந்திடவும் என்றுமே தயங்கியதில்லையென்பதை விளக்குகின்ற வண்ணமும் - இந்த இயக்கத்தின் தியாகச் செம்மல்களுக்கு ஆண்டுதோறும் முப்பெரும் விழாவிலே விருதுகள் வழங்கி வருகிறோம்.

இந்த ஆண்டு அந்த விருதுகள் திருவாரூர் தென்னனுக்கும், பரமக்குடி தங்கவேலனுக்கும், திருவில்லிபுத்தூர் அமுதனுக்கும், பெங்களூர் திராவிட மணிக்கும் வழங்கப் பெற்றதை நீ அறிவாய்.

இந்த நாட்களில் தம்பி அமுதன் 'அமுதன் தன் குறிப்பு' என்ற பெயரில் சுமார் 30 பக்கங்கள் கொண்ட ஓர் அழகிய சிறிய நூலை வெளியிட்டு, அதனை விழாவுக்கு வந்திருந்த அனைவருக்கும் வழங்கினார். கழக வரலாற்றின் கடந்த காலக் குறிப்புகள் பல அந்நூலில் இடம் பெற்றுள்ளன. அதிலும் சிறப்பாக அமுதன் தொடர்புடைய நிகழ்ச்சிகள், நிகழ்ச்சிகளைப் பற்றிய விபரங்கள், நிழற்படங்கள் இவற்றின் தொகுப்பாக அந்த நூல் அமைந்துள்ள அழகு கண்டு அயர்ந்து போனேன்.

தங்கள் வாழ்க்கையில் சுழன்றோடுகிற எந்தவொரு சம்பவத்தையும், பத்திரமாக பாதுகாத்து - அச்சம்பவம் எந்த வடிவில் இருந்தாலும் அதனைப் புதையல் போலக் கட்டிக் காத்திடும் பழக்கம் ஒருசிலருக்கே உண்டு. அந்தத் திறன் வாய்ந்தவர்களில் - அத்தகைய அக்கறை உள்ளவர்களில் தம்பி

அமுதனும் ஒருவர் என்பதை அந்த அழகிய சிறிய நூல் எடுத்துக் காட்டுகிறது என்பேன்.

அவர் பொது வாழ்வில், அதாவது அவர் மேற்கொண்ட இந்த இயக்க வரலாற்றில் - அவர் சந்தித்த சிறைக் கோட்டங்கள் - அவருக்கு அண்ணாவும், நானும் எழுதிய கடிதங்கள் - அவர் வகித்த பொறுப்புகள் - அவரைப் பற்றி வெளிவந்த கட்டுரைகள் - நூலின் முதல் பக்கத்திலேயே அவர் முழக்கும் சூளுரை இத்தனையும் இடம் பெற்றுள்ளன.

> "தலைவா! உன் நெஞ்சத்தில் இருக்குமளவுக்கு கடந்த நாற்பத்தி ஐந்து ஆண்டுக்காலமாக என் பால்ய காலம் தொட்டு வெறிபிடித்த கழகத் தோழனாகப் பணிபுரிந்து வந்துள்ளேன்.
>
> வாழ்நாள் முழுதும் தடம்புரளாத் தம்பியாகப் பணிபுரிவேன் என உறுதி கூறுகிறேன்."

இந்தச் சூளுரை இடம்பெற்ற அந்த நூலில் இரண்டு கடிதங்கள் என்னால் அவருக்கு எழுதப்பட்டவைகளையும் பிளாக் செய்து வெளியிட்டிருக்கிறார்.

உடன்பிறப்பே, திராவிட முன்னேற்றக் கழகம் தனது ஐம்பதாண்டுக் காலத்துக்கு மேற்பட்ட சரித்திரத்தில் ஆட்சியிலிருந்த காலத்தைவிட, போராட்டக் களத்தில் நின்ற எதிர்நீச்சல் காலமே மிகுதியானது. அந்தப் போராட்ட காலத்தில் எல்லாம் களம்புகுந்த அமுதன்கள் ஆயிரம், பத்தாயிரம், லட்சம் பேர் என்பதால்தான், மிரட்டிய மிசாக் கொடுமைகளைக் கூடப் பின்னங்கால் பிடரியில்பட ஓடிடச் செய்ய நம்மால் முடிந்தது.

என் கடிதங்கள் வெளியிட்டுள்ளார் அந்த நூலில் என்று குறிப்பிட்டிருக்கிறேனே, அக் கடிதங்கள் இரண்டுமே நான் சிறையிலிருந்தபோது, மற்றொரு சிறையிலிருந்த அமுதனுக்கு எழுதப்பட்டவைதான். வேறு சமயங்களிலும் கடிதம் எழுதியுள்ளேன். இவை விசேடமானது என்பதால் அவர் வெளியிட்டுள்ளார்.

எந்தவொரு இயக்கத்திலும் போராட்டங்கள் நடத்துவது என்பது இயல்பான நிகழ்வுகள்தான் - தி.மு.க. எப்போதுமே

போராட்டம் நடத்த வேண்டுமே என்பதற்காகப் போராட்டம் நடத்துவதில்லை - தவிர்க்க முடியாத சூழல்களில்தான் போராட்டம் நடத்தும் - அப்படி நடத்தப்பட்ட போராட்டங்களில் ஒன்றுதான் 1987ல் நடத்தப்பட்ட இந்தி எதிர்ப்புப் போராட்டம். அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், முதலமைச்சராக இருந்தபோது அந்தப் போராட்டம் நடத்த வேண்டிய அவசியத்தை மத்திய அரசு ஏற்படுத்தி விட்டது. அறப் போராட்டம்தான் நடத்தினோம். ஆனால் மறியல் போராட்டம் - அருமை நண்பர் ஆட்சியில் இருக்கிறார் என்பதற்காக மறியல் போன்ற சட்டமீறல் போராட்டங்களை அனுமதித்துவிட முடியாது என என்னைப் போன்றோரை சென்னைச் சிறையிலும், தம்பி அமுதன் போன்றோரை மதுரைச் சிறையிலும் அடைத்து வைத்தனர். நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தண்டனையை ஏற்று நாங்கள் ஓரிரு மாதங்கள் சிறையில் இருந்தோம். இந்தித் திணிப்பு எதிர்ப்பில் தி.மு.க.வும் - அ.தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கியென்று எம்.ஜி.ஆர். அவர்களால் சட்டப்பேரவையில் பிரகடனப்படுத்தப்பட்டபோதிலும், சட்டமீறலுக்காக அந்தப் போராட்டத்தில் நாங்கள் சிறையில் இருந்திட நேர்ந்தது. கைதி உடைகூட எனக்குத் தரப்பட்டது.

உடன்பிறப்பே, எந்தவொரு போராட்டத்திலும் ஆரம்பத்தில் சூரத்தனமாகக் கர்ச்சிக்கும் சில பேர், சிறை சென்றவுடன் அந்த வசதியற்ற சூழலை சகித்துக் கொள்ள முடியாமல் மன்னிப்பு என்றும், ஜாமீனில் விடுதலை என்றும் வெளியேற முயற்சி செய்வதுண்டு. ஆயிரம் பேரில் ஐந்தாறு கோழைமனம் கொண்டோர் அப்படி இருக்கத்தான் செய்வர். அப்படிப்பட்ட சிலரைப் பார்த்துத்தான் அண்ணா ஒரு முறை சொன்னார். இவர்களை அரசாங்கமே மன்னித்து விட்டதால், நானும் மன்னித்து விடுகிறேன் என்று!

மதுரைச் சிறையில் ஓரிருவர் அப்படியுள்ளனர் என்று தம்பி அமுதன், எனக்கு சென்னைச் சிறைக்கு வேதனையுடன் கடிதம் எழுதியிருந்தார்.

அவருக்குச் சென்னை சிறையிலிருந்து மதுரை சிறை முகவரிக்கு நான் எழுதிய அஞ்சலட்டையை அந்த நூலில் அப்படியே வெளியிட்டுள்ளார். இதோ அதனை நீயும் பார்த்திட வேண்டுமென்று இந்த கடிதத்துடன் இணைத்துள்ளேன்.

சிறையில் தவத்தைத் தொடருக என்று எழுதியிருக்கிறேன், பார்த்தாயா? சிறையில் தவம் என்று மூதறிஞர் இராஜாஜி எழுதிய நூல் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்ததின் விளைவு அது!

இதுபோன்ற பழைய நிகழ்வுகளை நினைவுக்குக் கொண்டு வரும்போது - இன்றைய பதவி, பவிசு அனைத்தும் வைரத்துக்கு முன் வைக்கப்பட்ட கூழாங்கல்லாகத் தெரிகிறதல்லவா? எனக்கு அப்படித்தான் தெரிகிறது!

அன்புள்ள,

மு. க.

(17-09-2000)

2515. பெரிய மனிதர்களின் பொய்யும், புளுகும்!

உடன்பிறப்பே,

அழைப்பு விடுத்து நான் எழுதிய கடிதங்கள் இரண்டோ மூன்றோதான். அழைப்பு விடுக்க வேண்டுமா எங்களுக்கு? அதுவும் அய்யா, அண்ணா மற்றும் கழகம் பிறந்த நாளாம் முப்பெரும் விழா திருநாளுக்கு எனக் கேட்பதுபோல லட்சக்கணக்கில் சென்னைக் கடற்கரையில் திரண்டு விட்டீர்கள். மிகப் பிரமாண்டமான நிகழ்ச்சிகளை நமது கழகம்தான், சென்னைக் கடற்கரையில் நிகழ்த்திக் காட்டியிருக்கிறது. அவற்றை மிஞ்சக்கூடிய வண்ணம் - கட்டுப்பாடும், கண்ணியமும் காத்து கடலெனக் குழுமிய அந்தக் காட்சி என்றைக்கும் என் நெஞ்சை விட்டகலாது. ஆம்! கூட்டத்துக்குள் நுழைந்து கடலை விற்ற சிறுவர்களைக் கூட ஏ, தம்பீ! இங்கே வா! அங்கே போ! என்று உரக்கக் கூவி அமைதியைக் கெடுத்து விடாமல், அத்தனை அடக்கத்துடனும், ஆர்வத்துடனும் நடைபெற்ற திறந்த வெளி மாநாடு அது என்று கூறலாம்.

எந்த நிலையிலும் - எத்தகைய சோதனை, வேதனை வந்தாலும் இந்த இயக்கம் எம்முயிர், எம் மூச்சு என்று நெஞ்சாரக் கருதி நித்தமும் உழைக்கின்ற உடன்பிறப்பாம் உன்னையும் உன் போன்றோரையும் சென்னையில் கண்டபோது என் இதயம் கனத்துத்தான் போய்விட்டது பெருமிதத்தால்! என் கண்களில் என்னை அறியாமல் நீர்த்துளிகள் கூடு கட்டிவிட்டன. சாதாரணமானவர்களின் இயக்கம் - சாமான்யர்களின் பாசறை - இன்று இத்தனை பெரிய சமுத்திரமாகப் பெருகி, சரித்திரமாக நிலைத்து நிற்கிறதே என்ற ஆனந்தக் கண்ணீர்தான் அது.

இந்த இயக்கத்தால் உன் போன்ற உடன்பிறப்புகள் எல்லோரும் பலன் பெற்று விடவில்லை - பதவி, பவிசு அனைவருக்கும் கிடைத்திடவில்லை - கிடைத்திடவும்

இயலாது. காரணம், பதவிகளின் எண்ணிக்கை குறைவு - பாசறை உடன்பிறப்புகளின் எண்ணிக்கையோ லட்சோபலட்சம் - எனவே எல்லோரும் எம்.பி.க்களாக, எம்.எல்.ஏக்களாக, உள்ளாட்சி மன்றங்களில் மேயர், சேர்மன், கவுன்சிலர், கூட்டுறவு இயக்கங்களில் தொடர்புடையவர்கள் என்கின்ற பொறுப்பிலே உள்ளவர்கள் அல்ல! அவர்கள் விழாவுக்கு வந்தார்கள் என்றால், தன்னை வளர்த்த இயக்கத்துக்கு நன்றிக் கடன் செலுத்திட வந்தார்கள் என்று கருதலாம். இந்த இயக்கத்தினால் எவ்விதப் பயனையும் அனுபவிக்காத உன் போன்றோர், உழைப்பையும், வியர்வையையும், ஏன்! இரத்தத்தையும் வழங்கி இந்த இயக்கத்தை வளர்த்துக் கொண்டிருக்கிறவர்கள் லட்சக்கணக்கில் வந்ததுதானே சிறப்பு!

செப்டம்பர் 17-ஆம் நாளன்று அலைகடலோரம் காலை முதற்கொண்டு நீ ஆயிரம், பதினாயிரம், லட்சம், லட்சோபலட்சம் என்று பெருகிடப் பெருகிட எனக்குப் பூரிப்பு -புளகாங்கிதம் - இன்பம் வெள்ளமோ வெள்ளம்!

ஆனால் சிலருக்கு இதற்கு நேர்மாறான நிலைமை! கசப்பும் காழ்ப்பும் நெஞ்சைக் கலக்கி, மேலும் மிஞ்சிப் போய் வாய் வழியாகவும் வெளிவந்துவிட்ட கொடுமையை என் சொல்வது!

திராவிட இயக்கத்திலே எல்லா தலைவர்களாலும் மதிப்பும் மரியாதையும் கொடுக்கப்பட்ட தந்தை பெரியாரை தோழர் இராமசாமி என்று அழைத்தவர் கருணாநிதி என்று ஒருவரின் பேட்டி வெளிவந்திருக்கிறது. பேட்டி கொடுத்தவர் யார் என்று நான் அவர் பெயரைக்கூடச் சொல்ல விரும்பவில்லை. இந்த இயக்கத்தின் வரலாறு தெரியாதவர் - தெரிந்து கொள்ளவும் முயற்சி மேற்கொள்ளாதவர் - ஏதாவது ஒரு பழியை என் மீது போட வேண்டுமென்று இப்படியொரு அபாண்டமான செய்தியை, ஆம்! ஜமுக்காளத்தில் வடிகட்டிய பொய் என்பார்களே - அத்தகைய பொய்யைக் கூறியிருக்கிறார்.

எதை வைத்து நான் பெரியாரை, தோழர் இராமசாமி என அழைத்தேன் அல்லது குறிப்பிட்டேன் என்று அவர் சொல்லியிருக்கிறார்! தோழர் என்பது தந்தை பெரியார் அவர்கள் ரஷ்யா சென்று வந்த பிறகு சுயமரியாதை இயக்கத்தினர் ஒருவருக்கொருவர் பெயருக்கு முன்னால் பயன்படுத்திக் கொள்கிற அளவுக்கு அதிகப் பழக்கமாகிவிட்ட ஒரு சொல். 1938

ஜூன் 3ல் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் தொடங்கிய காலம்தான் நான் பொது வாழ்வில் நுழைந்த காலம். அந்தக் காலத்தில் பெரியார் அவர்களுக்கு பெரியார் பட்டம் இல்லை. அந்த ஆண்டின் இறுதியில்தான், நவம்பர் 13 அன்று, சென்னையில் மகளிர் மாநாடு நடைபெற்று பெரியார் என்ற அடைமொழி வழங்கப்பட்டது. 1938ல் நான் 14 வயது இளைஞன். அப்போது பெரியாருக்கு பெரியார் பட்டம் வழங்கப்படாமலிருந்தால் ஈ.வெ.ரா. என்று வேண்டுமானால் குறிப்பிட்டிருப்பேன். தோழர் இராமசாமி என்று குறிப்பிட்டிருக்க மாட்டேன்.

ஆனால் ஒன்று! 1938 இந்தி எதிர்ப்புப் போரின்போது, அண்ணா அவர்கள் (அப்போது காஞ்சி சி.என். அண்ணாதுரை என்றுதான் அழைக்கப்பட்டார்) சிறை புகுந்தார். பெரியாரும், மற்றத் தலைவர்களும் இந்தியை எதிர்த்து கடுமையான சுற்றுப் பயணம் நடத்திக் கொண்டிருந்தனர். அந்தச் சமயம் திருவாரூர் பாவலர் பாலசுந்தரம் அவர்கள் எழுதிய பாட்டு ஒன்று மிகப் பிரபலம்! எல்லாக் கூட்டங்களிலும் பாடப்படுகிற பாடல் அது. அதிலே ஒரு பகுதி வருமாறு:-

“கருணையினுமிலையோ காங்கிரசாரே
கதறும் பலன் தொல்லையோ?
செந்தமிழ்த் தாயவள்
சிந்திடும் கண்ணீரால்
தேசமே பாழாகுமன்றோ?

கருணையினுமிலையோ காங்கிரசாரே
கதறும் பலன் தொல்லையோ?

தோழர் ஈ.வெ.ராமசாமியும்
விசுவநாத் சோமுடன் பாண்டியன் பாலும்
சுற்றுப்பிரயாணம் செய்தே உம் சூழ்ச்சியை
சுக்கானில் மாட்டுறார் மேலும்

கருணையினுமில்லையோ
காங்கிரசாரே!”

1938-ல் பாவலர் பாலசுந்தரம் எழுதிய இந்த பாடலை பல சமயங்களில் நான் பல்வேறு நிகழ்ச்சிகளில் குறிப்பிட்டுக் காட்டி,

நமது மொழிப்போர் வரலாற்றை விவரித்திருக்கிறேன். அந்தப் பாடலில் உள்ள தோழர் ஈ.வெ. ராமசாமியும் என்ற சொற்றொடரைப் பிடித்துக் கொண்டு, ஆகா! கருணாநிதி பெரியாரை தோழர் இராமசாமி என்று சொல்லிவிட்டார் என அந்தப் பேட்டியாளர் கருதியிருப்பாரேயானால் விலா நோகச் சிரிப்பதைத் தவிர, வேறு வழி என்ன இருக்கிறது.?

1938 வரையில் பெரியார் பட்டம் வழங்கப்படவில்லை. அதனால் திரு. பாவலர் பாலசுந்தரம் அவர்கள் தோழர் ஈ.வெ. ராமசாமி என்று பாடலில் எழுதினார். அதைத் தொடர்ந்து அந்தப் பாடலில் குறிப்பிடப்படும் பெயர்கள் பேட்டியாளருக்கு தெரிந்திருக்க நியாயமில்லை.

"தோழர் ஈ.வெ. ராமசாமியும்
விசுவநாத் சோமுடன்
பாண்டியன் பாலும்"

என வரும் வரிகளில் - விசுவநாத் என்பது முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களைக் குறிப்பிடுவதாகும். சோமுடன் என்பது நாவலர் சோமசுந்தர பாரதியாரைக் குறிப்பிடுவதாகும். பாண்டியன் என்பது பட்டிவீரன்பட்டி சௌந்திர பாண்டியனார் அவர்களைக் குறிப்பிடுவதாகும். பாலும் என்பது அந்தக் காலத்து சுயமரியாதை வீரரான கே.எம். பாலசுப்பிரமணியத்தைக் குறிப்பிடுவதாகும்.

அவர்கள் எல்லாம் இணைந்து சென்ற இந்தி எதிர்ப்புக்கான சுற்றுப் பயணத்தைத்தான் அந்தப் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன. அதைச் சுட்டிக்காட்டி ஏதோ ஒரு கூட்டத்தில் நான் சொன்னதை ஒரு வேளை இந்தப் பேட்டியாளர் எங்காவது படித்திருப்பாரோ? அல்லது சொல்லக் கேட்டிருப்பாரோ? எவ்வளவு வஞ்சகமான வழி பார்! என்மீது போடத் துடிக்கும் பொல்லாத எண்ணம் பார்!

இன்னொன்று தெரியுமா உடன்பிறப்பே உனக்கு? அண்ணன் பட்டுக்கோட்டை அழகிரி அவர்கள், பெரியாருக்கு அந்தப் பட்டம் வழங்கப்படும் வரையில் மட்டுமல்ல! வழங்கப்பட்ட பிறகும்கூட தோழர் ஈ.வெ.ராமசாமி பெரியார் என்றுதான் அழைப்பார். கூட்டங்களிலும், மாநாடுகளிலும்கூட அப்படித்தான் அய்யா

அவர்களை அவர் விளிப்பார். காம்ரெட் என்பதுதான் தோழர் என்பது!

இதற்கெல்லாம் மாறாக, நான் நினைத்துக்கூடப் பார்க்காத ஒரு சொற்றொடரை, தோழர் இராமசாமி என்று நான் பெரியாரை அழைத்தேன் எனப் பெரும் பொய் ஒன்றை ஒரு பெரிய மனிதர் அவிழ்த்து விட்டிருக்கிறார் என்றால், இதையெல்லாம் மக்கள் நம்பி விடுவார்கள் என்று அவர் கருதுவாரேயானால், அந்தப் பைத்தியக்காரத்தனத்திற்காக நான் பரிதாபப்படுகிறேன்.

இத்தகைய பொய், புளுகுகளை அஸ்திரங்களாக அந்தப் பெரிய மனிதர்கள் ஏவுவதற்கு என்ன காரணம் புரிகிறதா உனக்கு? எரிச்சல்! எரிச்சல்! நீ சென்னைக் கடற்கரையில் எடுத்த விசுவரூபம் கண்டு எரிச்சல்!

அண்ணா சொல்லுவார்! சிரங்கு பிடித்தவன் கடுமையாகச் சொறிந்து கொள்வான். சொறிந்து கொள்ளும் போது சுகமாக இருக்கும். சொறிந்து முடிந்ததும் எரிச்சல் தாங்காமல் துடிப்பான் என்று!

அந்த எரிச்சல்தான் உடன்பிறப்பே, சிலருக்கு!

அன்புள்ள,

மு. க.

(20-09-2000)

2516. தீபகற்ப நதிகளை இணைக்கும் திட்டம்!

உடன்பிறப்பே,

இந்தியாவில் உள்ள நதிகளை இணைக்க வேண்டும் என்ற கருத்து நீண்ட காலமாக வெளியிடப்பட்டு வருகிறது. அதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு, இந்தக் கருத்தைச் செயல்படுத்துவதற்கான ஆய்வுகள் நடக்கின்ற கருத்தரங்குகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. அண்மையில் கூட செப்டம்பர் 17 அன்று, பெரியவர் சி. சுப்பிரமணியம் அவர்கள், கலந்து கொண்ட கருத்தரங்க மாநாடு ஒன்று நடைபெற்றதை நீ அறிவாய். மாநிலத்துக்கு மாநிலம் நீர்வளத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான சீரிய திட்டங்கள் பலவற்றை அரசியல் பின்னணி காரணமாக, தொடங்க முடியாத தொல்லைக்கு உள்ளாக வேண்டியுள்ளது என்ற உண்மையை சி.எஸ். போன்ற பெரியவர்கள் எடுத்துக் காட்டியுள்ளதானது ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

அந்தக் கருத்தரங்க மாநாட்டில் திரு.சி.சுப்பிரமணியம் அவர்கள்,

கங்கை, காவிரி நதிகளை இணைக்கும் திட்டம் குறித்து, முப்பது ஆண்டுகளுக்கு முன்பே விவாதிக்கப்பட்டது. ஆனாலும், அதனைத் தற்போது நிறைவேற்றுவதில் பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே மேற்கே உள்ள நதிகளை ஒன்றாகவும், கிழக்கேயுள்ள நதிகளை ஒன்றாகவும், தெற்கேயுள்ள நதிகளை ஒன்றாகவும் இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். இது நடைமுறையில் சாத்தியமானது. பிராந்திய மனப்பான்மையை விட்டு விட்டு தேசிய நலன் கருதி இம் முயற்சிக்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்.

என்று கூறியிருக்கிறார். தேசிய ஜனநாயகக் கூட்டணியின் செயல்திட்டம் வகுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டபோது கூட, We will adopt a National Policy which provides for effective and prompt settlement of disputes and their time bound implementation. We will examine and take timebound steps to link Ganga-Cauvery rivers. அதாவது நீண்ட நாட்களாக உள்ள தண்ணீர் தகராறுகளைத் தீர்த்து முறையான உடன்பாடு காண தேசிய நீர்க் கொள்கை வகுக்கப்படும். கங்கை காவேரி இணைப்புப் பற்றி ஆராயப்படும்.

எனக் குறிப்பிடப்பட்டுள்ளதானது நினைவு கூரத்தக்கதாகும். அதனையொட்டி 20-5-2000 அன்று டெல்லியில் பிரதமர் தலைமையில் நடைபெற்ற மாநிலங்களுக்கு இடையேயான குழுக் (Inter-State Council) கூட்டத்தில் நாட்டில் உள்ள எல்லா நதிகளையும் இணைக்க வேண்டுமென்ற கருத்தை நான் தெரிவித்திருக்கிறேன்.

மத்திய பாசனத் துறையின் முன்னாள் அமைச்சர் மறைந்த கே.எல். ராவ், கங்கை, காவிரி நதிகள் இணைப்பின் வாயிலாக, அதிக அளவில் கிடைக்கும் உபரி நீரை தெற்கில் உள்ள நதிநீர் படுகைகளுக்கு கொண்டு சென்று தென் மாநிலங்களில் பயன்படுத்த ஒரு திட்டம் வகுத்தார்.

இதற்கு விந்திய மலை மேல் 1200 மீட்டர் உயரத்திற்கு நீரை ஏற்ற வேண்டும் என்றும், அதற்கு மிக அளவிலான மின்சாரம் தேவைப்படும் என்றும் கூறப்பட்டது.

1977-ஆம் ஆண்டு தொழில் நுட்ப அதிகாரிகள் மட்டத்தில் இது விவாதிக்கப்பட்டு, அதிக மின்சாரம் தேவைப்படும் என்பதால் இத்திட்டம் கைவிடப்படலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

இதே கூட்டத்தில் தீபகற்ப நதிகளை இணைப்பது குறித்து, தொலைநோக்கு திட்டம் ஒன்றும் தயாரிக்க முடிவெடுக்கப்பட்டது.

முதற்கட்டமாக தென்னிந்தியாவில், நதிகளை மகாநதி - கோதாவரி - கிருஷ்ணா - காவிரி - வைகை - குண்டாறு ஆகிய நதிகளை இணைக்க முடிவெடுக்கப்பட்டது. இதுகுறித்து பிரதமருக்கு நான் கடிதம் எழுதினேன்.

இதற்கு மத்திய அரசு 7-8-2000 தேதியிட்டு எழுதிய பதிலில் தேசிய நீர் மேம்பாட்டு முகமை தயாரித்து வரும் திட்டங்களின்

மீது சம்பந்தப்பட்ட மாநிலங்கள் இடையே ஒருமித்த கருத்து ஏற்பட்டவுடன் தேசிய நீர்வள ஆதாரக் குழுவின் பரிசீலனைக்கு வைத்து முடிவெடுக்கலாம் என்று தெரிவித்திருந்தது.

இத்திட்டம் தொழில்நுட்ப ரீதியாக நிறைவேற்றுவதற்கு சாத்தியமான ஒன்றாகும். மேலும் பொருளாதார அடிப்படையில் இது தென் மாநிலங்களுக்குத் தேவையான திட்டம்.

இதைக் கருத்தில் கொண்டு தீபகற்ப நதிகளை இணைப்பதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசையும், பிரதமரையும் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

நதிகளை இணைப்பதால்

கூடுதலான நிலப்பரப்பு, பாசனத்திற்குக் கொண்டு வரப்படும்.

வேளாண் உற்பத்தி பெருகும்.

விவசாயிகளுக்கும் உழவர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும்.

கூடுதலாக மின்சாரம் கிடைக்கவும் வாய்ப்புள்ளது.

குடிநீர் பற்றாக்குறை நீங்கும்.

பல இடங்களில் நீர் வழி போக்குவரத்தையும் ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது.

எனவே பெரியவர் சி.எஸ். அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளது போல, கங்கை, காவிரி இணைப்புத் திட்டம் நிறைவேற்றுவதில் உள்ள பிரச்சினைகளின் காரணமாக, அதனை ஒத்தி வைத்து விட்டு, மேற்கேயுள்ள நதிகளை ஒன்றாகவும் - கிழக்கே உள்ள நதிகளை ஒன்றாகவும் - தெற்கேயுள்ள நதிகளை ஒன்றாகவும் இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்திட முனைவதுதான் எதிர்காலத்துக்குச் சிலாக்கியமான வழியாகும்.

இப்படிப் பகுதி பகுதியாக நதிகளை இணைத்து விடின், இறுதியாக கங்கையைக் காவிரியுடன் இணைத்திடத்தக்க முயற்சியை எளிதாகவும் நிறைவேற்ற முடியும்.

சுதந்திரம் பெற்ற இந்த ஐம்பது ஆண்டு காலத்திற்கு மேலான கால கட்டத்தில் ஒரேயடியாக கங்கை, காவிரி இணைப்பு

என்று பேசிக் கொண்டு இருந்திடாமல் - பகுதி பகுதியாக நதிகளை இணைக்கும் செயலில் ஈடுபட்டிருந்தால் பெரிதும் வேளாண்மையை நம்பியிருக்கும் இந்த நாடு எவ்வளவோ முன்னேற்றம் பெற்றிருக்க முடியும்.

எனவே, கங்கை, காவிரி இணைப்பு என்பது ஒரு கோஷமாக இருந்தாலும், அந்தக் கோஷத்தின் அடிப்படை உண்மையைப் புரிந்து கொண்டு - அதன் முதற்கட்டமாகத் தீபகற்ப நதிகளை இணைக்கின்ற திட்டத்தைத் தொடங்கியாக வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

(21-09-2000)

2517. காலம் பதில் சொல்லக் காத்திருக்கிறது!

உடன்பிறப்பே,

தி.மு.க. ஆட்சியிலும், பின்னர் அ.தி.மு.க. ஆட்சியிலும் அமைச்சர்களாக இருந்த ஆறேழு நண்பர்கள் இணைந்து புரட்சித் தலைவர் அ.தி.மு.க. என்று புதுக்கட்சியொன்றைத் தொடங்கியிருக்கிறார்கள். எம்.ஜி.ஆர். விசுவாசிகள் அனைவரையும் ஒன்று திரட்டுவதுதான் புதிய கட்சியின் நோக்கம் என்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். குழந்தை பிறந்து இன்னும் தொப்புள்க் கொடிகூட அகற்றவில்லை என்ற நிலையில், அதன்மீது கட்டாரிகளை வீசுவது போல, அந்தப் புதிய கட்சியின் சிரசோதயத்தைக் கூடத் தாங்கிக்கொள்ள முடியாமல், கடுமையான கண்டத்தில் அ.தி.மு.க. தலைமை இறங்கிவிட்டது.

- விசுவாசமற்றவர்கள்
- நம்பிக்கையற்றவர்கள்
- சித்துவேலைக்காரர்கள்
- எம்.ஜி.ஆரின் ஆன்மா இவர்களை மன்னிக்காது
- துரோகத்தின் சின்னங்கள்

இத்தனை வார்த்தை அலங்கார அர்ச்சனைகளுடன்,

“வயதான காலத்தில் எங்காவது பொழுதுபோக்கு சங்கத்தில் சேர்ந்து ஒரு ஓரத்தில் முடங்கிக் கிடக்க வேண்டியதுகளுக்கு, திடீரென்று ஒலிம்பிக் ஓட்டப் பந்தயத்தில் பங்கேற்கும் ஆசை வரலாமா?”

என்ற கேள்வியையும் அ.தி.மு.க. தலைமை கேட்டுள்ளது.

வயதானவர்கள் அரசியலிலேயே ஈடுபடக்கூடாது என்பதுதான் இலக்கணமெனில், காந்தியடிகள் நவகாளி யாத்திரைக்குப் பதில் காசி ராமேஸ்வரம் என்று தீர்த்த யாத்திரையில் தான் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்திருக்க வேண்டும்.

வெண்தாடி வேந்தர் தந்தை பெரியார், தனது தள்ளாத வயதிலும், சிறுநீர் தங்கும் வாளியொன்றை இடுப்பின் அருகே பொருத்திக் கொண்டு, சாவின் கொடுங்கரத்தில் வீழ்வதற்குச் சில நாட்களுக்கு முன்பு வரையில் கூட்டங்களில் பேசிக் கொண்டிருந்தாரே! அவர் இழுத்துப் போர்த்துக் கொண்டு தன் பணியை சுருட்டி வைத்துவிட்டுப் படுக்கையில் கிடந்து விடவில்லையே!

கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்கள், வாலிபத்தில்தான் எனக்கு அரசியல் - வயோதிகத்தில் அல்ல! என்று கூறித் தன்னை விடுவித்துக் கொள்ளவில்லையே!

பெருந்தலைவர் காமராஜர், இந்திரா காந்தி பிரகடனப்படுத்திய நெருக்கடி நிலையை எதிர்த்து, தேசம் போச்சு! தேசம் போச்சு! என்று தேம்பும் குரலில் கூறியது திருத்தணி வட்டாரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்ட மேடைகளில்தானே - அவரென்ன வயதாகிவிட்டது. இனி எனக்கு அரசியல் தேவையில்லை என்று அறிவித்து விட்டவரா?

விழிகளை இறுதியாக மூடும் வரையில் வித்தகர் ராஜாஜி தனது அரசியல் சிந்தனையிலிருந்து விடுபடவில்லையே!

உடன்பிறப்பே! இதை எழுதிக் கொண்டிருக்கிற நானும் - எழுபத்தி ஏழு வயதை எட்டிப் பிடித்தவன் என்பதை ஒருவேளை நீ மறந்திருந்தாலும், நான் மறப்பவனில்லையே! இன்னும் இருக்கிற கொஞ்ச காலம் - எஞ்சியிருப்பது நாட்களோ, மாதங்களோ, ஓரிரு வருடங்களோ, உன் தோளோடு தோள் நின்று இந்த நாட்டுக்காக, சமுதாயத்திற்காக, தமிழ் மொழிக்காக, ஆம்! பொதுப்பணிக்காகவே இறுதி மூச்சை வழங்க வேண்டுமென்று எண்ணிக்கிடப்பவன் தானே நான்! அதனால்தானே இந்த வயதிலும் எல்லாவற்றையும் சகித்துக் கொள்ள முடிகிறது!

உடன்பிறப்பே,

எம்.ஜி.ஆர். பெயரை முன்வைத்து தொடங்கப்பட்டுள்ள புதிய கட்சியின் மீது பாய்ச்சல் நடத்தியுள்ள அ.தி.மு.க. தலைமை, எம்.ஜி.ஆர். விசுவாசிகள் என்று தங்களைக் கூறிக்கொள்ள என்ன தகுதி இவர்களுக்கு இருக்கிறது? விசுவாசிகள் என்றால் என்ன அர்த்தம் என்று இவர்களுக்குத் தெரியுமா? என்று தனது கண்டனத்தில் கேலியையும் கலந்திருக்கிறது. அத்துடன் அந்த

அறிக்கையில் எம்.ஜி.ஆரின் உண்மை விசுவாசி ஜெயலலிதா அம்மையார்தான் என்றும் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது.

நமக்குத் தெரியும், புதிய கட்சி ஆரம்பித்துள்ள நண்பர்களுக்குத் தெரியும். அந்த அம்மையார் எம்.ஜி.ஆர். அவர்களிடம் காட்டிய விசுவாசம் எத்தகையது என்பது! அவற்றையெல்லாம் விவரித்துச் சொல்ல என்னாலும் முடியாது. அந்த நண்பர்களாலும் முடியாது. நாகரிகம் என்று ஒன்று இருக்கிறதல்லவா - அதனால்!

அந்த விசுவாசம் பற்றி எம்.ஜி.ஆர். கழகத் தலைவர் திரு. ஆர்.எம்.வீ. அவர்கள், ஒரு பெரிய புத்தகமே எழுதியுள்ளார். அதைவிட அவரது விசுவாசத்துக்கு (?) ஆதாரபூர்வமான சான்று ஒன்றும் உண்டு.

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் உடல் நலிவுற்று அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுத் திரும்பிய பிறகு சரியாகப் பேசமுடியாமலும், செயல்பட முடியாமலும் சிரமப்பட்டபோது, அம்மையார் பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுதிய கடிதம் பிளாக் செய்யப்பட்டு பத்திரிகைகளில் வெளிவந்ததே - அதை மறக்க முடியுமா? மறுக்கத்தான் முடியுமா?

> "என்னுடைய செல்வாக்கு வளருவதைக் கண்டு எம்.ஜி.ஆர். பொறாமைப்படுகிறார்."

என்று அந்தக் கடிதத்தில் ஜெயலலிதா அம்மையார் குறிப்பிட்டார்களே? அதற்குப் பெயர்தான் எம்.ஜி.ஆர். விசுவாசம் என்று அ.தி.மு.க. கருதுகிறதா? ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கடிதம் - அம்மையார் கைப்பட எழுதப்பட்ட கடிதம் - பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி அவர்களிடம் நேரடியாகக் கொடுக்கும்படி அனுப்பப்பட்ட கடிதம் - கொடுக்கச் சென்றவர் அக் கடிதப் பிரதிகளை சில ஏடுகளுக்குக் கொடுத்துவிட்டதால், அப்போதே பிரபலமான கடிதம். எம்.ஜி.ஆரிடம் அம்மணியாருக்குக்குள்ள அதிவிசுவாசத்தை (?) காட்டும் கடிதம். அவரிடமிருந்து அதிகாரத்தைப் பறித்துத் தன்னிடம் தர வேண்டும் என்ற நோக்கத்துடன் எழுதப்பட்ட கடிதம்.

இப்போது புதுக்கட்சி ஆரம்பித்துள்ளவர்களிடம் இதுபோன்ற எம்.ஜி.ஆர். விசுவாசத்தைக் காண முடியாதுதான்!

புதிதாகக் கட்டப்பட்ட சினிமா நகருக்கு எம்.ஜி.ஆர். பெயரை வைக்கச் சொல்லி சினிமா உலகமே ஒருசேரக் கேட்டபோது அதனை மறுத்துவிட்டு, அதற்குத் தன் பெயரையே சூட்டிக்கொண்டவர் அம்மணியார் - அவர் எம்.ஜி.ஆர். விசுவாசியாம்! புதுக்கட்சி தொடங்கியுள்ள நண்பர்கள், தங்களை எம்.ஜி.ஆர். விசுவாசிகள் என்று கூறிக்கொள்ளத் தகுதியற்றவர்களாம்! பொழுதுபோக்கு சங்கத்திற்குப் போக வேண்டியவர்களாம்!

புதிது புதிதாக ஆரம்பமாகும் கட்சிகளைப் பற்றி விமர்சிப்பது என்பது வேறு! அதைத் தொடங்குபவர்களைப் பற்றி கருத்துக் கூறுவதில் பண்பாடு இருக்க வேண்டுமல்லவா?

இன்று நேற்றல்ல! எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவதும், அறிக்கை விடுவதுமான அநாகரிகப் போக்கு அ.தி.மு.க. தலைமைக்குப் புதிதல்ல!

அதைத் தாங்கிக் கொள்ளும் பக்குவத்தை அதன் தோழமைக் கட்சிகளே வேறுவழியின்றிக் கொஞ்சம் கொஞ்சமாக பழகிக்கொண்டு விட்ட நிலையில், எல்லாக் கட்சிகளின் மீதும் விழுந்து பிராண்டிடும் துணிச்சல் ஏற்பட்டிருப்பது வியப்புக்குரியதல்ல!

அ.தி.மு.க. தோழமைக் கட்சிகளின் தலைவர்கள் சிலர், போடு தோப்புக்கரணம் என்றால் எண்ணிக் கொள்ளுங்கள் என்று கூறுகிற வீரர்களாகிவிட்ட பிறகு, எல்லாக் கட்சிகளின் மீதும் - இப்படித்தான் தரக்குறைவான தாக்குதலைத் தொடுத்திட அ.தி.மு.க. நினைக்கும்.

அந்த நினைப்பில்தான் புதிய கட்சியினைத் தொடங்கியுள்ள பழைய நண்பர்கள் மீது, இவ்வாறு சேறும், சகதியும் இறைத்துள்ளது.

எனினும், இவற்றுக்கெல்லாம் பதில் சொல்ல காலம் காத்துக் கொண்டு தானிருக்கிறது.

அன்புள்ள,

மு. க.

(22-09-2000)

2518. இந்த சமுதாயத்தைப் பிடித்த பீடைகள்!

உடன்பிறப்பே,

நீதிமன்றத் தீர்ப்பு, அரசியல் கட்சிகளுக்கிடையே அமளி, கட்சிக்குள் எடுக்கும் நடவடிக்கை இவற்றுக்கு அரசுப் பேருந்துகள் எப்படிக் காரணமாகும்? அவற்றைத் தாக்குவது என்பது அறிவுடைமையா? அனுமதிக்கக் கூடியதா? இல்லை! இல்லவே இல்லை!

கொடைக்கானல் பிளசண்ட் ஸ்டே ஓட்டல் வழக்கில் முன்னாள் முதல் அமைச்சர் ஜெயலலிதா உட்பட, ஐந்து பேருக்கு தலா ஓராண்டு சிறைத் தண்டனை விதித்து தனி நீதிபதி தீர்ப்பளித்தார். தீர்ப்பு வெளியான உடன் தமிழகம் முழுவதும் அ.தி.மு.க.வினர் வன்முறையில் ஈடுபட்டனர்.

தர்மபுரிமாவட்டத்தில் கோவை வேளாண்மைக் கல்லூரி மாணவிகள் சென்ற பேருந்துக்குக் கயவர்கள் தீ வைத்ததில் மூன்று மாணவிகள் பேருந்துக்குள்ளேயே சிக்கி பரிதாபமாக மாண்டு மடிந்தனர். பதினாறு மாணவிகள் தீக்காயம் அடைந்தனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் அருகேயுள்ள இலக்கியப்பட்டியில் பேருந்துகளை மறித்து, கற்களை வீசி, தாக்குதல் நடத்தினர். அப்போதுதான் கோவை வேளாண்மைக் கல்லூரியைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் இரண்டு பேருந்துகளில் ஒகேனக்கல் சுற்றுலா சென்றுவிட்டு கோவைக்கு வந்து கொண்டிருந்தனர். தர்மபுரி வந்தபோது ஓர் உணவு விடுதியில் சாப்பிட்டுவிட்டு மீண்டும் புறப்பட்டனர். அப்படி வரும் வழியில்தான் கொடியவர்கள் வழி மறித்தனர். அவர்களைப் பார்த்து கல்லூரிப் பேராசிரியர்கள் எங்களை கலெக்டர் அலுவலகம் வரை போக விட்டுவிடுங்கள். மாணவ மாணவிகளாக இருப்பதால் அவர்கள் தங்குவதற்கு நாங்கள் ஏற்பாடு செய்து கொள்கிறோம் என்று கூறினர். அந்த வேண்டுகோளைக் காதில் போட்டுக் கொள்ளாமலே பேருந்துக்கு தீ வைக்கப்பட்டது.

அலறி அடித்துக் கொண்டு மாணவிகள் வெளியேறினர். இதைக் கண்டதும் மற்றொரு பேருந்தில் இருந்த மாணவர்கள் காப்பாற்ற ஓடி வந்தனர். ஆனாலும் மூன்று மாணவிகள், வெளியேற முடியாமல் கருகி உயிரோடு கொல்லப்பட்டனர்.

பலியான மூன்று மாணவிகளில் ஒருவர் சென்னையைச் சேர்ந்தவர். அவருடைய பெயர் ஹேமலதா. பி.எஸ்.ஸி. வேளாண்மை இரண்டாம் ஆண்டு படித்து வந்தார். அவருடைய தந்தை பெயர் கேசவசந்திரன். தாயார் காசி அம்மாள். கேசவசந்திரன் திருவண்ணாமலை இந்தியன் வங்கியில் உதவி மேலாளராக பணியாற்றி வருகிறார். தாயார் காசி அம்மான் சென்னை வேளச்சேரி மாநகராட்சி பள்ளியில் ஆசிரியையாக வேலை செய்து வருகிறார். ஹேமலதாவின் சகோதரி உமாமகேஸ்வரிக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளர் பதவி வழங்க அரசு முயற்சி எடுத்து, அப்பதவியில் கிடைத்த முதல் மாத ஊதியம் ரூபாய் 12000-த்தை முதலமைச்சர் நிவாரண நிதிக்கு அளித்து, உமாமகேஸ்வரி எழுதிய கடிதமும் இன்று எனக்கு கிடைத்தது என்பதையும் உனக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொரு மாணவி கோகிலவாணி. இவரது வயது 20. இவர் நாமக்கல் ஏ.எஸ். பேட்டை குழந்தான் தெருவைச் சேர்ந்த கோழி வியாபாரி வீராசாமியின் மகள் ஆவார். கோகிலவாணியின் தாயார் சரஸ்வதி. கோகிலவாணி கோவை விவசாயப் பல்கலைக் கழகக் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்து வந்தவர். சுற்றுலா முடிந்ததும் விடுமுறைக்கு வீடு வருவதாகக் கூறிச் சென்றவர் திரும்பி வரவே இல்லை.

தீயோர் மூட்டிய தீக்குப் பலியான மற்றொரு மாணவியின் பெயர் காயத்ரி. இவரது வயது 20. இவர் விருத்தாசலத்தைச் சேர்ந்தவர். தந்தை பெயர் வெங்கடேசன். தாயார் குளச்சி.

இந்தச் சம்பவம் தொடர்பாக அடுத்த நாளே தர்மபுரி போலீசார் கொலை வழக்கு பதிவு செய்து அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஐந்து பேர்களை கைது செய்தனர். அவர்கள், தர்மபுரி நகர் எம்.ஜி.ஆர். மன்றச் செயலாளர் டி.கே. முருகேசன், அ.தி.மு.க. மாவட்ட அவைத் தலைவர் எம். வேலாயுதம், புழுதிக்கரை முருகன், தர்மபுரி முருகன், டைலர் மணி ஆகியோராவர். தொடர்ந்து மற்ற குற்றவாளிகளும் கைது செய்யப்பட்டனர். தர்மபுரி ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர்

டி.கே. ராஜேந்திரன், முத்து என்கிற அறிவழகன் ஆகியோர் சேலம் நீதிமன்றத்தில் சரண் அடைந்தனர்.

அதாவது ஒரு நீதிமன்றம் வழங்கிய தண்டனைக்காக, அந்தத் தீர்ப்புக்குச் சற்றும் சம்பந்தமில்லாத மூன்று மாணவிகளின் உயிர் குடிக்கப்பட்டது. தங்கள் தலைமையை திருப்தி செய்ய வேண்டுமென்பதற்காக, அக்கட்சியில் உள்ள வன்முறையாளர்கள் நடத்திய திருவிளையாடல்களின் விளைவுதான் இந்தக் கொடுமை.

இந்த உச்சகட்டக் கொடுமையோடு இதுபோன்ற நிகழ்ச்சிகள் முடிவடைந்து விடும் என்று எதிர்பார்ப்பதும், முடிவடைந்து விட வேண்டுமென்று நினைப்பதும் இயல்பேயாகும்.

ஆனால் அதற்கு மாறாக, இதோ மற்றொரு சம்பவம். புதுவை மாநிலத்தில் நடைபெற்ற விரும்பத்தகாத ஒரு வன்முறைச் சம்பவத்தின் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட கிளர்ச்சியின் காரணமாக, நிகழ்ந்த கோரச் சம்பவம் இது.

புதுவை மாநிலத்தில், புதுவை அருகே அபிஷேகப்பாக்கம் என்ற கிராமத்தில் டாக்டர் திரு. ராமதாஸ் அவர்கள் சென்ற காரை வழிமறித்து விடுதலைச் சிறுத்தை அமைப்பைச் சேர்ந்தவர்கள், உருட்டுக் கட்டைகளாலும், கற்களாலும் தாக்கியதில் டாக்டர் ராமதாஸ் காயமின்றித் தப்பியதாகவும், அவரது கார் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டதாகவும் ஏடுகளில் செய்தி வந்ததும், உடனடியாக திண்டிவனத்திற்கு தொலைபேசி மூலம் டாக்டரிடம் நலம் கேட்டதுடன், அந்த வன்முறைச் சம்பவத்தையும் நான் அறிக்கை வாயிலாகக் கண்டித்தேன். புதுவை முன்னாள் முதல்வர் தம்பி ஜானகிராமனையும் டாக்டரிடம் நலம் விசாரிக்க நேரடியாக அனுப்பி வைத்தேன்.

டாக்டர் ராமதாஸ் அவர்கள், தாக்கப்பட்ட செய்தியைத் தொடர்ந்து தமிழகத்திலும் ஆங்காங்கு பேருந்துகள் மீது கல்லெறியும் சம்பவங்கள் நடைபெறத் தொடங்கின. சென்னையிலிருந்து இரு நாட்களுக்கு முன்பு (18-ந்தேதி) புதுவை வழியாக கடலூர் செல்லும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று சென்னையில் இருந்து சென்றபோது விக்கிரவாண்டிக்கும், கோலியனூர் குறுக்கு சாலைக்கும் இடையில் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் மேல்பாதி என்ற இடத்தில் இரவு சுமார்

8.45 மணி அளவில் வன்முறையாளர்களால் மறிக்கப்பட்டு கல்லெறிதலுக்கு உட்பட்டது. அந்தக் கல்லில் ஒன்று பேருந்தின் ஜன்னல் ஓரம் உட்கார்ந்திருந்த பெண்மணி ஒருவரின் நெற்றியில் தாக்கியது. ரத்தம் சொட்ட சொட்ட மயங்கி விழுந்த அந்தப் பெண்மணியைக் காப்பாற்ற பேருந்தை திருப்பி விழுப்புரம் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு வந்தனர். ஆனால் வரும் வழியில், அந்தப் பெண்மணி இறந்து விட்டார்.

அவர் பெயர் ரேவதி. வயது 28. புதுவை சேலை நகர் பகுதியைச் சேர்ந்த மீனவர் விநாயகமூர்த்தியின் மனைவி. குழந்தைகள் பிரதீப்குமார் (3 வயது) பிரதாப்குமார் (18 மாதக் குழந்தை) ஆகியவர்களுடன் சென்னையில் நடைபெற்ற திருமணம் ஒன்றுக்குச் சென்று திரும்பும் வழியில் இந்தச் சோக நிகழ்ச்சி!

தாயுடன் பயணம் செய்த தளிர்கள் எதிர்பாராத இந்தக் குரூரத் தாக்குதலால் அரைக் கணத்தில் தாயற்ற பிள்ளைகளாகி விட்டனர்.

உடன்பிறப்பே, எதற்கெடுத்தாலும் சாலைகளை மறிப்பது, பேருந்துகளைத் தாக்குவது, கொளுத்துவது என்ற வன்முறை வெறியாட்டத்தில் ஈடுபடுகிற கயவர்களைக் காவலர் பிடித்து கடுமையான சட்டப் பிரிவுகளில் தண்டிப்பது மட்டுமல்ல, பொது மக்களும் வீரத்துடன் எதிர்த்து நின்று அத்தகைய கும்பலின் அட்டகாசத்தைக் குறைப்பதில் காவல் துறைக்கு உதவிட வேண்டும். சில இடங்களில் மட்டுமே பொதுமக்களின் இத்தகைய ஒத்துழைப்பு கிடைக்கிறது.

இதோ - மதுரையில் கட்சிக் கட்டுப்பாட்டை மீறியவர்கள் மீது கழகத் தலைமை நடவடிக்கை எடுத்தால், இன்னும் அதிகமாக மீறுவோம் என்று ஆர்ப்பரித்து ஒருசிலர் தங்களின் வீரத்தைப் பேருந்துகள் மீது காட்டி வருகின்றனர். ஆளும் கட்சியினராயிற்றே என்று பாராமல், சட்டப்படி கைது செய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டுள்ளனர். இன்று வன்முறை அவர்களுக்கு உற்சாகமாக இருக்கலாம். உடனிருந்து உசுப்பி விடுபவர்களுக்கும் குதூகலமாகத் தெரியலாம்.

வன்முறையில் ஈடுபடும் விலங்கு மனத்தினர் எதிர்க்கட்சியில் இருந்தாலும், தோழமைக் கட்சியில் இருந்தாலும், ஆளுங்கட்சியிலே இருந்தாலும் - சட்டத்தின் மூலம் அவர்கள்

கடுமையாகத் தண்டிக்கப்படுவர் என்பதற்கு நேரடியாகவே நீ சாட்சியங்களைப் பார்க்கிறாய்.

இதில் எந்தவிதமான ஆசாபாசங்களுக்கும் இடமில்லை. அரசியலில் கல் எறிவதையும், வன்முறைச் சேட்டைகளையும் தங்களின் கலாச்சாரமாகக் கொள்பவர் யாராயினும், அவர்கள் இந்தச் சமுதாயத்தைப் பிடித்த பீடைகள்! கொடியவர்கள்! கண்டிக்கப்பட வேண்டியவர்கள்! தண்டிக்கப்பட வேண்டியவர்கள்!

அரசாங்கப் பேருந்துகள் மீது வீசப்பட்ட ஒவ்வொரு கல்லும் - பற்ற வைக்கப்பட்ட ஒவ்வொரு தீக்குச்சியும் பயணிகளின் கோபத்திற்கு உள்ளாகியவை மட்டுமல்ல, பாதிக்கப்பட்டவர்களின் சாபத்திற்கும் உள்ளாகியவையாகும். இன்னும் சொல்லப் போனால் என் இதயத்தை கிழிக்க எறியப்பட்ட கற்கள்! தீப்பந்தங்கள்!

1969ல் அண்ணா மறைவுக்குப் பிறகு நான் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்ததும், அந்தப் பொறுப்புக்கு நான்தான் வரவேண்டுமென்று வாதிட்டு வென்ற தந்தை பெரியார் அவர்கள், என்னிடம் கூறிய அறிவுரை என்ன தெரியுமா?

> “அண்ணா சொல்லிவிட்டுப் போன கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டில் முதலிரண்டையும்விட மூன்றாவதாகச் சொன்ன கட்டுப்பாடுதான் கட்சிக்கு முக்கியம் என்பதை மறந்து விடாதே!”

பெரியார் சொன்ன இந்த அறிவுரையை மதித்து நடப்பதும் - மறவாமல் இருப்பதும்தான், கட்சிக்கு மட்டுமல்ல - நாட்டுக்கும் நல்லது என்பதை, உடன்பிறப்பே, உனக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(23-09-2000)

2519. வெள்ளைத் துணியில் விழுந்த ஒரு துளி கறுப்பு மை!

உடன்பிறப்பே,

நேற்று (22-9-2000) மாலை 6.30 மணியளவில் வழக்கம்போல் சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்துக்குச் சென்றேன். அலுவலக அறையின் வாயிற்புறத்தில் நுழைய முடியாத அளவுக்கு டி.வி. கேமராக்களுடன் செய்தியாளர்கள் பெருங்கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். என்னவென்று கேட்டால், பேட்டி காண வந்திருக்கிறோம் என்று கூறிக்கொண்டே என் முகத்தைச் சுற்றி ஒலி வாங்கிகளை நீட்டி விட்டனர்.

பேட்டி காண வேண்டுமென்றால், யாராவது ஒருவர் எங்கள் செயலாளரிடம் சொல்லி, அதன் பேரில் நான் அழைத்த பிறகு உள்ளே வந்து அமைதியாகக் கேள்விகளைக் கேட்டு விடைகளைப் பெற வேண்டும். அதைவிடுத்து - நான் வீட்டுக்குச் சென்றால் வீட்டு வாசலிலும் - கோட்டைக்குச் சென்றால் அங்குள்ள அலுவலக முகப்பிலும், தெருமுனைகளிலும் கூட்டமாக நின்றுகொண்டு ஏககாலத்தில் ஆளுக்கொரு கேள்வி கேட்கிறீர்களே நான்தான் பதில் சொல்ல இயலுமா? - உங்கள் கூச்சலில் பதில் சொன்னால்தான் உங்களுக்குத் தெளிவாகப் புரியுமா? என்று சற்று வருத்தத்துடனேதான் அவர்களைப் பார்த்துக் கேட்டேன். அவர்களால் அதை உணர்ந்துகொள்ள முடிந்தது. இருந்தாலும் செய்தி சேகரிப்பதில் அவர்கள் ஒருவருக்கொருவர் இருந்த ஆர்வம் மிகுந்த போட்டியில் என் வேண்டுகோளை அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை.

இரண்டே இரண்டு கேள்விதான் சார்! அதை மட்டும் விளக்கிவிட்டுப் போய் விடுங்கள்.

என்றார்கள்.

என்ன கேள்வி?

என்று கேட்டேன்.

அவர்கள் கேட்ட கேள்விகளையும், நான் சொன்ன பதில்களையும் தமிழ்ப் பத்திரிகைகள் பலவற்றில் உன்போன்ற உடன்பிறப்புகள் படித்திருப்பீர்கள்.

மேற்கு வங்க அரசைப் பற்றிக் கேட்டார்கள் - அதுதான் செய்தியாளர்களின் முதல் கேள்வியே! அதற்குப் பதில் சொல்லிவிட்டு, மேற்கு வங்க அரசானாலும், வேறு எந்த அரசானாலும் அதனைக் கலைப்பதற்கு அரசியல் சட்ட 356-வது பிரிவைப் பயன்படுத்துவதை தி.மு.க. நிச்சயம் ஆதரிக்காது என்று திட்டவட்டமாகத் தெரிவித்தேன்.

356-வது பிரிவு முழுமையாக அகற்றப்பட வேண்டியதில்லை - அதை வைத்துக்கொண்டு அதனை மென்மையாக்கிடத் திருத்தங்கள் செய்யலாம் என்கிற அளவுக்கு திரு. ஜோதிபாசுவும், கம்யூனிஸ்டு கட்சியும் எற்கனவே கருத்தறிவித்தபோதுகூட, அதை ஏற்றுக் கொள்ளாமல் தி.மு.கழகம், 356 பிரிவு அறவே நீக்கப்பட வேண்டுமெனக் குரல் கொடுத்துள்ளது என்பதையும் அந்த நிருபர்களுக்கு விளக்கிச் சொன்னேன். அதுபற்றி நான் கடந்த காலத்தில் திரு. ஜோதிபாசு அவர்களுக்கு கடிதம் எழுதியதையும் நினைவுபடுத்தினேன். 13-2-1997 தேதியிட்ட அந்தக் கடிதத்தையும் இந்த கடிதத்தில் இணைத்துள்ளேன்.

அன்பார்ந்த பாசு அவர்களே,

இந்த நாட்டின் மூத்த அரசியல்வாதிகளில் ஒருவரும், தொலைநோக்கு பார்வை கொண்டவருமான உங்களுக்கு என்னுடைய வேண்டுகோள் ஒன்றினை இந்தக் கடிதத்தின் மூலம் விடுக்கின்றேன்.

இந்த நாட்டிலே ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் கொண்டு வரக்கூடிய உண்மையான கூட்டாட்சி முறையைக் கொண்டு வர வேண்டும் என்பது நம்முடைய பொதுவான கனவாகும். அந்தப் பின்னணியிலேதான் அரசியல் அமைப்புச் சட்டப் பிரிவு 356ஐ அறவே அகற்ற வேண்டுமென்று இதுவரை உங்கள் கட்சி வாதிட்டு வந்தது. ஆனால், அண்மையிலே நடைபெற்ற மாநிலங்களுக்கு இடையே ஆன நிலைக் குழு

(Interstate Council) கூட்டத்தில் நீங்கள், 356வது பிரிவைத் தவறாகப் பயன்படுத்தக்கூடாது என்ற பாதுகாப்போடு அந்தப் பிரிவு நீடித்திருக்கலாம் என்று தெரிவித்த கருத்தினை கேட்டு நான் ஆச்சரியப்பட்டுப் போயிருக்கிறேன்.

பாதுகாப்பு எந்த வகையிலே இருந்தாலும், அந்த விதியிலே உள்ள அதிகாரம் மிகப் பரவலானது என்பதால் மத்தியில் உள்ள ஆளுங்கட்சியினர் அந்த விதியை தவறாகப் பயன்படுத்துவதற்கானத் தூண்டுதலைக் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும் என்பதுதான் என்னுடைய தெளிவான கருத்தாகும்.

உலகத்திலே எந்த நாட்டிலும் கூட்டாட்சி என்று சொல்லிக் கொண்டு இதுபோன்றதொரு சட்டப்பிரிவை வைத்துக் கொண்டிருக்கவில்லை.

நம்முடைய அரசியல் சட்டத்திலே ஜனநாயகத்திற்கும், கூட்டாட்சிக்கும் விரோதமான இந்தச் சட்டப்பிரிவை தொடர்ந்து நீடிக்க விட்டால் நாம் நம்முடைய கடமையிலிருந்து தவறியவர்களாவோம். எனவே உங்கள் நிலையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தச் சட்டப் பிரிவு இல்லாத நிலையில், மத்திய அரசுக்கு எது பொருந்துமோ அதுவே மாநில அரசுகளுக்கும் பொருந்தும். மாநிலங்களைத் தனிமைப்படுத்திவிட்டு மத்தியிலே மட்டும் ஜனநாயகம் இருக்க முடியாது.

நாடு முழுமைக்கும் சேர்த்துத்தான் ஜனநாயக முறை தொடரப்பட வேண்டும். தவறான காரணங்களைக் காட்டி அரசியல் அமைப்புச் சட்டப்படி மாநில நிர்வாகம் நடந்து கொள்ளவில்லை என்று குடியரசுத் தலைவர், மத்திய அரசில் ஆளுங்கட்சியின் கட்டுப்பாட்டிலே இயங்கும் ஆளுநருடைய பரிந்துரையின் மீது நடவடிக்கை எடுத்து பிரகடனம் செய்யும் நிலை இனி கூடாது.

எனவே இந்த யோசனையை தாங்கள், தீவிரமாக பரிசீலிக்க வேண்டுமென்று மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், உண்மையான

கூட்டாட்சி என்ற இலட்சியத்தை நோக்கி நடை போடுவதற்கு இதுவே தக்கத் தருணமாகும்.

உண்மையான கூட்டாட்சியை நோக்கி நமது பயணத்தைத் தொடருவதற்கான முயற்சியை தாங்கள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுவே நமது வருங்கால சந்ததியினருக்கு நாம் அளிக்கின்ற ஒரு விலை உயர்ந்த பொக்கிஷமாகத் திகழும்.

அன்புள்ள

மு. க.

உடன்பிறப்பே, மேற்கு வங்கத்தில் சட்டம் ஒழுங்கு எப்படி என்பதை மத்திய அரசு ஆய்வு செய்யலாமா என்ற கேள்விக்கு நிருபர்களிடம் நானளித்த பதில், இன்றுள்ள நிலவரப்படி எந்த மாநிலத்திலும், சட்டம் ஒழுங்கு அளவுக்கு மீறி கெட்டுவிட்டால் அதைப்பற்றி மத்திய அரசு ஆய்வு செய்யலாம் என்பதாகும். இந்தப் பதிலால் அந்த மாநில அரசு மீது 356ஐப் பாய விடலாம் என்று எவரும் பொருள் கொள்ள முடியாது - அப்படிப் பொருள் கொள்ளவும் கூடாது.

356வது பிரிவைப் பயன்படுத்தி ஒரு மாநில அரசைக் கலைப்பதைத் தி.மு.க., வேரோடும், வேரடி மண்ணோடும் எதிர்க்கிறது என்று நான் திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறேன், அந்தப் பேட்டியில்!

உடன்பிறப்பே, அலுவலக வாசலில் தரப்பட்ட அந்த அவசரப் பேட்டியில், முதல் கேள்வியும், இரண்டாவது கேள்வியும், மூன்றாவது கேள்வியும் மேற்கு வங்க மாநில அரசைப் பற்றியதுதான். அந்தக் கேள்விகளுக்கு நான் சொன்ன விளக்கங்களை நீயும் மற்றவர்களும் சில தமிழ் ஏடுகளில் மட்டுமே விரிவாகக் காண முடியும். வேறு சில ஏடுகளில் காண முடியாது.

மதுரையைப் பற்றி ஒரு கேள்வி கேட்கப்பட்டது - அது உட்கட்சி விவகாரம் என்றேன். அதை மட்டும் மலையாக்கி கை, கால், கண், மூக்கு எல்லாம் வைத்து அந்தப் பத்திரிகைகள் குட்டிக் கட்டுரைகள், கேலிச் சித்திரங்கள் வெளியிட்டிருக்கின்றன.

பரபரப்பாக அரசியல் வட்டாரத்தில் விவாதிக்கப்படுகிற மேற்கு வங்க மாநிலம் தொடர்பான கேள்வியையும், என் பதிலையும்

அப்படியே ஒரு மூலையில் தள்ளிவிட்டு, மதுரையை ஏன் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார்கள் என்பது புரிகிறதா உனக்கு?

மதுரைச் செய்திகளையோ, செய்தியாளர்களுக்கு நான் சொன்ன பதில்களையோ ஏன் அந்த ஏடுகள் வெளியிட வேண்டும் என்று நான் கேட்கவில்லை. அப்படிக் கேட்பது அறிவுடைமையல்ல என்பது எனக்குத் தெரியும். நானும் ஒரு பத்திரிகையாளன் என்பதை மறந்துவிடாமல் இருப்பதால்தான், பத்திரிகைச் சுதந்திரத்தில் தலையிடாமலே அனைத்தையும் தாங்கிக் கொள்கிறேன்.

ஆனால் பத்திரிகையாளர்கள் எந்தக் கேள்விக்குப் பதில் பெற அண்ணா அறிவாலயத்தில் அவ்வளவு நேரம் காத்திருந்தார்களோ, அந்த மேற்கு வங்கம் பற்றியும் - 356வது பிரிவைப் பற்றியும் - நான் சொன்னவற்றை ஓரம் தள்ளிவிட்டு மதுரையை மட்டும் மலையாக்கி, மாமலையாக்கி மகிழ்கிறார்களே? மாநில அரசுகளைக் கலைப்பதில் கழகத்தின் நிலைப்பாடு என்ன என்பதை அவ்வளவு திட்டவட்டமாக விளக்கிக் கூறினேனே - அதை மாத்திரம் நெருப்புக் கோழி, தன் தலையை மட்டும் மறைத்துக் கொண்டு உடல் முழுதும் மறைந்து விட்டதாக எண்ணிக் கொள்ளுமாமே -அதைப்போல நெருப்புக் கோழி நினைப்பில் செயல்படுகிறார்களே - அது ஏன்? இப்போதாவது உனக்குப் புரிகிறதா?

கறுப்புத் துணியில் எத்தனை கரும்புள்ளிகள் விழுந்தாலும் தெரியாது!

தூய வெள்ளைத் துணியில் ஒரு துளி கறுப்பு மை விழுந்து விட்டால் அதுதான் பெரிதாகத் தெரியும். நம்மை வீழ்த்த நினைப்போருக்கு!

அன்புள்ள,

மு. க.

(24-09-2000)

2520. தந்தை பெரியார் எந்தன் கனவில் வந்தார்!

உடன்பிறப்பே,

நள்ளிரவு நேரம் எழுதிக் கொண்டிருந்தேன். எழுதி முடித்த பின்னரும் தூக்கம் வரவில்லை. வீட்டு நூலகத்திலுள்ள புத்தகங்களின் மீது பார்வை தாவியது. அளவில் சிறியதும், பக்கங்கள் குறைவானதுமான ஒரு புத்தகத்தை எடுத்தால் தூங்குவதற்குள் படித்து விடலாமே என்ற எண்ணத்துடன் அந்த வரிசையில் தேடினேன். அப்படியொரு புத்தகம் கிடைத்தது. தந்தை பெரியார் இறுதிச் சொற்பொழிவு அச்சியற்றப்பட்ட புத்தகம் அது. அதைப் பலமுறை படித்திருக்கிறேன் எனினும், ஒரு வரலாற்று நாயகனின் - புரட்சிப் பூகம்பத்தின் - பகுத்தறிவுப் பகலவனின் நெஞ்சத்தில் இறுதியாக மையங்கொண்டிருந்த கருத்துக்கள் என்ன என்பதை, மேலும் மேலும் அறிந்து கொள்ளலாம் என்ற ஆவல், அந்தப் புத்தகத்தைப் படிக்கத் தூண்டியது.

“பேரன்புமிக்க தலைவர் அவர்களே!

தாய்மார்களே! பெரியோர்களே!

என்று தொடங்கி,

இவ்வளவு நேரம் பொறுமையாய் இருந்ததற்கெல்லாம்
என்னைக் காது கொடுத்துக் கேட்டதற்கெல்லாம்
என்னுடைய மனப்பூர்த்தியான நன்றியறிதலைத்
தெரிவித்துக் கொண்டு என் பேச்சை முடித்துக்
கொள்கிறேன். வணக்கம்.”

என்று நிறைவுற்ற வரையில் பெரியாரின் முழக்கத்தை ஒலிநாடாவில் பதிவு செய்து, அதை அப்படியே சொல் பிசகாமல், எழுத்துப் பிசகாமல் அச்சியற்றி புத்தகமாக வெளியிடப்பட்டுள்ளது.

பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடாகவும்

மற்றும் மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி வெளியீடாகவும் அந்தப் பேச்சு நூல் தனித் தனியே வெளி வந்துள்ளது.

சென்னை தியாகராயர் நகரில் சிந்தனையாளர் மன்றச் சார்பில் 19-12-1973 அன்று, பெரியார் அவர்கள், ஆற்றிய கடைசிப் பேருரைதான் அந்தப் புத்தகம். அந்தப் பேருரைக்குப் பிறகு பெரியார் உயிருடன் இருந்தது ஒரு சில நாட்களேதான். அடுத்த ஐந்தாவது நாள் 24-12-1973 அன்று காலை 7.30 மணியளவில் பெரியார் மறைந்தார் என்ற செய்தி அனைவரையும் உலுக்கியது. தியாகராயர் நகரில் தனது கடைசி சொற்பொழிவை நிகழ்த்தி விட்டு விடைபெற்றுக் கொண்டவர், வேலூர் மருத்துவமனையில் நீங்காத்துயில் கொண்டார் என்ற செய்தி கேட்டவுடன் பெரியார் தனது சுற்றுப் பயணத்தை நிறுத்திக் கொண்டார் என்று நான் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டேன்.

அரசு மரியாதையுடன் அவர் உடலை அடக்கம் செய்தால், ஆட்சி பறிபோகும் என்று அதிகார வர்க்கத்தினர் கவலையுடன் தெரிவித்ததை அலட்சியப்படுத்திவிட்டு, பெரியாருக்கு அரசு மரியாதையுடன் இறுதி அஞ்சலி நடத்தினேன் என்பதற்காக என் ஆட்சி பறிபோகுமெனில், அதைவிட வேறு பெருமை எனக்கு இருக்க முடியாது என்று கூறிவிட்டு அரசு மரியாதையுடன் அய்யாவுக்கு அஞ்சலி செலுத்தி, நினைவிடமும் அமைத்தோம்.

அந்த நினைவுகளையெல்லாம் அசைபோட்டவாறு, அவரது இறுதிச் சொற்பொழிவுப் புத்தகத்தை முழுதும் படித்து முடித்தேன். புத்தகத்தில் வெளியீட்டாளர் பெயர் வரையில் படித்து முடித்த பிறகு ஒரு சிந்தனை! சிந்தனையின் தொடர்ச்சியாக உறக்கம்!

அந்த உறக்கத்தில் ஒரு கனவு! கனவில் வந்தவர் தந்தை பெரியார்!

என்ன! படுக்கையில் புரண்டுகொண்டிருக்கிறாய்? சிந்தனையா? பெரியாரின் கேள்வி இது!

ஆம், அய்யா! சிந்தனைதான். தாங்கள் தியாகராயர் நகரில் நிகழ்த்திய கடைசிப் பேருரையைப் படித்ததின் விளைவு இந்தச் சிந்தனை!

என்ன சிந்தனை? ஏதாவது சந்தேகமா?

அய்யா! ஒருவருடைய திட்டவட்டமான கருத்து என்று எதைக் குறிப்பிடுவது? அவர் மறைவதற்கு முன்பு, இறுதிக் காலத்தில் மக்களிடம் எந்த கருத்தைப் பரப்பினாரோ, அந்தக் கருத்தைத் தானே?

ஆமாம். அதில் என்ன சந்தேகம்? தியாகராயர் நகரில் நான் கடைசியாகப் பேசிய பேச்சை, இறுதிப் பேருரை என்றும் மரண சாசனம் என்றும் குறிப்பிட்டே புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறார்களே!

அந்தப் பேச்சில் அப்போது ஆண்டு கொண்டிருந்த என் தலைமையிலான தி.மு.க. ஆட்சியைப் பாராட்டிப் பேசியிருக்கிறீர்கள் அய்யா!

பாராட்டியிருக்கிறேன். ஆனாலும் இன்னும் வேகமாக என் கருத்துகளைப் பின்பற்ற வேண்டுமென்றும் உங்கள் ஆட்சிக்கு சொல்லியிருக்கிறேன். அதுமட்டுமில்லை. எல்லா கட்சிக்காரனும் ஒன்று சேர்ந்து இன்றைக்கு இங்கு இருக்கிற ஆட்சியை ஒழிக்கணும்கிறான். ஒழித்தால் ஒழித்து விட்டுப்போ. எனக்கு ஒன்றும் கவலை இல்லை. அப்புறம் என்ன? இன்றைக்கு திருட்டுத்தனமாக - மறைவாகப் பேசுகிற பேச்சை நாளைக்கு வெளிப்படையாகப் பேசுவான். அப்படின்னும் அந்தக் கூட்டத்திலே பேசியிருக்கிறேன்.

ஆமாம் அய்யா. அன்று அந்த இறுதிப் பேருரையில் தாங்கள் சொன்னது போல, இப்போதும் இந்த ஆட்சியை அகற்ற வேண்டுமென்று சில கட்சிகள் ஒன்று கூடி, அதே தியாகராயர் நகரில் கூட்டம் போட்டிருக்கிறார்களே தங்களுக்குத் தெரியுமா?

அணியைக் கூட்டி வைக்கிறது யாராம்? அந்த அணியில் எந்த எந்தக் கட்சிக்காரர்களாம்?

எல்லாம் நம்ம மணிதான் அய்யா!

எம்.ஏ.என்.ஐ. (Mani) ஆ! எம்.ஓ.என்.இ.ஒய். (Money) ஆ!

ஏதோ ஒரு மணின்னு வச்சிக்குங்க? கலந்து கொண்ட கட்சிகளிலே காங்கிரசும், கம்யூனிஸ்டுக் கட்சியும்தான் முக்கியமான கட்சிகள். அதிலே பெரிய கட்சித் தலைவி ஜெயலலிதா அம்மையார்!

யாரு? ராஜீவ் காங்கிரசை ஆதரிக்க காங்கிரஸ் கட்சியிடம் அந்த அம்மா ரொக்கமாக மூணுகோடி ரூபாய் வாங்கிவிட்டதாக விடுதலையிலே 1989 லே டிசம்பர் 1-ஆம் தேதி இதழிலே வீரமணி தலையங்கம் எழுதினாரே அந்த அம்மாவா?

ஆமாய்யா! அந்த அம்மையாருக்கு சமூக நீதி காத்த வீராங்கனைன்னு பட்டம் கூட கொடுத்திருக்காரய்யா!

உண்மையான சமூக நீதி காவலர் திரு. வி.பி.சிங் ஆட்சியை காங்கிரசோடு சேர்ந்து கவுத்தாங்களே, அந்த அம்மையா?

சாட்சாத் அதே அம்மையார்தான் - மற்றபடி காங்கிரஸ் தலைவர்கள்! கம்யூனிஸ்டு தலைவர்கள்!

ஓ! அப்படியா! அவங்களா! என்னுடைய இறுதிப் பேருரையில் காங்கிரசையும், கம்யூனிஸ்டையும் பற்றி என்ன சொன்னேன் தெரியும்ல? ஒருவேளை முன்னேற்றக் கழகம் ஒழிந்தாலும், காங்கிரஸ் ஒழிக! சாதி ஒழிக! என்று சீர்திருத்த உணர்ச்சி உள்ளவர்கள்தான் பிறகும் வருவார்கள். காந்தியும் போய் விட்டார். காங்கிரசும் ஒழிந்து போயிற்று. ஒழிய வேண்டியது காங்கிரஸ். இனிமேல் அது என்றும் உருப்படியாகாது. இரண்டாகப் பிரிந்து ஒன்றுக்கொன்று மானம் கெட்டுத் திரிகிறது. இப்போது ஒருவருக்கொருவர் சேர்ந்து பார்க்கலாம் என்று நினைக்கிறது. சேர்ந்தால் என்ன மரியாதை இருக்கப் போகிறது? இந்த கம்யூனிஸ்டே வந்துவிட்டான். என்றால் அவன் காசுக்கு என்றால் என்ன வேணுமானாலும் பண்ணுவானே - இங்கே இருக்கிற கம்யூனிஸ்ட் என்ன பண்றான்? பொறுக்கித் தின்கிறான். இப்படியெல்லாம் என் இறுதிக் கூட்டத்திலே நான் பேசியிருக்கேனே... அதானே என் மரண சாசனம்?

அய்யா, அவர்களையெல்லாம் வைத்துத்தான் உங்களுக்கு விழா எடுத்திருக்கிறார்கள். ஆனால் உங்களைப் பத்தி ஒருத்தரும் முக்கியமாகப் பேசவில்லை. எல்லாம் அந்த அம்மையாரைப் பற்றித்தான்னு பத்திரிகைகளே செய்தி போட்டிருக்கே.

சரி, விடு! முன்னேயெல்லாம் தி.க.காரன், தி.மு.க.காரன் தான் விழா எடுத்தீங்க! அப்ப இந்தப் பக்கம் கூட தலை காட்டாதவங்க இப்ப தேர்தல் வருதுன்னவுடனே, ஒப்புக்கு பெரியார் வாழ்கன்னு கைகோத்திருக்காங்க. அதுவும் எனக்குப் பெருமைதான் என்றாலும், என் இறுதிப் பேருரையிலே நான் குறிப்பிட்டிருப்பதுதான் என்

திடமான - திட்டவட்டமான - தீர்க்கமான கருத்து - அந்த மரண சாசனத்திலே எந்த மாற்றமும் இல்லை.

உடன்பிறப்பே, இப்படிக் கூறிக்கொண்டே பெரியார் தனது கைத்தடியை எடுத்துத் தரையில் ஓங்கி ஊன்றியவாறு நடக்கத் தொடங்கினார்.


என் கனவுச் சிந்தனையும் கலைந்தது.

என் கரங்களையும், நெஞ்சத்தையும் தழுவிக் கொண்டிருந்த தந்தை பெரியாரின் இறுதிப் பேருரைப் புத்தகம் புன்னகை புரிந்து கொண்டிருந்தது.

அன்புள்ள,

மு. க.

(25-09-2000)



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

முதல் பதிப்பு 2022